குடியிருப்புப் புவியியல்

(GEOGRAPHY OF SETTLEMENTS)

அ. சிவமூர்த்தி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—652

குடியிருப்புப் புவியியல்

(பட்டப்படிப்பிற்குரியது)

[திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது]

ஆசிரியர்

அ. சிவமூர்த்தி, எம்.ஏ. (குற்றவியல்),
எம். எஸ்ஸி. (புவியியல்),
புவியியல் துணைப்பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1975

T.N.T.B.S. (C.P.) No: 652

© GOVERNMENT OF TAMILNADU

GEOGRAPHY OF SETTLEMENTS

A. SIVAMOORTHY

Price Rs. 9.55

Published by the Tamilnadu Text-book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
P. C. G. Corporation Press
1-26, Mowbrays Road,
Madras-600018.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத்துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப்பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'குடியிருப்புப் புவியியல்' என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 652ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 687 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூகநல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும், மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	குடியிருப்புப் புவியியல் – அறிமுகம் ...	1
2.	குடியிருப்புப் புவியியலின் நோக்கம் ...	8
3.	குடியிருப்புப் புவியியலின் சாரம் ...	16
4.	தற்காலிகக் குடியிருப்புகள் ...	20
5.	கிராமப்புறக் குடியிருப்புகளின் வளர்ச்சி ...	26
6.	குடியிருப்புப் பரவலின் இயல்புகள் ...	31
7.	தலமும் சூழமைவும் ...	44
8.	குடியிருப்பின் வடிவங்கள் ...	56
9.	குழுமிய குடியிருப்பும் பரவலான குடியிருப்பும் ...	75
10.	கட்டடப் பொருள்கள் ...	86
11.	வீட்டின் அமைப்பு ...	98
12.	வீட்டின் அமைப்பும் கால நிலையும் ...	115
13.	கிராமத்தின் கட்டடமைப்பு ...	132
14.	இந்தியக் கிராமங்கள் ...	137
15.	நகர்ப்புறக் குடியிருப்புகள் ...	156
16.	நகர்ப்புறமாக்கச் செயல்முறை ...	162
17.	நகரங்களின் தோற்றம் ...	171
18.	நகர்ப்புற வளர்ச்சியின் நிலைகள் ...	191
19.	தொழில் முன்னிலை நகரங்கள் ...	194
20.	நகரின் தலமும் சூழமைவும் ...	199
21.	நகர்ப்புற மக்களின் தொழில் தன்மைகள் ...	228
22.	நகரங்களை வகைப்படுத்துதல் ...	234
23.	நகரின் உருவவியல் ...	240
24.	இந்திய நகரங்களின் உருவவியல் ...	263
25.	நகர்க்களம் ...	277
26.	நகர்ப்புற மக்களின் தன்மைகள் ...	283
27.	மைய இடத்துக் கொள்கை ...	287
28.	புறநகர் ...	293
29.	கிராம - நகர்ப்புற விளிம்பு ...	300
30.	நகர்ப்புறப் பிரச்சினைகள் ...	305
	மேற்கோள் நூற்பட்டியல் ...	317
	கலைச்சொற்கள் ...	319

1. குடியிருப்புப் புவியியல்

அறிமுகம்

குடியிருப்பு என்பது புவியின்மீது மனிதன் தன் தேவைக்காக ஏற்படுத்திக்கொண்ட ஓர் உறைவிடமாகும். இது மனிதனால் நிறுவப்பட்ட வீடுகளையும் அவற்றை இணைக்கின்ற பாதைகளையும், அவற்றோடு தொடர்புடைய மற்ற அமைப்புகளையும் குறிப்பதாகும். ஒவ்வொரு குடியிருப்பும் புவியின்மீது மனிதன் செலுத்துகின்ற ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் சின்னமாக விளங்குகிறது. சாலைகளும் கட்டடங்களும் குடியிருப்பின் அங்கங்களாகும். அவற்றை உருவாக்கியவர்கள் மறைந்துபோனாலும் அவை மறைவதில்லை.

மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவைகள் மூன்றாகும். அவை உணவு, உடை, உறைவிடம் ஆகியவையே. வெட்ட வெளியில் வாழ்ந்துவந்த ஆதிமனிதனுக்கு உடையும் உறைவிடமும் தேவையற்றவையாக இருந்தன. உணவுக்காக இடம் விட்டு இடம் திரிந்துவந்த அவனுக்கு நிரந்தர இருப்பிடம் என்று எதுவுமில்லை. கனிகளும் விலங்குகளும் கிடைக்கின்ற இடந்தான் அவனுக்கு இருப்பிடமாகும். அவை தீர்ந்துவிட்டால் வேறு இடம் தேடிப் போகவேண்டிய நிலையில் அவன் இருந்தான். எனவே, ஆதியில் மனிதனுக்கு இருப்பிடம் தாற்காலிகமாகவே இருந்தது.

வெட்ட வெளிதான் அவனுக்கு இரவிலும், பகலிலும் உறைவிடமாக இருந்தது. இரவில் விலங்குகள் தன்னை நெருங்காமலிருக்கத் தீயை மூட்டி அதன் அருகில் உறங்கி வந்தான். காற்று வீசும்போது தீ அணைந்துவிடாமலிருக்கக் காற்றின் திசையில் கற்களை அடுக்கி வைத்தான். அப்போது அவன் அடுக்கி வைத்த கற்கள்தாம் முதன்முதலாகக் கட்டப்பட்ட சுவராகும். இடி, மின்னல், மழை தோன்றிய நேரங்களில் குகைகளிலும்

பொந்துகளிலும் சென்று தங்கினான். அவை அவனுக்குத் தாற்காலிகமானவையே. ஏனெனில், அவன் வசிக்கின்ற இடத்தில் உணவு தீர்ந்த பிறகு புதிய இடங்களைத் தேடிச் செல்லவேண்டியிருந்தது. அவன் தனக்குச் சொந்தமாக எந்தப் பொருளையும் வைத்துக்கொள்ளவில்லை. எனவே, இடம்விட்டு இடம் செல்லும் போது சுமக்கக்கூடிய பொருள்கள் அவனிடத்தில் எதுவும் இருந்ததில்லை.

மனிதன் நிலத்தைப் பயன்படுத்தத் தெரிந்துகொண்ட நாள் முதல் அவனுடைய வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. உணவுக்காக இடம்விட்டு இடம் அலைவது இப்போது தேவையற்றுப் போய்விட்டது. அவன் இப்போது பயிர்செய்யக் கற்றுக்கொண்டான்; அவனுக்குத் தேவையான தானியங்கள் யாவையும் நிலத்திலேயே விளைந்து வந்தன. ஆனால், பயிர்த்தொழிலில் அவனுக்கு ஆரம்ப அறிவு மட்டுமே இருந்தது. நிலத்தைப் பக்குவப்படுத்த அவன் தெரிந்துகொண்டிருக்கவில்லை. எனவே, நிலத்திற்காக அவன் காடுகளை எரித்து வந்தான். மரங்கள் எரிந்து சாம்பலான அந்த நிலத்தில் விதைகளை அப்படியே புதைத்தான். அது வளர்ந்து பயிரானதும் அதனை உண்டு உயிர் வாழ்ந்தான். சிறிதுகாலம் கழித்து நிலத்தின் வளம் குன்றிப் பயிரின் வளர்ச்சி குன்றும்போது புதிய இடத்தைத் தேடிப் போவான். எனவே, மேற்கூறிய காடழித்துப் பயிர்செய்கின்ற (Shifting agriculture) நாகரிக நிலையில் அவன் இருந்தபோது அவனுக்கு உடைமைகள் (Properties) சேர்ந்துவிட்டன. காடுகளை அழித்து அந்த மண்ணில் புதைத்த விதைகள் வளர்ந்து தானியமாகக் கிடைக்கின்ற காலம் வரையிலும் அவனுக்கு இருப்பிடம் தேவைப்பட்டது. அதனால், அந்த நிலத்திலேயே ஒரு தாற்காலிக வீட்டை அமைத்துக் கொண்டான். வீடு கட்டுவதற்கு அருகில் கிடைக்கின்ற பொருள்களையே அவன் பயன்படுத்தினான். வீடு தாற்காலிகமானதாகையால் அவனுடைய உடைமைகள் எல்லாம் எளிதில் சுமந்து செல்லக் கூடியனவாக இருந்தன.

காடழித்துப் பயிர்செய்யும் முறையில் (Shifting agriculture) மண்ணின் வளம் குன்றும்போது புதிய நிலத்தைத் தேடிச் செல்வதில் சிரமங்கள் இருந்தன. ஆகையால், ஒரே இடத்தில் நிரந்தரமாக வசிப்பதற்கு அவன் முயற்சிகளை மேற்கொண்டான். இதன் விளைவாக நிலத்தைப் பக்குவப்படுத்தும் முறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. காட்டு மரங்கள் எரிந்து படிந்த கரித்தூள்களை அகற்றிப் பயிர் செய்தபோது விளைச்சல் நன்றாக இருந்தது; நிலத்தை உழுது பயிர்செய்தபோது இன்னும் நல்ல பலன்

இருந்தது. நிலத்தை உழுவதற்கு அவன் முதன்முதலில் மரக் கட்டையைப் பயன்படுத்தினான். நாளடைவில் ஏர்கள் பயன் படுத்தப்பட்டன. ஏர்கள் என்றைக்குப் பயன்படுத்தப்பட் டனவோ அன்று முதல் மனிதனுக்கு நிலையான வாழ்க்கை ஏற் பட்டுவிட்டது. அதனால் நிரந்தரக் குடியிருப்புகள் ஏற்பட லாயின. உழுது பயிர்செய்த நிலத்தில் தேவைக்கு அதிகமாக உணவுத்தானியம் கிடைத்ததால், கனியைத் தேடியோ புதிய நிலத்தைத் தேடியோ அவன் செல்லவில்லை. தானியப் பயிருக்கு உழைப்புத் தேவையாகையால் அவனுடைய உறைவிடம் நிலத் திற்கு அருகிலேயே இருந்தது. விளைந்த தானியப் பயிர்களைச் சேமித்து வைக்கவும், மற்றப் பணிகளுக்கும் அவனுக்கும் ஒரு பாதுகாப்பான இடம் தேவையாக இருந்தது. எனவேதான் அவன் வீட்டைக் கட்டிக்கொண்டான். இதுவே குடியிருப்பின் தொடக்க நிலையாகும். எனவே, இது இயற்கையோடு இணைந்த மனித வாழ்க்கையின் முதற்படியாகும். இதுவே மனித நாகரிகச் சின்னங்களில் ஒன்றாகும் (படம் 1).

புவியின் மேற்பரப்பில் பரவிக்கிடக்கின்ற மலைகளும், குன்று களும், பள்ளத்தாக்குகளும், அவற்றில் பாய்ந்தோடுகின்ற நதி களும் ஒரே அமைப்புடன் இருப்பதில்லை. காலநிலையின் (Climatology) தன்மைக்கு ஏற்ப நில அமைப்பு மாறுபடுகிறது. பாறை யின் தன்மைக்கு ஏற்ப மண்வளமும், மழையின் அளவுக்கு ஏற்ப இயற்கைத் தாவரமும் இடத்திற்கு இடம் வேறுபட்டு அமைகின் றன. விலங்குகளும் அவ்வாறே புறச் சூழ்நிலைக்கு ஏற்ப (Physical environment) உருவத்திலும், வாழ்க்கை முறைகளிலும் மாறு பட்டு விளங்குகின்றன. மனித வாழ்க்கையும் இதற்கு விதிவிலக் கன்று. பூமத்தியரேகைப் பகுதியில் வாழும் மக்களுக்கும், மித வெப்ப மண்டலத்தில் வாழும் மக்களுக்கும், பாலைவனத்தில் வசிக்கும் மக்களுக்கும் உருவத்திலும், பழக்கவழக்கத்திலும் நேர் மாறான வேறுபாடுகள் காணப்படுகின்றன. வெவ்வேறு கால நிலையின்கீழ் அந்தந்தக் காலநிலைக்கு உரிய தாவரங்களும் விலங்கு களும் காணப்படுகின்றன. காலநிலை, அனைத்தையும் கட்டுப் படுத்துகிறது. இயற்கையின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட மனித இனமும், காலநிலைக்கு ஏற்ப வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ளுகிறது. வளமிக்க பகுதிகள்தாம் மனித இனத்தைக் கவர்கின்றன. ஆற்றுப் பள்ளத்தாக்குகள், சமவெளிகள், மற்று முள்ள வளமிக்க பகுதிகள்தாம் மனித இனத்திற்கு முதன் முதலில் உறைவிடம் தந்தன. பயிர்த்தொழில் மனிதனுக்கு நிரந்தர வாழ்க்கையையும், குடியிருப்பையும் அமைத்துத்தந்தது. எனவே, மாறுபட்ட புறச் சூழ்நிலை கொண்ட புவியின்மீது



படம் 1 (அ) கொலம்பியாவிலுள்ள 'ஊஞ்சல் வீடு' (*Hammock*) குறைந்தபட்ச பொருள்களைக் கொண்டு கட்டப்படுவதாகும். இதனை எளிதில் சுமந்து செல்லவும் தேவைப்படும்போது அமைத்துக்கொள்ளவும் முடிகிறது. இரண்டு மரக்கழிகளைப் பூமியில் புதைத்து அவற்றினிடையே இது கட்டப்படுகிறது. நிழலுக்காக ஊஞ்சலின்மேல் தழைகள் கட்டப்படுகின்றன. இந்த வீட்டிற்கு அதுதான் 'கூரை' யாகும். கூடை, குடுவை போன்ற உடைமைகள் கழியில் கட்டி வைக்கப்பட்டிருக்கும்.

(ஆ) செமாங் (*Semang*) இனத்தாரின் காற்றை முறிக்கும் தடுப்பு (*Wind breaker*). தீ மூட்டும்போது காற்றில் அணையாமலிருக்க இத்தகைய தடுப்புகள் பயன்படுகின்றன.

குடியிருப்புகள் எல்லாமே ஒரே மாதிரியாக இல்லை. அவை இயக்கத்திலும், அமைப்பிலும், வடிவத்திலும் இடத்திற்கு இடம் வேறுபட்டு விளங்குகின்றன. அவற்றை விளக்குவதுதான் குடியிருப்புப் புவியியலின் நோக்கமாகும். ஒரு குடியிருப்பு எந்தப் பகுதியில் அமைந்திருந்தாலும், அந்தப் பகுதியின் சூழ்நிலையோடும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையோடும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக்கிறது. எனவே, குடியிருப்பைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானல் அதன் சூழ்நிலையையும் அங்கு வசிக்கும் மக்களின் வாழ்க்கை முறையையும் அறிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

குடியிருப்புகளின் வளர்ச்சி, நில அமைப்பைத் தவிர, பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகச் சூழ்நிலைகளையும் பொறுத்திருக்கிறது. இச் சூழ்நிலைகள் இடத்திற்கு இடமும், காலத்திற்குக் காலமும் மாறக்கூடியதாகும். குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய குடியிருப்புகள் பிற்காலச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுச் சிறிது மாறுதல் அடைந்தாலும் அடிப்படையில் அவை பாதிக்கப்படுவதில்லை. குடியிருப்பு ஒன்று தோன்றிவிட்டால் அதன் முதல் வடிவம் பிற்காலத்தில் முழுமையாக மாறுவதோ அழிவதோ இல்லை. அந்த முதல் வடிவத்தோடு வளர்ச்சிபெற்ற புதிய வடிவமும் சேர்ந்துவிடுகிறது. எனவே, குடியிருப்புகளுக்கு ஒரு வரலாறும் உண்டு. மனித நாகரிகத்தின் வரலாற்றைக் குடியிருப்புகள் நன்கு உணர்த்துகின்றன. தற்காலக் குடியிருப்புகளில் பல பழமையானவையாகும். காலத்திற்கு ஏற்ப அவைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் கட்டடங்களும் சாலைகளும் அந்தந்தக் காலத்திற்கு ஏற்ற அமைப்பைக் கொண்டிருந்தன. இன்றைய குடியிருப்புகளில் பழைய கட்டடங்களும், புதிய கட்டடங்களும் இந்தக் கால வேறுபாட்டை எளிதில் உணர்த்துகின்றன. எந்த ஒரு குடியிருப்பை எடுத்துக்கொண்டாலும், அதில் பழைய குடியிருப்பும் புதிய குடியிருப்பும் அருகருகே அல்லது ஒன்றோடு ஒன்று கலந்தே காணப்படும். பழைய வீடுகளும், கட்டடங்களும் புதிய கட்டடங்களால் சூழப்பட்டு அக் குடியிருப்பின் வளர்ச்சியை எடுத்துக்காட்டும். பழைய, புதிய கட்டடங்களில் பயன்படுத்தப்பட்ட கட்டடப் பொருள்களில் நிறைய வேறுபாடுகளைக் காணமுடிகிறது. பழைய வீட்டின் அமைப்பு அப்போதைய மக்களின் எண்ணத்திற்கும், வசதிக்கும் ஏற்றாற்போல் இருக்கிறது. அத்தகைய வீடுகளும், சாலைகளும் அக்கால மக்களின் நாகரிகத்தையே வெளிப்படுத்துகின்றன;

ஆனால், பழைய குடியிருப்புகள் பிற்காலத்தில் இரயில், மோட்டார், ஆகாயவிமானம் போன்ற போக்குவரத்து வசதிகளால் பெருமளவில் வளர்ச்சி பெற்றுவிட்டன. நவீன வசதிகள் குடியிருப்பின் வளர்ச்சிக்கு உதவுமே தவிரப் பழைய அமைப்பை மாற்றுவதற்கு உதவா. இதற்குச் சிறந்த உதாரணம் பழைய டெல்லி, புது டெல்லியாகும். குறுகலான சாலைகளையும், நெருக்கமான பழைய கட்டடங்களையும் கொண்டிருக்கும் பழைய டெல்லிக்கும், திட்டமிட்டு அமைக்கப்பட்ட அகன்ற சாலைகளையும், நவீன கட்டடங்களையும் கொண்டிருக்கும் புது டெல்லிக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. அதேபோல் சென்னையிலும் பழைய குடியிருப்புப் பகுதிக்கும், அண்ணாநகர், அசோக் நகர், இந்திராநகர் போன்ற புதிய குடியிருப்புப் பகுதிகளுக்கும் கட்டடங்களின் அமைப்பிலும், சாலைகளின் அமைப்பிலும் வேறுபாடு காணப்படுகிறது. அண்ணாசாலை போன்ற ஒரே பகுதியில் கூடப்பழைய புதிய கட்டடங்கள் அடுத்தடுத்து அமைந்து இந்தக் கால வேறுபாட்டை உணர்த்துகின்றன. நவீனப் போக்குவரத்து வசதிகள் நகரத்தின் அடிப்படை அமைப்பை மாற்றவில்லை (படம் 56ஐப் பார்க்க).

குடியேறிய பகுதி

குடியிருப்பின் வளர்ச்சியை அறிவதற்கு முன்னர்க் குடியேறிய இடத்திற்கும், குடியேறாத இடத்திற்குமுள்ள வேறுபாட்டை அறிதல் வேண்டும். இதைத் தெரிந்துகொண்டால் மக்கள் குடியேறிய இடத்தையும், குடியேறாத இடத்தையும் பிரித்தறிவது சுலபமாகிவிடும். உதாரணமாக ஒரு பெரிய நகரத்தையும், மக்கள் வாழமுடியாத ஒரு வறண்ட நிலத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். நகரம் என்பது குடியேறிய பகுதியாகும். இதில் சிறிய பரப்பில் அதிகமான பேர் வசிக்கிறார்கள். அதாவது அங்கே மக்கள் தொகைச் செறிவு (Population density) அதிகம். அந் நகரத்தில் தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மற்றும் கடைகள் நிறைந்திருக்கின்றன. எனவே, அங்கு மனிதர்கள் நிரந்தரமாகத் தேவைப்படுகிறார்கள். அவர்களில் பெரும்பகுதியினர் அங்கேயே வசிக்கின்றனர். நகரத்தின் பல்வேறு பகுதிகள் பல்வேறு பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. வசிக்கும் பகுதி, வியாபாரப்பகுதி, அரசு அலுவலகப் பகுதி, பொழுதுபோக்குப் பகுதி என்பன போன்ற பல பகுதிகள் காணப்படுகின்றன. அவை மக்களின் குறிப்பிட்ட தேவைகளுக்காக இயங்கி வருகின்றன. மேற்கூறிய இந்த நகரத்தை ஒரு வறண்ட நிலத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்

போம் வறண்ட நிலத்தில் மக்கள் யாரும் நிரந்தரமாக வாழ்க்கை நடத்துவதில்லை. வேட்டையாடுபவர்களும், பிற நாடோடி இனத்தவர்களும் இப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர் களுடைய வாழ்க்கை ஒரு நிலையான இருப்பிடத்தைக் கொண்ட தன்று. எனவே, இப் பகுதியில் மனிதனுல் கட்டப்பட்ட நிரந்தர வீடுகளோ, கட்டடங்களோ இல்லை. இது வறண்ட பகுதியாத லால் இங்குள்ள நிலமும் மனிதர்களுக்குப் பயன்படுவதில்லை. ஆகவே, நிரந்தரக் குடியிருப்பு இங்கு இல்லை. எனவே, இது குடி யேருத பகுதியாகும்.

எனவே, ஓரிடத்தில் ஒரு குடியிருப்பு வளர்ச்சியடைகிறது என்று சொன்னுல், அந்த இடத்தில் மக்கள்தொகை பெருகிக் கொண்டிருக்கவேண்டும்; நிறைய மக்கள் புதிதாகக் குடியேறிக் கொண்டிருக்க வேண்டும்; மக்கள் தொகைச்செறிவு அதிகமாகிக் கொண்டிருக்க வேண்டும்; நிரந்தரக் கட்டடங்களும், சாலைகளும் கட்டப்பட வேண்டும்; நிலப் பயன்பாடும் (Land use) அங்கு மாறிக் கொண்டிருக்க வேண்டும்; அதாவது நிலத்தை மனிதன் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடைபெற்ருலே அந்தக் குடியிருப்பு வளர்ச்சியடைகிறது என்று சொல்லமுடியும்.

2. குடியிருப்புப் புவியியலின் நோக்கம்

மனிதன் ஓர் இடத்தில் குடியேறும்போது அங்குத் தனக்கு ஏற்படுத்திக்கொள்ளுகிற வசதிகளைப் (facilities) பற்றி அறிவது குடியிருப்புப் புவியியலாகும். இந்த வசதிகள் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஏற்பட்டவையாகும். ஆகவே, அவைகளுக்கென்று சில கடமைகளும் பணிகளும் உள்ளன. எந்தக் குடியிருப்பை எடுத்துக்கொண்டாலும் அதன் அமைப்பு, அது ஏற்பட்ட காலத்தின் கட்டடக்கலையையும், அங்கு வாழும் மக்களின் பண்பாட்டையும் (Culture) வெளிப்படுத்தும். எனவே, ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் தற்காலத்திலுள்ள பழைய குடியிருப்பிலிருந்து பழங்கால மக்களின் பண்பாட்டை அறிய முடிகிறது. குடியிருப்புகள் பரவியுள்ள விதம் நம் சிந்தனையைத் தூண்டுகிறது. ஆனல், அவை வளர்ச்சியடைந்த பிறகு எந்த நோக்கத்திற்காக ஏற்பட்டதோ அந்த நோக்கத்திற்காகத் தொடர்ந்து இயங்குவதில்லை. நாளடைவில் அவற்றின் அமைப்பும் (form) மாறிவிடுகிறது.

குடியிருப்புகளின் கட்டட அமைப்பையோ, சாலைகளின் தன்மையையோ அறிவது புவியியலின் நோக்கமன்று. ஆனல், அவற்றைத் தெரிந்துகொண்டால்தான், பழமைக்கும் புதுமைக்குமுள்ள வேறுபாட்டை அறிந்து அவற்றை வகைப்படுத்த முடியும். குடியிருப்புப் புவியியல் இரண்டு முக்கிய நோக்கங்களுக்காகச் செயல்படுகிறது. ஒன்று குடியிருப்பின் தோற்றத்தை (origin) அறிவது; மற்றொன்று அதன் பணிகளை அறிவது.

குடியிருப்பில் மனிதன் ஏற்படுத்திக்கொள்ளும் வசதிகள் அவனுடைய வாழ்க்கை முறைகளைப் பிரதிபலிக்கின்றன. அவன் கட்டிக்கொண்ட வீடுகள், சாலைகள், கடைகள், கோயில்கள் ஆகியவை அப்போதைய தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப அமைக்கப்பட்டன. ஆனல், விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக எல்லாத் துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. வண்டி இழுக்

கவும், பொதி சுமக்கவும், மாடு, குதிரை போன்றவை பயன் பட்ட காலத்தில் ஏற்பட்ட அமைப்பிற்கும், மோட்டார், இரயில் ஆகாயவிமானம் போன்றவை உள்ள தற்கால அமைப்பிற்கும் இடையே பல வேற்றுமைகள் உள்ளன. குடியிருப்பு ஒருமுறை ஏற்பட்டுவிட்டால் அது நிரந்தரமாகவே இருக்கிறது. காலப் போக்கில் வாழ்க்கைமுறை மாறினாலும், குடியிருப்பின் அடிப் படை அமைப்பு மாறாமல் பழமையின் சின்னமாக விளங்குகிறது. புதிய அமைப்பும் பழைய அமைப்பும் நாளடைவில் ஒன்றுசேர்ந் தாலும் பழைய அமைப்பு மாறாமல் இருக்கிறது. எனவே, அது குடியிருப்பின் வளர்ச்சியையும் வரலாற்றையும் உணர்த்துகிறது.

மாட்டு வண்டி பயன்பட்ட காலத்தில் சாலைகள் மிகவும் குறு கலாக இருந்தன. பெரிய மோட்டார் வாகனங்கள் பெருகி விட்ட தற்காலத்திலும் அவை குறுகலாகவே இருக்கின்றன. ஏனெனில், கட்டடங்கள் மிகவும் நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ள தால் சாலைகளை அகலப்படுத்துவது கடினமாகும். எனவே, இந்தக் குறுகிய சாலைகள் குடியிருப்பின் தொடக்க காலப் போக்குவரத்து வசதியை வெளிப்படுத்துகின்றன. காலத்திற்கு ஏற்ப அமைப்பில் மாறிக்கொண்டு வரும் குடியிருப்புகளைப் புவியியல் ஆசிரியர்கள் ஆராய்ந்து வருவதால் அவைகளுக்குக் காரணமான சூழ்நிலைகளை அறிய முடிகிறது.

ஆரம்பகாலத்தில் குடியிருப்பு அமைவதற்கு ஏற்றதாக இருந்த நில அமைப்புகள் தற்போது தேவையற்றவைகளாகி விட் டன. புதிய போக்குவரத்து வசதிகள் இந்த மாற்றத்தை ஏற் படுத்தியுள்ளன. கால்நடைகளைப் போக்குவரத்துக்காகப் பயன் படுத்திய காலத்தில் நிலத்தின் வன்சரிவு (Steep slope) குடியிருப்பு அமைவதற்குத் தடையாக இருந்ததில்லை. ஆனால், தற்காலப் போக்குவரத்துச் சாதனங்களுக்கு வன்சரிவு ஏற்றதாக இல்லை. மலைகளிலும், கரடுமுரடான பகுதிகளிலும் போக்குவரத்துச் சாலை களை அமைப்பது கடினமுள்ளதாக மட்டுமன்றி அதிகச் செல வுடையதாகவும் இருக்கிறது. மேடுகளில் வண்டிகள் ஊர்ந்து செல்லும்போது அதிகச் சக்தி செலவாகிறது. அதனால் போக்கு வரத்துக் கட்டணமும் அதிகமாகிறது. ஆகையால், பழைய குடி யிருப்புகளில் பல, இரயில்பாதைகளால் இணைக்கப்படாமல் உள் ளன. இரயில்பாதையின் இணைப்பால் பல புதிய குடியிருப்புகள் தோன்றியுள்ளன. உதாரணமாக ஜோலார்பேட்டை இரயில் சந் திப்பைக் கூறலாம். இங்கு இரயில் வண்டி மாறவேண்டி இருப்ப தாலும், பொருள்கள் ஏற்றப்பட்டு இறக்கப்பட்டு வேறு திசை

களுக்குச் செல்லுவதாலும் இந்தச் சந்திப்பு ஒரு நகரமாக வளர்ச்சியடைந்துள்ளது (படம் 2).



படம் 2

இரயில்பாதையின் இணைப்பால் பழைய குடியிருப்புகள் வளர்ச்சியும் பெறுகின்றன. இதற்குச் சிறந்த உதாரணம் திருத்தணி நகரமாகும். திருத்தணி மலைக்கு மேற்கிலுள்ள அமிர்தபுரம், இரயில் வருவதற்கு முன்னால் இருந்த பழைய கிராமமாகும். இது சித்தூருக்குச் செல்லும் சாலையில் உள்ளது. ஆனால், இரயில்பாதை அமைக்கப்பட்டதால் திருத்தணி மலைக்குக் கிழக்கில் இரயில் பாதையை ஒட்டிப் புதிய நகர்ப்புறம் வளர்ச்சியடைந்துள்ளது.

அதேபோல் படகுகள் செல்லக்கூடிய ஆறுகளின் கரைகளில் பல குடியிருப்புகள் தோன்றியுள்ளன. ஆழமான நீர்வழிப்


திருத்தணி
சென்னை →
கோயில்
படிகள்
அமிர்தபுரம்
350'
500'
700'
750'
833
அடி 500 0 500 1000 1500 2000 அடி

படம் 3

போக்குவரத்து இதற்குக் காரணமாக இருந்தது. ஆனால், பெரிய நீராவிக் கப்பல்கள் தோன்றியபிறகு படகுகளுக்கு இருந்த முக்கியத்துவம் போய்விட்டது. ஆற்றின் வழியே பெரிய கப்பல்கள் செல்ல முடியாதாகையால் ஆற்றோரக் குடியிருப்புகளின் வளர்ச்சி பிற்காலத்தில் தடைப்பட்டுள்ளது. வாணிகத்திலும் தொழில் முன்னேற்றத்திலும் அவை பின்தங்கியே இருக்கின்றன. உதாரணமாக, கங்கை நதிக்கரையில் அமைந்துள்ள பாட்னு (Patna) நகரம் பழங்காலத்தில் படகு போக்குவரத்தினால் வளர்ச்சி பெற்றது. ஆனால் பெரிய கப்பல்கள் இது போன்ற உள்நாட்டுத் துறைமுகங்களை அணுக வசதியில்லை. இதனால் கடற்கரையில் அமைந்த நகரங்களே வளர்ச்சி பெற்றன. குறிப்பாக ஆழமான இயற்கைத் துறைமுகங்களைக் கொண்ட நகரங்களே அதிக வளர்ச்சி பெற்றுள்ளன.

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் குடியிருப்புகள் பல நோக்கங்களுக்காக மனிதனால் நிறுவப்படுகின்றன. சுற்றுப்புறத் தேவைக்கேற்ப அவை தங்களுக்கென்று குறிப்பிட்ட பணிகளை (functions) அமைத்துக் கொள்ளுகின்றன. ஒவ்வொரு குடியிருப்பும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளை மேற்கொண்டு அதனைச் சுற்றிலும் வசிக்கின்ற மக்களுக்குச் சேவை செய்கிறது. அதற்கு ஒரு குறிப்பிட்ட பணி இருப்பதால் அதைச் சிறப்பாகச் செய்வதற்குத் தகுந்த இடத்தில்தான் அது அமைந்திருக்கும். அதாவது அதன் இருப்பிடம் (location) அது ஏற்றுக்கொண்ட பணியினைச் செய்வதற்குத் தகுந்தாற்போல்தான் இருக்கும். ஏனென்றால், அந்தப் பணியைச் செய்யவேண்டியே அங்கு அது தோன்றுகிறது. உதாரணமாக, ஒரு சுரங்கப் பகுதியில் ஒருநகரம் தோன்றுகிறதென்றால், அங்குத் தோண்டியெடுக்கப்படும் கனியங்களை விநியோகம் செய்வதே அதன் தலையாய பணியாக அமைகிறது (படம் 50). இதேபோல் ஒரு நகரத்தின் இருப்பிடம் மலையடிவாரத்தில் இருந்தால், மலைப்பகுதியையும் சமவெளியையும் இணைக்கும் பணிக்காகவே அது தோன்றியிருக்கிறது.

குடியிருப்பின் பணிக்கு ஏற்றாற்போல் அதன் அமைப்பும் காணப்படுகிறது. அதில் அமைந்துள்ள சாலைகளும், கட்டடங்களும் அதன் பணியையே பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, வேளாண்மையைத் தொழிலாகக் கொண்ட பகுதியில் வீடுகளைச் சுற்றி வேளாண்மையோடு தொடர்புகொண்ட கட்டடங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. நெல் விளையும் பகுதிகளில்



படம் 4

லான்ஸ்டௌன் ஒரு சிறிய மலைவாசஸ்தலமாகும். மலையின் மீது குடியிருப்புகள் ஆற்றங்கரைகளிலும், சாலையை ஒட்டியும் பரவலாக அமைந்துள்ளன. கோத்வாரா, மலையடிவாரத்தில் அமைந்த நகரமாகும். இது மலைப்பகுதியையும், சமவெளியையும் இணைக்கிறது. மலையடிவாரத்தை விட்டு நீண்ட தூரத்திற்குக் குடியிருப்புகளே காணப்படவில்லை.

அரிசி ஆலைகளும் (Rice mills), தானியக் கிடங்குகளும் மிகுந்து இருக்கின்றன. இதேபோல் பருத்தி விளையும் பகுதிகளில் கொட்டையைப் பிரிக்கும் ஆலைகளும் (gins), கோதுமை விளையும் பகுதிகளில் கோதுமைக் கிடங்குகளும் (grain elevators), கால்நடைப் பண்ணைகள் நிறைந்த பகுதிகளில் தானியக் கிடங்குகளும், கொட்டகைகளும் காணப்படுகின்றன. இவை யாவும் குடியிருப்பின் பணியைப் பிரதிபலிக்கின்ற கட்டடங்களாகும். இதைத் தவிர ஒவ்வொரு குடியிருப்பிலும் கோயில், பள்ளிக்கூடம், விளையாட்டு மைதானம் போன்ற மற்றக் கட்டடங்களும் மக்களின் தேவைக்கும் பண்பாட்டிற்கும் பொருந்தும் வகையில் அமைந்

திருக்கின்றன. 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்பதற்கேற்ப ஒவ்வோர் இந்தியக் கிராமத்திலும் குறைந்தது ஒரு கோயிலாவது இருக்கிறது. இதேபோல் நகரங்களிலுள்ள இந்து, இஸ்லாமிய, கிருத்துவ ஆலயங்கள் அச்சமயத்தவரின் பண்பாடுகளுக்கு ஏற்ப அமைப்பில் வேறுபட்டிருக்கின்றன. அவர்களின் இருப்பிடத்தையும் பரவலையும் அவை எடுத்துக் காட்டுகின்றன. ஒரு குடியிருப்பில் மதப்பணிக்குத் தரப்பட்டுள்ள முக்கியத்துவத்தைக் கோயில்களின் எண்ணிக்கையும் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. எண்ணற்ற கோயில்களைக் கொண்ட கோயில்நகரம் (Temple town) காஞ்சிபுரம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். சமயப் பணியில் மக்களுக்கு இருந்த ஆர்வத்தைக் கோயிலைச்சுற்றி அமைந்த மதுரை, சிதம்பரம் போன்ற நகரங்களிலிருந்து உணரலாம் (படம் 28).

குடியிருப்புகள் அவற்றின் சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கின்றன. அவை அமைப்பிலும், பண்பிலும் மாறுபட்டு இருப்பதால் நமக்குப் பல உண்மைகள் தெரிய வருகின்றன. அவை மனிதர்கள் மட்டும் குழுமி இருக்கிற சாதாரண இடமல்ல. அவற்றிற்கு வடிவமும் கட்டமைப்பும் உள்ளன. அவற்றுக்குள்ளேயே பல இயக்கங்களும் உள்ளன. அவை வெளி உலகத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. இதை அவற்றில் வந்து குவியும் போக்குவரத்துச் சாலைகளே எடுத்துக்காட்டுகின்றன. குடியிருப்புக்கு அமைப்பும், பண்பும் இருப்பதோடு, சட்ட வரையறையும் காணப்படுகிறது. அதன் மக்களின் வாழ்க்கை முறையிலும் தனித்தன்மையே காணப்படுகிறது. அதனுல்தான் ஒரு நகரத்தைப் புதிதாகப் பார்ப்பவருக்கு ஒரு புதுமை உணர்ச்சியும் வியப்பும் தோன்றுகிறது.

குடியிருப்புகள் மக்களின் வாழ்க்கை முறையையும் வெளிப்படுத்துகின்றன. மக்களின் வாழ்க்கை முறைக்கு வழிகாட்டும் சட்டதிட்டங்கள் முன்னோர்களால் உருவாக்கப்பட்டவை: எனவே, குடியிருப்பின் அமைப்பு அதன் கடந்த காலத்தின் 'கட்டளையாகவே' இருக்கிறது. அது குறிப்பிட்ட பண்பாட்டு அமைப்பையே வலியுறுத்தியும், வெளிப்படுத்தியும் வருகிறது. அது வாழ்க்கையின் சூழ்நிலையை முழுமையாக உணர்த்துவதால் அதற்கு ஒரு பாரம்பரியமும் உள்ளது, எனவே, அதற்கு ஒரு வரலாறும் உள்ளது. அது தோன்றிய காலத்திலிருந்து அதன் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், தற்போதைய, பழைய அமைப்புகளுக்கிடையே உள்ள வேறுபாடு புலப்படும். ஆனுல்,

கோயிலைச் சுற்றி அமைந்த குடியிருப்புகளில் இந்த வேறுபாடு குறிப்பிடும்படியாக இல்லை. கோயிலைச் சுற்றிச் சந்தைகள் இருப்பதை நாம் இன்றைக்கும் காண முடிகிறது. பழமையான இந்த அமைப்பு இன்றைக்கும் மாறாமல் இருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டிலுள்ள கிராமங்களில் சந்தைகள் வாரத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறைதான் கூடுகிறது. கிராமத்துச் சந்தைக்கும், கோயிலுக்கும் இங்குத் தொடர்பில்லையென்றாலும், சீனாவில் அதற்குத் தொடர்பிருக்கிறது. சீன நகரத்துக் கோயில்களைச் சுற்றியும், அரச மாளிகையைச் சுற்றியும் குறிப்பிட்ட நாள்களில் சந்தைகள் கூடுகின்றன. இன்றைக்கும் மாயன் (Mayan) இனத்தவர் வசிக்கும் பகுதிகளில், சமய விழாக்கள் நடைபெறும் நாள்களில்தாம் சந்தைகள் கூடுகின்றன. மக்கள் பரவலாக வாழ்கின்ற இப் பகுதிகளில் திருச்சபைகளில்தாம் (Churches) சமய விழாக்கள் நடைபெறுகின்றன. இந்தியாவில் விழாக்கள் நடைபெறும் பகுதிகளில் தாற்காலிகச் சந்தைகள்கூடுகின்றன.

3. குடியிருப்புப் புவியியலின் சாரம்

அமெரிக்க ஐக்கியநாடுகளில் குடியிருப்பைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்தன; குடியிருப்புக்கு முன்னோடியாக விளங்கிய பகுதிகளைப் பல அறிஞர்கள் ஆராய்ந்தனர். குடியேறாத பகுதிகளில் புதிய காலனிகளை ஏற்படுத்தும் நோக்கத்தில்தான் மேற்கண்ட ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. ஐரோப்பிய நாடுகளிலும் இத்தகைய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இங்குக் காணப்பட்ட கட்டடங்களின் அமைப்பும் பரவலும் மக்களின் நீண்ட நாகரிக வரலாற்றை உணர்த்தின.

அமெரிக்காவில் இசையா போமென் (Isaiah Bowman) என்ற அறிஞரின் தலைமையில் புதிய காலனிகளை ஏற்படுத்துவதற்கு ஏற்ற முதற் குடியேற்றப் பகுதிகள் (Pioneer areas) ஆராயப்பட்டன. குடியிருப்புத் தோன்றல் முறைகளும் அவற்றின் சமூக, பொருளாதார, அரசியல் தன்மைகளும் விவரிக்கப்பட்டன. புதிய காலனிகளை அமைக்கும்போது நிலத்தின் வளம், பிற்கால வளர்ச்சிக்கு அது தரும் வாய்ப்பு ஆகியவற்றை ஆராய்வது அவசியமாகும். அதன் விளைவாக, கண்ட இடங்களில் குடியிருப்பு ஏற்படுவதைத் தடுக்கவும், ஒழுங்கற்ற அமைப்பினால் ஏற்படும் சமூகப் பொருளாதார இழப்புகளைத் தடுக்கவும் முடிகிறது. எனவே, குடியிருப்பின் அங்கங்களான வீடு, தானியக் கிடங்கு, விவசாய, தொழில் வகைக்கு ஏற்பக் கட்டப்பட்ட கட்டடங்கள் ஆகியவை நன்கு ஆராயப்பட்டன. சில அறிஞர்கள் குடியிருப்பின் பரப்பளவு, சாலைகள், வீடுகள் வயல்கள் ஆகியவற்றின் அமைப்பையும். அவற்றின் இடைவெளியையும் ஆராய்ந்தனர்; வேறுசிலர் அவற்றின் தரத்தையும் பிரித்தறிந்தனர். ஐரோப்பாவில் ஒரே இடத்தில் அமைந்துள்ள குடியிருப்புகளில் பல வகையான கட்டட அமைப்புகளைக் கண்ட ஐரோப்பியப் புவியியல் அறிஞர்கள் அக்கட்டடங்களின் காலத்தையும் அறிய முற்பட்டனர். சில அமரிக்க

அறிஞர்கள், கட்டடப் பொருள்கள், கட்டடங்களின் அமைப்பு ஆகியவற்றை அறிய முனைந்தனர். நிபென் (Fred B. Kniffen) என்பவர் லூசியானாவில் (Lousiana) வீட்டு வகைகளைப் பற்றியும், டர்நாட் (Loyal Durnad) என்பவர் தானியக் கிடங்குகளின் அமைப்பு, மாறுதல் ஆகியவற்றையும் ஆராய்ந்தனர்.

சாலைகளின் அமைப்புக்கு ஏற்ப, கட்டடங்களும், வீடுகளும் குறுகலாகவோ அல்லது நேராகவோ, காணப்படுகின்றன. சாலைகள் எவ்வாறு குடியிருப்பின் அமைப்பைப் பாதிக்கின்றன என்பதை, ஜெர்மனி, பிரான்சு ஆகிய நாட்டுப் புவியியல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்தனர். இத்துறையில் ஆகஸ்ட் மெயிட்ஸென் (August meitzen) என்பவரின் பணி குறிப்பிடத் தக்கதாகும். முக்கிய சாலைகளின் திசையில் குடியிருப்புகள் வேகமாக வளர்ந்து செல்லுவதை, இன்றைக்கும் நாம் பார்க்கமுடிகிறது. உதாரணமாக, சென்னை நகரத்திலிருந்து செல்லும் தேசிய சாலைகளின் திசையில் வீடுகளும் கட்டடங்களும் வெகு வேகமாக வளர்ச்சியடைந்துள்ளன. மின்சார ரெயிலின் அறிமுகத்தால், ரெயில்பாதை ஓரங்களில் குடியிருப்புகள் பெருகியுள்ளன. தாம்பரம் போன்ற புறநகரங்கள் சென்னையிலிருந்து தெற்கே செல்லும் தேசிய சாலையையும், ரெயில் பாதையையும் ஒட்டி வளர்ச்சி பெற்றுள்ளன. போக்குவரத்துக்கு எளிதாக இருப்பதால் இவை சாலைகளை ஒட்டியே வளர்ச்சியடைந்துள்ளன. டெல்லியிலும் இவ்வாறே சாலைகளின் திசையில் நகரத்தின் எல்லை விரிவடைந்து செல்லுகிறது. ஆறுகளின் குறுக்கீட்டினாலும் வன் சரிவுள்ள பகுதிகள் இடைப்படுவதாலும் பொதுவாகச் சாலைகள் வளைந்து வளைந்து செல்லுகின்றன. எளிதில் சென்று அடைவதற்காகக் கட்டடங்கள் சாலையின் இரு புறங்களிலும் கட்டப்படுவதால் அவைகளும் இரு புறங்களிலும் வளைந்து காணப்படுகின்றன.

பிற்காலத்தில், சட்டதிட்டங்களின் கட்டுப்பாட்டால், அமெரிக்கா, கானடா, பிரான்சு போன்ற நாடுகளில் சாலைகளும் கட்டடங்களும் ஒழுங்கான அமைப்பைப் பெற்றன. அமெரிக்காவில் பிரெஞ்சு குடியிருப்புகளில் சாலைகள் செங்கோண வடிவில் உள்ளன. அவற்றின் இரு மருங்கிலும் கட்டடங்கள் சதுர வடிவில் கட்டப்பட்டுள்ளன. பிரெஞ்சுக்காரர்களால் நிறுவப்பட்ட பாண்டிச்சேரி நகரத்திலும் சாலைகளும் தெருக்களும் செங்கோணத்தில் சந்திப்பதால் கட்டடங்கள் செவ்வக வடிவில் அமைந்துள்ளன. (படம் ; 23) ஆனால் வேளாண்

மையை முக்கிய தொழிலாகக் கொண்ட பகுதிகளில் நீள் வடிவ (linear pattern) குடியிருப்புகள், சதுர செவ்வகக் குடியிருப்புகளை விடச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஏனெனில் கழனிகளுக்கு நீர் பாசனம் செய்வது இதில் எளிதாகும்.

குடியிருப்பின் பணிக்கு ஏற்ப அதன் பொதுத் தோற்றமும் அமைகிறது. சாலைக்கருகிலும், சாலைகள் கூடுமிடத்திலும் கட்டடங்களும் வீடுகளும் குழுமி இருக்கின்றன. சாலைகளும் கட்டடங்களும் நிறைந்திருந்தால்தான் குடியிருப்பு என்பதில்லை. ஒரு கழனியைச் சுற்றி (Farm) சில கட்டடங்கள் இருந்தால்கூட அது ஒரு குடியிருப்புதான். அவ்வாறு குழுமிய வீடுகளுக்குப் பண்ணைக் குடியிருப்பு (Farmstead) என்பது பெயர். பண்ணைக் குடியிருப்பிலிருந்து, மாநகரம்வரை பல்வேறு படிநிலைகளில் (hierarchy) குடியிருப்புகள் காணப்படுகின்றன. அளவு, பணி ஆகியவற்றின் அடிப்படையில், இவை பண்ணைக்குடியிருப்பு (Farmstead), குக்கிராமம் (Hamlet) கிராமம் (Village), நகரம் (Town) மாநகரம் (City) என்று அழைக்கப்படுகின்றன.

கிராமப்புறத்தில் குடியிருப்புகளுக்கு இரண்டுவித அடிப்படைப் பொதுத்தோற்றம் உள்ளது. ஒன்று பண்ணையிலேயே அமைந்த குடியிருப்பு, மற்றொன்று பண்ணையை விட்டுக் கிராமத்தில் அமைந்த குடியிருப்பு. பண்ணைக் குடியிருப்புகள் பெரிய பண்ணைகளுள்ள பகுதிகளிலும், மலைச்சரிவுகளிலுள்ள தோட்டங்களிலும், பண்ணை நிலத்திலேயே இவை அமைந்துள்ளன. இவற்றில் பண்ணையாட்களின் வீடுகளும். பண்ணைக்கட்டடங்களும் காணப்படுகின்றன. இரண்டாவது வகையான கிராமக் குடியிருப்புகள் ஏற்படுவதற்கு நான்கு முக்கிய காரணங்கள் உள்ளன. தற்காப்புக்கு அவசியம் ஏற்பட்ட சில பகுதிகளில் மக்கள் பண்ணைகளைவிட்டுக் கிராமத்தில் ஒன்று சேர்ந்து வசித்து வந்தனர். நீர் வசதியை நாடியும் சில இடங்களில் கிராமத்தில் வசிக்க நேரிட்டுள்ளன. மேலும் பண்ணைகள் குறைவாக உள்ள பகுதிகளிலும் கிராமத்தில் சேர்ந்து வசிக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாகச் சேர்ந்து வாழுதல் மனிதனின் வாழ்க்கைப் பண்பாடாகக் கருதப் படுவதால் கிராமத்தில் வசித்தல் விரும்பப்பட்டது. வணிகத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் வசித்துவரும் கிராமங்கள் பொதுத் தோற்றத்தில் பண்ணைக் குடியிருப்பிலிருந்து மாறுபட்டு விளங்குகின்றன. வாணிகம் செய்யும் மக்கள் வாழ்ந்தபோதிலும் இவை கிராமமாகவே கருதப் படுகின்றன.

திரிவார்த்தாவின் (Trewartha) கருத்துப்படி, அமெரிக்கக் குக் கிராமம் என்பது கால் மைல் நீளத்திற்கு ஐந்து கட்டடங்களுக்குக் குறையாமலும், அவற்றில் நான்கு வசிப்பதற்காகவும், மீதி ஒன்று வியாபாரத்திற்காகவும் பயன்படுபவனவாக இருக்கவேண்டும். அவருடைய கருத்துப்படி ஒரு கிராமத்தில் குறைந்தது பத்துக் கடைகளாவது இருக்கவேண்டும். அது மட்டுமன்றி விவசாயக் கருவிகள் உரம் போன்ற பொருள்களை விற்பனை செய்யும் கடைகளும் காணப்படவேண்டும். அதன் மக்கட்தொகை அறு நூற்றுக்கு மேலிருந்தால் வைத்தியர்களும் அங்கு வசித்தல் வேண்டும். ஆனால், அங்குச் சினிமாவோ மற்றப்பொழுது போக்கு வசதிகளோ இருக்கவேண்டிய அவசியமில்லை.

4. தற்காலிகக் குடியிருப்புகள்

மனிதன் மேற்கொள்ளும் பல்வேறு தொழில்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைவது அவனுடைய தேவைகள்தாம். அதை நிறைவேற்றிக் கொள்ளவே தன்னைச் சுற்றியுள்ள நிலப் பரப்பில் அவன் பலவகையான தொழில்களை மேற்கொள்ளுகிறான். ஆதிமனிதன் தன் உணவு, உடை ஆகியவற்றை இயற்கைத் தாவரங்களிலிருந்து பெற்றுக் கொண்டான். காய்கனிகள் தீர்ந்துவிட்டபோது அவன் வேறு இடங்களைத் தேடிச் சென்றான். நாளடைவில் அவனுக்கு வேட்டையாடுதலும், மீன்பிடித்தலும் தெரிய வந்தன. துந்திரப் பிரதேசத்தில் வசிக்கும் எஸ்கிமோக்கள் கலஹாரி பாலைவனத்தில் வாழும் புஷ்மக்கள் (Bushmen), காங்கோப் பள்ளத்தாக்கில் (Congo Basin) வாழும் பிக்மியர்கள் ஆகியோர் இன்றைக்கும் வேட்டையாடியும், மீன்பிடித்தும், காய் கனிகளைச் சேகரித்துமே உயிர் வாழுகிறார்கள். இவர்கள் நாடோடிகளாய் வாழ்வதால் இவர்களுக்கு நிரந்தரமான வீடுகள் இல்லை. திரிந்து வாழ்வதற்கு ஏற்றாற்போல் இலேசான மரக்குச்சிகளைக்கொண்டு தற்காலிகமாகவே வீடுகளை இவர்கள் கட்டிக் கொள்ளுகிறார்கள். தென் அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியா (South East Asia), நியுகினி (New Guniea), ஆஸ்திரேலியா போன்ற பகுதிகளில் இத்தகைய நாடோடி மக்கள் காணப்படுகிறார்கள்.

வேட்டையாடிக் கொண்டிருந்த மக்கள் சில பகுதிகளில் பயிர்த்தொழில் செய்யத்தொடங்கினர். வேறுசில பகுதிகளில் கால்நடைகளை மேய்க்கும் (grazing) தொழிலில் ஈடுபட்டனர். மேய்ச்சல் தொழிலை மேற்கொண்டவர்களில் சிலர் நிரந்தரமான மேய்ச்சல் நிலங்களில் (Permament pasture) தற்காலிக வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தனர். இவர்கள் கோடையில் உயர்நிலங்களை (High lands) நோக்கியும், குளிர்காலத்தில் தாழ்நிலங்களை (Low lands) நோக்கியும் குடிபெயர்ந்து செல்வர்;

இதற்கு மந்தை இடமாற்றம் (Transhumance) என்று பெயர். எளிதிற் சுமந்து செல்லத்தக்க வகையில் இவர்களுடைய வீடுகள் இலேசான பொருள்களால் அமைக்கப்பட்டிருந்தன. இத்தகைய வாழ்க்கைமுறை மத்திய ஆசியாவில் வாழும் கிர்கீஸ் (Kirgizh), கசாக் (Kasak) மக்களிடையேயும், வட ஆப்பிரிக்காவில் வாழும் பெடுவின் (Bedowin) பழங்குடி மக்களிடையேயும் ஸ்பெயினில் சில மக்களிடையேயும் காணப்படுகிறது. இவர்களில் எவருக்கும் குடியிருப்புகள் நிரந்தரமாக இல்லை, கோடையில் உயர் நிலங்களை நோக்கிச் செல்லும் மந்தை இடமாற்றம் முடிந்து, மீண்டும் திரும்பி வரும்போது இவர்களுக்கென்று நிரந்தர கிராமமும் இல்லை. கால்நடைகளையே நம்பிவாழும் இவர்கள் பஞ்சகாலங் களிலும், கால்நடைகள் நோய்வாய்ப்பட்ட போதும் மிகவும் சிரமப்பட நேரிடுகிறது (படம் 5).

சில சமயங்களில் மண்ணின் வளம் குறையும்போதும், கொடிய நோய் பரவும்போதும், கிராமத்தை விட்டுப் புதிய கிராமத்தில் தற்காலிகமாகக் குடியேறும் வழக்கம் வடஅமெரிக்க இந்தியர்களிடையேயும், ஜெர்மானியர்களிடையேயும், சூடானிலுள்ள (Sudan) நீக்ரோக்களிடையேயும் காணப்படுகிறது.

இதேபோல் காடழித்துப் பயிர்செய்யும் வாழ்க்கை முறையிலும் (Shifting agriculture) குடியிருப்புகள் சில ஆண்டுகளுக்குப் பின் மாற்றப்படுகின்றன. உதாரணமாகத் தென்கிழக்கு ஆசியாவில் வசிக்கும் மியோ (Meo) இனத்தவர்கள் காடுகளை அழித்து மலை உச்சியில் மூங்கிலினாலான தற்காலிக வீடுகளை அமைத்துக் கொள்கிறார்கள் (படம் 6).

குடியிருப்பின் தலங்கள் (Sites) சில சமயங்களில் தற்காலிகமாக அமைவதுண்டு. ஆப்பிரிக்கப் பழங்குடி இனத்தவர்களில் சிலர், தற்காப்புக்காக நல்ல தலங்களை விட்டு விட்டு, கடந்து செல்லமுடியாத கரடுமுரடான தலங்களில் தற்காலிகமாகத் தங்கள் குடியிருப்பை ஏற்படுத்திக் கொண்டனர். இதனால் எதிரிகள் அவர்களை எளிதில் தாக்க முடியாது. மத்தியதரைக்கடல் பிரெஞ்சு கடலோரப் பகுதிகளில் வாழ்கின்ற ஃபினீஷியன் மெக்கார்த் (Phoenician Melkarth) அல்லது அஸ்டார்ட் (Astarte) இனத்தவர்கள் கடற்கொள்ளைக்காரர்களின் அச்சத்தினால் தங்கள் குடியிருப்பை அடிக்கடி மாற்றிக் கொள்ளுகிறார்கள். கடற்கொள்ளைக்காரர்களின் அச்சம் நீங்கியவுடன் கடற்கரையிலுள்ள தலங்கள் மீண்டும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. அதனால் படிப்படியாக நகரங்களும், பிற குடியிருப்புகளும் தோன்றலாயின.



படம் 5

(அ) அரேபியர்களின் கூடாரம். இது குச்சிகளினாலும், துணியினாலும் அமைக்கப்படுகிறது. இலேசாக இருப்பதால் எளிதிற் சுமந்து செல்ல முடிகிறது. நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும் அரேபியர்களுக்கு இத்தகைய இலேசான கூடாரம் அவசியமாகிறது.

(ஆ) மங்கோலியர்களின் யர்ட் (*yurt*) கூடாரம். மந்தை இடமாற்றத்தின்போது (*Transhumance*) இதனை எளிதில் பிரித்துக் கட்டிக்கொண்டு செல்லலாம்.



படம் 6

(அ) தென்கிழக்கு ஆசியாவில் வசிக்கும் மியோ (meo) இனத்தவரின் தனித்த வீடுகள். மலைப்பகுதிகளிலுள்ள காடுகளை அழித்துப் பயிர்செய்வது இவர்களது பழக்கம். காடுகளை அழித்த மலை உச்சிகளில் இவர்களுடைய வீடுகள் தனித்தனியாகக் காணப்படுகின்றன. இவற்றின் சுவர்கள் மூங்கில்களால் கட்டப்பட்டுள்ளன. வீட்டின் நிலவரைப் படிவம் (plan) கீழே தரப்பட்டுள்ளது.

(ஆ) தென்கிழக்கு ஆசியாவில் வசிக்கும் மேன் (man) என்ற இனத்தவரின் குக்கிராமம். மலைச்சரிவில் அமைந்த இந்தக் கிராமம் சம உயரக் கோடுகளின் (contours) வழியே அமைக்கப்பட்டிருக்கின்றன. செங்குத்துச் சரிவைத் தவிர்ப்பதற்காகவே ஒரே உயரத்தில் வீடுகள் நீண்டு அமைந்துள்ளன. வீட்டின் நிலவரைப்படிவம் கீழே தரப்பட்டுள்ளது.

சில குடியிருப்புகளில் வீடுகளும் கட்டடங்களும் நிரந்தரமாக இருந்தாலும், அவற்றில் எப்போதோ ஒருமுறைதான் மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். உதாரணமாக முகாம் (Camp) திருவிழா (Festival) கோயில் போன்றவைகளில் குறிப்பிட்ட நாட்களில் மட்டுந்தான் மக்கள் கூடுகிறார்கள். குன்னூரிலுள்ள (Coonoor) ஸ்டான்லி பயிற்சிமுகாமில் (Camp) கட்டடங்கள் நிரந்தரமாக இருக்கின்றன. இங்குச் சாரணர் இயக்க (Scouts) மாணவர்கள் பயிற்சி பெறும் காலங்களில் மட்டும் கூடுகின்றனர். பயிற்சிக் காலங்களில் மனிதர்கள் நிறைந்து காணப்படும் இப்பகுதியில் மற்றச்சமயத்தில் கட்டடங்கள் மட்டுமே காணப்படுகின்றன இதேபோல், வேளாங்கண்ணி, நாகூர், போன்ற சமய முக்கியத்துவம் பெற்ற இடங்களிலும் விழாக்காலங்களில் மட்டுமே மக்கள் தொகைச்செறிவு (density) அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறே திருத்தணி போன்ற தலங்களில் ஆடிக் கிருத்திகை போன்ற (Adi Festival) விசேஷ நாட்களில் மட்டுமே சத்திரங்களிலும் மண்டபங்களிலும் மக்கள் வசிக்கிறார்கள். மற்ற நாட்களில் அந்த நிரந்தரக் கட்டடங்கள் காலியாகவே இருக்கின்றன.

இதேபோல் சிறு துணைக் குடியிருப்புகள் (Satellite settlement) குறிப்பிட்ட காலங்களில் தற்காலிகமாக அமைவதுண்டு. காடழித்துப் பயிர்செய்து வந்த பழங்கால மக்கள் விளைநிலங்களின் நடுவே சிறு பரண் அமைத்து (Platform) அதன்மீது இருந்துகொண்டு பயிர்களைப் பறவைகளிடமிருந்தும் விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்தனர். ரொடீசியாவில் (Rhodesia) வாழும் பெம்பாஸ் (Bembas) இனத்தவர்கள் இவ்வாறு வயலில் பரண் அமைத்துக்கொண்டு உண்டி வில்லினால் பறவைகளை விரட்டினர். இம்முறைப்படி உயரமான பரண் அமைக்கப்படுவதால் தூரத்துப் பயிர்களும் கண்ணுக்குத் தெரிகிறது. அறுவடைக் காலங்களில் குடியானவர்கள் தங்கள் கிராமத்தை விட்டுத் தற்காலிகமாக இவ்வயல்களில் வசித்தனர். சில பகுதிகளில் கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற தானியங்கள் கிராமத்திலிருந்து ஏறக்குறைய 13 கிலோமீட்டர் தூரத்தில் பயிரிடப்படும். இங்கு மட்டும் குடியானவர்கள் தம் குடும்பத்தையும் தம்மோடு அழைத்துச் சென்று, வயல்களில் புற்களினால் வேயப்பட்ட குடிசைகளில் தற்காலிகமாக வசித்தனர். இத்தகைய குடியிருப்புகள் துணைக் குடியிருப்பு என்று அழைக்கப்படுகிறது.

பழங்குடியினத்தவரும், நாடோடிகளும் முறையாக நிலத்தைப்பயன்படுத்தத் தெரிந்து கொண்டிருக்கவில்லை; என்வே

அவர்களுக்கு மண்ணுடன் எந்தத் தொடர்பும் ஏற்படவில்லை. காடுகளை அழித்துப் பயிர்செய்த இடங்களிலும் அவர்கள் வாழ்க்கை நடத்திய அடையாளமே இல்லாமல் தாவரங்கள் அடர்ந்து வளர்ந்து விடுகின்றன. அவர்கள் நிலத்தை முறையாகப் பயன்படுத்தாததால் அந்தநிலம் சத்தை இழக்காமல் இருந்து வந்தது. காடுகளை அழித்தபோதும், கால்நடைகளை மேய்த்தபோதும் நிரந்தரக்குடியிருப்புகள் ஏற்படாதவரையிலும், நிலத்திற்கு எவ்விதக் கேடும் ஏற்படவில்லை. ஆனால், குடியிருப்பு நிரந்தரமாகி விடும்போது ஒரே பகுதி தொடர்ந்து பயன்படுத்தப்படுவதால் நிலம் வளத்தை இழக்கிறது. ஆகையால், பழங்குடி மக்களைவிட, தற்கால மக்களுக்கு நிலவளத்தைக் காக்கும் பொறுப்பு அதிகமாக உள்ளது.

5. கிராமப்புற குடியிருப்புகளின் வளர்ச்சி

மனிதன் நிரந்தரமாகப் பயிர்த்தொழில் செய்யத் தொடங்கியது முதல் நிலையான குடியிருப்புகள் ஏற்படலாயின. எனவே காலநிலை (climate) மண், பயிர் செய்யும் முறை (method of cultivation) தொழிற்பங்கீடு (division of labour), விவசாயப் பரப்பு, உற்பத்தித் தேவை போன்றவைகளே பயிர்த் தொழிலுக்கும் கிராம குடியிருப்புப் பரவலுக்கும் (distribution of settlements) முக்கிய காரணக்கூறுகளாக உள்ளன. எனவே இத்தகைய குடியிருப்புகள் பெரும்பாலும் பயிர் செய்யத்தக்க செழிப்பான நிலங்களிலேயே வளர்ச்சி பெற்றன: இங்கு வாழும் மக்கள் தங்கள் தேவைக்குப்போக உபரி (Surplus) தானியங்களை மாற்றுருக்கு விற்றனர். இவ்வாறு விற்பதன் மூலம், அவர்கள் தங்களுக்குத் தேவையான ஆடை, ஆபரணங்கள் கருவிகள் போன்றவற்றைப் பண்டமாற்று முறையில்(Barter) பெற்றுக் கொண்டனர். சில கிராமங்களில் இத்தகைய வணிகமே முக்கிய பணியாக (Function) இருந்துவந்தது.

வடமேற்கு ஐரோப்பாவில் கிராமப்புறகுடியிருப்புகளின் வளர்ச்சி :—

வடமேற்கு ஐரோப்பாவில் உரோமானியர்களுக்கு முன்பு வாழ்ந்த மக்களின் குடியிருப்புகள் விவசாயத் தன்மைக்கு ஏற்ப பலவித மாற்றங்களை அடைந்துவந்தன. பண்ணைக்குடியிருப்புகளும் (Farmstead) கிராமங்களும் ஒரு இடத்தில் தோன்றிவளர்ச்சி பெறுவது அம்மக்களின் திறமையைப் பொருத்திருந்தது. உலோகங்களைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பொருத்தும், ஆயுதங்களைச் செய்யும் திறமைக்கு ஏற்றவாறும் தகுந்த இடங்களில் பண்ணைக் குடியிருப்புகளும், கிராமங்களும் தோன்றலாயின. பீக்கர் (Beaker) செல்டிக் (celts) காலிக் (gallic) போன்ற இனத்தவர்கள் குடி

யேறிய பின்னர் இந்தப் பகுதியில் குடியிருப்புகள் இருந்த இடங்களும் அவற்றின் அமைப்புக்களும் மாறிவிட்டன. பிரிட்டனின் மேட்டுப்பகுதியில் வாழ்ந்த கெல்டிக் இனத்தவர் இரும்புக்கருவிகளை விவசாயத்திற்குப் பயன்படுத்தத் தொடங்கியவுடன் விவசாயத்தில்வளர்ச்சி ஏற்பட்டு பண்ணைக் குடியிருப்புகள் நிலைத்துவிட்டன. தானிய உற்பத்தி அதிகரித்துவிடவே பெரிய தானியக்கிடங்குகள் கட்டப்பட்டு அவற்றைச் சுற்றிலும் கிராமங்கள் தோன்றின. இவைகளே முதன்முதலில் தோன்றிய உயர் நிலக் கிராமங்களாகும். (upland villages). இதன்பிறகு பெல்ஜிக் (Belgic tribes) பழங்குடிகள் பெரிய கலப்பைகளை விவசாயத்திற்குப் பயன்படுத்தியவுடன், உயர்நிலக்கிராமங்கள் பல மறைந்து ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும், சமவெளிகளிலும் விவசாயக் குடியிருப்புகள் தோன்றி வளர்ச்சி பெற்றன, இருப்பினும் சில உயர்நிலக் கிராமங்கள், உரோமானியர் ஆட்சிக் காலத்திற்குப் பின்பும் காணப்பட்டன.

உரோமானியர் ஆட்சிக்காலத்தில் நிலச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டு குடியிருப்புகளின் அமைப்பு வரையறுக்கப்பட்டது. அப்போதுதான் விவசாயத்துடன் தொடர்புகொள்ளாத பிற மக்கள் வாழ்ந்துவந்த நகரங்கள் தோன்றின. கிராமப்புற பகுதிகளில் மாளிகைகளும் தோட்டம் சூழ்ந்த வீடுகளும் (villae) ஏற்பட்டன. மூன்றும் நான்காம் நூற்றுண்டுகளில், உரோமானியர் வீழ்ச்சிக்குப் பின்பு இந்த மாளிகைகள் சிற்றரசர்களால் கைப்பற்றப்பட்டு அவற்றைச் சுற்றிலும் குடியிருப்புகள் ஏற்படலாயின.

கிழக்கு ஐரோப்பாவில் உரோமானியர்களின் வீழ்ச்சிக்கு முன்பே அப்பேரரசின் வடகிழக்குப் பகுதிகளில் வாழ்ந்துவந்த பழங்குடிகள் வளமிக்க பகுதிகளுக்குக் குடியேற முயற்சித்தனர். அதன் விளைவாக மத்திய, கிழக்கு ஐரோப்பிய பகுதிகளிலிருந்தும், கருங்கடலுக்கு வடக்கே அமைந்த மித வெப்பப் புல் வெளிகளிலிருந்தும் (Steppe) மக்கள் மேற்கு நோக்கிக் குடியேறத் தொடங்கினர். இக்குடியேற்றம் பல்வேறு திசைகளிலிருந்து நீண்டகாலமாக நடைபெற்று வந்ததால், மக்களின் மொழி, இனம், பொருளாதாரம் ஆகியவற்றில் மாறுதல்கள் ஏற்பட்டன. வடகிழக்குப் பகுதியிலுள்ள காடுகளிலும், சதுப்பு நிலங்களிலும் (Marsh) கரம்பு நிலங்களிலும் (Heath) வாழ்ந்த மக்கள், மக்கள் தொகைப் பெருக்கத்தினுல் வேறு இடங்களுக்குச் சென்று குடியேறினர். இதைத்தவிர, மழைக்காலங்களில் இப்பகுதிகளில் விவசாயம் செய்வதும் கால்நடைகளைப் பேணுவதும் கடினமாக இருந்தத

லும் வேறு இடங்களுக்குச் சென்று குடியேறினர். உரோமானியர் வீழ்ச்சிக்குப் பின்பு கட்டுப்பாடுகள் நீங்கியதால் அம்மக்கள் தொடர்ந்து புதிய குடியிருப்புகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக பழைய குடியிருப்புகளையே புதுபித்துக் கொண்டனர். ஏனெனில் புதிய குடியிருப்புகளுக்கென நிலத்தைப் பக்குவப் படுத்துவது கடினமாக இருந்தது. ஐந்தாம் நூற்றாண்டில் புல்வெளிகளில் வறட்சி ஏற்பட்டபோது கால்நடைகளைப் பராமரித்துவந்த மக்கள் வேறு இடங்களுக்குக் குடியேறினர்.

உரோமானியர்களின் திட்டமிட்ட குடியிருப்புகளுக்கு நேர் மாறாக வடமேற்கு ஐரோப்பாவில் சிதறலான குடியிருப்புகள் ஏற்பட்டன. வேலைக்கு எளிதான வளமான மண்ணையுடைய பகுதிகளையே மக்கள் பயிர்த்தொழிலுக்குச் சிறந்ததாகத் தேர்ந் தெடுத்ததால், உயர்நிலங்களும், சதுப்புநிலங்களும் (Marsh) தவிர்க்கப்பட்டன. சிலபகுதிகளில் காடுகளிலும் குடியிருப்புகள் ஏற்பட்டன. இவை மூலக்கரு (Nucleated) கிராமங்களாக விளங்கின.

இங்கிலாந்தில் ஆங்கிலோ சாக்ஸன் (Anglo-saxon) இனத் தவர்கள். ஆறுகளும், சாலைகளும் கூடுமிடங்களில்தான் முதன் முதலில் குடியிருப்புகளை ஏற்படுத்தினர். அதன்பிறகு காடுகளை அழித்து காலனிகளை அமைத்தனர். பிரான்சிலும், ஜெர்மனியிலும் காடுகள் அதிகமாக இருந்தபோது வேட்டையாடுவதற்கும், கரி உற்பத்தி செய்வதற்கும் பயன்பட்டன. ஆனால் காலப் போக்கில் இங்கேயும் காடுகள் அழிக்கப்பட்டு சிறிது சிறிதாகக் கிராமங்கள் தோன்றலாயின. காட்டு விளிம்புகளிலிருந்த கிராமங்கள் வளர்ச்சியடையும்போது காடுகள் மேலும் அழிக்கப்பட்டன. காட்டுக்குள் காணப்படும் கிராமங்களில் பல மடாலயங் களாகவே (monastic bodies) திகழ்ந்தன.

இந்தியாவில் கிராமப்புறக் குடியிருப்புகளின் வளர்ச்சி :—

பல்வேறு மொழியைச் சார்ந்தவர்கள் வாழும் இந்தியாவில் குடியிருப்பின் வளர்ச்சியும் இடத்திற்கு இடம் வேறுபட்டு இருக் கிறது. இந்தியப் பழங்குடி மக்களின் குடியிருப்புகளிலிருந்து இதனை நாம் உணரலாம். இந்தியாவின் கிழக்குப் பகுதிகளிலுள்ள காடுகளில் வாழ்ந்த பழங்குடி மக்கள் ஒன்று சேர்ந்து ஒரே குடும்பமாக வாழ்வதைக் கொள்கையாகக் கொண்டிருந்தனர். வேளாண்மை செய்ய, காடுகளை அழிக்கின்றபோதும் அவர்கள் ஒன்றாகவே உழைத்தனர். அதனால் அவர்கள் ஒன்று சேர்ந்து

வசிக்கவேண்டியதாயிற்று. அதன் விளைவாகப் புதிய கிராமங்கள் தோன்றின. பகைவர்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள ஏதுவாக அவர்கள் அந்தக் கிராமங்களிலேயே வாழ்ந்தனர்.

காடுகளில் வாழ்ந்த மக்கள் விலங்குகளின் தொல்லைகளினால் நாளடைவில் காட்டைவிட்டு விலகிய பகுதிகளில் கிராமங்களை அமைத்துக் கொண்டனர். உதாரணமாக கேரளாவின் கொல்லம் மலைச்சரிவுகளில் வாழும் கன்னிகாரன் (Kannikkaran) இனத்தவரின் கிராமங்கள் யானையின் பாதையைவிட்டு விலகியே அமைந்திருக்கிறன. அங்குள்ள நிலத்தின் வளம் குன்றியவுடன் அந்தக் கிராமங்களை விட்டுவிட்டு வேறு இடங்களுக்குக் குடியேறு கின்றனர்.

மலைப்பகுதிகளில் பல்வேறு வாழ்க்கை முறைகளைக்கொண்ட மக்கள் சிறு குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். கால் நடைகளைப் பராமரிக்கும் குறும்பன் இனத்தவர் நீலகிரி, வயநாடு (Wynaad) பகுதிகளிலும், வேட்டையாடி வாழும் நயாடி (Nayadi) இனத்தவர்கள் கொச்சி (Cochin) கள்ளிக்கோட்டைப் பகுதிகளி லும் குக்கிராமங்களை அமைத்துக்கொண்டனர். இதேபோல் காய்கனிகளைச் சேகரித்து வாழும் மலைப்பண்டாரம் (Malapandaram) பளியர் (Paliyar) காடர் (Kadar) பனியர் (Paniyar) போன்ற இனத்தவர்களும் பத்து அல்லது பதினைந்து வீடுகளைக் கொண்ட தற்காலிக கிராமங்களை அமைத்துக் கொண்டனர். மேய்ச்சல் தொழிலை முதன்மையாகக் கொண்ட தோடர் (Todas) இனத்தவர் நீலகிரி மலைச்சரிவிலுள்ள புல்வெளிப் பகுதிகளில் மன்ட் (Mand) என்று சொல்லப்படுகின்ற கிராமங்களை அமைத் துக் கொண்டனர். இக்கிராமத்தில் ஐந்து அல்லது ஆறு வீடு களே காணப்படுகின்றன.

தக்காண பீடபூமியில் வளர்ச்சி பெற்ற பெரும்பாலான குடி யிருப்புகளில் பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்பட்டன. இப்போ தும்கூட அச்சுவர்கள் காணப்படுகின்றன. கோயில்களை மூலக் கருவாகக் கொண்ட இந்தக் கிராமங்களில் பொருள்களைச் சுமந்து செல்லும் லம்பாடி (Lambadi) இனத்தவர்களும் விவசாயம் செய் யத்தொடங்கினர். அதன் பிறகு இவர்களுக்கு இங்கு நிரந்தரக் குடியிருப்புகள் ஏற்படலாயின. ஹைதராபாத் பகுதியில் வாழும் சென்சு (Chenchus) என்ற நாடோடி இனத்தவர்கள் காட்டில் கிடைத்த உணவையே நம்பி வாழ்ந்தனர். பிற்காலத்தில் கால நிலைக்கு ஏற்ப இவர்கள் குடியிருப்புகளை மாற்றிக்கொண்டு வேறு இடங்களுக்குச் செல்லலாயினர்.

ராஜபுதனத்தில் வாழும் பில்ஸ் (Bhils) கிராசியால் (Girasias) போன்ற மலைச்சாதியினர் தற்காலத்தில் விவசாயம் செய்யத் தொடங்கியதன் மூலம் அவர்களும் நிரந்தரக் குடியிருப்புகளைப் பெற்றுவிட்டனர்.

பஞ்சாப், காஷ்மீர் ஆகிய இடங்களில் நீரைத்தேடி (water-seeking) குடியிருப்புகள் இடம் பெயர்ந்தன. நீரைப் பெறுவதற்காக வெட்டப்பட்ட குளங்களைச்சுற்றிக் கிராமங்கள் தோன்றி வளர்ச்சியடைந்தன. வளமான நிலம் குறைவாக அமைந்த சமவெளிகளில் வீடுகட்ட விளைநிலங்களைப் பயன்படுத்தாமல், ஏற்கனவே வீடுகள் கட்டப்பட்ட பகுதிகளிலேயே மேலும் மேலும் அவை நெருக்கமாக வளர்ச்சி பெற்றன. கங்கைச் சமவெளியிலுள்ள அயோத்தியில் (oudh) தற்காப்பிற்காக மக்கள் தொடக்கத்தில் பெரிய கிராமங்களில் வாழ்ந்துவந்தனர். ஆனால் இன்று புதிய நிலங்களைப் பயன்படுத்தத் தொடங்கியதால் குடியானவர்கள் பெரிய கிராமங்களிலிருந்து விலகிச் சென்று சிறிய கிராமங்களில் வசிக்கத் தொடங்கியுள்ளனர்.

6. குடியிருப்புப் பரவலின் இயல்புகள்

புவியின் மேற்பரப்பில் ஒவ்வொரு அமைப்புக்கும் இருப்பிடம் ஒன்று உள்ளது. அந்த இருப்பிடத்தின் பண்பு காரணமாகக் குடியிருப்புக்கு ஒரு தனித்த அமைப்பு ஏற்படுகிறது. உதாரணமாக ஆற்றங்கரையில் நகரம் ஒன்று அமைந்திருப்பதாக வைத்துக் கொள்ளுவோம்: அந்த நகரம் ஆற்றங்கரையின் ஓரமாகவே நீண்டுபரவியிருக்கிறது: அதன் தெருக்கள் ஆற்றங்கரைக்குச் செங்குத்தாக அமைந்திருக்கின்றன: இத்தகைய அமைப்புகள் எல்லா ஆற்றங்கரை நகரங்களிலும் காணப்படுகின்றன. அதாவது ஒரே மாதிரியான தலமும் (Site) சூழமைவும் (Situation) கொண்ட குடியிருப்புகள் அமைப்பிலும் பண்பிலும் ஒன்றுகவே இருக்கின்றன. ஆகவே, ஆற்றங்கரையைத் தலமாகக் (Site) கொண்ட எல்லா நகரங்களேயும் ஆற்றங்கரை நகரங்கள் என்று வகைப்படுத்துகிறேம்: இதே பண்புகளேக் கொண்ட நகரங்களின் இருப்பிடத்தை (location) வரைபடமொன்றில் (Map) குறித்தால், அது ஆற்றங்கரை நகரங்களின் இருப்பிடப் பரவலே (Spatial distribution) வெளிக்காட்டும்: இடங்களின் பண்பையும் பரவலேயும் அறிவது புவியியலின் நோக்கங்களில் ஒன்ருகும். ஆகவே, குடியிருப்புகளின் இருப்பிடப் பரவலே (spatial distribution) அறிந்துகொள்ளுவதன்மூலம் அவற்றுக்கும், புறச் சூழ்நிலேக்கும், உள்ள தொடர்பைத் தெரிந்துகொள்ள முடிகிறது:

குடியிருப்பின் இருப்பிடப்பரவல் பொதுவாக மூன்று இயல்புகளே வெளிப்படுத்துகிறது: அவை பின்வருமாறு:—

(1) குடியிருப்புகளின் செறிவு (density)

(2) குடியிருப்புகளின் பரவல் (dispersion)

(3) குடியிருப்புகளின் வடிவம் (pattern)

குடியிருப்பின் செறிவு என்பது ஒரு குறிப்பிட்ட பரப்புக்குள் காணப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும். எனவே, இது ஒரு இடத்தின் பரப்பளவோடு தழுவி நிற்கிறது. இது பொதுவாக ஒரு இடத்தின் நிலப் பயன்பாட்டைப் (Landuse) பொருத்து வேறுபடுகிறது. உதாரணமாக மிகவும் நெருக்கமான குடியிருப்புகள் உள்ள நியு ஜெர்ஸிக்கும், (New Jersey) சிதறலான குடியிருப்புகள் உள்ள மான்டாணுவுக்கும் (montana) செறிவில் (density) வேறுபாடு உள்ளது. இன்னும் கூறப்போனால் சுமார் அரைமைல் இடைவெளிக்குள் ஒரு கிராமம் காணப்படும் ஜாவாவிற்கும் (Java) பல மைல்களுக்கு குடியிருப்புகளே இல்லாத ஆப்பிரிக்கப் பாலைவனங்களுக்கும் குடியிருப்புச் செறிவில் எவ்வளவோ வேறுபாடு உள்ளது. வளமான நிலப்பகுதிகள் குடியிருப்புகளின் வளர்ச்சிக்கு ஊக்கம் தருகின்றன. எனவே அங்குச் செறிவு அதிகமாகிறது. நிலம் எந்தப் பணிகளுக்காகப் பயன்படுகிறது என்பதைப் பொருத்தும் செறிவு விகிதம் மாறுபடுகிறது. வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்ட தெற்கு ஆசியநாடுகள் பலவற்றில் குடியிருப்புச் செறிவு மிக அதிகமாக இருக்கிறது. பயிர் சுழற்சி முறை, ஒன்றுக்கு மேற்பட்ட போகம் ஆகிய முறைகளால் நிலம் அதிக அளவிற்கு இங்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே சிறிய நிலம், அதிக மக்களுக்கு உணவைத் தருகிறது. எனவே செறிவு என்பது நிலத்தைப் பயன்படுத்தும் (Landuse) அளவையும் பொருத்திருக்கிறது. (படம் 7)

குடியிருப்புப்பரவல் (dispesrion) என்பது குடியிருப்புப் பரவலின் (Spread) அளவைக் குறிப்பதாகும். இதுவும் செறிவைப்போல் ஒரு இடத்தின் பரப்பளவைத் தழுவிக் காணப்படுகிறது. அதாவது குறிப்பிட்ட பரப்பில் குடியிருப்புகளுக்கிடையே உள்ள தூரத்தை இது குறிக்கிறது. குடியிருப்புகளிடையே தொலைவு அதிகமாக இருந்தால், அது பரவலான (dispersed) அமைப்பு எனப்படுகிறது. குடியிருப்புகளுக்கு இடைவெளியே இல்லாமலிருந்தால் அது நெருக்கமான (Compact) அமைப்பு எனப்படுகிறது. தனித்த பண்ணைக்குடியிருப்புகளில் பரவலாக வாழ்வது அமெரிக்க, ஐரோப்பிய கிராமப்புறங்களில் சிறப்பாகக் காணப்படுகிறது. உலகின் மற்றப் பகுதிகளில் நெருக்கமான கிராமக் குடியிருப்புகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒரு பகுதியில் பொதுவாக ஒரே வகையான பரவல்தான் காணப்படும். ஆனால் சில இடங்களில் மட்டுமே இருவிதப் பரவல்களும்



படம் 7

செறிவு (*density*), பரவல் (*dispersion*) வடிவம் (*pattern*)

சேர்ந்து காணப்படுகிறது. உதாரணமாக உட்டாவில் (Utah) பழைய குடியிருப்புகள் கிராம அமைப்பிலும் (நெருக்கமான) புதிய குடியிருப்புகள் பண்ணைகளில் தனித்தனியாகவும் காணப் படுகின்றன.

தனித்த வீடுகள்:

பழங்காலத்து மக்கள் கூடிவாழ்வதை ஒரு மரபாகக் கருதிய தால் கிராமங்களிலேயே ஒன்றாக வசித்தனர் சில இடங்களில் ஒரு சமூகத்தைச் சார்ந்த அனைவரும் ஒரே வீட்டில் வசித்தனர். தற் காலத்தில் கூட அமேஸான் (Amozon) பள்ளத்தாக்கில் வசிக்கும் போரோ (Boro) இனத்தவர் கூட்டமாக ஒரேவீட்டில் வசிக்கிறார் கள். பொதுவீடு (Common dwelling) அல்லது நீண்ட வீடு(long-house) என அழைக்கப்படும் இந்த வீடு சுமார் 60 அடி நீளமும், 30 அடி அகலமும் கொண்டிருக்கிறது. இதற்குள்ளே ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடுப்படி ஒன்று (Fire place) இருக்கிறது: இதனைச் சுற்றி போரோ குடும்பத்தினர் தங்களுடைய பொருள் களை வைத்துக்கொள்ளுகிறார்கள். ஒரு குடும்பத்திற்கும் மற்றொரு குடும்பத்திற்கும் மறைப்பு இல்லாத இந்த வீட்டில், தேவைப்படும் போது மறைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. இதேபோல் தென் கிழக்கு ஆசியா (Southeast Asia) இந்தோசீனா (Indechina) தென் மேற்குக் கடற்கரை ஆகிய பகுதிகளிலும், பழங்குடி மக்கள் பொதுவீடுகளில் வசிக்கிறார்கள். பழங்காலத்துக் குழுமிய குடி



படம் 8

ஒனன்டாகா-இராக்கியோஸ் (*Onandaga-Iroquios*) நீண்ட வீடு. இது 80 அடி நீளமும் 17 அடி அகலமும் கொண்டிருக்கிறது. ஒரே கூரை யின்கீழ் பல குடும்பங்கள் வசிக்கும் இதைப் பொதுவீடு; என்றும் அழைக்கலாம்.

யிருப்பு அமைப்புக்கு நேர்மாறாகத் தற்காலத்தில் சிதறிய, பரவலான (dispersed) குடியிருப்புக் காணப்படுகிறது. பண்ணைவிவசாய முறை முக்கியத்துவம் பெற்றுவிட்டதால், தற்காலப் பண்ணைகள் பரப்பளவில் பெரியதாக அமைந்து. அவற்றிலேயே பண்ணையாட்களின் வீடுகளும், பண்ணைக் கட்டடங்களும் காணப்படுகின்றன. ஒரு பண்ணைக்கும் மற்றொரு பண்ணைக்கும் இடைவெளி அதிகமாக இருப்பதால் இப்பண்ணைக் குடியிருப்புகள் தனித்து பரவலாகக் காணப்படுகின்றன. இதேபோல் மலைப் (படம் 9, 10) பகுதிகளில் அமைந்திருக்கும் பண்ணைகளிலும் பரவலான குடியிருப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாகத் தென் இந்தியாவிலுள்ள ஏல மலையைக் (Cardamon Hills) குறிப்பிடலாம். ஏலக்காய்த் தோட்டங்கள் நிறைந்துள்ள இம்மலைப்பகுதியில் பண்ணைகள் தோறும் சிறு கட்டடங்கள் உள்ளன. இங்கேயும் பண்ணைகளின் பரப்புப் பெரியதாகவும் நிலம் கரடுமுரடாகவும் இருப்பதால், பண்ணைக் குடியிருப்புகள் ஓடைகளின் கரைகளிலேயே சிதறலாகக் காணப்படுகின்றன (படம் 10).

நெருக்கமான கிராமம் (Compact Village):-

நெருக்கமான கிராமம் என்பது கட்டடங்களும் வீடுகளும் அருகருகே ஒன்றாகக் குழுமி இருப்பதாகும். இங்கு நெருக்கம் என்பது மறைமுகமாக மக்கள் தொகைச் செறிவைக் (density) குறிக்கிறது. சிறிய பரப்பில் மக்கட்தொகை அதிகமாகக் காணப்படுவதால் இங்கு வீடுகளும் கட்டடங்களும் நெருக்கமாகக் காணப்படுகின்றன. அதாவது, விளை நிலத்தின் பரப்பு குறைவாக இருப்பதால், வீடுகள், கட்டடங்கள் ஆகியவைகளைக் கட்டுவதற்கு ஒதுக்கப்படும் நிலப்பரப்பு மிகச் சிறியதாக உள்ளது. எனவே, இச்சிறிய பரப்பில் குடியிருப்புகள் ஏற்படும் போது அவை விளைநிலங்களை ஆக்கிரமிப்புச் செய்யாமல் அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே மிகவும் நெருக்கமாக காணப்படுகின்றன. (படம் 11) ஒரே வீட்டில் பல குடும்பங்கள் நெருக்கமாக வாழ்வதால் முன்பு கூறிய நீண்டவீடும் (longhouse) ஒருவகையில் நெருக்கமான குடியிருப்பேயாகும்.

மூலக்கரு கிராமம் (Nucleated Village):-

மூலக்கரு கிராமம் என்பது குளம், ஏரி, கோயில், கோட்டை போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை மையமாகக் கொண்டு வளர்ச்சி பெறுவதாகும். இம்மையத்தைச் சுற்றிச் சாலைகளும் கட்டடங்களும் மிகவும் நெருக்கமாக அமைகின்றன. உதாரண



படம் 9 (அ) தென் அமெரிக்காவில் வசிக்கும் ஜமாடி (*Jamadi*) இனத்தாரின் நீண்ட வீடு. காடுகளை அழித்த பகுதியில், இவை அமைக்கப்படுகின்றன.
(ஆ) ஜமாடி நீண்ட வீட்டின் நிலவரைப் படம்

ஏ தோ – ஏலக்காய் தோட்டம்

■ – பண்ணைக் குடியிருப்பு

படம் 10

ஏல மலையிலுள்ள சிதறிய குடியிருப்பு.

மாகச் சுண்ணாம்பு நிலப்பகுதியில் (Limestone region) சுனை ஒன்று (Spring) இருப்பின் அதைச்சுற்றிலும் ஒரு குடியிருப்புத் தோன்றுவது இயற்கை. அதேபோல், பாலைவனத்தில் காணப்படும் பாலைவனச் சோலைகளைச் (Oases) சுற்றிலும் குடியிருப்புகள் தோன்றுவதால் இக்குடியிருப்புகளுக்கு மூலக்கருவாக விளங்குவது நீர்நிலையாகும். பொதுவாக மூலக்கருவின் வடிவத்தையே இக்குடியிருப்புகள் பெற்றிருக்கின்றன. சில சமயங்களில் சமூகப் பொருளாதார காரணங்களினாலும், மூலக்கரு குடியிருப்புகள் தோன்றுவதுண்டு. தமிழ்நாட்டில் பல குடியிருப்புகள் கோயிலை மையமாகக் கொண்டு காணப்படுகின்றன. மதுரை நகரில்



படம் 11 (அ) டிப்பல் :- விவசாயிகளின் குழுமிய குடியிருப்பு,
(ஆ) ஹாபெண்டார்ப் :- ஒழுங்கற்ற வயல் அமைப்பும் நெருக்கமான கிராமமும்.

கோயிலைச் சுற்றிச் சதுர வடிவில் மதிற்சுவரும் அதனைச் சார்ந்து மாடவீதிகளும் அவ்வீதிகளில் வீடுகளும் கட்டடங்களும் காணப் படுகின்றன. இதே போன்று கோட்டையையும் அரண்மனையை யும் மையமாகக்கொண்டு வளர்ச்சி பெற்ற குடியிருப்புகள் இந்தி யாவில் ஏராளமாக உள்ளன. உதாரணமாக, ஆந்திரப் பிரதேசத் தில் வாரங்கல் (Warngal) நகரில் தற்காப்பிற்காக அமைக்கப் பட்டுள்ள கோட்டையைச் சுற்றிலும் குடியிருப்புகள் காணப்படு கின்றன. இக்குடியிருப்புகளைச் சுற்றிலும் வட்டமான மண்சுவர் காணப்படுகிறது. (படம் : 12)



படம் 12
வாரங்கல் நகரம் (ஆந்திரப் பிரதேசம்

தொகுப்பு அல்லது கொத்தாக அமைந்த கிராமம்: (Agglomerated Village)

மூலக்கரு எதுவும் இல்லாமல் குடியிருப்புகள் திரளாக காணப்படும்போது, அவை தொகுப்பு அல்லது கொத்தாக அமைந்த கிராமம் (Agglomerated Village) எனப்படுகிறது. இவ் வகைக் கிராமங்கள் நிலத்தின் அமைப்பு அல்லது சமூகப் பழக்கம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுகிறது. பண்ணை யின் பரப்பு, பெரியதாக இருந்தால் அங்கு அமையும் பண்ணைக் குடியிருப்புகள் (Farmstead) காலப்போக்கில் தொகுக்கப்பட்ட கிராமமாக மாறுவதற்கு வாய்ப்பு உண்டு. இதேபோன்று சிறிய பண்ணைகளில், அப்பண்ணைகளிலேயே வீடுகள் அமையாமல்

அருகிலுள்ள கிராமத்தில் அமையும்போது இத்தகைய நெரிக்கப்பட்ட கிராமம் தோன்றுகிறது. இராமநாதபுர மாவட்டத்தில் குடியிருப்புகள் இரயில்பாதை, சாலை இவற்றையொட்டிக் குறுகிய இடைவெளிகளில் கொத்துக் கொத்தாகக் காணப்படுகின்றன. (படம் 13)



படம்: 13
இராமநாதபுர மாவட்டத்திலுள்ள தொகுப்புக் குடியிருப்பு

குடியிருப்பின் வடிவம் (Pattern) என்பது வடிவ கணித உருவத்தைக் (geometrical shape) குறிப்பதாகும். இதற்கும் பரப்பளவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. குடியிருப்பின் வடிவம் பொதுவாக நிலத்தோற்றத்தைப் பொருத்து அமைகிறது. ஆறு, ஊற்று (Spring), நீண்ட குன்று (Ridge), கால்வாய், சாலை, ரெயில்பாதை, கோயில் போன்ற அமைப்புகளைச் சுற்றியோ,

அருகிலோ குடியிருப்புகள் வளர்ச்சி பெற்ருல், அவற்றின் வடிவம், அந்த அமைப்புகளைப் போலவே இருக்கிறது: உதாரணமாகக் குடியிருப்புத் தோன்றுவதற்கு ஒரு சுனை அல்லது குளம் காரணமாக இருந்தால், அந்தக் குடியிருப்பின் வீடுகளும் கட்டடங்களும் அந்த நீர் நிலையைச்சுற்றிலும் வட்டமாக அமைக்கப்படுகின்றன. அந்தச் சுனை அல்லது குளம் எந்த அமைப்பில் இருக்கிறதோ அதே அமைப்பில்தான் அவற்றைச் சுற்றி அமைந்த வீடுகளும் கட்டடங்களும் காணப்படுகின்றன: இதே போல் ஆறு அல்லது சாலையை ஒட்டி வளர்ச்சிபெறும் குடியிருப்பின் வீடுகளும் அந்த ஆறு அல்லது சாலையின் ஓரமாக நீளவாக்கில் (Linear) அமைக்கப்படுகின்றன. ஆகவே, குடியிருப்பின் வடிவம் (Pattern) என்பது அது அமைந்திருக்கின்ற தலத்தின் (Site) வடிவத்தைப் பொருத்திருக்கிறது.

நிலத்தைப் பங்கீடு செய்யும் (land division) அதிகாரமும், சாலைகளை அமைக்கின்ற பொறுப்பும், அரசாட்சி செய்பவர்களிடம் வந்துவிட்ட பிறகு, குடியிருப்பின் வடிவத்தில் மாறுதல் ஏற்படலாயின. அதாவது குடியிருப்பு அமைவதற்கு முன்னரே நிலம் பிரிக்கப்பட்டு அவற்றில் சாலைகள் அமைக்கப்பட்டன: சாலைகள் அமைக்கப்பட்ட பின்னரே குடியிருப்பு ஏற்படுத்த அநுமதிக்கப்பட்டது. சாலைகள் பொதுவாக சதுர வடிவத்திலும், செவ்வக வடிவத்திலுமே இணைக்கப்பட்டன. எனவே, அந்த அமைப்பிற்கு ஏற்ப குடியிருப்புக் கட்டடங்களும் சதுர, செவ்வக வடிவத்தைப்பெற்றன. இதுவே வடிவ கணித உருவம் (Geometrical Shape) எனப்படுகிறது: உரோமானியர் இவ்வாறே நிலத்தை முறையாகப் பிரித்து அமைத்தனர்: அதேபோல் அமெரிக்காவின் மேற்குப் பகுதியிலும் 1785-ம் ஆண்டு முதல் நிலத்தைச் சதுர செவ்வக வடிவில் (Grid system) பிரித்தமைத்தனர். டச்சு (Dutch) நாட்டிலும் காடுகளை அழித்துப் பண்படுத்தப்பட்ட (reclaimed) புதிய நிலங்களில், நிலவரைப் படம் (Plan) போடப்பட்ட பின்பே குடியானவர்கள் குடியேற அநுமதிக்கப்பட்டனர்:

குடியிருப்பின் எல்லா நிலவரை அமைப்பும் (lay out) குறிப்பிட்ட காலத்திற்குப் பொருந்திய அமைப்பே தவிர, எல்லாக் காலத்திற்கும் பொருந்துவது இல்லை: நிலப்பயன்பாடு, வேளாண்மை, போக்குவரத்து ஆகியவற்றில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும் குடியிருப்பின் வடிவம் பாதிக்கப்படுகிறது: புதிய சூழ்நிலைகளுக்கேற்ற அமைப்பு, பிற்காலத்தில் ஏற்பட்டாலும்,

மையத்தைச் (Core) சுற்றியிருக்கும் பழைய அமைப்பை மாற்றுதல் இயலாது.

குடியிருப்புப்பரவலின் எல்லை:- (Limits of Settlements)

மேட்டு நிலங்கள், நீண்ட குளிர்காலமுள்ள பகுதிகள் வரண்ட பகுதிகள், பூமத்திய ரேகைக் காடுகள், பாலைவனங்கள் ஆகியவற்றில் மக்கட் தொகை மிகக் குறைவாகக் காணப்படுகிறது. மழைமிகு பகுதிகளில் அடிக்கடி நீர் தேங்குவதால், அவை மனிதனால் விரும்பப்படுவதில்லை. அதேபோல் காற்றும் சில சமயங்களில் மனிதக் குடியிருப்புக்குத் தடைசெய்கிறது. உதாரணமாக ரியஸ் (Reuss) ஆற்றுப் பள்ளத்தாக்கின் மேற்பகுதியில் இளவேனிற் பருவத்தில் வீசும் வெம்மையான ஃபான் (Foehn) காற்று அங்குக் குடியிருப்புகளுக்குத் தடைசெய்கிறது. அது போலவே பனி வீழ்ச்சியும் (Avalanche) தன்னிடத்திலிருந்து குடியிருப்புகளை விலகச் செய்கிறது. இப்பகுதிகளே குடியிருப்புப் பரவலுக்கு எல்லைகளாக (limits of settlements) விளங்குகின்றன.

ஆனால், இந்த எல்லைகள் எந்த அளவிற்கு நிலையானவை என்பதை நிச்சயம் செய்தல் இயலாது. ஏனெனில், இந்த எல்லைகள் இடத்திற்கு இடமும், காலத்திற்குக் காலமும் மாறுபடுகின்றன. முன்பு குடியேற முடியாததெனக் கருதப்பட்ட பகுதிகளிலெல்லாம் இப்போது குடியேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விஞ்ஞான வளர்ச்சியினால் பயனற்ற இடங்களெல்லாம் மனித இருப்பிடங்களாக மாறிவிட்டன. ஒரு இடத்தில் குடியிருப்புக்கு ஒவ்வாத தலம் வேறு இடத்தில் மிகவும் ஏற்றதாக இருக்கலாம். இந்தியாவில் ஏலமலையின் வாழும் மன்னன் (mannan), மூத்தவன் (muthavan) இனத்தவர்களின் குடியிருப்புகள் மலைச் சரிவுகளில் சுமார் 6000 அடிவரை காணப்படுகின்றன. க்ளிபியின் (Gliby) கூற்றுப்படி பிரிட்டனில் 800 அல்லது 900 அடி உயரம் இன்றைக்குக் குடியிருப்பின் எல்லையாக உள்ளது: ஆனால், வெண்கல காலத்தில் (Bronze Age) இதைவிட உயர்ந்த நிலங்களில்தான் (Highlands) அவை காணப்பட்டன. மேலும் நெப்போலியப் போரின்போது (Napoleonic Wars) அவற்றின் எல்லை தற்போதைய உயரத்தைவிட அதிகமாக இருந்துவந்தது. சென்ற 150 ஆண்டுகளில் இந்த எல்லையின் மாறுதல்களை நில படங்கள் மூலம் ஆராயும்போது அதன் மாற்றங்கள் தெரிய வருகின்றன. உதாரணமாக வேல்ஸ் மாநிலத்தில் (Wales) பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கிராமப்புற மக்கட் தொகையின்

பெருக்கத்தினுல் உயர்நிலங்களிலும் குடியிருப்புகள் பரவியிருந்தன. ஆனால், அந்த நூற்றுண்டின் இறுதியில் நெருக்கம் குறைந்தவுடன் மக்கள் மீண்டும் தாழ் நிலங்களை நோக்கி (lowlands) இடம் பெயர்ந்தனர்.

குடியிருப்பின் வரம்பு என்பது, அந்தச் சமூகத்தின் தேவை, எண்ணம் ஆகியவற்றின் பிரதிபலிப்புதான். எனவே, சமூகத்தின் தேவைகளும், எண்ணங்களும் மாறிக்கொண்டு வருவதால் அது அமைத்துக் கொள்ளும் இடத்தின் எல்லேயும் மாறிக் கொண்டு வருகிறது.

7. தலமும் சூழமைவும்

(Site and Situation)

குடியிருப்புத் தோன்றி வளர்ச்சியடைவதற்குப் பொருத்த மான தலமும் (Site) சூழ்மைவும் (Situation) அவசியமாகும். மலைச்சரிவு, மலைஉச்சி, குன்று, ஆற்றுப் பள்ளத்தாக்கு, ஆற்றுத் திடல் (River terrace), நீர் ஊற்று, குளம், சாலைகள் கூடுமிடம், கோயில் போன்றவை குடியிருப்புகள் அமைகின்ற முக்கிய தலங் களாகும். இருப்பினும், ஒரே மாதிரியான தலத்தில் அமைந் துள்ள எல்லாக் குடியிருப்புகளும் ஒரே அளவில் வளர்ச்சியைப் பெறுவதில்லை. தலம் எத்தகைய சிறப்புடையதாக இருப்பினும் குடியிருப்பின் வளர்ச்சிக்கு, அதன் சூழமைவு முக்கியமானதாகும். சூழமைவு என்பது குடியிருப்பைச் சுற்றியுள்ள நிலத்தின் அமைப்பு அல்லது சூழ்நிலையைக் குறிக்கும். உதாரணமாக, பெரிய ஆற்றுப் பள்ளத்தாக்கு ஒன்றில் அமைந்திருக்கும் சிறு குன்றின்மீது குடி யிருப்பு ஒன்று இருப்பதாக வைத்துக் கொண்டால், குன்று அதன் தலமாகும்; ஆற்றுப்பள்ளத்தாக்கு அதன் சூழமைவாகும்.

தலம்:

குடியிருப்புகளின் தலத்தைப் பெரிய அளவை நிலபடங்களி லிருந்து (large scale maps) எளிதில் அறிந்து கொள்ளாலாம். ஆனால், அவைகளின் சூழமைவை சிறிய அளவை மேப்புகளிலி ருந்துதான் (Small Scale maps) அறியமுடியும். பெரிய அளவை நிலபடங்களில் குடியிருப்பின் வடிவம் (Pattern) தெருக்கள், சாலை கள், கட்டடப் பரப்பு (Built-up area) ஆகியவற்றைத் தெளி வாகக் காணமுடிகிறது. ஆனால் சிறிய அளவை நிலபடங்களில் குடியிருப்பின் இருப்பிடத்தை (Location) மட்டுமே அறிய முடியும் சாலைகள், தெருக்கள், கட்டட அமைப்பு, பூங்கா, கோயில் போன்றவற்றைக் காணமுடியாது. ஏனெனில் சிறிய அளவை நிலபடங்களில் புவியின் பெரிய பரப்பு, சிறிய இடத்தில் குறிக்கப்

பட்டிருக்கும். உதாரணமாக நிலபடத்தில் ஒரு அங்குல தூரம், உண்மையான நிலப்பரப்பில் பல இலட்ச அங்குலங்களைக் குறிக்கிறது. எனவே, இதில் சிறிய விபரங்களைக் காணமுடிவதில்லை. ஆனால் குடியிருப்பைச் சுற்றியுள்ள இடத்தின் அமைப்பு அருகிலுள்ள ஆறு, கிராமம், நகரம், சாலைகள் கூடுமிடம் போன்ற சுற்றுப்புறச் சூழமைவை அறிவதற்கும் இவை பெரிதும் உதவுகின்றன.

குடியிருப்புகள் வளர்ச்சிபெற்ற தலத்தின் சிறப்பையும் பொருத்தத்தையும், வசதியையும் அறிந்து கொண்டால், அவை அங்குத் தோன்றியதற்கான காரணம் புரிந்துவிடும். அக்காரணங்கள் குடியிருப்புகள் தோன்றுவதற்கு மட்டுமே உதவியாக இருக்கின்றன. வளர்ச்சியடைந்த பின்பு அவை முக்கியத்துவத்தை இழந்துவிடுகின்றன. உதாரணமாக நீர் கிடைப்பதால் ஒரு குடியிருப்பு ஒரு குளத்தைச் சுற்றி அமைந்ததென்றால், ஆரம்பத்தில் அது பொருத்தமான இடமாக உள்ளது. ஆனால், மக்கட்தொகை பெருகிய பின்னர், அக்குளத்தின் நீர் போதுமானதாக இல்லாததால் அது முக்கியத்துவத்தை இழந்துவிடுகிறது. பற்றாக்குறை ஏற்பட்டபோது வேறுவழிகளில் நீரைக் கொண்டு வர முயற்சிகள் நடைபெறுகிறதே தவிர, அக்குடியிருப்பு இடம் பெயர்வதில்லை.

மனிதன் முதன்முதலில் தன் குடியிருப்பை அமைத்துக் கொள்ளச் சிறந்த தலத்தைத் தேர்ந்தெடுக்கிறான். அத்தலம் அவனுடைய அப்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அவனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் பாதுகாப்பைத் தரத்தக்கதாயும், நிரந்தர நில அமைப்புக் கொண்டதாயும் இருக்கவேண்டும். மேலும், பருவகாலத் தொல்லைகளும், மழைக் காலத்தில் வெள்ளமும் ஏற்படாத வகையில் அமைந்திருக்கவேண்டும்.

வாணிகத் தலம் :-

தன்னிறைவுக்காக (Self sufficiency) மட்டுமே வேளாண்மையை மேற்கொண்டகாலத்தில் பண்ணைக் குடியிருப்பைச் சுற்றிலும், தானியக்கிடங்குகளும், உரக்குழிகளும் இருந்தன. ஆனால், வேளாண்மையில் கையாளப்பட்ட புதிய முறைகளும், புதிய கருவிகளும் தானிய உற்பத்தியை அதிகரிக்கச் செய்தன. இதன் விளைவாகத் தேவைக்கு அதிகமான (Surplus) தானியத்தை விற்கவேண்டியது வந்தது. தானிய மூட்டைகள் பண்ணையிலிருந்து வேறு இடங்களுக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்டன.

தானியவிற்பனை இரண்டு வழிகளில் நடைபெற்றன. ஒன்று, பண்ணையிலேயே தானியங்களை விற்பது; மற்றொன்று கிராமங்களுக்குக் கொண்டுசென்று விற்பது. முதன் முறையில் வியாபாரிகளே பண்ணைகளுக்கு நேரில் சென்று, தானியங்களை வாங்கிக் கொள்வார்கள். இரண்டாவது முறையில் விவசாயிகள் பண்ணையிலிருந்து தானிய மூட்டைகளைக் கிராமங்களுக்கு எடுத்துச் சென்று விற்பார்கள். இவ்வாறு சுற்றியுள்ள பல பண்ணைகளிலிருந்து தானியங்கள் கிராமத்தில் சேர்க்கப்பட்டு முறையான வாணிகம் நடைபெறும்போது அந்தக் கிராமம் ஒரு வாணிகத்தலமாக மாறிவிடுகிறது. மேற்கண்ட இரண்டு முறைகளிலும் தானியங்களைப் பண்ணையிலிருந்து கிராமத்திற்கோ, சந்தைக்கோ, தேவையுள்ள இடங்களுக்கோ எடுத்து செல்வதற்குச் சீரான போக்குவரத்துச் சாலைகள் தேவைப்பட்டன. எனவே உபரி உற்பத்தியுள்ள பகுதிகளில் வாணிகத்தைப் பணியாகக் (Function) கொண்ட குடியிருப்புகள் பல தோன்றலாயின. இவை பெரும்பாலும் போக்குவரத்து வசதிகள் கொண்ட ஆற்றங்கரை ஓரங்களிலும் (River side) பெரிய சாலையோரங் (Road Side) களிலும், முக்கிய சாலைகள் கூடுமிடத்திலும் (Nodal) ரெயில்பாதை இணையுமிடத்திலும் தோன்றின. இக் குடியிருப்புகளுக்குப் போக்குவரத்து வசதிகளே சூழமைவாக உள்ளன. இதேபோல் வெவ்வேறு பணிகளைக் கொண்டுள்ள குடியிருப்புகள் அப்பணிகளை செவ்வனே நிறைவேற்றும் வகையில் உள்ள சூழமைப்புகளிலேயே தோன்றுகின்றன.

குடியிருப்பின் வடிவம் என்பது கட்டடங்கள் அமைகின்ற விதத்தைக் குறிப்பதாகும். பொதுவாகத் தலத்தின் (Site) அமைப்பு எவ்வாறு உள்ளதோ, அவ்வாறு குடியிருப்பின் வடிவமும் அமையும். ஆனால், சில சமயங்களில் தலத்திற்கும் வடிவத்திற்கும் தொடர்பே இல்லாமல் இருக்கும். உதாரணமாக மலைச் சரிவைத் தலமாகக் கொண்ட குடியிருப்புகள் சில பரவலாகவும் (Dispersed) சில மூலக்கருக் கொண்டு குழுமியதாகவும் (Nucleated) காணப்படுகின்றன. சில சமயங்களில் குடியிருப்பை ஏற்படுத்துவதற்காகத் தலங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. உதாரணமாக நெல்விளைகின்ற ஆசியநாடுகளில் (Asian Countries) மக்கட் தொகைப் பெருக்கத்தினால், எல்லா தலங்களிலும் குடியிருப்புகள் தோன்றிவிடுகின்றன. மேலும் இப்பகுதிகளில் குறுகிய பரப்பில் வீடுகள் நெருக்கமாகக் காணப்படுவதால், குடியிருப்பும் நெருக்கமான வடிவத்தை (Compact form) வெளிப்படுத்துகிறது. தற்காப்பிற்கு அவசியமான பகுதிகளில் இந்த

நெருக்கமான வடிவம் குன்றுகளில்தான் காணப்படுகிறது: ஆனால், குன்றுகள் இல்லாத பகுதிகளில் மக்கள் கிராமங்களி லேயே நெருக்கமாக வசிக்கிறார்கள். (படம் : 14)



படம் 14

பீகாரிலுள்ள சந்தைக்கிராமங்கள். இச்சந்தைகள் சுழற்சி முறையில்வாரம் இரண்டு முறை கூடுகின்றன.

சூழமைவு:

சூழமைவு என்பது குடியிருப்பைச் சுற்றியுள்ள நிலத்தின் அமைப்பு அல்லது சூழ்நிலையைக் குறிக்கும் என்பதை ஏற்கனவே கண்டோம். அது நிலத்தோற்றத்தை மட்டுமன்றி, சூரிய ஒளி, நீர், நிலத்தில் ஏற்படும் தொல்லைகள், சமூகநிலை போன்றவற்றையும் குறிக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களுக்குச் சூரியஒளி மிகவும் தேவைப்படுகிறது. எனவே, அவர்கள் தங்களுடைய வீடுகளை கிழக்கு நேர்க்கிக் கட்டிக் கொள்ளுகிறார்கள். ஸ்விட்சர்லாந்து போன்ற பகுதிகளில் வீடுகள் பரவலாக உள்ள இடங்களில் அவை சூரிய ஒளிக்காகக் கிழக்கு நோக்கியே கட்டப்படுகின்றன. ஆனால், வீடுகள் தொகுதியாக உள்ள இடங்களில் அவை சாலைகளை நோக்கியே கட்டப்படுகின்றன. சூரிய ஒளி, தெருக்களின் அமைப்பு ஆகியவை எவ்வாறு வீடுகளின்திசையை மாற்றி அமைக்கிறதோ அதேபோன்று மதத்தின் அடிப்படையிலும் வீடுகளின் திசையும் மாறுகின்றன. உதாரணமாக, திம்பக்டு (Timbuktu) நகரில் வீடுகள் கிழக்கையோ, மேற்கையோ அல்லது காற்றின் திசையையோ நோக்கி அமைந்திருக்கவில்லை. அத்திசையின் வழியாக தீய சக்திகள் தங்களுக்குள் புகுந்துவிடும் என்ற அச்சத்தினால் அந்நகரமக்கள், தெருக்களையும் வீடுகளையும் வடக்கு—தெற்குத் திசைகளிலேயே அமைக்கின்றனர். தனித்த வீடுகள் சூரியனது திசையை நோக்கி அமைவதுபோல் ஆல்ப்ஸ் (Alps) மலைச்சரிவிலுள்ள கிராமங்கள் பல சூரிய ஒளிபடும் சரிவுகளிளேயே காணப்படுகின்றன. சூரிய ஒளிப்படும் சரிவில் சுமார் 34000 பேர்களுக்கு மேல் வாழும்போது மற்றையச் சரிவுகளில் சுமார் 20000 பேர்களே வாழ்கிறார்கள். அதேபோல் கோன்செஸ் (Conches) மாவட்டத்திலும் ஒளிபடும் சரிவில் மக்கட் தொகை அதிகமாக காணப்படுகிறது. பொதுவாக இந்த வேறுபாட்டிற்குச்சரிவின் தன்மைகாரணமாக இருந்தபோதிலும், ஒரே சரிவுத்தன்மை உள்ள பகுதிகளில் இந்த மக்கட்தொகை வேறுபாட்டிற்குச் சூரிய ஒளிகாரணமாகிறது.

சூரிய ஒளி எவ்வாறு வீடுகளின் அமைவிற்குக் காரணமாக இருந்ததோ அதேபோன்று நீர்நிலைகளும் காரணமாக உள்ளது. குடியிருப்பின் பரவலும் நீர் நிலைகளின் பரவலும் நேர்விகிதத்தில் அமைந்திருக்கின்றன. சாதாரணமாக நீர் கிடைக்கும் இடங்களில்தான் குடியிருப்பு ஏற்படுகிறது. நீர் நிலைகள் குறைவாக உள்ள பகுதிகளில் குடியிருப்புகளின் எண்ணிக்கையும் குறைந்தே காணப்படுகிறது. உதாரணமாக, நீர் வசதி குறைந்த ஜெனிவா

வின் உள்பகுதியில் ஒரு சதுரமைலுக்கு 240 மகசுள் மட்டுமே வசிக்கின்றனர். ஆனல் அதேசமயத்தில் ஏரிகளுக்கு அருகில் ஒரு சதுரமைலுக்கு 1480 மக்கள் வசிக்கின்றனர். அதாவது உள்நாட்டு மக்கட்தொகைச் செறிவைவிட நீர் நிலைக்கு அருகில் ஏறக்குறைய ஆறு மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது.

ஏரிகளைப்போன்று ஆறுகளும், கடலும் குடியிருப்புகளுக்கு ஊக்கம் தருகின்றன. ஆற்று வண்டல் மண் வேளாண்மைக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. ஆற்றுவழிப் போக்கு வரத்தும் சிக்கனமாக உள்ளது. அதேபோல் சீனவில் யாங்சிகியாங் (Yangtze-kiang) நதியும் ஹான் (Han) நதியும் சேருமிடத்தில் தோன்றியுள்ள ஹாங்கௌ (Hankow), வூசாங் (Wuchang) ஹான்யங் (Hanyang) நகரங்கள் நதிகளின் சூழமைவினல் ஏற்பட்டவையாகும். இதேபோல் கடற்கரையில் அமைந்த ஓங்கல் பகுதியில் (Cilff) குடியிருப்புகள் நெருக்கமாகக் காணப்படுகின்றன. மீன்பிடித்தல், முத்துக் குளித்தல், உப்பு எடுத்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டவர்கள் கடலுக்கு அருகிலேயே வசிக்கின்றனர். பழங்காலத்தில் சில இடங்களில் கடல் அலைகளால் கரைகளில் அடித்துவிடப்பட்ட தாவரம், நண்டு, மீன், போன்ற உணவே கடற்கரையோரங்களில் குடியிருப்புகள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. மேலும் போக்கு வரத்துக்கும் வாணிபத்திற்கும் கடல் மிகவும் ஏற்றதாக இருந்தது. மத்தியதரைக்கடலைச் சுற்றி வளர்ச்சிபெற்றுள்ள குடியிருப்புகள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. இதேபோன்று நார்வேயின் வடக்குக் கடலோரப்பகுதியில் குடியிருப்புகள் நெருக்கமாக அமைந்துள்ளன.

இக்காலத்தில் வளர்ச்சி பெற்றுள்ள பல பெரிய நகரங்களில் நீர் நிலைகளுக்கு அருகேதாம் முதன்முதலில் தோன்றியுள்ளன. காலப்போக்கில் மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக இந் நகரங்களுக்குக் குழாய்களின் மூலம் குடிநீர் தருவிக் கப்படுகிறது. உதாரணமாக பர்மிங்ஹாம் (Birmingham) நகருக்கு மத்திய வேல்ஸ் (Centralwales) மாநிலத்திலிருந்தும், லாஸ் ஏஞ்சல்ஸ் (Los Angels) நகருக்கு சீரா நெவிடா (Sierra Nevada) பகுதியிலிருந்தும் சுமார் 320 கிலோ மீட்டர் நீளமுள்ள குழாய்களின்மூலம் நீர் கொண்டு வரப்படுகிறது. குழாய்களைப்போல் கால் வாய்களின் (Canals) மூலமாகவும் தூரத்து நகரங்களுக்கு நீர் வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

நீரின் தன்மையும்சில சமயங்களில் குடியிருப்பு அமைவதற்குக் காரணமாக இருக்கிறது, கானடாவிற்குத் தென்பகுதியில் இருக்கும்சிவப்பு நதிப் பள்ளத்தாக்கில் (Red River Basin) கிடைக்கும் உப்பு நீர் மருத்துவத்திற்குப் பயன்படுவதால் அதன் அருகில் குடியிருப்புகள் தோன்றியுள்ளன, ஸ்பா (Spa) நகரம் இதற்கு உதாரணமாக விளங்குகிறது. கடின நீரில் கால்சியம், மக்னீசியம், பைகார்பனேட்டு போன்ற தாது உப்புக்கள் நிறைந்து இருப்பதால் பல இரசாயனத் தொழிற் சாலைகள் கடின நீர் நிலைகளுக்கு அருகிலேயே ஏற்படுகின்றன. அத்தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களும் தங்கள் குடியிருப்பை அதன்னருகிலேயே அமைத்துக் கொள்ளுகின்றனர். அதேபோல் நெசவுத் தொழிலுக்கு மென்னீர் இன்றியமையாததால், லங்காஷயர் (Lanca shire) யார்க்ஷயர் (York shire) போன்ற மாநிலங்களில் நெசவாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வண்ணம் ஆறு, ஏரி, ஓடை ஆகியவை குடிமக்களுக்குப் பயன்பட்டுக் குடியிருப்புகளை ஏற்படுத்துவதோடு அல்லாமல் குடியிருப்புகளின் வடிவத்தையும் மாற்றி அமைக்கின்றன. நீர் நிலை களின் வடிவத்திற்கு ஏற்ப அதன் அருகில்அமைந்த குடியிருப்பும் தன் வடிவத்தைப் பெறுகின்றது.

குடியிருப்புகள் அமைவதற்குச் சில சமயங்களில் ஒழுங்கற்ற கரடு முரடான இடங்கள் (Rugged lands) ஏற்றதாக இருக்கின்றன. ஆற்று வெள்ளச் சமவெளிகளிலும் (Flood plains) வண்டல் விசிறிகளிலும் (Alluvial fans), அடிக்கடி வெள்ளம் வருகின்ற. தாழ் மட்டங்களை (Low lelvel) விட்டுவிலகியே அமைகின்றன. ஆகவே, ரோன்நதிப்பள்ளத்தாக்கில் (Rhone valley) வண்டல் விசிறிகளுக்குச் சற்று உயரத்திலுள்ள கரடுமுரடான பாறைகளில் குடியிருப்புகள் அமைந்திருக்கின்றன. இதேபோல் பீஹாரில் யமுனை, சம்பல் நதி வெள்ளச் சமவெளியில் வண்டல் அரிப்பினால் (Gully Erosion) நிலம் கரடு முரடாக உள்ளது. நிலம் வளமுள்ளதாக இருந்தாலும், வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதால் குடியிருப்புகள் இவ்விரண்டு பள்ளத்தாக்குகளுக்கு இடையே உள்ள மேட்டு நிலத்தில் மட்டுமே அமைந்துள்ளன. போக்குவரத்துப் பாதைகளும் பள்ளத்தாக்கைவிட்டு விலகி அமைந்துள்ளன. இவையனைத்தும் வெள்ளத்தடுப்பு முறைகள் (Flood control) கையாளப் படாத, 18ம் நூற்றுண்டில் ஏற்பட்டவையாகும். அணைகளின் மூலம் ஆற்றின் மட்டத்தையும் வேகத்தையும் கட்டுப்படுத்த முடிவதால், தாற்காலத்தில் ஆற்றங்கரைகளில் குடியிருப்புகள் தாழ்ந்த பகுதிகளில்கூடக் காணப்படுகின்றன.



படம் 15

பீஹாரில் யமுனை, சம்பல் நதி வெள்ளச்சமவெளியில் அமைந்த குடியிருப்புகள்.

வெள்ள அபாயத்தினல் மட்டுமன்றி தற்காப்பின்(defence) அடிப் படையிலும் பழங்காலத்தில் கிராமங்களும் நகரங்களும் மேட்டுப் பகுதியிலும். குன்றுகளிலும் காணப்பட்டன.

மக்கள் விரும்பி குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் முக்கிய தலங்களில் ஆற்றுத்திடலும் (River terrace) ஒன்ருகும். பனியாற்றின் அரிப்பினலும் (Glaeial erosion) ஆற்றின் புத்துயிர்பினலும் (rejuvenation) தோற்றுவிக்கப்பட்ட திடல்கள் சமதளமாக இருப்பதால் (level place) வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளன. ஆல்ப்ஸ் (Alps)பள்ளத்தாக்கிலுள்ள திடல்களில் இத்

தகைய குடியிருப்புகள் காணப்படுகின்றன. சமதளமுள்ள நிலங்கள் கிடைக்காவிட்டால் இந்தக் குடியிருப்புகள் மேய்ச்சல் நிலங்களைத்தேடிச் சுமார் 4000 அடி உயரம்வரை செல்கின்றன.

பொதுவாக உயர்ந்த மலைகளிலும், கரடுமுரடான இடங்களிலும், போக்குவரத்து வசதியற்ற இடங்களிலும் குடியிருப்புகள் குறைந்த அளவில் காணப்படுகின்றன. ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆகியவற்றின் அயன மண்டலங்களில் (Tropics) தாழ்ந்த நிலங்களைவிட மேட்டு நிலங்களிலேயே மக்கள்தொகை அதிகமாகக் காணப்படுகிறது. ஏனெனில், அங்குவெப்பம் குறைவாக இருக்கிறது. அதேபோல் கரடுமுரடான மலைகளைவிட உயர்ந்த பீடபூமிகளே குடியிருப்புகளை அமைப்பதற்கு ஏற்றதாக உள்ளன. காரகாஸ் (Caracas) பொகாடா (Bogota), கியுடோ (Quito), லாபாஸ் (Lapaz) போன்ற பெரிய நகரங்கள் எல்லாம் கடல்மட்டத்திலிருந்து சுமார் 6000 அடிக்கும் உயரமுள்ள இடங்களிலேயே அமைந்திருக்கின்றன.

தலம், சூழமைவு ஆகியவற்றின் தனித்தன்மையினால் கிராமங்களுக்குச் சிறப்புத்தோற்றம் கிடைக்கிறது. மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறு போன்ற இயற்கை அமைப்புகளைப்போல், மனிதனால் உருவாக்கப்பட்ட கிராமங்கள், வயல்கள், சாலைகள் ஆகியவையும் நிலத்தோற்றத்தின் பகுதியாக விளங்குகின்றன. புவியில் எல்லா பகுதிகளிலும், இவை ஒரேமாதிரியாக இல்லை. எனவே, இவற்றின்அமைப்பைப் பொருத்து ஒரு பிரதேசம் (region) தனித்தன்மையைப் பெறுகிறது. உதாரணமாக விவசாயப் பகுதிகளில் மனிதன் நீண்டகாலமாக வசித்துவருவதால் அவனுடைய தொழிலுக்கு ஏற்ப, அந்தப் பகுதிகளில் குறிப்பிட்ட வயல் அமைப்பும், கிராம அமைப்பும் தோன்றுகிறது. மற்றப் பகுதியிலுள்ள வயல், கிராம அமைப்பினின்று இது வேறுபட்டிருக்கிறது. தனித்த இத்தன்மையினால் பிரதேச அடிப்படையில் (regional basis) உலகிலுள்ள கிராமங்களை வகைப்படுத்தலாம். இவ்வாறு வகைப்படுத்திய கிராமங்களை அப்பகுதியின் பெயராலேயே அழைக்கிறோம். உதாரணமாக இந்தியாவிலுள்ள கிராமம் இந்திய-கிராமம், (Indian village) என்றும், சீனாவிலுள்ள கிராமம் சீன-கிராமம் (Chinese village) என்றும், பாரசீகத்திலுள்ள கிராமம் பாரசீக-கிராமம் (Persian village) என்றும் அழைக்கப்படுகிறது,

சீன-கிராமம்:

சீனாவில் யாங்சே டெல்டாவை (yangtze delta) எடுத்துக் கொள்ளும்பொழுது, அதில் எண்ணற்ற கிளை யாறுகள் பாய்ந்து

வெள்ளம் நிறைந்த சமவெளியாகக் காணப்படுகிறது. இவ் வண்டல் நிலத்தில், நிலங்கள் துண்டு துண்டாகவும் சிதறியும் காணப்படும். நெல் விளைச்சலை முக்கியத் தொழிலாகக் கொண் டுள்ள இப்பகுதியில் வயல்களின் வழியே நீர்ப்பாசனக் கால்வாய் கள் வெட்டப்பட்டுள்ளன. இதைத் தவிர முசுக்கட்டை மரங்கள் (mulberry) அதிகமாகக் காணப்படுவதால் இங்கு பட்டுத் தொழிலும் பெருகியுள்ளது. மக்கட்தொகைச் செறிவு நிறைந்து காணப்படும் இப்பகுதியில் கிராமங்கள் சீராகப் பரவிக் காணப்படுகின்றன. படகு போக்குவரத்து எளி தானதாகவும், முக்கியமானதாகவும் உள்ளதால் ஆறுகள் கூடு மிடங்களில் கிராமங்களும், ஆற்றை நோக்கியே வீடுகளும் அமைந்திருக்கின்றன. சாதாரணமாக, கோரைகளும், பாய் களுமே (wattle and rushes) வீடுகட்டும் பொருள்களாகப் பயன் படுகின்றன. ஆனால், யாங்சே (yangtse) பள்ளத்தாக்கின் நெடுகி லும் மூங்கில் மட்டுமே வீடுகட்டப்பயன்படுகிறது.

வடசீனாவில் ஹீவாங்-ஹோ (Hwang-Ho) நதிப் பள்ளத்தாக் கில் காற்றடி வண்டல் படிவுப் (Loess) பகுதிகளில் கிராமங்கள் தோன்றியுள்ளன. இங்கிருக்கும் கிராமங்களுக்கும், யாங்சே (yangtse) டெல்டாவிலிருக்கும் கிராமங்களுக்கும் இடையே அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஹீவாங்-ஹோ நதி வட மேற்குப் பகுதியில் காற்றடி வண்டலை அரித்துக்கொண்டு அதனூடாகச் செல்லுகிறது. காற்றடி வண்டல் வளமானது என்றாலும், மண் அரிப்பு (Soil erosion) இல்லாத பகுதிகளில் மட்டுந்தான் விவசாயம் செய்ய முடிகிறது. அத்தகைய பகுதி களில் மிகப் பெரியதாக வளர்ச்சிபெற்ற கிராமங்கள் நீண்ட குன்றுகளால் பிரிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று கான்சு (Kansu) மாநிலத்தில் காற்றடி வண்டலில் அமைந்த ஓங்கல்களில் (cliff) காணப்படும் வீடுகளின் சுவர்கள் உலர்ந்த மண்ணினால் (Sunbaked) கட்டப்பட்டுள்ளன. இங்குச் சில கிராமங்கள் சந்தை நகரத்தைச் சுற்றிலும் அமைந்துள்ளன. மழைக்காலத்தில் வெள் ளத்திலிருந்தும், கொள்ளைக்காரர்களிடமிருந்தும் தங்களைக் காத் துக் கொள்ளும் பொருட்டு, இங்குள்ள கிராமங்கள் அனைத்திற் கும் பாதுகாப்புச்சுவர்கள் (fortification) கட்டப்பட்டன.

மேற்கண்ட இரு பகுதிகளிலும், காலநிலை, நிலஅமைப்பு, விவசாயம், தொழில் போன்றவற்றில் வேறுபாடுகள் காணப் படினும், சீனாவுக்கே உரிய பண்பாடுகளும், பழக்க வழக்கங்களும், மாறாமல் காணப்படுகின்றன. அதாவது மரபு வழிவந்த கட்டட அமைப்பு. அலங்கரிக்கப்பட்ட கூரை, நகரத்தைச் சுற்றி அமைந்

துள்ள பாதுகாப்புச்சுவர் போன்றவை சீனர்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும்-வண்ணம் சீன-கிராமங்கள் அனைத்திலும் வேறு பாடின்றி காணப்படுகிறது.

ஸ்விட்சர்லாந்தின் கிராமம் :

ஸ்விட்ஸர்லாந்தில் ரோன் நதிக்கரையில் (Rhone valley) அமைந்த கிராமங்களின் தோற்றம், பணி ஆகியவை அவற்றைச் சுற்றியுள்ள நிலத்தின் சூழ்நிலையையே வெளிப்படுத்துகின்றன. பொதுவாக, வண்டல் சமவெளிகள் (alluvial plain) செழிப்பாக உள்ளதால் அங்குக் குடியிருப்புகள் தோன்றுவதுண்டு. ஆனால் ரோன் நதியின் வண்டல் சமவெளியில் அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தின் காரணமாகக் குடியிருப்புகள் காணப்படுவதில்லை. வெள்ளத்தைக்கட்டுப்படுத்த அணைகள் கட்டப்பட்டிருப்பினும் இங்குத் தோன்றும் பனியிலிருந்தும், வீசும் குளிர்காற்றிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு குடியிருப்புகள் பள்ளத்தாக்கின் மையத்தை விட்டு விலகி அதன் சரிவுகளில் சற்று உயரமான பகுதிகளிலேயே அமைகின்றன. இங்கு ரோன்நதி மார்டினிக்குத் (Martigny) தெற்கே வடமேற்கு திசையில் பாய்கிறது. இந்தப் பள்ளத்தாக்கின் வழியே வடமேற்கு காற்று வீசுவதால், இங்குள்ள கிராமங்களைச் சுற்றிலும் மரங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன, ஆனால், மார்டினிக்கு வடகிழக்கில் இதே ரோன் நதி தென்மேற்கு வடகிழக்கு திசைகளில் அமைந்திருக்கிறது. இதன் தென்சரிவில் மட்டுமே சூரிய ஒளி அதிகமாகப் படுவதாலும் பயிர்களுக்குச் சூரிய ஒளி தேவைப்படுவதாலும், இங்குக் குடியிருப்புகள் அனைத்தும் தென்சரிவிலேயே அமைந்திருக்கின்றன. ஸ்விட்ஸர்லாந்தில் கட்டடங்களுக்குக் கற்களையே (Stone) பயன்படுத்துகின்றனர். மார்டினிக்குத் தென்பகுதியில் அமைந்த ரோன் நதிப்பள்ளத்தாக்கில் உள்ள மக்கள் பயிர்த் தொழிலையும், கோடைகாலத்தில் சுற்றுலா விருந்தினர்களை (Tourists) உபசரிப்பதையும் தங்கள் முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர். அதே சமயத்தில் அதன் வடகிழக்கிலுள்ள ரோன் நதிப் பள்ளத்தாக்கில் மக்கள் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர்.

ஆப்பிரிக்க-கிராமம் :

மேற்கு ஆப்பிரிக்காவின் காம்பியா நதிப் (Gambia) பள்ளத்தாக்கிலும் கிராமங்கள் வெள்ளச் சமவெளியை விட்டு விலகியே அமைந்திருக்கின்றன. பெரும்பாலும் இங்கு மண்ணின் தரமே குடியிருப்புகளின் பரவலுக்கும் காரணமாக உள்ளது. காம்பியாவின் இரு புறத்திலும் நீண்டு அமைந்திருக்கும் குடியிருப்புகளை, நதியைவிட்டு விலகியிருக்கும் கிராமங்கள் எனவும், நதியின் ஓரத்

தில் அமைந்திருக்கும் வாணிபக் குடியிருப்பு எனவும், இரு வகைக ளாகப் பிரிக்கலாம். நதியைவிட்டு விலகி அமைந்திருக்கும் கிரா மங்களில் குடிசைகள் நெருக்கமாகவும், வட்ட வடிவிலும் அமைந் திருக்கின்றன. மரத்துண்டுகளால் (Saplings) கட்டப்பட்ட இக் குடிசைகளுக்கு நடுவில் சிறு தோட்டம் காணப்படுகிறது. அதே சமயத்தில் வாணிபக் குடியிருப்புகள் ஆற்றின் அருகிலுள்ள நீண்ட குன்றுகளின்மீது அமைந்துள்ளதால் இவை ஐரோப்பியக் குடியிருப்புகளைப்போன்று பரவலாகவே காணப்படுகின்றன.

நைஜீரிய பீடபூமியிலுள்ள (Nigerian Plateau) பேகன் (Pagan) என்ற பழங்குடிகளின் குடியிருப்புகள் அனைத்தும் தற் காப்பின் பொருட்டு மலைகளின் கரடு முரடான (rugged) பகுதி களிலும், மலை உச்சிகளிலும் குத்துச்சரிவுகளிலும் (Scarp faces), குன்றுகளிலும் அமைகின்றன. இங்குள்ள மண் குடிசைகள் சரிவு மிகுந்த கூரையுடனும், வட்ட வடிவிலும் காணப்படுகின்றன. வீடுகளும், தானியக் களஞ்சியங்களும், பாதுகாப்பின் பொருட்டு நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி இவற் றைச் சுற்றிலும் முட்செடிகளும் காணப்படுகின்றன. இங்கு ஒவ்வொரு கிராமத்திற்கு இடையேயும் பொது இடம் ஒன்று உள்ளது. எனவே, ஒரேகண்டத்திலிருக்கும், காம்பியா நதிப் பள்ளத்தாக்கு, நைஜீரிய பீடபூமி ஆகிய இரண்டிலும் தலத்தின் அடிப்படையில் முறையே பரவலாகவும், நெருக்கமாகவும் குடி யிருப்புகள் காணப்படுகின்றன.

பாரசீக-கிராமம் :

இங்கு நீரும் மண்வளமும்தான் குடியிருப்பின் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளன. வளமான மண்ணுள்ள பகுதிகளில், நீர் கிடைக்காவிடினும் எந்த வழியிலாவது நீர்ப்பாசன வசதி செய்யப் பட்டு விவசாயம் நடைபெறுகிறது. எனவே, இங்குக் கிராமங்கள் வளர்ச்சி பெறுகின்றன. வரண்ட பகுதிகளில் நீர் கிடைக்கும் பகுதிகளில் மட்டுமே கிராமங்கள் தோன்றுகின்றன. பள்ளத் தாக்குகளில் நில நீர் (ground water) மேல் மட்டத்திலேயே கிடைப்பதாலும், அதன் சரிவுகளில் குளிர்காற்று தடுக்கப்படுவ தாலும், பெரிய கிராமங்கள் இங்கு வளர்ச்சியடைகின்றன. சரிவுகளில் வாழும் மக்கள் மேய்ச்சல் தொழிலையே முக்கியமாகக் கொண்டிருக்கிறார்கள். கற்களால் கட்டப்பட்டுள்ள இங்குள்ள வீடுகள் செவ்வக வடிவில் (Rectangle) அமைந்துள்ளன. சூரிய வெப்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள வீட்டின் மேல் புறத் ல் மண்ணாலான குவிந்த விதானம் (dome) காணப்படுகிறது.

8. குடியிருப்பின் வடிவங்கள்

(Settlement Patterns)

வீடுகளையும், கட்டடங்களையும், சாலைகளையும் தன்னுடைய அங்கங்களாகக் கொண்டிருக்கும் குடியிருப்பு பல்வேறு வடிவங்களில் காட்சியளிக்கிறது. இவ்வடிவங்கள் பொதுவாக நிலத்தின் இயற்கை அமைப்பைப் பொருத்தே அமைகின்றன. உதாரணமாக, நீண்டகுன்று, ஆறு, ஊற்றுப்போன்ற இயற்கை அமைப்புகளின் அருகிலும் சுற்றிலும் தோன்றும் குடியிருப்புகள் வளர்ச்சி பெறும்போது, அவைகளின் வடிவத்தையே பெறுகின்றன. ஆனால், இருபதாம் நூற்றாண்டில் குடியிருப்புகள் திட்டமிட்டு அமைக்கப்படுவதால் அவைகள் சில குறிப்பிட்ட வடிவங்களைப் பெற்றுள்ளன.

குடியிருப்புகள் பொதுவாகக் கீழ்க்கண்ட அடிப்படை வடிவங்களில் காணப்படுகின்றன.

1. வட்ட வடிவம் (Round Pattern)
2. குழுமிய வடிவம் (Clustered Pattern)
3. நீள் வடிவம் (Linear Pattern)
4. சதுர செவ்வக வடிவம் (Grid Pattern)

வட்ட வடிவம் (Round Pattern)

குன்று, நீர் ஊற்று, குளம் போன்றவற்றை மூலக்கருவாகக் கொண்டுள்ள குடியிருப்புகள் வளர்ச்சி பெறும்போது அவை வட்டவடிவத்தைப் பெறுகின்றன. உதாரணமாக, கேரளத்தில் கள்ளிக்கோட்டைப் பகுதியில் செம்பூராங்கல், (laterite soil) குன்றுகளைச் சுற்றிலும் அமைந்துள்ள சிறு நிலங்களில் விவசாயம் நடைபெறுவதால் விவசாயிகளின் வீடுகளும் இச்செந்தூர மணற் குன்றுகளைச் சுற்றி வட்டமாகக் காணப்படுகின்றன.

படம் 16

கேரளத்திலுள்ள கள்ளிக்கோட்டைப்பகுதி. இங்குச் செம்பூராங்குற் குன்றுகளைச் சுற்றிக்குடியிருப்புகள் வட்டமாக அமைந்துள்ளன. வெள்ள அபாயத்திலிருந்து தப்பிக்க இவை ஆறுகளைவிட்டு விலகியே அமைந்துள்ளன. வயல்கள் மிகவும் குறைவாக இருப்பதாலும் கரடுமுரடான நில அமைப்பினாலும் இங்குக் கிராமங்கள் காணப்படவில்லை. சாலைகள் கூடும் இடங்களில் மட்டும் குழுமிய குடியிருப்புத் தோன்றியுள்ளது. உதாரணம் படத்திலுள்ள ராமநாட்டுக்காரா குடியிருப்பு.

சில சமயங்களில் தற்காப்பிற்காகவும் குடியிருப்புகளை வட்டவடிவத்தில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அமைத்துக் கொள்வதுண்டு. அரேபியாவில் வசிக்கும் பட்வின் (Badawin) என்ற இனத்தவர்கள் பொதுவாகத் தங்கள் முகாம்களை (Camps) ஒரு கிணற்றைச்சுற்றி வட்ட வடிவில் அமைத்துக்கொள்கின்றனர். இவர்களின் கூடாரங்கள் (Tents) உள்வட்டம் வெளிவட்டம் என இரண்டு வட்டங்களாக அமைக்கப்படுகிறன. இவ்விரண்டு வட்டங்களின் இடைப்பட்ட பகுதியில் கால்நடைகள் பாதுகாக்கப்படுன்றன. இக்கூடாரங்களுக்கு இடையே முட்களைப் பரப்புவதன் மூலம் இவர்கள் தங்களுக்கும், தங்கள் கால்நடைகளுக்கும் பாதுகாப்பைத் தேடிக் கொள்கின்றனர். (படம் 17) இதேபோல் கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கிரால் (Kraal) கிராமும் வட்டவடிவிலேயே அமைந்துள்ளன. இதில் இரண்டு வட்ட வடிவ வேலிகள் உள்ளன. உள்ளிருக்கும் வேலி கால்நடைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அதனைச் சுற்றி வட்டவடிவக் குடிசைகள் உள்ளன. பிறகு, குடிசைகளைச்சுற்றி வெளிப்புறமாக மற்றொரு வேலி காணப்படுகிறது,



(படம் 17)

(அ) படவின் (Badawin) குடியிருப்பு
(ஆ) கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கிரால் (Kraal) கிராமம்.

இந்தக்கிராமத்தின் அமைப்பிலிருந்து இதன் அடிப்படை நோக்கம் கால்நடைகளைப் பாதுகாப்பதுதான் என்பதும், மேய்ச்சல் தொழில்தான் அவர்களின் முக்கிய தொழில் என்பதும் புலனுகிறது. வடக்கு ரொடீசியாவில் (Rhodesia) காணப்படும் கிரால் (Kraal) குடியிருப்புகள் மிகப் பெரியவையாகும். இங்குச் சிறு கிரால்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரியவட்டமாக அமைகின்றன. சில சமயங்களில் இதில் சுமார் ஆயிரம் குடிசைகளுக்குமேல் காணப்படுவதுண்டு. இதன் மையப் பகுதியில் தலைவன், அவனுடைய குடும்பத்தினரின் குடிசைகள் வட்டமாக அமைந்து, அவற்றைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான கால்நடைப் பட்டிகள் அமைந்துள்ளன.

குழுமிய வடிவம் (Clustered Pattern);

மூலக்கரு குடியிருப்புத் தொகுப்பு அல்லது கொத்தாக அமைந்த குடியிருப்பு ஆகியவை குழுமிய வடிவத்தில் காணப்படுகிறது. ஊற்று, குளம், பூங்கா, சந்தை (Market), கோயில் போன்றவைகளை மையமாகக் கொண்ட கிராமங்களில் குடியிருப்புகள் அம் மூலக்கருவின் அமைப்பையே பெறுகின்றன. சில சமயங்களில் நில அமைப்பின் வேறுபாட்டால் இந்த வடிவங்கள் பாதிக்கப்படுகின்றன. மேற்கூறிய மூலக்கரு இல்லாவிடினும் குழுமிய குடியிருப்புகள் தோன்றுவதுண்டு. ஜெர்மனியிலுள்ள ஸ்லாவ் (Slav) இனத்தவர் மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டிருந்ததால் தங்கள் கால்நடைகளைப் பராமரிக்கும் பொருட்டு, திறந்தவெளி ஒன்றைச் சுற்றித் தங்கள் வீடுகளை குழுமிய வடிவில் அமைத்துக் கொண்டனர். திறந்த வெளியின் அமைப்பு வட்ட வடிவமாக இருந்ததால், இக்கிராமமும் வட்டமாக உள்ளது. படம்-(18அ) பிற்காலத்தில் ஜெர்மனியர்கள் குடியேறியபோது பழைய வட்ட வடிவத்தை (Roundling) மாற்றுமல், தங்களுடைய நீண்ட வயல்தொகுப்பு முறையையும் (Strip system) சேர்த்துக் கொண்டனர் (படம் 18 ஆ) விவசாயத்தையே நம்பி வாழும் இந்தியா, சீனு, போன்ற பருவக்காற்று நாடுகளில் வடிவற்ற குடியிருப்புகளையே காண்கிறோம். இதேபோன்று ஆற்றுவண்டல் சமவெளிகளில், குழுமிய குடியிருப்புகள் சீரற்ற வடிவத்தில் காணப்படுகின்றன. இந்தக் கிராமங்களில் பொதுவாக மையப் பகுதியில்சந்தை (Market) காணப்படுகிறது. இவை அருகிலுள்ள கிராமம் அல்லது நரகங்களுடன் வண்டிப்பாதை அல்லது சாலைகளினுல் இணைக்கப் படுவதால் இங்குப் பல சாலைகள் ஒன்றுக் கூடுவதைக் காணமுடிகிறது. வாணிகம் வளர்ச்சி பெற்ற சில சாலைகள் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன; பல்வேறு திசை



படம் 18

ஜெர்மனியில் எல்ப் (Elbe) நதிக்குக் கிழக்கில் வசிக்கும் ஸ்லாவ் (Slav) இனத்தவரின் குடியிருப்பு.

களிலிருந்து வருகின்ற இந்தச் சாலைகள் கூடுகின்ற இடங்கள் (nopdal point) வாணிகத்திற்கு மிகவும் ஏற்றதாக உள்ளன. ஆகையால் இந்த இடங்களில் குடியிருப்புகள் குழுமி அமைகின்றன. இக் குடியிருப்புகளின் வடிவம் சாலைகள் கூடும் கோணத்திற்கு (angle) ஏற்ப அமைந்திருக்கிறது. இதேபோல் வெவ்வேறு வகை



படம் 19

சன்டுர் (**Sandur**): சாலைகள் கூடுகின்ற இடத்தில் சன்டூர் குடியிருப்பு வளர்ச்சி-பெற்றுள்ளது. இதன் நான்கு புறமும் உள்ள கணவாய் வழியே செல்லும் சாலைகள் இங்குதான் கூடுகின்றன.

யான போக்குவரத்துப் பாதைகள் கூடுகின்ற இடங்களிலும் குழுமிய குடியிருப்பு வளர்ச்சி பெறுகிறது. ஆறு கால்வாய் அல்லது சாலைகள் கூடுமிடம், ரெயில்பாதையும் சாலையும் கூடுமிடம், மீட்டர் கேஜ் (Meter gauge) பிராட் கேஜ் (Broad gauge)

இணைகின்ற ரெயில்நிலையம் ஆகியவை இதற்கு உதாரணமாகத் திகழ்கிறது. இதேபோன்று பாலம், படகுத்துறை, கணவாய் ஆகியவற்றின் இருபுறங்களிலும் குழுமிய குடியிருப்புகள் காணப் படுகின்றன, (படம் 44)

குடியிருப்பின் ஆரம்பகாலத்தில் இருந்த வடிவத்தின் மாற்றமும் விரிவும் அதன் வரலாற்றைத் தெளிவுப்படுத்துகின்றன. தெற்கு ஜெர்மனியில் காற்றடி வண்டல் (loess) நிலங்களில் முதன்முதலில் தோன்றிய குடியிருப்புகளின் வடிவமே தற்காலத் திலும் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. ஒழுங்கற்று குழுமிய இந்தக் கிராமங்கள், அளந்து பிரிக்கப்பட்ட விளை நிலம், மேய்ச்சல் நிலம் தோட்டம் ஆகியவற்றை ஒட்டினாற்போல் காணப்படுகின்றன. இவ்வாறு அமைந்த குடியிருப்புகளுக்கு ஜெர்மனியில் ஹாபென்டார்ப் (Haufendorf) அல்லது கேவன் டார்ப் (Gewanndorf) என்பது பெயர் (படம் 20).

ஆற்றங்கரை, ஆற்றுத்திடல், கால்வாய், ரெயில்பாதை, சாலை ஆகியவற்றின் அருகில்தோன்றும் குடியிருப்புகள் நீள் வடிவம் அல்லது நூலிழை வடிவத்தில் வளர்ச்சி பெறுகின்றன. ஆற்றங் கரை, ஆற்றுத்திடல் ஆகியவைகளின் அருகில் குடியிருப்புகள் நீளவாக்கில் (linear) வளர்ச்சி பெறுவதற்கு நான்கு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவதாக, ஆற்றங்கரைகளில் அமைந்த வண்டல் மண் (alluvial soil) விவசாயத்திற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. எனவே இவற்றின் ஓரங்களில் மட்டுமே குடியிருப்புகள் வளர்ச்சி பெறுகின்றன. இரண்டா வதாக, பாசனத்திற்கும் (irrigaton) குடிப்பதற்கும் (drinking) நீர் அருகில் கிடைக்கிறது. மூன்றாவதாக ஆறுகள் போக்கு வரத்துக்குப் பயன்படுகின்றன. எனவே, வெளிப்பகுதியோடு தொடர்பு கொள்ள குடியிருப்புகள் அந்த நீர்வழியின் ஓரங்களில் அமைந்திருக்கின்றன. நான்காவதாக, ஆறுகள் பள்ளத்தாக்கு களில் பாய்ந்து செல்வதால், அவற்றின் கரைகளில் அமைந்த குடியிருப்புகள் அகலவாக்கில் (breath wise) வளர்ச்சி பெறு வதற்குச்சில, அமைப்பு, தடையாக இருக்கிறது. அதாவது, ஆற் றுப் பள்ளத்தாக்கின் அகலவாக்கில் சரிவு அதிகரித்துக் கொண்டே போவதால், குடியிருப்புகள் இதன் நீளவாக்கிலேயே வளர்ச்சி யடைகின்றன. கேரளத்தில் கடற்கரை ஓரங்களிலும், உப்பங் கழிகளின் (back waters) இரு புறத்திலும் குடியிருப்புகள் வரிசை யாக நூலிழைபோல் (String) காணப்படுகின்றன. இங்கு உப் பங்கழியே முக்கிய போக்குவரத்து வழியாக இருப்பதால்தான்



(படம் 20)

(அ) லாகென் (Laagen) ஆற்றங்கரையில் நீண்டவடிவில் அமைந்த உள் நாட்டுக் குறிப்பு

(ஆ) பியர்டு (Fiord) கடற்கரையில் ஓதமுகத்தில் (estuary) அமைந்த குடியிருப்பு

படத்தில் புள்ளிகள் வீடுகளைக் குறிக்கிறன.

குடியிருப்புகள் நீர் வடிவில் காணப்படுகின்றன. இங்குள்ள குடியிருப்புகள் யாவும் பரவலாகவே காணப்படுகின்றன. (படம் 21)



படம் 21

கேரளத்திவிலுள்ள பரவிய நீண்ட கடற்கரைக் குடியிருப்புகள். உப்பங் கழிகளின் இருபுறத்திலும் வீடுகள் வரிசையாக நூலிழைபோல் (String) அமைந்துள்ளன. இங்கு நெருக்கமான கிராமமென்று சொல்லக்கூடிய அமைப்பு எதுவும் இல்லை. எல்லா இடங்களிலும் வீடுகள் பரவலாகவே உள்ளன. படத்தில் புள்ளிகள் வீடுகளைக்குறிக்கின்றன..

ஆற்றுக்குடியிருப்பைப்போல் சாலை ஓரங்களிலும் குடியிருப்புகள் நீள வடிவில் அமைகின்றன. தானியங்களைஎளிதில் பிற இடங்களுக்கு ஏற்றி அனுப்புவதற்கும், மற்றத் தேவைகளைப் பெறுவதற்கும்தான் சாலை ஓரங்களில் குடியிருப்புகள் நீளவாக்கில் அமைந்திருக்கின்றன. சில பகுதிகளில் ஒரே ஒரு தெருவைக்

கொண்ட கிராமம் காணப்படும். இங்கு வீடுகள் அனைத்தும் தெருவின் இரு புறத்திலும் அத்தெருவைநோக்கியே கட்டப் பட்டிருக்கும். ஜெர்மனியில் இத்தகைய கிராமம் தெருகிராமம் (Strassendorf-Street Village) என்று அழைக்கப்படுகிறது. போக்குவரத்தை முக்கிய பணியாகக் கொண்ட குடியிருப்புகள் நீள் வடிவத்திலேயே காணப் படுகின்றன. தெரு, சாலை, அல்லது ஆறு ஆகியவற்றின் ஓரங்களில் அமையும் குடியிருப்புகள் அதே வடிவத்தில் வளைந்தோ அல்லது நீண்டோ காணப்படுகின்றன.

சதுர வடிவம் (grid pattern) :

நியு இங்கிலாந்தில் (New England) காலனி குடியேற்றம் ஏற் பட்ட சமயத்தில் மத்திய அட்லாண்டிக் கடற்கரை மற்றும் தெற்குப் பகுதிகளில் நிலங்களைப் பிரித்துப் பங்கீடு செய்வதற்குப் பழமையான முறையே கையாளப்பட்டு வந்தது. நிலங்களின் எல்லைகளை மரம், கல், பாறை ஆற்றங்கரை போன்றவற்றை அடையாளமாக வைத்துக் குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது. நில எல்லையின் திசை, தூரம் ஆகியவற்றை மேற்கூறிய இயற்கை அமைப்புகளை வைத்தே அறிந்தனர். குடியிருப்புகள் வளர வளர நில எல்லைகள் உள்நாட்டை நோக்கிப் பரவ ஆரம்பித்ததன் காரணமாக எல்லைத் தகராறுகள் தோன்றலாயின. சுதந்திரத் திற்குப் பின்பு அப்பலேச்சியன் மலைகளுக்கு (Appalachian) மேற்கே ஓஹியோலின் (Ohio) வடக்கிலும், மிசிசிப்பியின் (Missis-sippi) கிழக்கிலும் உள்ள நிலங்கள் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்டது. நிலங்களைச் சீராகப் பங்கீடு செய்வதற்கு தாமஸ் ஜெபர்சனின் (Thomas Jefferson) தலைமையில் குழு ஒன்று நிய மிக்கப்பட்டது. இக்குழுவின் ஆலோசனைப்படி வடமேற்குப் பகுதியிலுள்ள நிலங்கள் பத்து மைல் நீளமுள்ள பெரிய சதுரங்க ளாகப் பிரிக்கப்பட்டன. இச்சதுரங்கள் மேலும் ஒரு மைல் நீள முள்ள நூறு சிறிய சதுரங்களாகப் பிரிக்கப்பட்டன (படம் 22)

1785ம் ஆண்டின் நில உரிமைச் சட்டத்தின்படி நிலங்கள் சதுரமாகப் பிரிக்கப்பட்டன. இச் சட்டத்தின்படி பத்துமைல் நீளமுள்ள சதுரங்களுக்குப் பதிலாக நிலங்கள் ஆறுமைல் நீள முள்ள சதுரங்களாகப் பிரிக்கப்பட்டன. இவை, மேலும் ஒரு மைல் நீளமுள்ள சிறு சதுரங்களாகப் பகுக்கப்பட்டன. மேற் கூறிய 6 மைல் நீளமுள்ள ஒவ்வொரு சதுரமும் ஒரு நகரமைப் பாகிறது (Town ship) இம் முறையில் ஒரு ஆதாரக்கோடும் (Base-



படம் 22

அமெரிக்காவில் சதுரவடிவக் குடியிருப்பை அமைத்தல்

line) ஒரு அடிப்படை தீர்க்க ரேகையும் (Meridian) சர்வே செய்யப்படவேண்டும். இவ்விரண்டும் சேரும் புள்ளியிலிருந்துதான் நிலங்கள் பிரிக்கப்படுகின்றன; இவ்வாறு பிரிக்கப்பட்டபின் ஒவ்வொரு சதுரத்திற்கும் (நகரமைப்பிற்கும்) வரிசையாக எண்கள் குறிக்கப்படுகின்றன. காலப் போக்கில் புதிய ஆதாரக் கோடுகளும், அடிப்படை தீர்க்க ரேகைகளும் சர்வே செய்யப்பட்டு பசிபிக் கடற்கரை வரையுள்ள பகுதிகள் பிரிக்கப்பட்டன.

இங்கிலாந்தில் பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தோன்றிய புதிய குடியிருப்புகளில் சீரான வடிவம் காணப்படுகிறது. ஸ்காட்லாந்திலும், அயர்லாந்திலும் தோன்றிய தோட்டக் கிராமங்கள் இத்தகைய வடிவத்தில் காணப்படுகின்றன. 1945ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின்பு ஸ்காட்லாந்தில் ஏறக்

குறைய 150 திட்டமிட்ட கிராமங்கள் தோன்றின. இவற்றில் தோட்டக் கிராமங்களும் (Estate village) கடற்கரைக் கிராமங்களும் உள்ளன. அயர்லாந்தில் ஆங்கிலேயர் வசிக்கும் வடபகுதியில் தோன்றியுள்ள திட்டமிட்ட கிராமங்கள், நகரங்களைப் போன்று காட்சியளிக்கின்றன. வியாபார நகரங்கள் இல்லாத பகுதிகளில் இவை காணப்படுவதால் சிறிய நகரங்களின் பண்பையே பெற்றிருக்கின்றன. இந்த நகரங்களின் மையப் பகுதியில் சந்தைகள் (market) அல்லது பெரிய தெருக்கள் காணப்படும். சில சமயங்களில் ஒரே நகரத்தில் இரண்டிற்கும் மேற்பட்ட வடிவம் காணப்படுகிறது. உதாரணமாக, வடக்கு அயர்லாந்திலுள்ள கேசில் வெல்லான் (Castle wellan) என்ற நகரத்தில் அறுகோண வடிவப் பகுதியும், வட்ட வடிவப் பகுதியும் காணப்படுகிறன. அகன்றசாலை ஒன்று இவ்விரு பகுதியையும் இணைக்கிறது.

இந்தியாவில் பாண்டிச்சேரி நகரம் ஒரு திட்டமிட்ட சதுர வடிவக் குடியிருப்பாகும். பிரெஞ்சு முறைப்படி அமைக்கப்பட்ட இந்நகரத்தில் சாலைகளும் தெருக்களும் செங்கோணத்தில் சந்திக்கின்றன. கிழக்கு மேற்காக அமைந்துள்ள எல்லாச் சாலைகளும் கடலை அடைகின்றன. நகரைச் சுற்றி நீள் வட்ட வடிவில் ஒரு சாலை அமைந்துள்ளது. (படம் : 23) புதுக்கோட்டை நகரமும் இவ்வாறே சதுர செவ்வக வடிவில் திட்டமிட்டு அமைக்கப் பட்டிருக்கிறது. (படம் : 24)

பழைய குடியிருப்புகளின் வடிவத்திற்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இஸ்ரேலில் (Israel) யூதர்களின் (Jews) குடியிருப்புகள் தற்காப்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையாகும். எனவே, இக்குடியிருப்புகளைச் சுற்றிச் சுவர்கள் அரண்களைப் போல் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மையப்பகுதியில் காவற் கோபுரம் (Watch Tower) காணப்படுகிறது. பாலைவனத்தில் கோட்டைகள்போல் அமைந்திருக்கும் இந்த அரண்களில்தான் யூதர்கள் ஒன்றாக வசித்து வந்தனர். இக்குடியிருப்புகள், கூட்டுறவு அமைப்பு (cooperative village) சேர்க்கை அமைப்பு (collective village) என இரு வகையாகக் காணப்படுகிறது. கூட்டுறவு கிராமத்தில் தோன்றிய புதிய வீடுகள் மையத்தை விட்டு விலகி அமைந்துள்ளதால், இவை வட்ட வடிவில் காணப்படுகின்றன. இவ்வமைப்பில் உள் வட்டத்தில் பொதுக் கட்டடங்களும், மைய வட்டத்தில் வீடுகளும், அதை அடுத்த வட்டத்தில் விளை நிலங்களும் காணப்படுகின்றன.



படம்: 23

பாண்டிச்சேரி நகரம்

விளைநிலங்கள் அனைத்தும் மையப் பகுதியிலிருந்து கதிர்களைப் போல் எல்லாத் திசைகளிலும் பரவிக் காணப்படுகின்றன. வீட்டின் பின்புற மதிற்சுவர்கள் இணைத்துக் கட்டப்பட்டுள்ளதால் அரணைப்போல் காட்சியளிக்கிறது. வீடுகளின் மையத்தில் கோயில், சமுதாயக்கூடம், பள்ளிக்கூடம் போன்றவை அமைந்திருக்கின்றன. (படம் : 25) இஸ்ரேலில் உள்ள சேர்க்கை கிராமம் கிப்பஸ் (Kibbuz) என்று அழைக்கப்படுகிறது. தற்காப்புக்காக இது அமையாவிடினும் பழைய கோட்டைக் குடியிருப்புகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இதன் வடிவம் மக்களின் சமூகப் பழக்கங்களையே பிரதிபலிக்கிறது. இவ்வகை அமைப்பில் ஒவ்வொரு பணிக்கும் (function) ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இடைக்காலத்தில் ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள் போன்றவர்கள், ஐரோப்பா, அமெரிக்கா,



படம்: 24

புதுக்கோட்டை நகரம்

ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய பகுதிகளில் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தினர். அவ்வாறு அமைத்த இடங்களில் குடியிருப்புகளைத் தாய்நாட்டு அமைப்பின் படியே ஏற்படுத்திக் கொண்டனர். இந்தப் புதிய முறை புகுத்தப்படினும் சில பகுதிகள் தம் பழைய தன்மையை இழக்காது இருக்கின்றன. இக்குடியேற்றங்களில் உள்ள குடியிருப்புகள் யாவும் மக்களின் பண்பாட்டுடனும், நில அமைப்புடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

உதாரணமாக, வடமேற்கு ஜெர்மனிக்கும், கிழக்கு நெதர்லாந்துக்கும் இடையிலுள்ள கீழ்சாக்ஸன் (Lower Saxon) பகுதியில் விவசாய நிலங்களும் மேய்ச்சல் நிலங்களும் காணப்படுகின்றன. இங்கு விளைநிலங்கள் வரிசையாகப் பிரிக்கப்பட்டு ஆங்காங்கே சிதறியுள்ளன. இம்முறைக்கு எஸ்ச் (Esch) என்று பெயர். பொதுவாக, குடியாினவர்கள் பூங்காவைச் சுற்றித்தங்கள் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். மற்றப் பிரிவினர் இங்குள்ள காடுகளை அழித்துவிட்டுத் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளும்போது அவை ஒழுங்கற்று இங்குமங்குமாகப் பரவிக் காணப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கை பொதுவாகப்பன்னிரண்டுக்குமேல் இருப்பதில்லை. இக்குடியிருப்பு



படம் 25

இஸ்ரேலிலுள்ள கூட்டுறவு கிராமம். ஜெர்மனியிலுள்ள வட்ட வடிவக் குடியிருப்புகளைப் போல் இதுவும் திட்டமிட்டு அமைக்கப் பட்டுள்ளது.

கள், நாளடைவில் சுற்றியுள்ள கிராமங்களில் பரவி விடுகின்றன. இதேபோன்று சில இடங்களில் பண்ணைக் குடியிருப்புகள் குளம், திருச்சபை, பூங்கா, ஆகியவை அடங்கிய, பாதாம் கொட்டை வடிவில் உள்ள ஒரு பொது இடத்தைச் சுற்றிக் காணப்படுவதால் இக்குடியிருப்புகள் அவ்வடிவத்தையே பெறுகின்றன. (படம் 27அ)

கி.பி. 1200 முதல் கடலோரப் பகுதிகளிலும், ஆற்றங்கரை களிலும் சதுப்பு நிலங்கள் பண்படுத்தப்பட்டபோது சிதறலாகப் பிரிக்கப்பட்ட எஸ்ச் (Esch) முறைக்கு மாறாக, பள்ளத்தாக்கின் நடுகையில் பண்ணைக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. விளைநிலங்கள் ஆற்றின் இருபுறமும் நீண்டு மேட்டுப் பகுதியை நோக்கியவாறு காணப்படுகின்றன. இந்த அமைப்பு ஜெர் மனியில் வால்ட்ஹூபென்டார்ப் (wald hufendorf) என்று அழைக்கப்படுகிறது. (படம் 27 ஆ)



படம் : 26

இஸ்ரேலில் உள்ள கிப்பஸ் (Kibbuz) சேர்க்கை கிராமம்.

17ஆம் நூற்றுண்டில் பிரஞ்சு மன்னர்கள் செயின்ட் லாரன்ஸ் நதிக்கரையிலிருந்த (St. Larence) நிலங்களைத் திருச்சபைகளுக்கும் (church) தனிப்பட்ட மக்களுக்கும் வழங்கியிருந்தனர். ஆற்றை ஒட்டினாற்போல் காணப்பட்ட இந்நிலங்கள் நீண்ட செவ்வக வடிவில் ஆற்றுக்குச் செங்குத்தாகவும், ஒன்றுக்கொன்று இணையாகவும் அமைந்துள்ளன. இவ்விதத்திலும், ஆற்றின் அருகில் இணையாகச் செல்லும் சாலையினாலும், நிலங்களிலிருந்து ஆற்றை எளிதில் அடையலாம். இம்முறைப்படி காணப்படும் மான்ட்ரில் (mont-real), கியுபெக் (quebec) பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புகள் நீள் வடிவத்தில் காணப்படுகின்றன.

ஆங்கிலேயர்கள் அமெரிக்காவில் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தியபொழுது அங்குத் தங்களுடைய விவசாய முறையையே புகுத்தினர். அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் காணப்பட்ட காலநிலையும், தாவரமும் தாய்நாட்டில் உள்ளது போலவே இருந்தும், அமெரிக்காவின் விவசாயமுறை தனித்தன்மை பெற்று விளங்குகிறது. ஐரோப்பியர்கள் அமெரிக்காவில் குடியேறியதன் விளைவாக, இங்கு மூன்று விதமான குடியுருப்பு அமைப்புகள் காணப்பட்டன. அவையாவன:



படம் 27 (அ) ஆங்கெர் டார்ப் (Angerdorf) ஆங்கெர்டார்ப் என்பது பாதாங் கொட்டை வடிவில் (anger) அமைந்த குடியிருப்பாகும். இதில் பண்ணை வீடுகள் பாதாங்கொட்டை வடிவில் அமைந்திருக்கின்றன. இதன் மையத்தில் திருச்சபைக் குளமும் உள்ளது. பண்ணை வீடுகளுக்குப் பின்புறம் தோட்டமும் வயலும் உள்ளன.

(ஆ) வால்ட்ஹூபென்டார்ப் (waldhufendorf) வடிவம் மத்திய ஜெர்மனியின் பள்ளத்தாக்குகளில் இது காணப்படுகிறது. பள்ளத்தாக்கின் படுகையில் வீடுகளும், அதன் இருபுறமும் மேட்டுப் பகுதியை நோக்கிய வயல்களும் காணப்படுகின்றன.

(1) அகேடியா (Acadia) மற்றும் செயிண்ட் லாரன்ஸ் ஆற்றங்கரையிலுள்ள பிரஞ்சு குடியிருப்பு.

(2) நியு இங்கிலாந்து மற்றும் மேரிலாந்திலிருந்து (mary land) ஜார்ஜியா (Georgia) வரையிலுள்ள ஆங்கிலக் குடியிருப்புகள்.

(3) நியுயார்க்கிலிருந்து தென்கிழக்கு பென்சில்வேனியா (Pennsylvania) வரையிலுள்ள கலப்பு அமைப்பு.

நியு இங்கிலாந்தில் ஏற்பட்ட குடியிருப்புகள் தாய்நாட்டின் அமைப்பை ஒத்திருந்ததாலும், இந்தியர்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கும் பொருட்டு கட்டப்பட்டதாலும், சமுதாய சமயப் பண்பாட்டின் அடிப்படையில் எழுந்ததாலும், குழுமிய வடிவில் நெருக்கமாகக் காணப்படுகின்றன: ஆனால், புதிய இங்கிலாந்தை விட்டு விலகியிருந்த பகுதிகளில் காணப்பட்ட குடியிருப்புகள் பரவலாக இருந்தன. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், மார்மான் (mormon) என்ற சமயக்கிளைக் குழுவினர்கள் உடா (Utah), மிசௌரி (missouri) இல்லினாய்ஸ் (Illinois) போன்ற பகுதிகளில், மக்களுக்குச் சமயத்தொண்டு புரிவதற்காகவே கிராமங்களை நன்றாகத் திட்டமிட்டு அமைத்தனர். இவ்வமைப்பின் படி ஒவ்வொரு கிராமமும் நான்கு ஏக்கர் பரப்புடைய சதுரங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு சதுரத்திலும் நான்கு குடும்பத்திற்குத் தேவையான நிலமும், தோட்டமும் இருந்தன. திருச்சபைக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் தனியாக மனைகள் ஒதுக்கப்பட்டன. இக் குடியிருப்புகள் பெரும்பாலும் சதுர வடிவிலேயே காணப்பட்டன. இவ்வாறே தென்னிந்தியாவில் மன்னர்கள் ஆட்சி ஓங்கியிருந்த காலத்தில் சமயப் பரவலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்தக் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. இவ்வாறு கட்டப்பட்ட கோயில்களில் சிதம்பரமும் ஒன்று. செவ்வக வடிவத்தில் அமைந்த இக் கோயிலைச்சுற்றி, அதனை பராமரிப்பதற்காகவும், மற்றப்பணிகளுக்காகவும் அமர்த்தப்பட்ட பணியாட்கள் வசித்து வந்தார்கள்.

பிற்காலத்தில் இக்குடியிருப்பு வளர்ச்சியடைந்து செவ்வக வடிவத்திலேயே அமைந்தது. (படம் 28)



படம் : 82 சிதம்பரம்.

இது ஒரு மூலக்கரு குடியிருப்பாகும். கோயிலைச் சுற்றியுள்ள செவ்வக வடிவ மதிற்சுவற்றை ஒட்டித் தெருக்களும் வீடுகளும்செவ்வகவடிவில் வளர்ச்சி பெற்றுள்ளன.

9. குழுமிய குடியிருப்பும் பரவலான குடியிருப்பும்

(Clustered and dispersed settlements)

தற்காலக் குடியிருப்புகளின் அமைப்புகளும் வடிவங்களும் பண்டைய நாகரிகத்தை விளக்குகின்றன. குடியிருப்பின் அமைப்பையும் வகையையும் அறிவதற்கு அவை தோன்றிய சூழ்நிலைகளை அறிதல் அவசியம். ஒரு பகுதியில் குடியிருப்புகள் குழுமியே அல்லது பரவலாகவோ அமைவதற்கு இயற்கைநிலை, சமூக நிலை, விவசாயப் பொருளாதாரநிலை ஆகியவை காரணமாக இருக்கின்றன.

(1) நிலத்தின் அமைப்பு:

இயற்கைநிலை (Natural Conditions) என்பது நிலத்தின் அமைப்பு, மண்ணின் தொகுப்பமைப்பு, நீர்வளம் ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

நிலத்தின் அமைப்பு:

சமமான பகுதிகளில் குடியிருப்புகள் குழுமியே காணப்படுகின்றன. இப்பகுதிகளில் விளைநிலங்கள் தொடர்ச்சியாகவும் மொத்தமாகவும் இருப்பதால் கூட்டுறவு விவசாய முறை பின்பற்றப்படுகிறது. குளம், கிணறுவெட்டவும் பொது, கட்டடங்கள் கட்டவும் அனைவரின் உதவியும் தேவைப்படுவதால் பண்ணையில் வசிப்பதைவிட நிலங்களுக்கு அருகிலேயே கிராமத்தில் ஒன்று சேர்ந்து வசிப்பதை மக்கள் விரும்புகிறார்கள். மக்களின் தேவைகள் அனைத்தும் எளிதில் நிறைவேற்றப்படுவதால், சமவெளிகளில் இத்தகைய குழுமிய குடியிருப்புகள் (கிராமங்கள்) சிறப்பான, வளர்ச்சியைப் பெறுகின்றன.

இதற்குமாறாக மலைகளும், கரடுமுரடான நிலப்பகுதிகளும் பயிர்த்தொழிலுக்கு ஏற்றதாக இல்லாததால், பண்ணைகள் இங்கு, சிதறியே காணப்படுகின்றன. மேலும் போக்குவரத்துச் சாலைகளை அமைப்பது இங்கு கடினம். மேற்கூறிய இரு காரணங்களால் விவசாயிகள் தங்களுடைய வீடுகளைத் தங்கள் பண்ணை நிலங்களிலேயே கட்டிக் கொள்கின்றனர். இப்பண்ணை நிலங்கள் சிதறிக் காணப்படுவதால் குடியிருப்புகள் பரவலாக அமைகின்றன. இப்பகுதிகளில் இரண்டு மூன்று பண்ணைகளுக்கு இடையே ஒரு குக்கிராமம் (Hamlet) காணப்படுகிறது. பொதுவாக, ஒவ்வொரு பண்ணையும் ஒன்று அல்லது இரண்டு மைல் இடை வெளியில் அமைந்துள்ளது. சையர்ஹாபரின் (Zierhoffer) கூற்றுப்படி பரவலான குடியிருப்புக்கு ஒவ்வொரு பண்ணைக்குமிடையே 150 முதல் 200 மீட்டர் வரை இடைவெளி இருக்க வேண்டும். ஆனால், பெல்ஜியத்தின் குடியிருப்புகளை ஆராய்ந்த டெபௌவெரி (Debou verie) என்பவர் சுமார் 100 மீட்டர்கள் இடைவெளியில் அமைந்த பண்ணைகளையும் பரவலான குடியிருப்பு வகையில் சேர்த்துவிடுகிறார்.

இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்திலுள்ள காங்ராவில் (Kangra) விளைநிலங்களைச் சுற்றி மலைப்பகுதியில் பரவலான குடியிருப்பும், சமவெளியில் குழுமிய கிராமமும் காணப்படுகிறது.

மண்ணின் அமைப்பு:

புவியின் இயற்கைத் தோற்றத்தை, எந்த அளவிற்கு மனிதன் மாற்றியிருக்கிறான் என்பதை அவன் பயிர்செய்யும் வயல்களிலிருந்து நாம் தெளிவாக உணருகிறோம். காடுகளை அழித்தும், கரடுமுரடான பகுதிகளைச் சமநிலமாக்கியும் அவன் மேற்கொள்ளும் விவசாய முறையும், நிலப்பயன்பாடும் (land use) இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவுதான் மிக முக்கியமானதலால், உலகின் மக்கள் தொகையில், சுமார் முக்கால்பகுதி உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறது. எனவே, புவியின் அமைப்பு விவசாயத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

விவசாயத்தின் அடிப்படைத் தேவைகளில், காலநிலைக்கு அடுத்த இடத்தைவகிப்பது மண்ணாகும் (Soil). வளமான மண்ணில் மணல், களிமண், மக்கிய தாவரசத்து (Humus), ஆகியவை குறிப்பிட்ட விகிதத்தில் காணப்படுவதால்தான் அதில் பயிர்த்தொழில் மேற்கொள்ளப்படுகிறது. மண்ணின் தொகுப்பமைப்பு மாற்றங்

கள் விவசாயத்தைப் பெரிதும் பாதிப்பதால், விவசாயத்தின் அடிப்படையில் அமையும் குடியிருப்புகளும், கூடவே பாதிக்கப்படுகின்றன. ஏனெனில் மனிதனுக்குக் மிகநெருங்கியபுறச்சூழ்நிலை அவனுடைய நிலம்தான். மண்ணைப் பயன்படுத்தும் முறையில் புகுத்தப்பட்ட புதுமையினாலும் விவசாய முறையில் தோன்றிய முன்னேற்றத்தினாலும் குடியிருப்புகள் நன்கு வளர்ச்சி பெற்றன. இங்கிலாந்தில் 5000 ஆண்டுகளுக்கு முன்பு, தெற்கிலுள்ள மேட்டு நிலங்களில்தான் (Uplands) முதன்முதலில் விவசாயக் குடியிருப்புகள் ஏற்பட்டன. மண்ணை ஆழமாக உழுவதன் மூலம், மேல் மண் கீழ்மண்ணாகவும், கீழ்மண் மேல் மண்ணாகவும் கலப்பதால், உழுவதற்குக் கலப்பைகள் பயன்படுத்தப்பட்டது. இதன்பின்புதான் தானிய உற்பத்தி அதிகரித்தது. 5-ஆம் நூற்றாண்டில் இருப்புக் கலப்பைகள் பயன்படுத்தப்பட்டதால் விளைச்சல்தேவைக்கு அதிகமாகப் பெருகி, அதிக மக்கள் அங்குக் குடியேறி குழுமிய குடியிருப்புகளை அமைத்தனர். இதேபோல் தாழ்நிலங்களிலும் பெரிய இருப்புக் கலப்பைகள், புதிய கருவிகள், எருதுகள் ஆகியவை உழுவதற்குப் பயன்படுத்தப்பட்டதின் விளைவாக களிச் சேற்று வண்டல் (Loam) பகுதிகளிலும், களிமண் பகுதிகளிலும், முதன்முதலாகப் பயிர்த்தொழில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் விவசாயம் செய்ய இயலாத சுண்ணாம்பு நிலங்களில் (Limestone region) குடியிருப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. இடைக்காலத்தில் மேனர் (manor) பண்ணைகளில் மண்ணின் வளம் குறையாமலிருக்கப் பயிர் சுழற்சி முறை (Rotation of crops) பின்பற்றப்பட்டது.

சதுப்பு நிலங்கள் உடலுக்கு ஊறு விளைவிப்பதால் இப்பகுதியில் குடியிருப்புகள் நிலைத்து இருப்பதில்லை. உதாரணமாக, இத்தாலியிலுள்ள மின்சியோ (Mincio) அடிஜ் (Adige) ஆகியஆற்றுச் சமவெளியிலுள்ள சதுப்பு நிலங்கள் உடல்நலத்தைப் பாதிப்பதால் இங்கிருந்த குடியிருப்புகள் யாவும் சதுப்பற்ற மேட்டு நிலங்களுக்கு இடம் பெயர்ந்தனர். இதுபோல் போ (Po) ஆற்று டெல்டாப் பகுதியில் ஃபெர்ரரா (Ferrara), ரோவிகோ (Rovigo) ஆறுகளைச் சுற்றியமைந்த குடியிருப்புகளும் முதலில் மேட்டு நிலங்களில் குழுமிக் காணப்பட்டன. இப்பள்ளத்தாக்குகளில் சுவர்கள் (dike) கட்டப்பட்ட பின்பு இக்குடியிருப்புகள் யாவும் இச் சுவர்களின் மீது குழுமி அமைந்தன.

நீர் வளம்:

இயற்கை அமைப்பு, மண்ணின் அமைப்பு ஆகியவற்றைப் போன்று நீர் வளமும் குடியிருப்புகள், குழுமியோ அல்லது பரவ

லாகவோ இருப்பதற்குக் காரணமாகிறது. நீர் நிலைகளுக்கும் குடியிருப்பின் அமைப்பிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை வறண்ட பகுதிகளில் தெளிவாகக் காணலாம். நீரின் தன்மை, அளவு ஆகியவற்றைப் பொருத்துக் குடியிருப்புகள் குழுமியோ அல்லது பரவலாகவோ காணப்படுகிறன.

சுண்ணாம்பு நிலத்தில் (Limestone) நீர் உறிஞ்சப் படுவதால், வறண்ட சூழ்நிலை காணப்படுகிறது. இங்குள்ள பள்ளத்தாக்குகள் உறிஞ்சுத்துளைகள் (Sink holes) ஆகியவற்றில் மட்டுமே நீர் கிடைக்கிறது. இவ்வாறு அரிதாக நீர் கிடைக்கும் இப்பகுகளில் குழுமிய குடியிருப்புகள் தோன்றி அவை மேன்மேலும் வளர்ச்சியைப் பெற்று, பெரியதாகக் காணப்படுகின்றன. அதேசமயத்தில் படிகப்பாறைகள் (Crystalline rocks) அடிப்பகுதியில் அமைந்த நிலங்களில் நீர் உறிஞ்சப்படாமல் தேங்கியிருக்கிறது. எனவே இப்பகுதிகளில் ஆறுகளும், ஓடைகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. நீர் நிலைகள் ஆங்காங்கே காணப்படுவதால் இப்பகுதியில் வயல்களும் குடியிருப்புகளும்பரவலாகவே காணப்படுகின்றன. தற்காப்பிற்கு அபாயம் நேராதவரையில் இப்பரவலான, தன்மை நிலைத்திருக்கிறது. ஆனால், எதிரிகளினால் ஆபத்து நேரும் சமயங்களில் இவ்வாறு பரவி அமைந்த குடியிருப்புகள் ஒன்று சேர்ந்து நெருக்கமாக அமைவதால் குழுமிய குடியிருப்பு ஏற்படுகிறது. வறண்ட மத்திய தரைக்கடல் பகுதிகளில் கிரேக்கர்கள் அனைவரும் பிருலியா (Friulia), அபுலியா (Apolia) போன்ற இடங்களில் சுனையைச் சுற்றியுள்ள கிராமங்களில் குழுமி வாழ்கின்றனர். இதேபோல் இந்தியாவில் பஞ்சாபிலும், தக்காணப் பீட பூமியிலும், குடியிருப்புகள் ஏரி, கிணறு, கால்வாய் ஆகிய நீர் நிலைகளுக்கு அருகில் குழுமிக் காணப்படுகின்றன.

நீர் வளத்திற்கும், குடியிருப்புகளின் பரவிய அல்லது குழுமிய தன்மைக்கும் இடையே உள்ள தொடர்பை அடிக்கடி மழை பெய்கின்ற பகுதிகளைவிட வறண்ட பகுதிகளில் மட்டும்தான் எளிதில் நிர்ணயிக்க முடியும். உதாரணமாக, பிரான்சில் சீரான சுண்ணாம்புப் பாறை (limestone) அமைந்த காக்ஸ் (Cau) பகுதியின் மேற்கில் பரவலான குடியிருப்புகளும், கிழக்கில் குழுமிய குடியிருப்புகளும் காணப்படுகிறன. இதேபோல் ஒரே அளவு நீர் வளம் கொண்ட பகுதிகளிலும் குடியிருப்புகள் பரவலாகவும், குழுமியும் காணப்படுகிறன. மேற்கு ஐரோப்பிய பகுதிகளில் சில இதற்கு உதாரணமாகத் திகழ்கிறது.

(2) சமூக நிலை:

சமுதாயத்திற்குத் தொடக்கத்தில் இருந்த மனப்பான்மை, மரபு, தற்காப்பு நிலை ஆகியவற்றைப் பொருத்துக் குடியிருப்புகள் நெருக்கமாகவோ அல்லது பரவலாகவோ அமைகின்றன.

சமூகத்தின் மனப்பான்மை:

நிரந்தரமான தொழிலை மேற்கொண்ட சமூக அமைப்புகள் தோன்றுவதற்கு முன்பே மனிதனிடையே உறவு முறைகள் காணப்பட்டன. கூடிவாழும் மனப்பான்மை அவனுடைய உள்ளத்தில் ஊறியிருந்ததால் பல குடும்பங்களும் சேர்ந்து வாழ்கின்ற சமூகக் குடியிருப்புகள் (Communal living) அப்போதே தோன்றியிருந்தன. ஒரே பரம்பரையச்சார்ந்த குடும்பங்கள் ஒரு நீண்ட வீட்டில் (long house) கூடியே காணப்பட்டன. உணவைத் தேடுவதற்கும், உற்பத்தி செய்வதற்கும் இக்குடும்பங்கள் சேர்ந்தே உழைத்தன. எனவே, உணவிற்காகவும், தற்காப்பிற்காகவும் (defense) கூடிவாழும் மனப்பான்மை அவர்களிடையே காணப்பட்டது. இம்மனப்பான்மையினுல், பரவலாக வாழ்வதை விட நெருங்கிவாழும் முறை விரும்பப்பட்டது. இவ்வாறு பல சிறு குடும்பங்கள் ஒன்று சேர்ந்ததன் விளைவாக ஏற்பட்ட சிறு சமூகம் தான் கிராமம் தோன்றுவதற்கு அடிகோலியது. ஆனுல் விவசாயத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இந்த அமைப்பை மாற்றிவிட்டன. நிலத்திலேயோ அல்லது நிலத்திற்குஅருகிலேயோ குடியானவர்கள் தங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்ட போது நெருக்கமாக இருந்த இக்குடியிருப்புகள் பரவலாக மாறிவிட்டன.

மரபு:

சில சமயங்களில் இனத்தின் மரபுக்கு ஏற்றபடி குடியிருப்புகள் குழுமியோ அல்லது பரவலாகவோ, காணப்படுகின்றன. சில இடங்களில் தங்களைச் சுற்றியுள்ள இனத்திற்குநேர்மாருக இருக்க வேண்டும் என்பதற்காகவும் குடியிருப்புகளின் அமைப்பு மாறுபடுகிறது. மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் காணப்படும் இத்தன்மையை முதன் முதலில் கண்டறிந்தவர் அகஸ்ட் மெயிட்சன் (August Meitzen) என்பவராவார். இங்குக் காணப்படும் ஜெர்மானியர்களின் குடியிருப்பு கெல்டிக் இனத்தவரின் (celts) குடியிருப்பிலிருந்து மாறுபடுகிறது. இவ்வேறுபாடுகள் அவர்களிடையே ஆதியிலிருந்த இனமரபு வேறுபாட்டை வெளிப்படுத்துகிறது. நெருக்கமான கிராமங்களில் ஜெர்மானியர்களின்

குடியிருப்பு அமைந்த போது அதற்கு நேர்மாறாக கெல்டிக் இனத்தவரின் குடியிருப்புகள் பரவலான பண்ணைக் குடியிருப்புகளில் காணப்படுகின்றன. ஆனால், மெயிட்சனின் கூற்றை முழுவதுமாக ஒப்புக் கொள்ள முடியாது. ஏனெனில் வழிவழியாக வந்த பழக்கத்தின் காரணமாக இனத்திற்கு இனம் பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகிறது. எனவே, இன மரபைவிடப் பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் குடியிருப்புகள் நெருக்கமாகவோ அல்லது பரவலாகவோ காணப்படுகிறது.

தற்காப்பு நிலை:

எதிரிகளினால் ஆபத்து நேரும் சமயங்களில் மக்கள் ஒன்றாகக் குழுமி கிராமங்களிலேயே வாழ்ந்து வந்தனர். ஆபத்து நீங்கிய பின் அவர்கள் அக்கிராமத்தை விட்டு விலகி, தாங்கள் விரும்பிய நிலங்களில் தனித்தனியே வாழ்ந்தனர். மத்தியதரைக்கடல் பகுதிகளில் உள்ள கிராமங்கள் தற்காப்பிற்காக எதிரிகள் எளிதில் அடையாவண்ணம் செங்குத்துச் சரிவுகளில் (escarpment) அமைந்திருக்கின்றன. இதே போல் அடிக்கடி போர் ஏற்பட்ட போ (Po) ஆற்றுச்சமவெளியில் ஒக்லியோ (Oglio) அடா (Adda) நதிகளுக்கு இடையே உள்ள பகுதியில் காணப்படும் கிராமங்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் சுவர்கள் (Wall) கட்டப்பட்டுள்ளன. இக்கிராமங்களின் மையப்பகுதியில் வீடுகள் மிகவும் நெருக்கமாகக் காணப்படுகின்றன. விடல் டி லா பிளாஷின் (Vidal de la Blache) கருத்துப்படி மாறுபட்ட வாழ்க்கை முறைகளைக் கொண்ட (mode of life) வகுப்பினர் சந்திக்கும் பகுதிகளிலெல்லாம் சுவர் அமைந்த கிராமங்கள் காணப்படுகின்றன. உதாரணமாகஸ்டெப்பி (Steppe) புல்வெளி மற்ற பகுதியோடு சந்திக்கின்ற இடங்கள், சஹாரா, அரேபியா, துருக்கி ஆகியவற்றின் எல்லைப் பகுதிகளில் எல்லாம் மாறுபட்ட வாழ்க்கை முறைகள் பழக்கத்தில் உள்ளன. இவ்வாறு இரு வேறுபட்ட பண்பாட்டு முறைகள் சந்திக்கின்ற இடங்களில் சண்டை சச்சரவுகள் தோன்றுவதுஇயற்கை. எனவே, அப்பகுதிகளில் வாழும் மக்கள் தற்காப்பிற்காக ஒன்றுசேர்ந்து கிராமங்களில் வாழ்வதோடு நில்லாமல் அவற்றுக்கும் பாதுகாப்புச் சுவர்களையும் எழுப்பிக் கொள்கின்றனர். சமவெளிகளில் இவர்கள் விவசாயம் செய்த போதிலும், தங்கள் குடியிருப்புகளை பாதுகாப்பிற்காகக்குன்றின் உச்சியிலேயோ, அல்லது செங்குத்துச் சரிவுகளிலேயோ அமைத்துக் கொண்டனர். இதேபோல் ஆப்பிரிக்க காட்டுமக்களின் திடீர்தாக்குதல்களிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காக, சமவெளியில் வாழ்ந்த

ரௌசிலான் (Roussillon) மக்கள் மலைகளில் புதிய கிராமங்களை அமைத்துக்கொண்டு சேர்ந்து வாழ்ந்தனர். இவ்வாறு மலைகளில் குடியேற முடியாதவர்கள் சமவெளியிலேயே கிராமங்களில் நெருக்கமாக வாழ்ந்தனர். அக்கிராமங்களைச் சுற்றிலும் ஆழமான அகழிகளும், சுவர்களும் அமைக்கப்பட்டன. இத்தகைய தற்காப்பு முறைகள் யாவும் எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்கு மட்டுமின்றி, கொடிய வன விலங்குகளிடமிருந்தும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு ஏற்பட்டவையாகும்.

ஆனால், தற்காப்பின் அடிப்படையில் அமையும் குடியிருப்புகள் யாவும் நெருக்கமாகக் காணப்படுவது இல்லை. உதாரணமாக, ஜெர்மனியில் பாதுகாப்புத் தேவைப்படும் பகுதிகளில். அரண் (சுவர்) அமைந்த பண்ணைவீடுகள் தனித்தனியாகவே பரவிக் காணப்படுகின்றன. எனவே, நெருக்கமான குடியிருப்புகள் அனைத்தும் தற்காப்பின் அடிப்படையில் எழுந்தவை அல்ல.

(3) விவசாயப் பொருளாதாரம்:

குடியிருப்புகள் நெருக்கமாகவோ அல்லது பரவலாகவோ அமைவதற்கு விவசாயப் பொருளாதார நிலைகூட காரணமாக இருக்கிறது. மக்கள் தொகைச் செறிவைப் பொருத்தும் (density) பயன்படுத்தப்படும் விவசாயக் கருவிகளைப் (Tools) பொருத்தும் இடத்திற்கு இடம் நிலப் பயன்பாடு (landuse) வேறுபடுகிறது. ஒரு சமூகம் தன் பொருளாதார நிலைக்கு ஏற்றபடிதான் புதிய கருவிகளைப் பயன்படுத்தமுடியும். ஆகவே, பொருளாதார வேறுபாட்டால் ஒரே இடத்தில் கூட நிலத்தைப் பயன்படுத்துகிற முறையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. நிலப்பயன்பாட்டு முறைகள் குடியிருப்பின் அமைப்பைத் தீர்மானிக்கின்றன. கடந்த சில நூற்றாண்டுகளில் விவசாய முறையில் பல வித மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை எவ்வாறு குடியிருப்பின் அமைப்புக்குக் காரணமாக இருந்தது என்பதை காண்போம்,

நாடோடிகளின் விவசாயம்;

காடுகளை அழித்துப் பயிர்செய்த நிலையே (Shifting agriculture) விவசாயத்தின் தொடக்க நிலையாகும். இந்த விவசாயத்தில் சில

ஆண்டுகளுக்குப் பிறகு, மண்ணின் வளம் குறைந்தபோது வேறு இடங்களுக்குக் குடியிருப்புகள் மாற்றப்படுகின்றன. புதிய நிலங்களைத் தேடிச் செல்லும்போது பழைய குடியிருப்புகள் புறக்கணிக்கப்படுவதால், இங்குள்ள குடியிருப்புகள் அனைத்தும் தற்காலிகமானவையே. இதைத்தவிர காடுகளை அழித்துப் பயிர் செய்யும் முறையில் பெரிய நிலப்பரப்பு, தேவை படுவதால் இங்கு குடியிருப்புகள் தனித்தும், பரவலாகவும் காணப்படுகின்றன.

நிலம் மாற்றி வழங்கும்முறை:

விவசாயத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகக் குடியிருப்புகளும், விளை நிலங்களும் நிரந்தரமாக அமைக்கப்பட்டன. மக்கள் தொகை பெருகிவிட்டபின் பயிர் செய்யும் நிலங்கள் கிடைப்பது அரிதாகிவிட்டமையால் நிலத்தை வேண்டுமளவுக்குப் பயன்படுத்தும் உரிமை நாளடைவில் பறிக்கப்பட்டது. நிலங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிலங்கள் ஒதுக்கப்பட்டன. நிலத்தின் வளம் எல்லா இடத்திலும் ஓரேமாதிரியாக இல்லததால், காலந்தோறும் வெவ்வேறு குடும்பங்களுக்கு வெவ்வேறு நிலங்கள் மாற்றி வழங்கப்பட்டன. இதனால், இளையதலை முறைகளுக்குப் புதிய நிலங்கள் கிடைக்கலாயின. இந்த நிலம் மாற்றி வழங்கும் முறையினால் குடியிருப்புகள் சில இடங்களில் நெருக்கமாகவும் வேறு சில இடங்களில் பரவலாகவும் காணப்பட்டன. ஸ்வீடனிலுள்ள நிலம் மாற்றி வழங்கும் முறையில் (hamarskipt) ஒவ்வொரு நபருக்கும் சில ஆண்டுகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் வழங்கப்பட்டது. அந்தக் காலம் வரை அந்த நிலத்தைப் பயன் படுத்திவிட்டுத் திருப்பித்தந்துவிடவேண்டும். இவ்வாறு நிலத்தைத் திருப்பித்தருகின்ற நபர் தன் வீட்டையும் நிலத்திலிருந்து அகற்றிவிடவேண்டும். இவர்கள் புதிய இடங்களில் தங்களுடைய வீடுகளைக் கட்டிக் கொண்டபோது அவை பரவலாகவே இருந்தன. ஆனால், ரஷ்யாவில் இதற்கு மாறாக நிலம் மாற்றி வழங்கும் முறை தொகுத்தமைந்த குடியிருப்புகளுக்கே அடிகோலியது. இங்குச் சமூகம் தேர்ந்தெடுத்துக் கொடுத்த இடத்தில்தான் குடியானவன் தன் வீட்டைக் கட்டிக்கொள்ள வேண்டும். இதனால், குடியேற்றம் கட்டுப்படுத்தப்பட்டு கூட்டுத் தொழிலும் வளர்ந்தது. ஆகவே ரஷ்யாவில் தனித்திருந்த பண்ணை வீடுகள் சமூகக் கட்டுப் பாட்டினால் குழுமிய கிராமங்களாக மாறிவிட்டன.

நிலத்தை உடைமையாக்கிக் கொண்ட முறை;

மக்கள் தொகை மேலும் பெருகிடவே நிலத்தை உடைமையாக்கிக் கொள்ளும் நிலை உருவாகியது. அடிக்கடி நிலத்தை மாற்றிக் கொண்டிருப்பதைவிட, ஒரே நிலத்திலேயே தொடர்ந்து விவசாயம் செய்வதையே குடியானவர்கள் பெரிதும் விரும்பினர்கள். அதனால், நிலத்தை உரிமையாக்கிக் கொள்வது நடைமுறைக்கு வந்தது. உரிமையாகிக் கொண்ட நிலங்களில் குடியானவர்களின் உழைப்புக்கும், கண்காணிப்பிற்கும் தக்கவாறு விளைச்சல் கிடைத்ததால் அவர்களுக்கு நிலத்தின் மீது பற்றுதல் ஏற்பட்டது. அப்போது ஒவ்வொரு குடியானவனுக்கும் கோதுமை பார்லி போன்ற தானியங்களுக்காகத் தனித்தனியே நிலங்கள் இருந்ததால் இவை ஒரே இடத்தில் இல்லாமல் நீர்வளம், மண் வளத்திற்கு ஏற்ப சற்றுச் சிதறலாகக் காணப்பட்டன. ஆகையால் குடியானவன் தன் வீட்டை, தன் சிதறிய நிலங்களுக்கு மையத்தில் அமைத்துக்கொள்ள இயலாமல் போய்விட்டது ஏனவே, எல்லாக் குடியானவர்களின் வீடுகளும் விளை நிலங்களுக்கு அருகிலுள்ள ஒரு பொது கிராமத்தில் ஒன்றாக அமைந்தன. பொதுவாக ஒரு கிணறு அல்லது கோயிலைச் சுற்றி அமைந்த இந்தக் கிராமங்களில் வசிப்பதன் மூலம் குடியானவர்கள் உண்மையில் தங்கள் பண்ணையின் மையத்தில் வசிப்பதாகவே கருதிக்கொள்ளுகிறார்கள்.

நிலமான்ய முறை:

சில இடங்களில் பெரிய நிலச்சுவான்தார்களின் கட்டளைப் படியே குடிருப்புகள் அமைக்கப்பட்டன. அதாவது, தம் பண்ணையில் வேலை செய்யும் ஆட்களின் வீடுகள் எங்கு அமைய வேண்டும் என்பதை இவர்களே தீர்மானிப்பார்கள். ஆகையால் பண்ணைவீடுகள் நெருக்கமாகவோ அல்லது பரவலாகவோ அமைவது அவர்களுடைய விருப்பத்தைப் பொருத்திருந்தது. உதாரணமாக இத்தாலியின் தெற்குப் பகுதியில் காணப்படும் கிராமங்கள் எல்லாம் நிலக்கிழார்கள் தங்கள் பண்ணையாட்களின் குடியிருப்புகள் ஒரே இடத்தில் குழுமி இருக்கவேண்டுமென்ற விருப்பத்தினால் ஏற்பட்டவையே. ஏனென்றால், விரும்பிய நேரத்தில் அவர்களை அழைப்பது அப்போதுதான் எளிதாகும். இதேபோல் ரஷ்யாவிலும் பெரிய நிலங்களைக் கண்காணிப்பவர்கள் கிராமங்களில் தான் நேரிடையாக எல்லா ஆட்களையும் கண்காணிக்க முடிவதால் கிராமக் குடியிருப்புகளையே இவர்கள் பெரிதும் விரும்பினர். இதற்கு மாறாக பால்டிக்கடல் நாடுகளிலுள்ள (Baltic-

countries) லாட்வியா (Latvia), லிதுவேனியா (Lithuania), எஸ்தோனியா (Estonia) போன்ற பகுதிகளில் பண்ணை வீடுகள் தனித்தனியாகவும், பரவலாகவும் காணப்படுகின்றன. இங்கு பெரிய நிலங்கள் அனைத்தும் சிறுசிறு நிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. குடியானவர்கள் கிராமத்தில் வசிக்காமல் தங்கள் நிலத்திலேயே வசித்தால் விளைச்சல் பெருகும் என்று கருதியதால் இவர்கள் தங்கள் வீடுகளைப் பண்ணைகளிலேயே அமைத்துக் கொண்டனர். இதனால் குடியிருப்புப் பரவலாகக் காணப்படுகிறது.

சிறப்பு விவசாய முறை :

முன்னேறிய நாடுகளில் விவசாயத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தனாலும், புதிய உணவுப் பழக்கத்தினாலும், பழைய மூலக்கரு குடியிருப்புகள் மறைந்துவிட்டன. விவசாயக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது நிலங்களுக்கு மையத்தில் கட்டப்பட்ட தனித்த வீடுகளே சிறந்த அமைப்பாகிறது. இவ்வகைத் தனித்த பண்ணை விடுகளில் வாழும் குடியானவனால்தான், தன் நிலத்தை நன்கு கண்காணிக்கமுடிகிறது. காலையில் வயலுக்குச் சென்று மாலையில் திரும்பவும், இடையிடையில் வந்து போவதற்கும் ஏற்றவாறு பண்ணைக்குடியிருப்புகள் வயலிலேயே அமைக்கப்படுகிறன. வயலுக்குத் தேவையான இயற்கை எரு, இரசாயன உரம், போன்றவை பண்ணைக் குடியிருப்பிலிருந்துதான் எடுத்துச் செல்லப்படுகின்றன. மேலும் சேர்ந்து வாழும் கிராம வாழ்க்கையில் ஏற்படும் இடையூறுகள் எதுவும் இம்முறையில் காணப்படுவதில்லை. இத்தகைய தனித்த பண்ணைதான் உண்மையில் வலிமையான பொருளாதாரத் தொகுதியாக விளங்குகிறது. ஏனெனில் சமூகக் கட்டுப்பாடற்ற இம்முறையில் குடியானவர்கள் தங்கள் விருப்பம்போல நிலத்தைப் பயன்படுத்துவதற்கு முழு உரிமையும் கிடைக்கிறது. வயலில் உற்பத்தியாகும் எல்லா பொருள்களும் முதலில் பண்ணைக் குடியிருப்புகளுக்கு கொண்டுவரப்பட்டு, தேவைக்கு மேற்பட்ட தானியங்கள் (Surp us grains) சந்தைகளுக்கு இங்கிருந்துதான் எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே பண்ணைக் குடியிருப்புதான் முதற் சந்தையாகவும் (market) சேமித்து விநியோகம் செய்யும் முதல் மையமாகவும் விளங்குகிறது. இதனால் வாணிபத்தில் ஆர்வம் கொண்ட சில நாடுகள் நகரமக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யுமாறு தம் குடியானவர்களை ஊக்குவித்தன. இதன் அடிப்படையில்தான் கிராமத்தில் வசித்த குடியானவர்களின் சிதறிய நிலங்கள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு அதன்பின்பு தனித்தனி

பண்ணைகளாகப் பிரிக்கப்பட்டன. விவசாயப்புரட்சிக்குப் பின்பு இங்கிலாந்தில் பண்ணை நிலங்களுக்கு வேலி அமைக்கும் முறை பின்பற்றப்பட்டது. ஒவ்வொரு குடியானவனும், தன் பண்ணையில் முழு சுதந்திரத்துடன் உழைத்து உற்பத்தியைப் பெருக்கினான். இவ்விவசாயப் புரட்சியின் விளைவாகக் குழுமி இருந்த கிராமக்குடியிருப்புகள் அனைத்தும் தனித்தனி பண்ணை வீடுகளாகப் பரவி அமைந்தன. இங்கிலாந்தில் இது குடியிருப்புப் புரட்சி எனப்பட்டது. இதேபோல் தெற்கு இத்தாலி, சிசிலி (Sicily) போன்ற இடங்களில் இத்தாலிய அரசு குடியிருப்புச் சீர்திருத்தங்களைச் செய்தது. குழுமிய குடியிருப்பி லுள்ள வீட்டிற்கும் வயலுக்குமிடையே நீண்டதூரம் இருந்த தால் இதைக் குறைப்பதற்காகக் குடியிருப்புகளை வயலுக்கு அருகிலேயே ஏற்படுத்த இங்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. முதலாவதாக, தற்காப்புத் தலங்களில் அமைந்த குழுமிய குடியிருப்புகளுக்குக் கொள்ளைக்காரர்களிடமிருந்தும், திருடர்களிடமிருந்தும் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இரண்டா வதாகக் குடிநீரைக்கொண்டு செல்லும் குழாய்களும், நீர் இறைக் கும் யந்திரங்களும் கண்டு பிடிக்கப்பட்டவுடன், தூரத்து இடங் களுக்கும் நீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது. சிறு குடியிருப்பு களுக்கும் குழாய்களின் மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டது. மூன்றாவதாக டி. டி. டி. (D. D. T.) போன்ற கிருமி நாசினிகளின் கண்டு பிடிப்பால் மலேரியா போன்ற தொத்து நோய்களின் அச்சம் நீங்கியது. இதன்விளைவாக மலேரியா பரவியிருந்த பல பகுதிகளிலும் புதிய குடியிருப்புகள் தோன்றின. எனவே இத்தாலியில் குழுமிய குடியிருப்புகள் பல மேற்கூறிய வசதி களால் பரவலாக அமையத்தொடங்கின.

பரவலான குடியிருப்பினால் பல நன்மைகள் ஏற்பட்ட போதிலும், இதில் இருபெரும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. முதலாவதாக பரவலான குடியிருப்புகளுக்கு நீர், மின்சாரம், சாலை ஆகிய வசதிகளை அமைத்துத் தருவதற்குச் செலவு அதிகமா கிறது. இரண்டாவதாக, கிராம வாழ்க்கையில் சேர்ந்து வாழப் பழக்கப்பட்டவர்களுக்கு இவ்வாறு பரவலாக அமைந்த அந்தப் பண்ணைக் குடியிருப்புகளில் தனித்து வாழ்வது கடினமாக இருக்கிறது.

10. கட்டடப் பொருள்கள்

(Building materials)

மனிதன் தனக்கு நிலையான வீடு தேவை என்று உணர்ந்த உடனேயே அருகில் கிடைத்த பொருள்களைக் கொண்டு தன் வீட்டைக் கட்டிக் கொண்டான். எனவே, அருகில் கிடைத்த பொருளைக் கொண்டுதான் வீட்டின் அமைப்பும் இருந்தது. ஒரு இடத்தின் காலநிலைக்கும் மண்ணின் தன்மைக்கும் ஏற்ப மண்ணினாலோ, கல்லினாலோ அல்லது மரத்தினாலோ வீடுகள் கட்டப்படுகின்றன. பொதுவாக, பாலைவனங்களில் மண்ணும், பாறை நிறைந்த பகுதிகளில் கல்லும், அயன மண்டலங்களில் மரமும், மித வெப்ப சீதோஷ்ண மண்டலத்தில் மரமும் கல்லும் சேர்ந்து வீடுகட்டும் பொருள்களாகக் காணப்படுகின்றன.

மண் :

சூடானிலிருந்து இந்தியா வரையிலுள்ள வறண்ட பகுதிகளில் (arid regions) காடுகளே இல்லை. பூமத்தியரேகையிலிருந்து சுமார் 12° வடக்கிலிருந்து மரங்கள் தென்படுவது குறைகிறது. இங்குக் கிடைக்கும் தாவரங்களும் கட்டடத்திற்குப் பயன்படுவதில்லை. மரம் இல்லாத குறையை இங்கு களிமண் (clay) போக்கி விடுகிறது. களிமண்ணைக் கொண்டு எந்த உருவத்தை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். உறுதி தரும் பொருட்களை இத்துடன் சேர்த்து வேகவைத்தால், களிமண் மிகவும் உறுதியாகிவிடுகிறது. களிமண்ணால் செய்யப்பட்ட செங்கல் கட்டடத்திற்கு இன்றியமையாத பொருளாகிவிட்டதால், மற்றயப்பொருள்களைவிடச்செங்கல்லும் இரும்புமே கட்டட வேலைக்கு மிகுதியாகப் பயன்படுகின்றன. வீடு, தொழிற்கூடம் போன்றவற்றை நவநாகரிக முறையில் விரைவாகக் கட்டி முடிப்பதற்கு இச்செங்கற்கள் ஏற்றதாக உள்ளன. தற்காலத்தில்

மிகுந்த அளவில் பயன்படும் இடங்களில் இவை சில நூற்றாண்டு களுக்கு முன்பு உபயோகத்தில் இருக்கவில்லை. முதன் முதலில் வடமேற்கு ஆசியாவின் வறண்ட பகுதிகளில்தான் இவை பயன் படுத்தப்பட்டன. மொராக்கோ, பாரசீகம், போன்ற வறண்ட பகுதிகளில் உலர்ந்த செங்கற்களையே உபயோகித்து வந்தனர். மேற்கு ஆசியாவிலுள்ள ஈரானின் பழங்கால அரண்மனைகள் யாவும் களிமண்ணால் கட்டப்பட்டவையே. இங்கு, கட்டடங் களுக்கு மட்டுமின்றி, பாண்டங்கள் செய்யவும், மேஜைகள் செய் யவும் இக்களிமண் பயன்பட்டது. (படம் 29 அ)

மரங்கள் கிடைப்பது குறையக் குறைய வீடு கட்டுவதற்குக் களிமண்ணைப் பயன்படுத்துவது அதிகரித்துக்கொண்டே வந்தது. உதாரணமாக நைல் நதிப் பள்ளத்தாக்கில் ஷில்லுக் (Shilluk) இனத்தவரின் வட்டவடிவ குடிசையின் கூரையில் மட்டுந்தான் மரமும், இலைகளும் காணப்படுகின்றன. அதன் சுவர்கள் களி மண்ணாலேயே கட்டப்பட்டுள்ளன. டோஜோலாந்தில் (Togoland) கிராமத்தைச் சுற்றிக் கட்டப்பட்ட சுவர் (wall) கூட மண்ணால் ஆனதுதான். இதேபோல் 14° வடக்கு அட்சரேகையில் அமைந்த சூடான் (Sudan) இனத்தவரின் சிந்தர் (Zinder) கிராமங்களுக்கும் மண்சுவர்தான் அரணாகக் கட்டப்பட்டுள்ளன. இக்குடியிருப்பு களில் வீடுகள் செங்கற்களினாலும், காப்புச் சுவர்கள் மண்ணி னாலும் கட்டப்படுகின்றன. வறட்சி நிலை அதிகரிக்க அதிகரிக்க இடத்திற்கு இடம் மண்ணின் உபயோகமும் பெருகிக்கொண்டே வருகிறது. சஹாராவின் பாலைவனச் சோலைகளில் குடியிருப்பு களுக்கு முழுக்க முழுக்க மண்தான் பயன்படுகிறது. தென் மொ ராக்கோவில் (Moracco) வைக்கோல் தூளும், கூழாங்கற்களும், களிமண்ணும் கலந்து செய்யப்பட்ட டேப்பியா (Tapia) என்ற பொருளைக் கட்டடத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். வறண்டபகுதிகளில் கூரைகளுக்குப் பதிலாகத்தளங்கள் (Terrace) போடப்படுவது காலநிலையையே பிரதிபலிக்கிறது. கூரையில் லாத கட்டடங்களில், மரத்தின் உபயோகமும் குறைந்து விடுகிறது. உதாரணமாக, தென்மேற்கு அமெரிக்காவிலுள்ள பியுபிலோஸ் (Pueblos) மண் வீடுகளில் தளங்கள் போடப்பட் டுள்ளன. (படம் 29 ஆ.)

வறண்ட பகுதிகளில் காணப்படும் மற்றொரு அமைப்பு யாதெனில் பூமியைக் குடைந்து அமைக்கப்பட்ட வீடாகும். களி மண் நிலத்தில், சதுரமாக மண்ணைக் குடைந்து எடுத்தால் அது ஒரு அறையாகி, பூமிக்குள் அமைந்த வீடாகக் காட்சியளிக்கிறது.



படம் : 29

(அ) ஈரானிலுள்ள மண்வீடு

(ஆ) அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் காணப்படும் பியுபிளோஸ் (*Pueblos*) மண் வீடுகள்.

இத்தகைய வீடுகள் எகிப்து, மெசபடோமியாவின் வண்டல் நிலம், களிமண் நிறைந்த அர்மேனிவன் (Armanian) பீடபூமி, காற்றடி வண்டல் படிவுள்ள (loess) ஐரோப்பா, மத்திய ஆசியா, வடசீனு ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன; மேலும், இத்தகைய வீடுகள் ஸ்பெயினிலுள்ள கிரனடா (grenada) பகுதியில் காடிக்ஸ் (Gaudix) என்ற இடத்திலும், தென் டியுனிசியாவிலும் (Tunisia) காணப்படுகின்றன. வடசீனவில் காற்றடி வண்டலில் குடைந்தெடுக்கப்பட்ட அறைகளின் செங்குத்துச் சுவர்கள் தேன் கூட்டின் அறைகளைப்போல் காட்சியளிக்கின்றன: இவ்வகை கிராமங்களை இணைக்கும் பாதைகளும் பூமியை வெட்டியே அமைக்கப்பட்டுள்ளன. அனைத்தும் பூமிக்குள்ளேயே அமைந்திருப்பதால் கிராமம் அங்கு இருப்பதை அறிவது கடினம். இங்கு வளர்ந்திருக்கும் மரங்களின் உச்சியைக் கொண்டுதான் கிராமம் இருப்பதை உணர முடிகிறது:

பூமியைக் குடைந்து வீடுகளையும் கட்டடங்களையும் கட்டுவது மிகவும் சிரமம். குடைந்து எடுக்கப்படுகிற மண்ணை வெளியே கொண்டுவந்து கொட்டுவது மிகவும் கடினமாகும். இம்முறையில் கட்டடங்களைக் கட்டுவதற்குச் செலவும் அதிகமாகிறது: இதைத் தவிர அருகருகே புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கும் பழையவற்றைப் புதுப்பிப்பதற்கும் பூமிக்கு அடியில் இயலாது. மேலும் வயல்கள் அனைத்தும் நிரந்தரமாகப் பூமியின் மேற்பரப்பில் மட்டும் காணப்படுவதால் வயல்களை மேற்பார்வை செய்வதற்கு பூமிக்கு அடியில் வீடுகளை அமைத்துக் கொள்வது பயனுள்ளதாக இல்லை.

மண்ணும், வெயிலில் உலர்த்தப்பட்ட செங்கல்லும் மலிவானதால் எல்லா இடங்களிலும் இவை பரவலாகப் பயன்பட்டன. ஆனல் இவை நாட்பட நீடிப்பதில்லை. அரேபியாவிலும், மத்திய ஆசியாவிலும் மண்ணுல் கட்டப்பட்ட கட்டடங்கள் பாழடைந்து காணப்படுகின்றன. வறண்ட இடங்களில் இவை மணலால் மூடப்படுவதும் உண்டு. மழையின் காரணமாக மண் கட்டடங்கள் பொதுவாகச் சரிந்து சிதைந்து காணப்படுகின்றன. உதாரணமாக பாரசீகத்திலுள்ள கிராமத்தின் பாதுகாப்புச் சுவர்கள் அனைத்தும் குளிர்கால மழையில் சரிந்துவிடுகின்றன.

கல் :

பாறைகள் நிறைந்த பகுதியில் கற்களே (Stone) கட்டடங்கள் கட்டுவதற்குப்பெரும்பான்மையான அளவு பயன்படுத்தப்படு

கிறன. கற்களின் சிறப்புத் தன்மையின் காரணமாக மற்ற பொருள்களைவிட இவற்றையே மக்கள் தங்கள் கட்டடங்களை கட்டுவதற்குப்பயன்படுத்தினர். கற்கள் உறுதித் தன்மை பெற்று இருப்பதாலும், தேவையான அளவுக்கு அவற்றை வெட்டிக் கொள்ள முடிவதாலும், அழகிய சிற்பங்கள் செதுக்குவதற்கு ஏற்றதாக இருப்பதாலும், இவற்றால் கட்டப்பட்ட கட்டடங்கள் அழகிய தோற்றத்தைப் பெறுவதாலும் மக்கள் இக்கற்களையே கட்டடங்களுக்கு முக்கிய பொருளாகப் பயன்படுத்தினர்.

இழைப்பதால் பளபளப்பு ஏற்படும் கற்களைக்கட்டடத்திற்கு உபயோகிப்பதில் பழங்காலத்திலேயே மக்களுக்கு ஆர்வம் இருந்தது. கிரானைட் (granite) சிஸ்ட் (Schist) போன்ற பாறைகளை தேவைக்கு ஏற்றபடி முறையே கனசதுரங்களாகவும், நீண்ட பலகைகளாகவும் வெட்ட முடிவதால், கட்டடங்களின் பல்வேறு பாகங்களின் அளவுக்கு ஏற்ப, இவைகளைப் பெற முடிகிறது. எனவே கட்டடங்களைப் பலவித வடிவங்களில் கட்ட முடிந்தது. இதன்பயனுக கட்டடக்கலை வளர்ச்சியடைந்தது. சுண்ணும்புப் பாறையும் (Limestone) மணற்பாறையும் (Sandstone) சிற்பங்கள் செதுக்குவதற்கும் ஏற்றதாக உள்ளன. கற்கள் உறுதியாக இருப்பதால், பெரிய கட்டடங்களைக் கட்டுவதற்கு இவையே முக்கிய கட்டடப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டன. கற்களின் வகைகள் இடத்திற்கு இடம் மாறுபடுவதால் அருகில் கிடைக்கும் வகையே கட்டடத்திற்குப் பெரும்பாலும் பயன்படுகிறது. உதாரணமாக, சுண்ணும்புப் பாறைகள் அருகில் கிடைத்ததால், அமெரிக்காவில் மாயா (Maya) இனத்தவரின் கட்டடங்கள் யாவும் இவ்வகைப் பாறையினுல் கட்டப்பட்டவையே. கங்கை நதிப் பள்ளத்தாக்கில் டெல்டாவிலிருந்து காசி வரையிலுள்ள கிராமங்களில் மணற்பாறைகளே பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறே வோஸ்ஜெஸ் (vosges) பகுதியிலுள்ள மணற்பாறைகளைக் கொண்டு ரைன் (Rhine) பள்ளத்தாக்கில் கோட்டைகளும், திருச்சபைகளும், கட்டப்பட்டன. டெல்லியிலுள்ள செங்கோட்டையும், அதனருகாமையிலுள்ள செம்மணற்பாறைகளால் கட்டப்பட்டதாகும். மணற்பாறையிற் உறுதித் தன்மையினுல் இவற்றில் செதுக்கிய சிற்பங்கள் சிதையாமல் உள்ளன. இத்தகைய உறுதித் தன்மையினுல்தான் கொலராடோவிலுள்ள (Colorado), பியுப்லோ (Pueplos) கிராமங்களின் காப்புச் சுவர்கள் யாவும் மணற்பாறையினுல் கட்டப்பட்டுள்ளன. இதேபோல், கரோன் (garonne), லோயர் (Loire) ரோன் (Rhone), ரைன் (Rhine) போன்ற நதிகளுக்கு மிக

அருகில் சரளைக்கற்களும், கூழாங்கற்களும், கலந்து கட்டப்பட்ட சுவர்கள் யாவும் ஆற்று வெள்ளத்தினுல் அரிக்கப்பட்டு விடுவ தால், நாட்பட உழைக்கும், எளிதில் உடையாத மணற்பாறை களே பிற்காலத்தில் சுவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. எகிப் தில் (Egypt) நான்காம் வம்சத்தின்போது கல்லினுல் கட்டப் பட்ட பிரமிடுகள் (Pyramids) யாவும் தற்காலத்திலும் அழியா மல் காணப்படுகின்றன. உரோமானியர்களால் அமைக்கப்பட்ட கற்சாலைகள் (Stone High ways) இன்றும் அழியாமல் உள்ளன, இத்துடன் அல்லாமல் ஆங்காங்கு கண்டெடுக்கப்பட்ட கல்லினு லான நினைவுச் சின்னங்கள் பழங்கால மக்களின் நாகரிகத்தை அறிய உதவுகின்றன. மாயா, அய்மரா (Aymara) குச்சுவா (Quicha) போன்ற இனத்தவர்களால் எரிமலைப் பாறைகளி லிருந்து வெட்டியெடுத்த கற்களாற் கட்டப்பட்ட சில கட்டடங் கள்தான் இவ்வினத்தவரின் நாகரிகத்தை அறியத் துணை புரிகின்றது. இத்தகைய நினைவுச் சின்னங்களே பழங்கால மக் களின் நாகரிகத்தை இன்றும் விளக்குகின்றன. ஆகவே, நினைவுச் சின்னங்களெல்லாம் உறுதியான கற்களினுல் ஆக்கப்பட்டுள்ளன.

உலகில் மற்ற இடங்களைக் காட்டிலும், மத்தியதரைக்கடல் பகுதிகளில் தான் கற்கள் கட்டடங்களுக்கு மிகுதியாக பயன் பட்டன. எனவே, மற்றப்பகுதிகளைவிட இப்பகுதிகளில்தான் கற் கட்டடக் கலையின் சிறப்பான வளர்ச்சியைக் காண முடிகிறது. மத்தியதரைக்கடலுக்கு கிழக்கே டாரஸ் (Taurus) மலைகளும் தெற்கே பாரசீக, அரேபிய பீடபூமிகளும், லிபியா (Libya) சிரெனைகா (Cyrenaica) போன்றபீடபூமிகளும் சூழ்ந்துள்ளதால் இங்கு கற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆர்கேயன் கேடயப் பகுதியிலுள்ள (Archaean Shiel) உருமாறிய (Metamorphosed) பாறைகளெல்லாம் சலவைக்கல் படிகங்களாக இருந்தன. வெயிலில் படும்போதும், நீருடன் கலக்கும் போதும் இவை பலவித வண்ணங்களில் காட்சியளித்தன. எனவே, அழகுக் காக இவை இங்குள்ள கட்டடங்களில் மிகுதியாகப் பயன்பட்டன. மணற் பாறைகளைப் போல் லாவா டேலஸ் (dalles) போன்ற எரிமலைப் பாறைகளும் மத்தியதரைக் கடற் பகுதிகளில் காணப் பட்டன. மணற்பாறைகள் இங்கு பயன்பட்ட போதிலும், சுண்ணும்புப் பாறைகளே இப்பகுதியின் கட்டடங்களுக்கு தனித் தன்மையை, அளித்துவந்தன. மத்தியதரைக்கடல் பகுதிகளில் கற்களே அதிகம் பயன்பட்டு வந்ததற்கு மற்றொரு காரணம் இங்கு உறுதியான மரங்கள் இல்லாமையாகும். இது தவிர மக்களின் தொழில் பண்பாடு ஆகியவையும் இதற்குக்காரணமாக

இருந்தன. மேற்கூறிய காரணங்களினால் கற்களைக் கட்டடங்களுக்கு உபயோகிப்பதில் மத்தியதரைக்கடல் முதலிடம் வகிக்கிறது.

மரம் :

வட ஐரோப்பாவில் காடுகள் அடர்ந்த பகுதிகளில் மரம் கட்டடப் பொருளாகப்பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. இங்கு தாழ்ந்த அட்சங்களில் காணப்பட்ட இலையுதிர் காடுகளில் (deciduous) பல காலப்போக்கில் உயர் அட்சங்களில் காணப்படும் ஊசியிலைக் காடுகளாக (coniferous) மாறிவிட்டன. பழங்காலத்தில் காணப்பட்ட பாக்ஸ் (Box), செஸ்நட் (chestnut), வால்நட் (walnut) போன்ற மரங்களும் அதைத்தொடர்ந்து காணப்பட்ட ஒக் (oak), விவசாயக்கருவிகள், சக்கரங்கள் ஆகியவை செய்யப்படும் ஆஷ் (Ash), உறுதியான யெவ் (Yew) போன்ற மரங்கள் அனைத்தும் நாளடைவில் அழிந்துவிட்டன. இதன் பின்பு பைன் (Pine) ஸ்புருஸஸ் (Spruces) லார்ச்சஸ் (larches) போன்ற மரங்கள் பெருகலாயின. ஊசியிலைக் காட்டு மரங்களில் வெளிப்படும் பிசினி (resin) மரத்தை அழியவிடாமல் காப்பதால், நீண்டநாள் உழைக்கிறது. நகரங்களிலுள்ள கட்டடங்களுக்கு செங்கற்களும் கிரானைட் கற்களும் அதிகமாகப் பயன்பட்ட போதிலும், நீண்ட குளிர்கால பகுதிகளில் மரங்கள் வெப்பத்தைக் கடத்தாததால் கட்டடங்களுக்கு மரங்களே பயன்படுகின்றன. குறிப்பாக ரஷ்யாவில் மண்தரைக்குப் பதிலாக மரப்பலகையால் தரை அமைக்கப்படுகிறது. இதைத் தவிர சன்னல், புகைப்போக்கி, பெஞ்சு, அறைத்தடுப்பு (Screen) ஆகியவையாவும் மரத்தினாலேயே செய்யப்படுகின்றன. மரம் கட்டடங்களுக்கு மிகுதியாகப் பயன்படும் பகுதிகளில் வாழும் மக்கள் தச்சுவேலையில் (Carpentary) திறமைமிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள். உதாரணமாக முஷிக் (Muzhik) இனத்தவர்கள் அருகே கிடைக்கும் மரத்தைக் கொண்டு தங்கள்வீட்டைத் தாங்களே கட்டிக்கொள்ளும் அளவிற்குத் தச்சுத் தொழிலில் திறமை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். இத்திறமையை இவர்கள் தங்கள் முன்னோர்களிடமிருந்து வழி வழியாகப் பெற்றிருக்கின்றனர். மரங்கள் நிறைந்த பகுதிகளில் கட்டடங்களுக்குமரமே சிறந்ததாகக் கருதப்படுவதற்கு வேறு காரணங்களும் இருக்கின்றன. மரக்கழிகள் நீளமாகவும், பொருத்துவதற்கு எளிதாகவும் இருப்பதால் பெரிய கட்டட வேலைகளுக்கு ஏற்றதாக இருக்கிறது. எனவே, இவை கட்டடங்களின் அமைப்பையும் மாற்றுகின்றன. ஆப்பிரிக்காவிலிருந்து மலேசியா வரையிலுள்ள அயன மண்டலத்தில் செவ்வகவடிவ கட்டடங்களையே நாம்

பொதுவாகக் காண்கிறேம். இச்செவ்வக அமைப்பிற்குக் காரண மாக இருப்பது நீளமான மரக்கழிகளே யாகும். சீன, ஜப்பான் ஆகிய பகுதிகளில் மரக்கட்டடக்கலை மற்ற பகுதிகளைக்காட்டி லும் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருக்கிறது.

மரமும் கல்லும் :

ஐரோப்பாவிலும், மத்தியதரைக் கடற் பகுதிகளிலும் நெடு நாட்களுக்கு முன்பே கட்டடங்களுக்கு மரங்கள் பயன்பட்டு வந் தன. இப்பகுதிகளில் அப்போது கட்டடங்களைத் தாங்குவதற்காக வே மரங்கள்பயன்பட்டன. ஆனல், பிற்காலத்தில்அழகுக்காகவும், அழகுப்பொருள்கள் செய்வதற்காகவும் இவை உபயோகிக்கப் பட்டன. ஐரோப்பாவில் காணப்பட்ட இலையுதிர் காட்டுமரமான ஒக் (oak) குடிபானவர்களின் குடிசைகளில் பரவலாகப் பயன் பட்டது. இங்குக் காலநிலைக்கு ஏற்றவாறு வடக்குப் பகுதிகளில் மரங்களும், மேற்குத் தெற்குப் பகுதிகளில் கற்களும் மிகுதியாகப் பயன்பபட்டன. ஆல்ப்ஸ் (Alps) பகுதியில் தனித்தன்மையுடன் விளங்கும் வீடுகளின் அமைப்பை வேறு இடங்களில் காணமுடிவ தில்லை. சவாய் (Savoy) முதல் ஆஸ்திரியா (Austria) வரை யுள்ள பகுதிகளில் கட்டங்களின் கடகால் (basement) சிஸ்ட் (Schist) பாறைகளாலும், மேல் பகுதி மரங்களினலும் கட்டப் பட்டிருக்கின்றன. இதேபோல் மரத்தால் ஆன பலவகையான வீடுகள் பாஸ்னியா (Bosnia) செர்பியா (Serbia) போன்ற பகுதிகளிலும் காணப்படுகின்றன.

பாறைகள் நிறைந்த பகுதிகளிலுள்ளகட்டடங்களுக்கும், அவை இல்லாத பகுதிகளிலுள்ள கடடங்களுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. பாறைகளே இல்லாத ஜெர்மனியின் சம வெளிகளில் மணற் பகுதிகளையும், சதுப்புநிலங்களையும் கடப் பதற்கு மரத்திலேயே சாலைகள் அமைக்கப்பட்டன. பாறைகள் கிடைக்காததால் இங்கு செயற்கை முறையில் கற்கள் செய்யப் பட்டன. அதாவது சரளைப்பாளம் (pise) அல்லது மண்ணுடன் (earth) வைக்கோலைக் கலந்தும், மண்ணுடன் கூழாங்கற்களை (pebbles) ஒன்றுவிட்ட அடுக்குகளாக அமைந்தும், களிமணலை (loam) கடினப்பாறையின்மேல் தூவியும், காற்றடிவண்டல் (loess) படிவுடன் கம்பி வலைகளைப் பொருத்தியும் செயற்கை முறையில் கட்டடந்நிற்கான கற்கள் செய்யப்பட்டன சில பகுதி களில் சுவரைக் கட்டகளிமணலையும், சரளைக்கற்களையும் கலந்து உபயோகித்தார்கள். ஆனல் இங்கெல்லாம் கூரைகளுக்கு ஓலைகளே பயன்படுத்தப்பட்டன. கட்டடப்பொருள்களின் வேறுபாட்டினல்

கட்டடக்கலையும் இடத்திற்கு இடம்வேறுபட்டிருந்தது. களிமண்ணும், செங்கல்லும் பயன்பட்ட பகுதிகளில் கட்டடங்கள் மிகவும் பெரியதாகக் கட்டப்பட்டன. சிலவற்றில் கலையழகிற்காகவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. செங்கல்லினுல் கட்டப்பட்ட அழகான மாளிகைகள் பல ஆல்பி (Albi), டொலூஸ் (Toulouse) ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.

புறச் சூழ்நிலைக்கு ஏற்றவாறுதான் கட்டடப்பொருள்கள் காணப்படுகின்றன என்பது எல்லாகாலத்திற்கும் பொருந்துவதில்லை. உதாரணமாக ஐரோப்பாவில் சாதாரண சிறிய கட்டடங்களுக்கு மட்டுமே உள்நாட்டுப் பொருள்கள் அதிகமாகப் பயன்படுகின்றன. கலை அமைப்புக் கொண்ட பெரியகட்டடங்களுக்குத் தேவையான பொருள்கள் பெரும்பாலும் தூரத்திலிருந்துகொண்டு வரப்படுவதால், சுற்றுப்புரத்தின் பொருள்கள் இவற்றில் குறைவாகவேபயன்படுகின்றன. இதேபோல் தூரத்து இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட அழகுப் பொருள்கள் அரச மாளிகைகளிலும், திருச்சபைகளிலும் பொருத்தப்படுகின்றன. தாஜ்மஹால் கட்டுவதற்குத்தேவையான பளிங்குக்கற்கள் ஜைபல்பூருக்கு அருகிலிருந்து கொண்டுவரப்பட்டது. இத்தகைய கற்கள் ஆக்ரா, டெல்லி பகுதிகளில் எங்கும் கிடையா.

மத்தியதரைக் கடற்கரையிலிருந்து வடக்கு நோக்கிப்பரவிய ஐரோப்பிய நாகரிகத்தின் அடையாளத்தை கற்கட்டடங்களின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். கல்லையும் சிமெண்டையும் கலந்து கட்டப்பட்ட ரோமன் நகரத்துச் சாலைகள் நெடுங்காலம் நீடித்திருந்தன. கியுவெர்சி (Quercy) முதல் போய்டா (Poitou) வரையிலுள்ள பாதுகாப்புச் சுவர்கள் அமைந்த பழங்காலத்து குடியிருப்புகள் அருகே சுண்ணும்புப்பாறை கிடைப்பதை உணர்த்துகின்றன. இங்கிலாந்தின் பழங்காலத்து, அரணமைந்த செஸ்டர் நகரம் பாலத்தின் முகப்பில் (bridge head) அமைந்த ஆக்ஸ்போர்டு (Oxford) நகரம், ஆகியவை லண்டன் கொப்பரையிலுள்ள சுண்ணும்புக் குன்றுகளைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. நாளடைவில் வேறு பல இடங்களிலும் மரத்திற்குப் பதிலாகக் கற்கள் உபயோகிக்கப்பட்டன. பன்னிரண்டு, பதிமூன்ரும் நூற்ருண்டுகளில் மரத்தினுல் கட்டப்பட்ட பல அமைப்புகள் அழிக்கப்பட்டு கற்களினுல் கட்டப்பட்டன. இவ்வாறே மரத்தினுல் கட்டப்பட்ட பாலங்கள் பல கற்களினுல் கட்டப்பட்டன. ஆற்றைக் கடப்பதற்கு மரப்பாலத்தைவிட கற்பாலமே (Stone-bridge) ஏற்றதாக இருந்தது. (படம் 30, 31)



படம் : 30 ஓலையினாலும் மரத்தினாலும் கட்டப்பட்ட வீடுகள் :
(அ) ஆப்பிரிக்காவுள்ள மசாய் (*masai*) இனத்தவரின் குடிசை.
(ஆ) அமேசான் பகுதியில் வசிக்கும் யாகுவா (*yagua*) இனத்தவரின் வீடு.



படம் ; 31 நாணலினுல் கட்டப்பட்ட வீடுகள் :
(அ) பெருவில் (*Peru*) டிட்டிகாக்கா (*Titikaka*) ஏரிக்கு அருகில் வசிக்கும் உரு (*Uru*) இனத்தவரின் நாணல் வீடு
(ஆ) இராக்-ஈரான் எல்லைப் பகுதியில் வாழும் அரேபியர்களின் நாணல் வீடு.

காடுகள் சூழ்ந்த ரஷ்யப்பகுதியில் குறிப்பாக 55° வடக்கு அட்சரேகைக்கு அப்பாலும், பின்லாந்திலும் (Finland) தற்போது சைபீரியாவில் (Siberia) காணப்படுவதுபோல் பெரும்பாலான நகரங்கள் மரத்தினுலேயே அமைந்திருந்தன. ஆனுல் அடிக்கடி ஏற்படும் தீ விபத்தின் காரணமாக மக்கள் அந்த நகரங்களில் வசிப்பதை விட்டுவிட்டனர். இவ்வாறு மரத்தினுல் அமைக்கப் பட்ட வோல்கா (Volga) நதிக்கரையிலிருந்த போல்கா (Bolga), பால்டிக் (Baltic) கரையிலமைந்திருந்த வினெடா (Vineta) பிஸ்கா (Biska), ஸ்வீடன் (Sweden) போன்ற நகரங்கள் இப்போது அழிந்து விட்டன.

புறச்சூழ்நிலைக்கு ஏற்றவாறுதான் கட்டடப் பொருள்கள் காணப்படுகின்றன என்ற கூற்று எல்லா காலத்திற்கும் பொருந்துவதில்லை. போக்குவரத்திலும், தொழிற்துறையிலும் முன்னேற்றம் அடைந்த பிறகு, புதிய கட்டடப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தூரத்திலிருந்து கட்டடப் பொருள்கள் வரவழைக்கப்பட்டன. செங்கல்லும், இரும்பும் அதிக அளவில் உபயோகிக்கத் தொடங்கியபோது மற்றப் பொருள்கள் முக்கியத்துவத்தை இழந்துவிட்டன. இருப்பினும் சில இடங்களில் பண்பாட்டிற்கும், மரபிற்கும் முதலிடம் தரப்படுவதால், மண், கல், மரம் ஆகியவையே கட்டடங்களுக்கு இன்னும் பயன்படுகின்றன.

11. வீட்டின் அமைப்பு
(House form)

குடியிருப்புகளின் அமைப்பு இடத்திற்கு இடம் மாறுபடுவதைப்போன்று, வீடுகளின் அமைப்பும் மாறுபடுகின்றன. வீடுகளுக்குப் பலவிதமான அமைப்புகள் ஏற்படுவதற்குக் காலநிலை, கட்டடப்பொருள், தொழில் நுணுக்கம், தலம், தற்காப்பு, சமூகப் பொருளாதார நிலை, சமயம், சமூகப் பண்பாடு ஆகியவை முக்கிய காரணங்களாக இருக்கின்றன. இவற்றுள் எந்த ஒரு காரணமும் தனித்துநின்று அமைப்பை ஏற்படுத்துவதில்லை. இவை, வீட்டின் அமைப்பை எவ்வாறு நிர்ணயம் செய்கின்றன என்பதைக் கீழ்க்காணும் பகுதியில் ஆராய்வோம். இவற்றுள் காலநிலை மிக முக்கியமான காரணம்; அதைப்பற்றி பின்வரும் அத்தியாயத்தில் விரிவாகக் காண்போம்.

கட்டடப் பொருளும் தொழில் நுணுக்கமும் :

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மரமும் கல்லும் கட்டடங்களின் சிறப்பியல்பையும் அமைப்பையும் தீர்மானம் செய்தன. ஆனல், தொழில் நுணுக்கம் வளர்ச்சி பெருத சமூகத்தில்தான் இது உண்மையாக இருந்தது. மனிதனுடைய அறிவு வளர்ச்சியடைந்த பின்னர், மிகவும் சிக்கலான கட்டட நுணுக்கங்களைப் பயன்படுத்தத் தொடங்கினன். இதன் விளைவாகக் கட்டடங்கள் சிக்கலான வடிவங்களைப் பெற்றன. இந்த வடிவங்களெல்லாம் முன்னேற்றத்தின் காரணமாக எழுந்தவையே. பழங்காலத்தில் மனிதனுக்கு உறைவிடங்களாக இருந்த குகை, காற்று, தடுப்புச்சுவர், இதை அடுத்துத் தோன்றிய வட்ட வடிவக் குடிசை, இதைத் தொடர்ந்து இறுதியாகத் தோன்றிய செவ்வகக் குடிசை இவையாவும் அருகில் கிடைத்த பொருள்

களைப் பொருத்தும், அப்போதைய தொழில் நுணுக்கத்தைப் பொருத்தும் பலவேறு அமைப்புகளில் காணப்பட்டன. தவிர்க்க முடியாத சில சூழ்நிலைகளே வீடுகளின் அமைப்பு மாறுவதற்கு காரணமாக உள்ளன.

டியரா டெல் பியோகோ (Tierra del Fuego) வில் காற்றுத் தடுப்புச் சுவர் (Wind breaker) உறைவிடமாக இருந்த போதிலும், மதச் சடங்குகள் (Ceremonial) செய்வதற்கெனச் சில செயற்கைப் பண்பாட்டுக் (Sophisticated) கட்டடங்கள் இருந்து வந்தன. கலிபோர்னியாவின் தென்மேற்குப் பகுதியில் வாழ்ந்த பழங்குடியினர், புதர் செடிகளினுலான வீடுகளில் தற் காலிகமாக வசித்து வந்தனர். இதேபோல், இங்கு பாம்போ (Pompo) இந்தியர்கள் மரப்பட்டையினுலான கூடாரங்களில் (Tepee) வசித்து வந்தனர். இவர்களுடைய உறைவிடம் சிறிய தாக இருந்தபோதிலும், சடங்குகள் நடைபெறும் வீடுகள் மட்டும் பெரியதாக இருந்தன. இந்த வீடுகள் வட்ட வடிவமாக வும், கூரை வேயப்பட்டும், பூமியின்கீழ் சிறிது ஆழத்தில் அமைக் கப்பட்டிருந்தன. ஆனுல், தற்காலத்தில் பூமிக்கு மேலேயே காணப்படும் இந்த வீடுகள் புதிய பொருள்களைக் கொண்டு கட் டப்பட்ட போதிலும், இந்த வீடுகளின் நடுவில் அமைந்த தூண் கள் மட்டும் பழைய வீடுகளிலிருந்துதான் கொண்டுவரப் படுகின்றன. எனவே, அறிவு வளர்ச்சிக்குப் பின்பும், புதிய பொருள்கள் கிடைத்ததும் வடிவம் மட்டும் மாருமல் இருந்து வருகிறது.

சிலசமயம், கட்டடக்கலையும் தொழில் நுணுக்கமும் மக்களுக் குத் தெரிந்திருந்தும், வேறு சில காரணங்களால் இவற்றைப் பயன்படுத்தாமல் இருந்தனர். உதாரணமாக எகிப்தியருக்குக் கல்லறை மாடம் (Vault) கட்டத் தெரிந்திருந்தும் தங்கள் மரபின் காரணமாக அதைச் செய்யவில்லை. அதேபோல் ஹாய்டி (Haiti) பகுதியில் நேர்த்தியாகப் பின்னப்பட்ட வலைகளை வீட்டின் தடுப்புச் சுவர்களாகப் பயன்படுத்த முடியுமென்ருலும், அவைகள் மீன்பிடிக்கும் வலைகளாக மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன. இதுபோலவே புஷ்மென் (Bushman) இனத்தவர் கள் திருமணம் செய்வதற்காகக் கூடுகின்ற மண்டபம் (Scherm) மிகவும் அக்கறையுடனும், பெரிதாகவும் கட்டப்படுகின்றன. இத்திருமண மண்டபம் தற்காலிகமானதுதான் என்ருலும் வழக்கமான வீட்டைவிட, பலவகைகளில் மேம்பட்டு இருப்பது அம்மண்டபத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

சில சமயங்களில் சமூகச் சூழ்நிலை தொழில் நுணுக்க வளர்ச்சியைத் தடைசெய்கின்றது. விஞ்ஞானம் ஏற்படுத்தித் தந்த வசதிகள் சில இடங்களில் சமூகத்தினரின் எதிர்ப்பால் தடைப்படுகின்றன. உதாரணமாக வடக்கு ஆப்பிரிக்காவில், பிரஞ்சு அரசு பல கிராமங்களுக்குக் குடிநீர் குழாய்களை அமைத்துத் தந்தது. இதன் விளைவாகக் கிராமங்களில் மக்களிடையே பொதுவான அதிருப்தி ஒன்று நிலவியது. ஏனெனில், முஸ்லீம்கள் நிறைந்த அக்கிராமங்களில் பொதுக் கிணறுகளிலிருந்து நீரை எடுத்துச் செல்லும்போது மட்டுந்தான் அக்கிராமத்துப் பெண்களுக்கு மற்ற பெண்களோடு பேசி மகிழ்கின்ற வாய்ப்புக் கிடைக்கிறது: இக் குடிநீர்க் குழாய்கள் இந்த வாய்ப்பை நீக்கியதால் அவர்கள் அதிருப்தி அடைந்தார்கள் என்பதும் புலனாயிற்று. இக்குழாய்கள் அகற்றப்பட்ட பின்புதான் அங்கு பழைய நிலைமை உருவாகியது.

கட்டடம் கட்டுவதற்கு மனிதனிடம் இருந்த திறமைதான் பல வடிவங்கள் தோன்றுவதற்குக் காரணம் என்றாலும், பழைய வடிவங்கள் சில கட்டுவதற்கு எளிதாகவே இருந்திருக்கின்றன. உதாரணமாக, செவ்வக வடிவக் குடிசைகளைவிட, வட்ட வடிவக் குடிசைகளுக்குக் கூரை அமைப்பது மிகவும் எளிதாக இருந்தது. வடிவ மாற்றங்கள் அனைத்தும் இவ்விரு வடிவங்களின் அடிப்படையிலேயே ஏற்படுகின்றன. நிக்கோபார் தீவுகளில் வட்ட வடிவமும் செவ்வகவடிவமும் காணப்படுகின்றன. ஆனால் சீனா, எகிப்து, மொசபடோமியா போன்ற இடங்களில் பழங்காலத்திலிருந்தே, செவ்வக வடிவ வீடுகளே காணப்பட்டன: இவை கல்லினாலோ, மண்ணினாலோ மற்றப் பொருள்களினாலோ கட்டப்பட்டிருந்தாலும் வடிவங்கள் ஒரே மாதிரியாகவே இருந்து வந்தன.

கட்டடப்பொருள், கட்டும் திறமை, தொழில் நுணுக்கம் ஆகியவை, ஒரு வீட்டின் அமைப்பைத் தீர்மானிப்பதைவிட அந்த அமைப்பின் மாற்றங்களுக்கே காரணமாயிருக்கின்றன; கட்டடப் பொருள், கட்டும் திறமை, தொழில் நுணுக்கம் ஆகியவை சிலசமயங்களில் வடிவத்தைத் தீர்மானிக்கும் நிலையில் இல்லை; அச்சமயங்களில் வேறுசில காரணங்களே வடிவத்தைத் தீர்மானிக்கின்றன. செலிபஸ் (Celebes) தீவிலுள்ள கேயெல்வை (Koelwai) மக்களால் ஒரே பொருளைக் கொண்டு கட்டப்பட்ட வீடுகள் மூன்றுவிதமான உயரத்தில் சிக்கலான கட்டமைப்போடு காணப்படுகின்றன. ஆனால், இதற்கு மாறாக எஸ்கிமோக்களின் இக்லூவும் (Igloo), கோடைகாலத்துக் கூடாரமும் வெவ்வேறு

பொருள்களைக்கொண்டு கட்டப்பட்டாலும், இவற்றின் நில வரைப்படிவம் வட்டமாகவே உள்ளது. இங்கு இயலாமைக்கும் தவிர்க்க முடியாமைக்கும் இடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாக அறிய முடிகிறது. குளிர்காலத்தில் அமைத்துக் கொள்ளும் இக்லூவைப்போல், பனிக்கட்டி கிடைக்காத கோடையில் இதைக் கட்டுதல் இயலாது. அதே சமயத்தில் கோடைகாலத்துக் கூடாரங்கள் வேறு பொருள்களைக்கொண்டு கட்டப்பட்ட போதிலும், இவை இக்லூவைப்போல் வட்ட அமைப்புப் பெறுவதைத் தவிர்க்க முடியவில்லை.

சில சமயங்களில் பொருள்கள் அவைகளாகவே வீட்டின் வடிவத்தைத் தீர்மானம் செய்வதில்லை. உதாரணமாக ஜப்பானில் வீட்டின் கூரை அமைப்பிலும், அளவிலும் சரிவிலும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஜப்பானியரின் இயற்கை வேட்கையைப் பொருத்தும், பொருளாதாரத்தைப் பொருத்தும், பணியைப் பொருத்தும் கூரையும், கழிகளும் அளவில் சிறியதாகவோ, பெரியதாகவோ அமைகின்றன. இதேபோல் சீனாவிலுள்ள கட்டடங்கள் எல்லாவற்றிலும் ஓடுகளே கூரைகளுக்குப் பயன் பட்டிருந்தாலும், ஒரே இடத்தில் கூட வீடுகளின் வடிவம் பலவாறாகக் காணப்படுகிறது. அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள பியுப்லோஸ் (Pueblos) குடியிருப்புகள் முற்றிலும் மண்ணால் (Mud) கட்டப்பட்டவை என்றாலும்கூட சந்தையைச் (Plaza) சுற்றிலுமுள்ள கட்டடங்கள் மட்டும் 'E' வடிவத்திலோ, 'D' வடிவத்திலோ, வட்ட வடிவத்திலோ, செவ்வக வடிவத்திலோ காணப்படுகின்றன. கட்டடப் பொருள்களை மாற்றுவதாலும் வீட்டின் அமைப்புச் சில இடங்களில் மாறுவதில்லை. உதாரணமாக சான்டோரினி (Santorini) என்ற கிரேக்கத் தீவிலுள்ள வீடுகளில் கூரைக்குப் பதிலாக கல் உபயோகிக்கப்பட்ட போது அவற்றின் வடிவம் சிறிதும் மாறவில்லை. இதேபோல் தங்கள் கூடாரங்களுக்கு உரோமக் கம்பளத்தைப் பயன்படுத்திய மங்கோலியர்கள் தற்காலத்தில் பிளாஸ்டிக் துணிகளைப் பயன்படுத்திய போதிலும் கூடாரத்தின் அமைப்பு எந்த வகையிலும் மாறவில்லை. இதற்கு மாறாக ஒரே கட்டடப் பொருள்கூட பல வித வடிவங்களுக்குக் காரணமாக இருக்கிறது. பெரு (Peru) மாநிலத்தில் டிட்டிகாக்கா (Titicaca) ஏரிக்கு அருகிலுள்ள உரு (Uru) வீடுகள் கோதுமை நாணலினால் (reeds) கட்டப்பட்டிருக்கின்றன. இதேபோல் இராக், ஈரான் எல்லைப் பகுதிகளிலுள்ள அரேபியர்களின் வீடுகளும் நாணலினாலேயே கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், உரு வீட்டிற்கும், அரேபிய வீட்டிற்கும்

அமைப்பில் நிறைய மாறுதல்கள் காணப்படுகின்றன. (படம் 31) இதேபோல்தான் ஆப்பிரிக்காவிலுள்ள மசாய் (Masai) இனத்தவர் வீட்டிற்கும், அமேஸானிலுள்ள யாகுவா (yagua) வீட்டிற்கும் ஓலையும், மரமும் பயன்பட்டபோதிலும், அமைப்பில் இவை மாறுபட்டிருக்கின்றன. இதேபோன்று மண்ணுற் கட்டப்பட்ட ஈரானிலுள்ள பியுபிலோ (Pueblos) குடியிருப்புக்கும், அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள பியுபிலோவுக்கும் வடிவ வேறுபாடு காணப்படுகிறது. எளிதிற் சுமந்து செல்லக்கூடிய குச்சி, கம்பளத்தினுலான அரேபியக் கூடாரத்திற்கும், அதே பொருள்களாலான மங்கோலியர்களின் யர்ட் (yurt) கூடாரத்திற்கும் கூட வேறுபாடு காணப்படுகிறது.

தலம்:

தலத்தின் அமைப்பும், அதன் பரப்பும் வீடுகளின் அமைப்பைத் தீர்மானிக்கின்றன என்னும் கருத்திற்கு இத்தாலிய நாட்டு மலைக் குடியிருப்புகளையும், கிரேக்கத் தீவுகளின் குடியிருப்புகளையும் உதாரணமாகக் காட்டுவதுண்டு. பழங்காலத்து வீடுகளின் அமைப்புக்குத் தலம் பொறுப்பாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது. பழங்காலத்தில் குடியானவர்கள் நிலத்தின்மீது கொண்டிருந்த வியக்கத்தக்க ஈடுபாடுதான் அவர்களுடைய வீடுகள் அமைவதற்கும், அந்த தலங்களிலிருந்து அவர்களை நகரவொட்டாமலும் செய்தன. அவர்கள் தங்கள் மரபுக்கு ஏற்றபடி ஒரே தலத்தில்தான் வீடுகளை அமைத்துக் கொண்டார்கள். தென்மேற்கு கலிபோர்னியாவில் வசிக்கும் போமோ (Pomo) இந்தியர்களின் குடியிருப்புகள் வயலிலிருந்தும், சந்தையிலிருந்தும் தூரத்தில் அமைந்திருந்த போதிலும் தங்கள் குடியிருப்பை வேறு தலத்திற்கு மாற்றிக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. இது அந்தத் தலத்தின்மீது அவர்களுக்கு மரபின் வழியாக வந்த ஈடுபாடுதான் காரணமாக இருக்கிறது. இதே மக்கள் கோடையில் கடற்கரையை நோக்கியும் குளிர்காலத்தில் மலைப்பகுதிகளை நோக்கியும், கடந்தகாலத்தில் இடம் பெயர்ந்தபோதும் அவர்களுடைய வீடுகளின் அமைப்பு இரண்டு இடங்களிலும் ஒரே மாதிரியாக இருந்தது. இது, முன்பு கூறியதற்கு முரணுக இருக்கிறது. எனவே, தலம் மட்டும் வீட்டின் அமைப்பை அறுதியிடுகிறது என்று கூறுவதற்கில்லை. உதாரணமாக ஜப்பானில் ஹோகாகு (Hogaku) என்ற முறைப்படிதான் வீடுகளின் தலங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இங்கு நில அமைப்பைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. இதேபோல், கில்பெர்ட் (gilbert)

எல்லிஸ் (Ellice) தீவுகளின் வீடுகள் நில அமைப்பைக் காட்டிலும் காற்றின் திசைக்குத் தக்கவாறுதான் அமைந்திருக்கின்றன. இங்கெல்லாம் தலத்திற்கும் வீட்டின் அமைப்புக்கும் தொடர்பு காணப்படவில்லை. இதற்கு மாறாக இந்தியாவில் செங்குத்துச் சரிவுகளில் அமைந்த வீடுகளெல்லாம் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டாலும் வாயிற்படிகள் சரிவை நோக்கித்தான் அமைக்கப்படுகின்றன.

தலத்தின் இயல்பால் சில சமயங்களில் வீட்டின் அமைப்பைக் காட்டிலும் பயிர் வகைகள்தான் மாற்றமடைகின்றன. உதாரணமாக, இலங்கையில் தொடக்கத்தில் வாசனைத் திரவியங்கள் (Spices) பயிர் செய்யப்பட்டு வந்த நிலங்களிலெல்லாம், காப்பி, தேயிலை, ரப்பர் போன்றவை இப்போது பயிர்செய்யப்படுகின்றன. இங்கே காணப்படுகின்ற சரிவுள்ள தலமே இதற்குக் காரணமாக இருக்கிறது.

ஒரே இயல்புடைய தலங்களில் வீடுகள் பல அமைப்புகளில் காணப்படுவதுபோல், பல்வேறு இயல்புகளுடைய மனைகளில் ஒரேவிதமான அமைப்பையும் காணமுடிகிறது. வீடுகளும், கிராமங்களும் நகரங்களும் தோன்றுவதற்குத் தலம் தூண்டுதலாக இருக்கலாம். ஆனால், அதுவே வீடுகளின் அமைப்பைத் தீர்மானிக்கும் காரணியாக இருக்க முடியாது. விடல் டிலா பிளாஷ் (Vidal de la Blache) கூறுவதுபோல் இயற்கை, தலத்தைத் தருகின்றது; மனிதன் தன் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்றபடி அதைப் பயன்படுத்திக் கொள்ளுகிறான். ஒரு தலம் நமக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறதென்றால், அதன் அமைப்பு அதற்குக் காரணமாக எல்லா சமயங்களிலும் இருப்பதில்லை. ஏனென்றால், பொருத்தமான தலமென்று நாம் கருதுவதெல்லாம் நம்முடைய குறிக்கோளுக்கும், தொழிலுக்கும், பண்பாட்டிற்கும் ஏற்றதாக இருக்கவேண்டும். பொருத்தமான நல்ல தலம் என்று சொல்லப்படுகின்ற ஒன்று ஏரிக்கரையிலிருந்தாலும், ஆற்றங்கரையிலிருந்தாலும், மலைமீதிருந்தாலும், கடலோரத்தில் இருந்தாலும் அந்தந்தக் காலத்து மக்களின் நாகரிகத்தைப் பொருத்தே அது தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஒரு தலம் பொருத்தமானது அல்லது பொருத்தமற்றது என்பதெல்லாம் மக்களுடைய எண்ணத்தின் பிரதிபலிப்பேயாகும். தலத்தைத் தேர்ந்தெடுப்பது தெய்வநம்பிக்கையின் அடிப்படையிலோ, அரசியல் கட்டுப்பாட்டினாலோ, சமூகக் கட்டுப்பாட்டினாலோ அமையலாம். கடலோரத்தில் வாழ்ந்துவந்த ஆஸ்திரேலியப் பழங்குடிகள்

வெள்ளையர்களால் உள்நாட்டிற்குள் விரட்டப்பட்டதால் அப்பழங்குடியினர் தங்கள் குடியிருப்புத் தலத்தை மாற்ற வேண்டியதாயிற்று. இதேபோல், சில இஸ்லாமிய நகரங்கள் சில காலங்களில் கடலோரப் பகுதியிலும், வேறு சில காலங்களில் உள்நாட்டிலும் அமைந்திருந்தன. எனவே குடியிருப்புகள் அல்லது வீடுகளின் அமைப்பு எல்லாச் சமயங்களிலும் தலத்தினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை.

தற்காப்பு

வீட்டின் அமைப்புக்குத் தற்காப்பு ஒரு காரணமாக இருக்கிறது. குறிப்பாக வீட்டைச் சுற்றி அமைக்கப்படுகின்ற கழியரண்களும் (Stockades) குச்சி வேலிகளும் (palisades) பாதுகாப்புக்காகவே அமைக்கப்படுகின்றன. பாது காப்பு மிகவும் தேவைப்படுகின்ற மசாய் (masai) குடியிருப்புகளில் கால்நடைகளைப் பாதுகாக்கும் பொருட்டு வட்டவடிவ வேலிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் நீள் வட்டவடிவ கிராமங்களில் வசிக்கிறார்கள். கால்நடைகளைப் பராமரிப்பது இவர்களுக்கு முக்கிய தொழிலாகையால், கிராமத்தின் மையத்தில் கால்நடைகளைப் பாதுகாக்கின்ற வட்டவடிவப் பொது இடம் ஒன்று உள்ளது. இதனைச் சுற்றிக் குடிசைகளும் வட்டவடிவில் அமைந்துள்ளன. இக்குடிசைகளைச் சுற்றி முள் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. மழைக்காலத்தில் இரவில் தங்குவதற்காகத் தனியே குடிசைகளும் உள்ளன. (படம் 32)

சிலகுடியிருப்புகளில் கால்நடைகளைவிடத் தானியக்களஞ்சியங்களுக்கு அதிகப் பாதுகாப்புத் தேவைப்படுவதால், இதற்கேற்றபடி அவற்றின் அமைப்பும் மாறுபடுகிறது. உதாரணமாக மௌன்டாங் (moundang) இனத்தாரின் குடியிருப்பில் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாகக் குடிசைகள் உள்ளன. மையத்தில் அமைந்த தானியக் களஞ்சியத்தைப் பாதுகாப்பதற்காக அவற்றைச் சுற்றிலும் குடிசைகள் வட்டமாக அமைந்துள்ளன. இக்குடிசைகளைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வினத்துக் குடும்பத்தலைவனுக்குப் பல மனைவியர் இருப்பதால் ஒவ்வொரு மனைவிக்கும் ஒரு குடிசை ஒதுக்கப்பட்டுள்ளது. தலைமையானமனைவியும் குடும்பத்தலைவனும் வயிலுக்கு அருகில் தங்கியிருப்பார்கள். (படம் 33) ஒரு மனைவியுள்ள குடும்பங்களில் இடவசதி அக்குடும்பங்களின் அளவைப் பொருத்தும், பண்பாட்டைப் பொருத்தும் அமைந்



படம் 32

மசாய் (*Masai*) குடியிருப்பு

துள்ளது. உதாரணமாக, மோஃபோ (mofou) பண்ணையில் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனிக்குடிசைகள் ஒதுக்கப்பட்டுள்ள, குடும்பத்தில் ஒரு மனைவி மட்டும் இருப்பதால், அவளும் குழந்தைகளும் தங்கியிருக்கின்ற குடிசை மையத்தில் காணப்படுகிறது. இப்பண்ணையில் நுழைவதற்குக் குடும்பத்தலைவனின் வீட்டிற்குள் நுழைந்துதான் செல்லவேண்டும். ஆனால் மசா (massa) இனத்தவரின் பண்ணைகளில் பண்ணைக்குரியவரின் வீடு நடுவிலும் அவருடைய குடும்பத்தாரின் வீடுகள் அதைச் சுற்றிலும் காணப்படும். மேற்கூறிய எல்லாக் குடியிருப்புகளிலும், பாதுகாப்பு அவசியமாக இருந்தபோதிலும் அவர்களது சமூக பழக்க வழக்கங்களால் அவற்றின் அமைப்பும் மாறுபடுகின்றன.



படம் : 33

(1) மோஃபோ (*mofo*) இனத்தாரின் பண்ணைக்குடியிருப்பு
(2) மௌன்டாங் (*maundang*) இனத்தாரின் பண்ணைக்குடியிருப்பு

பொதுவாக, கூட்டுக் குடும்ப வீடுகள் (communal dwelling) அல்லது நீண்ட வீடுகள் (long house) பாதுகாப்புத் தேவையின் காரணமாகத்தான் அமைகின்றன. சில இடங்களில் பாதுகாப்பு மட்டுமே அவற்றின் அமைப்பை நிர்ணயிப்பதில்லை, உதாரணமாக பியுபிலோ இனத்தவரின் கூட்டுக் குடும்ப வீட்டிற்கும் இராக்கியோஸ் (lroquios) இனத்தவரின் நீண்ட வீட்டிற்கும் குவாகிட்டுல் (Kwakitul) இனத்தவரின் வீட்டிற்கு மிடையே, உள்-வெளி அமைப்பிலும் அளவிலும் பல வேறுபாடுகள் காணப் படுகின்றன.

விலங்கு, பாம்பு, கிருமி, வெள்ளம் ஆகியவற்ருல் ஏற்படும் ஆபத்திலிருந்து காத்துக் கொள்வதற்காக மாரகைபோ (maracaibo) ஏரியின் அருகில் மேடை வீடுகள் (Stilt house) காணப்படு

கின்றன. இந்த வீடுகளுக்கு வெள்ளக் காலத்தில் படகின் மூலமும், பாலத்தின் வழியாகவும் மக்கள் செல்வர். மற்றையக் காலங்களில் வீட்டிற்குச் செல்வதற்கு ஏணிகள் பயன்படுத்தப் படுகின்றன. இதேபோல் ஃபிளாரிடாவிலுள்ள செமினோல் (Seminole) இனத்தவரின் மேடை வீடு தரையிலிருந்து மூன்றடி உயரத்தில் அமைந்துள்ளது. (படம் 36)

பொருளாதாரம் :

உயிர் வாழ்வதற்கு வீட்டைக் காட்டிலும் உணவே முக்கிய மானதால், பொருளாதாரச் சரிவு என்பது உணவையே அடிப் படையாகக் கொண்டிருக்கிறது. ஆனம் (Annam) போன்ற பகுதி களில் உணவு உற்பத்தி பெருகிப்பணம் சேர்ந்ததும் குடியானவர் கள் வீட்டை அழகுபடுத்திக் கொள்ளுகிறார்கள். எனவே, இங்குப் பணக்காரர்களின் எண்ணிக்கையைவிட விலையுயர்ந்த வீடுகளே அதிகம் காணப்படுகின்றன. பிரான்சிலுள்ள பண்ணை வீட்டின் அமைப்பிற்கும், பொருளாதாரத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை டெமான்ஜியன் (Demangeon) எடுத்துக்காட்டி யுள்ளார். ஆனால், இத்தாலியில் உள்ள பண்ணை வீட்டை இத் துடன் ஒப்பிட்டால் சில வேறுபாடுகள் தெளிவாகின்றன. இந்த இரண்டு இடங்களிலும் ஒரே மாதிரியான பொருளாதாரத் தேவைகளுக்காக வீடு கட்டப்பட்டிருந்தாலும் அமைப்பில் இவை வேறுபட்டு இருக்கின்றன.

பண்ணைக்குடியிருப்பின் பொருளாதாரத் தேவைகளான வீடு லாயம் (Stable), போர் அடிக்கும் தரை (thrashing floor) ஆகியவை இரண்டு வித அமைப்புகளில் இங்குக் காணப்படு கின்றன. ஒரு அமைப்பில் எல்லா பணிகளும் ஒரே கட்டடத்தில் நடைபெறும்போது, மற்றொரு அமைப்பில் அவை தனித்தனி கட்டடங்களில் காணப்படுகின்றன. கிராமக் குடியிருப்புகளில் தானியக் களஞ்சியம் (Barn) ஒரு முக்கிய பொருளாதாரத் தேவையாகும். இது எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை இன்கா மார்கா (Inca marca), பியுபிலோ (Pueblo), நியு இங்கி லாந்து, பிரான்சு ஆகிய பண்ணை வீடுகளின் நெருக்கமான அமைப்பிலிருந்து அறிந்து கொள்ளலாம். (படம் 34)

மக்கள் தங்கள் வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொள்ளும் போதும் வீடுகளின் அமைப்பு மாறிவிடுகிறது. உதாரணமாக மண்ணை வெட்டி அமைத்துக் கொண்ட வீடுகளில் (subterranean house) நிரந்தரமாக வசித்துவந்த சேயன்னி (cheyenne)



படம்: 34

(1) பிரெஞ்சு பண்ணை வீட்டில் நிலவரைப்படிவம்
(2) இத்தாலியப் பண்ணை வீட்டில் நிலவரைப்படிவம்
(3) வேலை செய்யும் அறை, சேமிப்பு அறை, வசிக்கும் அறை ஆகியவை ஒரே கூரையின் கீழ் அமைந்திருக்கிறது.
(4) வேலை செய்யும் அறை, சேமிப்பு அறை வசிக்கும் அறை ஆகியவை தனித்தனிக் கட்டடங்களில் அமைந்திருத்தல்.

இனத்தவர் குதிரைகளைப் பயன்படுத்தத் தொடங்கியவுடன் நாடோடிகளாக மாறிவிட்டனர். எனவே, இவர்கள் நிரந்தர வீடுகளை விட்டு விட்டுக் கூடாரங்களில் வசிக்கத் தொடங்கினர். ஆகவே, பொதுவாகப் பொருளாதார மாற்றங்கள் வீட்டின் அமைப்பை மாற்றிவிடுகிறது.

சமயம்:

வீட்டின் அமைப்பு சமயக் கொள்கைகளினுல் மாறுபடுகிறது என்பது டெபான்டெய்ன்ஸ் (Deffontaines) ரக்லான் (Raglan) போன்ற அறிஞர்களுடைய கருத்தாகும். இவர்கள் புனிதம் நிறைந்த இடமாக வீட்டைக் கருதுகிறுர்கள்: அவர்களுடைய கருத்துப்படி சில வீடுகளில் அண்டத்து இயல்புகளின் (cosmological) அடையாளங்கள் காணப்படுகின்றன. சில சமயங்களில்

சமய வழிபாடுகளுக்காகவே வீடு கட்டப்படுவதால் அது உறைவிடமாக அமையாமல், கோயிலாகக் கருதப்படுகிறது. வீட்டில் புனிதத்திற்கும் வழிபாட்டிற்கும் ஒரு அறையை ஒதுக்க வேண்டுமென்ற வழக்கம் இருப்பதால், வீட்டின் அமைப்பில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உறைவிடம் மிக அவசியமாக இருந்தபோதிலும், மனிதர்களுடைய வீடுகளின் அமைப்பு, குகையைப் போலவோ, பறவைக் கூட்டைப்போலவோ இல்லை. மனிதனுக்கு அமைந்த ஆறறிவும், சமய நெறியும் தான் அவன் வீட்டின் அமைப்பை மற்ற அமைப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. பழங்காலத்தில் ரோம், கலடோனியா, கம்போடியா சீனு போன்ற இடங்களில், கோயில்கள்தாம் மனிதனின் உறைவிடமாக இருந்திருக்கிறது. சில இடங்களில் நாடோடிகளின் கூடாரத்தைச் சுற்றியுள்ள வேலிதான் அந்தக் கூடாரத்தின் புனிதத்தன்மையின் எல்லையாகும். அதுவே அவர்களுக்குத் தற்காப்பு அரணுகவும் விளங்குகிறது.

சில இடங்களில் வட்டமாகவோ, செவ்வக வடிவத்திலோ வீடுகள் அமைவதற்குச் சமய நெறி காரணமாக இருக்கிறது. வட்ட வடிவ வீடுகளுக்குத் திசையமைப்பு (orientation) அவசியமற்றதாகி விடுகிறது. உதாரணமாக சூலு (zulu) போன்ற இடங்களில் காணப்படும் வட்டவடிவக் குடிசைகள் திசையமைப்பு இல்லாமல் ஒழுங்கற்று இருக்கின்றன. இவை சமயத்தின் அடிப்படையில் அமைந்தவையே. இதே போன்று மடகாஸ்கரிலுள்ள (madagascar) டிராணே (Trano) வீடுகள் குறிப்பிட்ட திசையில் அமைந்ததோடுமட்டுமல்லாமல், வானவியல் கோட்பாடுகளுக்கு உட்பட்டும் காணப்படுகின்றன. மேடை வீடுகளும், பூமியில் அமைந்த வீடுகளும் சில இடங்களில் பேய், பூதம் ஆகியவற்றின் அச்சத்தினுல் அமைக்கப்பட்டுள்ளன. அதே போல் சீனு, நியு ஹெப்ரிடெஸ் (New Hebrides) பிரேசில் (Brazil) போன்ற இடங்களிலுள்ள ஞாயிறு கிராமங்கள் (Sunday villages) மதத்தின் அடிப்படையிலேயே அமைப்பைப் பெறுகின்றன. ஆயினும், இந்த அமைப்புகளுக் கெல்லாம் சமயம் மட்டுமே காரணம் என்று கூறுவதற்கில்லை.

சமூகப் பண்பாடு :

வீட்டின் அமைப்பு, இடத்திற்கு இடம் மாறுபடுவதற்குச் சமூகப் பண்பாட்டு இயக்கங்களே காரணமாகிறது என்பது ராபபோர்ட் (Rapoport) போன்ற அறிஞர்களின் கருத்தாகும். பலவகைப்பட்ட புறச் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும் மக்களுடைய

நடைவடிக்கையும், நோக்கமும் தான் வீட்டின் அமைப்பு பலவாறாக மாறுபடுவதற்குக் காரணமாக இருக்கின்றன. வீடு என்பது நமக்குத் தோன்றுவது போல சாதரணமான கட்டடமன்று: அது, பல சிக்கலான தேவைகளை நிறைவேற்றுகிற (institution) நிறுவனமாகும்: ஆகவே, கட்டடங்களின் அமைப்பும் இயக்கமும் அந்தச் சமூகத்தின் மரபை ஒட்டியே அமைகின்றது. தொடக்கத்தில் கூட ஆதி மனிதனுக்கு வீடு ஓர் உறைவிடமாக மட்டும் இருக்கவில்லை. வீட்டின் புற அமைப்பை விட அதன் பணிக்குத்தான் முக்கியத்துவம் தரப்பட்டது. ஆகவேதான் வீடு கட்டத்தொடங்குவதற்கு முன்பும், கட்டும் போதும், குடியேறும் போதும் சமயச் சடங்குகள் செய்யப்படுகின்றன: ஒரு பண்பாட்டில் குறிப்பாகக் காணப்படும் இயல்புகளும், அந்தச் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்படாத செயல்களும், குறிக்கோள்களும், வீட்டின் அமைப்பை பாதிப்பதால், இவைகளைக் கவனத்தில் நாம் கொள்ளுதல் அவசியமாகும். புறச் சூழ்நிலைகள் சாதகமாக இருந்தாலும், அவற்றில் எது சிறந்தது என்பதைத் தீர்மானிக்கும் போது மரபின் இயல்புகளை அனுசரிக்க வேண்டியதாகிறது: வீடுகள் கட்டிக்கொள்வதற்கு ஏற்ற இடங்கள் நிறைய இருந்தாலும், அவற்றைத் தேர்ந்தெடுக்கும் முறையில் சில பண்பாட்டு வரையரைகள் உள்ளன: ஆகவே, வீட்டின் அமைப்பு, புறச் சூழ்நிலையை மட்டும் பொருத்து அமைவதில்லை. அது பலவகைப்பட்ட சமூகப் பண்பாட்டு காரணிகளால் இயக்கப்படுவதாகும்: இவ்வாறு ஏற்பட்ட வீட்டின் அமைப்பு, காலநிலை, கட்டடம் கட்டும்முறை, கட்டடப் பொருள்களின் அருகாமை, தொழில் நுணுக்கம் ஆகிய காரணிகளால் மாற்றமடைகிறது.

கட்டடங்களும் குடியிருப்புகளும் பல்வேறு வாழ்க்கை முறைகளைக் கண்ணுக்கு எதிரே எடுத்துக் காட்டுகிற சின்னங்களாகும்: அவைகளின் அமைப்பு அவற்றின் புறச்சூழ்நிலையின் அமைப்பாகவே இருக்கிறது. அதனால்தான் இராக்கியோஸ். (Iroquios) மக்களின் நீண்டவீடு அவர்களுடைய வாழ்க்கை முறையின் சின்னமாக உள்ளது. அம்மக்கள் தங்களை "நீண்ட வீட்டு மக்கள்" என்றே அழைத்துக் கொள்கிறார்கள்:

ராபபோர்ட்டின் (Rapoport) கருத்துப்படி அண்டத்தின் (Universe) அமைப்பே குடியிருப்பில் பிரதிபலிக்கிறது: அண்டத்துப் பிரதிபலிப்பை (Cosmic image) ஆப்பிரிக்க நாட்டுக் குடியிருப்புகளில் தெளிவாகக் காணலாம்: டோகன் (Dogon)

பம்பாரா (Bombara) போன்ற இனத்தவரின் ஒவ்வொரு பொருளிலும், செயலிலும் அண்டத்தின் அடையாளம் வெளிப் படுகிறது. அவர்களுடைய பண்ணை நிலங்களும், குடியிருப்பும் அண்டத்தின் படிநிலையை உணர்த்துகின்றன. அவர்கள் எப் போதும் இரட்டைக்கிராமங்களையே தோற்றுவிப்பார்கள். ஒன்று சொர்க்கத்தையும், மற்றொன்று பூமியையும் குறிக்கும். பூமி முதன் முதலில் தோன்றும்போது சுருள் வடிவில் (spiral) அமைந்திருந்த தாக அவர்கள் நம்பியதால் அவர்களுடைய வயல்களையும் சுருளான வடிவத்திலேயே அமைத்துக் கொண்டார்கள். இதே போல் மாயா இனத்தவரின் செவ்வக அல்லது சதுர வீடுகளும், சியக்ஸ் (Sioux) இனத்தவரின் வட்ட வடிவ வீடுகளும் அண்டத்தின் அமைப்பையே அடிப்படையாகக் கொண்டிருக் கின்றன. ஏனெனில் மாயா இனத்தவர் அண்டம் சதுரமாக உள்ளது என்றும், சியக்ஸ் (Sioux) இனத்தவர் அது வட்டமாக உள்ளது என்றும் நம்புகிறார்கள். டோகன் (Dogon) இனத்தவரின் கிராமங்கள் மனித உடலின் உறுப்புகளைப் போல் அமைந்திருக் கின்றன. இங்குள்ள மாடி வீடுகள் அனைத்தும் அதிகாரத்தின் அடை யாளமாகப் பெரிய சமயத்தலைவர், அரசியல்தலைவர் ஆகியவர் களுடைய வீடுகளாக இருக்கும். இங்கு ஒவ்வொரு வீட்டிலும் பீடம் ஒன்று (altar) கட்டப்பட்டிருக்கும். இறந்தவரின் ஆவி இதில் வசித்து வருவதாகவும், தன் சுற்றத்தாருக்கு அருகில் இருப் பதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாகவும் பீடம் கருதப் படுகிறது.

நகரங்களை அமைப்பதிற்கூட மானசார சிற்ப சாத்திரத்தின் படி (Manasara Silpa Sastra) அமைக்கப்படல் வேண்டுமென்ற கருத்து சீனா, இன்கா பெரு (Inca Peru) ஆப்பிரிக்கா, கானா, எகிப்து போன்ற இடங்களில் நிலவி வருகிறது. ஒரு பகுதியி லிருந்து மற்றொரு பகுதிக்குக் குடியேறும் மக்கள், புதிய இடத்தில் வீடுகளைக் கட்டும்போது தங்களுக்கு வழக்கமான அமைப்பி லேயே கட்டிக்கொள்ளுகிறார்கள். புதிய இடத்திற்கு அந்த அமைப்புப் பொருத்தமற்றதாக இருந்தால்கூட தங்களுடைய கட்டடக்கலையை அவர்கள் மாற்றிக்கொள்ள விரும்புவதில்லை. ஓஷியானியாவில் (Oceania) உள்ளதுபோல் மார்க்யூசஸ் (Mar-quesas) பகுதியில் காலநிலை மிதமாகவே இருக்கிறது. எனவே, சாதாரண வீடு அந்த இடத்திற்குப் போதுமானதாகும். ஆனால் மார்க்யூசஸ் மக்கள் மரபின்படி அவர்களின் குடும்பங்களுக்கு மூன்று கட்டடங்கள் தேவைப்படுகின்றன. சாப்பிடுவதற்கும், சமையலுக்கும், உறங்குவதற்கும் தனித்தனியான கட்டடங்கள் உள்ளன. இவை தரையிலிருந்து சுமார் ஐந்தடி உயரமுள்ள கல்

மேடையில்தான் கட்டப்படுகின்றன. சில இடங்களில் வீட்டின் உள்ளே காணப்படும் அமைப்பு இன்னும் புதுமையானதாகும், ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டிற்கு ஏற்றவாறு பல்வேறு காரியங்களுக்காகத் தனித்தனி அறைகள் அமைப்பதோடல்லாமல், அவற்றின் இருப்பிடம்கூட பண்பாட்டின் அடிப்படையில் காணப்படுகிறது. உதாரணமாக, ஸ்விட்சர்லாந்தில் உணவு உண்ணும் மேஜையைச் சுற்றி அமர்ந்து உணவு உட்கொள்ளும் போது, தந்தைக்கு ஒரு இடமும், மற்றவர்களுக்கு வேறு திசைகளில் இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

இதே போல் வீடுகளில் குறிப்பிட்ட பக்கம் அல்லது மூலே (Corner) சமய அடிப்படையில் முக்கியமாகக் கருதப்படுகிறது. பிஜி (Fiji) நாட்டில் வீட்டின் கிழக்குத் திசையில் அமைந்த சுவர் தான் குடும்பத்தலைவரின் இருக்கைக்குரியதாகும். வீடு முழுவதும் புண்ணியத்தலமாக சீனுவில் கருதப்பட்ட போதிலும், வடமேற்கு மூலைதான் அதிகமான புண்ணியமுடையதாகக் கருதப்படுகிறது. டுவாரெக் (Touareg) இனத்தவரின் கூடாரத்தில் வாயிற்படி எப்போதும் தெற்கு நோக்கியே இருக்கும். இதனுள் கிழக்குப் பகுதியில் ஆண்களும், மேற்குப் பகுதியில் பெண்களும் தங்கியிருப்பார்கள். எஸ்கிமோக்களின் வீடுகளில் நடனத்திற்கென்று (dance) நடுவில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. சுற்றிலுமுள்ள அறைகளுக்கு இங்கிருந்துதான் செல்ல வேண்டும். இந்த அமைப்பு எஸ்கிமோக்களின் சாட் (Sod) இக்லூ (Igloo) ஆகிய இரண்டு வீடுகளிலும் காணப்படுகிறது.

இந்தியாவில் சாதி அடிப்படையில் வீடுகளின் அமைப்பு மாறுபடுகிறது. உயர்ந்த வகுப்பினரிடையேதான் வசதி உள்ளவர்கள் காணப்படுகிறார்கள். இவர்களுடைய வீட்டிற்கும், தாழ்ந்த வகுப்பைச் சார்ந்தவர்களுடைய வீட்டிற்கும் இடையே அமைப்பில் பல மாறுதல்கள் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் கொச்சியில் காணப்படும் குடியிருப்புகளில் யாவும் சாதியின் அடிப்படையிலும், பொருளாதாரத்தின் அடிப்படையிலும், வீடுகள் அமைப்பைப் பெறுகின்றன. அதிக நிலங்களை உடையவர்களே வசதியான வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். குறைந்த நிலமுடையவர்களும், வயலில் வேலை செய்பவர்களும் சிறிய மண் குடிசைகளிலேயே வசிக்கின்றனர். இவர்களுடைய குடிசைகளில் சாதரணமாக ஒன்று அல்லது இரண்டு அறைகளே காணப்படும். இந்தக் குடிசைகள் பெரும்பாலும் மண், மூங்கில், பனையோலை, வைக்கோல் ஆகியவற்றால் கட்டப்பட்டிருக்கும். இங்குப் பிராமணர்களின் வீடுகளும், நாயர்களின்

வீடுகளும் தனியே அமைந்திருக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் மதிற் சுவர்கள் கட்டப்பட்டிருக்கும். இந்த வீடுகள் குளத்தைச் சுற்றியோ, கோயிலைச் சுற்றியோ, காணப்படும். தாழ்ந்த மக்களுடைய குடிசைகள் முக்கிய குடியிருப்பிலிருந்து விலகி குழுமி காணப்படும். வயலில் கூலி வேலை செய்பவர்களுடைய குடிசைகள் வயலிலேயே சிதறலாகக் காணப்படுகின்றன. பிராமணர்களின் வீடுகளும் நாயர்களின் வீடுகளும் அவர்களுடைய சமய நெறிப்படி திட்டமிட்டு அமைக்கப்படுகின்றன. மதிற்சுவர் நான்கு திசைகளிலும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வடகிழக்குப் பகுதியில் வீடு கட்டப்படுகிறது. தென்கிழக்குப் பகுதியில் இடு காடும் மாட்டுத் தொழுவமும் காணப்படுகிறது. வடமேற்குப் பகுதியில் குளிக்கும் குட்டையும், தானியக் கிடங்கும் காணப்படுகின்றன. வீட்டின் அமைப்பும் சதுர அல்லது செவ்வக வடிவில் உள்ளது. மையப்பகுதியில் செவ்வக வடிவ வாசலும், (Court) அதனை ஒட்டி உட்பகுதியில் நடைகூடமும் (Varandah) காணப்படுகிறது. இங்கும் சமயத்தின் அடிப்படையில் திசைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. உறங்கும் அறை, பொருள்கள் வைக்கும் அறை ஆகியவை மேற்குத் திசையில் அமைந்திருக்கின்றன. வடக்கில், சமையலறையும், உணவருந்தும் அறையும் காணப்படுகின்றன. கிழக்கிலும் தெற்கிலும் முற்றமும், வரவேற்பு அறையும் உள்ளன.

இதுமட்டுமன்றி தனிமை வேண்டியும், மற்றவருடைய பார்வைக்கு மறைவாக இருக்கவேண்டியும் சில பகுதிகளில் வீடுகள் மாறுபட்ட அமைப்பைப் பெறுகின்றன. இந்தியா, ஈரான், தென் அமெரிக்கா போன்ற இடங்களில் ஒவ்வொரு வீட்டிலும் மதிற்சுவர் காணப்படுவதுண்டு. இது தவிர வீட்டின் அறைகளும் வீட்டிற்குள்ளிருக்கும் திறந்த வாசலை நோக்கியே அமைந்திருக்கின்றன. வட இந்தியாவில் சில பகுதிகளில் சுவர்கள் மட்டுமே தெருவை நோக்கி இருக்கின்றன. இந்தச்சுவரைக் கடந்த பின்புதான் வீட்டுவாயிற்படியை அடைய முடியும். சில பகுதிகளில் வீட்டின் முற்றமும், இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. வெனிசுவேலாவில் (Venezuela) சில வீடுகளில் முற்றம் பின்புறத்தில் இருக்கிறது. பழைய எகிப்து வீடுகளில் முற்றம் நடுவில் இருக்கிறது. கிரீஸில் பிரையன் (Priene) போன்ற இடங்களில் முற்றம் தெருவுக்கு மிக அருகில் இருக்கிறது. மொராக்கான்

வீட்டில், தெருவிலிருந்து வீட்டிற்குள் நுழைந்தவுடன் முற்றத்தைத்தான் அடையமுடிகிறது.

எனவே, வீடுகளுக்குப் பலவிதமான அமைப்புகள் ஏற்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன: எந்த ஒரு தனிப்பட்ட காரணியும் வீட்டின் அமைப்பை நிர்ணயிக்க முடியாது என்பதைத் தெளிவாகக் கண்டோம்.

12. வீட்டின் அமைப்பும் காலநிலையும்

(Climate and house form)

வீட்டின் அமைப்பைத் தீர்மானிப்பதில் காலநிலைக்கு முக்கிய பங்கொன்று இருக்கிறது. காலநிலையினால் ஏற்படும் விளைவு, அதன் வலிமையையும் கடுமையையும் பொறுத்திருக்கிறது. பழங்காலத்தில் குடியானவர்கள் காலநிலையின் தன்மைக்கு ஏற்ப அருகில் கிடைத்த குறைவான பொருள்களை வைத்துக் கொண்டு வசதியுடன் வாழ்ந்து வந்தனர். நுண்ணிய காலநிலைக்கு (micro climate) ஏற்ப அவர்கள் தேர்ந்தெடுத்த தலங்களும், கட்டடப் பொருள்களும் அவர்களுடைய ஆற்றலை வெளிப்படுத்துகிறது. வெயில், குளிர் ஆகியவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள கட்டடங்களும் வீடுகளும் அமைக்கப் படுவதால் அவைகளே வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் அமைப்புகள் (thermal Control devices) எனலாம். இன்று, அமெரிக்காவில் குளிர்சாதனம் (airconditioner) அமைக்கப்படாத கட்டடங்களே இல்லையெனலாம், இது காலநிலையை வெற்றிகொண்ட செயலாகும். ஆனால், இதுபோல் காலநிலையை புறக்கணித்துக் கட்டடங்களுக்குள் வசதிகளை ஏற்படுத்தும் அளவிற்குப் பழங்காலத்தில் தொழில் நுணுக்கம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. ஆகையால், அவர்களுடைய கட்டடங்கள் அனைத்தும் காலநிலையின் தன்மைக்கு ஏற்றவாறே அமைந்திருந்தன. அவர்கள் பயன்படுத்திய கட்டடப் பொருள்களும் கட்டடங்களின் வடிவங்களும் காலநிலையினால் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டன. அவர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். ஆனால், தற்காலத்தில் நாம் காணுகின்ற வீட்டு அமைப்புகள் யாவும் தொழில்நுணுக்க வளர்ச்சியினால் அமைந்திருப்பதால், வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் சாதனங்களின் செலவு சில சமயங்களில் கட்டடச் செலவைவிட அதிகமாவதும் உண்டு.

காலநிலைக்கு ஏற்ப வீட்டின் அமைப்பை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட பின்னர், காலநிலையின் கடுமைக்கு ஏற்ப, பல வேறுக வீடுகள் அமைந்தன. வீடுகள், மனிதனுக்கு உறைவிடமாகவும் விலங்குகளிடமிருந்தும், எதிரிகளிடமிருந்தும், வெயில் மழை ஆகியவற்றிலிருந்தும் காத்துக்கொள்ளும் அரணுகவும் இருந்துவந்தன. மனிதன் தனக்கும், தன் உறவினர், மற்றும் தம் பொருள்களுக்கும் வீட்டில் பாதுகாப்புக்கிடைத்தபின் அவன் வேறு வேலையில் ஈடுபடலானுன். உறைவிடத்தின் தேவை காலநிலையின் கடுமைக்குத் தக்கவாறு மாறி வருகின்றது. சில காலநிலையில் வீடுகளே தேவையாக இருப்பதில்லை. வேறு காலநிலைகளில் அவை தவிர்க்க முடியாதவையாகிவிடும். காலநிலை கடுமையாகவும், புறச்சூழ்நிலை மிகக் கடினமாகவும் உள்ள இடங்களில் காணப்படும் வீடுகளின் அமைப்புகள் இதனை நன்கு தெளிவுபடுத்துகின்றன. வட அமெரிக்க ஆர்க்டிக் பகுதியில் காணப்படும் இக்லூ (igloo); பாலைவனங்களிலும், வரண்ட பகுதிகளிலும் காணப்படும் மண் கல் வீடுகள்; ஈரம் நிறைந்த அயனமண்டலப் பகுதியில் காணப்படும் மேடை வீடுகளும், காலநிலையின் செல்வாக்கை உறுதிப்படுத்தும் அமைப்புகளாகும்.

பழங்காலத்து மக்களுக்குக் கட்டடப் பொருள்களின் நுண்ணிய இயல்புகளும், எந்தக்காலநிலையில் எந்த பொருள்களைப் பயன்படுத்தவேண்டும் என்பதும் நன்கு தெரிந்திருந்தது. பொருள்களின் ஈர்ப்புத்தன்மை, பிரதிபலிப்புத்தன்மை, மழை, பனி, வெயில் ஆகியவற்றைத் தாங்கும் தன்மையாவும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. தலக்காற்றின் தன்மை (local winds) பனிமூடும் இடங்கள், வெயில், நிழல் காணப்படும் இடங்கள், பருவகாலத்தன்மை, குளிர் வெப்பக் காற்று வீசும் தன்மை ஆகியவற்றையெல்லாம் மனதிற் கொண்டுதான், தங்கள் வீட்டை அவர்கள் அமைத்துக் கொண்டார்கள். பருவகால மாற்றத்திற்கு ஏற்ப வீடுகளின் கூரைகளும், அமைப்பும் மாறிக்கொண்டிருக்கின்றன: உதாரணமாக, பைட்டே இந்தியர்களின் (Paiute Indians) வீடுகள் குளிர்காலத்தில் கூம்புவடிவத்தில் உள்ளது; இந்தக் கூம்பு வடிவக்கூடாரங்கள் குளிரைத் தாங்குவதற்கு ஏற்றுர்போன்று மரத்தினுலும், மரப்பட்டையினுலும், உலர்ந்த தழைகளினுலும் கட்டப்பட்டவையாகும். ஆனுல், கோடையில் இவர்கள் இந்தக் கூம்புக் கூடாரங்களை விட்டுவிட்டுத் தட்டைக் கூரை கொண்ட சதுர வீடுகளில் வசிக்கத் தொடங்குகிருர்கள். இந்த வீடுகளுக்குச் சுவர்களே இல்லை. இந்தத்தட்டையான கூரையை நான்கு கழிகள் தாங்கிக் கொள்கின்றன. மத்திய

ஆசியாவிலும், சைபீரியாவிலும் உள்ள இடையர்களின் வீடு களும் இவ்வாறே பருவகாலத்திற்கு ஏற்ப வடிவத்தில் மாறு கின்றன. குளிர்காலத்தில் இவர்களுடைய கூடாரங்கள் உரோமத் தால் மூடப்பட்டுப் பனியால் மறைக்கப்பட்டிருக்கும். வீட்டின் உள்ளே வெப்பத்தை அதிகரிக்கச் செய்யவே இந்த ஏற்பாடாகும்; கோடையில் உரோமத்திற்குப் பதிலாக, தோல் பயன்படுத்தப் படுகிறது. இதேபோன்ற பருவகால மாற்றங்கள் வட அமெரிக்கா, மங்கோலியா போன்ற பகுதிகளில் தற்காலத்தி லும் காணப்படுகிறது. சில பகுதிகளில் கோடைகாலத்தில் கூடாரமும் குளிர்காலத்தில் மரத்தாலான கிடங்கு வீடுகளும் (Pit dwellings) பயன்படுத்தப் படுகின்றன. மத்திய ஆசியா விலுள்ள கசாக் (Kazak) நாடோடி இனத்தவரின் குடியிருப்பும் காலநிலையின் மாற்றத்திற்கு ஏற்ப மாறிவிடுகிறது. கோடையில் இவர்களுடைய கூடாரங்கள் மலைச்சரிவுகளில் பரவலாகக் காணப்படுகின்றன. இந்தப் பரவலுக்குக் காரணம், புல்வெளியை நாடிச் செல்வது தான். ஆனல், குளிர்காலத்தில் வீசுகின்ற கடுமை யான குளிர் காற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும், தானி யங்கள் களவு போவதைத் தடுக்கவும் இவர்கள் நெருக்க மாகக் குழுமிய தங்கள் குடியிருப்புகளை மிகப் பாதுகாப்பான பள்ளத்தாக்கிலும் காடுகளின் விளிம்புகளிலும் அமைத்துக் கொள்கின்றனர். பருவகாலத்திற்குத் தக்கவாறு கூடார மேல் விரிப்பின் (Cover of tent) தடிப்பையும் (thickness) எண்ணிக் கையை அதிகமாக்கிக் கொள்வதுண்டு.

வீட்டின் அமைப்பை நிர்ணயம் செய்வதில் காலநிலைக்கு உள்ள செல்வாக்கை அறியப் பல வழிகள் உள்ளன: அவற்றில் குறிப்பிட்ட கால நிலையின் தன்மையை அறிந்து அதற்கேற்ற கட்டடப் பொருள்களையும், அமைப்பையும் ஆராய்வது ஒரு வழியாகும். அதாவது வெப்பப் பாலைவனம் குளிர்பாலைவனம், பூமத்திய ரேகைப்பகுதி, மிதவெப்ப மண்டலம், ஆர்க்டிக் போன்ற பகுதிகளின் காலநிலையை நன்கு ஆராய்ந்து, அந்த அந்தக் காலநிலைகளுக்கு என்னென்ன பொருள்களால் எந்த அமைப்பில் வீட்டைக் கட்டுதல்வேண்டும் என்பதை அறிவதா கும். இதைத் தவிர்த்துப் பலவித அமைப்புகளை அந்தந்தக் கால நிலைக்கு ஒப்பிட்டுப் பார்ப்பதும் மற்ருெரு வழியாகும்.

காற்றின் வெப்பம், கதிர்வீச்சு (radiation), ஈரப்பதம், காற்றின் அசைவு, மழை, பனி முதலானவை மனித உடல் நலத் தைப் பாதிப்பவையாகும். மனிதனுக்கு நலம் ஏற்படவேண்டு

மெனில், இந்த காலநிலைக் கூறுகளின் தூண்டுதல்களுக்கு (Stimuli) இடையில் ஒருவகைச் சமநிலை (balance) இருத்தல் அவசியமாகும். ஆனால், இயற்கையில் இத்தூண்டுதல்களுக்கிடையே சமநிலை காணப்படுவதில்லை. அதனால் மனித உடல் அதிக வெப்பத்தினாலோ, அதிகக் குளிரினாலோ துன்பப்பட நேரிடுகிறது. எனவே, நாம் கட்டிக்கொள்ளுகின்ற வீடுகள் நம்முடைய உடல் அதிக வெப்பத்தினாலோ, அல்லது குளிரினாலோ துன்பப்படாத வகையில் அமைக்கப்படுகிறது, இத்துடனில்லாமல், குளிர், வெப்பம், வெப்பக்கதிர்வீச்சு, காற்று ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ளும் பொருள்களே கட்டடங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை, எவ்வாறு கட்டடங்களின் அமைப்புக்குக் காரணமாக இருக்கின்றன என்பதை இனி காண்போம்.

வெப்பம்:

வெப்பப் பாலைவனங்களில் பகலில் அதிக வெப்பமும், இரவில் கடுமையான குளிரும் காணப்படுகிறது. எனவே, இங்கு வெப்பத்தை எளிதில் கடத்தாத பொருள்களே கட்டடங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதிக வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளும் சேறு, கல் போன்றவைகளே மிகவும் பரவலாகக் கட்டடங்களுக்குப் பயன்படுகின்றன. இப்பொருள்கள் பகலில் வெப்பத்தை ஏற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல் (absorb) இரவில் அதைவெளியேற்றவும் செய்கின்றன. ஆகவே, வீட்டிற்குள் பகலில் வெப்பம் குறைந்தும், இரவில் அதிகமாகவும் காணப்படுகிறது. சில இடங்களில் வீடுகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாகவும், சூரிய ஒளி குறைவாகப் படுகிற விதத்திலும் அமைக்கப்படுகின்றன. சில பகுதிகளில் வீட்டிற்குள் வெப்பம் அதிகரிக்காமலிருக்கச் சமையலறை திறந்தவெளியில் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் வீட்டிற்குள்ளிருந்து இரவில் வெப்பம் வெளியேறாமலிருக்க, வீட்டின் ஜன்னல்கள் (Windows) மிக உயரத்திலும், சுவர்களுக்கு வெள்ளை அல்லது வெளிறின வண்ணமும் பூசப்பட்டுக் காணப்படுகிறது. இரவில் வெப்பத்தை அதிகரிக்க அமெரிக்கா, தெற்கு டியுனிசியா (Tunisia), லோயர் (Loire) பள்ளத்தாக்கு, தென்மேற்கு பிரான்சு போன்ற பகுதிகளில், வீடுகள் ஓங்கல் (Cliff) சரிவுகளில் அமைந்திருக்கின்றன. இதே காரணத்திற்காக எகிப்திலுள்ள சிவா (Siwa), சீனாவிலுள்ள ஷான்சி (Shansi), இஸ்ரேல், கலிபோர்னியா போன்ற இடங்களில் வீடுகள் பூமிக்கு அடியில் (Under ground) கட்டப்பட்டிருக்கின்றன. சஹாராவிலுள்ள மட்மடா (matmata) பூமியடி வீடு

களின் அறைகள் சுமார் முப்பது அடி ஆழத்தில் அமைந்துள்ளன. இங்கு இரவில் வெப்பம் கிடைப்பதோடு, பகலில் பூமிக்கு மேலிருப்பதைவிடக் குளிர்ச்சியாகவும் இருக்கிறது. ஆனால், ஆப்பிரிக்காவுள்ள அஷான்டி (Ashanti) பகுதியில் பனைமரத் துண்டுகள் கிடைத்தபோதிலும், குடிசைகள் மண்ணாலேயே கட்டப்பட்டிருக்கின்றன. இங்கு, வீடுகளின் கூரை கூட, கனத்த மண்ணால் வேயப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பண்பாட்டின் காரணமாக இந்த அமைப்புக் காணப்படுகிறது.

வெப்பத்தைக் குறைப்பதற்காகச் சில இடங்களில் இரட்டைக் கூரை (double roof) அமைக்கப்படுவதுண்டு. காமரூன் (Cameroon) பகுதியில் வாழும் மசா (Massa) நைஜீரிய பீடபூமியில் வசிக்கும் பாச்சி (Banchi) ஆகிய இனத்தவர்களின் குடிசைகளில் இரட்டைக்கூரை வேயப்பட்டிருக்கிறது. இதேபோல் இந்தியாவில் ஒரிசாவிலும் இத்தகைய இரட்டைக்கூரை வீடுகள் காணப்படுகின்றன.



படம் : 35 ஒரிசாவில் காணப்படும் இரட்டைக்கூரை

ஒரிசாவிலுள்ள குடிசைகளில் மண்கூரைக்கு மேல் சிறிது இடைவெளிவிட்டு ஓலைக்கூரை வேயப்பட்டுள்ளது. இந்த இடை-

வெளியில் காற்று செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. மேற்பகுதியில் காணப்படும் ஓலைக்கூரை மழைக்காலத்தில் மழைநீரைவடித்து அதனடியில் இருக்கும் மண்கூரையைக் காக்கிறது. வெயிலில் அது மண்கூரைக்கு நிழலும் தருகிறது. மண்கூரை குளிர்காலத்தில் வெப்பத்தைத் தேக்கி வைக்கிறது. அதே சமயத்தில் இது கோடையில் குளிர்ச்சியையும் தருகிறது. இவ்விரண்டு கூரைகளுக்கும் இடையே உள்ள பகுதியில் காற்றுச் சென்று கோடைகாலத்தில் வீட்டிற்குள் வெப்பம் பரவாமல் தடுக்கிறது. ஒரிசாவிலுள்ள காலநிலைக்கு ஓலைக்கூரையே போதுமென்றாலும், வெப்பத்தைக் கட்டுப்படுத்துகின்ற சிறப்புத் தன்மைகளால் மண்கூரையும் அமைக்கப்படுகிறது. (படம் : 35)

பூமத்தியரேகைப் பகுதியில் வெப்பமும், மழையும் மிக அதிகமாகவும், காற்றில் ஈரப்பதம் மிகுந்தும் காணப்படுகிறது. இது தவிர இங்கு வெப்ப வியாப்தி (range of temperature) குறைவாகவும், வெப்பக் கதிர்விச்சு (radiation) அதிகமாகவும் காணப்படுகிறது. ஆகவே, இங்குள்ள மக்களுக்குத் தேவைப்படுவதெல்லாம், அதிகபட்ச நிழலும், குறைந்தபட்ச வெப்பமுமேயாகும். வெப்ப வியாப்தி குறைவாக இருப்பதினால், வெப்பத்தை அதிகப்படுத்தும் அமைப்புகளும், கனமான சுவர்களும் இங்கு அவசியமற்றவை. உடலின் வெப்பத்தைக் குறைப்பதற்கு வீட்டிற்குள் காற்றோட்டம் மிக அவசியமாதலால், கனமான சுவர் எழுப்பப்படுவதில்லை. இங்கு வீட்டின் அமைப்புகளும், தேவைகளும் வரண்ட பகுதிகளுக்கு நேர் எதிராக இருக்கின்றன. இங்கு வீடுகள் யாவும் திறந்த அமைப்பைக் கொண்டிருக்கின்றன. அவை குறுகலான அமைப்பு (narrow geometrical shape) கொண்டதோடு அல்லாமல் தனித்தனியாகவும் காணப்படுகின்றன. இத்தகைய காலநிலை கொண்ட இடங்களில் காணப்படும் வீட்டு அமைப்புக்கு ஃபிளாரிடாவிலுள்ள (Florida), செமினோல் (Seminole) இனத்தவரின் வீடுகளைச் சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். (படம்: 36) இந்த வீடுகளில் கூரைதான் மிகமுக்கியமான பகுதியாக கருதப்படுகிறது. ஏனெனில் அதன் அமைப்பு காலநிலைக்கு ஏற்றவகையில் காணப்படுகிறது. கூரைகள் பொதுவாகப் பெரியதாகவும், நீர் புகாத பொருள்களாலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. கனத்த மழை (torrential rain) பெய்தால் நீர் எளிதில் வடிவதற்கும், சூரியனின் கதிர்கள் உள்ளே புகாமலிருப்பதற்கும் கூரைகள் மிகுந்த சரிவுடையதாக (Steep stope) அமைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே வெப்பம் அதிகரிக்காமல் இருக்கவும், எளிதில்



படம் : 36 பிளாரிடாவில் வசிக்கும் செமினேல் இனத்தவரின் மேடைவீடு. (*Stilt home*)

வெளியேறவும் ஏற்ற வகையில் திறந்த அமைப்புடையதாக அவை இருக்கின்றன. இவை தவிர, வீட்டின் தரைமட்டம் பூமியிலிருந்து சுமார் 3 அடி உயரத்திலேயே அமைக்கப்படுகிறது. இதனால், வீட்டிற்குள் நல்ல காற்று வீசுவதற்கு வழி ஏற்படுகிறது. மேலும் வெள்ளத்திலிருந்தும் மிருகங்களிடமிருந்தும்: பெரிய பூச்சிகளிடமிருந்தும் காத்துக் கொள்ளுவதற்கும் பயன்படுகிறது. மலேயா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலும் இத்தகைய திறந்த மேடைவீடுகள் (Stilt house) காணப்படுகின்றன.

கொலம்பியாவில் இத்தகைய காலநிலையில் மிகவும் குறைவான பொருள்களைக் கொண்டு கட்டப்பட்ட குறைந்தபட்ச உறைவிடம் (minimum shelter) ஊஞ்சல் படுக்கையாகும் (Hammock). இந்த ஊஞ்சல் படுக்கை இரண்டு கழிகளுக்கிடையில் கட்டப்பட்டிருக்கும். இதற்குமேல் தழைகளால் வேயப்பட்ட கூரை காணப்படுகிறது. வீட்டுப் பொருள்களான கூடையும், குடுவையும் கழிகளிலேயே தொங்கவிடப்படுகிறன. ஊஞ்சலில் படுத்துக் கொண்டு ஆட்டிக் கொள்வதால் உடலுக்கு நன்றாகக் காற்று வீசுகிறது.

குளிர் பாலைவனங்களிலும், வரண்ட வெப்பப் பாலைவனங்களில் காணப்பட்டது போலவே வெப்பத்தை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகள் அடிப்படையில் ஒன்றாகவே கையாளப்படுகின்றன. இங்கு அதிகக் குளிர் காணப்படுவதாலும், குளிர் காலம் நீண்டு இருப்பதாலும் வெப்பத்தை அதிகரிக்கச் செய்யும் முறையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. குளிர்பகுதியிலும், வெப்பப் பகுதியிலும் வெப்பத்தைப் பாதுகாக்கும் அமைப்புக் காணப்படுகிறது. ஆனால் குளிர்பகுதியில் வெப்பம் வீட்டுக்குள்ளிருந்து வெளிப்படுகிறது; வெப்பப் பகுதியில் அது சூரியனிடமிருந்து வருகிறது. எனவே, வரண்ட பகுதியில் வெப்பம் வெளியிலிருந்து உள்ளே வராமல் தடுக்கப்படுகிறது. குளிர் பகுதியில் உள்ளேயிருந்து வெப்பம் வெளியே போகாமல் காக்கப்படுகிறது. குளிர்பகுதியில் வீட்டிற்குள் வெப்பத்தைக் கூடிய மட்டும் அதிகரிக்கச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வீட்டின் நடுவில் விளக்கு அல்லது அடுப்பு உள்ளது. இது தவிர வீட்டின் அமைப்பும், வெப்பம் வெளியேறாத வகையில் நெருக்கமாகவும், சிறியதாகவும் காணப்படுகிறது. இவற்றில் வெப்பத்தைக் கடத்தாப் பொருள்களே மனை கட்டும் பொருள்களாகப் (building materials) பயன்படுகின்றன. அதனால் தான் வெப்பத்தைக் கடத்தாத பனிக்கட்டிகள் கூரைக்குமேல் பொருத்தப்பட்டுள்ளன. வரண்ட வெப்பப் பகுதிகளுக்கு மாறாக இங்கே சுவர்களுக்கு அடர்த்தியான வண்ணம் அல்லது கருப்பான வண்ணம் பூசப்படுகிறது. குளிர் பகுதிகளை விவரிக்கும்



படம்: 37 இக்லூ வீட்டின் உட்புறத் தோற்றம், குளிர்காற்று உள்ளே புகாதவாறு நுழைவாயில் அமைந்திருப்பதைக் காண்க.

போது எஸ்கிமோக்களின் இக்லூ (igloo) வீட்டைப்பற்றி குறிப்பி டாமல் இருக்கமுடியாது. மத்தியப் பகுதியில் வாழும் எஸ்கிமோக் களின் வீடுகளில் கடுமையான குளிர்காற்றைத்தாங்கும் வகையில் வரண்ட பனிக்கட்டிகள் (dry snow) பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், கிரீன்லாந்து, அலாஸ்கா போன்ற பகுதிகளில் வாழும் எஸ்கிமோக்களின் குளிர்கால வீடுகள் கற்களாலும், உரோமத் தாலும் கட்டப்பட்டிருக்கின்றன. இவர்கள் வேட்டையாடும் இரவுகளில் மட்டுந்தான் இக்லூ (igloo) வீட்டைப் பயன்படுத்து கிறார்கள். இந்த வீடுகளின் அமைப்பு, குளிர்காற்றைத் தாங்கிக் கொள்ளும் விதத்திலேயே காணப்படுகிறது; குறைந்த பரப்பில் அதிகமான கொள்ளளவு (Capacity) கொண்டதாக இவர்களு டைய வீடுகள் வட்டமாக அமைந்துள்ளன.

ஈரப்பதம் :

உடல்நலத்தைப் பாதிக்கின்ற காலநிலைக்கூறுகளில் ஈரப்பதம் (Humidity) ஒன்றாகும். ஈரப்பதம் வெப்பமும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஈரப்பதமும் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பின் உடல் நலம் கெடுகிறது. எனவே, உடலுக்கு ஏற்ற வகையில் ஈரப்பதத்தை அதிகமாக்கிக் கொள் ளவோ குறைத்துக் கொள்ளவோ வீடுகளில் செயற்கை அமைப் புகள் காணப்படுகின்றன. ஈரப்பதம் அதிகமாக இருப்பின் உட லின் வெப்பம் அதிகரித்துக் காணப்படும். அப்பகுதிகளில் வீடு களில் சன்னல்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளன. இதன் மூலம் உடலின் வெப்பத்தைக் குறைத்துக் கொள்ள முடிகிறது. இதேபோல் ஈரப்பதம் குறைவாக உள்ள இடங்களில் தாவரங் களும் நீர் நிலைகளும் ஈரப்பத்தை அதிகமாக்குகின்றன. வீடுகளில் சில சமயங்களில் ஈரப்பதத்தை அதிகமாக்குவதற்காக சன்னல் களின் திரைச் சீலைகளில் நீரைத் தெளித்துவைப்பதுண்டு. மேலும், மண்பாண்டங்களில் நீரை வைத்திருந்தாலும் கண்ணுக் குத் தெரியாத நுண்ணிய துவரங்கள் வழியாக நீர் ஆவியாக்கப் பட்டு அறையின் ஈரப்பதம் அதிகமாகிவிடுகிறது.

காற்று :

வெப்பத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட காலநிலைக் கூறுகளில், காற்றும் ஒன்றும். உடல் நலத்திற்கு ஏற்ற காலநிலை எது என்பதை அளந்து அறிவதற்குக் காற்றின்வேகம், ஈரப்பதம், வெப்பம் ஆகியவை அடிப்படையாகக் கொள்ளப் படுகிறது. சில சமயங்களில் உடல் நலத்திற்காக விரும்பப்படும்

காற்று குளிர்மிகுந்த சமயங்களிலும் வரட்சி மிகுந்த சமயங்களிலும் விரும்பப்படுவதில்லை. ஆனால், வெப்பமும் ஈரப்பதமும் அதிகமாகின்ற பருவங்களில் காற்று மிகவும் அவசியமாகிறது. எனவே, காற்றின் தேவையைப் பொறுத்து வீடுகளுக்குக் குறிப்பிட்ட அமைப்பு ஏற்படுகிறது. ஆஸ்திரேலிய பழங்குடிகள், மலேயாவில் வாழும் செமாங் (Semang) இனத்தவர், மற்றும் அமெரிக்க இந்தியர்கள் யாவரும். பழங்காலத்தில் காற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தோல் (Skin) அல்லது மரக்கிளையினால் செய்யப்பட்ட காற்றுத்தடுப்பைப் (wind break) பயன்படுத்தி வந்தார்கள். எஸ்கிமோக்களும், மங்கோலியர்களும் வாழுகின்ற பகுதிகளில் குளிர்காலத்தில்காற்று மிகவும்கடுமையாக வீசுகிறது. எஸ்கிமோக்களின் இக்லூ வீடும், மங்கோலியர்களின் யர்ட் (yurt) கூடாரமும் இந்தக் கடுமையான குளிர்காற்றைத் தடுத்து தாங்கிக் கொள்ளக்கூடிய அரைக்கோள (hemisphere) அமைப்பையே பெற்றிருக்கின்றன. (படம் 38) எஸ்கிமோக்களின் குடியிருப்புகளும் மத்திய ஆசியாவின் இடையர்களின் குடியிருப்பைப்போல் மிகுந்த பாதுகாப்பான தலத்தில் நிறுவப் படுகின்றன. எஸ்கிமோக்கள் தங்கள் குடியிருப்பை மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் நிறுவுகின்றனர். இவர்களுடைய இக்லூ வீடுகள் மிகுந்த பாதுகாப்பான இடத்திலேயே அமைந்துள்ளன ; கடலுக்கும் ஓங்கலுக்கும் இடையிலுள்ள மணற்பகுதியில் கடலை நோக்கியவாறு வீடுகள் அமைந்துள்ளன. இக்லூ வீட்டிற்குள்செல்லச் சுரங்கம் போன்ற வழி உள்ளது இந்தச் சுரங்கப்பாதை வளைந்து காணப்படுவதற்குக் காரணமே காற்று உள்ளே வராமல் தடுப்பதற்காகத்தான். இதன் வாயிற்படியும் காற்றின் திசைக்கு இணையாக இருப்பதால் காற்று, நேரே உள்ளே வருவதில்லை.

தெபி (Tepee) இனத்தவர்களின் கூடாரங்களை விரிக்கவும் சுருக்கவும் முடியுமாதலால் காற்றுத்தேவையான காலத்தில் அகலப்படுத்திக் கொள்ளவும் தேவையற்ற (குளிர்) காலத்தில் சுருக்கிக்கொள்ளவும் முடிகிறது. நார்மண்டியிலுள்ள (normandi) பண்ணை வீடுகளில் சாதரணமாக ஓலைக்கூரைகள் காணப்படுகின்றன. இவை கவிழ்த்துவைக்கப்பட்ட கப்பலின் முனைபோன்று காட்சியளிக்கும். சில இடங்களில், காற்றைத் தடுத்துக்கொள்ள வேறு வகையான அமைப்புகள் காணப்படுகின்றன, கானடா, மெக்சிகோ, அயர்லாந்து, டிரைஸ்டன் டி குன்ஹா (Tristan de cunha) போன்றபகுதிகளில் புயற்காற்றுலிருந்து (gales) பாதுக்காத்துகொள்ள வீடுகளைப்பாதிக்குமேல் பூமியில் புதைத்துக் கட்டு



படம் : 38

வீட்டின் அமைப்பும் காற்றும்:

(அ) (ஆ) குளிர்காற்றை எளிதில் கடத்துவதற்காக இக்லூ யர்ட் போன்றவற்றின் கூரை. அரைக்கோள (hemisphere) வடிவத்தில்உள்ளது.

(இ) பிராவென்ஸ் (Provence) பகுதியில் வடக்கிலிருந்து வீசும் குளிர்ந்த மிஸ்ட்ரல்(mistral) காற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள, சரிவுகளில் வீடு கட்டப்படுகின்றன.

கிறார்கள். பிராவென்ஸ் (provence) பகுதியில் வடக்கிலிருந்து மிஸ்ட்ரல் (mistral) குளிர்காற்றுவீசுகிறது. இங்கு மலைச்சரிவுகளில் குழிகளை வெட்டி வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். இந்த வீடுகளுக்கு வடக்குச்சுவர் மிக உயரமாகவும், தெற்குச் சுவர் உயரம் குறைந்தும் காணப்படுகிறது. இந்த அமைப்பில் வடக்கிலிருந்து வீசும் குளிர்காற்று, வீட்டை எளிதில் கடந்துவிடுகிறது. வடக்குச் சுவரில் சன்னல்களோ, வேறுநிறப்புகளோ இல்லை. ஆனால், அதற்கு மாறாகத்தெற்குச் சுவரில் நிறையச் சன்னல்கள் காணப்படுகின்றன. ஸ்விட்சர்லாந்தில் சில இடங்களில் வீடுகளுக்கு அருகில் காற்றுவீசும் திசையில் மரங்களைவளர்க்கிறார்கள். இதனால் குளிர்காற்றின் தாக்குதல் தவிர்க்கப்படுகிறது. இவை தவிர, இங்குச் சில இடங்களில் வீடுகளுக்கு முன்பக்கமாகக் காற்றுத் தடுப்புக் கம்பங்கள் (wind boles) நடப்படுகின்றன. இக்கம்பங்கள் வீசும்காற்றைச் சிதறச் செய்து விசையைக் குறைக்கின்றன.

மழை :

மழையின் விளைவால் கட்டடங்களுக்குத் தனிபட்ட அமைப்புத் தேவைப்படுகிறது. வரண்ட பகுதிகளில், மழை நீரைச்சேகரிப்பதும், அதை ஆவியாகாமல் தடுப்பதும் அவசியமாகும். எனவே கரீபியன் (caribbean) தீவுகளிலும், இத்தாலியிலுள்ள ட்ரூலிப் (Trulli) பகுதியிலும் வீடுகளுக்குக் கீழ் மட்டத்தில் நீர்த்தொட்டிகள் கட்டப்படுகின்றன. இத்தொட்டிகளில் மழைநீர் சேமித்து வைக்கப்படுகிறது. ஈரப்பதம் நிறைந்த வெப்பப் பகுதிகளில் திண்ணை அல்லது முற்றம் இருப்பதால், மழைக் காலங்களிலும், வீட்டின் சன்னல்களைத் திறந்து வைத்திருக்கமுடியும். இங்கு அமைக்கப்படும் திண்ணை வீட்டின் காலநிலையை மாற்றியமைக்கின்ற முக்கிய காரணியாகும். தென்ஆப்பிரிக்காவிலுள்ள நேட்டால் (natal) பகுதியில் வாழும் பழங்குடிகளின் வீடுகளில் மழைதான் வீட்டின் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணியாக விளங்குகிறது. இங்கு வீடுகள் இலேசான கொம்புகளால் கட்டப்பட்டு முடைந்த பாயினால் மூடப்பட்டிருக்கும். இவ்வாறு பின்னப்பட்ட இழைகள் வரண்டகாலத்தில் சுருங்குவதால் துவாரங்கள் சில ஏற்பட்டு காற்றுச்செல்வதற்கு வழி ஏற்படுகிறது. ஆனால், மழைக்காலத்தில் இவ்விழைகள் நீரில் நனைந்து விரிவடைவதால் இத்துவாரங்கள் அடைபட்டு போகின்றன. இப்போது, பாயும் நீர் புகமுடியாத இயல்பைப் பெற்றுவிடுகிறது.

ஒளியும் வெப்பக் கதிர்வீச்சும் :

ஒளியும் வெப்பக் கதிர்வீச்சும் வெப்பப் பகுதிகளில் விரும்பப் படாதவை; எனவே அவற்றைத் தடுப்பதற்காக பல்வேறு அமைப்பு முறைகள் கையாளப்படுகின்றன. குறிப்பாக, குளிர் பகுதிகளில் குளிர்காலத்தில் ஒளியும் கதிர்வீச்சும் மிக அவசியமாகிறது. ஆனால் வரண்ட வெப்பப் பகுதிகளில் சூரியனின் நேரான கதிர்வீச்சைத் தடுக்கக்கூடிய முயற்சிகள் மட்டும் மேற்கொள்ளப் படுகின்றன. அதாவது, வட ஆப்பிரிக்காவில் காணப்படுவது போல் வீடுகளுக்குக் குறைந்த சிறிய சன்னல்களும், ஸ்பெயின், இத்தாலி போன்ற பகுதிகளில் காணப்படுவதுபோல் கருநிறமான கதவுகளைக் கொண்ட சன்னல்களும் இதற்குச் சான்று; சூரிய வெப்பத்தைவிட சூரியனின் கதிர்களால் ஏற்படும் கண் கூசுதலைத் (glare) தடுக்க அயனமண்டல ஈரப்பகுதிகளில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்குச் சுவர்கள் சில சமயங்களில் காற்றின் திசையில் அமையாமல் சூரியனின் கதிர்களைத் தடுப்பதற்காக வேறு திசையில் அமைக்கப்படுகின்றன. மலேயாவில் பெரிய நீண்ட வராந்தா இருப்பதால் வெயில், மழை, காற்று ஆகியவைகளால் ஏற்படும் தொல்லைகள் தவிர்க்கப்படுகின்றன.

வீட்டின் அமைப்பைத் தீர்மானிக்கும் காரணிகளில் காலநிலை மிக முக்கியமானதாகக் கருதப்பட்டாலும், ஒரே காலநிலையின் கீழ் பலவித வடிவங்களுடைய குடியிருப்புகளை நாம் காணும் போது, காலநிலையைவிட வலிமையான காரணிகள் வேறு இருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது. உதாரணமாக, பழைய டெல்லியும், புதுடெல்லியும் ஒரே பகுதியில் ஒரே காலநிலையின் கீழ் இருந்தபோதிலும் இவை இரண்டின் வடிவமும், கட்டடங்களின் அமைப்புகளும் முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. இங்கு, காலநிலையைவிட மக்கள் பண்பாடே வலிமையான காரணியாக உள்ளது. உறைவிடத்தின் அவசியந்தான் வீடுகளுக்கு அமைப்பைத் தருகின்றன என்ற கருத்தும், சிலசமயங்களில் வலி விழந்து விடுகின்றன; மனிதனுக்கு உறைவிடம் அவசியம் என்பது பொதுவான உண்மையானாலும், தென்கிழக்கு ஆசியா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள பழங்குடிகளுக்கு தற்காலத்திலும் வீடுகள் இல்லை. குறிப்பாக டியராடெல் பியூகோவில் (Tierra del Fuego) உள்ள ஒனு (Ona) பழங்குடியினருக்கு வீடுகள் என்பது கிடையா. ஆர்க்டிக்கின் காலநிலையைக் கொண்ட இப்பகுதியில் வாழும் இவர்களுக்கு வீடுகட்டத் தெரி

யும் என்பதை இங்கு காணப்படும் சமய வழிபாட்டிற்குரிய கூம்புக் கூடாரங்களிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். இருந்த போதிலும் இவர்களுக்குக் காற்று தடுப்புதான் உறைவிடங்களாக உள்ளன. சில இடங்களில் காலநிலையைவிட சமயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் வீட்டிற்குள் செய்யப் படவேண்டிய சமையல், பிள்ளைபேறு போன்றவைகளும் திறந்த வெளியில் நடைபெறுகின்றன. கடுமையான காலநிலை கொண்ட ஆர்ச்டிக் போன்ற பகுதிகளிலுள்ள வீடுகளின் அமைப்புகளும் இனத்திற்கு இனம் வேறுபடுகிறது. இந்தப் பகுதியில் வசிக்கும் எஸ்கிமோக்களின் வீட்டிற்கும், ஆதபாஸ்கான் (Athabascan) வீட்டிற்கும் இடையே, அமைப்பில் வேறுபாடுகள் காணப் படுகின்றன. மேலும், வீட்டின் அமைப்புக்குக் காலநிலைதான் காரணமாக இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வதில் சிறிது தயக்கமும் இருக்கிறது. ஏனெனில், எஸ்கிமோக்களின் குளிர் கால வீட்டிற்கும் (இக்லூ) கோடைகால கூடாரத்திற்கும் இடையே அமைப்பில் எவ்வித மாறுதலும் இல்லை. வெவ்வேறு காலநிலையின் கீழ் அவர்கள் வசிக்க நேர்ந்த போதிலும் வீட்டின் அமைப்பு ஒரே மாதிரியாக நடுப்பகுதியில் இடைவெளியும், அதிலிருந்து வட்டமாகச் சுற்றிலும் நீண்ட அறைகளும் கொண்டே காணப்படுகின்றன. அதே சமயத்தில் இதே காலநிலையின்கீழ் வசிக்கும் வேறு இனத்தவரின் வீடுகள் இம்மாதிரி இல்லை. எனவே, இங்கு வீடுகளின் அமைப்பிற்குப் பண்பாடுதான் காரணமாகிறது. அதேசமயத்தில் ஆர்க்டிக் வீடுகளின் அமைப்பு, காலநிலையினால் ஏற்பட்டதன்று என்பதாக முடிவெடுக்க முடியாது. ஏனெனில், இப்பகுதியில் காணப்படுவதுபோல் வட்டவடிவ வீடுகள்தாம் வெப்பத்தை நீடித்திருக்குமாறு செய்கின்றன. சிறிய தீப்பந்தமானாலும், அதிலிருந்து வெளிப்படும் வெப்பம் இரவு முழுவதும் அந்த அறைக்குள் நீடித்திருக்கிறது.

சிற்சில சமயங்களில் காலநிலையைவிடப் பொருளாதாரம் வீட்டின் அமைப்பை நிர்ணயிப்பதுண்டு. மக்கள் செய்யும் தொழிலைப் பொறுத்து வீடுகள் அமைப்பைப் பெறுகின்றன. உதாரணமாக மிசௌரி நதிப் பள்ளத்தாக்கிலுள்ள ஹிடாட்ஸா (Hidatsa) வகுப்பினர் விவசாயத்தை மேற்கொண்டிருப்பவர்கள். இவர்கள் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலும் கம்பு, பட்டாணி, துவரை போன்ற தானியங்களைப் பயிரிடுவார்கள். இக்காலத்தில் இவர்கள் மரத்தினாலான வட்ட வடிவ வீட்டில் வசிப்பார்கள். இந்த வீடுகள் சுமார் 30 முதல் 40 அடி விட்டமும், 5 அடி உயரமுள்ள மரச் சுவர்களாலும், 14 அடி உயரமுள்ள நான்கு தூண்களுடன்

னும், மண், புல் ஆகியவற்றால் வேயப்பட்ட கூரைகளுடனும் காணப்படும். இந்த வீடுகள் பெரிய கிராமங்களில் பல பரம் பரைகளாகத் தொடர்ந்து இருக்கும். ஆனால், டிசம்பர் முதல் மார்ச் மாதம்வரை இவர்கள் எருதுகளை வேட்டையாடிப் பிழைப்பு நடத்துவார்கள். இக்காலத்தில் இவர்கள் டெபீ (Tepee) வீடுகளில் வசிப்பார்கள். ஆகவே, இருவிதமான வாழ்க்கை முறைகளுக்கு இருவித வீட்டமைப்புகள் காணப்படு கின்றன. இந்த மாறுதலுக்கு அடிப்படையாக விளங்குவது இவர்களுடைய தொழில் அல்லது பொருளாதாரமாகும்.

மேற்கு அமேஸான் (Amazon) பகுதியில் வாழும் போரே (Boro) போன்ற பழங்குடிகள் தற்காலத்திலும் நீண்ட வீடுகளில் வசிக்கிறார்கள். இந்த நீண்ட வீடுகளின் சுவர்களும் கூரையும் மிகவும் தடித்த அமைப்புள்ளவை. இங்குக் காணப்படும் வெப்ப மான, ஈரப்பதம் நிறைந்த காலநிலைக்குத் தேவையான காற்றுப் போக்கி அல்லது சன்னல்களோ இந்த வீடுகளில் அமைக்கப்பட வில்லை. கிருமிகளைத் தடுப்பதற்காக அமையப்பட்டதென் றாலும், காலநிலைக்கும் வீட்டமைப்பிற்கும் சற்றும் பொருத்த மற்றதான நிலையையே இங்குக் காண்கிறோம். ஆகவே, இந்த நீண்ட வீடுகள் இந்தக் காலநிலையின் சூழ்நிலையால் ஏற்பட்டதாக இருக்கமுடியாது. வேறு எங்கிருந்தாவது வந்த இனத்தவரிட மிருந்து இந்த அமைப்பை இவர்கள் பின்பற்றியிருக்கக்கூடும். இதேபோல் பெருவில் உள்ள ஈகிடோஸ் (Iquitos) பகுதியைச் சுற்றியுள்ள காடுகளில் காணப்படும் திறந்த வீடுகளைப் போலவே இந்நகரிலுள்ள வீடுகளும் காணப்படுகின்றன. ஆனால், இக்காட்டி லுள்ள வீடுகளைப் போல் அல்லாமல் இவற்றைச் சுற்றிலும் சுவர்கள் எழுப்பப்பட்டுப் பாதுகாப்பாக அமைந்துள்ளது. இந்த வெம்மையான காலநிலையில் சுவர்கள் அமைப்பதால் காற்று வசதி குறைந்தாலும் புதிய நாகரிகத்தை அடைந்துவிட்ட பெருமை இவர்களுக்குக் கிடைக்கிறது. ஒரு நாட்டின் வீட்டமைப்பு வேறு நாட்டவரின் குடியேற்றத்தால் மாறிவிடு வதும் உண்டு. ஜப்பானில், தங்கள் நாட்டு மரபை அடிப்படை யாகக் கொண்ட வீடுகள் அமைப்பில் வடக்கே உப ஆர்க்டிக் கிலுள்ள (sub-Arctic) ஹொக்கைடோ (Hokkaido) விலிருந்து. தெற்கே உப அயன மண்டலத்திலுள்ள (sub tropical) கியுஷீ (kyushu) வரை ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன. தெற்கி லிருந்து வடக்கே குடியேறியபோது ஜப்பானியர்கள் தங்க

ளுடைய வீடுகளை மரபிற்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டனர். இவர்களுடைய குடியேற்றத்தால் வடக்கில் வாழ்ந்துவந்த அய்னு (Ainu) என்ற முதற்குடிமக்களும் கனத்த சுவர்கள் கொண்ட தமது வீடுகளை மாற்றிவிட்டு, ஜப்பானியர்களைப்போல் எளிதில் உடையக்கூடிய வீடுகளை அமைத்துக் கொண்டனர். ஜப்பானியர்களின் வீடுகள் கோடையில் மட்டுந்தான் வசதியாக இருக்கின்றன. குளிர்காலத்தில் அவை பொருந்தாதவை; கோடையில் பொருத்தமாக இருந்தாலும், இரவில் சன்னல்களை, திருடர் பயத்தின் காரணமாக அவர்கள் மூடிவிடுகிறார்கள். இரவில் இவ்வாறு சன்னல்களை மூடுகின்ற பழக்கம் அவர்களின் சமூகப் பண்பாட்டையே வெளிப்படுத்துகிறது.

சமயக் கருத்துகள் கூட சில சமயங்களில் காலநிலைக்கு எதிரான அமைப்பை ஏற்படுத்தி விடுவதுண்டு. கம்போடியா. சாம்ஸ் (chams) போன்ற இடங்களில் மரத்தின் நிழல் விழுவதை துரதிருஷ்டமாக கருதுகிறார்கள் எனவே. வீடுகளும் தெருக்களும் சூரியனைப் பார்த்தவாறு சூரிய ஒளி படும்படி அமைந்திருக்கின்றன. இங்கு மரங்களை வளர்ப்பதே கிடையாது. மேலும் மரத்தின் வேர்கள் வீட்டின் கீழ் ஊடுருவிச் செல்வதையும் அவர்கள் கெட்ட சகுனமாகக் கருதி மரங்களை வளர்ப்பதில்லை. பிஜி (Fiji) மலேயா, ஜப்பான் போன்ற இடங்களில் மக்கள் காலநிலைக்குப் பொருந்தாத வீடுகளில் வாழ்வதோடு மட்டுமல்லாமல் இப்போது அந்தப் பழைய மரபுடைய வீடுகளின் கூரைகளும் முற்றிலும் பொருந்தாத வகையில் மாற்றப்படுகின்றன. கூரைக்குத் தற்காலத்தில் கலாய் தகடுகளும் (galvanised iron sheets) ஆஸ்பெஸ்டாஸ் (asbestos) தகடுகளும் பயன்படுத்தப்படுகின்றன. புதுமையில் நாட்டம் கொண்டிருப்பதால் பல இடங்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன. பெருவில் கலாய் தகடுகளைப் பயன்படுத்தினால் சமூகத்தில் உயர்ந்த இடம் கிடைக்கிறது. மேலே சொல்லப்பட்டவை காலநிலைக்கு எதிராக இருந்தாலும் பழமையான வீடுகளும் குடியிருப்புகளும் அமைப்பில் காலநிலைக்குக் கட்டுப்பட்டே அமைந்தன.

காலநிலையின் தன்மைக்கேற்ப வீடுகள் அமைப்பைப் பெறுகின்றன என்பது உண்மையானாலும் அது பழங்காலத்து வீடுகளுக்கே பொருந்தும்; விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுணுக்கம், கட்டடப் பொருள்கள் ஆகியவை பெருகாமல் இருந்த பழங்காலத்தில் காலநிலை மிகவும் வலிமை வாய்ந்த காரணியாக இருந்து வந்தது; மனிதன் இயற்கைச் சக்திகளுக்குக் கட்டுப்பட்டு

இயற்கையின் இயல்புக்கு ஏற்றபடி வசித்துவந்த அந்தக் காலத்தில் வேண்டுமானால், காலநிலைக்கு ஏற்றபடி வீட்டின் அமைப்பு மாறியிருந்தது என்று சொல்லலாம். ஆனால், தற்போது வளர்ந்துவிட்ட விஞ்ஞானமும், தொழில் நுணுக்கமும் முற்றிலும் புதிதான அமைப்புகளை, நமக்குத் தருகின்றன.



படம்: 39 (அ) சமோவன் (samoan) இனத்தவரின் வீட்டுத் தரை அமைப்பு
(ஆ) சமோவன் வீட்டின் பக்கவாட்டத்தோற்றம். சமோவன் இனத்தவரின் வீடுகள் காலநிலைக்கு ஏற்றவாறு குறைந்த கட்டடமைப்பைக் கொண்டிருக்கின்றன. இந்த வீடுகள் வட்ட வடிவத்தில் அமைந்து, கூம்பு போன்ற கூரையைக் கொண்டிருக்கின்றன. வீட்டின் தரை பவழப் பாறைகளை (Corals) அரைத்து மெழுகப்பட்டிருக்கிறது. இந்த வீடுகள் கல் மேடைமீது கட்டப்பட்டிருக்கின்றன.

13. கிராமத்தின் கட்டடமைப்பு
(Structure of village)

கிராமத்தையோ அல்லது பண்ணைக் குடியிருப்பையோ விரிவாக ஆராய்ந்தால் அதன் நிலவரைப்படம் (ground plan) கட்டடப்பொருள் (building material), கட்டடக்கலை (architecture) போன்றவற்றை அறிய முடிகிறது. இவை, இடத்திற்கு இடம் மாறியிருப்பதோடு மட்டுமன்றி, அவ்விடத்திற்கு ஏற்ற தனித் தன்மையையும் பெற்றிருக்கின்றன. உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் கிராமங்கள், பல்வேறு மரபுகளை அவற்றின் தனிப்பட்ட அமைப்பின் மூலம் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள மேய்ச்சல் நிலங்களில் வாழும் மசாய் (Masai) இனத்தவரின் கிரால் (Kraal) குடியிருப்பில் தேன்கூட்டைப் போன்ற (beehive) அமைப்புள்ள குடிசைகள் வட்டமாகக் காணப்படுகின்றன. சீனாவிலும் ஜப்பானிலும் சில மாவட்டங்களில் சதுர, செவ்வக அமைப்பில் கிராமங்கள் காணப்படுகின்றன. ஐரோப்பாவில் ஆற்றங்கரையிலும், சாலையோரங்களிலும் அமைந்த கிராமங்கள் நீள்வடிவத்தைப் பெற்றிருக்கின்றன. வேறு இடங்களில் இவை ஒழுங்கற்றதாகவும், வளைந்து செல்லுகின்ற குறுகிய தெருக்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. வேறு சிலவற்றில் சுற்றிலும் காப்புச் சுவர்களும், மற்றும் சிலவற்றில் சுற்றிலும் ஆலமரங்களும் காணப்படுகின்றன. இவை மட்டுமல்லாமல் கட்டடங்களும் தேவைக்கு ஏற்ப எண்ணிக்கையில் குறைந்தோ, அதிகரித்தோ காணப்படுகின்றன. அமெரிக்கப் பண்ணைக் குடியிருப்பில் எல்லாப் பகுதிகளிலும் ஏறத்தாழ ஒரே அமைப்பே காணப்படுகிறது. ஆனால், ஐரோப்பிய பண்ணைக் குடியிருப்பில் இவ்வாறு இல்லை. இருப்பினும் இந்த இரண்டு இடங்களிலும் பண்ணையில் பல்வேறு பணிகளுக்காக, பல கட்டடங்கள் தனித்தனியாகக் காணப்படுகின்றன. வசிக்கும் வீட்டைத் தவிர, தானியக் களஞ்சியத்தித்

கும், தொழுவத்திற்கும் தனித்தனி கட்டடங்கள் இங்கே உள்ளன. ஆனால் வேறு சில இடங்களில் இதற்கு மாறாக இவை அனைத்தும் ஒரே கட்டடத்தில் காணப்படுகின்றன.

கிராமத்தில் குடிசைகளைத் தவிர இரண்டு அல்லது மூன்று அடுக்குகளைக் கொண்ட மாடிக் கட்டடங்களும் காணப்படுகின்றன. இது போன்ற பல மாடிக் கட்டடங்கள் நிலவரைப் படிவத்தில் 'T' 'L' 'U' போன்ற வடிவத்தில் அமைந்து காணப்படுகின்றன. கட்டடங்களின் முன்புறத்தில் உள்ள முற்றம் (Court-yard) சில சமயம் சுவரினால் மறைக்கப்படுகிறது. இதன் உள்ளே செல்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இந்த முற்றத்தில் காணப்படும் எருக்குவியல் மக்கள் விவசாய நுணுக்கத்தை அறிந்துகொண்ட நிலையை எடுத்துக் காட்டுகிறது.

ஆசிய, ஆப்பிரிக்கக் கிராமக் குடியிருப்புகளில் மேற்கு நாடுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அமைப்புக் காணப்படுகிறது: இவைகளின் அமைப்பு ஒழுங்கற்றதாக இருப்பினும் குறிப்பிட்ட புறச் சூழ்நிலையின் சமூக, பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப இவை தோன்றியுள்ளன. கிராம அமைப்பும் அவர்களுடைய சமூகப் பொருளாதாரத் தன்மையை பிரதிபலிக்கிறது.

கிழக்கு ஆசிய கிராமங்கள் :

கிழக்கு ஆசிய கிராமங்களுக்கு எடுத்துக்காட்டாக சீனா, ஜப்பான், தென்கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளிலுள்ள கிராமங்களின் அமைப்பை ஆராய்வோம்.

சீனா :

பழைய காலமுதல் சீனாவில் நகரம், தலைநகரம் கிராமம் போன்ற பல்வேறு படிநிலைகளில் குடியுருப்புகள் காணப்பட்டன; கிராமங்களைத் தவிர பண்ணைக் குடியிருப்புகளும் ஆற்றினால் அரிக்கப்பட்ட (dissected uplands) மேட்டு நிலங்களில் சிதறலாக காணப்பட்டன. பெரிய கிராமங்கள் பெரும்பாலும் சதுர செவ்வக முறையில் அமைக்கப்பட்டிருந்தன. பழங்காலத்தில் இவற்றைச் சுற்றி மண்சுவர் எழுப்பப்பட்டிருந்தது. ஆனால், பல கிராமங்களில் இரட்டை வரிசையில் சாலைகளின் ஓரமாகவோ அல்லது லெவிக்களின் (levees) ஓரமாகவோ வீடுகள் அமைந்திருந்தன. இங்குள்ள வீடுகளைப் பொதுவாகக் கூரையைத் தாங்கும் பொருட்டு நான்கு கம்பங்களை நட்டு அதன் இடையில் ஈரமான மண்ணைக்கொண்டு வெயிலில் உலர்ந்த செங்கற்களையோ

அல்லது சூளையில் வேகவைத்த செங்கற்களையோ பயன் படுத்திச் சுவர் எழுப்புவார்கள். இந்த முறை மத்திய கிழக்கு ஆசியாவிலிருந்து பின்பற்றப் பட்டிருக்கக் கூடும். இம்முறை குறிப்பாக மரங்கள் அரிதாகக் கிடைக்கின்ற வறண்ட வண்டல் சமவெளிகள் கொண்ட வடக்குச் சீனாவில் பின்பற்றப்படுகிறது. இதே வீட்டு அமைப்பு முறையைச்சீனர்கள் உப அயனமண்டலப் பகுதிகளிலுள்ள காலனிகளிலும் மேற்கொள்ளத் தொடங்கினார் கள். ஆனால், அங்கு வீடுகளுக்கு மூங்கில்களையும் இவர்கள் பயன் படுத்தினார்கள். வடக்குச் சீனாவில் மண் சுவர்கள் பூச்சுவேலை ஏதும் இல்லாமல் அப்படியே விடப்பட்டிருக்கிறது. மத்திய சீனா வில் மண்சுவர்கள் களிமண்ணால் பூசி மெழுகப்பட்டிருக்கின்றன. தெற்குச் சீனாவிலும், செச்வான் (Szechwan) பகுதியிலும் சுவர் களுக்கு வெள்ளையடிக்கப்பட்டுள்ளது. சாம்பல்நிற ஓடுகள் (greytiles) அல்லது ஓலைக்கூரைகள் வீட்டின் சாரத்தின் இரு புறங் களிலும் சரிந்து காணப்படுகின்றன. தென்பகுதியில் பிற்காலத் தில் வளைந்த ஓடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கதவுகள் எப் போதும் நீளவாட்டச் சுவரிலேயே அமைக்கப்படுகின்றன. வசதி யுள்ள குடியானவர்கள் மேடை ஒன்று எழுப்பி, அதில் வீடு கட் டிக்கொள்வார்கள். வேறு சிலர், மரப் பலகையைத் தளவரி சைக்குப் பயன்படுத்துவார்கள். தனிமையை விரும்பும் சீனர் களின் வீடுகளில், மையத்தில் திறந்தவாசலும் அதனைப் பார்த்த வாறு உட்புறமாகவே அறைகள் காணப்படுகின்றன. இங்கு ஒரு அடுக்கு வீடுகளே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவை செவ்வக வடிவம், அல்லது 'L', 'U' வடிவங்களில் காணப்படு கின்றன.

ஜப்பான் :

ஜப்பானில் பொதுவாகத் தாழ்நிலப் பகுதிகளில் (low lands) குடியானவர்கள் சிறு கிராமங்களில் (hamlets) வசித்து வருகிறார் கள். ஆனால், பெரிய பண்ணைகள் உள்ள வடக்கு ஹொன்ஷூ (Honshu) ஹொக்கைடோ (Hokkaido) போன்ற பகுதிகளில் சிதறிய பண்ணைக் குடியிருப்புகள் காணப்படுகின்றன. இச் சிதறிய அமைப்பு மலைப்பகுதிகளிலும் காணப்படுகிறது. கிராமங் கள் பொதுவாக நெருக்கமாகவும் சாலைகளை ஒட்டியோ, தெருக் களை ஒட்டியோ வீடுகளுடன் காணப்படுகின்றன. தாழ்ந்த வண்டல் நிலங்களில் கிராமங்கள் வயல்களைக் காட்டிலும் சற்று உயரத்தில் அமைந்துள்ளன. வெள்ளத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்தில் இக்குடியிருப்புகள் யாவும் உயர்ந்த நிலப்பகுதிகளாகிய பழைய கடற்கரையில் அமைந்த நீண்ட

குன்றுகள், லெவிக்கள் (levees), எரிமலையின் விளிம்புகள் (Volcano margins) ஆற்றுத் திடல்கள் (river terraces) போன்ற பகுதிகளில் அமைவதால், கிராமங்கள் நூலைப்போல் (String) நீள் வடிவத்தைப் பெறுகின்றன. தெற்கு ஜப்பானில் கின்கி (Kinki) மாவட்டத்தில் காணப்படும் கிராமங்கள், சிறப்புத்தன்மை வாய்ந்தவை. இங்குக் கிராமப்புற மக்கள் சிறு கிராமங்களில் வசிக்கிறார்கள். இந்தக் கிராமங்களுக்குள்ளாக இடைவெளி சுமார் 5 பர்லாங் தூரத்திற்கு மேல் இருக்காது. இக்குடியிருப்புகள் செவ்வக வடிவில் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கிராமமும் செவ்வக வடிவச் சுவராலோ (wall) வேலியாலோ (hedge) அகழியினாலோ (moat) சூழப்பட்டிருக்கும். பின்னர் ஏற்பட்ட முன்னேற்றத்தால் இந்தச் சுவர்களும் அகழிகளும் மறைந்த பின்பும் குடியிருப்பின் அமைப்பு மட்டும் இப்போதும் மாறாமல் உள்ளது. இவர்கள் வீடுகளை இலேசான பொருள்களைக் கொண்டே கட்டுகிறார்கள். இவை அயனமண்டலத்திற்குரிய அமைப்பிலேயே காணப்படுகிறது. ஜப்பானில் வீடுகளை மேடை அமைத்து (Stilt) கட்டுவதிலிருந்து, பண்டைக் காலத்தில் அவர்கள் தென்கிழக்கு ஆசியாவுடன் தொடர்பு கொண்டிருந்ததை அறிய முடிகிறது. இந்த வீட்டமைப்பு வெப்பமும் ஈரப்பதமும் மிகுந்த நீண்ட கோடைகாலத்திற்குப் பொருந்துமே தவிர, குளிர்காலத்திற்குச் சற்றும் பொருந்தா. குறிப்பாக, வடக்கு ஹொன்ஷு (Honshu) பகுதியிலும், வடக்குக் குளிர் பகுதிகளிலும் இந்த அமைப்பு முற்றிலும் பொருந்துவதில்லை. கற்களில் புதைக்கப்பட்ட நான்கு கொம்புகளில் ஓட்டுக்கூரை அல்லது ஓலைக் கூரை வேயப்படுகிறது. இங்கு வீடுகளுக்குப் புகைப்போக்கி கிடையா. வீட்டின் தரை அதாவது மேடை (Stilt) பூமிக்கு மேல் சுமார் ஒன்று முதல் மூன்று அடிகள் வரை உயர்ந்து காணப்படுகிறது. சுவர்கள் பொதுவாக மண்ணால் பூசப்படுகின்றன. சூரியனின் திசையில் மட்டும் சுவருக்குப் பதிலாக, இலேசான மரப்பலகைகள் பொருத்தப்படுகின்றன. இதில் கண்ணாடி அல்லது ஒளி ஊடுருவுகின்ற தாள் பொருத்தப்படுகிறது. வெளிப்பக்கம் மரச்சட்டங்களுக்கு வண்ணம் பூசுவதைவிட அப்படியே விட்டு விடுவதையே இவர்கள் விரும்புகிறார்கள்.

தென்கிழக்கு ஆசியா :

தூண்கள் மற்றும் கொம்புகளால் பூமிக்குமேல் சற்று உயர்த்தி அமைக்கப்பட்ட மேடைகளில் கட்டப்பட்ட வீடுகள் உலகின் பல பாகங்களில் காணப்பட்டாலும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ளதுபோல் அவ்வளவு பரவலாக வேறெங்கும் காணப்

படுவதில்லை. இந்த மேடை வீடுகள் (Stilt house) மேற்கே அஸ்ஸாமிலிருந்தும் (Assam) தெற்கு பர்மாவிலிருந்தும், கிழக்கே பிலிப்பைன்ஸ் (philippines), மொலக்காஸ் (Moluccas) வரை பரவியுள்ளன. இது இந்த பகுதியில் பழங்காலத்திலிருந்த பண்பாட்டு ஒற்றுமையைக் காட்டுகிறது.

இந்த மேடை அமைப்பு (Stilt) முறை சில காரணங்களுக்காகப் பின்பற்றப்பட்டு வருகிறது. உதாரணமாக ஏரிகளிலும், கடற்பகுதிகளிலும் இத்தகைய வீடுகள் மீன் பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. இது தவிர எதிரிகளிடமிருந்தும், கொடிய விலங்குகளிடமிருந்தும் காத்துக் கொள்ளவும் இவ்வமைப்பு உதவுகிறது. நிலப்பகுதியில் இம்மேடை வீடுகளின் கீழுள்ள பகுதி கால்நடைகளைப் பாதுகாக்கவும், விறகு போன்ற பொருள்களை வைப்பதற்கும் வேலை செய்வதற்கும் ஏற்றதாக உள்ளது. இவ்வீடுகள் ஈரப்பதமும், அதிக வெப்பமும் சதுப்பும் கொண்ட கால நிலையின் விளைவாக ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்டுள்ள இக்காலத்திலும் இந்த அமைப்பு பின்பற்றப்பட்டு வருவது அவர்களுக்கு அவர்களுடைய பண்பாட்டில் இருக்கும் ஈடுபாட்டையே எடுத்துக் காட்டுகிறது. தென்கிழக்கு ஆசியாவிலுள்ள வீடுகள் பெரும்பாலும் பழமையின் அமைப்புக் கொண்டவை. ஜப்பானில் காலப்போக்கில் ஏற்பட்ட மாறுதல்கள் கூட இங்குள்ள வீடுகளில் காணப்படவில்லை. வீட்டின் தரை பூமியிலிருந்து 5 முதல் 15 அடிவரை உயர்ந்திருக்கும். சுவர்கள் பொதுவாகப்பிளந்த மூங்கில்கள் அல்லது நார்களை இணைத்து அமைக்கப்பட்டிருக்கும். சுவர்களுக்கு மரத்தைப் பயன்படுத்துவதோ, அல்லது வண்ணம் பூசும் வழக்கமோ இவர்களிடம் காணப்படவில்லை. பனை ஓலைதான் கூரைக்குப் பயன்படுத்தப்படுகிறது. உள்நாட்டில் சில பகுதிகளில் பல குடும்பங்கள் சேர்ந்து வாழ்கின்ற நீண்ட பொது வீடுகளும் (long communal house) காணப்படுகின்றன. சீனப் பண்பாட்டின் தொடர்பால் தென்கிழக்கு ஆசியாவில் டங்கினீசியர்கள் (Tonkinese) மேடை ஏதும் இல்லாமல் தரையிலேயே வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மிகாங் (Mekong) டெல்டாவிலும் இந்த அமைப்பு இங்கிருந்து பரவிவிட்டது. டிமோர் (Timore) மற்றும் அதனைச் சுற்றியுள்ள தீவுகளிலும் தரையிலேயே வீடுகள் கட்டப்படுகின்றன. சில இடங்களில் செவ்வக வடிவ வீடுகளுக்குப் பதிலாக வட்டவடிவ வீடுகள் காணப்படுகின்றன. இதன் கூரை தரையிலிருந்தோ அல்லது நடப்பட்ட கொம்பிலிருந்தோ அமைக்கப் படுகிறது.

14. இந்தியக் கிராமங்கள்

இந்திய மக்கள் தொகையில் சுமார் 82% சதவிகிதம் கிராமங்களில் வசிக்கின்றன. 1961-ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் 5,64,258 கிராமங்கள் இருக்கின்றன. இவற்றில் 4, 200 கிராமங்களில் 5,000 பேருக்கு அதிகமாகவும், 3,49,195 கிராமங்களில் 500 பேருக்குக் குறைவாகவும் வசிக்கின்றனர். இந்திய — கிராமப்புற மக்கள்தொகையில் பெரும் பகுதியினர் குழுமிய குடியிருப்புகளில் வசிக்கின்றனர். பரவலான குடியிருப்புகள் (dispersed settlements) இங்கு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இமயமலைப் பகுதியில் மட்டுமே ஐரோப்பிய பகுதிகளில் காணப்படுவதுபோல் பரவலான குடியிருப்புகள் காணப்படுகின்றன. மற்ற இடங்களில் குழுமிய குடியிருப்புகளே காணப்படுகின்றன. கரடு முரடான மலைப்பகுதிகளில் கூட பண்ணை வீடுகளுக்குப் பதிலாக குக்கிராமங்களே (hamlets) காணப்படுகின்றன. இந்தியக்குடியிருப்புகள் அவற்றின் கட்டடப் பொருள்கள், வீட்டு அமைப்பு ஆகியவற்றில் மட்டுமல்லாமல், சமூக அமைப்பிலும் கூட மாறுபட்டு விளங்குகின்றன. திறந்த உறைவிடத்திலிருந்து காற்றுத்தடுப்புகள் (wind break) குடிசைகள், மற்றும் பல அடுக்கு மாளிகைகள் வரை பல்வேறு அமைப்புகளில் குடியிருப்புகள் காணப்படுகின்றன. வீடுகளின் அமைப்பும் காலநிலை, பண்பாடு ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பல வகைகளில் அமைந்துள்ளன.

இந்தியாவில் மழை அதிகமாக உள்ள மாவட்டங்களில் (districts) தடித்த ஓலைக் கூரையும், சராசரி மழையளவுள்ள பகுதிகளில் ஓட்டுக் கூரையும் (tiled roof) காணப்படுகின்றன. சராசரி அளவைவிட, குறைவாக மழைபெய்யும் பகுதிகளில் தட்டையான கூரையே (flat roof) காணப்படுகிறது.

இந்திய வீடுகளில் பெரும்பான்மையானவை செவ்வக வடிவம் (rectangular) கொண்டவையாகும். சில இடங்களில் சரிந்த கூரையும் (sloping roof) தட்டையான கூரையும் அருகருகே காணப்படுகின்றன. வட்ட வடிவத்தில் குடிசைகளைக் கட்டுவது எளிது என்றாலும் இங்கு செவ்வக வடிவத்திலேயே அவை கட்டப்படுகின்றன. இதற்குக்காரணம் செவ்வக வடிவ குடிசையில்தான் உட் பரப்பு (inner area) அதிகமாக இருக்கிறது.

பகைவர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளவும், காடுகளை அழித்துப் புதிய நிலங்களை ஏற்படுத்துவதற்கும், கூட்டுறவு முறையில் பலர் ஒன்று சேர்ந்து உழைப்பது அவசியமாகிறது. எனவே, இந்தியாவில் பல பகுதிகளில் கூடி வாழுகின்ற கிராமங்கள் தோன்றியிருக்கின்றன.

இந்தியாவில் பழங்காலத்திலேயே கிராமங்களுக்கு பலவித வடிவங்கள் இருந்தன. உதாரணமாக ஆரியர்களுடைய கிராமங்கள் "ஸ்வஸ்திக்" (swastika) நிலவரைப் படிவத்தைக் (plan) கொண்டிருந்தது. கிராமத்தின் நுழைவாயிலை எளிதாகப்பாது காக்கும் பொருட்டே இந்தவடிவம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வடிவம் பொதுவாகக் காவற்படை முகாம்களில் (camps) பின் பற்றப்படுவதாகும். ஆரியர்களுடைய கிராமங்களில் சாலைகள் வடக்கு—தெற்காகவும், கிழக்கு—மேற்காகவும் குறுக்கு அமைப் பில் (cross) காணப்பட்டன.

பாதுகாப்புத் தேவையில்லாத இடங்களிலும், நில அமைப்புக் கரடுமுரடாக (rugged) உள்ள இடங்களிலும், வரண்ட நிலப் பகுதியிலும் குடியிருப்புகள் சிதறலாகக் (scattered) காணப்பட்டன.

இந்தியா, உலகத்தில் ஏழாவது பெரிய நாடாகும். இப்பரந்த நாட்டில், நில அமைப்பும், அதன் தோற்றமும், காலநிலையும், தாவரங்களும் பல்வேறாக உள்ளன. இயற்கை அமைப்பைப்போல் இங்கு வாழும் மக்களின் மொழி, பண்பாடு ஆகியவையும் இடத்திற்கு இடம் மாறியிருக்கின்றன. எனவே, குடியிருப்பும், வீட்டின் அமைப்பும் இங்கு பல் வேறாகக்காணப் படுகிறது. இந்தியக்குடியிருப்புகளை ஆராயும்போது, இந்தியாவை அரசியல் பிரிவுகளாகப் பிரித்துக்கொள்வதைவிட இயற்கைப் பிரிவுகளாகப் பிரித்துக்கொள்வதே நலம், ஏனென்றால் நிலத் தோற்றம் காலநிலை, அவற்றால் ஏற்படும் தொழில் முறை, பண்

பாடு ஆகியவை குடியிருப்புகளின் அமைப்புக்குக் காரணமாயிருக்கின்றன, எனவே, கீழ்க்கண்ட இயற்கைப் பிரிவுகளில் காணப்படும் இந்தியக் கிராமங்களை நாம் விரிவாக ஆராய்வோம்.

கர்நாடகப் பகுதி (The carnatic Region):

கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் கிராமங்கள் ஏறத்தாழ நெருக்கமாகவும் (compact) சீராகவும் (uniform) காணப்படுகின்றன. கிராமத்தின் மையப் பகுதியில், மைதானமோ புல்வெளியோ காணப்படுகிறது. கிராமத்தில் பெரிய குளம் ஒன்று இருந்தாலோ, அல்லது ஆற்றங்கரையில் கிராமம் ஒன்று இருந்தாலோ, கிராமத்தின் வீடுகளெல்லாம், அந்தக்குளம் அல்லது ஆற்றங்கரைக்கு அருகிலேயே அமைகின்றன,

தக்காணபீடபூமியின் சில கிராமங்களில் பாதுகாப்பின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட அமைப்புகள் தற்காலத்திலும் அழியாமல் இருக்கின்றன. ஆனால், தமிழ் நாட்டில் கிழக்கு மாவட்டங்களில் கிராமங்கள் பாதுகாப்பு அமைப்பு ஏதும் இல்லாமல் இருக்கின்றன.

கர்நாடகப் பகுதியில் கிராமத்தில் பொதுவாக வீடுகள் தனித்தனியாகக் காணப்படுகின்றன. அவை சாதாரணமாக சதுர வடிவத்தில் உள்ளவை. இங்கு வசதி மிக்கவர்கள் தங்கள் வீடுகளுக்கு மண்சுவருக்குப் பதிலாக செங்கற்களையே பயன்படுத்துகின்றனர். பெரும்பாலான வீடுகளில் கூரைக்கு மூங்கில், பனையோலை, வைக்கோல், புல் போன்ற பொருள்களையே பயன்படுத்துகின்றனர். ஆனால், இந்தியாவின் மற்றப்பகுதிகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால், இங்குதான் வீடுகளுக்கு ஓடுகள் (tiles) மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. குளிர்ச்சியைப் பெறுவதற்காக இங்கு வீட்டுச்சுவர்கள் பெரும்பாலும் மண்ணால் கட்டப்பட்டுள்ளன. சில பகுதிகளில் தேன்கூடு போன்ற வட்ட வடிவக்குடிசைகள் உள்ளன. ஆனால், செவ்வக வடிவவீட்டில்தான் பரப்பு அதிகமாக உள்ளதால் செலவு அதிகமானாலும் ஏழைகள்கூட இவ்வகை வடிவத்திலேயே வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். இந்த வீடுகளின்மேல் செடி, கொடிகளைப் (creepers) பரவச் செய்வது சில இடங்களில் வழக்கத்தில் உள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன: முதலாவது காரணம் செடி, கொடிகளைப் படரவிடுவதற்கு இடம் இல்லாமலிருப்பது; இரண்டாவது காரணம், அவற்றை வீட்டின் மேல் படரச் செய்வதால் கூரை வலிமைபெற்று, மழை வெய்

லிருந்து பாதுகாப்புக்கிடைக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வாழும் இருளர் (Irulas) என்ற இனத்தவர் வட்டமான குடிசைகளில்தான் தற்போதும் வசிக்கின்றனர். இந்த குடிசைகளில் வாயிற்படி மிகவும் தாழ்ந்து, ஒருவர்மட்டும் நுழையக் கூடிய அகலம் உள்ளது. இக்குடிசைகள் மிகவும் நெறலாகக் காணப்படுகின்றன. இதேபோல் பெண்ணாற்றுக்குத் (pennar) தென்பகுதியிலும் வட்டவடிவ குடிசைகள் உள்ளன. ஆனால், இவை சரியான வட்டவடிவத்தில் இல்லாமல், சற்று நீள் வட்ட வடிவத்தில் அமைந்திருக்கின்றன. இவற்றின் கூரை கூம்பு (cone) வடிவத்தில் இருக்கிறது.

மலயாள, கொங்கணக் கரைப் பகுதிகள் :

மலயாள, கொங்கணக்கரைப் பகுதி என்பது கேரளம், கர்நாடகம், மகாரஷ்டிரம், ஆகிய மாநிலங்களின் கடற்கரைப் பகுதிகளைக் கொண்டதாகும். இம் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள கிராமங்கள் இந்தியாவின் மற்றப் பகுதிகளிலுள்ள கிராமங்களினின்று பல வகைகளில் மாறுபட்டு விளங்குகின்றன. இங்குள்ள கிராமங்களில் வீடுகள் நெருக்கமாக அமையாமல் பரவலாகக் காணப்படுகின்றன. இப்பகுதியில் கிராமங்களுக்கு இடையே உள்ள இடைவெளியைக் காட்டிலும், வீடுகளுக்கு இடையே உள்ள தூரம் அதிகமாக இருக்கிறது. வடக்குக் கொங்கணப் பகுதியில் வீடுகள் தெருவின் இருபுறத்திலும் கட்டப்பட்டுள்ளன. தெற்குப் பகுதியிலும், மற்ற இடங்களிலும், குறிப்பாகக் கேரளத்திலும், இவை வயல்களுக்கு அருகில் பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால், கேரளத்தில் கடற்கரைப் பகுதிகளில் தமிழர்கள் வாழும் பகுதியில் மட்டும் வீடுகள் நெருக்கமாக அமைந்து கிராமங்களாகக் காட்சியளிக்கிறது.

கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் உள்ளதுபோல் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் நெருக்கமான கிராமங்களைக் காண முடிவதில்லை. மேற்குக் கடற்கரையில் பண்ணைகள் நிறைந்திருப்பதால், இங்கு தனித்தபண்ணைக் குடியிருப்புகளே அதிகமாக உள்ளன. ஒவ்வொரு பண்ணைக் குடியிருப்பிலும், கோயிலோ கடைவீதியோ மையப்பகுதியாக உள்ளது. ஒவ்வொரு வீட்டைச்சுற்றிலும் தோட்டம் அல்லது முற்றமும் (yard) காணப்படுகிறது, முற்றத்தின் வடமேற்கு மூலையில், பாம்புப் புற்றுக்காக இடம் ஒதுக்கப்பட்டிருப்பதைச் சாதாரணமாகக் காணமுடிகிறது. ஏழை மக்களின் வீடுகளில் முற்றம் சிறியதாக

உள்ளது. கேரளத்துக் கடற்கரையிலுள்ள வீடுகளில் நான்கு புறத்திலும் அறைகளும் (rooms) நடுவில் திறந்த முற்றமும் பொதுவாகக் காணப்படுகிறது. இது, அமைப்பில் உரோமானிய, ஐரோப்பிய பண்ணை வீட்டை ஒத்திருக்கிறது. இங்குள்ள வீடுகள் பொதுவாகச் சதுர வடிவத்தில், பாறைக் கற்களாலும், செங்கற்களாலும், சேற்றினால் கட்டப்பட்டிக்கின்றன. வீடுகளின் தூண்கள் பெரும்பாலும் செம்பூராங்கல்லினால் (laterite) கட்டப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் மரமும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. சேற்றினால் கட்டப்பட்ட இந்த வீட்டுச் சுவர்கள் சுண்ணாம்பினால் பூசப்பட்டிருக்கிறது.

பம்பாய்க்கு அருகில் கொங்கணக் கடற்கரையில் கிராமங் களில் இரண்டு அல்லது மூன்றடுக்கு வீடுகள் மிகச் சாதாரண மாகக் காணப்படுகின்றன. அதே சமயத்தில் ஏழைகளின் வீடு களில் சில இடங்களில் சன்னல்கள் கூட இருப்பதில்லை. இந்த வீடுகள் ஒரே ஒரு அறையைக் கொண்டதாகவும், மண், பனையோலை ஆகிய பொருள்களால் கட்டப்பட்டதாகவும் விளங்குகிறது.

கொங்கணப் பகுதியில் வசதியானவர்களின் வீடுகளில் மட்டுந்தான் கூரைக்கு ஓடுகள் பயன்பட்டுள்ளன. மற்றவர் களின் வீடுகளில் தென்னோலை வைக்கோல் போன்றவை காணப்படுகின்றன. இதற்கு, ஏழ்மைதான் காரணம் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் கூரைக்கு ஓடுகளைப் பயன் படுத்துவது கோயில்களிலும், பிராமணர்களின் வீடுகளிலும் மட்டுமே தொன்றுதொட்ட பழக்கமாக இருந்து வருகிறது.

இங்குள்ள ஓட்டுக்கூரைகள் கலையமைப்புக் கொண்ட தாகவும், பர்மா, சீனா போன்ற இடங்களில் காணப்படும் அமைப்பை ஒத்தும் இருக்கின்றன. கேரளத்தில் தென்பகுதியி லுள்ள கட்டடங்கள் பொதுவாக நீளமாகக் காணப்படுகின்றன. ஆனால், வடக்கு நோக்கிச் சென்றால் சதுர வடிவ வீடுகளையே நாம் காணமுடியும்.

கேரளாத்திள்ள ஓட்டு வீடுகளின் கூரை, முனையில் வளைந்து காணப்படுகிறது. மழைநீர் வீட்டின் நடுவிலுள்ள திறந்த வாசலில் விழுவதுபோல் கூரை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வாசலைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள தூண்களே, வாசலின் கூரையைத் தாங்கி நிற்கின்றன.

பலத்த மழையின் காரணத்தால் இங்குள்ள கூரைகள் சரிவு மிகுந்து காணப்படுகின்றன. இதே காரணத்தினுல் இங்குத் தட்டையான கூரை கொண்ட வீடுகளைக் காணமுடிவதில்லை.

இங்கு மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடிகள் இன்றும் செவ்வக வடிவ மூங்கில் வீடுகளிலேயே வசிக்கின்றனர். இந்த வீடுகள் பூமியிலிருந்து மூன்றுமுதல் பத்துஅடிகள் வரை உயர்த்திக் கட்டப்பட்டுள்ளன. காட்டு மிருகங்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவே, வீடுகள் உயரத்தில் அமைந்திருக்கின்றன. பெரியாறு ஆற்றுப்பள்ளத்தாக்கில் வசிக்கும் யூராலி (urali) இனத்தவரின் குடிசைகளில் கூரை அரைவட்ட அமைப்பைக் கொண்டிருக்கிறது. இந்தக்குடிசைகள் நாணல் (reeds), மூங்கில் ஆசியவற்ருல் கட்டப்பட்டிருக்கின்றன. இவை தவிர இவர்கள் மரக்கிளைகளின் மேலும் வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்கிருர்கள். இவர்களைப் போலவே கோட்டயத்திலுள்ள காடுகளில் வசிக்கும் மலே அரையர் (mala Arayan) களும் மரங்களில் வீடுகட்டிக் கொண்டிருக்கிருர்கள். இந்த வீடுகளுக்கு மூங்கில் ஏணி உள்ளது.

கேரளத்தின் தெற்குப் பகுதியில் மலைப்பகுதியில் வாழும் கன்னிக்காரன் இனத்தவர் பொதுவாக யானைகள் செல்லும் பாதையைவிட்டு விலகியே தங்கள் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டிருக்கிருர்கள். இவர்களுடைய குடிசைகள் கூட பூமியிலிருந்து சுமார் 10 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. மூங்கில், ஓலை ஆகியவற்ருல் கட்டப்பட்ட இந்தக் குடிசைகளின் வாயிற்படி எப்போதும் கிழக்கு நோக்கியே இருக்கும். இவர்கள் வசிக்கும் இடத்தின் நிலவளம் குன்றி போனுல், தங்கள் குடியிருப்பை வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்வார்கள்.

மன்னன் (mannan) மூத்தவன் (muthavan) போன்ற மலைச் சாதியினர் ஏலமலையிலும், கண்ணன்தேவன் மலைகளிலும் வாழ்கின்றனர். இவர்களுடைய குடியிருப்புகள் மலைப்பகுதிகளில் சுமார் 6000 அடிகள் வரை காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை சுமார் 2000 அடிமுதல் 4000 அடிவரையிலுள்ள பகுதிகளில்தான் காணப்படுகின்றன. குக் கிராமம் போன்ற இவர்களுடைய குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் 10 முதல் 15 குடிசைகள் வரை காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் மரக்குச்சி, புல் ஆகிய பொருள்களால் செவ்வக வடிவில் அமைக்கப்படுகின்றன.

மலைப்பண்டாரம் (malapandaram), பளியர் (paliyar), காடர் (Kadar), பனியர் (paniyar), ஆகிய இனத்தவர்கள் பழங் காலத்தில் வேட்டையாடியும் பழம், காய்கறிகளைச் சேகரித்தும் வாழ்ந்துவந்தவர்களாவர். இவர்களுடைய வாழ்க்கை தமிழ் நாட்டிலுள்ள இருளர் (Erular), தெலுங்கானாவிலுள்ள செஞ்சு (chenchu) ஆகியோரின் வாழ்க்கையோடு ஒத்திருக்கிறது. இவர் களுடைய குடியிருப்புப் பொதுவாகக் குன்றுகளின் மீதோ, ஆற்றங்கரை அல்லது ஊற்றுகளுக்கு அருகிலோ காணப்படு கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 3 முதல் 15 குடிசைகள் வரை உள்ளன. இவையாவும் தற்காலிகமானவையே. இந்தக் குடிசைகள் சிறிய கிராமங்களில் ஒரே வரிசையாகவும், பெரிய கிராமங்களில் திறந்த வெளியைச் சுற்றி வட்டமாகவும் காணப் படுகின்றன. வேட்டையாடி உணவைச் சேகரிக்கும் பழங்குடி குடியிருப்புகள் எல்லாவற்றிலும் காற்றுத்தடுப்புகள் உள்ளன. உணவைச் சமைக்கும் போது இத்தடுப்புகள் மிகவும் பயன்படு கின்றன.

நீலகிரி மலைகளில், குறிப்பாகப் புல்வெளிகளும், சம நிலங் களும் பரவியிருக்கின்ற கிழக்குப் பகுதிகளில் வசிக்கின்ற தோடர் (Todas), படகர் (Badagas) கோட்டர் (Kotas) ஆகியோர் தங் களுக்கென்று தனித்தனியான சமூக, பொருளாதார அமைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தோடர் இனத்தவர் மேய்ச்சல் தொழிலிலும் (Pastoral), கோட்டர் இனத்தவர் கைத் தொழிலிலும் (artisan), படகர் இனத்தவர் விவசாயத்திலும் ஈடுபட்டிருக்கின்றனர். கோட்டர் வீடுகளின் கூரைக்கு ஓலை அல்லது ஓடு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வரிசையாக அமைந் திருக்கும் இந்த வீடுகள் கல், செங்கல், சேறு ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிற்கு முன் னாலும் திண்ணை காணப்படுகிறது. படகர் இனத்தவர் விவசாயத் தில் ஈடுபட்டிருப்பதால் பெரிய கிராமங்களில் வசிக்கிறார்கள். வீட்டின் கூரைகளுக்கு இங்கு ஓலை அல்லது ஓடுகள் வேயப்பட் டுள்ளன. வீடுகள் தெருவின் இருபுறமும் வரிசையாகக் காணப் படுகின்றன. ஒவ்வொரு வரிசையிலும் ஒரே கூரை தொடர்ச்சி யாக எல்லா வீடுகளுக்கும் வேயப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வீடும் தடுப்புச் சுவரால் தடுக்கப்பட்டிருக்கிறது. படகர் இனத்த வரின் கிராமங்கள் பொதுவாகக் குன்றின் உச்சியிலேயேகாணப் படுகின்றன. தோடர் இனத்தவரின் குடியிருப்புகள் மேலும் தனித் தன்மை பெற்றிருக்கிறது. இவர்களுடைய கிராமம் மண்ட் (mand) எனப்படுகிறது. இதில் சுமார் 6 குடிசைகளே காணப்

படுகின்றன: இவற்றில் 4 குடிசைகள் வசிப்பதற்கும், மீதி இரண்டில் கோயிலுக்காக ஒன்றும் கால்நடைகளுக்காக மற்றொன்றும் ஒதுக்கப்பட்டிருக்கிறன. குடிசைகள் அரைவட்ட வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. காற்று நன்கு செல்வதற்கு வசதியாகவும், கோடை மழையைத் தாங்குகின்ற வகையிலும் இவை அமைந்திருக்கின்றன. இவை சுமார் 18 அடி நீளமும், 10 அடி உயரமும், 9 அடி அகலமும் உள்ளவை. இந்த வீடுகளின் கூரை வளைவாக அமைக்கப்பட்டிருக்கிறது. கூரையின் இரு முனைகளும் தரைக்கு மிக அருகில் வளைந்து காணப்படு படுகின்றன. மூங்கில், ஓலை, புல், தழை, மரம் ஆகியவை இங்கு முக்கிய கட்டடப் பொருள்களாகும். வீடுகளின் வாயிற்படி மிகவும் தாழ்ந்து காணப்படுவதால் தவழ்ந்துதான் வீட்டிற்குள் செல்லமுடியும். வாயிற்படிக்குக்கதவு ஏதுமில்லை. அதற்குப் பதிலாகக் கனத்த மரப்பலகையை அல்லது கற்பலகையை (stone-slab) வாயிற்படியில் சாத்திவைத்துவிடுவார்கள். வீட்டின் உள்ளே தரை சற்று உயர்ந்து காணப்படுகிறது.

கர்நாடக பீடபூமி, தக்காண பீடபூமிப் பகுதிகள்:

பாபுதான் (Babudan) மலையிலிருந்து தெற்கு மத்திய பிரதேசம், மேற்குத் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், ஆகிய பகுதிகள் இவற்றில்அடங்கியிள்ளன. தக்காண பீடபூமியிலும், கர்நாடகச் சமவெளிப்பகுதியிலும் உள்ள குடியிருப்புக்குப் பெரும்பாலும் அரண் அமைக்கப் பட்டுள்ளது. தற்காப்புக்கான இச்சுவர்கள் தற்காலத்திலும் காணப்படுகின்றன. கிராமங்களில் பலவற்றில் மையப் பகுதியில் மலைக் கோட்டைகளும், சிலவற்றில் அகழிகளும் காணப்படுகின்றன. அரண் அமைந்திருந்த அடையாளங்கள் தற்காலத்திலும் அழியாமல் உள்ளன. இங்கு வீடுகள் எல்லாம் இப்பாதுகாப்புச் சுவருக்குள் மிக நெருக்கமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இது முற்காலத்தில் இப்பகுதியில் நிலவிவந்த அச்சத்தை வெளிப்படுத்துகிறது. இவ்வச்சமற்ற குடியிருப்புகள் சிதறலாகவும் பரவலாகவுமே வேறு பகுதிகளில் காணப்படுகின்றன. காடுகள் அழிக்கப்பட்ட பகுதிகளிலும் குடியிருப்புகள் பரவலாகவே காணப்படுகின்றன. இங்குள்ள குக்கிராமங்களில் 6 முதல் 12 குடிசைகளே காணப்படுகின்றன; இந்தக் குடிசைகளில் வரண்ட காலங்களில் மட்டுமே குடியானவர் வசிக்கின்றனர். மற்றயக்காலங்களில் இவர்கள் பெரிய கிராமங்களில் வசித்து வருகின்றனர். சில கிராமங்களில் காவற்கோபுரங்கள் (watchtower) இருந்திருக்கின்றன. வீடுகளுக்குக் கரடுமுரடான வளைந்த பாதைகளே உள்ளன. தெருக்கள் மிகவும்

குறுகலாகவும் தொடர்ச்சியற்றும் காணப்படுகின்றன. கோயில் அல்லது கோட்டையைச் சுற்றி வீடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக வசதியுள்ளவர்களும் பிராமணர்களும் இங்கு வசிக்கிறார்கள். சில வீடுகளில் கலையுணர்வை வெளிப்படுத்தும் வண்ணம் சிறந்த மரவேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

தக்காண பீடபூமியில் தட்டையான கூரை அமைக்கப்பட்ட வீடுகளே காணப்படுகின்றன. ஓலைக் கூரைகளினால் ஏற்படும் தீ விபத்தைத் தடுக்கவே, ஓட்டினாலோ (tiles) மண்ணினாலோ (mud) கூரைகள் அமைக்கப்படுகின்றன. மண்ணினால் அமைக்கப்பட்ட கூரை தட்டையாக உள்ளது. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களின் வீடுகள் மட்டுமே ஓலையினால் வேயப்பட்டிருக்கின்றன. மண்கூரையைத் தாங்கிக்கொள்ள வீட்டின் மையத்தில் இரண்டு மரத்தூண்கள் அமைக்கப்படுகின்றன. இதன்மேல் கழிகள் எல்லாச் சுவர்களுக்கும் இடையிலும் அமைக்கப்படுகின்றன. இதற்குமேல் கரும்புத்தழை அல்லது வேறு தழைகளைப் பயன்படுத்தி, சுமார் 4 முதல் 6 அங்குல கனத்திற்கு மண் அல்லது சேறு பூசப்படுகிறது. இதன்மேல் மழைநீர் கசியாமலிருக்க, சில அங்குல கனத்திற்குக் களிமண்ணும் பூசப்படுகிறது. பழைய வீடுகள் கோட்டையைப்போல் உயர்ந்து கற்சுவரினால் கட்டப்பட்டு, சன்னல்கள் இல்லாமல் உள்ளன. வீட்டிற்கு வெளியே ஒரு வளைவு போன்ற அமைப்புக் கொண்ட வழிதான் உள்ளது. வீடுகள் பொதுவாக இங்கே கிழக்கு, வடக்கு, மேற்குத் திசைகளை நோக்கியே இருக்கின்றன. தெற்கு நோக்கி அமைக்கப்பட்ட வீடுகள் மிகவும் குறைவு. தெற்குத் திசையில் சூரிய வெப்பம் அதிகமாகப் படுகிறது என்பதாலும், மரண தேவதை வசிக்கும் திசையாக அது கருதப்படுவதாலும், மிகக் குறைவான வீடுகளே தெற்குநோக்கி அமைக்கப்பட்டுள்ளன. வீடுகள் முன்பகுதியில் குறுகியும், பின்பகுதியில் விரிந்தும் காணப்படுகின்றன. பசுவின் முகத்தைப்போன்று குறுகி இருக்க வேண்டும் என்பதற்காக இந்த அமைப்பாகும். ஹைதராபாத்தில் குடியானவர்களின் வீடுகள் சாதாரணமாக 3 அல்லது 4 அறைகள் கொண்டதாக உள்ளன. வீட்டின் கூடத்தைச் சுற்றி இந்த அறைகள் காணப்படுகின்றன. தக்காணத்தின் வடமேற்குப் பகுதியில் இரண்டு அடுக்கு வீடுகள் காணப்படுகின்றன. இந்த வீடுகளில் கூரைக்கு ஓடு, ஓலை, தகரம் போன்றவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உட்புறத்தில், திறந்த சதுரமான வாசல் உள்ளது. வீட்டிற்குச் செல்ல பெரிய நுழைவாயில் ஒன்று உள்ளது; அதன் இரு புறங்களிலும், காவல் அறைகள் (ward

rooms) உள்ளன. பகலில் அலுவலக வேலைக்கும், இரவில் காவலாளிகள் உறங்குவதற்கும் இந்த அறைகள் பயன்படுகின்றன. கால்நடைகள் உள்ளே வருவதற்கும் இந்த வழிதான் பயன்படுகிறது. வீட்டிற்குள் இடதுபுறத்தில், கால்நடைத் தொழுவமும், தானிய அறைகளும் உள்ளன. இதன் எதிர்ப்புறத்தில் வசிக்கும் அறையும், சமையல் அறையும் காணப்படுகின்றன. பழங்குடிகளுக்குப் பொதுவாகச் சிறிய நிலங்களே இருக்கும். எனவே, இங்கு வாழும் லம்பாடி (Lampadi) பழங்குடி இனத்தவரின் வீடுகள் ஒரே அறையைக் கொண்டதாகும். இதில் வாயிற்படியைத் தவிர சன்னல்கள் எதுவும் கிடையா. ஆந்திராவில் ஹைதராபாத்தில் உள்ள செஞ்சு (Chenchu) பழங்குடிகள் தற்காலத்திலும், உணவைச் சேகரிக்கும் நிலையிலேயே உள்ளனர். எனவே, இவர்கள் நாடோடிகளாகவே இருக்கின்றனர். இருப்பினும், இவர்களுடைய வீடுகள் வட்டவடிவமாகக் காணப்படுகின்றன. அம்ராட் (Amrad) பீடபூமிக்கு வடக்கே, குடியிருப்புகள் பிறைச்சந்திரனின் வடிவத்தைப்போல் வளைந்து கிழக்குநோக்கி அமைந்திருக்கின்றன. வீடுகளைச் சுற்றிப் பெரிய மரங்கள் வளர்க்கப்படுகின்றன. நல்லமலை மலைத்தொடரின் (Nallamalai Hills) மேல் அமைந்துள்ள குடியிருப்புகள் பாறைத்தன்மைக்கு ஏற்ப வடிவத்தைப் பெறுகின்றன. அடர்ந்த காட்டுப் பகுதியில் அழித்துச் சமநிலங்களில் குடியிருப்புகள் தோன்றியுள்ளன. ஆபத்து நேரும் சமயங்களில் விரைவாகத் தப்பித்துக் கொள்ளும் வகையில் இங்குக் கிராமங்கள் அமைந்துள்ளன.

குஜராத், கத்தியவார், சூரத், கட்ச் பகுதிகள்

இப் பகுதிகளில் பொதுவாகக் காணப்படுகின்ற சிறப்பு யாதெனில், மக்கள்தொகையில் பெரும்பான்மையினர் பெரிய கிராமங்களில் வசிப்பதாகும். இப் பெரிய கிராமங்கள் பெரும்பாலும் நிர்வாக (administrative) மையங்களாகவே உள்ளன. கட்ச் (Kutch) பகுதியில் மூன்று அல்லது நான்கு சதுர மைல்களுக்கு ஒரு கிராமம் காணப்படுகிறது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்குள்ள கிராமங்கள் பலவற்றுக்குப் பாதுகாப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. கிராமத்தைச் சுற்றிச் சில இடங்களில் கள்ளி, கற்றாழை வேலிகளும் அமைக்கப்பட்டிருந்தன. இப்போது அவை மறைந்துவிட்டன. குறிப்பாக, கட்ச் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புச் சுவர்கள் எல்லாம் 1819ஆம் ஆண்டில் ஏற்பட்ட புவி அதிர்ச்சியினால் அழிந்துவிட்டன. சில கிராமங்களில் வேலியைத் தவிர, காவற் கோபுரங்களும் (watch tower) இருந்தன. அவற்றில் சில தற்காலத்திலும் அழியாமல்

இருக்கின்றன. இங்குக் கோயில் இல்லாத கிராமங்களே இல்லையெனலாம். கிராமத்தில் பொதுவாக நீண்ட தெரு ஒன்று இருக்கிறது. இதிலிருந்து இரண்டு மூன்று தெருக்கள் பக்கவாட்டில் பிரிந்து செல்கின்றன. கிராமத்தின் நடுவில், திறந்த வெளி ஒன்று உள்ளது. இதன் ஒரு பக்கத்தில் சமுதாய மண்டபமும் (Town Hall) மறு பக்கத்தில் சமய மடம் ஒன்றும் உள்ளது. இங்குள்ள வீடுகள் கல், மண், சேறு, செங்கல் ஆகியவற்றுல் கட்டப்பட்டு, ஓடு அல்லது ஓலையிஞல் கூரை அமைக்கப்பட்டுக் காணப்படுகின்றன; செல்வர்களின் வீடுகள் இரண்டு அல்லது மூன்று அடுக்குகளில் கட்டப்பட்டிருக்கின்றன. தட்டையான கூரை அமைந்த வீடுகள் இங்குக் கிடையா.

சூரத் மற்றும் புரோச் (Broach) பகுதியில் காணப்படும் வீடுகள் பெரியதாகவும், வசதி நிறைந்தும் இருக்கின்றன. படியேறி வீட்டிற்குள் நுழைந்தவுடன் சதுரமான (square) திறந்த வெளி ஒன்று காணப்படுகிறது. இதன் ஒரு பக்கத்தில் வரவேற்பு அறையும், மறுபக்கத்தில் சமையல் அறையும் காணப்படுகின்றன. இந்த இரண்டு அறைகளில் ஏதாவதொன்றிலிருந்து மாடிக்குச் செல்லும் படிகள் உள்ளன. மாடியில் மூன்று அல்லது நான்கு அறைகள் காணப்படுகின்றன. பெண்களுக்குத் தனி அறைகளும் உள்ளன.

மேற்குத் தக்காண பீடபூமி

மேற்குத் தக்காண பீடபூமியில் மால்வா (Malwa) பீடபூமி, ராஜஸ்தான் பாலைவன பீடபூமி ஆகியவையும் அடங்கியுள்ளன. சாத்புரா, விந்தியா, மொஹாடியோ மற்றும் ஆரவல்லி மலைகளில் காணப்படும் பள்ளத்தாக்குகளில் குடியிருப்புகள் குழுமிய வடிவில் காணப்படுகின்றன. நிலச்சுவான்தார்கள் வீட்டைச் சுற்றிலும் அவர்களுடைய பண்ணையில் வேலை செய்யும் குடியானவர்கள் தங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்கிறுர்கள். எனவே, பண்ணைகளில் வீடுகளைக் கட்டிக் கொள்வதால் ஏற்படும் பரவல் தன்மை இங்கு ஏற்படவில்லை. ஆறு, குளம், கிணறு போன்ற நீர்நிலைகளுக்கு அருகில் பொதுவாக குடியிருப்பு அமைகிறது. இங்கு மழைக் காலத்தில் கரிசல்மண் சதுசதுப்பாகி விடுவதாலும், பாதைகளில் நீர் நிரம்பி விடுவதாலும், குடியிருப்புகள் மேடான நிலங்களிலேயே அமைக்கப்படுகின்றன. பொதுவாக, வீடுகள் மண்ணுல் கட்டப்படுகின்றன; களிமண் கிடைக்கிற பகுதிகளில் ஓடுகள் பயன்படுத்தப்படுகின்றன. சில இடங்களில் மண் அல்லது செங்கற்களால் சுவர்களும், மரக்கழி

களைப் பயன்படுத்தித் தட்டையான கூரைகளும் அமைக்கப்படு கின்றன. கிராமங்களைச் சுற்றி எப்போதும் பச்சைப் பசேலென்றி ருக்கிறது. வீடுகளில் தோட்டங்கள் உள்ளன. தோட்டத்திற்கு நிழல் தருவதற்காக மா, புளி போன்ற மரங்கள் வளர்க்கப்படு கின்றன. தோட்டமும் வீடும் வேலியால் பிரிக்கப்பட்டிருக்கிறது.

குவாலியர் போன்ற இடங்களில் மணற்பாறைகள் (Sand stone) அதிகமாகக் கிடைப்பதால் வீடுகட்ட இவை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குளிர்ச்சியைப் பெறுவதற்காக இங் குள்ள வீடுகள் வடக்கு அல்லது கிழக்குத் திசையில் அமைந்துள் ளன. மால்வா (Malwa) பீடபூமியில் வீடுகள் செங்கற்களினு லும் கற்களினுலும் கட்டப்படுகின்றன. கடகாலுக்கு (base-ment) பசால்ட் (basalt) பாறைகளே பெரும்பாலும் பயன்படுத் தப்படுகின்றன. இதன்மேல் மரக்கொம்புகள் பொருத்தப்பட்டு அவற்றின் இடையில் சுவர் எழுப்பப்படுகிறது. கூரைக்கு ஓலை அல்லது ஓடு பயன்படுகிறது. சில இடங்களில் தட்டை வீடு களும் காணப்படுகின்றன. ராஜஸ்தானில் வாழும் பில்ஸ் (Bhils), கிராசியஸ் (girasias) ஆகிய பழங்குடிகள் தனித்தனி குடிசை களில் வசிக்கின்றனர். இந்தக் குடிசைகள் குன்றின்மீது அமைந் திருக்கின்றன. ஆபத்து நேரும்போது விரைவில் தப்பிச்செல்ல ஏதுவாக அவை உள்ளன. சில இடங்களில் இவர்களின் குடிசை வட்டமாகவும், கூரை குடை போன்று குவிந்தும் காணப்படு கின்றது. பிற்காலத்தில் பில்ஸ் இனத்தவர் விவசாயத்தை மேற் கொண்டு மற்றவர்களைப்போல் சதுர அல்லது செவ்வக வீடுகளை அமைத்துக்கொண்டனர். ஆஜ்மீர் (Ajmer), மெர்வாரா (Mer-wara) பகுதிகளில் புறச்சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. பொதுவாக ஆஜ்மீரிலுள்ள கிராமங்கள் பெரியதாகவும் நெருக்க மாகவும் காணப்படுகின்றன. திறந்த சமவெளிகளில் பெரிய மூலக்கரு (nucleated) கிராமங்கள் காணப்படுகின்றன. பாறைகள் நிறைந்த மெர்வாரா பகுதியில் விளைநிலங்கள் ஆற் றோரங்களில் திட்டுத்திட்டாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் சிறிய கிராமம் ஒன்று உள்ளது. குடியான வர்கள் இந்தக் கிராமங்களில் வசித்துக்கொண்டே தங்கள் நிலங்களை நன்கு கவனித்து வருகிறார்கள்.

பஞ்சாப், காஷ்மீர் பகுதிகள்

பஞ்சாப், காஷ்மீர் சமவெளிகளில் இரண்டு வகையான குடியிருப்புகள் காணப்படுகின்றன. முதல் வகை கிராமம் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்டதாகும். இந்தக் கிராமச்

சுவரில் வாயில்கள் உள்ளன. இவற்றில் கதவுகள் பொருத்தப் பட்டிருக்கும். இந்தச் சுவருக்குள் வீடுகள் மிகவும் நெருக்கமாக அமைந்திருக்கின்றன. இந்தக் கிராமத்தில் உள்ள தெருக்கள் மிகவும் குறுகலானவை. வீடுகளின் உயரமான சுவர்கள் தெருவின் இருபுறங்களிலும் காணப்படுகின்றன. இவற்றில்தாம் வீட்டின் வாயில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் கதவுகள் மரத்திலானவை. வீட்டிற்குள் நுழைந்தவுடன் முற்றம் தெரிகிறது. இதன் இருபுறங்களிலும் அறைகள் உள்ளன, இரண்டாவது வகைக் கிராமத்தில் பாதுகாப்புச் சுவர் இல்லை. இங்கு வீடுகள் தனித்தனியாக ஆனால் ஏறத்தாழ வரிசையாகக் காணப்படுகின்றன. தனித்து அமைந்த இந்த வீடுகளுக்குப் பக்கத்தில் கால்நடைகளுக்கு மண்சுவரால் கட்டப்பட்ட கொட்டகை உள்ளது. வீட்டிற்கும் தெருவிற்கும் இடையில் இக் கொட்டகை அமைந்திருக்கிறது. சில இடங்களில் பல வீடுகளுக்கும் ஒரே ஒரு முற்றம் பொதுவாக இருக்கிறது. இங்குள்ள மலைப் பகுதிகளில் வீடுகள் பரவலாகவும் தனித்தனியாகவும் காணப்படுகின்றன.

பஞ்சாபிலும் காஷ்மீரிலும் கிராமங்கள் சுற்றுப்புறத்தைவிடச் சற்று உயர்வான தலத்தில் பொதுவாக அமைகின்றன. இது மட்டுமல்லாமல் அவை நீர்நிலைகளுக்கு அருகிலேயே குழுமியிருக்கின்றன. இயற்கையான நீர்நிலைகள் இல்லாதுபோனால் குளம் அல்லது கிணறு வெட்டப்பட்ட பின்னரே கிராமங்களை அங்கு அமைக்கிறார்கள். குளம் அல்லது கிணறு தோண்டும் போது, வெளியே எடுக்கப்பட்ட மண் சுற்றுப் புறத்தில் குவித்துவைக்கப் படுகிறது. குவியலான இந்த மண் மேட்டில் வீடுகளைக் கட்டிக் கொள்வதால் இவை சுற்றுப்புறத்திலிருக்கும் பழைய வீடுகளை விட உயரமாகக் காணப்படுகின்றன. பொதுவாக இந்த வீடுகள் நீள் சதுர வடிவில் (oblong) ஒன்றுக்கொன்று நெருக்கமாக அமைக்கப்படுகின்றன. கூரைகள் தட்டையானவை. அவை மண்ணால் கட்டப்பட்டும் பூசப்பட்டும் இருக்கின்றன. வீடுகளுக்கு வாசல் உள்ளது. இவை கிழக்கு அல்லது மேற்குத் திசையில் சூரியனைப் பார்த்தவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக வடக்குத் திசை விரும்பப்படுவதில்லை. கதவைத்தவிர வீட்டில் வேறு திறப்புகள் இல்லை. மொட்டை மாடி உறங்குவதற்கும் தானியங்களை உலர்த்துவதற்கும் பயன்படுகிறது.

சமவெளிகளில் வீடுகள் ஒழுங்கற்றுக் காணப்படுகின்றன. நீர்ப்பாசன வசதிகள் நிறைந்த பகுதிகளில் விளைநிலங்களில் கட்டடங்கள் கட்டப்படுவதில்லை; கிராமத்தின் மையப்பகுதியில்

செல்லும் சாலையே அதன் மையக் கருவாகும். அங்குதான் கடை வீதியும் சந்தையும் உள்ளன. இந்த மூலக்கருவைச் சுற்றி இரட்டை வரிசைகளில் வீடுகள் வட்டமாகக் காணப்படுகின்றன. இரண்டு வரிசைக்கும் இடையில் குறுகலான தெரு ஒன்று முக்கிய சாலையுடன் இணைகிறது. உள் வட்டத்தில் காணப்படும் வீடு களின் பின்புறம் சந்தையைப் பார்த்தவாறும் வெளிவட்டத்தி லுள்ள வீடுகள் திறந்தவெளியைப் பார்த்தவாறும் உள்ளன. இந்த இரு வரிசை வீடுகளும் கிராமத்திற்கு அரண்போல் தோற்ற மளிக்கின்றன. மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும், சுற்றத் தாரின் அருகிலேயே இருக்கவேண்டுமென்ற ஆவலினாலும் புதிய கட்டடங்கள் எல்லாம் ஒரே இடத்தில் நெருக்கமாக அமைந்திருக் கின்றன.

பஞ்சாபில் மேற்கிலும் வடக்கிலும் நெருக்கமான குடியிருப் புகள் அவ்வளவாகக் காணப்படவில்லை. இங்குள்ள கிராமங்களின் ஊடாகப் பெரியசாலைகள் செல்கின்றன. பொதுவாக ஆற்றோரங் களிலுள்ள நிலங்கள் ஜாட் (Jat) இனத்தவருக்கே சொந்தமாக இருக்கிறது. எனவே, இங்கு ஒழுங்கான கிராமச் சமூகம் காணப்படுகிறது. ஆற்றைவிட்டு விலகிச் சென்றால் கிராமங்க ளெல்லாம் கிணறுகளைச் சுற்றிக் குவியலாகக் காட்சியளிக் கின்றன. ஆகையால், இங்குக் கிராமச் சமூகம் ஒழுங்கான அமைப்புடன் இல்லை. பல இடங்களில் கிராம நத்தமே (village site) காணப்படுவதில்லை. ஒவ்வொரு குடியானவனும் தனக்குக் கிணறு ஒன்றைத் தோண்டிக்கொண்டு, வீட்டையும் அங்கேயே கட்டிக்கொண்டு வாழ்வதால் குடியிருப்புகளுக்குக் கிராமஅமைப்பு ஏற்படவில்லை. கடைத் தெருவைத் தவிர மற்ற இடங்களில் ஒரு சில வீடுகளே காணப்படுகின்றன.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் மட்டும் பெரிய கிராமங்கள் உள்ளன. ஆற்றுத் திடல்களில் (terraces) விவசாயம் நடை பெறும் பகுதிகளில் மட்டும் குடியிருப்புகள் பரவலாக உள்ளன. இங்கு வீடுகள் கனத்த கூரையமைப்புக் கொண்டுள்ளன. கூரைக்கு மரப் பலகைகள் (timber) பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. செங்கல் அல்லது கற்களினால் சுவர்கள் கட்டப்படுகின்றன. இரண்டு அல்லது மூன்று அடுக்கு வீடுகள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. சுவருக்குச் செம்மண் பூசப்படுகிறது. ஆடு மாடுகளைக் காட்டு விலங்குகளிடமிருந்து காப்பதற்காகச் சில இடங்களில் வீடுகளைச் சுற்றி இரண்டு மண்சுவர்கள் கட்டப்படு கின்றன. இந்தச் சுவர்களுக்கு நடுவில் முட்கள் குவித்து வைக்கப் பட்டிருக்கின்றன.

கங்கைச் சமவெளி

கங்கைக்கும் யமுனை நதிக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியில் பெரும்பாலும் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்ட நெருக்க மான கிராமங்களே காணப்படுகின்றன; வீடுகளுக்குச் செங்கல் அல்லது செம்மண் பயன்படுகிறது. சில இடங்களில் ஒரே மதிற் சுவருக்குள் நான்கு அல்லது ஐந்து வீடுகளும் காணப்படுவதுண்டு. சிவாலிக் (Siwalik) மலைகளின் அடிவாரத்தில் புற்களினால் (grass) அமைக்கப்பட்ட குடிசைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. ஏனெனில் இங்கு மழை அதிகமாகப் பெய்வதால், வீடுகளுக்கு மண்ணைப் பயன்படுத்தினால் எளிதில் கரைந்துவிடும். அலிகார் (Aligarh) பகுதியில் ஜமீந்தாரின் பங்களாவைச் சுற்றிலும் பொதுவாக வீடுகள் குழுமி இருக்கின்றன. இங்கு வசதியான வர்களின் வீடுகளில் மட்டுமே மரமும் ஓடும் பயன்படுத்தப்பட் டுள்ளன. சிலவற்றில் தட்டையான கூரையும் காணப்படுகிறது. ரோஹில்கந்தில் (Rohilkand) உள்ள குடியிருப்புகள் மூலக்கரு வகையைச் சார்ந்ததாகும்.

தேரி (Tehri), கார்வால் (Garhwal), அல்மோரா (Almora), நைனிடால் (Nainital) ஆகிய பகுதிகளில் வாழும் போதியா இனத்தவர்கள் (Bhotias) விவசாயமும் வாணிகமும் செய்வார் கள். இவர்களுக்கு இரண்டு அல்லது மூன்றுவகை வீடுகள் உள் ளன. இந்த வீடுகளில் இவர்கள் ஓர் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளே தங்கியிருப்பார்கள். வாணிகத்திற்காக வேறு இடங்களுக்கு மாறிச் செல்லத்தக்க வகையில் இவர்களுக்கு எளி தில் சுமந்து செல்லும் வீடுகளும் உள்ளன. அயோத்தியில் (Oudh) நெடுங்காலத்திற்கு முன்பே தற்காப்புக்காகப் பெரிய கிராமங் களில் வாழ்ந்து வந்தனர். ஆனால், தற்போது அயோத்தியில் பெரிய கிராமங்கள் இல்லை; விவசாயத்தில் ஏற்பட்ட வளர்ச்சியி னால் இவர்கள் பெரிய கிராமங்களை விட்டுச் சிறிய குக்கிராமங் களில் வாழத் தொடங்கினர். எனவே, நெருக்கமான அமைப்பி லிருந்து பரவலான அமைப்புக்கு மாறிச்சென்றது அயோத்தியில் காணப்படுகின்ற சிறப்பாகும். சோன் (son) நதிக்கரையிலும் அயோத்தியைப் போலவே குடியிருப்புகள் பரவலாக உள்ளன.

வடகிழக்குப் பகுதி

கீழ்-கங்கைச் சமவெளி, பீகார் ஆகிய பகுதிகளில் தக்கா ணம், உத்தரப்பிரதேசம், வங்காளம் போன்ற பகுதிகளில் காணப்படுவதுபோலவே, வயல்களுக்கு நடுவில் குழுமிய கிராமம்

காணப்படுகிறது. தென்மேற்கு பீகாரில் வசதியுள்ளவர்களின் வீடுகள் தட்டையான கூரையமைப்புக்கொண்டிருக்கின்றன. ஒரிசாவில் இரட்டைக் கூரைகள் காணப்படுகின்றன. செம்மண்ணுல் அமைக்கப்பட்ட சரிவுகொண்ட கூரைக்குமேல், இன்னொரு ஓலைக்கூரை வேயப்பட்டிருக்கிறது. மழை, வெயிலிலிருந்து மண் கூரையைக் காப்பதற்காக அதன்மேல் ஓலை வேயப்படுகிறது. மண்கூரை குளிர்காலத்தில் வெப்பத்தைத் தேக்கி வைக்கிறது; கோடையில் குளிர்ச்சியையும் தருகிறது (படம் 35). ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் மண்குடிசை மட்டுமே அமைத்துக்கொள்கிருர்கள்.

கிழக்கு பீகாரில் வாழ்கின்ற சான்தால் (Santhals) இனத்தவர் இந்தியாவின் இரண்டாவது பெரிய பழங்குடியினர் ஆவர். இவர்களுடைய கிராமம், சாதாரணமாக மேட்டு நிலங்களிலும், வரண்ட பகுதிகளிலும் அமைக்கப்படுகிறது. சான்தால் (Santhal) கிராமத்தில் மரங்களே காணப்படுவதில்லை. இம் மக்கள் மரங்கள் வளர்ப்பதை விரும்புவதில்லை. இங்கு ஏதாவது மரம் காணப்பட்டால் அது பிற இனத்தவர் வளர்த்ததாக இருக்க வேண்டும். சான்தால் கிராமத்தில் காணப்படும் மற்ருெரு சிறப்பு என்னவென்ருல் இங்கு ஒரே ஒரு நீண்ட தெருதான் உள்ளது. இதன் இரு புறத்திலும் வீடுகள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிற்கும் மதிற்சுவர் அல்லது வேலி உள்ளது.

சோட்டா நாகபுரியிலுள்ள கிராமங்களில் வீடுகள் சாலையை விட்டுச் சற்றுத் தள்ளியே அமைந்திருக்கின்றன. கிராமங்களில் சந்துகளைத் தவிர்த்துப் பெரிய தெருக்கள் காணப்படுவதில்லை. வீடுகள் தாறுமாருகக் கட்டப்பட்டிருப்பதால் தெருக்கள் வளைந்து வளைந்து செல்லுகின்றன. வீடுகள் செம்மண் அல்லது மூங்கில் களினுல் கட்டப்பட்டுள்ளன. சுவர்களுக்குச் செம்மண் அல்லது மாட்டுச் சாணம் பூசப்பட்டிருக்கிறது. சரிவுள்ள கூரைகள் வளைந்த நாட்டு ஓடுகளினுலோ (country tiles) கோரைப் புற்களினுலோ (wild grass) வேயப்பட்டிருக்கின்றன. கூரையைத் தாங்கிக் கொள்ள சால் மரத்திலுலான தூண்கள் பொருத்தப்படுகின்றன. ரெய்ப்பூர் (Raipur) மாவட்டத்தில் வசிக்கும் காமர் (Kamar) இனத்தவரின் கிராமத்தில் 10 அல்லது 12 வீடுகளே காணப்படுகின்றன. கிராமத்தின் மையப்பகுதியில் திறந்த வெளி உள்ளது. வீடுகள் குழுமியிருந்தாலும், சாதியின் அடிப்படையில் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பொதுவாக இவர்கள் காட்டுப்பகுதியில் குன்றின் உச்சியில் குடியிருப்பை ஏற்படுத்திக் கொள்வார்கள். இவர்களுடைய வீடுகள் செவ்வக

வடிவம் கொண்டவை. இதில் ஒரே ஓர் அறைதான் இருக்கும். இக் குடியிருப்புகளுக்கு அருகில் ஏரியோ குளமோ காணப்படு கிறது. காமர் (Kamar) இனத்தவர்களில் ஏழைகள்கூட சமைய லுக்கும் உறங்குவதற்கும் தனித்தனிக் குடிசைகளைக் கட்டிக் கொள்கிறார்கள். தானியங்களைச் சேகரிப்பதற்கும், நெல் குற்று வதற்கும் விருந்தினர் தங்குவதற்கும் தனித்தனிக் குடிசைகள் கட்டப்படுவதுண்டு.

சாத்புரா (Satpura) பீடபூமியிலும், நர்மதா (Narmada) பள்ளத்தாக்கிலும் வாழும் கோன்டு (Gonds) இனத்தவர்தான் இந்தியாவிலேயே மிகப் புராதனமான பழங்குடிகளாவர். இவர் களுடைய பண்பாட்டில் காணப்படும் வேற்றுமையின் காரண மாக இவர்களுடைய குடியிருப்புகள் கிராமம் என்று சொல்லும் அளவிற்கு இல்லை.

வடக்கு ஒரிசாவில் காணப்படும் புய்யா பழங்குடிகளின் (Bhuiyas) கிராமங்கள் ஆற்றங்கரை, மலையடிவாரம் போன்ற இடங்களில்தான் அமைந்திருக்கின்றன. புய்யர்கள், கிராமங் களில் ஏரிகள் வெட்டுவதைத் தங்கள் சமயக் கொள்கைக்கு எதி ரான செய்கையாகக் கருதுகிறார்கள். வீடுகள் சாலையை ஒட்டி இருபுறமும் வரிசையாக அமைந்துள்ளன. ஒரிசாவின் தெற்கி லும் ஆந்திராவிலும் சாலையின் இருபுறத்திலும் வீடுகள் இரட்டை வரிசைகளில் நீளமாகக் காணப்படுகின்றன. இது பிரா மணர்களிடமிருந்து பின்பற்றப்பட்டதால், பிராமண-கிராமம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், இதே அமைப்புத் தென் னிந்தியாவில் கேரளத்திலும் காணப்படுகிறது. ஒரிசாக் காடு களில் வாழும் சவரா இனத்தவர் (Savaras), காடுகளை அழித்து மலைச் சரிவுகளில் திடல்களை அமைத்து (terrace) விவசாயம் செய்து வாழ்கின்றனர். மலைகளிலே வாழும் இவர்கள், தற்காலிகக் குடியிருப்புகளை எதிரிகளின் கண்களுக்குத் தெரியாதவாறு மறை வாக அமைத்துக் கொள்கின்றனர். இவ் வீடுகள் செவ்வக வடி வில் மரத்துண்டுகளால் அமைக்கப்பட்டுள்ளன. இதன் இடை யில் கற்களை வைத்துச் செம்மண் கொண்டு கட்டுகிறார்கள்; கூரைகள் புற்களினால் வேயப்பட்டிருக்கின்றன.

ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளிலும் நீள் வடிவக் குடி யிருப்புகள் காணப்படுகின்றன. டெல்டா பகுதியில் மட்டுந் தான் நெருக்கமான குடியிருப்பு காணப்படுகிறது.

வங்காளம்

வங்காள டெல்டாவில் குறிப்பாகக் கிழக்குப்பகுதியில் குடியிருப்புகள் தனித்தன்மை பெற்றிருக்கின்றன. குடியிருப்புகள் பெரும்பாலும் பரவலாகவே உள்ளன. ஆனால், இந்தப் பரவல் தன்மை சற்று வேறுபட்டுக் காணப்படுகிறது. இங்குப் பண்ணைக் குடியிருப்புகள் ஒன்றுக்கொன்று நெருக்கமாக அமைந்திருப்பதால் அவைகளைத் தனித்தனியே பிரித்தறிவது கடினம். மழைக் காலத்தில் இங்கு வெள்ளம் சூழ்ந்துவிடுவதால், குடியிருப்புகள் தனித்தனியாகச் சிறு தீவுகளைப் போல் (Islands) காணப்படுகின்றன. மழையின் அளவு மிகுதியாக இருப்பதால், இங்குள்ள வீடுகளுக்குத் தட்டியினால் ஆன சுவர்களும், ஓலையினால் ஆன கூரைகளும் அமைக்கப்படுகின்றன. இதனால் மழைநீர் எளிதில் வடிந்துவிடுகிறது. அடிக்கடி ஏற்படும் புயலையும் தாங்கக்கூடிய வகையில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அஸ்ஸாம்

அஸ்ஸாம் பகுதியில் தற்காப்பின் காரணமாகக் கிராமங்கள் மலைகளிலும் கிளைக்குன்றுகளிலும் அமைந்திருக்கின்றன. இம்மலைக் காடுகளிலுள்ள பள்ளத்தாக்குகளில் மலேரியா நோயின் ஆபத்து இருக்கிறதென்றாலும், தார் போடப்படாத சாலைகளின் வழியே போக்குவரத்து நடைபெறுகிறது. அஸ்ஸாமில் காடுகளை அழித்து அமைக்கப்பட்ட குடியிருப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. இங்கு 6 முதல் 12 குடிசைகள் வரையுள்ள சிறு குக்கிராமங்கள் அதிகமாக உள்ளன; குடியானவர்கள் வரண்ட காலங்களில் இக்குடிசைகளிலும், மற்றக்காலங்களில் பெரிய கிராமங்களிலும் வசிக்கின்றனர்.

இந்தியாவிலுள்ள கிராமங்கள் புறச் சூழ்நிலை, சமூகப் பொருளாதாரத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்தவை; இவை கட்டடப் பொருள்கள் ஆகியவற்றில் மட்டுமல்லாமல் சமூக அமைப்பிலும் மாறுபட்டு விளங்குகின்றன. சாதி அடிப்படையில் சமூகப் பிரிவுகள் பல கிராமங்களில் காணப்படுகின்றன. சேரி போன்ற (Slum) துணைக் கிராமங்கள் தாழ்ந்த சாதியினருக்காக அமைக்கப்படுகின்றன. இவை கிராமத்தின் ஒரு பகுதிதான் என்றாலும், அதனின்று சில நூறு கஜ தூரத்தில் தான் அமைந்திருக்கும். இத்தகைய சேரிகள் தென்னிந்திய கிராமங்களில் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் அமைந்திருப்பதைக் காணலாம். பொதுவாக, சேரியில் குடிசைகள் இரண்டு வரிசைகளில் காணப்படுகின்றன. இவற்றின் இடையில் குறுகிய

தெருவும் அதன் முனையில் சிறு கோயில் ஒன்றும் காணப்படுகிறது. குடிசைகள் கனத்த மண்சுவரினால் கட்டப்பட்டுப் பனையோலையால் கூரை வேயப்பட்டிருக்கிறது. வாயிற்படி தாழ்வாகவும் சிறியதாகவும் இருப்பதால், குனிந்துதான் வீட்டிற்குள் செல்லவேண்டும். சன்னல்கள் எதுவும் இல்லாத இக் குடிசைகளுக்கு, வாயிற்படியின் மூலந்தான் வெளிச்சம் வரவேண்டும். வீட்டில் சில மண்பானைகளைத் தவிர வேறு சாமான்களைக் காண்பது அரிது. இதேபோல் வட இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்திலுள்ள குன்றன் (Kunran) கிராமத்தில் சுமார் 1000 மக்களே வாழ்ந்த போதிலும் அவர்கள் பல்வேறு வகுப்பைச் சார்ந்தவர்கள். ஆதலால், ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவை தவிர நிலச் சொந்தக்காரர்களின் வீடுகள் கிராமத்தின் மையப் பகுதியிலும், அதனை அடுத்து வணிகர்களும், எல்லைப்பகுதியில் குடியானவர்களும், மற்றக் கூலியாட்களும் காணப்படுகிறார்கள். செய்யும் தொழிலை அடிப்படையாக வைத்து, இங்கு வகுப்புப் பிரிவுகள் செய்யப்பட்டுள்ளன. தெருக்களின் பெயர்களும், அங்குள்ள மக்கள் செய்யும் தொழிலின் அடிப்படையில் காணப்படுகின்றன. உதாரணமாக, கொல்லர்கள் வசிக்கும் தெரு கொல்லன் தெரு என்றும், பொற்கொல்லர்கள் வசிக்கும் தெரு தட்டாரத் தெரு என்றும், குயவர்கள் வசிக்கும் தெரு குயத் தெரு என்றும் வழங்கப்படுகிறது.

15. நகர்ப்புறக் குடியிருப்புகள்
(Urban Settlements)

பொருள்

நகர்ப்புறப் புவியியல் (urban geography) என்பது புவியின் மீது நகரப் பண்புகளின் பரவலையும் அவைகளுக்குள்ள தொடர்பையும் பற்றியதாகும்.

நகரம் என்பது சிறப்புப் பணியும், சமூக இயக்கமும் (Community organisation) கொண்ட மனித உறைவிடமாகும். நகரங்களுக்குக் குறிப்பிட்ட பரவல் தன்மை இருப்பதாலும், அவற்றின் வளர்ச்சிக்கும் புவி அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாலும் புவியியலில் நகரக் குடியிருப்பைப் பற்றி (urban settlement) அறிய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

சமூக ஆராய்ச்சிகளிலும் (Social surveys), நகரத் திட்ட அமைப்புகளிலும் (Town planning), பொது நிர்வாகத்திலும் (Public administration), விற்பனைத் துறையிலும், போக்கு வரத்துத் துறையிலும், எதிர்காலத் திட்டங்களுக்கும், நிகழ்கால நிர்வாகத்திற்கும் நகர்ப்புறப் புவியியல் அறிவு (urban geography) தேவைப்படுகிறது.

நகர்ப்புறக் குடியிருப்புகள் அவற்றின் அளவில் (size) இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. எனினும், நகரங்களின் பண்பை அறிவதற்கு அளவும் நிர்வாகத் தகுதியும் அவசியமற்றவை யாதலால் அந்த வேறுபாடுகள் நம் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால், நகரத்தின் பணியும் (function) வடிவமும் (form) அந்த நகரத்தின் உண்மையான நகர்ப்புறப் பண்பை நமக்கு எடுத்துக்காட்டுபவையாகும். ஒரு நகரத்தின் அமைவிடத்தைப்

புரிந்துகொள்ள வேண்டுமெனில் அதன் பணியைப் புரிந்து கொண்டிருக்கவேண்டும், ஒரு நகரம் முற்காலத்திலும் தற்காலத்திலும் செய்துவந்த பணியே அதன் அமைவிடத்தைத் (location) தீர்மானிக்கிறது. அதுமட்டுமின்றி அதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் அதுவே காரணமாகிறது.

விவசாயத்தைத்தவிர வேறு தொழில்களை மேற்கொண்டுள்ள மக்கள் வாழ்ந்துவரும் பகுதியே நகர்ப்புறம் எனப்படுகிறது. எனவே, ஒவ்வொரு நகரத்திலும் பல்வேறு தொழில்களை மேற் கொண்டுள்ள மக்கள் வாழ்கிறார்கள். பெருவாரியான மக்கள் மேற்கொண்டுள்ள தொழிலைப் பொறுத்தே அந்த நகரத்தின் பணியும் (function) அமைகிறது. எனவே, நகரத்தின் பணி இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. தொழில், நிர்வாகம், வாணி கம் போன்ற ஏதாவது ஒன்று அல்லது இரண்டு பணிகளில் இது சிறப்புத்தன்மை (specialisation) பெறுகிறது. பழங் காலத்து நகரங்கள் பெரும்பாலும் அறிவாலயங்களாக இருந்து வந்தன. ஆனால், தற்காலத்தில் தொழில் நகரங்களே மிகுதி யாகக் காணப்படுகின்றன.

நகரத்தின் நிலவரைப் படிவமும் (lay out), கட்டடங்களும் நகரத்தின் தோற்றத்தைத் தனிப்படுத்திக் காட்டுகிறது. தோற்றக் கூறுகளான (form elements) வியாபாரம், சேமிப்புக் கிடங்கு, வீடுகள், கட்டடங்கள் ஆகியவை நகரங்களில் சிறப்புத்தன்மை பெறுகின்றன.

சுற்றியுள்ள நிலப்பகுதிக்குப் பணி செய்வதற்காக நகரங்கள் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்கின்றன. இப்பணிகள் அந்த இடத்தின் இயற்கை வளத்தோடு தொடர்புடையதாக இருக்கும். இவை, சமூக அமைப்போடு நடைபெறும்போது ஓர் இடம் ஒரு நகரத்தின் பண்பைப் பெற்று விடுகிறது. நகர்புறக் குடியிருப்பில் குறிப்பிட்ட பணிகள் காணப்படுவதால் அந்நகரின் நிலவரைப் படிவம் (plan), அதன் கட்டடங்கள் ஆகியவை கிராமப்புறக் குடியிருப்பின் நிலவரைப் படிவம், மற்றும் கட்டடங் களின் அமைப்பினின்றும் பெரிதும் மாறுபட்டு விளங்குகின்றன. நகர்ப்புறப் பணிகள் அனைத்தும் கடைகளிலும், தொழிற்சாலை களிலும், அலுவலகங்களிலும், கிடங்குகளிலும், பொதுக் கட்டடங் களிலும் நடைபெறுகின்றன. இவைகளுக்கு வெளியிடத்துத் தொடர்புகளெல்லாம் தெருக்கள், சாலைகள், ஆறுகள், ரெயில் கள் போன்றவற்றின் மூலமாகவே ஏற்படுகின்றன. ஆகவே, நகர இயக்கத்திற்குப் போக்குவரத்து வசதிகள் இன்றியமை யாதவையாகும்.

புவிப் புறவியலில் (geomorphology) உள்ளதுபோல் குடியிருப்புப் புவியியலிலும் (Settlement geography) மூன்று அடிப்படை நோக்கங்கள் அல்லது பண்புக்கூறுகள் (aspects) உள்ளன. இவை கட்டமைப்பு (structure), செய்முறை (process), படிநிலை (stage) ஆகியவையாகும். கட்டமைப்பு என்பது கட்டடங்கள், தெருக்கள் ஆகியவற்றைக் குறிப்பதாகும்; பணிக்குத் தக்கவாறு இது மாறுபடுகிறது. நகரத்தின் உருவவியல் (morphology) அல்லது அமைப்பு (form), அதன் நிலவரைப் படம் (plan), நிலப்பயன்பாடு (land use) அதாவது கட்டடங்களில் காணப்படும் பணி, கட்டடக்கலை (architecture) ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளது. இந்த மூன்றும் தன்னிச்சையாக வேறுபட்டிருப்பதால் எல்லையற்ற விதங்களில் நகரத் தோற்றங்களை உருவாக்குகின்றன. உதாரணமாக, சந்தை நகரங்களிலும் (market town), கோயில் நகரங்களிலும் (temple town) இவ்விரண்டையும் மையமாகக் கொண்டே கட்டடங்கள் எழுகின்றன. சமூகப் பொருளாதாரப் பண்புகளும் சமூக மரபுகளும் ஏற்படுத்தும் ஒவ்வோர் அமைப்பும் செய்முறை (process) ஆகும். உதாரணமாக, ஃபிரஞ்சுக்காரர்களால் (French) வளர்ச்சி பெற்ற பாண்டிச்சேரி நகரம் அவர்களின் மரபுப்படியே சதுர வடிவம் பெற்றுள்ளது. ஒவ்வொரு குடியிருப்புக்கும் உள்ள வரலாற்றைக் காணும்போது ஒவ்வொரு காலத்திலும் பலவிதக் குடியிருப்பு அமைப்புகள் தோன்றியிருக்கின்றன. ஒரே இடத்தில் வெவ்வேறு காலங்களில் தோன்றிய நாகரிகங்கள் பலவிதக் கட்டமைப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இதுவே, படிநிலை (stage) எனப்படுகிறது. உதாரணமாக, வெவ்வேறு காலங்களில் ஒரே இடத்தில் தோன்றிய பழைய டெல்லிக்கும், புதிய டெல்லிக்கும் (New Delhi) இடையே அமைப்பில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சிட்டி (city) என்ற ஆங்கிலச் சொல் லத்தீன் பதமான சிவிட்டாஸ் (civitas) என்பதிலிருந்து மருவியதாகும். சிவிட்டாஸ் என்ற சொல்லுக்கு நாகரிகம் என்று பொருள். நகரத்திற்கு இச் சொல்லைப் பயன்படுத்துவதிலிருந்து இவ்விடம் நாகரிகம் உள்ளவர்கள் வாழ்கின்ற பகுதி என்பது குறிப்பிடப்படுகிறது. இங்குதான் மனிதப் பண்பாடுகள் தோன்றி, வளர்ச்சி பெற்றுள்ளன. பல அறிவாலயங்களும், தொழில் துணுக்கமும், கலைகளும் நகரத்திற்குள்தாம் செழிப்புற்றிருந்தன.

ராபர்ட் லோபஸ் (Robert Lopez) என்பவர் நகரத்தைக் குறுக்குச் சாலைக்கு (Cross road) ஒப்பிட்டிருக்கிறார்; இவர்

நகரத்தைப் பழங்கால எகிப்திய ஹீரோகிளிப்புக்கு (Egyptian Hierogloph) ஒப்பிடுகிறார். இந்த அமைப்பில் ஒரு வட்டமும், அதன் விளிம்பிலிருந்து குறுக்கு நெடுக்காக இருகோடுகளும் செல்கின்றன. இக்கோடுகள் பலதரப்பட்ட மக்களும், வியாபாரிகளும், எண்ணங்களும் (ideas) ஒன்றாகக் கூடுகின்ற தன்மையைக் குறிக்கின்றன. இவ்வாறு ஒன்றாகக் கூடுமிடம் நகரம் என்பது குறிக்கப்படுகிறது. இதனைச் சுற்றியுள்ள வட்டம், அகழி (moat) அல்லது பாதுகாப்புச் சுவரைக் குறிக்கிறது. இவ் வட்டம் தற்காப்பை மட்டுமன்றி, நகரத்தின் நெருக்கத்தையும் குறிக்கிறது.

நகரங்களில் மக்கள் தொகை இயற்கையில் பெருகாமல் (natural growth) குடியேற்றத்தினால் (migration) பெருகி வந்ததால் நகரத்தை மனித இன விழுங்கி (consumer of mankind) என்று குறிப்பிடுவதுண்டு. நகரங்களைப்பற்றி நாம் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். நகரங்களின் கட்டுப்பாடற்ற வளர்ச்சியினால் ஏற்பட்டிருக்கும் நெரிசல், அசுத்தம், விஷக்காற்றுபோன்றவை மிகத் துரிதமாகச் சீர்திருத்தப்பட வேண்டியவைகளாகும். எனவே, நகரங்களை மனித உணர்வுகள் இறுதியில் போய்ச்சேரும் குப்பைத் தொட்டிகள் என்று (Rousseau) குறிப்பிடுகிறார். நகரங்கள் மனித வாழ்க்கையை மதிப்பின்றிச் செய்துவிட்டதாகப் பல அறிஞர்கள் கருதுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் தீர்வு காண வேண்டுமெனில் நகரத்தைப் பற்றித் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

கிராமம், நகரம் என்ற சொற்கள் இத்துணை அளவிற்குப் பயன்பட்ட போதிலும், உண்மையில் எது நகரம், எது கிராமம் என்பதை வரையறுப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. முதலாவதாகக் குடியிருப்புகள் தொடர்ச்சியாகப் பரவியிருக்கும் பகுதிகளில் தொகுப்பான பெரிய குடியிருப்பிலிருந்து (நகரம்) சிறிய சிதறிய குடியிருப்பு வரை எங்கே நகர்ப்புறம் மறைகிறது, எங்கே கிராமப்புறம் தோன்றுகிறது என்பதை வரையறுப்பது கடினமாகும். பெரு நகரம் ஒன்றை (metropolis) விட்டுத் தனித்த பண்ணைக் குடியிருப்பை நோக்கிச் செல்லும்போது அவை இரண்டும் பிரிகின்ற எல்லையைத் தெளிவாக அறிவது இயலாது. எனவே, பெருநகரின் விளிம்பு (fringe) என்று சொல்லப்படுகின்ற பகுதிக்குப் புற நகர் (suburb), துணை நகரம் (sub town), நகர்ப்புற கிராமம் (urban village), கிராம நகரம் (rurban) போன்ற பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன.

இரண்டாவதாக, ஒருகாலத்தில் நகரம் என்று கருதப்பட்ட குடியிருப்புகள் புதிய சூழ்நிலைகளில் நகரமாகத் தென்படுவதில்லை. முற்காலத்தில் நகரம் என்பது சந்தை நகரத்தையே (market town) குறிக்கும். எனவே, சந்தை இருந்தாலே அக் குடியிருப்பு நகரம் எனப்பட்டது. பழைய நகரங்களில் காணப்பட்ட அரண் அல்லது சுவர் (wall) கிராமத்திற்கும் நகரத்திற்கும் எல்லையாக இருந்தது. ஆனால், தற்கால நகரங்கள் பெரும்பாலும் தொழில் வளர்ச்சியினால் ஏற்பட்டவை. இவற்றில் வசிக்கின்ற மக்கள் கிராமப்புறங்களிலிருந்து குடியேறியவர்கள்தாம்.

மூன்றாவதாக உள்ள சிக்கல் என்னவெனில், பெரும்பாலான நாடுகளில் நகரத்தையும் கிராமத்தையும் பிறித்தறிவதற்குப் புள்ளிவிவரமோ நகரின் பணியோ பயன்படுவதில்லை. அதாவது மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலோ நகரத்தில் காணப்படும் பணியின் அடிப்படையிலோ இவை பிரிக்கப்படுவதில்லை. குறிப்பாகப் பழம்பெரும் நாடுகளில் அழிந்து போன நகரங்கள்கூட தம் பழைய கௌரவத்தையும் (Status), உரிமைகளையும் தொடர்ந்து பெறுகின்றன. இதனால் புதிய நகரங்களின் வளர்ச்சி சில சமயம் தடைப்படுகிறது.

நகரம் என்பது என்ன என்பதற்குப் பலவகையான விளக்கங்கள் தரப்படுகின்றன. உலகில் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு அடிப்படையில் நகரங்கள் வரையறுக்கப்படுகின்றன. இதற்கு மாறுபட்ட சமூக அமைப்பு, பண்பாடு, பொருளாதாரம் ஆகியவை காரணங்களாகும். உதாரணமாக, ஐஸ்லாந்தில் (Iceland) 300 பேர் அல்லது அதற்கு மேல் வசிக்கின்ற குடியிருப்பு நகரப் பணிகளை மேற்கொண்டதாகவே இருக்கும். ஏனெனில் கிராமப்புறத்தில் ஒரே குடியிருப்பில் இத்தகைய எண்ணிக்கையைக் காண்பது அரிது. இதற்கு மாறாக ஸ்பெயின், இத்தாலி ஆகியவற்றின் தென்பகுதியில் கிராமப்புறக் குடியிருப்பு என்பது அடிப்படையிலேயே தொகுப்பாக அமைந்ததாகும். எனவே, இங்குக் கிராமங்களிலும் மக்கள் தொகை 8000 முதல் 10000 வரை காணப்படுகிறது. எனவே, நகரத்தின் அளவும், மக்கள் தொகைச் செறிவும் கிராமத்தைவிட அதிகமாக இருக்க வேண்டுவதில்லை. உலகிலேயே ஆஸ்திரேலியாவில் அதிக அளவிற்குக் குடியிருப்புகள் நகர்மயமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இங்கு மக்கள் தொகைச்செறிவு மிகவும் குறைவாகவே உள்ளது. இதற்கு மாறாக இந்தியாவில் நகர்ப்புற மக்களின் சதவிகிதம் மிகவும் குறைந்து காணப்பட்டாலும், மக்கள் தொகைச் செறிவு மிக அதிகமாகவே உள்ளது. டென்மார்க் (Denmark), ஸ்வீடன்

Sweden), பின்லாந்து (Finland) போன்ற நாடுகளில் 200 பேர் வசிக்கும் இடம் நகரம் எனப்படுகிறது. ஆனல், கிரீஸில் (Greece) 10000 பேர் இருந்தால்தான் நகரம் என்று சொல்லப்படுகிறது. கானடாவிலும், வெனிசுவேலாவிலும் 1000 பேர்கள் வசிக்கும் இடம் நகரம் எனப்படுகிறது. அமெரிக்காவில் 2500 பேர்களும், கானவில் (ghana) 5000 பேர்களும் வசிக்கும் பகுதிகளே நகரங்களாகின்றன, இந்தியாவில் எண்ணிக்கையின் அடிப்படையில் நகரங்கள் குறிப்பிடப்பட்டாலும், மக்களின் தொழில் இதில் வலியுறுத்தப்படுகிறது. இங்கு நகரம் என்று சொல்லப்படுகின்ற குடியிருப்பில்குறைந்தது 5000 பேர்கள் வசிக்கவேண்டும். இவை தவிர, வயதுவந்தவர்களின் எண்ணிக்கையில் 75 சதவிகிதம் விவசாயத்தைத்தவிர, வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கவேண்டும். இத்துடனில்லாமல் இங்கு மக்கள் தொகைச்செறிவும் ஒரு சதுர மைலுக்கு 1000 பேர்கள் இருக்கவேண்டும்.

மக்கள் தொகைச்செறிவு பொதுவாக எங்கும் நகர்ப்புறத்தை வரையறுப்பதற்கு அடிப்படையாகக் கொள்வதில்லே. நகர்ப்புறத்திற்கு, மக்களின் எண்ணிக்கையைவிட அவர்களின் தொழிலே முக்கியமானதாகும். விவசாயத்தைத் தவிர்த்து வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மக்கள் வசித்து வரும் பகுதியே நகரம் என்று கொள்ளலாம்.

துருக்கி (Turkey), செக்கோஸ்லாவாகிய (Czechoslovakia), ஐக்கிய அரபு ஆகிய நாடுகளில் நிர்வாகப் பணியின் (administrative function) அடிப்படையில் நகரத்தைப்பிற குடியிருப்பிலிருந்து வகைப்படுத்துகிருர்கள்.

ஐக்கிய நாடுகள் சபை (United Nations) நகரத்தின் மக்கள் தொகை 5000 க்கு மேல் இருக்கவேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளது. எப்படியிருப்பினும் நகரம் என்பதற்கு உள்நாட்டு விளக்கத்தை ஏற்றுக்கொள்ளுதலே முறையாகும்.

16. நகர்ப்புறமாக்கச் செயல்முறை

(Process of urbanization)

நகர்ப்புற மக்கள் தொகைப் பெருக்கமே நகர்ப்புறமாக்கம் (urbanization) எனப்படுகிறது. நகர்ப்புறத்தில் மக்கள் தொகை இயற்கையாகவும், குடியேற்றத்தினாலும் அதிகரிப்பதுண்டு. எனவே, நகர்ப்புறமாக்கம் என்பது மக்களின் குடிபெயர்ச்சியோடு தொடர்பு கொண்டிருக்கிறது. சமூகத்திலிருந்து (agrarian society), விவசாயம் மேற்கொள்ளாத சமூகத்திற்கு (non-agricultural society) மாறி வருவதையே நகர்ப்புறமாக்கம் குறிக்கிறது. நகரத்தில் சிறப்புப் பொருளாதாரப் பணிகள் நிறையக் காணப்படுகின்றன. அதனால், வேலை வாய்ப்பு அதிகமிருக்கிறது. திறமைமிக்கவர்கள் தங்கள் சமூகத்திலிருந்து வேலைக்காக நகரங்களுக்கு வந்துவிடுகின்றனர். உணவு உற்பத்தி உபரியாக இருப்பதால், நகரத்தில் ஒவ்வொரு சமூகத்தினரும் ஒரு சிறப்புப் பணியில் ஈடுபட வசதி ஏற்படுகிறது. இதன் விளைவாக மதத்தலைவர்களும், கலைஞர்களும், வணிகர்களும் அவரவர்களுடைய சிறப்புப் பணியில் ஈடுபடலாயினர். எனவே, நகர்ப்புறமாக்கம் என்பது பொருளாதாரச் சிறப்புப் பணிகளின் வளர்ச்சியையும், தொழில் வளர்ச்சியையும் குறிப்பதாகும். தேவைகளுக்காக மட்டும் (snbsistence) வாழ்ந்த நிலையிலிருந்து முன்னேற்றம் அடைவதற்குச் சிறப்புப் பணிகளில் ஈடுபடுவது ஒன்றுதான் சிறந்த வழியாகும். சிறப்புப் பணிகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகையால் அவர்கள் ஒரே இடத்தில் குழுமி வசிக்கத் தொடங்கினர், இதுவே, நகரத்தின் மக்கள் தொகைப் பெருக்கத்திற்குக் காரணம். இந்தப் பெருக்கமே நகர்ப்புறமாக்கம் எனப்படுகிறது.

லாம்பார்டு (Lampard) கருத்துப்படி, நகர்ப்புறமாக்கத்தில் நகரத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் புதிய அனுபவங்கள் ஏற்

படுகின்றன. இதுதவிர, மக்கள் மேற்கொண்டிருக்கும் பணியிலும் பொருளாதார அமைப்பிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்படுகின்றன. நகரில் வாழும் மக்கள் தொகையின் இயல்பும் இவ்வாறே மாற்றத்திற்குள்ளாகிறது. இதேபோல் வெர்த் (Wirth) என்பவர் சமூகத்தை ஆராய்ந்து அதன் நகர்ப்புறத் தன்மைக் கொள்கையை (theory of Urbanism) வெளியிட்டுள்ளார். இக்கொள்கையின்படி கூடிவாழும் மக்கள் தொகையின் அளவு அதிகரிக்க அதிகரிக்க அவர்களுக்கிடையே உள்ள உறவும் குறைந்துவிடுகிறது. அவர்களுக்கிடையே இருந்த உறவு மட்டுமன்றி, அருகாமையில் இருக்கிறோம் (nearness) என்ற எண்ணமும், ஒரே மரபின் கீழ் வசிக்கவேண்டும் என்ற உணர்வும் சிறிது சிறிதாக மறைந்துவிடுகிறது. இந்நிலையில், அங்குச் சமூகப் பற்றுதலுக்குப் பதிலாகப் போட்டியும், பொறாமையும் வளர்ந்துவிடுகிறது. எனவே நகரமக்கள் ஒருவருக்கொருவர் மேலெழுந்தவாரியாகவே (superficial) பழகுகின்றனர். தங்களுக்கு அடுத்தற்போல் வசிக்கின்றவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளும் ஆர்வம் இவர்களுக்கு எழுவதில்லை. கூடிவாழ்ந்தாலும், சமூக உறவு ஏதுமில்லாமல் வாழ்வதால் நகரமக்கள் கிராம வாழ்க்கையின் பின்னணியிலிருந்து முற்றிலும் மாறிவிடுகின்றனர். எனவே, நகரத்தில் வாழும் குடிமகனுக்கு, தான் ஒரு சமூகத்தைச் சார்ந்தவன் என்ற உணர்வு போய்விடுவதால், தனிமை எண்ணமே ஓங்கி நிற்கிறது. மேலும், மக்கள்தொகைச் செறிவு அதிகமாகிவிட்டால் வறுமை, செழிப்பு போன்ற ஏற்றத்தாழ்வுகள் தோன்றுகின்றன. நகரத்தில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்தால்கூட அவர்களிடையே பாசம் இல்லாமையால் போட்டி உணர்ச்சி வந்துவிடுகிறது. போட்டி உணர்ச்சியினால் விபரீதம் நேராமலிருக்கக் கட்டுப்பாடும், சட்டமும் கொண்டுவரப்படுகிறது. அன்றாட வாழ்க்கை இயந்திரம்போல் ஒரே மாதிரியாக அமைந்து விடுவதால் நகரச்சமூகம் (urban society) தன்னைச் சரிவர நிர்வாகம் செய்துகொள்ள இயலாமல் இருக்கிறது. எனவே. நகரத்தில் காணப்படும் கடிகாரமும் சாலைவீதி முறைகளும் நகரத்தை நிர்வாகம் செய்வதுபோல் தோன்றுகிறது. பகலில் குறிப்பாக அலுவலக நேரங்களில் சாலைகளில் தொடர்ந்து செல்லுகின்ற ஊர்திகளும், அவற்றின் ஓசையும், ஆங்காங்கே காணப்படுகின்ற பச்சை சிவப்பு விளக்குகளும், அறிவுப்புப் பலகைகளும், இரவில் ஒய்ந்து கிடப்பது இதனை உணர்த்துகிறது. நகரம் என்பது தன்னிச்சையானதன்று. அது பெரிய சமூகம்; பண்பாட்டுடன் சார்ந்திருக்கிறது. அது எப்போதும் தனித்து இயங்குவதில்லை- புவியியலில், நகரம் என்பது பிரதேசத்தின் ஒரு பகுதியாக மட்டுமே கருதப்படுவதில்லை. இதுதவிர அதன் அமைவிடமும், வளர்ச்சியும் சுற்றுப்

புறப்பகுதிகளில் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதும் ஆர்வத்துடன் நோக்கப்படுகிறது. இதனால் அந்த நகரம் செய்யும் பணிகளும், அதனைச் சூழ்ந்துள்ள பகுதியில் அதன் செல்வாக்கும் (influence) நன்கு அறியப்படுகிறது.

நகரமும் கிராமத்தைப் போலவே தற்காப்பு, சமூகநலம், வாணிகம் ஆகிய காரணங்களுக்காக ஏற்பட்டதாகும். இதுவே, பிற்காலத்தில் நிர்வாகம், சந்தை, சமயம், கல்வி போன்றவைகளுக்குப் பொதுவான மையமாக (centre) மாறிவிடுவதுண்டு. சுருக்கமாகக் குறிப்பிட வேண்டுமெனில் நகரத்தில் பல்வேறு பணிகள் ஒன்றாகச் சேர்ந்து காணப்படுகின்றன. அடிப்படையில் பார்க்கப்போனால், ஒரு நகரம் அதனைச் சுற்றியுள்ள கிராமப் புறத்திற்குப் பணி செய்வதற்காகவே அங்குத் தோன்றியுள்ளது. அது எத்தனை கிராமங்களுக்குப் பணி புரிகிறது என்பது அதன் மக்கள்தொகையையும் உள்ளாட்சியையும் (local administration) பொறுத்துள்ளது.

தெரிந்தோ, தெரியாமலோ நகரம் அமைப்பிலும், பணியிலும் மாற்றம் அடைவதற்கு மனிதன்தான் காரணமாக இருக்கிறான். விஞ்ஞான வளர்ச்சியும், வளர்ந்துவரும் தேவைகளும் நகரத்தின் பணியை மாற்றிவிடுகின்றன. பணி மாறும்போது நகரத்தின் அமைப்பும் மாறவே செய்கிறது.

உலக மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் சிறிய சந்தை நகரங்களிலிருந்து (market town), பெருநகரங்கள் (metropolis) வரையுள்ள நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். 1970 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மக்கள் இயல் குறிப்புப்படி உலக மக்கள் தொகையில் 25% சதவிகிதத்திற்கு மேல் நகர்ப்புறங்களில் காணப்படுகிறது. கிராமப்புற மக்கள் தங்கள் மரபு வழியைக் கைவிட்டு விடுவதாலும், தொழில்வளர்ச்சியினாலும் நகர்ப்புறங்களில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே வருகிறது. பல நாடுகளில் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். நகர்ப்புறமாக்கம் உலகில் எல்லா இடங்களிலும் ஒரே அளவில் காணப்படவில்லை. படம்: 40 அந்தந்த இடங்களின் தொழில், விஞ்ஞானம், கல்வி ஆகிய துறைகளின் முன்னேற்றத்தைப் பொறுத்து இதன் சதவிகிதமும் மாறுபடுகிறது. தொழிற்துறையில் பின்தங்கிய விவசாய நாடுகளில் நகர்ப்புறமாக்கம் மெதுவாகவே நடைபெறுகிறது. தொழிற்துறையில் முன்னேற்றமடைந்த மேற்கத்திய நாடுகளில் மட்டும் இது துரிதமாக நடை-

பெறுகிறது. கீழ்க்கண்ட அட்டவணை ஐரோப்பிய நாடுகளில் நகர்ப்புற மக்கள்தொகைப் பெருக்கத்தின் சதவிகிதத்தைக் காட்டுகிறது.



படம் 40
உலகின் நகரமக்கள் தொகை சதவிகிதம்.

அட்டவணை: 1

நகர்ப்புற மக்கள் தொகையின் சதவிகிதம்

நாடுகள்	...	1900	1910	1920	1930	1950
பிரான்சு	...	41.0	44.2	46.4	51.2	52.9
ஜெர்மனி	...	56.1	61.7	64.6	69.9	71.0
ஸ்வீடன்	...	21.5	24.8	29.5	38.4	56.3
ஸ்பெயின்	...	32.2	34.8	38.4	42.6	60.5
பல்கேரியா	...	19.8	19.1	19.9	21.4	24.6

மேற்கண்ட அட்டவணையிலிருந்து ஐரோப்பிய நாடுகளில் நகர்ப்புறமாக்கம் சமீப காலத்தில்தான் வெகுவாக அதிகரிப்பதை அறிகிறோம். தொழிற் புரட்சியின் விளைவாகவே இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. புதிய உலகத்தில் 1900 ஆம் ஆண்டிற்குப் பின்னரே நகர்ப்புறமாக்கம் வேகப்படுத்தப்பட்டது. கானடாவில் 1901ஆம் ஆண்டில் 37.5% ஆக இருந்த நகர்ப்புற மக்கள் தொகை 1951 ஆம் ஆண்டில் 62.1% ஆக உயர்ந்து விட்டது. அர்ஜன்டைனாவிலும் இதேபோல் 1905 ல் 37.4 % சதவிகிதமாக இருந்த நகர்ப்புற மக்கள் தொகை 1947 ல் 62.5% சதவிகிதமாக உயர்ந்தது. ஆனால், இந்த உயர்வு ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்டதுபோல் தொழிற் புரட்சியின் காரணமாக விளைந்தது அன்று. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் 1910 முதல் 1920 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில்தான் நகர்ப்புற மக்களின் எண்ணிக்கை வேகமாக வளர்ந்தது. உள்நாட்டுப்போர் இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். இந்த ஆண்டுகளில் தான் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெருமளவில் மக்கள் வந்து குடியேறினர். இதுவும் அமெரிக்க நகரங்களின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். 1950 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 59% சதவிகிதமாக இருந்த நகர்ப்புற மக்கள்தொகை அந்த ஆண்டின் இறுதிக்குள் 64% சதவிகிதமாக உயர்ந்துவிட்டது. இதற்குக் காரணம் புறநகர் (suburb) வளர்ச்சியாகும். இயல்பான மக்கள் தொகை பெருக்கத்திலும் (natural growth) குடியேற்றத்திலும் நகரங்களில் மக்கள் தொகைச் செறிவு அதிகமாகி பெரிய நகரத்தின் மையப்பகுதியிலிருந்து, விளிம்புகளை நோக்கி மக்கள் இடம் பெயர்ந்தனர். ஐரோப்பிய நாடுகளிலிருந்து மக்கள் இஸ்ரேல், பாரேயின் (Bahrein) போன்ற நாடுகளுக்கு குடியேறியதால் இந்த நாடுகளிலும் நகரங்களில் மக்கள்தொகை பெருகலாயிற்று. ஜப்பானில் நகர்ப்புறமாக்கம் சமீப காலத்தில் தான் அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது. 1921ல் 18.1%சதவிகிதமாக

இருந்த நகர மக்கள்தொகை இங்கு 1950 ஆம் ஆண்டில் 37.5% சதவிகிதமாக உயர்ந்து விட்டது; 1960 ஆம் ஆண்டில் இது 63.5% சதவிகிதமாக வளர்ச்சி பெற்றுவிட்டது;

ஆசியாவில் நகர்ப்புறமாக்கம் மிகவும் மெதுவாகவே நடைபெறுகிறது; இந்தியாவில் இது இன்னும் குறைவாகும்; இந்தியாவில் 1881 ஆம் ஆண்டு 9.3% சதவிகித மக்களே நகரத்தில் வாழ்ந்து வந்தனர். 1901 ஆம் ஆண்டு 10.5% சதவிகிதமாக இருந்ததானது எழுபது ஆண்டுகளுக்கு பிறகு 19.9% சதவிகிதத்திற்குதான் உயர்ந்துள்ளது. பெரிய நகரங்கள் இருந்தாலும் இந்தியா ஒரு விவசாய நாடாகவே இருக்கிறது;

இந்தியாவில் நகர்ப்புற மாக்கம் :

உலகில் மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இந்தியாவில் நகரப்புறமாக்கம் மிகவும் மெதுவாகவே நடைபெறுகிறது; அமெரிக்காவில் 1839 ஆம் ஆண்டில் இருந்துவந்த நகர்ப்புற மக்களின் சதவிகிதத்தை இந்தியா 1901 ஆம் ஆண்டில்தான் அடையமுடிந்தது. இந்தியாவில் நகர்ப்புறமாக்கம் மிகவும் மெதுவாக நடைபெறுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. முதலாவதாக, இங்குப் பொருளாதார வளர்ச்சி மிகவும் குன்றியிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பில்லாமல் பல ஆண்டுகள் இங்குக் கழிந்துவிட்டன. எனவே, நகரங்கள் வளர்ச்சிபெறுமல் இருந்தன. ஆனல், 1941 முதல் 1951 வரையுள்ள பத்து ஆண்டுகளில் இந்தியாவின் நகர்ப்புறமாக்க விகிதம் (rate of urbanization) ஜப்பானைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கிருக்கிறது; இந்த பத்து ஆண்டுகளில்மட்டும் இந்தியாவில் ஒரு இலட்சம்பேர் கொண்ட நகரங்களின் அதிகரிப்பு 44 % சதவிகிதமாகும்.

இரண்டாவதாக, இந்திய நகரங்கள்யாவும் இயற்கையாக வளர்ச்சி (natural growth) பெற்றிருக்கவில்லை. அதாவது நகர மக்களின் இயற்கையான பிறப்பு விகிதத்தால் நகர்ப்புறம் வளர்ச்சி பெறவில்லை. இங்குள்ள நகரங்கள்யாவும் உள்நாட்டுக் குடியேற்றத்தினுல்தான் (internal migration) வளர்ச்சி பெறுகின்றன. அதாவது கிராமப்புறத்தில் வசிக்கின்ற மக்கள் வேலை தேடி இந்நகரங்களுக்குக் குடியேறுகின்றனர். இந்திய நகரங்களின் வளர்ச்சிக்கு இந்தக் குடியேற்றந்தான் முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

மூன்ருவதாக, நகர்ப்புறத்தில் காணப்படும் சிக்கல்களும், அரசியல் அமைதியின்மையுமாகும். இந்த அமைதியின்மையின்

காரணமாக நகரத்தின் தொழில், வாணிகம் ஆகியவை பாதிக்கப் படுகின்றன. எனவே, நகர வளர்ச்சி தடைபடுகிறது.

1951 முதல் 1961 வரை இந்தியாவில் 1,00,000 பேர் கொண்ட நகரங்களின் எண்ணிக்கை 1.1% சதவிகிதம்தான் உயர்ந்திருக்கிறது. இதேபோல் 20,000 பேர் வசிக்கின்ற நகரங்களின் அதிகரிப்பு 1.4% சதவிகிதந்தான். 1961 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை இவை முறையே 23% சதவிகிதமும் 27% சதவிகிதமும் ஆகும். இது நகர்ப்புறமாக்கத்தின் வளர்ச்சிக் குறைவையே காட்டுகிறது. ஆனால், கடந்த 20 ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் விகிதத்தைக்காட்டிலும், நகரத்தில் வாழும் மக்கள்தொகையின் வளர்ச்சி விகிதம் அதிகமாகவே உள்ளது. இதைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 2 : இந்தியாவில் நகர்ப்புற மாக்கம்

ஆண்டு	மக்கள்தொகை (மில்லியன்)	நகர மக்கள்தொகை (மில்லியன்)	மொத்த மக்கள் தொகையில் நகர மக்களின் சதவிகிதம்
1901	236.3	25.7	10.5
1911	252.1	26.6	10.6
1921	251.4	28.6	11.4
1931	279.0	33.8	12.1
1941	318.7	44.3	13.9
1951	361.1	62.6	17.3
1961	439.2	78.8	18.0
1971	547.4	108.8	19.9

கடந்த 30 ஆண்டுகளில் இலட்சம் பேருக்குமேல் வசிக்கும் பெரிய நகரங்கள் எண்ணிக்கையில் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஆனால், சிறிய நகரங்களின் வளர்ச்சி குறைந்து கொண்டே வருகிறது. மக்கள்தொகை 50,000க்கு மேல் 1,00,000க்குள் வசிக்கிற இரண்டாவது வகுப்பு நகரங்கள் விரைவில் முதல்வகுப்பு நகரங்களாக (100,000 பேருக்குமேல்) மாறி விடுகின்றன. கிராமத்திலிருந்து நகரங்களை நோக்கிக் குடியேறுகின்றவர்கள் பெரிய நகரங்களில் குடியேறுவதையே விரும்புகிறார்கள். இத்தகைய உள் நாட்டுக் குடியேற்றத்தில் பெரிய நகரங்கள் மட்டுமே வளர்ச்சியடைகின்றன. சிறிய நகரங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. ஏனெனில், பெரிய நகரங்களில்தான் வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. எனவே, கிராமத்தி

லிருந்து வேலைதேடி வரும் மக்கள் நேரிடையாக இங்குக் குடியேறி விடுகின்றனர். இவர்கள், சிறிய நகரங்கள் அருகாக இருந்தால் கூட அவற்றில் குடியேறுவதில்லை. இதைத் தவிர, கிராம மக்கள் விரும்புகின்ற பொழுதுபோக்குக் கேளிக்கைகள் பெரிய நகரங்களில்தான் காணப்படுகின்றன. இக்காரணங்களினால் சிறிய நகரங்கள் ஒருவித வளர்ச்சியையும் அடையாமல்,பெரிய நகரங்களே மேலும் மேலும் வளர்ச்சி பெறுகின்றன. இதன் காரணமாகவே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வகுப்பு நகரங்கள் ஒவ்வொரு ஆண்டும் எண்ணிக்கையில் பெருகிக்கொண்டு வருகின்றன. இதற்கு மாறாக ஐந்தாவது, ஆறாவது வகுப்பு நகரங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. இதேபோல் 1,00,000க்கு குறைவான மக்கள் வசிக்கிற நகரங்கள் பெரிய நகரங்களைப்போல் வளர்ச்சியடைவதில்லை. இவற்றில் வளர்ச்சியும் இருக்கா; அழிவும் இருக்கா. இந்த நிலையை அஷிஸ்போஸ் (Ashish Bose) நகரங்களின் கட்டமைப்புத் தேக்கம் (Structural stagnation) என்று குறிப்பிடுகிறார்.

இந்தியாவில் நகர்ப்புறமாக்கம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. 1951 ஆம் ஆண்டு சென்சஸ் கணக்குப்படி இந்தியாவில் மேற்குப் பகுதியின் மொத்த மக்கள் தொகையில் 30% சதவிகிதம் நகரங்களில் வசித்தனர். இதேபோல் வடக்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் 23% சதவிகிதமும், மத்திய இந்தியாவிலும் கிழக்குப் பகுதியிலும் 14% சதவிகிதமும் காணப்பட்டனர்.

ஐரோப்பியருடைய ஆட்சியும், தற்காலத்துத் தொழில் முன்னேற்றமும் இந்தியாவில் நகர்ப்புறமாக்கத்திற்குக் காரணமாக விளங்குகின்றன. ஆங்கிலேயர் காலத்தில் வளர்ச்சி பெற்ற கல்கத்தா, பம்பாய், சென்னை, டெல்லி ஆகிய நகரங்களிலும், தொழில் நகரங்களாகிய பிலாய் (Bhilai) ரூர்கேலா (Rourkela), துர்காபூர் (Durgapur) போன்றவைகளிலும் வளர்ச்சி விகிதம் அதிகமாகக் காணப்படுகிறது.

இந்தியாவில் பெருநகரங்கள் (metropolitan) குறிப்பிட்ட திசையிலேயே பரவிவருகின்றன. இயற்கை அமைப்பு, போக்குவரத்துச்சாலைகள் போன்றவற்றால், இவற்றின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகிறது. உதாரணமாக கல்கத்தா பெருநகரம் தாமோதர் பள்ளத்தாக்கின் வழியாகவும், பம்பாய் பெருநகரம் தாணா-பூனா (Thana—poona axis) அச்சின் வழியாகவும் சென்னைப் பெருநகரம் பங்களூர் திசையிலும், அகமதாபாத் நகரம் சூரத்-

பரோடா (Surat–Baroda) வழியாகவும், டெல்லி நகரம் மீரட் (meerut), ஹைதராபாத் நகரம் சிகந்திராபாத் (Secundrabad) வழியாகவும் பெருகிக்கொண்டே வருகின்றன. (அட்டவணை 3ஐப் பார்க்க)

இந்தியாவில் 25 இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை கொண்ட மொத்தநகரங்கள் எட்டு ஆகும். இவைதவிர 5 இலட்சம் மக்கள் கொண்ட நகரங்கள் பத்தும், $2\frac{1}{2}$ லட்சம் மக்கள் கொண்ட நகரங்கள் 32ம் உள்ளன. 5 இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் பெருநகரப் (metropolitan) பகுதிகளை விட்டு விலகியே காணப்படுகின்றன. இத்தகைய நகரங்கள் கேரளத்தின் கடற்கரைப் பகுதியிலும், தமிழ்நாட்டின் மையப்பகுதியிலும், மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு அடிவாரத்திலும், பம்பாய்—நாகபுரி ரெயில் பாதை ஓரத்திலும் தாமோதர் நதிப்பள்ளத்தாக்கில் சோட்டா நாகபுரி (Chota Nagpur) பகுதியிலும், வடக்கு பீஹாரிலும் குழுக்களாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

1961 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை 221 புதிய நகரங்கள் தோன்றியுள்ளன. இவற்றில் ரூர்கேலா (Rourkela) ஒன்றுதான் முதல்வகுப்பு நகரமாகும். மற்றவையெல்லாம் சிறிய நகரங்களாகும். இதில் ஐந்தாவது ஆருவது வகுப்பு நகரங்கள் மட்டும் 75% சதவிகிதத்திற்கு மேல் உள்ளன. இந்தியாவில் ஆருவது வகுப்பு நகரங்கள் மட்டும் மொத்தம் 165 உள்ளன. இவற்றில் 85 தமிழ்நாட்டில் மட்டுமே காணப்படுகிறது. இந்தியப் பெரு நகரங்களின் மக்கள்தொகையில் 10% முதல்60% சதவிகிதம் வரை சேரியில் வசிக்கிருர்கள்.

17. நகரங்களின் தோற்றம்
(origin of cities)

நகரங்களில் வசிக்கும் மக்கள்தொகை பெருகிக் கொண்டிருப்பதும், கிராமப்புறங்கள் நகரங்களாக மாறிக்கொண்டிருப்பதும் 20 ஆம் நூற்றுண்டின் சிறப்பியல்புகளாகும். வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே (pre-historic period) உலகின் சில பகுதிகளில் நகரங்கள் தோன்றியிருந்த போதிலும் தற்காலச் சூழ்நிலையில் பெரும்பாலான மக்கள் நகரவாசிகளாக மாறிக் கொண்டிருக்கிருர்கள். எனவே, இரண்டுநூற்றுண்டுகளுக்கு முன்பு தான் பெரிய நகரங்கள் பல தோன்றியவை என்றுலும் மக்களின் சமூகப்பொருளாதார வாழ்க்கையை அவை பெரிதும் கட்டுப்படுத்துகின்றன. இந்த மாறுதல்களுக்குக் காரணமாகவுள்ள தொழில் நுணுக்கம், சமூகப் பொருளாதாரம் ஆகியவற்றை அறியவேண்டுமெனில் நகரங்களின் வரலாற்றைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

பெரிய நகரங்களின் வளர்ச்சியில் இருவித இயக்கங்கள் (forces) காணப்படுகின்றன. வரலாற்றுக்கு முந்திய காலத்தில் ஏற்பட்ட முதல் இயக்கம்தான் நகரம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது: தொழில் நுணுக்கம், பொருளாதாரம் ஆகியவற்றின் மாற்றங்களால் தோன்றிய இரண்டாவது இயக்கம் தொழிற்புரட்சிக்குப் பின் ஏற்பட்டவையாகும். இவ்வியக்கமே நகரங்களின் கட்டுக்கடங்காத வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது.

முதன்முதலில், நகரங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது நிரந்தர விவசாயமாகும், உணவுத்தானியங்களைப் பயிர்செய்து வந்ததால் உற்பத்தி பெருகி மக்கள்தொகைச்செறிவு அதிகரித்ததோடு மட்டுமன்றி, தேவைக்கு அதிகமான (surplus)

அட்டவணை : 3

இந்திய நகரமக்கள் தொகையும், நகரங்களின் வகைகளும்

(1951—71)

நகரத்தின் வகையும் மக்கள் தொகை அளவும்	நகரங்களின் எண்ணிக்கை			நகரங்களின் மொத்த எண்ணிக்கையின் சதவிகிதம்			மக்கள்தொகை (மில்லியன்களில்)			மொத்த நகர மக்கள் தொகையின் சதவிகிதம்		
	1951	61	71	1951	61	71	1951	61	71	1951	61	71
I வகுப்பு 100000 க்கு மேல்	82	113	142	2.8	4.6	4.8	23.7	35.1	57	41.8	48.4	52.4
II வகுப்பு 50000—99999	101	138	198	3.4	5.6	6.8	7.5	9.6	13.2	11.1	11.9	12.1
III வகுப்பு 20000—49999	353	484	671	12.1	19.7	21.1	11.1	15.6	18.9	16.7	18.5	17.3
IV வகுப்பு 10000—19999	630	748	931	21.5	30.3	31.9	9.3	11.2	13.1	14.0	13.0	12.1
V வகுப்பு 5000—9999	1158	764	756	39.6	30.9	25.9	8.4	6.3	5.7	13.2	7	5.2
VI வகுப்பு 5000 க்கு கீழ்	600	218	277	30.5	8.8	3.5	2.1	0.9	0.8	3.2	1	0.8
எல்லா வகுப்புகளும்	2924	2462	2921	100	100	100	62.3	78.8	100.8	100	100	100

உணவும் இருந்தது. எனவே, உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த குடியானவர்களில் ஒரு பகுதியினர் கிராமத்தை விட்டு பெரிய குடியிருப்புகளில் வசிக்கத் தொடங்கினர். விவசாயத்தைத் தவிர வேறு தொழில்களை மேற்கொண்டிருந்த மக்களும் இங்குக் குடியேறினர். இவர்கள்தாம் முதன்முதலில் தோன்றிய நகர்ப்புறக் குடியிருப்பின் அடிப்படை உறுப்பினர்களாவர். இதுவே, நகர்ப்புற குடியிருப்பாகும்.



படம்: 41 மெசபடோமியாவிலிருந்து புதிய உலகம் வரை நகரங்களின் வளர்ச்சி.

சுமார் கி.மு. 5500 ஆண்டுகளுக்கு முன்பே தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கலப்பு விவசாயம் (mixed farming) செய்து வந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். அடுத்த 1500 ஆண்டுகளில் இந்தக்கலப்பு விவசாய வாழ்க்கை மலைகளிலிருந்து மத்திய ஆசிய நாடுகளின் ஆற்றுப் பள்ளத்தாக்கிற்குப் பரவிவிட்டது. தொழில் நுணுக்கத்தில் பல முன்னேற்றங்கள் அப்போது ஏற்பட்டன. எருது பூட்டிய கலப்பை, சக்கரவண்டி, பாய்மரக்கப்பல் போன்றவைகளும், உலோகங்களை உருக்குதல் போன்றவைகளும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன, புதிய நீர்ப்பாசன முறைகளும் புதிய பயிர்களும் புகுத்தப்பட்டன. ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் நீரைத்தவிர மீன்களும் கிடைத்ததால் உணவு உற்பத்தியில் நல்ல வளர்ச்சி காணப்பட்டது. கி.மு. 4000 ஆண்டுகளுக்கு பின் டைக்ரிஸ், யூப்ரடீஸ் (Tigris and Euphrates) நதிகளின் வண்டல் சமவெளிகளிலிருந்த கிராமங்கள் அளவில் பெருகியதுமட்டுமன்றி பணியிலும் மாறிவிட்டன. மெசபடோமியாவில் (Messapotamia) நெடுங்காலத்திற்கு முன்பே நகர்ப்புறக்

குடியிருப்புகளில் பெரிய அளவில் கால்வாய் பாசனம் நடைபெற்றது. புல்வெளிகளில் கால்நடைகளை மேய்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. ஆனால், தேவைகள் அதிகரிக்கும்போது மேற்கூறிய நீர்ப்பாசனத்திலும், மேய்ச்சலிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதேபோல், ஆற்றுப் பள்ளத்தாக்குகளும், ஆற்றுச்சமவெளிகளும் முழுமையான தன்னிறைவு (Self-sufficiency) பெற்றிருக்கவில்லை. ஏனெனில், இங்கு மரங்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. விவசாயக்கருவிகள் செய்யவும் கட்டடங்கள் கட்டவும் தேவையான மரங்கள் உலோகங்கள், கற்கள் ஆகியவை கிடைக்காமையால், மற்றப்பகுதிகளோடு பண்டமாற்றம் (barter) செய்யவேண்டிய சூழ்நிலை உருவாகியது. இதுவே, வாணிகம் வளர்ச்சி பெறுவதற்கு அடிப்படைத் தூண்டுதலாக அமைந்தது.

நாளடைவில் கிராமங்கள் நிர்வாக மையங்களாகவும், பொருள்களைப் பெற்று மீண்டும் விநியோகம் செய்யும் வியாபார மையங்களாகவும் மாறிவிட்டன. கிராமப்புறக் குடியிருப்புகள் வாணிகத்தின் அடிப்படையில்தான் வளர்ச்சி பெற வேண்டுமென்பதில்லை. சமூகப் பண்பாட்டு இயக்கங்களும், போக்குவரத்து வசதிகளும், சமயங்களும் நகர்ப்புறக் குடியிருப்புகளைத் தோற்றுவித்திருக்கின்றன. மெசபடோமியாவிலுள்ள கிராமங்களின் வளர்ச்சிக்குப் பொருளாதாரத்தைவிட கோயில்களே காரணமாக இருந்திருக்கின்றன. டைக்ரிஸ் (Tigris), யூப்ரடிஸ் (Euphrates) பள்ளத்தாக்கில் கி.மு. 3000—2500 ஆண்டுகளில் தான் (Early Dynastic period) முழுமைப்பெற்ற நகரங்கள் தோன்றின. நகரத்தின் மக்கள் தொகை 2,00,000 க்கு மேல் இருக்கக்கூடாதென்ற உச்சவரம்பு இருந்தபோது, இந்நகரங்களின் மக்கள்தொகை உச்சவரம்பிற்குக் குறைவாகவே இருந்திருக்கிறது. உதாரணமாக பாபிலோனியாவில் (Babylon) மக்கள் தொகை 80,000 மட்டுமே இருந்திருக்கிறது.

செய்யும் தொழிலின் அடிப்படையில் சமூகம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பாத்திரங்கள் மற்றும் கோயில்களை அலங்கரிக்கும் உலோகங்கள் பெரும்பாலும் தூரப் பகுதிகளிலிருந்து தருவிக்கப்பட்டன. தூரத்து வாணிகமும் நகரங்களின் வளர்ச்சிக்கு உதவி செய்தது. கி.மு. 3000—2500 வரையிலுள்ள ஆண்டுக்குப்பின்பே கைத்தொழில் வளர்ச்சி பெற்றது (படம் 42).



படம் : 42 பழங்காலத்தில் நகரங்கள் தோன்றிய இடம்

நகர்ப்புறக் குடியிருப்புகள் உலகின் பல்வேறு பாகங்களில் தன்னிச்சையாகவே தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளன. மத்திய அமெரிக்காவில் நகரங்கள் தன்னிச்சையாகவே தோன்றியுள்ளன. ஆனால், இதற்கு முன்பாகவே மெசபடோமியாவில் நகரங்கள் இருந்திருக்கின்றன. இங்கிருந்துதான் நகர்ப்புற வாழ்க்கை எகிப்திற்கும், சிந்து சமவெளிக்கும் பரவியது. கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதிக்கும், ஆசியா, சீனா, தென்கிழக்குஆசியா ஆகிய இடங்களுக்கும், இங்கிருந்துதான் நகர்ப்புற வாழ்க்கை பரவியிருக்கக்கூடும். மத்திய கிழக்கு ஆசியாவில் தற்போதைய எகிப்து, ஈராக், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில்தான் முதன் முதலாக நகரங்கள் தோன்றின. நீர்ப்பாசன விவசாயம் (irrigation agriculture) மேற்கொள்ளப்பட்ட நைல் நதிப்பள்ளத்தாக்கு, பெர்ஷியன் குடாவிலிருந்த (Persian gulf) டெல்டா பகுதிகள், சிந்து சமவெளி ஆகிய பகுதிகளில்தாம் முதன்முதலில் நகர்ப்புறப் புரட்சி (Urban Revolution) ஏற்பட்டது. விவசாயத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால், விவசாயத்தைத் தவிர, வேறு தொழில்களைச் செய்கின்றவர்களுக்கு உணவைத் தருகின்ற அளவுக்கு உற்பத்தி பெருகியது. எனவே, விவசாயத்தைத் தவிர, வேறு சிறப்புத்தொழில்களை (specialised occupation) மேற்கொண்ட மக்கள்தொகை நாளடைவில் பெருகத்தொடங்கியது. இவர்கள் குழுமி வசித்துவந்த குடியிருப்புகளே நாளடைவில் நகரங்களாக வளர்ச்சிபெற்றன. உதாரணமாக நைல் நதிப் பள்ளத்தாக்கிலிருந்த அப்ரோடிடா பாலிஸ் (Aphrodito polis) ஹிராக்கன் பாலிஸ் (Hierakon polis) போன்ற நகரங்களும் சிந்து நதிச் சமவெளியிலிருந்த மொஹஞ்ஜதாரோ (Mohenjodaro). ஹரப்பா (Harappa) போன்ற நகரங்களும் இவ்வாறு தோன்றியவையே. இதேபோல், பெர்ஷியன் வளைகுடாவிலும் (Persian gulf) பல நகரங்கள் தோன்றிருந்தன. உதாரணமாக, எலம் (Elem) பகுதியில் சுஸா (Susa) நகரமும், யூப்ரடிஸ் (Euphrates) நதிக்கரையில் சுமெர் (Sumer), உர் (Ur), லாகஷ் (Lagash), எரெக் (Erech) போன்ற நகரங்களும், உள்நாட்டில் கிஷ் (Kish) எனப்பட்ட பிற்காலத்திய பாபிலோனும் (Babylon) தோன்றியிருந்தன. (படம் 43)

சீனாவில், ஹீவாங்ஹோ வெள்ளச் சமவெளியில் தோன்றிய அனியங் (Anyang) நகரமே இங்குத் தோன்றிய முதல் நகரமாகும். புதிய உலகத்தில் (New world) மாயா (Maya) இனத்தவரின் நாகரிகம் கி. பி. 1000 ஆண்டில் செழிப்புற்றிருந்தது. இங்கு, பழைய உலகத்தில் கையாளப்பட்ட நீர்ப்பாசன முறைகள் இல்லாமையால் உணவு உற்பத்தி உபரியாக இல்லை. இவர்களுக்கு



படம் : 43 பழங்காலத்து நகரங்கள்

1. பைஸான்டியம்
2. ஹிஸார்லிக்
3. மைலிடஸ்
4. ஏதென்ஸ்
5. மைசீன்
6. மிலாஸ்
7. பைப்லோஸ்
8. சிடான்
9. டையர்
10. அலெக்ஸாண்டிரியா
11. அபார்டிடோ பாலிஸ்
12. தெபிஸ்
13. ஹிராக்கன் பாலிஸ்
14. மையோஸ் ஹெர்மஸ்
15. பெரினிஸ்
16. பெட்ரா
17. டெமாஸ்கஸ்
18. அலெப்போ
19. டாட்மூர்
20. கோர்சாபாத்
21. நைன்வே
22. அசூர்
23. அகாட்
24. கிஸ்
25. பாபிலோன்
26. எரிச்
27. உர்
28. எரிடு
29. சூசா
30. லேகாஷ்
31. ஹரப்பா
32. மொஹன்ஜதாரோ

மக்காச் சோளம்தான் (Maize) முக்கிய பயிராக இருந்தது. இங்கு குவாட்டமாலா (Guatemale)விலிருந்த கோபன் (Copan) கியுரிகுவா (Quirigua), பாலேன்க் (Palengue) போன்றவை முதன் முதலில் தோன்றிய நகரங்களாகும். மேற்கூறிய எல்லா நகரங்களிலும் வளர்ச்சிக்கு அடிப்படைத் தூண்டுதலாக இருந்தது உபரி உற்பத்தியாகும். புதிய கருவிகள் உபரி (தானிய) உற்பத்திக்குத் துணை செய்தன. எனவே, நகர்ப்புற வாழ்க்கை மலர்வதற்குக் கிராமப்புறத்தில் உணவு உற்பத்தி மிதமிஞ்சி இருக்கவேண்டும்.

ஏறத்தாழ கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது செப்புக்காலத்திற்கு (Bronze Age) முன்பு ஏஜியன் (Aegean) கடலிலிருந்த மிலாஸ் (milos) தீவில் அமைந்திருந்த பைலா கோப்பி (phylakopi) நகரமும், லெவண்ட் (Levant) கடற்கரை யிலிருந்த பைபிலோஸ் (Byblos) நகரமும் வாணிக நகரங்களாக விளங்கிவந்தன. பைபிலோஸ் (Byblos) நகரம் எகிப்திற்குத் தேவையான மரங்களை லெபனன் (Lebanon) பகுதியிலிருந்து தரு வித்து, வாணிகம் செய்துவந்ததால் வளர்ச்சி பெற்றது. தரை வழிப் போக்குவரத்து நடைபெற்றதால் (land transport) வளர்ச்சிபெருத பழங்காலத்தில் கடல் வழியாகவே போக்கு வரத்து நடைபெற்றதால் அக்கால நகரங்களெல்லாம் கடற்கரைகளிலேயே வளர்ச்சி பெற்றிருந்தன. ஒட்டகப் போக்குவரத்து வழியிலும் பல நகரங்கள் (Caravan cities) பாலை வனத்தில் (desert) இருந்து வந்தன; அலெப்போ (Aleppo), டெமாஸ்கஸ் (Damascus), தட்மூர் (Tadmur) ஆகிய பாலை வனத்து நகரங்களின் மூலமாகத்தான் பீனீசிய (Phoenician) நக ரங்களுக்கும் மத்திய கிழக்கு ஆசிய நகரங்களுக்கும் வாணிகம் நடைபெற்றது.

இருண்ட காலத்திற்குப்பிறகு (Dark Ages) மக்கள் தொகைப் பெருக்கத்திலைலும், வாணிகத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தி லும் நகரங்கள் மறுமலர்ச்சி பெற்றன. இந்த நகரங்களைத் தோற்றுவித்த வியாபாரிகள் அவற்றைப் பாதுகாப்புள்ள இடங் களில்தாம் அமைத்தனர். எதிரிகளினுல் ஆபத்து ஏற்படும் சூழ் நிலையில் நகரங்கள் பாதுகாப்புள்ள இடங்களில் அமைக்கப் பட்டதோடல்லாமல், அவற்றிற்குப் பாதுகாப்புச் சுவர்களும் அமைக்கப்பட்டன. நகரங்களின் பெயர்களில் "பர்க்" (Burgh) என்று முடிவது, பாதுகாப்புச் சுவர் அமைந்ததையே குறிக்கிறது.

நகர்ப்புற புரட்சி (Urban Revolution) முதன் முதலில் ஏற் படுவதற்குக் காரணமாக இருந்தது மிதமிஞ்சிய உணவு உற்பத்தி யாகும். தொடக்கத்தில் உணவு உற்பத்தி செய்யும் குடியானவர் களின் விகிதமும் மற்றத் தொழில் செய்யும் மக்களின் விகிதமும் நெடுங்காலம்வரை மாருமல் இருந்தது. ஆனுல் ரோம், வெனிஸ், ஆகிய நகரங்களில், இராணுவத்தினுல் பல மாற்றங்கள் ஏற்பட் டன. நகரங்களைப் பெருக்குவதற்கும், வாணிகத்தைப் பெருக்கு வதற்கும், இராணுவம் பயன்பட்டது. எனவே, இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வளர்ச்சி பெற்ற இந்த நகரங்கள் மற்ற நகரங் களினின்று மாறுபட்டு விளங்குகின்றன.

தற்காலத்தில் இரண்டாவது முறையாக நகர்ப்புறப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்கள் உணவு உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கியுள்ளது. எனவே, அதிகரித்த உணவு உற்பத்தி நகரமக்களின் தேவையை நிறைவேற்றி வந்தது. இதன் விளைவாக நகர்ப்புறம் வெகுவாக வளர்ச்சியடைந்தது.

நாகரிகம் எத்தகைய பழமையோ, அத்தகைய பழமையை நகரங்களும் பெற்றிருக்கின்றன. ஏனென்றால் நாகரிகத்தின் வளர்ச்சிக்கும் நகரங்களின் தோற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மக்கள் கூடிவாழ்ந்து, தங்கள் பண்பாட்டை வெளிப்படுத்துவதற்கு நகரங்கள் மையமாக இருந்தன. நகரங்கள் சமூக மரபின் கிடங்காகவும் (ware house), பல்வேறு பண்பாடுகள் கூடுகின்ற மையமாகவும், தத்துவத்தின் ஊற்றாகவும் இருந்து வந்தன.

ஐரோப்பாவில் நகரங்களின் தோற்றம்:

கி.மு. 3000 ஆண்டில் கிழக்கு மத்தியதரைக்கடற்கரைப் பகுதிகளில் நகரங்கள் தோன்றலாயின. இக்காலத்தில்தான் கிரீட்டில் (crete) நாஸாஸ் (Knossos) நகரமும், ஆசியாமைனரில் (Asia minor) டிராய் (Troy) நகரமும், கிரேக்க நாட்டில் மைசீனே (mycenae) நகரமும் வளர்ச்சி பெற்றிருந்தன. மத்திய கிழக்கு ஆசியாவில் இருந்ததுபோலவே மத்தியதரைக் கடற்கரை நகரங்களும் சிறிதாக இருந்தன. ஆனால், மத்தியதரை கடற்கரை நகரங்களில் வாணிகம் மிகமுக்கிய பணியாக இருந்துவந்தது. ஆதலால், போக்குவரத்து வசதிகளும் அதற்கேற்றாற்போல பெருகலாயின. குறிப்பாக, தீவுகள் நிரம்பிய ஏஜியன் (Aegean sea) கடலில் கப்பல்கள் வந்து போவதற்கு ஏற்ற சூழ்நிலை இந்த நகரங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்கு உதவியாக இருந்தது. ஏஜியன் கடலைச் சுற்றியிருந்த நகரங்களில் பல தரப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்ததினால் பலவிதமான கைத்தொழில்களும் பெருகி இந்த நகரங்கள் சர்வதேச சந்தைகளாக (International markets) விளங்கி வந்தன.

கி.மு. 1000 ஆண்டில் பெரிய நகரங்களின் எண்ணிக்கை பெருகலாயின. குறிப்பாக கி.மு. 8, 7 நூற்றாண்டுகளில் கிரேக்க நாட்டில் மக்கள்தொகை பெருகி, புதிய நிலங்களையும், புதிய சந்தைகளையும் தேடிப்பிடிக்கும் ஆர்வத்தினால் புதிய நகரங்கள் பல தோன்றலாயின. குடியேற்றமும், காலனி ஆதிக்கமும் இதனால் ஏற்பட்டவையே. குமா (Cumae), சிராகுஸ் (Syracuse)

போன்ற கிரேக்க காலனிகள் இத்தாலியிலும், சிஸிலியிலும் கி.மு. 750, 700 ஆண்டுகளில் அமைக்கப்பட்டன. இதேபோல் கி. மு. 600 ஆண்டில் ஸ்பெயின் கடற்கரையில் மசிலியா (massilia) இத்தாலிய காலனி அமைக்கப்பட்டது. எனவே கி.மு. 500 ஆண்டில் ஸ்பெயினின் மேற்குக் கடற்கரையிலிருந்து இந்தியாவின் கங்கைச் சமவெளி வரை நகர்ப்புற வாழ்க்கை பரவிக் காணப் பட்டது.

காலனிகள் ஏற்பட்ட காலத்தில் தொழில் நுணுக்கத்தில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டது. இரும்பு ஆயுதங்களும், கருவி களும் புதிததாகச் செய்யப்பட்டன; எழுத்து முறைகள் கண்டு பிடிக்கப்பட்டன; காற்றை எதிர்த்துச் செல்லத்தக்க வகையில் கப்பல்களின் அமைப்பு மாற்றியமைக்கப்பட்டன; நாணயங்கள் வாணிகத்தில் புழங்கத் தொடங்கின. எனவே, புதிய கருவிகள் விவசாய உற்பத்தியைப் பெருக்கின. போக்குவரத்து முன்னேற் றங்களால் தூரத்து நாடுகளுடன் வாணிகம் பெருகியது. இந்த முன்னேற்றங்களினால் நகர்ப்புற மக்கள்தொகை பெருகிக் கொண்டே சென்றது. கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் ஏதென்ஸ் (Athens) நகரத்தின் மக்கள்தொகை குறைந்தது 1,00,000 முதல் 1,50,000 வரை இருந்திருக்கக்கூடும்,

போக்குவரத்திலும் ஆயுத உற்பத்தியிலும் ஏற்பட்ட வளர்ச்சி ஹெலினிஸ்டிக் (Hellenistic) மற்றும் ரோமானியப் பேரரசுகள் (Roman Empire) தோன்றுவதற்கு, மறைமுகமான காரணமாயிருந்தது. இப்பேரரசுகளின் வளர்ச்சியினால் புதிய நகரங்கள் பல தோன்றலாயின. சுமார் கி.மு. 330 ம் ஆண்டில் அலெக்ஸாண்டரின் தலைமையில் புதிய கிரேக்கப் பேரரசு தோன் றியிருந்தது. அலெக்ஸாண்டரின் பெருமைமிக்க வெற்றிகளினால் மேற்கு ஆசியாவின் பெரும்பகுதி கிரேக்கர்களின் காலனி ஆதிக் கத்தின் கீழ் வந்தது. இதனால் வாணிகம் செய்யப் புதிய இடங் கள் கிரேக்கர்களுக்குக் கிடைத்தன. இதன் விளைவாகப் பழைய நகரங்கள் புத்துயிர் பெற்றதோடு மட்டுமல்லாமல் பல புதிய நகரங்களும் தோன்றின. கிரேக்கப் பேரரசின் நிர்வாகத்திற்குப் பல பெரிய நகரங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாக அலெக்ஸான்டிரியா (Alexandria) போன்ற பெரிய நகரங்கள் வளர்ச்சிபெற்றன. அலெக்ஸாண்டரின் மறைவுக்குப்பின்பு ஹெலினிஸ்டிக் பேரரசு வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சிக்குப் பின்னும் நகரங்கள் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்தன. கி. மு. 3 ம் நூற்றாண்டில் கிரேக்க நகரங்களுக்குச் சோளம்

போன்ற தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. எண்ணெய், மது, (wine) போன்றவை இங்கிருந்து கிழக்கே மெசப்டோமியா, வடக்கு சிரியா, வடக்குக்கருங்கடல், டான்யூப் (Danube) நதி வரையிலுள்ள நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

இத்தாலியிலும், சிஸிலிலும் கிரேக்கர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு ரோமானியப் பேரரசு தோன்றியது. ஆல்ப்ஸ் மலைகளின் வடக்கிலும், ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலும் ரோமானியப் பேரரசின் நகரங்கள் தோன்றின. கால் (gaul), ரைன் (Rhine) பள்ளத்தாக்கு, இங்கிலாந்து போன்ற இடங்களில் புதிய நகரங்கள் வளர்ச்சி பெற்றன. இந்நகரங்களில் வாணிகத்தைவிட நிர்வாகமும் (administration) தற்காப்புமே (defence) முக்கிய பணிகளாக இருந்துவந்தன. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் உரோமா மானிய லண்டன் நகரம் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்தது. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, நகரங்களும் வளர்ச்சியில் தடைப் பட்டு நின்றன. உரோமானியப் பேரரசில் செம்மையாக நடை பெற்றுவந்த வாணிகம் அதன்பிறகு குன்றத் தொடங்கியது. எனவே, பல வாணிக நகரங்கள் அழியத் தொடங்கின. வட மேற்கு ஐரோப்பாவில் நகரங்கள் பல அழிந்துவிட்டன. கிழக்கு மத்தியதரைக்கடற்ப் பகுதிகளில் மட்டுமே நகரங்கள் அழியாமல் இருந்தன.

கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் மீண்டும் வாணிகம் பெருகத் தொடங்கியவுடன் ஐரோப்பாவில் பழைய உரோமானிய நகரங்கள் புதுப்பிக்கப்பட்டன. புதிய நகரங்களும் பல தோன்றின. 12-ஆம் நூற்றாண்டில் நகரங்களே இல்லாத பகுதிகளில் புதிய நகரங்கள் பல உருவாக்கப்பட்டன. குறிப்பாக, ஜெர்மானியர்கள் வாழும் ஐரோப்பியப் பகுதிகளில் புதிய நகரங்கள் தோற்று விக்கப்பட்டன. இடைக்கால (medieval) நகரங்கள் யாவும், சீரான போக்குவரத்து வசதிகள் கொண்ட இடங்களிலேயே அமைந்திருக்கின்றன. எந்தச் சூழ்நிலைகளில் இந்த நகரங்கள் தோன்றியிருந்தாலும், அவற்றின் பணிகள் (functions) ஒன்றாகவே இருந்தன. நகரங்களில் மக்கள் தொகையில் பெரும் பகுதி வாணிகத்திலும், கைத்தொழிலிலும் ஈடுபட்டிருந்தது. நகரத்தில் வசிக்கும் மக்களுக்கு பிரஜா உரிமை அளிக்கப்பட்டது. இங்கிருந்த நகரங்களும் நிர்வாகத்தையும், தற்காப்பையுமே முக்கிய பணிகளாகக் கொண்டிருந்தன.

13-ஆம் நூற்றாண்டு வரைப் போலந்தில் (Poland) உண்மையான நகரங்கள் அதாவது முழுப்பண்புகளைப் பெற்றுள்ள நகரங்

கள் தோன்றவில்லை. ஸ்கேன்டினேவியாவில் (Scandinavia) 14—15ஆம் நூற்றாண்டுகளில்தாம் முதன்முதலில் நகரங்கள் தோன்றலாயின. 18ஆம் நூற்றாண்டு வரை டேன்யூப் (Danube) சமவெளியிலும் நகரங்களின் வளர்ச்சி குன்றியே காணப்பட்டது.

இடைக்காலத்தில் ஐரோப்பாவில் பழைய நகரங்களின் வளர்ச்சியைக் காட்டிலும், புதிதாகத் தோன்றிய நகரங்களின் அளவே அதிகமாக இருந்தது. வாணிகம் வளர்ச்சிப்பெற்று வந்த பகுதிகளில் பழைய நிலமானியமுறை ஒழிக்கப்பட்டது. பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே அக்காலச் சமூகத்தில் அதிகாரம் இருந்துவந்தது. அப்போது சமூகத்திலும், அரசியலிலும் வியாபாரிகளே அதிகச்செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதன் விளைவாக, பெரிய நகரங்கள் எல்லாம் வியாபார மார்க்கங்கள் (trade-routes) கூடுகின்ற (cross-roads) இடங்களில்தான் வளர்ச்சியைப் பெற்றன. ஏனென்றால், சாலைகள் கூடுகின்ற இடங்கள்தான் வாணிகத்திற்கு ஏற்ற தலங்களாக இருந்தன. எனவே, வணிகர்கள் இத்தகைய தலங்களிலேயே தங்கள் நகரங்களை அமைத்துக்கொண்டனர்.

புதிய நாடுகள் தோன்றும்போதும் புதிய நகரங்கள் தோன்றுகின்றன. 5-ஆம் நூற்றாண்டில் மாலுமிகள் காம்பஸின் (compass) உதவியால் புதியநாடுகளைக் கண்டுபிடித்தபின்னர், ஸ்பெயின், போர்ச்சுகல், பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகளின் காலனிகள் அங்குத் தோன்றின. எனவே, புதிய காலனிகளில் ஐரோப்பாவின் பண்பாடும் பரவத் தொடங்கியது.

இந்தியாவில் நகரங்களின் தோற்றம் :

இந்தியாவில் வடமேற்குப் பகுதியில்தான் முதன்முதலில் நகரங்கள் தோன்றின. அயல்நாட்டினர் முதன்முதலாக இந்திய மக்களுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கியது இப்பகுதியில் தான். எனவே, அவர்களுடைய பண்பாடும், எண்ணங்களும் இந்தியப் பண்பாட்டுடன் கலந்ததன் விளைவாக, நகரங்கள் இங்கு வளர்ச்சி பெற்றன. ஆனால், கிழக்குப் பகுதியில் அயல்நாட்டினரின் ஊடுருவல் இங்குக் காணப்படாததால் இந்தியர்கள் இந்தியர்களாகவே இருந்து வந்தனர். வடமேற்கிலிருந்த அயல்நாட்டுப் பண்பாடு கிழக்குப் பகுதியை அடைவதற்கு இயலாமல் கங்கைநதி தடுத்துக் கொண்டிருந்தது. எனவே, கிழக்குப்பகுதி

நெடுங்காலம்வரை தனித்தே விளங்கியது. இதற்கு மாருக வட மேற்குப் பகுதியில் அயல்நாட்டுக் குடியேற்றத்தினுல் மக்கள் தொகை பெருகி, தனிப்பட்ட நாகரிகம் தோன்றலாயிற்று.

கி. மு. 3500-4000 ஆண்டுகளில்தாம் இந்தியாவில் நகரங்கள் முதன் முதலாகத் தோன்றின. இவை, வடமேற்குப் பகுதியில் சிந்து நதிக்கரையில் தோன்றியவை மொஹஞ்ஜதாரோ (Mohenja-Daro) ஹரப்பா (Harappa) ஆகிய நகரங்களேயாகும்.

மொஹஞ்ஜதாரோ நகரம் செவ்வக வடிவில் அமைந்திருந்தது. அது சுமார் ஒரு சதுரமைல் பரப்புக்கு விரிவடைந்திருந்தது. இந்நகருக்கு அருகில் கோட்டை ஒன்று (Citadel) இருந்தது. இந்த நகரத்தின் தெருக்களில் விளக்குகளும், வடிகால் (drainage) அமைப்புகளும் காணப்பட்டன. தெருக்கள் மிகவும் குறுகலாகவும், வீடுகளின் சுவர்கள் உயரமானதாகவும் காணப்பட்டன. இந்த வீடுகளில் சன்னல் கிடையா. அடிக்கடி ஏற்படும் வெள்ளத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள, உயரமான மேடைகளில் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. கட்டடங்களுக்குச் சுட்ட களிமண் பயன்படுத்தப்பட்டது. இந்த நகரத்தில் தொழிலின் அடிப்படையில் குடியிருப்புப் பகுதிகள் பாகுபடுத்தப்பட்டன. வியாபாரிகளும், கைத்தொழில் செய்பவர்களும், செல்வர்களும், நடுத்தர மக்களும், தனித்தனிப்பகுதிகளில் வசித்து வந்தனர். இந்நகர மக்களில் ஒரு பகுதியினர் வாணிகத்திலும், வேறு பகுதியினர் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்தனர். விவசாயத்திற்கு ஏற்ற வண்டல்மண் கிடைப்பதாலும், பாசனத்திற்கும், குடிப்பதற்கும் நீர் கிடைத்தாலும் இந்நகரம் சிந்துநதிக் கரையில் தோன்றி வளர்ச்சி பெற்றது.

ஹரப்பாவிலும் (Harappa) இதே அமைப்புக் காணப்பட்டது. இந்நகரமும் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் தோன்றி வளர்ச்சி பெற்றிருந்தது. இங்கு, விவசாயிகளின் வீடுகளைச் சுற்றி வேலைக்காரர்களின் வீடுகள் காணப்பட்டன. மொஹஞ்ஜதாரோ, ஹரப்பா ஆகிய இந்த இரண்டு நகரங்களின் நாகரிகம், சிந்து நதிப் பள்ளத்தாக்கில் காணப்பட்டதால், "சிந்துநதி நாகரிகம்" எனப்படுகிறது.

சிந்துநதி நாகரிகத்திற்குச் சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரியர்கள் (Aryans) இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் குடியேறினர். இவர்களின் குடியேற்றத்தால் இந்தியாவின்

வடமேற்குப் பகுதியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இச்சமயத்தில் தான் இந்தியாவிலிருந்த திராவிடப் பண்பாடு, ஆரியப் பண்பாடோடு ஒன்றாய் கலந்தது. இதன் பின்னர், குடியிருப்புகள் திட்டமிட்டு அமைக்கப்பட்டன. நகரங்களுக்குப் பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்பட்டன. இந்தச் சுவர்கள் நகரைச் சுற்றிலும் செவ்வகவடிவில் கட்டப்பட்டதால், நகரமும் செவ்வக வடிவத்தில் அமைந்தது. நகரின் சுவர்களில் நான்கு புறத்திலும் பெரிய நுழைவாயில் ஒன்றும், சிறிய நுழைவாயில் ஒன்றும் காணப்பட்டன. நகரத்தின் மையத்திலிருக்கும் பெரிய மரத்தின்கீழ்தான் பஞ்சாயத்துக் கூடுவது வழக்கம்.

ஆரியர்களுக்குப் பிறகு பௌத்த காலம்வரை சுமார் கி.மு. 6000 ஆண்டுகள் வரை, நகரங்களுக்குக் குறிப்பிடும்படியான வளர்ச்சி எதுவும் காணப்படவில்லை. பௌத்தர்கள் காலத்தில் நகர அமைப்பில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டது. இவர்கள் காலத்தில்தான் கபிலவஸ்து (Kapilavastu) போன்ற நகரமைப்புகள் (township) தோன்றலாயின. புத்தர் பிறந்த இடமான கபிலவஸ்து பல்வேறு பணிகளுக்கு மையமாக இருந்தது. இதேபோல் சாக்கியர்களின் (Shakyas) நகரங்களிலும் ஒழுங்கான அமைப்புக் காணப்பட்டது. இவர்களின் நகரங்கள் பாதுகாப்புச் சுவர்கள் கொண்டதாக இருந்தன. இச்சுவர்களில் நான்கு புறத்திலும் நுழைவுவாயில் இருந்தது. ஒவ்வொரு சுவருக்கு இடையிலும் தோட்டம் காணப்பட்டது. இந்நகரங்கள் சிறப்பு வாய்ந்த அறிவாலயங்களாகவும், கல்விக்கூடங்களாகவும் (house of learning) விளங்கின. மேற்கு இந்தியாவில் இதேபோல் பௌத்த நகரங்கள் பல தோன்றியிருந்தன. வரோரா (Worora) ஆற்றுப்பள்ளத்தாக்கில் அமைந்துள்ள அஜந்தா (Ajanta) இதற்குச்சான்று.

பழங்கால இந்திய நகரங்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டன. நகரின் முக்கிய பணி, பாதுகாப்பு, தலத்தின் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பல வடிவங்களில் நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. கர்முகா (Karmuka) என்பது படகுவடிவில் அமைந்த நகரமாகும். ஆற்றங்கரையில் ஒரு நகரம் வளர்ச்சி பெறும்போது ஆற்றின் எதிர்திசையில் மட்டுமே அரை வட்ட வடிவத்தில் வளர்ச்சியடைவதால் இந்த அமைப்பு ஏற்படுகிறது. பத்மகா (Padmaka) என்பது தாமரை வடிவில் அமைந்த நகரமாகும். மூலக்கருவைச் சுற்றி வளர்ச்சிபெற்ற நகரங்கள் இந்த அமைப்பைப் பெறுகின்றன. ஸ்வஸ்திகா (Swastika) என்பது ஸ்வஸ்திக் வடிவத்தில் அமைக்கப்பட்ட நகரமாகும்.

இந்தவடிவத்தில் பாதுகாப்பு அதிகமாகஇருப்பதால் ஆபத்து நிறைந்த பகுதிகளில் இது பின்பற்றப்பட்டது. தற்கால இராணுவ முகாம்கள்கூட இதே காரணத்திற்காக ஸ்வஸ்திக் வடிவத்தில் அமைக்கப்படுவதுண்டு. சதுர்முகா (chaturmuka) என்பது சதுர வடிவம் கொண்ட நகரமாகும். இந்த அமைப்பில் நகரைச்சுற்றி நான்கு சுவர்கள் சதுர வடிவில் காணப்படுகின்றன. நான்கு திசைகளிலிருந்தும் நான்கு சாலைகள் நகரத்தின் மைய த்தில் கூடுகின்றன.

பழங்கால இந்திய நகரங்கள் பாதுகாப்பு, நிர்வாகம் வாணிகம் போன்ற பணிகளுக்காக் குறிப்பிட்ட தலங்களிலும் (Site) சூழமைவுகளிலுமே தோன்றி வளர்ச்சி பெற்றிருந்தன. இதற்குச் சிறந்த உதாரணம் பாடலிபுத்திரமாகும். பாடலி புத்திரம் (பாட்னு) கங்கை நதிக்கரையில் ஆற்று வளைவில் அமைந்திருக்கிறது. மெகஸ்தனிஸ் (megasthanis) எழுதிய இண்டிகா (Indiga) விலுள்ள குறிப்பின்படி பாடலிபுரத்திற்கு வடிவம் இருந்தது, நகருக்குப் பாதுகாப்புச்சுவர் எழுப்பப்பட்ட தோடல்லாமல் அவற்றின் வழியே அம்பு (arrow) எய்வதற்குத் துவாரங்களும் அமைக்கப்பட்டன. பாதுகாப்பைத்தவிர மையப் பணியும் (central service) சில நகரங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றன. உதாரணமாக, பைத்தா (Baitha) நகரம் வரண்ட பகுதியில் அமைந்திருந்தது. சுற்றியுள்ள பகுதிகளை இணைப்பதற்காகவும் அப்பகுதிகளுக்குச் சேவை செய்வதற்காகவும் இந்நகரம் ஏற்பட்டிருக்கவேண்டும். இதே போல் பஞ்சாப் சமவெளியும் மத்திய இந்தியாவும் இணைகின்ற மையப்பகுதியில்தான் மதுரா (Mathura) நகரமும் வளர்ச்சி பெற்றது.

கி.மு. 322 முதல் கி.பி, 185 ஆண்டுகள் வரை முக்கிய போக்குவரத்துச் சாலைகளின் வழியே புதிய நகரங்கள் பல வளர்ச்சி பெற்றன, இந்த நகரங்களுக்கெல்லாம் பாதுகாப்பும், மையமும் முக்கிய பணியாக இருந்தன. இதேபோல் பழங்கால நகரங்களுக்குத் தூய்மையும் மிக அவசியமாகக் கருதப்பட்டது. உதாரணமாகக் குடியிருப்பு ஒன்றை அமைப்பதற்கு, தலத்தைத் (Site) தேர்ந்தெடுப்பதற்கு முன்பாக அங்குச் சமய வழிபாடுகள் செய்யப்பட்டன. பின்னர், கடவுள் சிலை அங்கு நிறுவப்பட்டு, அதன் பின்னரே குடியிருப்பு ஏற்படுத்தப்படுகின்றது. கல்கத்தா நகரில் காளிகோயிலும், பம்பாய் நகரில் சிவன் கோயிலும், பங்களூரில் மொம்பாதேவி கோயிலும், காசிநகரில் பைரவர் கோயி

லும், அந்நகரங்கள் தோன்றுவதற்கு முன்பாகவே அமைக்கப்பட்டவையாகும்.

தொழிற்புரட்சியின் விளைவு :

ஐரோப்பாவில் பண்டைக் காலத்திலும், தொழிற்புரட்சிக்குப் பின்னரும் தோன்றிய நகரங்கள் யாவும் பெரிய நகரங்களாகும். தொழிற்புரட்சிக்கு அடிப்படைக் காரணமாக இருந்த தொழில், பொருளாதாரம் ஆகியவற்றின் மாற்றங்களே நகரங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தன. இவை நகரங்களின் அளவு, நகர மக்கள் தொகையின் விகிதம், நகர்ப்புற மார்க்கத்தின் வேகம் ஆகியவற்றை மாற்றியமைத்தன.

விவசாயத்தில் ஏற்பட்ட பல புதிய முன்னேற்றங்களே நகர்ப்புற வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது. உணவு உற்பத்தித் தன்னிறைவு (self-sufficiency) நிலையிலிருந்து விற்பனை நிலைக்கு மாறியதிலிருந்து வாணிகம் பெருகி, நகரங்கள் தோன்றலாயின என்பதை ஏற்கனவே அறிந்தோம். இந்த மாற்றம் இங்கிலாந்தில் சுமார் 17ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டுவரை நிகழ்ந்து வந்தது. இக்காலத்தில்தான் புதிய பயிர்களும், புதிய கருவிகளும் விவசாயத்தில் அறிமுகம் செய்யப்பட்டன. உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய விவசாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்தியபோது கிராமப்புறத்தில் வேலை வாய்ப்பை இழந்த பலர், வேலைதேடி நகரங்களுக்குச் சென்றனர்.

விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப்போல் போக்குவரத்திலும் (transport) பல மாற்றங்கள் ஏற்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரிட்டனில் ஏற்பட்ட கால்வாய் போக்குவரத்து (Canal transport) நகர வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. சாலைகளும் பெரிய வண்டிகள் விரைவாகச் செல்லும் வகையில் மாற்றியமைக்கப்பட்டன. எனவே, பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் போக்குவரத்து வசதிகள் நிறைந்த குறிப்பிட்ட நகரங்களிலேயே நிறுவப்பட்டன. இந்த நகரங்களில் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை அருகிலுள்ள சந்தையில் விற்கவும், பிற இடங்களிலிருந்து கச்சா பொருள்களைக் கொண்டுவரவும் ஏற்ற வகையில் வசதிகள் இருந்தன.

புகைவண்டியும், நீராவிக்கப்பலும் புதியநிலையை உருவாக்கிவிட்டன. 1850ஆம் ஆண்டின் இறுதியில்தான் பிரிட்டனில் ரெயில்பாதைகள் அமைக்கப்பட்டன. இதனால் வாணிக அடிப்

படையில் மேற்கொள்ளப்பட்ட விவசாயம் (Commercial agriculture) பிரிட்டிஷ் தீவுகள் முழுவதும் பரவி விட்டது. ரெயில் பாதைகளினுல் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் எல்லாம் கிராமங்களில் விநியோகம் செய்யப் பட்டன. எனவே, அங்குக் கைத்தொழில் வளர்ச்சி குன்றி, கிராம மக்கள் பலர் வேலைதேடி நகரங்களை நோக்கிக்குடிபெயர்ந்தனர்.

நகரங்களுக்குள்ளேயே போக்குவரத்தில் பல புதிய வளர்ச்சிகள் ஏற்பட்டன. வேலை செய்யும் இடத்திலிருந்து வீட்டுக்குச் செல்ல, புகைவண்டிப் பாதைகளும், மின்சார ரெயில்பாதைகளும் அமைக்கப்பட்டன. குறிப்பாக லண்டனில் 1863ஆம் ஆண்டு மெட்ரோ பாலிடன் (Metropolitan Railway) ரெயில்வேயும், அதன் பிறகு குழாய் ரயில் பாதைகளும் (Tube railways) அமைக்கப்பட்டன. இதன் விளைவாக நகரங்கள் வியக்கத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றுவிட்டன. அதனுல் நகரங்களில் சாலைப்போக்குவரத்து மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. 1820ஆம் ஆண்டிலிருந்து பல ஐரோப்பிய நகரங்களில் குதிரை வண்டிகள் (Horse buses) பயன்படுத்தப்பட்டன. நகரத்துக்குள் போக்குவரத்து வளர்ச்சி பெற்றபின் நகரத்தின் பரப்பளவு அதிகரித்துக் கொண்டு சென்றது. மேற்கத்திய நாடுகளில் 19ஆம் நூற்றுண்டின் இறுதிக் கட்டத்தில் என்றைக்குமே இல்லாத அளவுக்கு நகரங்கள் வளர்ச்சி பெற்றிருந்தன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இந்த வளர்ச்சி மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது. இங்குக் கிழக்குப் பகுதியில் 1870ஆம் ஆண்டுதான் ரெயில் பாதைகள் அமைக்கப்பட்டன. 19ஆம் ஆண்டின் இறுதிக்குள் எல்லா பகுதிகளிலும் ரெயில் பாதைகள் அமைக்கப்பட்டு விட்டன. இதனுல், கடற்கரைகளிலும், படகு செல்லும் ஆற்றோரங்களிலும் பெரிய ஏரிக்கரைகளிலும் பெரிய நகரங்கள் தோன்றுவதற்கு மாருக உள்நாட்டிலும் (inland) அவை தோன்றலாயின. அத்துடனில்லாமல் நகரமக்கள் தொகையும் பெருகத்தொடங்கியது. இங்கிலாந்திலும், வேல்ஸ் நாட்டிலும் 1871ஆம் ஆண்டு 14 மில்லியன்களாக இருந்த நகர மக்கள்தொகை 1911-ல் 28 மில்லியன்களாக உயர்ந்தது. இதே ஆண்டுகளில் பிரான்சில் இது 11 மில்லியனிலிருந்து $17\frac{1}{2}$ மில்லியன்களாக வளர்ச்சி பெற்றது.

தற்கால வளர்ச்சி ;

தற்காலத்து நகர வளர்ச்சிக்குத் தொழிற்சாலைகள் முக்கிய காரணமாக இருக்கின்றன. கனரக தொழிற்சாலைகளைவிட

(heavy industries) சிறிய தொழிற்சாலைகளே இவற்றின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. ஏனென்றால் சிறிய தொழிற்சாலைகளில் தான் உள்நாட்டுக்குத் தேவையான பொருள்கள் பல செய்யப்படுகின்றன. இப்பொருள்கள் பெரிய நகரங்களில்தான் அதிகம் தேவைப்படுகிறது. இது தவிர, பெரிய நகரங்கள்தான் உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளுடன் அதிகமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றன. மேலும் பெரிய நகரங்களில்தான் திறமையான தொழிலாளர்கள் வேலைக்கு கிடைக்கிறார்கள். இதேபோல் துணை உற்பத்திப் பொருள்களும் (ancillary products) இங்குதான் எளிதில் கிடைக்கிறது. மேற்கூறிய காரணங்களினால் தொழிலதிபர்கள் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவுதற்குப் பெரிய நகரங்களையே நாடுகிறார்கள்.

தொழிற்சாலைகளைத்தவிர, இயல், இசை, நாடகம் போன்ற சமூகப் பண்பாட்டுச் செயல்களும், கலைஞர்களுக்கு நிரந்தர இடத்தை நகரங்களில் ஒதுக்கித் தருகின்றன. கலையினாலும் நகர்ப்புறம் வளர்ச்சி பெற்றிருக்கிறது.

நகரத்தின் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு, குடியேற்றத்தைத் (migration) தவிர இயல்பான மக்கள்தொகை பெருக்கமும் (natural growth) காரணமாக இருக்கிறது. இதனால் குறிப்பாக 1870ஆம் ஆண்டுமுதல் பெரிய நகரங்களில் மக்கள்தொகை பெருகி வந்திருக்கிறது.

20ஆம் நூற்றாண்டில் நகர்ப்புற மார்க்கத்தில் இரு மாறுதல்கள் காணப்படுகின்றன. முதலாவது மாற்றம் மோட்டார் (automobile) போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியாகும். இரண்டாவது மாற்றம் அயன மண்டலத்திலுள்ள (tropies) பெரிய நகரங்களின் வளர்ச்சியாகும்.

மோட்டார் போக்குவரத்தினால் நகரத்தின் மையப் பகுதியில் மக்கள்தொகைச் செறிவு குறைந்து, அதன் விளிம்புகளில் (fringe) அதிகரிக்கத் தொடங்கியது. நகரத்தின் மையப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், நகரின் மையத்தில் வசிப்பதை விட்டு விட்டு விளிம்புப் பகுதிகளில் (fringe) குடியேறத் தொடங்கினர். இதற்குச் சிறந்த உதாரணம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வடகிழக்குக் கடற்கரைப் பகுதியாகும். இங்கு, வடகிழக்கு-தென்மேற்கு அச்சில் (axis) சுமார் 600 மைல்களுக்குப்

பெரிய நகரங்கள் ஒரு சங்கிலி போன்று தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இந்த வளர்ச்சிக்கு மோட்டார் வாகனம்தான் ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. இப் பகுதியை ஜுன் காட்மேன் (Jean Gottmann) மெகலோபாலிஸ் (megalopolis) என்று குறிப்பிடுகின்றார். மெகலோபாலிஸ் என்ற இப்பதம் லூயிஸ் மம்போர்டு (Lewis mumford) என்பவரால் பிரபலப் படுத்தப்பட்டாலும், இதனை முதன் முதலில் பயன்படுத் தியவர் கெடஸ் (geddes) என்பவராவர்.

20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டாவது முக்கிய மாற்றம் அயன மண்டலத்திலுள்ள பெரிய நகரங்களின் வளர்ச்சி யாகும். இந்த வளர்ச்சி கடந்த 30 ஆண்டுகளில் ஏற்பட்டிருக் கிறது. குறிப்பாக இரண்டாவது உலகப்போரின் இறுதியிலிருந்து இங்கு, பெரிய நகரங்கள் வளரத் தொடங்கின. உதாரணமாக அயன மண்டலத்தில் அமைந்துள்ள பம்பாய், கல்கத்தா மெக்ஸிகோ சிட்டி (Mexico city), சாபாலோ (Sao Paulo) போன்ற நகரங்களின் மக்கள்தொகை 1940ஆம் ஆண்டில்தான் ஒரு மில்லியனைத் (10 லட்சம்) தாண்டியது. தற்போது அயன மண்டலத்தில் மில்லியன் நகரங்களின் எண்ணிக்கை 15க்கு மேற் பட்டிருக்கிறது. வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா போன்ற பகுதிகளைக் காட்டிலும், அயனமண்டல பகுதிகளில்தான் நகரங்கள் வேகமாக வளர்ச்சி பெறுகின்றன. இங்கு நகர்ப்புற வளர்ச்சி வேகமாக இருந்த போதிலும், நகரமக்களின் சதவிகிதம் மேற்கத்திய நாடுகளைவிடக் குறைவாகவே உள்ளது. அயனமண் டலத்தில் பெரிய நகரங்கள் (மில்லியன் நகரங்கள்) வளர்ச்சி பெறுவதற்கு அரசியல் விழிப்புணர்ச்சி (Political awakening). காரணமாகக் கூறப்படுகிறது. காலனி ஆதிக்கத்தின் அடிமை வாழ்வு நீங்கிய பிறகு ஏற்பட்ட விரைவான முன்னேற்றமே இதற்குக் காரணம் எனலாம். அயனமண்டல நாடுகள் தற்காலத் திலும் கச்சாப் பொருள்களை (raw material) மேற்கத்திய நாடு களுக்கு ஏற்றுமதி செய்து அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை (manufactured goods) இறக்குமதி செய்கின்றன. இந்த ஏற்றுமதி இறக்குமதிக்குத் துணைசெய்யும் வகையில் இங் குள்ள பெரிய நகரங்கள் எல்லாம் துறைமுக நகரங்களாக (Port town) உள்ளன. மேலும் சுதந்திரம் பெற்றபின், இக்கிழக்கு நாடுகள் எல்லாப் பொருள்களையும் தாங்களே உற்பத்தி செய்யத் தொடங்கியதாலும் இந்த நகரங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. நகர்ப்புற மார்க்கத்தில் மலேயா, பர்மா போன்ற நாடுகளில் தனித்தன்மை காணப்படுகிறது. இங்கு, பல சிறிய நகரங்களுக்

கிடையே ஒரே ஒரு பெரிய நகரம் காணப்படுகிறது. சில சமயம் இதுவே அந்நாட்டின் தலைநகராகவும் விளங்குகிறது. இங்கு, ஒரே ஒரு பெரிய நகரம் காணப்படுவதற்குக் காரணம் கிராமப் புறங்களிலிருந்து வேலைதேடி நகரத்திற்கு வரும்போது மக்கள் பெரிய நகரங்களையே நாடிப் போகிறார்கள். எனவே, சிறிய நக ரங்களில் குடியேற்றம் ஏற்படாமலிருப்பதால் அவை சிறிய நக ரங்களாகவே இருக்கின்றன.

18. நகர்ப்புற வளர்ச்சியின் நிலைகள்

கிரிபித் டெயிலரின் (Griffith Taylor) கருத்துப்படி புறப் புவியியலில் (Geomorphology) காணப்படுவதுபோல், நகரங்களின் வளர்ச்சியில் மூன்று பருவ நிலைகள் (Stages) காணப்படுகின்றன. புதிதாகத் தோன்றிய நகரம் இளமை நிலையிலிருந்து (youthful stage) முதுமை நிலையை (Old stage) அடையும்வரை பல மாற்றங்களை அடைகிறது. ஒவ்வொரு நிலையிலும் நகரத்தில் அந்த நிலைக்குரிய சிறப்புத்தன்மை காணப்படுகிறது. உலகில் காணப்படும் எல்லா நகரங்களும் இந்த நிலைகளைக் கடந்துதான் செல்கின்றன.

லூயிஸ் மம்போர்டு (Lewis mumford) நகரத்தின் வளர்ச்சியில் ஆறு நிலைகளைக் குறிப்பிடுகிருர். ஒவ்வொரு காலத்தின் அறிவு நிலை, தொழில் நுணுக்கம் ஆகியவற்றைப் பொறுத்து, நகரங்கள் படிப்படியாக வளர்ச்சி பெறுகின்றன. எனவே, இந்த நகரங்களின் ஆறு நிலைகளும் அந்தந்தக் காலத்தின் தொழில் நிலையை எடுத்துக் காட்டுகின்றன. ஒவ்வொரு நகரமும் கடந்து செல்கின்ற இந்த ஆறு நிலைகள் பின்வருமாறு :-

இயோ பாலிஸ் (Eopolis) :

இதுவே, நகர்ப்புற மார்க்கத்தின் தொடக்க நிலையாகும். மக்கள் கூடி வாழுகின்ற ஒரு சிறு சமூகத்தை இது குறிக்கிறது. நாடோடி வாழ்க்கை முறையிலிருந்து மனிதன் நிரந்தரமாக ஒரு இடத்தில் விவசாயம் செய்யத் தொடங்கியபோது குடியிருப்புகள் நிரந்தரமாகிவிட்டன; விவசாயத்தில் கூட்டுறவுமுறை அவசியமாக இருந்ததால், கூடிவாழுகின்ற பண்பாடு வளர்ச்சி பெற்றது. இதன் விளைவாக நிரந்தரக் கிராமக் குடியிருப்புகளும் சமூக அமைப்பும் ஏற்பட்டன. இயோபாலிஸ் என்பது நிரந்தரமான கிராமத்தைக் குறிக்கிறது; இதுவே நகர்ப்புறமாக்கத்தின் முதற்படியாகும்.

பாலிஸ் (Polis) :

பாலிஸ் என்பது பல கிராமங்கள் ஒன்றுசேர்ந்து காணப் படுவதாகும். இயோபாலிசை அடுத்து இந்நிலை ஏற்படுகிறது. பாதுகாப்பு, வாணிகம், கல்வி, கலாச்சாரம், ஆகியவற்றிற்காக மக்கள் ஒன்றுசேர்ந்து வசிக்கத் தொடங்கினர். மேற்கூறிய நோக்கத்திற்காகக் கிராமங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு பாலிஸ் (polis) ஆக மாறுகின்றன. இதுவே நகரத்தின் தொடக்க நிலையாகும். இந்நிலையில் இந்நகரம் அளவில் சிறியதாக இருக்கிறது.

மெட்ரோபாலிஸ் (Metropolis) :

இது கிராமத்தையும், நகரத்தையும்விட அளவில் மிகப்பெரிய தாகும். எனவே, இதைப் பெருநகரம் என்றும் தாய்நகரம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியாவில் கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகியவை இந்நிலையில் உள்ள நகர்ப்புறங்களாகும். மெட்ரோபாலிஸின் வளர்ச்சிக்கு அதன் இருப்பிடம் அல்லது அமைவிடம் அடிப்படைக் காரணமாக உள்ளது. இங்கே உல்லாச வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் மலிந்து கிடக் கின்றன.

மெகலோபாலிஸ் (Megalopolis) :

மெட்ரோபாலிசை அடுத்து ஏற்படும் நிலை, மெகலோபாலிஸ் ஆகும். இதில் பல பெரு நகரங்கள் இணைந்து இருப்பதால் இது முன்னணி நகரமாகக் காட்சியளிக்கிறது. இங்குதான் மனித சமூகநீதி சரியத் தொடங்குகிறது. மெகலோபாலிஸ் நிலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது அமெரிக்காவின் வட கிழக்குக் கடற்கரைப் பகுதியாகும். இது அட்லாண்டிக் கடலுக் கும், அப்பலேச்சியன் மலைக்கும் இடையே பாஸ்டன் (Boston) நகரிலிருந்து வாஷிங்டன் (washingdon) நகரம்வரை அமைந் துள்ளது. இதில் நியூயார்க், பிலெடெல்பியா (Philadelphia), பாஸ்டன், பால்டிமோர் (Balti more), வாஷிங்டன், ஆகிய நக ரங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றிலும் 2மில் லியனுக்குமேல் மக்கள்தொகை காணப்படுகிறது. இதன் மையப்பகுதியில் நியூயார்க் நகரம் அமைந்துள்ளது. இந்த மெகலோபாலிஸ் நகர்ப்புறத்தின் பரப்பு சுமார் 53,000 சதுர மைல்களாகும். அதாவது அமெரிக்காவின்மொத்தமான பரப்பில் இது 1.8% சதவிகிதமாகும். இப்பகுதியில் மட்டும் 37 மில்லியன் பேர் வசிக்கிறார்கள். இது அமெரிக்காவின் மக்கள்தொகையில் $\frac{1}{5}$ பங்காகும். அதாவது 20% சதவிகித மக்கள் இந்த 1.8% சதவிகித நிலப்பரப்பில் மட்டும் வசிக்கின்றனர். அமெரிக்காவில்

சதுரமைலுக்கு 50பேர் வசித்த சமயத்திலும் இந்த மெகலோ பாலிஸில் சதுரமைலுக்கு 688பேர் வசிக்கிறார்கள்.

மெகலோபாலிஸ் என்பது கிரேக்கச் சொல்லாகும். உலகத்திற்கே மையமான பெருநகரம் என்பது இதன் பொருள். கிரேக்க மக்கள் உலகத்திற்கே மையமான ஒரு பெரிய நகரத்தைக் கற்பனை செய்து அதற்கு மெகலோபாலிஸ் என்று பெயரிட்டனர்.

டிரனுபாலிஸ் (Tyrannapolis) :

மெகலோபாலிஸ் நிலையை அடுத்து நகர்ப்புறம் டிரனுபாலிஸ் நிலையை அடைகிறது. டிரனுபாலிஸ் என்பது நகர்ப்புறத்தின் கட்டுக்கடங்காத வளர்ச்சியைக் குறிக்கிறது. மக்கள்தொகை கட்டுக்கடங்காமல் போவதால் இங்கு இருக்கின்ற எல்லா நிலங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இங்குச் செலவு மிகவும் அதிகமாகிறது. வருமானம் போதாமையால் வறுமைநிலை காணப்படுகிறது. மக்கள்தொகையைச் சமாளிக்க பின்நிலங்கள் (hinterlands) யாவும் பயன்படுத்தப்படுவதால் அவற்றின் வளம் குன்றி விடுகிறது. பயனுள்ள வேலையில் ஊக்கம் குறைந்துவிடுவதால் உற்பத்தியும் குறைந்துவிடுகிறது.

நெக்ரோபாலிஸ் (Nekropolis):

டிரனுபாலிஸ் மேலும் வளர்ச்சிபெற்றால் இறுதியில் அது நெக்ரோபாலிஸ் நிலையை அடைந்துவிடுகிறது. போர், பஞ்சம், வறுமை ஆகியவையே அங்குக் காட்சியளிக்கும். இந்நிலையில் வறுமை, பஞ்சம் ஆகியவற்றின் காரணமாக நகர்ப்புற மக்களிடையே பகைமை ஏற்பட்டு ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்வர். இறுதியில் நகர்ப்புறமே அழிந்துவிடும். பின்பு மறுசக்கரம் தொடங்குவதால் அதன் முதற்படியான பழங்குடி விவசாயம் மீண்டும் ஆரம்பமாகிறது.

மேற்கூறிய நிலைகளில் டிரனுபாலிஸ், நெக்ரோபாலிஸ் ஆகிய நிலைகளை, உலகின் எந்த நகரமும் இன்னும் அடையவில்லை. லூயிஸ் மம்போர்டு கருத்துப்படி தற்போது மெகலோபாலிஸ் நிலையில் உள்ள நகர்ப்புறம் மேலும் வளர்ச்சி பெற்றால் இந்நிலைகளை அடையக்கூடும்.

19. தொழில் முன்னிலை நகரங்கள்

(Pre industrial cities)

தொழில் முன்னிலை நகரங்கள் கடந்த 150 ஆண்டுகளில் தோன்றியவையாகும். தொழிற்புரட்சியோடு இவை தொடர்பு கொண்டிருப்பதால் சில சமயங்களில் இவை தொழில் நகரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. தொழில் முன்னிலை நகரம் என்பது தொழில் மயமாவதற்கு முந்தைய நிலையிலிருக்கும் நகரமாகும். இந்நகரங்களைப்பற்றி பேராசிரியர் ஜாபெர்க் (Sjoberg) போன்றவர்கள் ஆராய்ச்சிசெய்தனர்.

தொழில் முன்னிலை நகரங்களுக்கென்று சில தன்மைகள் காணப்படுகின்றன. ஐரோப்பா, சீனு, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமன்றி, மற்றப் பகுதிகளில் காணப்படும் தொழில் முன்னிலை நரகங்களும் அமைப்பில் ஒரேமாதிரியாக இருக்கின்றன. தொழில் மயமாவதற்கு முன் தோன்றிய இந்த நகரங்கள் நவீனத் தொழில் நகரங்களினின்று முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. நம்முடைய சமூகவளர்ச்சியில் பொதுவாக மூன்றுநிலைகள் உள்ளன. முதலாவது நிலை தன்னிறைவுகொண்ட (self sufficiency) கல்வியறிவற்ற சமூக நிலையாகும். இதில் நகர்ப்புற வாழ்க்கை என்றால் இன்னதென்பதே தெரியாது. இரண்டாவது நிலையாவது முந்தியநிலிருந்து வளர்ச்சிபெற்ற மரபுவழி வந்த விவசாயச் சமூகநிலையாகும். இதில் தானிய உற்பத்தி, பிராணிகளை வளர்த்தல், உழுது பயிரிடுதல், பாசனமுறைகளைக் கையாளுதல் போன்ற நடவடிக்கைகள் காணப்படுகின்றன. மூன்றாவது நிலையாவது தொழில் வளர்ச்சிபெற்ற நிலையாகும். தொழில் முன்னிலை நகரங்கள் இரண்டாவது நிலையைச்சார்ந்தவையாகும். இவற்றில் தொழிற்பங்கீடும் (division of labour) வகுப்பு முறையும் (caste system), தனித்த தோற்றமும் காணப்படுகின்றன. நகரத்தின் தோற்றத்தைத் தவிர பணி (function),

கூட இங்குத் தனித்தன்மை பெற்றுள்ளது. தொழில் முன்னிலை நகரங்கள் பொதுவாக அவை சார்ந்த இடத்தின் தன்மைகளைப் (residual character) பிரதிபலிக்கின்றன. சில வற்றைத்தவிர எல்லாத் தொழில் முன்னிலை நகரங்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன.

இந்நகரங்கள் விவசாயக் குடியிருப்பைக்காட்டிலும் அளவில் பெரியதாகவும், நிரந்தரமாகவும் இருக்கின்றன. இவற்றில் வீடுகள் நெருக்கமாக கட்டப்பட்டிருப்பதால், மக்கள்தொகைச் செறிவு அதிகமாக இருக்கிறது. இந்நகரங்கள் திட்டமிட்டு உருவாக்கப் படுவதில்லை. எனவே, வீடுகளும், கட்டடங்களும், சாலைகளும், தெருக்களும் ஒழுங்கற்று இருக்கின்றன. இந்த நகரங்களில் பாதுகாப்புச் சுவர் அல்லது அகழி தற்காப்பிற்காகக் காணப்படுகிறது. இவற்றில் கோயில், மசூதி, அரண்மனை போன்ற முக்கிய கட்டடங்களைத்தவிர மற்றக் கட்டடங்களெல்லாம் ஏறத்தாழ ஒரே உயரத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. அதாவது, சற்று தூரத்தில் இருந்து நகரத்தைப் பார்த்தால் கட்டடங்களின் உயரம் ஏறத்தாழ ஒரே அளவில் காணப்படுவதால் அவை ஒரே கோட்டில் அமைந்ததுபோன்று காட்சியளிக்கும். இந்தக் கோட்டைவிட்டு, கோயில், மசூதி, அரண்மனை போன்ற கட்டடங்கள் மட்டுமே வெளியே தெரியும். எனவே இந்நகரங்களைநோக்கி நாம் பயணம் செய்யும்போது நம் கண்ணுக்கு முதலில் தெரிவது இப்பெரிய கட்டடங்களே. தொழில் முன்னிலை நகரங்களில் வாணிகத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. அதனால்தான் நகரின் மையப் பகுதியில் சந்தை (market)) அமைந்திருக்கிறது. இங்குப் பொருள் உற்பத்தி கைத்தொழில் நிலையிலேயே (craft level) இருக்கிறது. கைத்தொழில்களேயாவும் நகரில் பரவலாகக் காணப்படுகின்றன. இங்குச்சமூக அமைப்புக் கிராமத்தில் இருப்பதுபோல் இல்லாமல் கிராம—நகரத்தன்மைகள் கலந்து காணப்படுகின்றன. செய்யும் தொழிலின் அடிப்படையில் இங்கு ஜாதிப் பிரிவுகள் காணப்படுகின்றன. வசிக்கும் இடங்களும் இதே அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. செல்வர்களின் வீடுகள் நகரின் மையப்பகுதியிலும், ஏழைகளின்வீடுகள் விளிம்புப் பகுதிகளிலும் (fringe) அமைந்துள்ளன. ஆரம்பகாலத்தில் நகரிலுள்ள நிலங்களைச் சுதந்திரமாகப் பயன்படுத்தியதால் வீடுகளும், கட்டடங்களும் கண்ட கண்ட இடங்களில் கட்டப்பட்டு நகரம் ஒழுங்கற்ற அமைப்பைக் கொண்டிருக்கிறது.

ஐரோப்பியரின் ஆதிக்கத்தால் சில தொழில் முன்னிலை நகரங்கள் அமைப்பில் மாறுபட்டிருக்கின்றன. ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்கு உட்படாத தொழில் முன்னிலை நகரங்களுக்குத் தெற்கு நைஜீரியாவிலுள்ள நகரங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். நைஜீரியாவில் நகரங்கள்தாம் பழங்குடிகளின் தலைவன் வசிக்கும் இடமாகும். பாதுகாப்புச்சுவர் கட்டப்பட்டுள்ள இந்நகரங்களில் சுமார் 50,000 முதல் 1 .00,000 பேர் வரை வசிக்கிறார்கள். எல்லாச் சாலைகளும் நகரின் மையத்தில் தான் கூடுகின்றன. பாதுகாப்பிற்காகக் கிராம மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்வதால் இந்நகரங்கள் தோன்றியுள்ளன. தற்காலத்திலும் இந்நகரங்களிலுள்ள பெரும்பாலான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆப்பிரிக்காவில், சூடன் பகுதியிலுள்ள டிம்பக்டு (Timbukktu) நகரம் ஒரு தொழில் முன்னிலை நகரமாகும். இந்நகரம் நாடோடிகள் வாழும் பகுதியில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இருவிதப் பண்பாடும், வாழ்க்கை முறையும் சந்திக்கின்ற இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. இங்குப் பண்டமாற்றுதல் (barter) முக்கிய பணியாகும். இங்கு மக்கள்தொகைச் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது. இந் நகரிலுள்ள தெருக்களும் சாலைகளும் குறுகலாக உள்ளன. பண்டமாற்றுதல் முக்கிய பணியாதலால், இந்நகரில் வணிகர்கள், கைத்தொழில் செய்பவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை அதிகமாக உளது.

ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட சில இந்திய நகரங்களையும், தொழில் முன்னிலை நகரங்களுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். கல்கத்தா, பழையடெல்லி ஆகியவை இதற்கு உதாரணமாகும். இவற்றில், மற்றையத்தொழில்முன்னிலை நகரங்களைப் போலவே செறிவு அதிகமாகவும், தெருக்கள் குறுகலாகவும் நடைபாதை (pedestrian) போக்குவரத்தும் உள்ளன. இங்கு வீடுகள் மிக நெருக்கமாக அமைந்திருக்கின்றன. கோயில், மசூதிகளைத்தவிர மற்றக் கட்டடங்கள் ஒரே உயரத்தில் காணப்படுகின்றன. சிறு கைத்தொழில்கள் நகரம் முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது. தொழிற்சாலைகள் நகரின் எப் பகுதியிலும் குழுமி இருப்பதில்லை. இந்நகரங்களில் இந்துக்களும், முகமதியர்களும் தனித்தனிப் பகுதிகளில் வசிக்கின்றனர். செல்வர்கள் நகரின் மையத்திலும், மற்றவர்கள் விளிம்புகளிலும் வசிக்கின்றனர். நகர விளிம்புப் பகுதிகள் காய், கனி, பால் ஆகியவற்றை விநியோகம் செய்யும் கிராமப்புறங்களாகவே இருக்கின்றன. ஐரோப்பியரின் ஆதிக்கத்தால் இந்த நகரங்களில் ஐரோப்பிய

தன்மைகள் கலந்து காணப்படுகின்றன. இராணுவ (military) குடியிருப்புகள், இராணுவமல்லாத (civil) குடியிருப்புகள், ரெயில்வே குடியிருப்புகள் போன்றவைகளும் காணப்படுகின்றன. நீதிமன்றம், பொழுதுபோக்குமிடம், திருச்சபை, மருத்துவமனை ஆகிய இடங்களுக்குச் செல்லும் சாலைகள் ஒழுங்காகவும், மரங்கள் வளர்க்கப்பட்டும் காணப்படுகின்றன. ரெயில்வே நகரங்கள் இங்குத் திட்டமிட்டு அமைக்கப்படுகின்றன. ஐரோப்பியர்களால் நிறுவப்பட்ட இந்திய நகரங்களில் மட்டும் செல்வர்களின் வீடுகள் மையத்தை விட்டு விலகியிருக்கின்றன. மேற்கத்திய நாகரிகம் இந்தியாவில் பரவியுள்ளது போல் சீனாவிலும் பரவியுள்ளது. உதாரணமாக ஷங்காய் (Shanghai) நகரம் நீள்வட்ட வடிவிலும், அதன் தெருக்கள் சதுர செவ்வக வடிவிலும் அமைந்துள்ளன. இவை பிரஞ்சு, மற்றும் ஆங்கில நாகரிகங்கள் இங்குப் பரவியிருப்பதையே காட்டுகிறது. இது தவிர, சீன நகரங்களில் காணமுடியாத மத்திய வாணிகப் பகுதி (Central Business District) இங்குக் காணப்படுகிறது..

பழைய உலகின் (old world) தொழில் முன்னிலை நகரங்கள் பண்பில் இடைக்கால மேற்கத்திய நாகரிகத்தை ஒத்திருக்கின்றன. ஆசியாவின், பல பழம்பெரும் நகரங்கள் அண்டத்தின் (cosmos) பிரதிபலிப்பாக உள்ளன. சீனாவில் முக்கிய கட்டடங்கள் வடக்கு, தெற்கு திசையில் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் நகரங்களின் அமைப்பு வடக்கு, தெற்குத் திசைக்குத் தொடர்புடையதாக இருக்கின்றது. இதற்கு உதாரணமாகச் சீனாவிலுள்ள பீகிங் (Peking) நகரத்தைக் குறிப்பிடலாம். இங்கு நகரத்திற்குள் நகரம் ஒன்று உள்ளது.

இலத்தீன் அமெரிக்காவில் ஐரோப்பியர் ஆட்சிக்கு உட்பட்டவற்றைத் தவிர மற்றத்தொழில் முன்னிலை நகரங்கள் ஒரே மாதிரியாகவே காட்சியளிக்கின்றன. இலத்தீன் அமெரிக்க நகரங்களும் ஆசிய நகரங்களைப் போலவே கிராமமக்களின் குடியேற்றத்தினால் வளர்ச்சி பெற்றவையாகும். இங்குள்ள சதுர, செவ்வக சாலைகள் யாவும் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாட்டினரிடமிருந்து நேரிடையாகப் பின்பற்றியதாகும். இங்கு ஒவ்வொரு நகரத்திலும் பொதுக்குடியிருப்புக்கு எதிர் திசையில்தான் சந்தை, திருச்சபை, ஆகியவை அமைந்திருக்கின்றன. இலத்தீன் அமெரிக்காவில் ஷேன்டி (shanty) நகரம் என்பது ஏறத்தாழ சேரிகளைப் (slums) போன்ற குடியிருப்பாகும். வெனிசூவேலாவில் இவற்றை பேரியோஸ் (Barrios) என்றும், பிரேஸில் நாட்டில்

பெவலாஸ் (Fevelas) என்றும், பெருவில் (peru) பேரியடாஸ் (Barriados) என்றும் அழைக்கிறார்கள். இந்த ஷேன்டி (shanty) நகரங்கள் பெரிய நகரங்களின் விளிம்புகளில் தோன்றுகின்றன. போர்க்காலத்தில் பழுதடைந்து புறக்கணிக்கப்பட்ட கட்டடங்களும், ஆள் இல்லாத கட்டடங்களும், ஷேன்டியில் வசிக்கும் ஏழை மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பழைய கட்டடங்களே இந்நகரின் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளன. இத்தகைய நகரங்கள் சில இடங்களில் ஓரே இரவில் தோன்றிவிடுவதுண்டு. சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட இக்குடியிருப்புகள் அகற்றப்பட்டாலும் குறுகிய காலத்திற்குள் மீண்டும் அதே இடத்தில் தோன்றிவிடுகின்றன. பழைய எண்ணெய் டப்பாக்களும், தகரங்களும், பனை ஓலைகளும் இங்குக் கட்டடப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. சுகாதாரம் என்பதே இக்குடியிருப்புகளில் காணமுடியாது. இங்குச் சாலைகளும், நீர் வசதியும் இல்லை.

தொழில் முன்னிலை நகரங்கள் நாளடைவில் வளர்ச்சி பெற்று, தொழில் நகரங்களாக மாறிவிடுகின்றன. இருப்பினும் சில பகுதிகளில் பழைய அமைப்பு மாறாமல் அப்படியே இருக்கின்றன. புதிய பகுதிகளில் பல அடுக்குக் கட்டடங்கள் தோன்றினாலும், பழைய பகுதிகளில் பழைய கட்டடங்கள் தற்காலத்திலும் காணப்படுகின்றன.

20. நகரின் தலமும் சூழமைவும்

நகரங்களின் நிர்மாணிப்பை (setting) ஆராய்வது புவியியலில் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. இந்த ஆராய்ச்சியின் மூலமாக நகரங்களுக்குப் புவியியல் தொடர்பாக உள்ள சூழ்நிலைகளை அறியமுடிகிறது. நகரங்களின் இருப்பிடம் (location) அவை அமைந்திருக்கும் தலம் (site), அவற்றின் சூழமைவு (situation) ஆகியவற்றை ஆராய்ந்தால் நகரங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக இருக்கின்ற காரணங்கள் புலப்படும்.

நகரத்தின் இருப்பிடத்தை (location) தீர்க்கரேகை (longitude), அட்சரேகை (latitude) ஆகியவற்றின் மூலமாகக் குறிப்பிடுவது ஒரு முறையாகும். சில சமயங்களில் அவை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறது எந்தத் திசையில் அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டும் அவற்றின் இருப்பிடத்தைச் சுட்டிக்காட்டுவதுண்டு. சிற்சில சமயங்களில் இயற்கையமைப்புகளாகிய மலை, ஆறு, போன்றவற்றை அடையாளமாகக்கொண்டு, நகரத்தின் இருப்பிடத்தைக் குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது. ஆனால், திட்டமிட்டு அமைக்கப்பட்ட சதுரவடிவ குடியிருப்புகளின் இருப்பிடங்கள் மற்றையக் குடியிருப்புகளைவிட மிகவும் தெளிவாக அறியப்படுகின்றன. பொதுவாக நகரங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது அவற்றின் இருப்பிடத்தைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இருப்பிடத்திற்கு அடுத்தாற்போல் நகரத்தின் தலத்தைக் (site) குறிப்பிடுவது அவசியமாகிவிடுகிறது. தலம் என்பது நகரம் அமைந்துள்ள பரப்பைக் குறிக்கிறது. இரண்டு நகரங்களுக்கு ஒரேமாதிரியான தலம் இருக்கமுடியாது. ஒவ்வொரு தலமும் அதற்கென்று சில சிறப்புத் தன்மைகளைப் பெற்றிருக்கின்றன. ஆனால் குறிப்பிட்ட சில நில அமைப்புகள் (physical-features) நகரங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்

கின்றன. எனவே, இந்த நில அமைப்புகளின் அடிப்படையில் தலங்களை வகைப்படுத்திக் கூறமுடியும். நகரம் வளர்ச்சிபெறும் போது அதன் பரப்பும் அதிகரிக்கிறது. எனவே, நகரின் பரப்பு என்றும் நிலையாக இருப்பதில்லை. நகரத்தின் பரப்பு அதிகரிப்ப தற்கு அதன் சூழ்நிலைதான் காரணமாக இருக்கிறது.

கிராமங்களும், நகரங்களும் தோன்றுவதற்குப் பொருத்த மான தலம் தேவைப்படுகிறதென்றாலும், அவற்றின் வளர்ச் சிக்குச் சூழமைவு (situtation) தான் காரணமாக இருக்கிறது. சூழமைவு கிராமத்தின் வளர்ச்சிக்கு அவ்வளவாகத் தேவைப்படு வதில்லை. ஆனால், நகரம் வளர்ச்சியடைவதற்கு இது முக்கிய மானதாகும். ஏனெனில் நகரத்தின் இயக்கம் அதனைச்சுற்றி யுள்ள இடத்தின் உற்பத்தித் திறனைப்பொறுத்துத்தான் அமை கிறது. சுற்றியுள்ள சூழ்நிலைதான் நகரத்திற்கு உயிர்நாடியாகும். சுற்றியுள்ள பகுதிக்குப் பணிபுரிவதே நகரத்தின் தலையாய கடமை யாக இருக்கிறது. அப்பணியின் விளைவாகவே அது வளர்ச்சி பெறுகிறது. எனவே, நகரம் வளர்ச்சியடைவதோ அல்லது வளர்ச்சி குன்றுவதோ அதன் சூழ்நிலையைப் பொருத்துள்ளது. சூழமைவு என்பது நகரைச்சுற்றியுள்ள இயற்கை அமைப்பும், கலாசார அமைப்பு, அரசியல் அமைப்பு, நகரஎல்லை ஆகிய வற்றைக் குறிக்கிறது. சாலைகள் கூடுகின்ற இடம், போக்கு வரத்துசாலைகள் மாறுபடுகின்ற இடம் (break of bulk) ஆகியவையாவும் நகரங்களின் வளர்ச்சிக்குக் காரணமான சூழமைவாகும். நிலஅமைப்பு, போக்குவரத்து வழிகளைக்கட்டுப் படுத்துவதால் மலைகளும் சமவெளிகளும் சந்திக்கின்ற இடம், பள்ளத்தாக்குகளும் சமவெளிகளும் சந்திக்கின்ற இடம் ஆகியவை நகரங்களின் தோற்றத்திற்குக் காரணமாக இருக் கின்றன. இதேபோல் வெவ்வேறு பொருள்களை உற்பத்தி செய் கின்ற இரண்டு நிலப்பகுதிகள் இணைகின்ற பகுதிகளிலும் நகரங் கள் வளர்ச்சிபெறுகின்றன.

நகரத்தின் இருப்பிடத்தை நாம் ஆராய்ந்தோமானால் அது அங்கு அமைவதற்கு ஊக்கம்தந்த காரணிகள் (motive forces) நமக்குப் புலனாகும். ஒரு நகரத்தின் பணி அதன் இருப்பிடத்தைப் பொறுத்து அமைகிறது. இருப்பிடம்தான் நகரம் இன்ன பணியைச் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறது. எனவே குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்காகக் குறிப்பிட்ட தலங்களில் நகரங்கள் தோன்றுகின்றன. நகரவளர்ச்சியின் ஆரம்ப காலத் தில் அதன் தலத்திற்கும் அது மேற்கொள்ளும் பணிக்கும்

நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஆனால், அது வளர்ச்சி பெற்ற பின் அதன் தலம் முக்கியத்துவத்தை இழந்து அதன் சூழமைவே எதிர்கால வளர்ச்சிக்குக் காரணமாக அமைகிறது.

நிலம், நீர்நிலைகளின் அமைப்பு, பரப்பு, நிலத்தோற்றம், நீர் வசதி, தாவரம் போன்றவற்றைப் பொறுத்து நகரத்தின் தலம் சிறப்புப்பெறுகிறது. பொதுவாக நகரம் அமைவதற்குப் பெரிய சமநிலம் (level land) தேவைப்படுகிறது. நில அமைப்புக்குத் தக்கவாறு நகரத்தின் வடிவம் மாறுபடுகிறது. நகரத்தின் பரவலை நிலஅமைப்புக்கட்டுப்படுத்துவதால், அதன் வளர்ச்சி சில திசைகளில் தடைப்படுகிறது. உதாரணமாக மிச்சிகன் (michigan) ஏரிக்கரையில் அமைந்துள்ள சிகாகோவும் (chicago), ஈரி (Erie) ஏரிக்கரையில் அமைந்துள்ள க்ளிவ்லாந்தும் (cleveland), இந்த ஏரிகளுக்கு எதிர்திசையில் அரைவட்ட வடிவில் வளர்ச்சிபெற்றுள்ளன. இதேபோல் ஒரு நகரதலத்தின் குறுக்கே நதி பாய்ந்து செல்லும்போது அந்நகரம் நதியின் இருபுறத்திலும் அரைவட்ட வடிவத்தில் வளர்ச்சிபெறுகிறது. மிஸிஸிப்பி ஆற்றங்கரையில் அமைந்த செயின்ட் லூயி (St. Louis) இதற்கு ஒரு உதாரணமாகத் திகழ்கிறது.

நகரங்களின் வளர்ச்சிக்கு நிலஅமைப்புத் தடையாக இருப்பின், தற்கால யந்திரங்கள் மூலம் அத்தடைகளை ஓரளவு நீக்கிக் கொள்ளமுடிகிறது. செயின்ட் லூயி (St. Louis) நகரில் அமைந்துள்ள களிமண் நிலம் (deep fine textured clay) நகரின் வளர்ச்சிக்குத்தடையாக இருப்பதால், அதன் வேறு திசையில் அமைந்த, உயர்ந்த சரிவு மிகுந்த கரடுமுரடான பகுதிகள் அனைத்தும் பெரிய இயந்திரங்களின் மூலம் சமநிலங்களாக ஆக்கப்பட்டு இந்நகரம் வளர்ச்சிபெற்றுள்ளது. இதேபோல் ரியோ டீ ஜெனிரோ (Rio de Janerio) நகரின் விளிம்பிலிருந்த ஒரு மலை அந்நகரின் விரிவுக்குத் தடையாக இருந்ததால், அம்மலை வெட்டியெறியப்பட்டது. நகரில் மக்கள் தொகை பெருகும்போது வீடுகளும் கட்டடங்களும் எண்ணிக்கையில் பெருகிவிடுகின்றன. இப்பெருக்கத்தின் காரணமாக, நகரில் அமைந்துள்ள ஏரி, குளம் போன்ற பகுதிகள் மண்ணால் நிரப்பப்பட்டு அவற்றில் வீடுகள் கட்டப்படுகின்றன. உதாரணமாக, சென்னையில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் காணப்பட்ட நுங்கம்பாக்கம் ஏரி, மண்ணாலும் குப்பையினாலும், நிரப்பப்பட்டு அதில் புதிய குடியிருப்புகள் அமைந்துள்ளன.

குறிப்பிட்ட நில அமைப்புகள் நகரங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பதால், தலத்தின் அடிப்படையில் நகரங்களை வகைப்படுத்தலாம். அவை பின் வருமாறு :

(1) ஆற்றங்கரை நகரம் (River town)
(2) கூடுதுறையில் அமைந்த நகரம் (confluence town)
(3) துறைமுக நகரம் (port town)
(4) கணவாயில் அமைந்த நகரம் (Gap town)
(5) சந்தை நகரம் (Market town)
(6) சுரங்கத்தொழில் நகரம் (Mining town)
(7) தொழில் நகரம் (Industrial town)
(8) நிர்வாக நகரம் (Administrative town)
(9) வாசஸ்தல நகரம் (Resort town)
(10) சமயப்பணி நகரம் (Religious town)
(11) பண்பாட்டு நகரம் (Cultural town)
(12) தற்காப்பு நகரம் (Defence town)
(13) இராணுவ நகரம் (Military town)

ஆற்றங்கரை நகரம் :

உலகின் பெரிய நகரங்கள் யாவும் ஆற்றங்கரைகளிலேயே அமைந்திருக்கின்றன. பாரீஸ், லண்டன், பெர்லின், மாஸ்கோ போன்ற நகரங்கள் இதற்கு உதாரணமாக விளங்குகின்றன. பாரீஸ், ஸீன்(seine) ஆற்றங்கரையிலும், பெர்லின், ஸ்பிரீ (spree), ஆற்றங்கரையிலும், மாஸ்கோ, ஒகா (oka) ஆற்றங்கரையிலும், லண்டன் தேம்ஸ் (Thames) ஆற்றங்கரையிலும் அமைந்துள்ளது. லண்டன் தொடக்கத்தில் தேம்ஸ் நதியின் வடக்குக் கரையில் தான் அமைந்திருந்தது. இந்நதியின் இருபுறத்திலும் அமைந்த சமநிலம் (level land) தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு ஏற்ற தாக இருந்ததால், நாளடைவில் இப்பகுதியில் லண்டன் மாநகரம் வளர்ச்சிபெற்றது. இதேபோல் ஜெர்மனியில் எல்ப் (Elbe) நதியின் தெற்குக்கரையில் ஹேம்பர்க் (Hamburg) நகரம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. யமுனை ஆற்றின் மேற்குக்கரையில் டெல்லி அமைந்துள்ளது. ஹூக்ளியாற்றின் மேற்குக்கரையில் கல்கத்தா அமைந்துள்ளது.

ஆற்றங்கரைகளில் நகரங்கள் அமைவதால் ஒருபுறத்தில் அவற்றிற்குப்பாதுகாப்புக்கிடைக்கிறது. ஆற்றுவளைவில் அமைந்துள்ள ஷ்ரூவ்ஸ்பரி (Shrewsbury) அழுந்திய ஆற்றுவளைவில் (Incised meander), அமைந்துள்ள பாட்னா (Patna) ஆகிய

நகரங்கள் அந்த ஆறுகளின் கரைகளிலுள்ள செங்குத்துச்சரிவினுல் கூடுதலான பாதுகாப்பைப் பெறுகின்றன.

ஆற்றங்கரைகளிலும் ஆற்றின் முகத்துவாரங்களிலும் அமைந்த நகரங்கள் படகுப் போக்குவரத்தினுல் வாணிகத்தில் வளர்ச்சி பெற்றுள்ளன. லண்டனுக்கு அருகிலுள்ள வால்புரூக் நதியின் முகப்பிலும் ஹம்பர் (Humber) நதியுடன், ஹல் (Hull) நதி சேருகின்ற முகப்பிலும், ஹூக்ளி (Hoogly) நதியின் முகப்பிலும் (கல்கத்தா) நகரங்கள் வாணிகத்தால் வளர்ச்சியைப் பெற்றுள்ளன.



படம் : 44

கோதாவரி நதிக்கரையில் அமைந்துள்ள ராஜமந்திரி.
ஆற்றின் குறுகலான பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாலத்தின்
இருபுறத்திலும் குடியிருப்புகள் வளர்ச்சிபெற்றுள்ளன.

சில நகரங்கள் ஆற்றை எளிதில் கடக்கக்கூடிய இடத்தில் வளர்ச்சி பெறுகின்றன. செஸ்டர் (Chester) நகரம் கடினமான மணற்பாறையால், ஆன நீண்ட குன்றின் மீது அமைந்துள்ளது. இந்தக் குன்றைக் கடக்கின்ற டீ (Dee) ஆற்றின் பள்ளத்தாக்கு

மிகவும் குறுகலாகவும், செங்குத்தாகவும் உள்ளது. செஸ்டர் நகரம் இந்த ஆற்றின் ஓதமுகத்திற்கும், இதன் சதுப்பு நிலத்திற்கும் வடக்காகத் தாழ்ந்த களிமண் நிலத்திற்குத் தெற்கிலும் அமைந்துள்ளது. இங்குதான் ஆற்றை எளிதில் கடக்கமுடிகிறது. இதேபோல் கோதாவரி ஆற்றங்கரையில் அமைந்த ராஜமந்திரியும், கோவூரும் (kovur) ஆற்றைக் கடக்கின்ற நீண்டரெயில் பாலத்தின் இருபுறத்திலும் அமைந்துள்ளன. பொதுவாக ஆற்றைக் கடப்பதற்கு ஏற்ற குறுகலான இடத்தில்தான் பாலம் அமைக்கமுடியும். எனவே இங்குக் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வருகின்ற ரெயில்பாதை ஆற்றைக் கடக்க இயலாமல் வடக்கேயுள்ள ஆற்றின்குறுகலான பகுதியில்தான் கடக்கிறது. ஆற்றைக் கடந்தபின் மீண்டும் பழையபடி தெற்கே திரும்பி கிழக்கு மேற்கு நேர்கோட்டில் சேர்ந்துவிடுகிறது. ஆகவே, ஆற்றின் குறுகலான பகுதியில்தான் பாலம் அமைக்கமுடிந்தது. அதுவே இந்த இரு நகரங்களின் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது. ஆறுகளில் காணப்படும் தீவுகள்ஆற்றை எளிதில் கடப்பதற்கு உதவுகின்றன. அத்தகைய தீவுகளில் நகரங்கள் தோன்றுகின்றன. உதாரணமாக கிளாசெஸ்டர் (Glouocster), பாரீஸ் (paris) போன்ற பகுதிகளில் நகரங்களின் பெயர்களோடு போர்டு (Ford), பிரிட்ஜ் (Bridge) போன்ற சொற்கள் இணைக்கப்படுகின்றன. இச்சொற்கள் ஆற்றை எளிதில் கடக்கின்ற தன்மையைக் குறிக்கிறது. ஸ்ரீரங்கம், காவேரியாற்றின் நடுவில் அமைந்துள்ள தீவாகும். ஆற்றைக் கடக்கும் பாலங்கள் இத்தீவையும் இணைத்து அமைக்கப்பட்டுள்ளன. (படம் 45)

சில இடங்களில் ஆற்றங்கரைகளில் அடிக்கடி ஏற்படும் வெள்ளத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள நகரங்கள் வெள்ளம் வராத உயர்ந்த கரைகளில் வளர்ச்சிபெறுகின்றன. பாட்னு (patna) நகரம் இதற்குச்சிறந்த உதாரணமாகும். இது கங்கை நதியின் தென்கரையில். அமைந்துள்ளது வடக்குகரையில் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதால், அங்கு, குடியிருப்புகள் காணப்படுவதில்லை. வடகரையைவிட, தென்கரை. செங்குத்தாகவும் உயரமாகவும் இருப்பதால், இப்பகுதி வெள்ளத்திஞல் பாதிக்கப்படுவதில்லை, எனவே, பாட்னுநகரம் தென்கரை நெடுகிலும் நீண்டு வளர்ச்சி பெற்றிருக்கிறது.

கூடுதுறையில் அமைந்த நகரம் :

முக்கிய நதியும், உப நதியும் கூடுகின்ற இடத்தில் நகரங்கள் தோன்றுகின்றன. உதாரணமாக வால்கா (volga) நதியும், ஓகா



படம் : 45

கங்கை நதியின் அழுந்திய ஆற்று வளைவில் அமைந்திருக்கும் பாட்னு நகரம்.

(Oka) நதியும் சேருமிடத்தில் கொர்கி (Gorki) நகரமும், தேம்ஸ் நதியும், கென்னட் (Kennet) நதியும் சேருமிடத்தில் பீடிங் (peading) நகரமும், ஓஹியோ (Ohio), அலெகெங்க் (Allegheng), மனுங்கஹெலா (monangahela) ஆகிய நதிகள் கூடுமிடத்தில்

பிட்ஸ்பர்க் (Pittsburg) நகரமும் அமைந்துள்ளன. இந்தியாவில் கங்கையும், யமுனையும் கூடுமிடத்தில் அலஹாபாத் (Allahabad) நகரமும், காவேரியும் பவானியும் கூடுமிடத்தில் பவானி நகரமும் காணப்படுகின்றன. (படம் 46) முக்கிய நதி, பிரிந்து கூடுகின்ற



படம்: 46

பவானி காவேரி நதியும் அதன் உப நதியாகிய பவானியும் கூடுகின்ற இடத்தில் இந்நகரம் வளர்ச்சியடைந்திருக்கிறது.

பகுதிகளில் தீவுகள் அமைவதுண்டு. இத்தகைய தீவுகளில் தற்காப்பின் பொருட்டு நகரங்கள் அமைகின்றன. காவிரி ஆற்றுத் தீவில் அமைந்துள்ள ஸ்ரீரங்கப்பட்டணத்தை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

பாதுகாப்பு அதிகமாக இருப்பதற்காகச் சில சமயங்களில் உட்குவிந்த (concave), புறங்குவிந்த (convex) ஆற்று வளைவுகளில் நகரங்கள் வளர்ச்சி பெறுகின்றன. சாதாரணமான ஆற்றங்கரையை விட, வளைந்த ஆற்றங்கரை பாதுகாப்பிற்குச் சிறந்ததாகக்

கருதப்பட்டது. ஸ்விட்சர்லாந்தின் தலைநகரமான பெர்ன் (Berne) ஆர் (Aar) ஆற்றின் அழுந்திய வளைவில் (incised meander) அமைந்துள்ளது. இதேபோல் டர்ஹாம் (Durham), ஷ்ரூஸ்பரி (Shrewsbury) ஸ்கார்பாரோ (Scarborough) போன்ற நகரங்களும் ஆற்று வளைவில் அமைந்திருக்கின்றன.



படம்: 47

ஸ்ரீரங்கபட்டணம். இந்நகரம் காவிரி ஆற்றுத்தீவில் அமைந்துள்ளது.

சில நகரங்கள் டெல்டாவில் அமைந்திருப்பதற்குப் படகு அல்லது கப்பல் போக்குவரத்துக் காரணமாக இருக்கிறது. கடலிலிருந்து கப்பல்கள் உள்நாட்டிற்கு ஆற்றின் வழியே சில மைல்கள்வரை வருகின்றன. கடல் கொந்தளிப்பு, நீரோட்டம் ஆகியவை உள்நாட்டு ஆற்றுப்பகுதியில் இல்லாததால், சில துறைமுகங்கள் டெல்டாவின் தொடக்கப் பகுதியில் காணப்படுகின்றன. உதாரணமாக கெய்ரோ (Cairo) நைல் நதி டெல்டாவின் உட்பகுதியில் அமைந்திருக்கிறது. இதேபோல் மிஸிஸிபி டெல்டாவில் நியு ஆர்லியன்ஸ் (New Orleans) நகரமும், ஹூக்ளி நதி டெல்டாவில் கல்கத்தா நகரமும் அமைந்துள்ளன.



படம்: 48

அரக்கோணம் - இது ஒரு இருப்புப்பாதை சந்திப்பாகும்.

துறைமுக நகரம் :

கடற்கரையின் தன்மையைப் பொருத்துத் துறைமுகங்கள் வளர்ச்சிபெறுகின்றன. துறைமுகத்திலிருந்து உள்நாட்டுப் போக்குவரத்து, பின்னிலம் (hinter land), கடற்கரையின் அமைப்பு ஆழம் ஆகியவை சாதகமாக இருக்குமிடங்களில்

துறைமுக நகரம் உருவாகிறது. அமுழ்ந்திய கடற்கரைகளில் (submerged coast) இயற்கைத் துறைமுகங்கள் தோன்று கின்றன. இயற்கைத் துறைமுகங்களில், பெரிய கப்பல்கள் தங்கிச் செல்வதற்கு ஏற்ற ஆழம் காணப்படுகிறது. சிட்னி (sydney) பாஸ்டன் (Boston), பம்பாய் (Bombay) போன்ற நகரங்கள் இயற்கைத்துறைமுகங்களில் வளர்ச்சிபெற்றவை யாகும். கால்வாய்களின் வழியேயும் துறைமுக நகரங்கள் வளர்ச்சி பெறுகின்றன. சூயஸ் கால்வாயின் நெடுகிலும் காணப்படும் துறைமுக நகரங்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும். ஓதமுகத்தில் (estuary) அமைந்த துறைமுகங்கள் மேலும் சிறப் புடையவை. இங்குப் புயலினால் ஏற்படும் அபாயம் தவிர்க்கப் படுவதாலும், கப்பல்கள் தங்குவதற்கு வசதியாக ஓதமுகம் ஆழமாக இருப்பதாலும், இதில் உலகின் மிகப்பெரிய துறை முகங்கள் காணப்படுகின்றன. லண்டன், நியூயார்க், ஹாம்பர்க் (Hamburg) போன்றவை ஓதமுகத்தில் தோன்றிய துறைமுக நகரங்களாகும். பம்பாய், பாஸ்டன், சான்பிரான்சிஸ்கோ, போர்ட்ஸ் மௌத் (Ports mouth), வெனிஸ் போன்றவை உள் நாட்டுத்துறைமுக நகரங்களாகும். கானடாவின் தலையாய துறைமுகமான வான்கூவர் (Vaneouver) கண்டத்தைக் கடந்து செல்லும் பெரிய ரெயில்பாதை (The great Transcontinuntal Railways) முடிவடையும் இடத்தில் அமைந்துள்ளது.

கணவாய் நகரம் :

கணவாயின் (Pass) இருபுறத்திலும் நகரங்கள் வளர்ச்சி பெறுவதுண்டு. இதற்கு உதாரணமாக கர்நாடக மாநிலத்தி லுள்ள சண்டூர் (Sandur) நகரம் விளங்குகிறது. இதன் நான்கு புறங்களிலும் கணவாய்கள் உள்ளன. இக்கணவாய்களின் வழியே செல்லும் சாலைகள் சண்டூரில்தான் (Sandur) கூடுகின்றன. எனவே, பல்வேறு திசைகளிலிருந்தும் வருகின்ற பொருள்களைச் சேகரித்து மற்ற இடங்களுக்கு விநியோகம் செய்வதற்கு வசதியாக உள்ளதால் இந்நகரம் இங்கு நன்றாக வளர்ச்சிபெற்றுள்ளது. இதேபோல் இரு மலைகளுக்கு இடையேயுள்ள பள்ளத் தாக்கு களில் நகரங்கள் வளர்ச்சிபெறுகின்றன. (படம் 49) இவ்வகையில் அமைந்த நகரம்தான் வேலூர். இதன் வடக்கே கிழக்குத் தொடர்ச்சி மலையும், தெற்கே ஜவ்வாது மலையும் அமைந்துள் ளன. இவ்விரு மலைகளுக்கிடையே உள்ள ஒரே இடைவெளி யான பாலாற்றுப் (Palar) பள்ளத்தாக்கில் இது வளர்ச்சிப் பெற்றுள்ளதால் இடைவெளி நகரம் (gap town) எனவும் பெயர் பெறுகிறது. பாலாற்றுக்கும் ஜவ்வாது மலைக்கும்



படம் 49 வேலூர் (இடைவெளி நகரம் *Gap Town*)

(Javadi Hills) இடையில் வேலூர் நகரம் வளர்ச்சி பெற்றுள்ளதால், இதைக்கடந்துதான் மற்றப் பகுதிகளுக்குச் செல்லமுடியும். எனவே, இந்நகரம் கிழக்குப் பகுதியையும் மேற்குப் பகுதியையும் இணைக்கின்ற பாலமாக அமைகிறது. இதன் ஒரு புறத்தில் பாலாறும், மற்ற இருபுறங்களில் மலைகளும் இருப்பதால் இப்பகுதிக்குச் சிறந்தபாதுகாப்பு கிடைக்கிறது.

சந்தை நகரம்:

நகர்ப்புறப் பகுதிகளுக்கு பணி புரிவதற்காக நல்ல உற்பத்தியுள்ள (productive) பகுதிகளுக்கு நடுவில் சந்தை நகரங்கள் உருவாகின்றன. சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து பொருட்களை கொண்டுவந்துதான் சந்தையில் விற்பனை செய்யவேண்டும். அதேபோல் குடியானவர்களும், தாங்கள் வசிக்குமிடத்தில்

கிடைக்காத, தங்களுக்குத் தேவையான பொருட்களை, சந்தை நகரங்களிலிருந்துதான் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இங்கிலாந்தில் கிழக்கு ஆங்கிலியா (Anglia) விலுள்ள நார்விச் (Norwich) ஒரு சந்தை நகரமாகும். சந்தை நகரங்கள் வளர்ச்சி பெறுவதற்குக் குறிப்பிட்ட சூழ்நிலைகள் காணப்படவேண்டும். அவையாவன: (1) சுற்றியுள்ள பலதரப்பட்ட பகுதிகளில் வாணிகம் செய்ய மக்களுக்கு விருப்பம் இருக்க வேண்டும்; (2) அதன் தலம் நீண்ட பெரிய சாலைகளை ஒட்டி அமைந்திருக்க வேண்டும். (3) அத்தலம் வாணிகம் செய்வதற்கு ஏற்ற வகையில் போக்குவரத்துகள் கூடுகின்ற இடத்திலும் அமைதல் வேண்டும். ஆற்றுப் பள்ளத்தாக்குகளும், பிளவுப் பள்ளத்தாக்குகளும் (rift valleys) நல்ல போக்குவரத்துக்கு ஏற்றதாக உள்ளன. இங்கு நிலம் சமமாக இருப்பதால், சாலைகள், இருப்புப்பாதைகள் ஆகியவற்றை அமைப்பது எளிதாகும். ஆப்பிரிக்காவில், நைஜீரியாவிலுள்ள வறண்ட சவானு (Savannah) பகுதியில் காணப்படும் கானோ (Kano) நகரம் சவானு பகுதியில் உற்பத்தியாகும் பொருட்களைப்பெற்று, விற்பனை செய்வதால் இது சந்தை நகரமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதேபோல் துருக்கிக்குத் தென் பகுதியில் அமைந்திருக்கும் அலெப்போ (Allepo) நகரம், ஆசியா மைனரையும் (Asia minor) மத்தியதரைக் கடலையும் வாணிகத்திற்காக இணைக்கும் சந்தை நகரமாக உள்ளது.

சுரங்கத் தொழில் நகரம்:

கனியங்களின் (minerals) கண்டு பிடிப்பினால் பல புதிய நகரங்கள் உருவாகியிருக்கின்றன. கலிபோர்னியா, அலாஸ்கா, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா, அமெரிக்கா, இந்தியா போன்ற பல இடங்களில் சுரங்கங்களுக்கு அருகில் நகரங்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஜானேஸ்பர்க் (Johannesburg) நகரம் 1884 ஆம் ஆண்டு சிறிய கிராமமாக இருந்தது. இங்கே தங்கம் கிடைத்ததால் சுமார் 20 ஆண்டுகளில் அதாவது 1904க்குள் இது ஒரு பெரிய நவீன நகரமாக வளர்ச்சிபெற்றுவிட்டது. அந்த ஆண்டில் இந்நகரத்தில் 159000 பேர் வசித்தனர். தற்போது அதன் மக்கள்தொகை சுமார் 10 லட்சத்திற்கு மேல் இருக்கிறது. தங்கம் கிடைத்ததால் இக் குறுகிய காலத்தில் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டது மட்டுமல்லாமல், இந்நகரைச் சுற்றி ஏழு பெரிய நகரங்களும் தோன்றியுள்ளன. தற்போது சர்வதேச விமான தளமாகிவிட்டது. இதேபோல் வைரச் சுரங்கங்கள் உள்ள காகசஸ் (caucasus) பகுதியில் பக்கு (Baku) நகரமும், எண்ணெய்க் கிணறுகள் உள்ள ஒக்ல

ஹோமா (Oklahoma), பகுதியில் ஒக்லஹோமா நகரமும் தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளன. ஆர்க்டிக் (Arctic), உப ஆர்க்டிக் (Sub-Arctic) பகுதிகள்கூட கனியங்கள் கிடைப்பதால் மக்களைக் கவர்ந்திருக்கின்றன. லாப்லாந்திலுள்ள (Lapland) கிருனு (Kiruna) நகரமும், லாபரடாரிலுள்ள (Labrodar) செபர்விலி (Seheffer ville) நகரமும் இதற்கு உதாரணமாகும். பிரிட்டன், வடக்கு பிரான்சு, பெல்ஜியம், ரைன், மேற்கு பாலியா (West phalia), சைலீசியா (Silesia) பென்சில்வானியா (Pennsylvania) போன்ற இடங்களில் நிலக்கரிப் படிவுகள் உள்ளதால் பெரிய நகரங்கள் உருவாகியுள்ளன. இந்தியாவில் பீகாரிலுள்ள ஜாரியா (Jharia) நகரம் நிலக்கரி கிடைப்பதால் வளர்ச்சி பெற்ற நகரமாகும். (படம் 50) இதே போல் தமிழ் நாட்டிலும் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தால் நெய்வேலி நகரம் தோன்றியிருக்கிறது. சுரங்கங்களில்வேலை செய்பவர்களுடைய வீடுகள் அவற்றின் அருகிலேயே அமைகிறது. அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக அங்கு நகரம் ஒன்று தோன்றுகிறது.

தொழில் நகரம்:

தொழிற்சாலைகளுக்குச் சக்தியைத் (fuel) தருகின்ற நிலக்கரிச் சுரங்கங்கள் நாளடைவில் முக்கிய தளங்களாக வளர்ச்சி பெற்று விடுகின்றன. நிலக்கரியை அதிக அளவில் பயன்படுத்தும் எல்லாத் தொழிற்சாலைகளும் நிலக்கரிச் சுரங்கத்திற்கு அருகில் அமைகின்றன. இதேபோல், இரும்புத்தாது கிடைக்கின்ற பகுதிகளில் இரும்பை அதிகமாகப் பயன்படுத்தும் தொழிற் சாலைகள் தோன்றுகின்றன. பெரிய தொழிற்சாலை ஒன்று தோன்றி விட்டால், அதனைச் சுற்றி சிறு தொழிற்சாலைகள் தோன்றுகின்றன. இச்சிறு தொழிற்சாலைகள் பெரிய தொழிற்சாலைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து தருகின்றன. பெரிய தொழில்கள் இதனால் வளர்ச்சி பெற்று பெரிய தொழில்நகரம் ஒன்று உருவாகிறது. தொழில் நகரங்களில் தொழிற் பங்கீடு (division of labour) முறையால் பல தொழிற்சாலைகளுக்கிடையே உற்பத்தி பிரிக்கப்படுகிறது. எனவே, சிறு தொழிற்கூடங்கள்கூட தொழில் நகரங்களில் சிறப்பான வளர்ச்சியைப் பெறுகின்றன. உதாரணமாக, பங்களூரில் (Bangalore) இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் (H.M.T.) தொழிற்சாலை அமைக்கப்பட்டதன் விளைவாக சிறுதொழிற்சாலைகள் ஏராளமாக வளர்ச்சி பெற்றுள்ளன. ஒரு முறை ஒரு நகரம் தொழிற்சாலைகளுக்குச் சிறப்பிடம் வகித்தால், புதிதாகத்தோன்றும் தொழிற்சாலைகளும் அதே நகரத்தில்தான் அமைக்கபடுகின்றன. ஏனெனில், தொழிற்சாலைக்குத் தேவை



படம் 50

ஜாரியா (Jharia) நிலக்கரிச் சுரங்கப்பகுதி.

யான கச்சாப்பொருள், மின்சாரம், போன்றவை இங்குதான் எளிதில் கிடைக்கும். இவை தவிர தொழிலாளர்களும் இங்குதான் எளிதில் கிடைப்பார்கள். எனவே, தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியில்தான் மேலும் மேலும் வளர்ச்சி ஏற்படுகிறது. மென்மேலும், தொழில் நகரங்களைச் சுற்றி வேறு தொழில்களைப் பணியாகக் கொண்ட சிறு நகரங்களும் உருவாகின்றன. உதாரணமாக, பிரான்சிலுள்ள லியான்ஸ் (Lyons) நகரம் பட்டுத் தொழிலுக்கும், இங்கிலாந்திலுள்ள பெட்போர்டு (Bedford) சிறு மென்ரகத் தொழிலுக்கும் (light industries) புகழ் பெற்றிருக்கிறது. இந்தியாவில் கரக்பூர் சுண்ணாம்புச் சுரங்கத்திற்கு அருகில் மிதுனபுரி (midnapur) தொழில் நகரம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. சில தொழில் நகரங்கள் இரும்பு நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகில் அமையாமல் விவசாய நிலங்களுக்கு அருகில் அமைந்து காணப்படுகின்றன. உதாரணமாக, தென் அமெரிக்காவில் பிரேசில் நாட்டிலுள்ள சா பாலோ (Sao Paula) நகரமாகும். இந்த நகரத்துத் தொழிற்சாலைகளெல்லாம் விவசாயப் பொருள்களை மூலப் பொருள்களாகப் பயன்படுத்துவதால் விவசாய நிலங்களுக்கு அருகில் அது அமைந்திருக்கிறது. இதேபோல் இந்தியாவில் சணல் விளையும் பகுதிகளுக்கு அருகில் சணலை (Jute) மூலப் பொருளாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. கோயம்புத்தூர். ஷோலாப்பூர் (Sholapur) ஆகிய பகுதிகளில் பருத்தி விளைவதால் இங்குப் பருத்தியைப் பயன்படுத்தும் ஆலைகள் (mills) நிறைந்து காணப்படுகின்றன. இவையாவும் தொழில் நகரங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கின்றன. (படம் 51)

நிர்வாக நகரம் :

நிர்வாகத்திற்காகவும், அரசியல் பணிகளுக்காகவும் குறிப்பிட்ட இடங்களில் நிர்வாக நகரங்கள் உருவாக்கப்படுகின்றன. இவை தலைநகரங்கள் எனப்படுகின்றன. தலைநகரங்கள் தற்காலத்தில் திட்டமிட்டு அமைக்கப்படுகின்றன. உதராணமாக ஆஸ்திரேலியாவின் தலைநகரமான கேன்பரா (canberra) பிரேசிலின் பிரேசிலியா (Brazilia), இந்தியாவின் புதுடெல்லி ஆகியவையாகும். தலைநகரங்கள் நாட்டின் மையப்பகுதியிலேயே பொதுவாக அமைக்கப்படுகின்றன. ஏனெனில், மற்றப்பகுதிகளை நிர்வாகம் செய்யவும், கட்டுப்படுத்தவும், மற்றப்பகுதிகளோடு தொடர்புகொள்ளவும் நாட்டின் மையப்பகுதியே ஏற்றதாக இருக்கிறது. உதாரணமாக, ஸ்பெயினின் தலைநகரமான மேட்ரிட் (Madrid), இத்தாலியின் தலைநகரான ரோம் (Rome)



படம் : 51

மிதுனபுரி (*Midnapur*) கரக்பூர் சுண்ணாம்பு சுரங்க நகரமும் மிதுனபுரி தொழில் நகரமும் அருகருகே அமைந்துள்ளன. இதன் கிழக்குப்பகுதியில் குடியிருப்புகள் கொத்துக் கொத்தாகக் (திரட்சியாக) காணப்படுகின்றன. நெருக்கமான கட்டமைப்புக் கொண்ட மிதுனபுரிக்கும் இவற்றிற்கும் உள்ள வேறுபாட்டை அறிக.

ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோ (Moscow), துருக்கியின் தலைநகரான அங்காரா (Ankara), இந்தியாவின் தலைநகரான டெல்லி ஆகியவையாகும். இந்தியாவின் பழைய தலைநகரான கல்கத்தாவைவிட, நாட்டின் மையத்தில் டெல்லி அமைந்திருப்பதால் இது தலைநகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. சில நாடுகளில் தலைநகரங்கள் நாடு விரிவடைவதால் மையப்பகுதியில் அமைந்து விடுகிறது. உதாரணமாக ரோம் நகரம் கிருஸ்து பிறப்பதற்கு முன்பும் பின்பும் ஏற்பட்ட உரோமானிய பேரரசின் விரிவினால் மையத்தில் அமைந்தது. இதேபோல், ஜெர்மனி பெரிய அளவில்

காணப்பட்டபோது தலைநகரமாக விளங்கிய பெர்லின் (Berlin) நகரம் தற்போது கிழக்கு ஜெர்மனிக்கு மையத்தில் அமைந்து அதற்குத் தலைநகராக விளங்கிறது. ஒரு நாட்டில், ஆற்றின் வழியாக முக்கிய போக்குவரத்து நடைபெற்று வந்தால், அந்த நாட்டின் தலைநகரம் அந்த ஆற்றின் கரையில்தான் அமைகிறது. இதற்குச் சிறந்த உதாரணம் டானியூப் (Danube) நதிக்கரையில் அமைந்த வியன்னு (vienna) நகரமாகும்.

வாசஸ்தல நகரம் :

உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டும் அழகிய இயற்கைக்காட்சிகள், விளையாட்டுகள், ஓய்வு செதிகள் ஆகியவை நிறைந்த பகுதிகளில் வாசஸ்தல நகரங்கள் (Resort towns) தோன்றுகின்றன. வெப்பமண்டலப் பகுதிகளில், மலைப்பகுதிகளில் குளிர்ச்சியாக இருப்பதால், கோடை வாசஸ்தல நகரங்கள் இங்கு அமைக்கப்படுகின்றன. இங்குக் குளிர்ச்சியான காலநிலை தான் அந்நகரின் தலமாக விளங்குகிறது. இந்நகரங்களில் கோடையில் மட்டுமே மக்கள்தொகை அதிகமாகக் காணப்படுகிறது. அயனமண்டலத்திலுள்ள வாசஸ்தலங்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களால் அமைக்கப்பட்டவையாகும். உதாரணமாக இந்தியாவில் சிம்லா, உதகமண்டலம், வியட்நாமில் தலத் (Dalat), மலேசியாவில் கேமரூன் (cameron) ஆகிய மலைவாசஸ்தலங்கள் ஐரோப்பியர்கள் கோடையில் தங்கிவசிப்பதற்காக அமைக்கப்பட்டவையாகும். சுதந்திரத்திற்குப் பிறகு இந்தமலை வாசஸ்தலங்களுக்கு உள் நாட்டினர் வருகைதந்தவுடன் இவை நன்கு வளர்ச்சிபெற்றுவிட்டன.

இதேபோல் வெந்நீர் ஊற்று (hot spring) தாதுக்கள் கலந்த நீர் ஊற்று (mineral spring) ஆகியவை காணப்படுகின்ற பகுதிகளிலும், ஆரோக்கியத்திற்காக மக்கள்வந்து அவற்றில் நீராடிச் செல்கிறூர்கள். இப்பகுதிகளில் நாளடைவில் நகரங்கள் உருவாகின்றன. உதாரணமாக, இங்கிலாந்தில் பாத் (Bath), ஜெர்மனியில் பேடன்-பேடன் (Baden–Baden) பிரான்சில் எய்லெஸ் பெயின்ஸ் (Aix-les-Bains) ஆகியவை நீரூற்று வாசஸ்தல நகரங்களாகும்

கடலில் குளிப்பது ஆரோக்கியத்திற்குச் சிறந்ததாகக் கருதப்பட்டதால் சில பகுதிகளில் கடற்கரைகளில் வாசஸ்தலங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. ஆனல், தற்காலத்தில் மன மகிழ்ச்சிக்காக மட்டுமே கடலில் குளிப்பது வழக்கமாக இருக்கிறது

தெற்கு இங்கிலாந்திலுள்ள பிரைட்டன் (Brighton), போர்ன் மௌத் (Bournemouth) ஆகிய நகரங்கள் கடலில் நீராடும் மிகப் பழைய வாசஸ்தலங்களாகும். ஆனால், இப்போது உலகில் பல நாடுகளில் இத்தகைய வாசஸ்தலங்கள் தோன்றியுள்ளன. இவை மிதமான காலநிலையும், பெரிய கடற்கரை அமைந்த பகுதிகளிலும் வளர்ச்சி பெறுகின்றன. உதாரணமாக பிரான்சுக்கு தெற்கிலுள்ள நைஸ் (Nice) கேன்ஸ் (cannes), பிலடெல்பியா வுள்ள (Philadelphia) அட்லாண்டிக் சிட்டி (Atlantic city) புளாரிடாவிலுள்ள (Florida) மியாமி (Miami) ஆகியவை உலகின் புகழ்பெற்ற கடற்கரை வாசஸ்தலங்களாகும். காலநிலை ஏற்றதாகவும் கடற்கரை அழகாகவும் இருந்தால், அயல் நாட்டுச்சுற்றுலா பயணிகளின் வருகையால் (Tourists) நகர வளர்ச்சி அங்கு ஏற்படுகிறது. மேற்கு இந்தியத் தீவுகளிலும், (West Indian Islands) பஹாமா (Bahamas) பகுதிகளிலும் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

குளிர்காலத்தில் விளையாடுவதற்கு ஏற்ற நில அமைப்பு இருந்தால் அங்கு நகரம் தோன்றுகிறது. பிரான்சு, ஸ்விட்சர் லாந்து, ஆஸ்டிரியா, இத்தாலி போன்ற நாடுகளில் செயின்ட் மோரிட்ஸ் (St. Moritz) கிளாஸ்டெர்ஸ் (Klosters), டெவாஸ் (Davos) கார்டினு (Cortina), சாமோனிக்ஸ் (Chamonix) போன்ற நகரங்கள் குளிர்காலத்தில் விளையாடுவதற்கு ஏற்ற நில அமைப்பைப் பெற்றிருக்கின்றன. இதுபோல் கானடாவில் பான்ப் (Banff) நகரமும், ஜப்பானில் சப்போரோ (Sapporo) நகரமும் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. மலையேறுவதற்கு ஆர்வம் இருப்பவர்களை மலைப்பகுதிகள் கவருகின்றன.

சில பகுதிகளில் இயற்கைக் காட்சி அழகாக அமைந்திருப் பதைக் காண மக்கள் திரளாக வருகின்றனர். சில இடங்களில் வரலாற்றுச்சிறப்புப் பெற்ற இடங்கள், கட்டடங்கள் ஆகியவை கூடச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திருக்கின்றன. இவை, புதிய நகரங்களைத் தோற்றுவிப்பதில்லையென்றாலும் ஏற்கனவே அமைந்துள்ள நகரங்களில் புதிய பணிகளை ஏற்படுத்துகின்றன. பாரிஸ், வியன்னு, ரோம், பேங்காக் (Bangkok), சிங்கப்பூர் போன்ற நகரங்கள் சுற்றுலாப்பயணிகளைப் பேணுகின்ற பணியை மேற்கொண்டிருந்தாலும், தொடக்க காலத்தில் அவை அந்தப் மேற்கொண்டிருக்கவில்லை.

சமயப்பணி நகரம்:

சமயப் பணி நடைபெறும் மண்டபங்கள், கோயில்கள் ஆகியவை யாத்திரிகர்கள் (Pilgrims) கூடுகின்ற இடங்களாக விளங்குகின்றன. தெய்வத் தன்மையுள்ள இடங்களிலும், தெய்வ நிகழ்ச்சிகள் ஏற்பட்ட இடங்களிலும் யாத்திரிகர்கள் (Pilgrims) கூடுகின்றனர். உதாரணம் லூர்டெஸ் (Lourdes) நகரமாகும். இதேபோல் சமயத்தலைவர்கள் பிறந்த இடங்களிலும் யாத்திரிகர் கள் ஆயிரக்கணக்கில் தங்கிச் செல்கிறார்கள். இதற்குச் சிறந்த உதாரணம் ஜெருசலம், (Jerusalem) மெக்கா (Mecca) போன்றவையாகும். இப்பகுதிகளில் யாத்திரிகர்கள் வந்து போவதால் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதால் நகர்ப்புறம் தோன்றி அங்கே வளர்ச்சி யடைகிறது.

பண்பாட்டு நகரம் :

கல்விக் கூடத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இடம், பிற்காலத்தில் நகரமாக மாறிவிடுகிறது. ஏனெனில், பல்கலைக்கழ கங்கள் அமைந்தபிறகு, அங்குப்படிக்கும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பணிசெய்வதற்காக அங்கு ஒரு நகரம் வளர்ச்சி பெறுகிறது. இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டு (Oxford), கேம்பிரிட்ஜ் (Cambridge) ஜெர்மனியிலுள்ள ஹைடல்பர்க் (Heidelburg), சைபீரியாவிலுள்ள அகடம்கோரட் (Akadem-gorod), தமிழ்நாட்டிலுள்ள அண்ணாமலை நகர் ஆகியவை அங் கிருக்கும் பல்கலைக்கழகங்களால் வளர்ச்சி பெற்றவையாகும். சமயத்தலைவர்களிடம் கல்விபுகட்டும் பொறுப்பு அளிக்கப்பட் டிருந்த நாடுகளில் சமயத்தலங்களே பல்கலைக்கழகங்களாக மாறி யிருக்கின்றன. அதனால்தான் இந்தியாவிலுள்ள காசி நகரில் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. அரசர், அல்லது தேசத்தலை வரின் வீட்டைச் சுற்றிலும் சிலசமயங்களில் குடியிருப்புகள் தோன்றி வளர்ச்சியடைவதுண்டு. அரசன் அல்லது தலைவனுக்கு அருகில் வசிப்பதையே ஊழியர்களும், வாணிகர்களும் மற்றவர் களும் விரும்புவதால் தலைவனின் வீட்டைச்சுற்றி ஒரு நகரம் தோன்றிவிடுகிறது. எனவே, சமயத்தலம், கல்விக்கூடம், தலை வனின் வீடு ஆகியவை பண்பாட்டு நகரங்களைத் தோற்றுவிக்கும் தலங்களாகும்.

தற்காப்பு நகரம்:

பழங்காலத்தில் நகரங்களை அமைப்பதற்குப் பாதுகாப்பான தலங்களே தேர்ந்தெடுக்கப்பட்டன. வாணிகர்களும், கைத்

தொழில் செய்பவர்களும் எதிரிகளின் தாக்குதல்களைத் தவிர்க்க தக்கபாதுகாப்பான தலங்களையே நகரங்களாக அமைத்துக் கொண்டனர். கிராம மக்கள்கூட ஆபத்துக் காலங்களில் அருகி லுள்ள பாதுகாப்பான நகரங்களுக்குச் சென்றுவிடுகின்றனர். உதாரணமாக வியட்நாம், கம்போடியா பகுதிகளில் கிராமத்தில் வாழ்ந்த மக்கள், வியட்நாம் போரின்போது நகரங்களுக்குச் சென்று குடியேறினர். தலத்தின் தேர்வில் பெரும்பாலும் தற் காப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பழைய நகரங் கள் யாவும், எதிரிகள் எளிதில் அடைய முடியாத இயற்கை அமைப்புக்கொண்ட நிலங்களிலேயே அமைக்கப்பட்டன. தற் காப்பு மேலும் வலிமைபெற அந்த நகரங்களைச்சுற்றி சுவர் எழுப்பப்பட்டன. ஆகவே, செங்குத்துச் சரிவுகள், பெரிய நீர் நிலைகள் ஆகியவை தற்காப்புக்குரிய தலங்களாக கருதப்பட்டன. தற்காப்புத்தலங்களைப் பொதுவாக மூன்று வகைகளாகப் பிரிக்க லாம். அவை, மலையுச்சித்தலங்கள், தீவுத்தலங்கள், ஆற்றங் கரைத்தலங்கள். மலை உச்சிகளில் நகரம் அமைவதால், அது மற்றப் பகுதியிலிருந்து உயரத்தில் இருப்பது மட்டுமல்லாமல், கீழி ருந்து வருகின்ற எதிரிகளை எளிதில் கண்காணிக்கக்கூடிய வகை யிலும் அமைந்திருக்கிறது. இதற்குச் சிறந்த உதாரணம் எரிமலைப் பாறையின்மேல் அரண்மனையும் பழைய நகர்ப்புறமும் அமைந் துள்ள எடின்பர்க் (Edinburgh) நகரமாகும். இதேபோல் நைஜீரியாவிலுள்ள (Negeria) இபடன் (Ibadan) நகரம் மற் றொரு உதாரணமாகும். முதலில் ஒரு நீண்ட குன்றின் உச்சியில் ஒரு முகாமைப்போல் இது அமைக்கப்பட்டது. அங்கிருந்து கீழே யுள்ள பகுதியைத் தெளிவாக காணமுடியுமாதலால், அவ்விடத் தில் அமைக்கப்பட்டது. தற்போது அந்த முகாம் நகரமாகமாறி, குன்றின் கிழ்த்திசையை நோக்கி வளர்ச்சிபெற்றிருக்கிறது. ஏதென்ஸ் நகரமும் மலையின்மேல் அமைந்த நகரமாகும். நீரால் சூழப்பட்ட நிலம், மற்றொரு பாதுகாப்புத் தலமாகும். எனவே, நீரால் சூழப்பட்ட தீவுகள் நகரங்களுக்குச்சிறந்த தலங்களாக விளங்குகின்றன. இத்தீவுகள் சதுப்பு நிலங்களிலும், ஆறுகளி லும், கடற்கரை அருகிலும் காணப்படுகின்றன. ஹாம்பர்க் (Hamburg) நகரின் பழைய தலம் ஒரு சதுப்புநிலத் தீவாகும் (Islands in swamps). பாரிஸ், மாண்ட்ரீல் (Montreal), ஸ்ரீரங்கம் (Srirangam) ஆகியவை ஆற்றுத்தீவில் அமைந்த நகரங்களாகும். (படம் 52) நியூயார்க், ஹாங்காங், சிங்கப்பூர், பினங், பம்பாய், வெனிஸ் போன்ற நகரங்கள் கடற்கரைக்கு அருகிலுள்ள தீவு களைத் தலங்களாகக் கொண்ட நகரங்களாகும். நான்கு புறமும் நீர் சூழ்ந்து இருப்பதால் இந்நகரங்களுக்கு அதிகமான பாது காப்பு இருக்கிறது. சில நகரங்களில் மூன்று பக்கங்களில் நீர்



படம் : 52 காவிரி நதியின் தீவில் அமைந்த ஸ்ரீரங்கம்.

சூழ்ந்து ஒருபக்கம் மட்டும் மற்றப் பகுதிகளோடு இணைக்கப்பட்டிருக்கும் இவ்வழி குறுகலாக இருப்பதால் அதைக்கண்காணிப்பது எளிதாகும். சில நகரங்கள் நில முனைகளில் (Premontories) அமைவதுண்டு. உதாரணமாக ஜிப்ரால்டர் (Gibraltar) நகரமாகும். சில நகரங்கள் ஆற்றங்கரைகளில் அமைவதால், ஆற்றங்கரைத் திசையில் பாதுகாப்புக் கிடைக்கிறது. ஆற்றுவளைவில் சரிவு செங்குத்தாக இருப்பதால் அது தற்காப்புக்கு ஏற்றதாக இருக்கிறது ஸ்ரூவ்ஸ்பரி (Shrewsbury) நகரம் ஆற்றுவளைவில் அமைந்துள்ள நகரமாகும். இதேபோல் இயற்கை அமைப்புகளும் சில சமயங்களில் குடியிருப்புக்கு எதிராக இருக்கின்றன. இத்தகைய இடங்களில் நகரங்கள் பாதுகாக்கப்பட்ட இயற்கை அமைப்புக் கொண்ட தலங்களில் அமைகின்றன. கடற்கரையோரங்களில் வளர்ச்சி பெறுகின்ற நகரங்கள் குறிப்பாகத் துறைமுக நகரங்கள் கடுமையான காற்றிலிருந்தும், அலைகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு விரிகுடாக்களிலும் (bays) ஓதமுகங்களிலும் (esturies), உப்பங்கழிகளிகளும், ரியா (ria) பியர்டு (fiord) போன்ற கடற்கரைகளிலும், ஜலசந்திகளிலும் (straits) அமைந்திருக்கின்றன. இப்பகுதிகளில் கடற்காற்று தணிந்து வீசுவதால் கப்பல்களுக்கு ஆபத்து ஏற்படுவதில்லை. அதுமட்டுமன்றி இங்கு அலைகள் கட்டுப்படுத்தப்படுவதால், கப்பல்கள் தங்கி, சரக்கை ஏற்றவும் இறக்கவும் பழுதுபார்க்கவும் முடிகிறது. போர்க்காலங்களில் இத்துறைமுகங்களைப் பாதுகாத்துக் கொள்வதும் எளிதாகும். இத்தகைய பாதுகாப்புள்ள கடற்கரைத்தலங்களில் அமைந்த நகரங்கள் பல உள்ளன. பியர்டு கடற்கரையில் அமைந்த பெர்கன் (Bergen), ரியா கடற்கரையில் அமைந்த பிளைமௌத், கடற்கரையை அடுத்த தீவில் (Island) அமைந்த சிங்கப்பூர், விரிகுடாவில் அமைந்திருக்கும் ரியோடி ஜனீரியோ (Rio de Janerio) போன்றவை கடலின் அலைகளிலிருந்தும், காற்றிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளும்படியாக மேற்கூறிய தலங்களில் அமைந்திருருக்கின்றன. இவற்றிற்கு இயற்கைப்பாதுசாப்புக் கிடைக்கிறதென்றாலும், பிற்காலத்தில் மக்கள்தொகையும், பணிகளும் பெருகிவிட்ட பின்பு இங்குப் போக்குவரத்துக்கு இடையூறு அதிகம் காணப்படுகிறது.

இராணுவ நகரம் :

இராணுவப் பணிகளுக்காகச் சில தலங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இங்கு, அமைக்கப்படும் நகரங்கள் முழுக்க முழுக்க இராணுவப்பணிகளையே மேற்கொண்டிருக்கும், இங்கிலாந்திலுள்ள போர்ட்ஸ்மௌத் (Ports mouth) பூனுவுக்கு அருகிலுள்ள

கடக்வாச்லா, நீலகிரியிலுள்ள வெலிங்டன், சென்னையிலுள்ள ஆவடி போன்றவை இவ்வாறு அமைந்த நகரங்களாகும். இராணுவப் பணியை மேற்கொண்டிருக்கும் நகரங்கள் அமைப்பில் பொதுக் குடியிருப்பினின்றும் மாறியிருக்கும். இக்குடியிருப்புகள் பொதுவாக, சமநிலங்களில்தான் அமைக்கப்படுகின்றன. ஏனெனில், இராணுவ பயிற்சிக்கும். சுடுவது போன்ற பயிற்சிக்கும் சமநிலம் தேவைப்படுகிறது. இவை தவிர நல்ல போக்குவரத்து வசதிகள் கொண்ட தலங்களிடையே இவை அமைகின்றன. இங்கு விமான தளமும் இருக்கும். (படம் 53)



படம் : 53 சித்நல்துர்க். பாதுகாப்புச்சுவர் அமைக்கப்பட்ட நகரம். பிற்காலத்தில் நகரம் சுவருக்கு வெளியேதான் வளர்ச்சி பெற்றிருக்கிறது.

மேற்கூறிய தலங்கள் நகரம் தோன்றுவதற்குப் பொருத்தமாக இருந்தாலும், அதன் வளர்ச்சிக்கு நகரம் அமைந்துள்ள சூழ்நிலை முக்கிய காரணமாக இருக்கிறது. சுற்றியுள்ள பகுதிகளுக்குப் பணிபுரிவதே நகரத்தின் தலையாய பணியாகும். எனவே, நகரம் வளர்ச்சிபெறுவதற்கு அதன் சூழமைவே காரணமாக இருக்கிறது. நகரத்தின் சூழமைவு என்பது, அந்த நகரம் அதனைச் சுற்றியுள்ள பகுதியோடு கொண்டிருக்கிற தொடர்பைக் குறிக்கிறது. சூழமைவை, பொதுவாக மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்:

(1) நீளவாட்ட சூழமைவு (linear situation)
(2) எல்லைச் சூழமைவு (frontier situation)
(3) மையச் சூழமைவு (central situation)

நீளவாட்ட சூழமைவு என்பது வாணிகம் மற்றும் போக்குவரத்துச் சாலைகளின் வழியே காணப்படுவதாகும். இந்தப் போக்குவரத்து வழிகளில் நகரங்கள் வளர்ச்சியடைகின்றன. எல்லைச் சூழமைவு என்பது இரண்டு அல்லது மூன்று வகையான நிலங்கள் கூடுகின்ற எல்லைப்புறமாகும். இந்த நிலங்களில் உற்பத்தியாகும் பல்வேறு பொருள்களைப் பெற்று விநியோகம் செய்வதற்காக இந்த எல்லைப்பகுதிகளில் நகரங்கள் வளர்ச்சியுறுகின்றன. மையச் சூழமைவு என்பது ஒரு அகன்ற நிலப்பரப்பின் எத்திசைகளுக்கும் மையமாக விளங்குவதாகும். இந்த மையத்திலிருந்து, எத்திசைகளுக்கும் எளிதில் போக்குவரத்து நடைபெறுவதால் இந்த நகரம் வளர்ச்சி பெறுகின்றது. பழங்காலத்து நகரங்கள் பல முக்கிய போக்குவரத்துப் பாதைகளின் வழியே அமைந்திருந்தன. சாலைகளின் வழியே நீர், உணவு ஆகிய வற்றைப் பெறுவதற்காக இரவு நேரங்களில் சில இடங்களில் தங்குவதுண்டு. இரவில் தங்குவதால் இங்கு விடுதிகளும், லாயங்களும் (stables), கிடங்குகளும் வளர்ச்சி பெற்றன. எனவே இங்குச் சிறிய நகரம் உருவாகியது. இவ்வாறு பயணம் நிறுத்தப்படுகின்ற வழிகளில் நகரங்கள் வளர்ச்சி பெற்றதை மத்திய கிழக்கு ஆசியா, மத்திய ஆசியா போன்ற பகுதிகளில் காணலாம். பாலைவனங்களில் ஒட்டகப்பாதையில் இத்தகைய நகரங்கள் சிறப்பாக வளாச்சி பெறுகின்றன. இதற்குச் சிறந்த உதாரணம் ஜோர்டானிலுள்ள அஸ்ராக் (Azraq), நைஜர் பகுதியிலுள்ள அகேடஸ் (Agades) ஆகும். சில இடங்களில் பயணம் செய்யும் போது காலை, மதியம், மாலை உணவு உண்பதற்காகச் சிறிது நேரம் பயணத்தை தாமதிப்பதுண்டு. இத்தகைய இடங்களிலும், சாலையின் ஓரமாகக் குடியிருப்புகள் வளர்ச்சியடைகின்றன. இங்கிலாந்தில் பெரிய வடக்குச் சாலையில் (Great North Road) உள்ள கிரான்தாம் (Grantham) நகரம் இதற்கு ஒரு உதாரணமாகும். இதேபோல் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலையில் வளர்ச்சி பெற்றுள்ள உளுந்தூர்பேட்டை, இரவில் மோட்டார் வாகனங்களிலும், லாரிகளிலும் பயணம் செய்பவர்கள் சிற்றுண்டி அருந்துவதனால் தோன்றிய ஒன்றாகும். கப்பல் போக்குவரத்தினாலும் இத்தகைய நகரங்கள் வளர்ச்சி பெறுகின்றன. நீண்ட தூர கப்பல் பயணிகளுக்கு நீர், உணவு, போன்றவற்றை வழங்குவதற்காக ஏடன் (Aden) போன்ற துறைமுகங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. ஓஷியானிக் தீவுகளில் (Oceanic) பல நகரங்கள் இதே காரணத்தினால் தோன்றியிருக்கின்றன. உதாரணமாக ஹவாய் (Hawaii), செயின்ட் ஹெலினா (St. Helena) ஆகிய நகரங்கள் கப்பல் பயணிகளுக்காகவும், இந்துமகாசமுத்திரத்தில் கேன்

(Can) நகரம் விமான பயணிகளுக்காகவும் அமைந்திருக்கின்றன. சாலைகளின் குறுக்கே ஆறு இடைப்பட்டாலும், ஆற்றின் இடையே நீர்வீழ்ச்சி இடைப்பட்டாலும், கணவாய் போன்ற அமைப்பு இடைப்பட்டாலும் அங்கு நகரம் தோன்றுகிறது. இதேபோல் கடலில் ஜலசந்தி (Strait) இருக்கும் பகுதிகளில் குறுகலாக இருப்பதால், கப்பல்கள் தாமதித்துச் செல்லவேண்டி யிருக்கிறது. எனவே, அங்கு நகரம் வளர்ச்சியடைகிறது. டென் மார்க், இஸ்டான்புல் (Istanbul), பிறவும் ஆகியவை இவ்வகை நகரங்களாகும். போக்குவரத்துமுறை மாறுகின்ற (break of bulk) இடங்களிலும் நகரம் தோன்றுகிறது. இங்கு, சரக்குகள் ஏற்றி இறக்கப்படுவதால், அந்தப் பணியைச் செய்கின்ற தொழி லாளிகளும் மற்றவர்களும் நிரந்தரமாக வசிக்கிறார்கள். ரெயில் பாதையும், சாலையும் ஆற்றைக் கடக்கின்ற பகுதிகளில் பாலம் அமைப்பதற்கு முன்பாக இத்தகைய நகரங்கள் ஏற்பட்டன. சாலையிலிருந்து படகுப் போக்குவரத்துக்கு மாறுகின்ற பகுதிகளி லும் நகரம் வளர்ச்சியடைந்தது, மலையும், சமவெளியும் இணை கின்ற மலையடிவாரத்தில் போக்குவரத்தில் மாறுதல் இருப்பதால், அங்கு நகரம் தோன்றுகிறது. இதற்கு உதாரணமாக மேட்டுப் பாளையத்தைக் குறிப்பிடலாம். மேட்டுப்பாளையம் நீலகிரி மலையடி வாரத்தில் அமைந்திருக்கிறது. (படம் 54) அத்துடனில்லாமல், மலையிலிருந்து வருகின்ற மீட்டர்கேஜ் ரயில்பாதையும், சமவெளி யிலிருந்து வருகின்ற பிராட்கேஜ் ரயில்பாதையும் இங்குதான் கூடுகின்றன. எனவே, மலையிலிருந்தும், சமவெளியிலிருந்தும் வருகின்ற பொருள்களைச் சேகரித்து விநியோகம் செய்யவேண்டி யிருப்பதால் இந்த நகரம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இதே போல் மலைப்பகுதியும், பாலைவனமும் இணைகின்ற பகுதியில் போக்குவரத்து முறையில் மாற்றம் ஏற்படுவதால் இங்கு நகரம் தோன்றுகிறது. ஸ்விட்சர்லாந்தில் சர் (Chur), லூசெரின் (Lucerne) ஆகியவை இவ்வாறு வளர்ச்சி பெற்றவை. பாலைவன விளிம்புகளில் ஒட்டகத்திலிருந்து வாகனத்திற்கு மாறிவர வேண்டுமாதலால் மேற்கு ஆப்பிரிக்காவில் பாலைவன விளிம்பில், நைஜர் பகுதியில் சிந்தர் (Zinder) நகரமும், மாலி (mali) பகுதியில் டிம்பக்டு (Timbuktu) நகரமும் தோன்றியுள்ளன. டிம்பக்டு நகரம் இருவாழ்க்கைமுறைகளை இணைக்கின்ற நகர மாக விளங்குகிறது. இரண்டு அல்லது மூன்று சாலைகள் கூடுகின்ற (nodal) இடங்களிலும், ஆறுகள் கூடுகின்ற இடங்களிலும் நகரம் வளர்ச்சியடைகிறது.

பரந்த நிலப்பரப்புகளில் எல்லை சூழமைவினால் நகரம் தோன்றி வளர்ச்சிபெறுகிறது. இருமாறுபட்ட இயற்கைப்பகுதி



படம் : 54 மேட்டுப்பாளையம்

கள் இணைகின்ற பகுதி எல்லைப்பகுதியாகும், உதாரணமாக, மலையும் சமவெளியும் இணைகின்ற பகுதியில் இவ்விரு பகுதி களிலிருந்து தருவிக்கப்படும் பொருள்களைவைத்து வாணிகம் செய்வதால் இந்த இரண்டு சந்தைகளையும் ஒன்று சேர்க்கின்ற பகுதியாக இது விளங்குகிறது. இதன் காரணமாகவே மலையடி வாரத்தை ஒட்டி நகரங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, அப்பலேச்சியன் மலையடிவாரத்தின் நெடுகிலும் பிலடெல்பியா (Philadelphia), பால்டிமோர் (Baltimore), ரிச்மண்ட் (Richmond), அகஸ்டா (Augusta) போன்ற நகரங்கள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் கோயமுத்தூர், பொள்ளாச்சி, போடிநாயக்கனூர், தென்காசி போன்ற நகரங் கள் தோன்றியுள்ளன. ரஷ்யாவில் சைபீரியாவில் அமைந்துள்ள நகரங்கள் பெரும்பாலும் எல்லைச் சூழமைவினால் வளர்ச்சி பெற்றவையாகும். சில நாடுகளின் தலைநகரங்கள் எல்லைகளில் அமைந்துள்ளன. (உ.ம்) பிரேசிலியா (Brazilia) சில சமயம் எல்லைத் தகராறுகள் இருக்கும்போது தலைநகரம் எல்லைக்கு அருகில் அமைகிறது. உதாரணமாக, பாகிஸ்தானின் புதிய தலைநகரம் இஸ்லாமாபாத் (Islamabad) வடக்கே அந்நாட்டின் எல்லைக்கருகில் அமைந்திருக்கிறது. ஜம்மு, காஷ்மீர் பகுதி மிக அருகில் இருக் கிறது. இவ்வாறு தலை நகரம் எல்லைக்கருகில் இருப்பதால் அதிக மான பாதுகாப்பு ஏற்படுவதாகக் கருதப்படுகிறது.

சில சமயம் நகரங்கள் நாட்டின் அல்லது பிரதேசத்தின் மையப் பகுதியில் அமைகிறது. இங்கு அமைவதால் எல்லா பகுதி களிடையேயும், எளிதில் தொடர்புகொள்ள முடிகிறது. எனவே, போக்குவரத்துப் பாதைகள் இங்கு ஒன்றுகூடுகின்றன. சில நகரங்கள் பெரிய விவசாயப் பகுதியின் மையத்தில் வளர்ச்சி பெறுகிறது. அந்த நகரங்கள் தானியங்களை வாணிகம் செய்யும் பணியை மேற்கொண்டிருப்பதால் அதன் மையப்பகுதியில் தோன்றி வளர்ச்சி பெறுகின்றன. பாரீஸ் (Paris) கொப்பரை யின் (basin) மையத்தில் அமைந்திருக்கும் பாரீஸ்நகரம், கானா வின் விவசாயப்பகுதியின் மையத்தில் அமைந்திருக்கும் குமாஸி (Kumasi), கிழக்கு ஜெர்மனியில் அமைந்துள்ள லீப்சிக் (Leipzig) போன்றவை சந்தை நகரங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன. இதே போல் கனியங்கள் கிடைக்கின்ற பகுதிகளிலும், தொழிற்சாலை கள் நிறைந்த பகுதிகளிலும், போக்குவரத்துக்கு மையமாக விளங்குகின்ற பகுதிகளிலும், அவற்றின் மையமான தலத்தில் நகரங்கள் வளர்ச்சிபெறுகின்றன.

நகரங்கள் தோன்றி வளர்ச்சி பெறுவதற்கு தலமும், சூழமைவும் காரணமாக இருந்த போதிலும், பியரிலெவடன் (Pierre Lavedan) கூற்றுப்படி, எந்தச் சூழ்நிலையிலும் மனிதன் தன் வாழ்க்கையை மேற்கொள்ளத் தயாராக இருப்பதால், நகரங்கள் எந்த இடத்தில் வேண்டுமானாலும் அமைவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, நகரங்கள் நாளடைவில் இயற்கைக்கட்டுப்பாட்டிலிருந்து விலகிக் கொண்டிருகின்றன; சில நகரங்கள் இயற்கைக்கு எதிராகவும் வளர்ச்சிபெறுகின்றன.



படம் : 55

மதுரை நகரம்: இது ஒரு மூலக்கரு குடியிருப்பாகும். கோவிலைக் கருவாகக் கொண்டு நாற்புறமும் குடியிருப்பு வளர்ச்சி பெற்று இருக்கிறது. கோயிலின் மதிற்சுவரை ஒட்டி தெருக்களும் வீடு சதுர வடிவில் வளர்ச்சி பெற்றுள்ளன.

21. நகர்ப்புற மக்களின் தொழில் தன்மைகள்

குறிப்பிட்ட சில சமூகப் பொருளாதாரச் செயல்கள் நடைபெறுவதால்தான் நகரங்கள் இயங்குகின்றன. இச்செயல்கள் நடைபெற்றாலே ஓர் இடம் நகர்ப்புறம் எனப்படுகிறது. ஒரு நகரத்தின் பொருளாதார வாழ்வு அதனைச் சுற்றியுள்ள பகுதியின் பொருளாதாரத்தைப் பொருத்திருக்கிறது. நகரங்கள் தாமே வளர்வதில்லை. அவற்றைச் சுற்றியுள்ள கிராமப்புறம்தான் அவற்றை வளர்க்கின்றன. அவைகளுக்கு அந்நகரங்கள் மையப் பகுதிகளாக விளங்குகின்றன.

சுற்றுப்புறப் பகுதியின் தேவையைப் பொருத்து நகரங்கள் பல்வேறு பணிகளை (functions) மேற்கொள்ளுகின்றன. இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு நகரங்களில் மக்கள் குழுமியிருத்தல் அவசியமாகிறது. நகரங்கள் பொதுவாகப் பல்வேறு பணிகளைச் செய்துவந்தாலும், ஒரு சில பணிகளே, சில நகரங்களில் முக்கியமாகக் கருதப்படுகிறது. ஒரு நகரத்தில் காணப்படும் முக்கிய பணியை அந்நகர மக்களின் மூலம் எளிதில் அறிந்து கொள்ளலாம். நகர மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் எந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்களோ அந்தப்பணியே அந்நகரின் முக்கிய அல்லது பிரதான பணியாகக் கருதப்படுகிறது. இந்த முக்கிய அல்லது பிரதான பணியின் அடிப்படையில் நகரங்களை நிர்வாக நகரம் என்றும், தற்காப்பு நகரம் என்றும், பண்பாட்டு நகரம் என்றும், தொழில் நகரம் என்றும், பலவாறு வகைப்படுத்துகிறோம். ஒரு நகரத்தைத் தொழில் நகரம் என்று வகைப்படுத்தினால், அந்த நகரின் மக்கள் தொகையில் பெரும்பகுதியான ஆண்கள் தொழிற்சாலைகளில் வேலைசெய்கிறார்கள் என்பதும், அந்த நகரைச் சுற்றிலும் சிறு தொழிற்கூடங்களும், பெரிய தொழிற்சாலைகளும் நிறைந்திருக்கின்றன என்பதும், அந்த

நகரைச் சுற்றியுள்ள பகுதியில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப்பொருள்கள், மின்சாரம், போக்குவரத்து ஆகிய, வசதிகள் நிறைந்திருக்கின்றன என்பதும், அந்த நகரைச் சுற்றியுள்ள பகுதியில் இங்குள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்கள் மிகவும் தேவைப்படுகின்றன என்பதும் புலனாகிறது.

தொழிற் புரட்சிக்கு முன்பு இருந்த தொழில் முன்னிலை நகரங்களில் (Pre industrial cities) தொழிற்சாலைகள் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. இங்குக் கைத்தொழில் அளவில்தான் தொழில் வளர்ச்சி காணப்பட்டது. இங்கு, போக்குவரத்து வசதியும் குறைவாகவே இருந்தது. எனவே, நகரத்தொழிலின் கட்டடமைப்பு (Occupational structure) அப்போது மிகவும் சாதாரணமாகவும், குறைவான தொழிலாளர்களால் ஆகியதாகவும் இருந்தது.

நவீன காலத்துத் தொழில் நகரங்கள் தொழிற் சாலைகளால் இயங்கிவருவதால், இங்குத் தொழிலின் கட்டடமைப்பு (Occupational struture) பல அடுக்குகள் கொண்டதாக இருக்கிறது. எண்ணற்ற கனரக (heavy), மென்ரக (light) தொழிற்சாலைகள் இருப்பதால், அவைகளுக்கிடையே தொழில்கள் மிகவும் சிக்கலான முறையில் பங்கீடு (division of labour) செய்யப்படுகின்றன. ஒரே தொழிற்சாலையில்கூட பொருள்களை உற்பத்தி செய்யும் போது தொழிலாளர்களிக்கிடையே தொழிற்பங்கீடு (division of labour) செய்யப்படுகிறது. கச்சாப் பொருள்களைப் பெறுவதற்காகவும், உற்பத்தி செய்த பொருள்களை விநியோகிப்பதற்காகவும் இந்நகரங்கள் சுற்றுப்புறப் பகுதிகளோடு மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கின்றன. பெரிய தொழில்களும், சிறு தொழில்களும் காணப்படுவதால் இங்கு வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. எனவே, கிராமப் புறங்களிலிருந்து அதிகமான மக்கள் இந்நகரங்களில் குடியேறுகின்றனர். சுற்றுப்புறப் பகுதிகள் இந்நகரங்களிலிருந்து அதிகமான சேவையைப் பெறுகின்றன.

தொழில் நகரங்களில் பழைய கைத்தொழில்கள் (handicraft) இருந்ததற்கான அடையாளங்கள் அழியாமல் இருக்கின்றன. நகர மக்கள் பல்வேறான தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் நவீனமான தொழில்களிலும், இன்னொரு பகுதியினர் நகருக்கு வெளியே உள்ள வாடிக்கையாளர்களுக்கு உற்பத்திப் பொருள்களை விநியோகம் செய்வதிலும், மீதமுள்ள பகுதியினர் தம் நகரத்து மக்களுக்கே

சேவை (Service) செய்வதிலும் ஈடுபட்டிருக்கின்றனர். இதுதவிர ஒரு சிறு பகுதியினர் வேலையில்லாமலும் நகரில் வசிக்கின்றனர்.

நகரின் அடிப்படைத்தொழிலும் அடிப்படையற்ற தொழிலும்:—
(Basic and Non-basic Occupation)

நகரம் அதனைச் சுற்றியுள்ள பகுதிக்குச் சேவை செய்வதற்காகவே அமைந்திருக்கிறது என்பது ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. இந்நகரத்தின் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் தொழிற்சாலைகளில் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். இவர்கள் நகரத்திற்கு வெளிப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இப்பொருள்கள் தேவைப்படுவதால் அம்மக்களுக்காக மட்டுமே இந்த உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இத்துடனல்லாமல் வெளிப்பகுதி மக்களுக்காக இவர்களில் சிலர் சேவையும் (service) செய்து வருகின்றனர். இவர்கள் யாவரும் வெளிப்பகுதிக்குப் பணிசெய்வதால் இவர்களை முதன்மைத் தொழிலாளர்கள் (Primary workers) என்று அழைக்கலாம். இவர்கள் வெளிப்பகுதி மக்களுக்குப் பணி செய்வதால், இவர்களின் மூலம் வெளிப்பகுதியிலிருந்து நகரத்திற்குச் செல்வம் வந்து சேருகிறது. ஆகையால் இவர்களை நகரத்தின் அடிப்படைத் தொழிலாளர்கள் (Basic Workers) என்றும் அழைக்கலாம். இவர்கள் நகரின் முக்கிய பணிகளோடு நேரிடையாகத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உழைப்பு நகரத்திற்கு வருமானம் தருவதோடு, எதிர்கால வளர்ச்சிக்கும், நகர இயக்கத்திற்கும் பெருமளவு உதவியாக இருக்கிறது. மற்றத் தொழிலாளர்கள் நகரத்திற்குள் வசிக்கும் மக்களின் தேவைக்காகச் சில தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். நகர மக்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதிலும், உள்ளூர் போக்குவரத்தை இயக்குவதிலும், சில்லறை வியாபாரத்திலும் இவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் முதன்மைத் தொழிலில் ஈடுபடாமல், நகரில் வசிக்கின்ற மக்களுக்கு மட்டுமே பணி செய்வதால் இவர்கள் இரண்டாம் வகைத் தொழிலாளர்கள் (Secondary Workers) எனப்படுகிறார்கள். இவர்கள் நகரத்தில் வசிக்கின்ற மக்களுக்குப் பணிசெய்வதால், வெளியிலிருந்து வருமானம் எதுவும் நகருக்கு வருவதில்லை. முதன்மைத்தொழிலாளர்கள் வெளிப்பகுதியிலிருந்து ஈட்டுத்தந்த செல்வமே இவர்களுக்கிடையே புழக்கத்தில் உள்ளது. எனவே, இவர்களை அடிப்படையற்ற தொழிலாளர்கள் (Non-basic Workers) என்றும் அழைக்கலாம்.

ஒரு நகரத்தின் இயக்கத்திற்கு இந்த இருவகையான தொழிலாளர்களும் இன்றியமையாதவர்களாவர். ஒரு நகரத்தின் அடிப்படைத் தொழிலாளர்கள் விகிதத்தையும் மற்றத் தொழிலாளர்களுடைய விகிதத்தையும் கணக்கிட பல்வேறு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அடிப்படைத் தொழிலாளர்களையும், மற்றவர்களையும் கணக்கிட வேண்டுமெனில் நகரத்தின் எல்லை நிச்சயிக்கப்பட வேண்டும். பெரிய நகரங்களில் அடிப்படைத் தொழிலாளர்களை விட மற்றவர்களே அதிகமாக வசிக்கின்றனர். ஏனெனில், பெரிய நகரங்களில் பணிகள் பெருகியிருக்கின்றன. மக்கள் தொகையும் பெருகியிருக்கிறது. எனவே, நகரமக்களுக்குத் தேவைப்படுகின்ற சந்தைகள், உள்நாட்டுப் போக்குவரத்து, கல்விக்கூடங்கள், பொழுதுபோக்குக்கேளிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கிறது. அடிப்படைத் தொழிலாளர்களை மற்றவர்களிடமிருந்து பிரித்தறிவது தற்கால நகரங்களில் அவ்வளவு எளிதாக இல்லை. ஏனெனில் நகரங்கள் விரிவடையும் போது இவர்கள் விகிதம் நிலையாக இருப்பதில்லை. இதைத்தவிர மற்றத் தொழிலாளர்கள் குறுகிய காலத்தில் அடிப்படைத் தொழிலாளர்களாக மாறுவதற்கும் வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக, ஒரு ரொட்டிக்கடை (bakery) வைத்திருக்கும் தொழிலாளி நகர மக்களுக்கு மட்டும் ரொட்டி விற்பதால் இரண்டாம் வகைத் தொழிலாளியாகக் கருதப்படுகிறான். இந்த ரொட்டியை நகரத்தில் மட்டுமின்றி வெளிப்பகுதிகளுக்கும் விற்கத் தொடங்கினால் அவன் அடிப்படைத் தொழிலாளி வகையில் சேர்ந்துவிடுகிறான்.

இதேபோல் பள்ளிகள் (school), சில்லறைக்கடைகள் (retail shop) சிறு தொழிற் சாலைகள், சிற்றுண்டி நிலையங்கள் போன்றவை நகரமக்களுக்குப் பணிசெய்ய ஏற்பட்டவையாகும். எனவே இவை நகரத்திற்குச் சேவைசெய்யும் தொழில் (City serving Production) களாகும். நகரத்திலுள்ள தொழிற்சாலைகளில், அந்நகருக்கு அப்பாலுள்ள சந்தைகளின் (market) தேவைக்காக உற்பத்தி செய்யப்பட்டால் அத்தொழிற்சாலைகள் நகரத்தை உருவாக்கும் தொழிற்சாலைகள் (city forming industries) எனப்படுகின்றன.

வாணிகம், சந்தை (market) போன்றவை நகரங்களில் காணப்படும் முதன்மை (Primary) தொழில்களில் சிலவாகும். நகரத்தில் முதன்மைத் தொழிலைத் தவிர, துணைத்தொழில்களும் கூடவே வளர்ச்சி பெறுகின்றன.

பொருள்களையும், சேவை (service) களையும் பண்டமாற்றிக் கொள்வதுதான் பழங்கால, மற்றும் தற்கால நகரங்களில் காணக் படும் அடிப்படைச்செயலாகும். பண்டமாற்று வாணிபத்திற்குச் துணை செய்யும் வகையில் இந்த நகரங்கள் போக்குவரத்துப் பாதைகளிலும், எல்லைகளிலும், பிரதேசத்தின் மையத்திலும் அமைகின்றன. ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்திற்குப் போக்கு வரத்து வசதிகளே நகரத்திற்குள்ளும் நன்கு அமையவேண்டும். இவ்வாறு இருக்கும்போது சிறு துணைத் தொழில்கள் (ancillary activities) கூடவே அமைந்துவிடுகின்றன. உதாரணமாக மோட்டார், லாரி போக்குவரத்து மிகுதியாக உள்ள நகரங் களில் மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்க்குமிடம் (service station) மோட்டர் சாமான்கள் விற்கின்ற கடைகள் ஆகியவை துணைத்தொழில்களாக வளர்ச்சி பெறுகின்றன. இதேபோல் சரக்கை ஏற்றி இறக்குதல் (loading and unloading), சிற்றுண்டி வழங்குதல், விற்பனைநிலையம், பண உதவி, இன்சூரன்ஸ் ஆகியவை சில துணைத் தொழில்களாகும்.

இயந்திரங்களின் கண்டுபிடிப்பினால் உற்பத்தி பெருகிற்று. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்காக நாளடைவில் சந்தையும் (market) விரிவடைகிறது. தேவையின் அடிப்படை யில் பல சிறப்புப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மூலப் பொருள்களும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும் பெரிய அளவில் தூரத்து இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். எனவே, போக்குவரத்துப் பாதைகளும் வாணிகமும் பொருத்தமான சில முக்கிய இடங்களில் வளர்ச்சிபெறுகின்றன. இதன் விளைவாக இந்த இடங்களில் பெரிய சந்தைகள் தோன்று கின்றன. தூரத்து இடங்களிலிருந்து கூட வாணிகத்தொடர்பு இச்சந்தைகளுக்கு ஏற்படுகின்றன. சிறந்த போக்குவரத்து வசதிகள் இதற்கு உதவி செய்கின்றன. சிறப்புப் பொருள்களின் உற்பத்தியினால் வாணிகம் பெருகி நகர்ப்புற வளர்ச்சியும் ஏற்படு கிறது. தொழில் வளம்பெற உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களை விரைவில் விநியோகம் செய்யவேண்டுவது அவசியம். ஆதலால் இங்கு வாணிகத்திலும் போக்குவரத்திலும் ஈடுபட்டி ருக்கும் மக்கள் தொகை வேகமாக வளர்ச்சியடைகிறது.

தொழிற் புரட்சிக்குப்பின் ஐரோப்பாவிலும் வட அமெரிக் காவிலும் பொருள்களை உற்பத்தி செய்வதுதான் முதன்மைத் தொழிலாகிவிட்டது. சிறப்புப் பொருள்களை (Specialised goods) உற்பத்திசெய்யும் ஆலைகள் நகரங்களில் ஒன்றாகக் குழுமி இருக்கின்றன. மூலப் பொருள்கள் கிடைக்கின்ற பகுதிகளில்

தான் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டியிருப்பதால் அவைகளின் அமைவுக்கு வேறு காரணங்கள் எதுவுமில்லை. தொழில் நகரங்கள் ஒரு முறை ஏற்பட்டுவிட்டால் அதனோடு தொடர்பு கொண்ட மற்றத் தொழிற்சாலைகள் அதனைச் சுற்றி அமைந்து வளர்ச்சி பெறுகின்றன. இதனை அடுத்துத் தொழில் களுக்குப் பண உதவி செய்யும் வங்கி, மற்றும் தனியார் முதலீட்டு நிறுவனங்கள் ஆகியவை துணைத் தொழில்களாக வளர்ச்சி பெறுகின்றன. வாணிகத்திற்கு விளம்பரம் அவசிய மாதலால் விளம்பர நிறுவனங்களும் பெரிய நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களும் வளர்ச்சியடையகின்றன. மேலும் சிறப்புத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், சலவைத்தொழிலாளர்கள். (washer men) போன்றவர்களும் காணப்படுகிறார்கள். சில சமயம் இவர் களுடைய சேவை நகரத்தின் விளிம்புகளுக்கு அப்பாலும் தேவைப்படுவதுண்டு. மேற்கூறிய சிறப்புத்தொழில்களைத் தவிர பொதுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மின்சாரநிலையத்து ஊழியர் கள், நகராட்சி ஊழியர்கள், நீர்வழங்கும் துறைஊழியர்கள், தீயணைக்கும் படையினர், காவல் துறையினர், மருத்துவமனை ஊழியர்கள் போன்றவர்களும் நகரங்களில் வசிக்கிறார்கள்.

22. நகரங்களை வகைப்படுத்துதல்

(Classification of towns)

புவியிற் காணப்படும் நகரங்களின் தன்மைகள் பலவாறு உள்ளன. இத்தன்மைகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி வகைப் படுத்துவது அவசியமாகும். நகரங்களை வகைப்படுத்துவதின் மூலம், அவற்றின் பண்புகளைப் புரிந்துகொள்ளக்கூடிய தலைப்பு களில் குறிப்பிட முடிகிறது. உதாரணமாக, நகரம் ஒன்றைத் தொழில் நகரம் என்று குறிப்பிடும் போது, அந்நகரிலுள்ள தொழிற் தொடர்புடைய பிற பண்புகளும் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது. நகரத்தின் விவரங்களைச் சுருக்கமாக வெளிப்படுத்துவதற்கு அதனை வகைப்படுத்துவது அவசிய மாகும்.

நகரங்களை வகைப்படுத்துவதின் நோக்கம் யாதெனில், நகரத்தின் தொழில் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கும், அவற்றின் அமைவிடத்தை (location) நன்கு உணர்வதற்கும், அவற்றின் முதன்மையான பணிகளுக்கும் பிற பண்புகளுக்கும் உள்ள தொடர்பை அறிவதற்கும் இயலும். நகரங்களை வகைப் படுத்துதல் பிரதேசத் திட்ட அமைப்புக்கும் (Regional planning) பெரிதும் உதவுகிறது. நகரம் வளர்வதற்கும், வீழ்வதற்கும் காரணமாயுள்ள சமூகப் பொருளாதார, அரசியல் நிலைமைகளை ஆராயவும் வழி வகுக்கிறது.

மக்கள் தொகையின் அடிப்படையில் சில நாடுகள் நகரங் களை வகைப்படுத்தியிருக்கின்றன. சிலர், நகரங்களை அவற்றின் தலங்களின் அடிப்படையில் பிரித்துள்ளனர்; மேலும் சிலர், அவற்றின் பணிகளை அடிப்படையாக வைத்து வகைப்படுத்தி யுள்ளனர்; கிரிபித் டெயிலர் (Griffith Taylor) நகரங்களைப் புவி யியல் சூழ்நிலையின் (geographic environment) அடிப்படையில்

சமவெளி நகரம், ஆற்றங்கரை நகரம், துறைமுக நகரம், மலையில் அமைந்த நகரம் என வகைப்படுத்தியுள்ளார். சிலர் அட்சரேகை, தீர்க்கரேகைகளின் அடிப்படையிலும், வேறு சிலர் காலநிலையின் அடிப்படையிலும் நகரங்களை வகைப்படுத்தியுள்ளனர்.

இந்தியாவில் நகரங்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

நகரம்		மக்கள் தொகை
முதல்வகுப்பு	...	1,00, 000 மேல்
இரண்டாம்வகுப்பு	...	50, 000 முதல் 100, 000 வரை
மூன்றும்வகுப்பு	...	20, 000 முதல் 50, 000 வரை
நான்காம்வகுப்பு	...	10, 000 முதல் 20, 000 வரை
ஐந்தாம்வகுப்பு	...	5, 000 முதல் 10, 000 வரை
ஆறும்வகுப்பு	...	5, 000 க்கு கீழ்.

நகரங்களை மக்கள் தொகை, இருப்பிடம், காலநிலை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்துவதைவிட பணிகளின் அடிப்படையில் வகைப்படுத்துவதே சிறந்ததாகக்கருதப்படுகிறது. எனவே, கெட்டிஸ் (geddes) போன்ற அறிஞர்கள் நகரங்களை முதல்வகை (Primary), இரண்டாம் வகை (secondary), மூன்றும் வகை (Teritary) என மூன்று வகைகளாகப் பிரித்துள்ளனர். முதல் வகையில் சுரங்கத்தொழில், பொருள் உற்பத்தி (manufacturing), விவசாயம், மீன் பிடித்தல், போன்ற உற்பத்தித் (Production) தொழில்களும், இரண்டாம் வகையில் சந்தை அமைத்தல், மொத்தவிற்பனை, ஏற்றுமதி இறக்குமதி போன்ற விநியோகத் (distribution) தொழில்களும். மூன்றுவதுவகையில் பொழுது போக்கு, கல்வி, வீட்டுவேலை போன்ற சேவைத்தொழில்களும் (Service) காணப்படுகின்றன.

மார்செல் அருசோ (Marcel Aurousseau) என்ற அறிஞர், நகரங்களை ஆறு பணிகளின் அடிப்படையில் 28 வகைகளாகப் பிரித்துள்ளார். அவை வருமாறு :—

(1) நிர்வாகம்

(அ) தலைநகர்
(ஆ) வருவாய்ப்பணி (revenue)

(2) பாதுகாப்பு

(அ) கோட்டை
(ஆ) கோட்டை காவற்படை,
(இ) கடற்படை

(3) பண்பாடு

(அ) திருச்சபை
(ஆ) பல்கலைக்கழகம்
(இ) கலை
(ஈ) புண்ணியஸ்தலம்
(உ) சமயம்

(4) உற்பத்தி

(அ) தொழிற்சாலையில் உற்பத்தி
(ஆ) கைத்தொழில்

(5) பொழுது போக்கு

(அ) உடல்நலம்
(ஆ) சுற்றுலாப்பயணிகள் (Tourists)
(இ) விடுமுறை

(6) போக்குவரத்து

(அ) சேகரித்தல்
(i) கனி–சுரங்கம்
(ii) மீன்பிடித்தல்
(iii) காட்டுப்பொருள்கள்
(iv) விறகு (fire wood)

(ஆ) வினியோகம்
(i) ஏற்றுமதி
(ii) இறக்குமதி
(iii) வழங்குதல்

(இ) இடமாற்றல்
(i) சந்தை
(ii) செங்குத்துச்சரிவுள்ள இடம்
(iii) போக்குவரத்து மாறுமிடம்
(vi) பாலத்தின் முனை
(v) அலை பொங்கும் எல்லை
(vi) நீர் வழிமுனை (navigational head)

ரேட்சல் (Tatzel) என்பவர் நகரத்தை மனித உடலுக்கு ஒப்பிடுகிறார். மனித உடலின் பல்வேறு பாகங்கள் பல்வேறு பணிகளைச் செய்வது போன்று நகரமும் பல அங்கங்களைக் கொண்டு பலவிதமான பணிகளைச் செய்து வருகிறது. இந்தப்பணிகள்தாம் நகரம் இயங்குவதற்குத் தேவையான மூலப் பொருள்களைக் கொண்டுவருகின்றன. எனவே, நகரத்தின் பணியை அறிவதற்கு அது உற்பத்தி செய்யும் அளவைக் காட்டிலும், அதன் மக்கள் மேற்கொண்டுள்ள தொழில்களே வழிகாட்டுகின்றன.

C. D. ஹாரிஸ் (Harris) என்பவர் முதன் முதலில் புள்ளி விவர அடிப்படையில் நகரங்களை வகைப்படுத்தியவர். இவர், 1943-ஆம் ஆண்டு அமெரிக்கக் கணக்கின்படி (Census) அமெரிக்க நகரங்களிலுள்ள மிக முக்கியமான தனித்த பணிகளை வகைப்படுத்தினார். நகரமொன்றில் ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டிருக்கும் மக்களின் எண்ணிக்கையும், நகரத்தொழிலாளர்களின் மொத்தத் தொகையில் அவற்றின் விகிதமும் கணக்கிடப்பட்டது. எந்தத் தொழிலில் அதிக சதவிகிதம் காணப்படுகிறதோ, அதுவே அந்த நகரின் முக்கிய தொழிலாகக் கருதப்பட்டது. இவ்வகையில் நகரின் தொழிலாளர் எண்ணிக்கையில் குறைந்தது 60% சதவிகிதம் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தால் அந்நகரம் உற்பத்தி (manufacturing) நரகம் எனப்பட்டது. ஆனால், தொழிலாளர் எண்ணிக்கையில் குறைந்தது 50% சதவிகிதம் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தால் அந்நகரம் சில்லறை வியாபார (retail) நகரம் எனப்பட்டது.

இவ்வாறு வகைப்படுத்தியதின் விளைவாக அமெரிக்க நகரங்களின் அமைவிடம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. அமெரிக்காவில் உற்பத்தி நகரங்கள் யாவும் வடகிழக்குப் பகுதியிலும், சில்லறை வியாபார நகரங்கள் அனைத்தும் உற்பத்தி பிரதேசங்களுக்கு அப்பாலும் அமைந்திருப்பதை ஹாரிஸ் (Harris) கண்டறிந்தார்.

இதன்பிறகு, H.J. நெல்சன் (Nelson) என்னும் அறிஞர் அமெரிக்க நகரங்களைக் கணித சராசரியின் (arithmatic mean) அடிப்படையில் வகைப்படுத்தினார். இவர், அமெரிக்க நகரங்களில் காணப்படும் பணிகளை 9 வகைகளாகப் பிரித்தார். ஒவ்வொரு பணி வகையிலும் சராசரி விகிதத்தையும் கணக்கிட்டார். இதே போல் ஒவ்வொரு பணி வகையிலும் காணப்பட்ட திட்ட விலக்கத்தை (standard deviation) கணக்கிட்டார். நெல்சனின் முறைப்

படி ஒரு நகரம் ஒரு குறிப்பிட்ட பணியில் சிறப்பிடம் வகிக்கிறதென்றால், அந்நகரத்தில் அந்தப் பணியின் சராசரி விகிதமும் மற்றும் ஒரு திட்ட விலக்கமும் (standard deviation) காணப்பட வேண்டும்.

R.H.T. ஸ்மித் என்பவர் ஒருவரை படத்தின் மூலம் வாணிகம், உற்பத்தி ஆகிய இரு பணிகளுடைய அடிப்படையில் நகரங்களை வகைப்படுத்தியுள்ளார். பல்வேறு உற்பத்தி (manufacturiug) ஆகியவற்றுல் ஈடுபட்டிருப்பவர்களின் சதவிகிதம் கணக்கிடப்பட்டு, அவை வரைபடத்தில் x—y அச்சுகளில் குறிக்கப்பட்டன. வரைபடத்தில் இவ்விரு பணிகளின் சராசரி விகிதமும் கோடுகளால் குறிக்கப்பட்டுள்ளன. இக்கோடுகளுக்கு அப்பால் குறிக்கப்பட்டிருக்கும் நகரங்களில், பணிகள் சராசரிக்கு அதிகம் எனப்பொருள்.

இந்தியாவின் மக்கட் கணிப்பின் (Census) அடிப்படையில் தொழிலாளர்கள் ஒன்பது வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்; நாட்டுப்படத்தில் இவை ஐந்து தலைப்புகளில் வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவை பின்வருமாறு:

I முதன்மைத் தொழில்கள் (Primary activitles)

- (i) விவசாயி (cultivator)
- (ii) விவசாயத் தொழிலாளி (agricultural labourer)
- (iii) சுரங்கம், கால்நடைப்பண்ணை, காடு, மீன்பிடித்தல், வேட்டை, தோட்டம், ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளி.

II தொழிற்சாலைகள்

- (iv) குடிசைத்தொழில் (Household industries)
- (v) குடிசைத் தொழிலைத் தவிரப் பிற தொழில்கள்
- (vi) வீடு கட்டும் தொழில்

III வாணிகம்

- (vii) வாணிகம்

IV போக்குவரத்து

- (viii) போக்குவரத்து, சேமிப்பு, செய்திப் போக்குவரத்து

V சேவை

- (ix) பிற சேவைகள்

நகரங்கள். இதுபோன்ற ஐவகைப் பணிகளின் கீழ் ஒரு பணி நகரம் (mono functional city), இரு பணி நகரம் (multi functional city) என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு நகரத்தில் ஒரே ஒரு பணியின் கீழாகத் தொழிலாளர்கள் 40% சதவிகிதத்திற்கும் கீழ் இருந்தால், அடுத்து அதிகமாக உள்ள பணியின் விகிதத்தையும் கூட்டி இந்த இரு பணிகளின் கூட்டு சதவிகிதம் 60% சதவிகிதத்திற்கு மேல் இருந்தால் அந்நகரம் இரு பணி நகரம் எனப்படுகிறது. அந்தக் கூட்டுத்தொகை 60% சதவிகிதத்திற்குக் குறைவாக இருந்தால் மூன்றாவது அதிகமாக உள்ள பணியையும் இத்துடன் சேர்த்து, அந்நகரத்தைப் பல பணி நகரம் என்று அழைக்கப்படுகிறது.

1961 ஆம் ஆண்டு மக்கட் கணிப்புப்படி இந்தியாவில் 107 முதல்வகுப்பு நகரங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒரு பணி கொண்டவை 52, இருபணி கொண்டவை 47, பல பணிகொண்டவை 8 நகரங்களாகும். இந்த 52 ஒரு பணி கொண்ட முதல் வகுப்பு நகரங்களில் ஒரு முதன்மைத் தொழில் நகரமும் 29 தொழில் நகரங்களும், 22 சேவை நகரங்களும் உள்ளன.

23. நகரின் உருவவியல்

(Urban Morphology)

நகரங்களின் எண்ணிக்கை, பரவல், அமைப்பு ஆகியவற்றை நோக்கும்போது ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு தனித்தன்மை இருப்பதை அறிகிறோம். இத்தனித்தன்மையே அப்பிரதேசத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. உதாரணமாக சீனு, பெர்ஷியா (ஈரான்), கிழக்கு ஆசியா ஆசிய நாடுகளின் பண் பாட்டையே வெளிப்படுத்துகின்றன. நகரங்களுக்குக் கிடையே இந்த வேறுபாடு இருப்பதோடு மட்டுமல்லாமல், ஒரே நகரத் திலும் பகுதிக்கு பகுதி வேறுபாடு காணப்படுகிறது. நகரங்கள் அளவில் பெரிதாக இருப்பதாலும், அவற்றுக்குள்ளாக வேறுபாடு கள் காணப்படுவதாலும், அவற்றுக்குள்ளாக ஒரு கட்டமைப்பு (structure) இருப்பதை அறிகிறோம். இந்தக் கட்டமைப்பு இடத் திற்கு இடம் வேறுபடுவதால், புவியியல் அறிஞர்களும், திட்ட மிட்டு நகரத்தை அமைப்பவர்களும் (town planners) இதனை ஆராய முற்படுகின்றனர். நகரங்களிடையே இக்கட்டமைப்பு வேறுபட்டு அமைவதற்கு நகரம் அமைந்துள்ள தலம், அதன் பணி, அதன் வளர்ச்சி, அது தோன்றிய காலம் ஆகியவை காரணமாக இருக்கின்றன.

நகரத்தின் உருவவியலை (morphology) அல்லது வடிவத்தை இரு கோணங்களில் பார்க்கமுடிகிறது. ஒன்று சாலைகள், தெருக் கள், கட்டடங்கள் ஆகியவை அமைந்துள்ள விதத்தின் மூலம் நகரின் உருவவியலை அறிவது. மற்றொன்று: பணிமண்டலங்கள் (functional zones) மூலம் அதை அறிவது.

நகர்ப்புறவாழ்க்கை வேகமாகப் பெருகிக் கொண்டுவரு வதால், வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பணியின் கீழ் தோன்றியுள்ள நகரங்களின் உருவம் (form) எக்காலத்திலும் நிலையாக இருப்பதில்லை. காலமாற்றத்திற்கு ஏற்ப நகர உருவத் தில் ஏதாவதுதொரு மாற்றம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது.

எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும். நகரத்தின் மூன்று உறுப்புக்களாகிய தெரு அல்லது சாலை, கட்டடம், பணி ஆகியவற்றின் மூலம் நகரின் பழைய வடிவத்தை எளிதில் அறிந்துகொள்ள முடிகிறது.

பெரிய அளவை படங்களில் (large scale maps) மிகத்தெளிவாகப் பார்க்கக்கூடியது நகரத் தெருக்களின் அமைப்பாகும்; தெருக்களின் தரைப்படத்தை (ground plan) உற்று நோக்கும் போது, ஆங்காங்கு ஏற்பட்டுள்ள சிறு மாற்றங்களையும், பழங்கால - தற்காலப் போக்குவரத்து எந்த வகையில் அந்த நகரத்திற்குப் பொருத்தமுள்ளதாக இருக்கிறது என்பதையும் நாம் அறிகிறோம். நகரின், பழைய வடிவத்தை நாம் அறிந்துகொள்வதற்குச் சாலைகளும் தெருக்களும் உதவுகின்றன. ஏனெனில், தெருக்கள் ஒரு முறை அமைந்துவிட்டால் அவற்றை எளிதில் மாற்ற முடியாது. இதற்கு மூன்று .காரணங்கள் உள. முதலாவதாக, தெருக்கள் அமைக்கப்பட்டவுடன் அதன் இரு புறத்திலும் விலையுயர்ந்த கட்டடங்கள் கட்டப்படுகின்றன. தெருக்களை அகலப்படுத்தும்போது இவற்றை இடிக்க முடியாது. அப்படி இடித்துத் தெருக்களின் அமைப்பை மாற்றினாலும், நீண்ட தூரத்திற்கு அவ்வாறு செய்யமுடியாது. ஏனெனில், அதற்குச் செலவு அதிகமாகும். இரண்டாவதாக, போக்குவரத்து மாற்றங்களால் தெருக்களை அகலப்படுத்த நேரிடும்போது பொது இடங்களை மட்டுமே யாதொரு ஆட்சேபனையும் இல்லாமல் பறி முதல் செய்து அவற்றை அகலப்படுத்த முடியும். ஆனால், தெரு ஓரங்களில் காணப்படும் மனைகளும் (plots), கட்டடங்களும் பெரும்பாலும் தனியாருக்குச் சொந்தமாக இருப்பதால் அவற்றைப் பறிமுதல் செய்வது மிகவும் கடினம். மூன்றாவதாக, ஒரு குறிப்பிட்ட போக்குவரத்தும், பண்பாடும் இருந்தகாலத்தில் அவற்றிற்கு ஏற்பத்தெருக்கள் அமைந்துவிடுகின்றன. போக்குவரத்துக்குக் குதிரைகள் பயன்பட்ட காலத்தில் சாலைகள் குறுகலாகவே அமைக்கப்பட்டன. ஆனால், பெரிய மோட்டார் வாகனங்கள் உபயோகத்திற்கு வந்துள்ள தற்காலத்தில் இக்குறுகிய சாலைகளையும் தெருக்களையும் அகலப்படுத்த முடியாத நிலைமையில் பழைய நகரங்கள் இருக்கின்றன.

நகரத்திலுள்ள சில கட்டடங்கள் நமக்குப்பழைய வடிவத்தை எடுத்துக்காட்டுகின்றன. காலப்போக்கில் பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டோ, புதுப்பிக்கப்பட்டோ அவற்றின் பழைய அமைப்பிலிருந்து மாறுபடுகின்றன; ஆனால், சில பழங்காலத்து நகரங்கள் அவற்றின் பழமையின் தன்மையால் பரம்

பரை பரம்பரையாக அதே நிலையில் இருந்துவருகின்றன. பழமையில் நம்பிக்கை கொண்டவர்கள் கட்டடங்கள் ஆபத்தான நிலையில் பழுது அடைந்தால்தவிர அவற்றை இடிப்பதில்லை. வரலாற்றுப் புகழ்பெற்ற கலைநுணுக்கம் கொண்ட சில கட்டடங்கள் கூட, அழியாமல் பாதுகாக்கப்படுகின்றன. இதே போல் கோயில்கள், திருச்சபைகள், சமய வழிபாட்டுக் கூடங்கள் இவையாவும் மாறுதல்களுக்கு உட்படாமல் இருக்கின்றன. எனவே' இத்தகைய கட்டடங்களினால் நகரின் பழைய வடிவம் சில பகுதிகளில் மாறாமல் இருக்கின்றன.

இதேபோல் நகரின் சில பகுதிகளில் காணப்படும் பணிகளும் எளிதில் மாற்றமடைவதில்லை. குறிப்பிட்ட பணிகளுக்காக அமைந்திருக்கின்ற கட்டடங்களும் இதன் காரணமாக மாறுவதில்லை. எனவே, இப்பகுதியில் நகரின் உருவம் (form) அழியாமல் இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பகுதியில் நடைபெறும் பணியை மனதிற்கொண்டுதான் தெருக்களும் கட்டடங்களும் அமைக்கப்படுகின்றன. அப்பணிகளைச் சீராக நிறைவேற்றத்தக்க வகையில் குறிப்பிட்ட அமைப்பில் அவை கட்டப்படுகின்றன. நகரத்தின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பணிகள் காணப்படுவதால் அப்பணிகளுக்கு ஏற்ப ஆங்காங்கு கட்டட அமைப்பும் மாறுபடுகிறது. வியாபாரப் பகுதியில் பொதுவாகக் கட்டடங்களில் கீழ்ப் பகுதியில் கடைகளும், கிடங்குகளும் உள்ளன. அவற்றின் வாயிற்படி அகன்றதாக இருக்கின்றன. இப்பகுதிகளின் மேல் அடுக்குகளில் தான் குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. சில கட்டடங்களில் முன்பகுதி கடையாகவும், பின்பகுதி வசிக்குமிடமாகவும் இருக்கிறது. வீடுகளில் காணப்படும் முற்றம் வியாபாரப் பகுதியில் காணப்படுவதில்லை. இதேபோல் பணிகளுக்கு ஏற்றவாறு பல்வேறு கட்டடப் பொருள்கள் கட்டடங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வியாபாரப்பகுதியில் கட்டடங்கள் பல அடுக்குகளில் கட்டப்படுவதால் அதன் அமைப்பும், பயன்படுத்தும் கட்டடப்பொருள்களும் வேறுபட்டிருக்கின்றன. உதாரணமாக, பல மாடிக் கட்டிடங்கள் தற்போது கான்கிரீட்டினால் (concrete) கட்டப்படுகின்றன; இருப்புக்கம்பிகளும், சிமெண்டும் (cement) அதிக அளவிற்குப் பயன்படுகின்றன. கதவுகள் பெரும்பாலும் இரும்பினாலும், சுருட்டும் அமைப்பையும் (rolling shutters) பெற்றிருக்கின்றன. ஆனால், வசிக்கும் பகுதிகளில் கான்கிரீட் பயன்பட்டாலும் கதவு, சன்னல், கழிகள் ஆகியவற்றிற்கு மரமே பயன்படுகிறது. வியாபாரப்பகுதியில் பாரம் சுமந்துசெல்லும் கட்டைவண்டி, லாரி

ஆகியவை அதிகமாகச்செல்வதால் சில தெருக்களும் சாலைகளும் தாருக்குப் (Tar) பதிலாக பாறைக்கற்களால் போடப்பட்டிருக்கும். உதாரணமாக, சென்னை கொத்தவால்சாவடி (kothaval-market) பிராட்வே போன்ற பகுதிகளில் இத்தகைய கற்சாலைகள் காணப்படுகின்றன. ஆகவே, நகரில் சில பகுதிகளில் காணப்படும் பணிகள் மேற்கூறிய வசதிகளால் அந்த இடங்களிலேயே தொடர்ந்து நடைபெறுகின்றன.

மேற்கூறியவற்றிலிருந்து தெருக்கள், கட்டடங்கள், பணிகள் ஆகிய நகர உறுப்புகள் எளிதில் மாற்றமடையாமல் இருப்பதால், நகரத்தின் தொடக்ககாலத்து உருவவியலை (morphology) வெளிப்படுத்துகின்றன.

நகர உருவவியலில் 15, 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்களில் வெடிமருந்து (gun powder) பயன்படுத்தப்பட்டது. இதனைப் பயன்படுத்தி, தூரத்திலிருந்து சுட முடிந்ததால், பாதுகாப்புக்காக நகரங்களுக்குச் சுவர் (wall) எழுப்ப வேண்டியதாயிற்று. அதேபோல் நகரத்தினுள்ளிருந்து பீரங்கியால் சுடுவதற்கு ஏற்ப சுவர்களில் பீரங்கி துவாரங்கள் அமைக்கப்பட்டன. நகரங்களில் கண்காணிப்பு மேடைகள் (watch tower) அமைக்கப்பட்டன. எனவே, துப்பாக்கியின் கண்டுபிடிப்பால் நகரத்தின் வடிவத்திலும் கட்டடமைப்பிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. இதேபோல் மாற்றங்கள் 19, 20 ஆம் நூற்றாண்டுகளிலும் நிகழ்ந்தன. மோட்டார், லாரி, இவற்றின் அறிமுகத்தால் நகரங்களின் உருவம் மாறுதலைப் பெற்றது. புதிய நகரங்கள் மோட்டார் போக்குவரத்துக்கு ஏற்பத் திட்டமிட்டு நேரான சாலைகளைக் கொண்டு அமைக்கப்பட்டன. வாகனங்களின் வேகத்திற்கு ஒப்ப சாலைகள் அகலமாகவும், நேராகவும் அமைக்கப்பட்டன. பழைய நகரங்களில் மாட்டு வண்டி, குதிரை வண்டி போன்றவற்றின் போக்குவரத்துக்கு மட்டுமே போதுமான அளவுக்குக் குறுகலாக இருந்த சாலைகளும், தெருக்களும் மோட்டார், பஸ் ஆகியவைகளுக்காக அகலப்படுத்தப்பட்டன. நகரங்களில் நீண்ட பஸ்கள் செல்வதற்கு வகைசெய்ய சில சாலை வளைவுகள் நேராக்கப்பட்டன. திருப்பு முனைகளில் பார்வை தடைபடாமலிருக்க கட்டடங்களின் மூலைகள் வளைவாக அமைக்கப்பட்டன. இவைதவிர, வேறு காரணங்களாலும் நகரின் உருவவியல் மாற்றங்களை அடைந்தது.

உலகில் காணும் எல்லா நகரங்களும் படிப்படியாக வளர்ச்சி பெற்றவைதான். நகரம், வளர்ச்சி பெறும்போது அதன் சாலை

கள் நகரில் எல்லாத் திசைகளிலும் தாறுமாறாக அமைகின்றன. சாலையின் அகலமும் எல்லா இடங்களிலும் சீராக இருப்பதில்லை. ஒரு இடத்தில் அது மிகவும் குறுகலாகவும், மற்றொரு இடத்தில் மிகவும் அகலமாகவும் காணப்படுகிறது. எனவே, இது திட்டமிடப்படாத தன்மையையே வெளிக்காட்டுகிறது. பழைய நகரங்களில் பல இவ்வாறே உள்ளன. ஆனால், புதிய நகரங்கள் திட்டமிட்டே அமைக்கப்படுகின்றன. இதேபோன்று அழிந்த நகரங்களைப் புதுப்பிக்கும் போதும் திட்டமிட்டு அமைக்கப்படுகிறன. முதலில் திட்டமிட்ட அமைப்புக்குச் சில நாடுகளில் எதிர்ப்பு இருந்தபோதிலும், தற்காலப் போக்குவரத்து முறையினால் தற்போது இது விரும்பப்படுகிறது. அகலமான சாலைகளும், திறந்த வெளிகளும், பூங்காக்களும், நகரத்திற்கு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்ததினால் திட்டமிட்ட நகர அமைப்புக்குத் தற்காலத்தில் வரவேற்பு இருக்கிறது. பழங்கால ரோமானிய, கிரேக்க, சீன நகரங்கள் பாதுகாப்பை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டதால், அவர்கள் விரும்பியபடி நகரங்களை மாற்றி அமைக்கமுடியவில்லை. எனவே, அவை நெருக்கமாகவும் வசதி குறைந்தும் காணப்பட்டன. சில பழைய நகரங்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன. பழங்காலத்து நகரங்கள் சதுர வடிவிலும், வட்ட வடிவிலும் பொதுவாக அமைக்கப்பட்டிருந்தன. 17, 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் அமைந்த நகரங்கள் பெரும்பாலும், நினைவுச்சின்னம் (monument) அல்லது அரண்மனையைச் சுற்றி அமைந்திருந்தன. எனவே, இவை வட்டமாக (vistas) காணப்பட்டன. அமெரிக்காவிலும், கானடாவிலும் நகரங்கள் சதுர வடிவில் அமைக்கப்பட்டன. ஆனால், தற்கால நகர அமைப்புகளில் வட்ட வடிவமும், சதுர வடிவமும் அவ்வளவாக விரும்பப்படவில்லை. ஏனெனில் நகரங்களில் திறந்த வெளியும், பூங்காக்களும், பசுமைப்பகுதிகளும், மரங்களும், இருந்தாக வேண்டும்; இது தற்காலத்தில் பரவலாகக் காணப்படுகின்ற கருத்தாகும். இதன் விளைவாகவே பூங்கா நகரங்கள் (garden cities) தோன்றியுள்ளன. ஆஸ்திரேலியாவிலுள்ள கான்பெரா (canberra), மலேசியாவிலுள்ள பெடாலிங் ஜயா (Petaling Jaya) இத்தகைய நகரங்களாகும்.

நகர்ப்புறக்குடியிருப்பில் திட்டமிட்டு வளர்ச்சி பெற்ற நகரங்களுக்கும் தன்னிச்சையாக வளர்ச்சியடைகின்ற நகரங்களுக்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. திட்டமிட்ட நகரம் எடுத்த எடுப்பிலேயே நகரத்தின் தகுதியைப் பெற்று இயங்கி வருகிறது. அது திடீர் நகரமாகும். இதற்கு உதாரணமாக சண்டிகர், புது

டெல்லி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆனால், தன்னிச்சையாக வளரும் நகரம், முதலில் கிராமமாகவோ, சிறிய குடியிருப்பாகவோ, இருந்து, பின்னரே நகரமாக வளர்ச்சியடைகிறது; தன்னிச்சையாக வளர்ச்சி பெறுவதால் அமைப்பில் இது ஒழுங்கற்று இருக்கிறது. பழங்காலம் முதற்கொண்டே பல நகரங்கள் திட்டமிட்டு வடிவ கணித உருவில் (geometrical-shape) அமைக்கப்பட்டன. மைலிடஸ் (miletus) என்ற இடத்தில் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துவந்த ஹிப்போடாமஸ் (Hippodamus) என்பவரை, கிரேக்கர்கள் நகரத்திட்ட அமைப்பிற்குத் தந்தையாகக் கருதி வந்தனர். ஆனால், இவர் காலத்திற்கு முன்னரே சில நகரங்களுக்குச் சீரான அமைப்பு இருந்து வந்தது. மொஹஞ்ஜதாரோ (Mohenjadaro), கோர்சாபாத் (Khorsa bad), டெல் அமர்னா (Tel Amarna) போன்ற பழங்கால நகரங்கள் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டன, இடைக்காலத்தின் சதுர, செவ்வக வடிவம் பிரபலமடைந்தது. ஐரோப்பாவைத்தவிர சீனா, ஜப்பான் போன்ற கிழக்கு ஆசிய நாடுகளிலும் இந்த அமைப்புப் பரவிவிட்டது. உதாரணமாக ஜப்பானிலுள்ள கியோட்டோ (Kyoto) நகரத்தைக் கூறலாம். பழைய நகரங்களுக்கும் புதிய நகரங்களுக்கும் அமைப்பில் நிறைய வேறுபாடு காணப்படுகிறது. புதிய நகரங்களையும், பழைய நகரங்களையும் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. பழைய நகரப் பகுதி திட்டமிட்டோ தன்னிச்சையாகவோ அமைந்திருக்கலாம். பழைய நகரப்பகுதி சதாரணமாக சுவருக்குள்ளாக அமைந்திருக்கிறது. தற்கால நகரங்கள் தன்னிச்சையாகப் பெருகுகின்றன. முக்கிய சாலைகளின் வழியே மையப்பகுதியிலிருந்து கட்டடங்கள் விளிம்பை நோக்கி வளர்ச்சியடைவதை நாம் எல்லா பெரிய நகரங்களிலும் காணலாம்.

நகரங்களே அளவில் பெரியதாக இருப்பதாலும் அவற்றிற்குள்ளேயே அத்தனை வேறுபாடுகள் காணப்படுவதாலும் அவற்றிற்கு ஒரு கட்டடமைப்பு (structure) இருப்பதை அறிகிறோம். நகரத்திற்குள் அமைந்திருக்கும் தொழிற்சாலைப்பகுதி, சந்தைப் பகுதி, வசிக்கும் பகுதி போன்றவை நகரத்தின் நிலப்பயன்பாட்டை (land use) வெளிப்படுத்துகின்றன. நிலப்பயன்பாட்டிற்குத் தக்கவாறு கட்டடங்களின் தோற்றமும், இடைவெளியும் மாறுகின்றன. ஆகவே, நகரத்தின் பல்வேறு நிலப்பயன்பாட்டுப் பகுதிகளை, கட்டடங்களின் பணி, அமைப்பு ஆகியவற்றின் மூலம் பிரித்தறிய முடிகிறது.

நகரங்களின் உருவவியலைப் புரிந்து கொள்ளுவதற்கு உதவியாகச் சென்னை நகரின் உருவவியல் கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை நகரம் இந்தியாவின் நான்காவது பெரிய நகரமாகும். இது இந்தியாவின் மூன்றாவது முக்கிய துறைமுகமாகவும் விளங்குகிறது. இந்நகரம் 125 ச.கி.மீ. பரப்பில் அமைந்துள்ளது. 1971 ஆம் ஆண்டு இதன் மக்கள் தொகை 2.47 மில்லியன்களாகும். சென்னை நகரம் 1639 ஆம் ஆண்டில் பிரான்சிஸ்டே (Francis Day) என்பவரால் நிறுவப்பட்ட டச்சு (Dutch) கம்பனிக்குச் சொந்தமாக இருந்தது. டச்சு கம்பனி தற்போதைய செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைக்கப்பட்டிருந்தது. 18 ஆம் நூற்றாண்டில் பதினான்காம் லூயிக்குப் (Louis xiv) பிறகு டச்சுக்காரர்களிடமிருந்து இது கைமாறியது. 1763-ஆம் ஆண்டு முதல் சென்னை நகரம் பல கைகளுக்கு மாறி, இந்தியா சுதந்திரம் அடைகின்றவரை ஆங்கிலேயரின் கைவசம் இருந்தது.

சென்னை நகரில் இயற்கைத் துறைமுகம் இல்லாமல் போனாலும், இங்குத் துறைமுகப் பணி சிறப்பாக நடைபெறுகிறது. பிரான்சிஸ் டே (Francis Day) செயின்ட் ஜார்ஜ் கோட்டை அமைந்துள்ள தலத்தைத் தேர்ந்தெடுத்ததற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று இத்தலத்திற்கு அருகில் செல்லும் கூவம் ஆற்றில் (Cooum) படகுகளின் மூலம் சுமார் 50 டன்கள் எடையுள்ள பொருள்களை ஏற்றிச் செல்லலாம். இரண்டாவதாக கடற்கரையிலிருந்து 2 மைல் உள்நாட்டில் தள்ளி அமைந்திருக்கும் உப்பங்கழிகள் (கூவம் ஆறு) இத்தலத்திற்குத் தற்காப்பாக இருந்தன. (படம் 56)

சென்னை நகரம் 1978 முதல் 1923 வரை எந்த மாறுதலுக்கும் உட்படவில்லை. 1923 க்குப் பிறகு இது விரிவடைந்தது. 1941 ஆம் ஆண்டில் இதன் பரப்பு 15 ச. கி.மீ. அப்போது இங்குச் சதுர கி.மீக்கு 10250 பேர் வசித்தனர். 1951 ஆம் ஆண்டு சென்னை நகரின் பரப்பு 125ச. கி.மீ. விரிவடைந்தது. அப்போது இதன் மக்கள் தொகைச் செறிவு சதுர கி.மீக்கு 11,560 பேர்களாகும் 1961 ஆம் ஆண்டில் நகரப் பரப்பு மாறாமல், மக்கள் தொகைச் செறிவு மட்டும் சதுர கி.மீக்கு 14,080 பேர்களாகக் காணப்பட்டது.

சென்னை நகரின் கருவாக விளங்குவது செயின்ட் ஜார்ஜ் கோட்டையும் (Fort St. George), ஜார்ஜ் டவுன் (George Town)



படம்:56 சென்னை நகரத்தின் உருவவியல் விளக்கம்

(1) நிர்வாகப்பணி, பொதுப்பணி
(2) வியாபாரப் பகுதி (commercial and marketing area)
(3) பழைய குடியிருப்புப்பகுதி
(4) புதிய குடியிருப்புப் பகுதி
(5) தொழிற்சாலைப் பகுதி
(6) பொழுதுபோக்கு மையங்கள்
(7) இடுகாடு (burial ground)

பகுதியுமாகும். செயின்ட் ஜார்ஜ் கோட்டை 14-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும் இதில் தற்போது அரசின் தலைமைச் செயலகமும், இராணுவக் கட்டடங்களும் உள்ளன.

ஜார்ஜ் டவுன் (George Town) பகுதிதான் சென்னையின் வியாபாரக் கருவாக (commercial core) விளங்குகிறது. ஜார்ஜ் டவுன் வியாபாரப்பகுதி செவ்வக வடிவில் அமைந்துள்ளது. இதன் மூன்று திசைகளிலும் தேசிய நெடுஞ்சாலைகள் செல்லுகின்றன. எல்லா முக்கிய வங்கிகளும், வாணிக நிறுவனங்களும் வடக்குக் கடற்கரைச் சாலையில் துறைமுகத்தைப் பார்த்தவண்ணம் அமைந்திருக்கின்றன, ஜார்ஜ் டவுன் பகுதியும், செயின்ட் ஜார்ஜ் கோட்டையும் நகரின் மற்றப்பகுதியிலிருந்து கூவம் ஆறு, பகிங்காம் கால்வாய் (Buckingham canal) ஆகியவற்றால் பிரிக்கப் பட்டிருக்கின்றன.

சென்னை நகரம் ஜார்ஜ் டவுன் பகுதியிலிருந்து தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய திசைகளில் விரிவடைந்து செல்லுகிறது: இவ்வளர்ச்சி குறிப்பாக நெடுஞ்சாலைகளின் வழியே சிறப்பாகக் காணப்படுகிறது. மின்சாரரெயில்பாதை அமைக்கப்பட்ட பின்பு, தெற்குத் திசையில் நகர வளர்ச்சி துரிதமாக இருக்கிறது.

கூவம், அடையாறு (Adayar) ஆகிய ஆறுகளுக்கு இடைப் பட்ட பகுதியில் நிர்வாகப்பகுதி, வியாபாரப்பகுதி, தொழிற் சாலைப் பகுதி, குடியிருப்புப்பகுதி ஆகியவை கலந்து காணப்படு கின்றன.

சிந்தாதிரிப்பேட்டை கூவம் ஆற்றுவளைவில் அமைந்திருக் கிறது. இங்கு, குடியிருப்புப்பகுதிகள் அதிகமாகக் காணப்படு கின்றன. இது அண்ணாசாலை போன்ற வியாபாரப் பகுதிகளுக்கு அருகில் இருப்பதால், கூலி வேலை செய்பவர்களின் வீடுகள் இங்குக் காணப்படுகின்றன. இது தவிர, கூவம் ஆற்றோரத்தில் இப்பகுதியில் சேரிகள் (slums) அதிகம் காணப்படுகின்றன. கூவம் ஆற்றுக்குத் தெற்குப்பகுதியில் திருவல்லிக்கேணி, இராயப் பேட்டை, மயிலாப்பூர் போன்ற பழைய குடியிருப்புப் பகுதிகள் காணப்படுகின்றன.

அண்ணாசாலை (Mount Road) சென்னை நகர வாணிகத்திற்குப் பாதையாக அமைந்திருக்கிறது. இச்சாலை, சென்னை நகரின் தெற்குப்பகுதியில், அரசின் பழைய விருந்தினர் மாளிகையி லிருந்து இராஜாஜி மண்டபம் செயின்ட் தாமஸ் மலை

(St. Thomas mount) வரை நீண்டு செல்லுகிறது. இச்சாலையின் மையப்பகுதியில்தான் முக்கிய கடைத்தெருக்களும், கடைகளும் சிற்றுண்டி விடுதிகளும், திரையரங்குகளும் காணப்படுகின்றன.

அண்ணாசாலையின் (Mount Road) இரு புறத்திலும் நிர்வாக அலுவலகங்களும், புதிய குடியிருப்புப்பகுதிகளும் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. திட்டமிட்டு அமைக்கப்பட்ட தியாகராய நகர் குடியிருப்புப்பகுதி அண்ணாசாலைக்கு மேற்கே அமைந்துள்ளது. இதற்கு மேற்கேயுள்ள அசோக் நகரும் திட்டமிட்டு அமைக்கப்பட்ட புதிய குடியிருப்பாகும்.

கிண்டி (Guindy) அண்ணாசாலையின் இருபுறத்திலும் அமைந்திருக்கிறது. இங்கு, அரசு கட்டடங்களும், கல்லூரிகளும், தொழிற்சாலைகளும் அமைந்திருக்கின்றன.

சென்னைநகரின் மேற்கு விளிம்பில் புதிய குடியிருப்புகள் காணப்படுகின்றன. இங்கு, கோடம்பாக்கம் அதிக நெருக்கமுடையதாக இருக்கிறது. காரணம் இங்குத்திரைப்படத் தொழில் வளர்ச்சி பெற்றிருப்பதுதான். அதற்கு மேற்கே புதிய குடியிருப்புகள் தோன்றியுள்ளன.

சென்னையின் வடக்குப்பகுதியில் பூவிருந்தமல்லிநெடுஞ்சாலைதான் (Poonamalle Highroad) பொது நிர்வாகத்திற்கு மையமாக விளங்குகிறது. இச்சாலையின் இருபுறத்திலும் பள்ளிகள், கல்லூரிகள், நூலகங்கள், மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் ஆகியவை அமைந்திருக்கின்றன. பூந்தமல்லி சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் வடக்கே புரசைவாக்கம் உள்ளது. இது ஒரு பழைய குடியிருப்புப்பகுதியாகும். இதற்கு மேலும் வடக்கே தொழிற்சாலைப்பகுதிகள் காணப்படுகின்றன. இங்குதான் பகிங்காம் கர்னாடிக் ஆலையும் (Buckingham and carnatic mills) பெரம்பூர் ரெயில்பெட்டித் தொழிற்சாலையும் அமைந்திருக்கிறது. சென்னையின் மேற்கே பூவிருந்தமல்லி நெடுஞ்சாலைக்கு வடக்கில் ஷெனாய் நகர், (shenoy nagar) அண்ணாநகர் போன்ற புதிய குடியிருப்புப் பகுதிகள் காணப்படுகின்றன.

ஒரு நகரம் வளர்ச்சியடையும் போது சில நிலப்பயன்பாட்டு அமைப்புகளும் கட்டடங்களும் மற்றப்பகுதியினின்று பிரிந்து விலகி அமைகின்றன. வேறு சில அமைப்புகளும் ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்துவிடுகின்றன. உதாரணமாக, நகரின் மையப்பகுதியில் நெருக்கம் அதிகமாகும்போது குடியிருக்கும் பகுதிகள் சிறிது சிறிதாகப் புறநகர் (suburban) பகுதியில் வளர்ச்சியடைகின்றன. புதிய காலனிகள் நகரின் விளிம்புகளில் தோன்று

கின்றன. சென்னையில் அண்ணாநகர், அசோக் நகர், இந்திரா நகர், அம்பேத்கார் நகர் போன்றவை புதிதாகத் தோன்றியிருக்கும் குடியிருப்புப் பகுதிகளாகும். நகரத்துக்குள் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்ட பின்னரே இத்தகைய குடியிருப்புப்பகுதிகள் வளர்ச்சியடைகின்றன. ஆனால், வியாபாரம் மற்றும் மையப் பணிகள் (central services) நடைபெறும் பகுதிகள் மட்டும் நகரின் மையப்பகுதியில்தான் குழுமியிருக்கின்றன. இங்கு நிலத்தின் மதிப்பு உயர்வாக இருக்கிறது. மேலும், கட்டடங்களுக்கு வாடகையும் அதிகம். இதைத்தவிர, இங்கு நெருக்கமும் அதிகமாகக் காணப்படுகிறது. எனினும், மையப்பணிகளுக்கும், வாணிகத்திற்கும் நகரத்தின் மையம் சிறந்த இடமாக இருப்பதால், இவை ஒரே இடத்தில் அதாவது மையப்பகுதியில் குழுமிக்காணப் படுகின்றன.

நகரில் செல்வர்களின் வீடுகள் காற்று வசதி உள்ளதும் வெள்ளத்தால் பாதிக்கப்படாமலும், இயற்கைக் காட்சிகள் நிறைந்தவையுமான மேட்டுத்தலங்களில்தான் பொதுவாக இருக்கின்றன. இவை, தொழிற்சாலை, ரெயில்பாதை, துறைமுகம் ஆகிய பகுதிகளை விட்டு வெகு தொலைவில் அமைகின்றன. அதே சமயத்தில் ஏழைகளின் குடியிருப்புகள் மட்டும் நகரின் மையப் பகுதியில் சுகாதாரமற்ற பகுதிகளில் காணப்படுகின்றன.

நகரத்தின் மண்டலங்கள் (urban zones)

மையப்பகுதி (core)

பெரிய நகரம் வளர்ச்சி பெறும்போது நாளடைவில் அதன் மையப்பகுதியும் வளர்ச்சியடைகிறது. அதைத்தொடர்ந்து மையப்பகுதியைச் சுற்றிலும் இருக்கும் குடியிருப்புப் பகுதிகள் மையப்பணி பகுதிகளாக மாறிவிடுகின்றன. கடைகளுக்குக் கட்டடங்களின் முன்பகுதியே தேவைப்படுகிறது. எனவே, கடைகள் அமைப்பதற்காகச் சாலையைப் பார்த்தவண்ணம் கட்டடங்களின் அமைப்பு மாற்றப்படுகிறது. வியாபாரத்திற்கு ஏற்றவாறு கிடங்குகளும், அலுவலகங்களும் அமைக்கப்படுகின்றன. ஆனால், சிற்றுண்டிச்சாலைகள், மருத்துவ மனைகள், அலுவலகங்கள் போன்றவை நகரின் மையப்பகுதியில் அமையவேண்டிய அவசியமில்லையாதலால், அவை சற்று விலகியே அமைகின்றன. எல்லா நகரங்களிலும் மையப்பகுதிக்கு ஒரு தனித்தன்மை காணப்படுகிறது. சில சமயம் சிறப்புப் பெயர்களும் வழங்கப் படுகின்றன. சில நகரங்களின் மையப்பகுதியின் இருப்பிடத்தின் அடிப்படையில் அதற்குப் பெயர் சூட்டப்படுகிறது. உதாரண

மாக லண்டன் நகரின் மையப்பகுதி அந்நகரின் மேற்குப்பகுதியில் அமைந்திருப்பதால் அதற்கு மேற்குமுனை (West End) என்ற பெயர் வழக்கத்திற்கு வந்தது. அதேபோல் பியுனஸ் அயர்ஸ் (Buenos Aires) நகரின் மையப்பகுதி நகரின் மையத்தில் அமைந்திருப்பதால் அது சென்ரோ (Centro) என்று அழைக்கப்படுகிறது. சில நகரங்களில் மையப்பகுதியின் வடிவத்தின் அடிப்படையிலும் பெயர் சூட்டப்படுகிறது. சிகாகோ (Chicago) நகரின் மையப் பகுதி வளைய வடிவத்தில் இருப்பதால் அது வளைய மையப்பகுதி (Loop) என்றும், சா பாலோவின் (Sao Paulo) மையப்பகுதி முக்கோண வடிவத்திலிருப்பதால் அது முக்கோண மையப்பகுதி என்றும் அழைக்கப்படுகிறது. மேலைநாடுகளில் மையப்பகுதி பொதுவாக டவுன் டவுன் (Down town) என்று அழைக்கப்படு கிறது. மையப்பகுதியில் ஒவ்வொரு பணிக்கும் குறிப்பிட்ட பகுதிகள் ஒதுக்கப்படுகின்றன. உதாரணமாகச் சென்னை நகரில் பிராட்வே (ஜார்ஜ் டவுன்) மையப்பகுதியாக இருக்கிறது. இப் பகுதியில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தெரு சிறப்பிடம் வகிக் கிறது. உதாரணமாக இருப்புக்கம்பி, இருப்புத்தூண் ஆகிய பொருள்களுக்கு செம்புதாஸ் (Sembudas) தெருவும், ஆபரணங் களுக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தெருவும், மொத்த ஜவுளி விற்பனைக்குக் கிடங்குத் தெருவும் (Godown Street) காகிதம், நோட்டுப் புத்தகம் ஆகிய பொருள்களுக்கு ஆண்டர்ஸன் (Ander son) தெரு, மலையப்பெருமாள்தெரு ஆகிய இரண்டும், விவசாயக் கருவிகள், மோட்டார்கள், குழாய்கள் ஆகியவற்றிற்கு தம்புச் செட்டித் தெருவும், மருந்து, இரசாயனப் பொருள்களுக்கு நாராயணமுதலி தெருவும், வர்ணம் வார்னீஷ் ஆகிய பொருள் களுக்கு வெங்கடாசல முதலி தெருவும், கண்ணாடிச் சாமான் களுக்கு தேவராஜ முதலி தெருவும் சிறப்பிடம் வகிக்கின்றன. நகர மையத்தில் சிறப்பு அங்காடிகளும், பொழுது போக்குக் கலை அரங்கங்களும் நிறைந்திருப்பதால், மேலைநாடுகளில் இப் பகுதி டவுன் டவுன் (Down town) எனப்படுகிறது. இதே மையப் பகுதியை அமெரிக்காவில் மத்திய வியாபார வட்டம் (Central Business District) என்று அழைக்கிறார்கள். மத்திய வியாபார வட்டம் என்பது நகரத்தின் வாணிக மையமாகவும், மூலக்கரு வாகவும் கருதப்படுகிறது. இங்குச் சில்லறை வியாபாரங்களும் (retail business) தனியார் தொழில்களும், வேறு பல பணிகளும் காணப்படுகின்றன. பிரிட்டனில் இதனை மையப்பகுதி (Central Area) என்று அழைக்கிறார்கள்.

மத்திய வியாபார வட்டம் (CBD) அல்லது மையப்பகுதி (Central Area)யில் வியாபாரத்தை மையமாகக் கொண்ட

தெருக்கள் உள்ளன. இதில் மிகப் பழைய தொழில்கள் நடை பெற்று வருகின்றன. வியாபாரத்தையே மையமாகக் கொண்ட இப்பகுதியில் குடியிருப்பு வீடுகளும் சில இடங்களில் காணப்படு கின்றன. இவற்றில் மையப்பணியில் ஈடுபட்டிருக்கும் மக்களும், மற்றத் தொழிலாளர்களும் வசிக்கிறார்கள். பெரும்பாலும் இந்த மத்திய வியாபார வட்டந்தான் முதன் முதலில் நகரம் தோன்றும் போது இருந்த மூலக்கருவாகும். எனவே, நகரம் தோன்றுவ தற்கு முன்பே இப்பகுதி தோன்றிவிடுகிறது. பிரிட்டனில் காணப்படும் மையப்பகுதிகள் ரெயில்பாதை அமைப்பதற்கு முன்னரே இருந்து வருகின்றவையாகும். மையப்பகுதியில் அமை யும் பணிகளுடன் சில துணைப் பணிகளும் இணைந்து அமை கின்றன. இவை இரண்டும் ஒரே தலத்தில் அமைவதற்குக் கார ணம் இவை ஒன்றுக்கொன்று தொடர்புடைய பணிகளைச் செய் வதுதான். மையப்பகுதிகளின் விளிம்பில் வீடுகளும், தொழிற் சாலைகளும் ஒன்றோடு ஒன்று கலந்து காணப்படுகின்றன.

மத்திய வியாபார வட்டத்தின் தன்மைகள் :

மத்திய வியாபாரப் பகுதிதான் மக்களால் மிக எளிதில் அணு கக்கூடிய பகுதியாகும். நகரத்தின் பல பகுதிகளிலிருந்து சாலை களும், ரெயில் பாதைகளும் இங்கு வந்து கூடுவதால் போக்கு வரத்து வசதிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இங்கு, பேருந்து நிலையங்களும், ரெயில் நிலையங்களும், சில நகரங்களில் விமான தளங்களும் காணப்படுகின்றன. இப்போக்குவரத்து வசதிகள்தாம் வாணிகத்திற்கு மிகவும் இன்றியமையாதவை யாகும். முக்கிய கடைவீதிகளில் மக்கள் கூட்டம் அதிகமாக வந்துபோவதால் இவ்வீதிகளில் பல சிறப்பு அங்காடிகள் உள்ளன. ஆனால், புததகக்கடை (book stall) போன்றவை மக்களுக்கு அதிக அளவில் தேவைப்படுவதில்லை; ஆகையால் முக்கிய கடை வீதியை விட்டு விலகியே அவை அமைந்திருக் கின்றன. புத்தகக் கடைகளுக்கு அதிக வாடகையைத் தர இயலாது; அவை வாடகை அதிகமுள்ள பெரிய கடைவீதியை விட்டு விலகி, அமைந்துள்ளன. நகைக்கடை, ஜவுளிக்கடை, கலைப்பொருள் அங்காடி, மரச்சாமான்கடை, ஆகிய சிறப்பு அங் காடிகளுக்கு வாடிக்கையாளர்கள் இருப்பதால் அவர்களைக் கவர் வதற்காக இவை அலங்கரிக்கப்பட்டு பெரிய கடைவீதிக்கு மிக அருகிலேயே அமைந்திருக்கின்றன. சிற்றுண்டி விடுதிகள், முடி வெட்டும் கடை, (Hair cutting saloon), நாளிதழ் கடை, ஆகியவை மையப்பகுதிகளுக்குப் பொருந்தாதவை என்றாலும் வேறு வியாபாரத்திற்காக நகர மையத்திற்கு வரும் மக்களுக்குச்

சேவை செய்ய அவை அங்கு அமைந்திருக்கின்றன. வாடகைச் சிக்கனத்திற்காக அவை பெரிய கடைவீதிகளை விட்டுச் சற்று விலகி அமைந்திருக்கின்றன. வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக வங்கி, பெரிய அலுவலகங்கள் ஆகியவையும் மையப்பகுதியில் அமைந்திருக்கின்றன. அலுவலகத்திற்குத் தேவையான மற்றப் பொருள்களும் சேவையும் இம் மையப்பகுதியில் எளிதில் கிடைக்கின்றன.

மையப்பகுதியின் மூவளவைக் கூறுகள் :
(Three dimensional qualities of city centre)

நகர மையப்பகுதியில் நிலத்தின் மதிப்பு மிக அதிகமாக இருப்பதால், கூடியமட்டும் அதிக அளவிற்கு அது பயன்படுத்தப்படுகிறது. எனவே, சிறிய இடத்திலும் கட்டடங்கள் மிக நெருக்கமாகக் கட்டப்படுகின்றன. மையப்பகுதிக்குள்ளேயே இருக்க வேண்டுமாதலாலும், விரிவடைவதற்கு இடம்இல்லாமையாலும், உயரத்தில்தான் கட்டடங்கள் வளர்ச்சி அடைய வேண்டியிருக்கின்றன. எனவே, பல அடுக்குகளில் (multi storied) அவை கட்டப்படுகின்றன. இதனால், நகர மையத்தின் கட்டமைப்பில் நீள அகலத்தைத் தவிர உயரமும் உள்ளது. எனவே, நகர மையம் மூவளவைக் கூறுகளைக் கொண்டிருக்கிறது. நகரின் மையத்திலிருந்து விளிம்பை நோக்கி வாடகை குறைந்துகொண்டே போகிறது. 1900 ஆம் ஆண்டிற்குப்பின் இரும்பைக் கட்டடங்களுக்குப் பயன்படுத்தத் தொடங்கியதிலிருந்துதான் பல மாடிக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. விசைத் தூக்கிகளைப் (lift) பயன்படுத்தத் தொடங்கியபின் அவை மேலும் உயரமாகக் கட்டப்படுகின்றன, நகரங்களில் பல மாடிக் கட்டடங்கள் கட்டப்படுவதால் பலருக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுகிறது. பல்வேறு பணிகளை (multi functions) ஒரு சிறிய கட்டடத்தில் காணமுடிகிறது. உதாரணமாக, பெரிய ஓட்டல்களில் மேல் அடுக்குகளில் தங்கும் அறைகளும், கீழ் அடுக்குகளில் அலுவலகங்களும், கடைகளும் காணப்படுகின்றன.

நகரின் மையத்திலிருந்து விளிம்பை (fringe) நோக்கி வாடகை குறைந்துகொண்டே போவதைப்போல் பல மாடிக் கட்டிடங்களின் கீழ் அடுக்கிலிருந்து மேல் அடுக்குகளுக்குச் செல்லச் செல்ல வாடகை குறைந்துகொண்டு வருகிறது.

நகரின் மையப்பகுதியில், வசிக்கும் வீடுகள் காணப்படுவதில்லை. நகரின் மையப்பகுதியில் அங்காடிகளும், அலுவலகங்களும் பெருகிய பின்பு தொடக்கத்தில் மையத்தில் வசித்து வந்த

மக்கள் நகரத்திற்குள் போக்குவரத்து வசதிகள் பெருகியதால் சிறிது சிறிதாக மையத்தைவிட்டு விலகி, விளிம்பை நோக்கிக் குடியேறினர். மையத்தின் விளிம்புகளில் பழைய வீடுகளும், சேரிகளுமே காணப்படுகின்றன.

நகரின் மையப்பகுதியில் அலுவலகங்களும், வாணிகமும் பகலில் மட்டும் குறிப்பிட்ட நேரங்களில் இயங்குவதால், இங்கு பகலில் மனித நடமாட்டம் அதிகமாகக்காணப்படுகிறது. ஆனால், இரவில் இப்பகுதி ஓய்ந்து காணப்படுகிறது. மேலும் வசிக்கும் வீடுகள் இங்கு இல்லாததால் மனித நடமாட்டமின்றி வெற்றிடமாக இது காட்சியளிக்கிறது. பகலில் சுறுசுறுப்பாக இயங்கும் இப்பகுதிகளுக்கு வருகின்ற வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே இருப்பதால் இங்குச்சாலைகளில் நெருக்கம் அதிகமாகி விடுகிறது. எனவே, சில இடங்களைக் கடப்பதற்கு பல மணி நேரம்கூட ஆவதுண்டு. வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அவைகளை நிறுத்தி வைப்பதற்கு இடம் போதாமல் மிகவும் மதிப்பு வாய்ந்த மையப் பகுதியின் இடங்களைக் கார்களை நிறுத்துவதற்காக ஒதுக்க வேண்டியிருக்கிறது.

மையப்பகுதியில் தொழிற்சாலைகள் எதுவும் இல்லையென்றாலும், பழைய சிறு தொழில்கள் சில இன்னும் காணப்படுகின்றன. செய்திகளைச் சேகரிப்பதற்கும், அவற்றை அனுப்புவதற்கும் நல்ல போக்குவரத்து வசதிகளும் மற்ற வசதிகளும் இருப்பதால் அச்சுத் தொழில், நாளிதழ் வெளியிடுவது போன்ற தொழில்கள் மையப்பகுதியில் காணப்படுகின்றன. மேலும், பொழுதுபோக்குக் கலையரங்கங்கள், திரைப்பட அரங்குகள் போன்றவைகளும் இங்கேதான் அமைந்திருக்கின்றன. ஒரு திரையரங்கு நிரம்பிவிட்டால், திரும்புகின்ற கூட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள, வேறு பல அரங்குகள் அருகிலேயே கட்டப்படுகின்றன. இவ்விதமே ஒரே பகுதியில் பல அரங்குங்கள் காணப்படுகின்றன. பெரிய கட்டடங்கள் சிறப்புத் தன்மை பெற்றிருப்பதால் அவற்றைக் கட்டும்போது கட்டடக் கலையில் ஆர்வம் காட்டி நவீன முறையில் கட்டப்படுகின்றன.

நகரின் மையப்பகுதியை வரையறுத்தல் :
(Delimiting the Central Business District)

விலைமதிப்பு அதிகமுடைய மையப்பகுதியில், உயர்ந்த கட்டடங்களில் அலுவலகங்களும், சில்லறை அங்காடிகளும் அதிக அள

வில் காணப்படுகின்றன. பார்த்தலோமியா (Bartholomew) வின் கூற்றுப்படி மையப்பகுதி என்பது வரையறுக்க இயலாத ஒரு பகுதியாகும். ஆனால் இக்கூற்று முழுவதுமாக ஒப்புக் கொள்ளப்படுவதில்லை.

மையப்பகுதி என்பது ஒரு பிரதேசத்திற்குரிய (region) தன்மைகள் எல்லாவற்றையும் கொண்ட பகுதியாகும். இதற்கென்று கரு (Core) ஒன்று உள்ளது. இதில் அப்பிரதேசத்திற்குரிய தன்மைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இதற்குக் குறிப்பிட்ட எல்லைகள் உள்ளன. இவ்வெல்லைகள் மாறக்கூடியதாகவும் இருக்கின்றன.

மையப்பகுதி என்றால் என்ன என்பதுபற்றி நெடுநாட்களாகவே விவாதங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. அவற்றின் பயனாகக் கிடைத்த விவாதங்கள் யாவும் விஞ்ஞானரீதியாக அன்றி, நிலப்பயன்பாட்டு மேப்புகளை (Land use maps) பரிசீலித்து அறிந்ததன் அடிப்படையில் எழுந்தவையாகும்.

R. E. மர்பி (Murphy) என்பவரும் J. E. வான்ஸ் (Vance) என்பவரும் மத்திய வியாபார வட்டம் என்றால் என்ன என்பது பற்றி ஆராய முற்பட்டனர். அவர்கள் இப்பகுதியை விளக்குவதற்காகவும், இதன் எல்லையை வரையறுப்பதற்காகவும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். சில உள்நாட்டு முறைகளால் மையப்பகுதியின் எல்லைகளைக் கோடுகளின் மூலம் வரையறுத்தனர். மத்திய வியாபார வட்டத்தை வரையறுப்பதற்குப் பல முறைகள் கையாளப்பட்டன. அம்முறைகளில் பொதுவாகக் கையாளப்பட்டவை பின்வருமாறு :

(1) மக்கள் தொகையைப் புள்ளி விவரத்தின் அடிப்படையில் வரையறுத்தல் :

மத்திய வியாபாரப் பகுதியில் மக்கள் பகலில் மட்டும் வந்து போவதால், மக்கள்தொகை பரவலின் அடிப்படையில் நகரத்தின் மையப்பகுதியின் எல்லை வரையறுக்கப்படுகிறது. இதே போல் அலுவலகங்களிலும், சில்லறை வியாபாரக் கடைகளிலும் பணிபுரியும் மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் இது வரையறுக்கப்படுகிறது.

மையப்பகுதியிலுள்ள சாலைகளில் காணப்படும் பாதசாரிகளின் (Pedestrians) எண்ணிக்கை, போக்குவரத்து வாகனங்

களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் மையப் பகுதி வரையறுக்கப்படுகிறது. ஏனெனில், மையப்பகுதியில் பணிகள் நடைபெறுவதற்கு பாதசாரிகள் வந்து போவது மிகவும் அவசியமாகிறது.

(2) நிலமதிப்பின் அடிப்படையில் வரையறுத்துதல் :

நகர மையத்திலிருந்து விளிம்பை நோக்கிச் செல்லும்போது நிலத்தின் மதிப்புக் குறைந்துகொண்டே போகிறது. எனவே, நிலமதிப்பின் அடிப்படையிலும் மத்திய வியாபாரப்பகுதி வரை யறுக்கப்படுகிறது. ஏனெனில், இதற்கு அப்பாலுள்ள பகுதியில் நிலத்தின் மதிப்பு வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது. மையப்பகுதியில் இருக்கவேண்டும் என்பதற்காக எல்லா அலுவல கங்களும் அங்கேயே அமைக்கப்படுவதால் நிலத்தின் மதிப்பு உயர்ந்துவிடுகிறது. அது மட்டுமின்றி நிலத்தின் மதிப்பு அதிக மாக இருக்கின்ற பகுதிகளில் இட நெருக்கடியால் கட்டடங்கள் உயரமாகக் கட்டப்படுகின்றன. எனவே, நிலத்தின் மதிப் பிற்கும், கட்டடங்களின் உயரத்திற்கும் தொடர்பு இருக்கிறது. நகர மையத்தை நோக்கிச் செல்லச் செல்ல கட்டடங்களின் உயரமும் குறைந்துகொண்டே வருகிறது. எனவே, மையத்தை அடுத்த பகுதிகளில் நிலத்தின் மதிப்புத் திடீரென்று குறை வதால் இதையே நகர மையத்தை வரையறுப்பதற்கு அடிப்படை யாகக் கொள்ளலாம்.

(3) வாடகையின் அடிப்படையில் வரையறுத்துதல் :

நிலத்தின் மதிப்பை எடுத்துக்காட்டும் புள்ளி விவரம் கிடைக் காமற் போனால், வாடகையை அடிப்படையாகக்கொண்டு மையப்பகுதியை வரையறுக்கலாம். சாலைகள், தெருக்கள் ஆகியவற்றின் இருபுறங்களிலும் உள்ள கட்டடங்களில் வாடகை, அந்தக் கட்டடங்கள் அமைந்துள்ள நிலத்தின் மதிப்பு அதிகமாக இருப்பதால், கட்டடங்களில் வாடகையும் அதிகமாக இருக் கிறது. இதுவும் மையத்தைவிட்டு அப்பாலுள்ள பகுதியில் திடீ ரென்று குறைகிறது. எனவே, மையத்தை வரையறுப்பதற்கு இது அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.

இதேபோல் நகர்ப்புற நிலவரி (urban land tax) சொத்துவரி (property tax) ஆகியவற்றின் அடிப்படையிலும் மையப் பகுதியை பிரித்தறியலாம்.

(4) நிலப்பயன்பாட்டின் அடிப்படையில் வரையறுத்துதல் :

நிலப்பயன்பாட்டின் அடிப்படையில் நிலத்தின் மதிப்பும் வாடகையும் அதிகரிக்கிறது. எனவே, நிலப்பயன்பாட்டின் அடிப்படையிலேயும் மையத்தை வரையறுக்க முடியும்.

(5) நிறுவனங்களின் அடிப்படையில் வரையறுத்துதல் :

சில சமயங்களில் நிறுவனங்களின் அடிப்படையிலும் மத்திய வியாபாரப் பகுதியை வரையறுப்பதுண்டு. அத்தகைய நிறுவனங்கள் மத்திய வியாபார வட்டத்தின் எல்லைகளில் மட்டுமே அமைந்திருப்பதாகக் கருதப்படுவதால், அவற்றின் மூலம் மையப்பகுதியை வரையறுக்க முடிகிறது. உதாரணமாக, சிறப் பங்காடிகள் (Super markets), மோட்டார் விற்பனை நிலையங்கள் (automobile show rooms), பெட்ரோல் பங்குகள், மேஜை, நாற்காலி ஆகியவை செய்யுமிடங்கள் போன்றவை மத்திய வியாபார வட்டத்தின் எல்லை அருகில் அமைந்திருக்கின்றன. இவற்றின் மூலமாகவும் மையப்பகுதியின் எல்லையைக் குறிக்க முடிகிறது.

நகர மையத்தின் வெளிப்புறம் : (integument)

நகர வளர்ச்சியில் படிப்படியாக ஏற்படும் மாறுதல்களின் விளைவாக மையப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதியில், பல புதிய பண்புகள் ஏற்படுகின்றன. நகரமானது வளர்ச்சியடையும் போது நகரை நோக்கியும், நகரத்தைவிட்டு விலகியும் பல இயக்கங்கள் நடைபெறுகின்றன. இவற்றின் ஒவ்வொரு நிலையிலும் புதிய அமைப்புகள் தோன்றுகின்றன. புதிய கட்டடங்களைக் கட்டுதலும், பழைய கட்டடங்களைப் புதுப்பித்தலும் தொடர்ந்து நடைபெறுகின்றன. எனவே, மையத்திற்கு வெகு அருகில் அமைந்துள்ள பகுதி விரைவில் மாற்றத்திற்குள்ளாகிறது. இங்கு, தொழிற்சாலைப் பகுதியும், குடியிருப்புப்பகுதியும் கலந்து காணப்படுகிறது. சிலவற்றில் வியாபாரப் பகுதியும் ஊடுருவிக் காணப்படுகிறது. இங்குச் சிறு தொழில்கள், ஆபரண அங்காடிகள், ஜவுளிக்கடைகள் போன்றவை காணப்படுகின்றன.

நகரின் கட்டமைப்பு (urban structure):

நகரின் உருவவியல் அல்லது கட்டமைப்பு என்பது பொதுவாக நிலப்பயன்பாட்டு (land use) அமைப்பையே குறிக்கிறது. நகரத்தின் ஒவ்வொரு பகுதியும், குறிப்பிட்ட ஒரு பணிக்காக

ஒதுக்கப்படுகிறது: நகரின் மையப்பகுதி, தொழிற்சாலைகள் பழைய புதிய குடியிருப்புகள் ஆகியவை குறிப்பிட்ட ஒரு பகுதியில்தான் அமைகின்றன. இவை, அமைகின்ற பகுதிகளைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இவைகளில் மைய வட்டக் கொள்கை (The concentric Theory),) வட்டக் கோணப்பகுதிக் கொள்கை (The Sector Theory), பல் மூலக்கரு கொள்கை (The Multiple Nuclei Theory) ஆகியவை முக்கியமானவையாகும்.

ஒரு மையவட்டக் கொள்கை.

இக் கொள்கையை E. W. பர்கெஸ் (Burgess) என்பவர் 1923ஆம் ஆண்டு வெளியிட்டார். இக்கொள்கையின்படி, ஒவ்வொரு பணிக்காகவும் இயங்கிவரும் பகுதிகள் ஒரே மையமுள்ள வட்டங்களின் அமைப்பைக் (concentric circles) கொண்டுள்ளன. இந்த ஒரு மையவட்ட மண்டலங்கள் (concentric



படம் : 57 ஒரு மையவட்டக் கொள்கை

1. மத்திய வியாபார வட்டம்
2. மென் ரகத் தொழிற்சாலைகள்
3. ஏழை வகுப்பினரின் வீடுகள்
4. நடுத்தர வகுப்பினரின் வீடுகள்
5. உயர்தர வகுப்பினரின் வீடுகள்
10. அன்றாடம் நகருக்குச் சென்று வருபவர்கள் வசிக்கும் பகுதி

zones) நகரின் மையத்திலிருந்து விளிம்பை நோக்கி வளர்ச்சியடைகின்றன. மையத்தில் மத்திய வியாபார வட்டம் அமைந்துள்ளது. இதனைச் சுற்றியுள்ள இரண்டாவது மண்டலம் நிலை மாறுபடுகின்ற மண்டலமாகும் (Transitional zone). இதில் பழைய வீடுகளெல்லாம் மாறி அலுவலகங்களும், மென்ரக தொழிற்சாலைகளும் (light industries) தோன்றியுள்ளன. இங்குத்தான் புதிதாகக் குடியேறிய மக்கள் (immigrants) மிக அதிகமாக வசிக்கின்றனர். இங்கு நிலையான சமூக அமைப்பு (Stable social group) காணப்படுவதில்லை. மூன்றாவதாக உள்ள வட்ட மண்டலத்தில் தொழிலாளர்களின் வீடுகள் காணப்படுகின்றன. இவை பழமையான தோற்றம் கொண்டவை. இங்குச் சமூக அமைப்பு நிலையாகக் காணப்படுகிறது. இப்பகுதியில் பெரும்பாலும் தொழிலாளர்களே வசிக்கின்றனர். நான்காவது வட்டத்தில் நடுத்தர வகுப்பினர் (middle class) வசிக்கின்றனர். இங்கு வீடுகள் புதிதாகவும், விசாலமாகவும் (Spacious) அமைந்திருக்கின்றன. ஐந்தாவது மண்டலம் நகரக் கட்டடப் பகுதிகளுக்கு அப்பால் அமைந்துள்ளதாகும். நகரின் மையப்பகுதியில் வேலை பார்ப்பவர்கள் கணிசமான அளவில் இங்கு வசிக்கின்றனர். மையத்திலிருந்து இங்கு வந்து சேருவதற்குச் சுமாராக ஒரு மணி நேரமாவது ஆகிறது. இப்பகுதியில் திறந்த வெளிகளே நிறைந்துள்ளன. இம்மண்டலத்தில் ஆங்காங்கே காணப்படும் குடியிருப்புகள் செயலற்ற (dormitory) குடியிருப்புகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. சிகாகோவில் (Chicago) இந்த அமைப்புக் காணப்படுகிறது.

பர்கெஸ் (Burgess) தம்முடைய ஒரே மைய வட்டக்கொள்கையில் நில அமைப்பைப் புறக்கணித்து இருக்கிறார்.* நில அமைப்பு (topography) ஒரே சீராக இருந்தால்தான் இந்த வட்ட மண்டலங்கள் ஏற்படக்கூடும். இதுதவிர ஒரே மண்டலத்தில்கூட சமூகப் பொருளாதாரத் தன்மைகளால் மாறுபாடுகள் காணக்கூடும்.

பல நகரங்கள் வட்ட மண்டல அமைப்புக்குப் பதிலாக நட்சத்திர வடிவத்தையே கொண்டிருக்கின்றன. நகர மையத்திலிருந்து விளிம்பை நோக்கிச் செல்லுகின்ற சாலைகளின் ஓரங்களில் கட்டடங்கள் வளர்ச்சி பெற்றிருப்பதால்தான், நட்சத்திர வடிவம் தோன்றுகிறது. உதாரணமாக வாஷிங்டன் (Washington) நகரம் நட்சத்திர அமைப்பையே கொண்டிருக்கிறது. இங்கு நகரத்தின் மையத்தைச் சுற்றி நிலப்பயன்பாட்டு மண்டலங்கள்

தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் ஆங்காங்கு திட்டுத் திட்டாகக் காணப்படுகின்றன. மையத்திலிருந்து எல்லாத் திசைகளிலும் ஒரே தூரத்தில் அவை அமைந்திருக்கின்றன. எனவே இவை வட்ட மண்டலங்களாக அமைந்துள்ளன.



படம் : 58 : வட்டகோண பகுதிக்கொள்கை

1. மத்திய வியாபார வட்டம்
2. மென்ரகத் தொழிற்சாலைகள்
3. ஏழை வகுப்பினரின் வீடுகள்
4. நடுத்தர வகுப்பினரின் வீடுகள்
5. உயர்தர வகுப்பினரின் வீடுகள்

வட்டக்கோணப் பகுதிக் கொள்கை (The Sector Theory) :

ஹோமர் ஹொய்ட் (Homer Hoyt) என்பவர் 1939 ஆம் ஆண்டில் இக்கொள்கையை வெளியிட்டார். நகரின் மையத்தில் நிலப்பயன்பாட்டில் ஒரு முறை வேறுபாடு தோன்றிவிட்டால், நகரம் விரிவடைய விரிவடைய இந்த வேறுபாடு விளிம்பு (fringe) வரை தொடர்ந்து வளர்ச்சியடைந்து விடுகிறது. இதன் விளைவாகப் பல குறிப்பிட்ட நிலப் பயன்பாட்டுப் பகுதி வட்டங்கள் (Sectors of landuse) மையத்திலிருந்து முக்கிய சாலைகளின் வழியாக வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றன. இக் கொள்கை

யில் நகரத்தின் போக்குவரத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப் பட்டுள்ளது. வசிக்கும் வீடுகளின் அமைப்புக்கு இக் கொள்கை பொருத்தமாக இருக்கிறது. உதாரணமாக உயர்தர வகுப்பின ரின் வீடுகள் (high class residence) நகரின் ஒரு திசையில் ஒரு முறை அமைந்துவிட்டால் அதே திசையில்தான் அது எதிர் காலத்திலும் வளர்ச்சியடைகிறது. இது ஒரு மைய வட்டக் கொள்கையிலிருந்து திருத்தி அமைக்கப்பட்டதாகும்.

பல் மூலக்கரு கொள்கை (the nultiple maclei theory) :

ஹாரிஸ் (Harris), அல்மன் (Ullman) ஆகிய அறிஞர்கள் 1945 ஆம் ஆண்டு இக்கொள்கையை வெளியிட்டனர். இக் கொள்கையின்படி ஒரு நகரத்தில் பல (Cellular) பகுதிகள் காணப்படுகின்றன. இதில் ஒவ்வொரு நிலப் பயன்பாட்டிற்காக ஒரு மூலக்கருவைச் (nucleus) சுற்றி வளர்ச்சி பெறுகிறது. சில பணிகளுக்கு விசேஷ தலம் (site) அல்லது மனித ஈடுபாடு தேவைப்படுகிறது. மையக்கரு உருவாவதற்குச் சில சூழ்நிலைகள் காணப்படுகின்றன. நகர வியாபார வட்டம் நகரத்தின் மையத்தில் அமைந்திருக்கிறது. இங்குப் போக்குவரத்து வசதி உச்ச அளவில் காணப்படுகிறது. உதாரணமாக ஜவுளிக் கடைகள் மையப்பகுதியில் ஒரே இடத்தில் குழுமியிருக்கின்றன. இதற்குக் காரணம், அது ஜவுளித் தேவைக்காக மக்கள் தேடி வருகின்ற இடமாக இருக்கிறது. உதாரணமாக மொத்த ஜவுளி விற்பனை சிறப்புப் பணியாக இருக்கின்ற சென்னை கிடங்குத் தெருவில் (Godown street) ஜவுளிக்கடைகள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. துணிகளை வாங்குவதற்கு வியாபாரி கள் இங்கு வருவதால் வேறு பகுதிகளில் இவை வளர்ச்சி பெறுவ தில்லை. இதேபோல் ரத்தன் பஜாரில் பாய்க்கடைகள் (mats) ஒன் றாகக் குழுமி இருக்கின்றன. கனரகத் (heavy industries) தொழிற் சாலைகளும், உயர்தர (high class) வகுப்பினரின் வீடுகளும் ஒன்றுக் கொன்று நேர் எதிர்த்திசையில் விலகி அமைந்திருக்கின்றன. (படம் 59) தூய்மையை விரும்புவதால் அவர்கள் தொழிற் சாலைப் பகுதிகளில் வசிப்பதில்லை. கடைநிலை வகுப்பினரின் (low class) வீடுகளும் பெரிய கிடங்குகளும் ஒரே பகுதியில் அமைந்திருக்கின்றன. ஏனெனில், வாடகை இங்குக் குறைவாக இருப்பதால் பெரிய கட்டடங்களைக் குறைந்த வாடகைக்கு எடுத்துக்கொள்ள முடிகிறது; அவர்கள் வேலைசெய்யும் இடத் திற்கு அருகாமையில் வசிக்கின்றனர். அதனால் பொருட் செலவும், காலதாமதமும் குறைகிறது. நகரங்களின் உட்பகுதி யில் (Internal) மட்டுந்தான் இக் கொள்கை இயங்கி வருகிறது;



படம் ; 59 பல் மூலக்கரு கொள்கை

1. மத்திய வியாபார வட்டம்
2, மென்ரகத் தொழிற்சாலைகள்
3. ஏழை வகுப்பினரின் வீடுகள்
4. நடுத்தர வகுப்பினரின் வீடுகள்
5. உயர்தர வகுப்பினரின் வீடுகள்
6. கனரகத் தொழிற்சாலைகள்
7. வெளிப்புற வியாபார வட்டம்
8. குடியிருப்புப் புறநகர்
9. தொழிற்சாலைப் புறநகர்

நகரில் காணப்படும் பணிகள் எல்லாம் ஏற்கனவே அமைந்திருந்தவையாதலால் அவை உட்பகுதிச் சூழ்நிலைகளால் நிர்ணயிக்கப்படுகின்றவையேயாகும். எனவே, பல் மூலக்கரு கொள்கை தலத்தையும் (site), நகர வரலாற்றையும் வலியுறுத்துகிறது. ஆனால் பெரிய நகரங்களில் நிலப்பயன்பாடு வரலாற்றினாலோ, தலத்தின் தன்மையாலோ தீர்மானிக்கப்படுகின்றவை அல்ல.

24. இந்திய நகரங்களின் உருவவியல்

இந்திய நகரங்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியான அமைவிடத்தையும், பணியையும் மேற்கொண்டிருக்கின்றன: கோயில் நகரங்களைத் (Temple towns) தவிர, சிறப்பாகக் குறிப்பிடும்படியான நகரங்கள் இங்கு எதுவும் இல்லை. ஒரே நகரத்தில் காணப்பட்ட இயல்புகளே திரும்பத் திரும்ப மற்ற நகரங்களிலும் காணப்படுகின்றன. ஆனால், ரெயில்வே நகரங்கள் (Railway towns) மட்டும் தனித்தன்மை பெற்றிருக்கின்றன. இவை வட அமெரிக்க ரெயில்வே நகரங்களுக்கு இணையாக விளங்குகின்றன: மலைவாசஸ்தலங்களும், இராணுவ நகரங்களும் இந்தியாவுக்குப் புதுமையானவைகளாகும். ஆனால், இவை கூட இங்கு ஒரே மாதிரியான பண்புகளைப் பெற்றிருக்கின்றன. இந்திய நகரங்களில் பொருளாதாரப் பணிக்கு முக்கியத்துவம் தரப்படவில்லையென்றாலும், அவற்றின் அமைவிடத்திற்கும், கட்டமைப்பிற்கும் அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது.

இந்திய நகரங்களுக்கு உரித்தான பண்புகள் :

1. விவசாயப் பண்புகள்

இந்திய நகரங்கள் மக்கள்தொகையின் அடிப்படையில் பாகுபடுத்தப்படுவதால் பெரும்பாலான நகரங்களில் இன்னும் விவசாயப் பண்புகளே காணப்படுகின்றன. சிறிய நகரம் என்பது பெரிய கிராமத்தை விடச் சிறிதளவே பெரிதாக இருக்கிறது. இது தவிர சில உள்ளூர் நிர்வாகப் பணியும் இதில் காணப்படுகிறது. இரண்டு அல்லது மூன்று மையத்தெருக்களும் இங்குமங்கும் நடைபாதைகளும், தெருவிளக்குகளுமே அதற்கு ஒரு நகரின் தோற்றத்தை அளிக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் ஆக்ரா (Agra) போன்ற பெரிய நகரங்களில்கூட, தற்போதும், கால்நடைகளை மேய்க்கின்ற தொழில் காணப்படுகிறது.

2. ஒரே மாதிரியான நிர்வாகப் பணி

இந்திய நகரங்களில் பெரும்பாலானவை நிர்வாகப் பணி புரியும் மையங்களாக இருக்கின்றன. அவை உள்நாட்டு வாணி கத்திற்கு மையமாக விளங்குவதால் மாவட்டத்தின் தலைநகர மாகவும் விளங்குகின்றன. மொகலாயர் காலத்திலிருந்தே பல நகரங்கள் மாவட்டத் தலைநகரங்களாக இருந்து வந்திருக் கின்றன. இந்தியாவிலுள்ள 304 மாவட்டங்களில் 242 மாவட் டங்களுக்கு அவற்றின் தலைநகரங்களின் பெயர்களே சூட்டப் பட்டிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இந்த நகரங் களினிடையேயும் ஒரே அமைப்புதான் காணப்படுகிறது. ஒரே மாதிரி யான அரசு அலுவலகக் கட்டடங்களும், ஒரே மாதிரியான கலை அமைப்புக்கொண்ட பொதுப்பணிக் கட்டடங்களும் இங்குக் காணப்படுகின்றன.

3. கட்டடங்களின் வகைகள்

நகரங்கள் ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டிருந் தாலும், கட்டடங்கள் மட்டும், உள்ளூர் பொருள்களுக்கும் மக்களின் பண்பாட்டிற்கும் தகுந்தாற்போல் மாற்றி அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனாலும், பழங்கால நவீன கட்டடங்களில் சில பண்புகள் ஒரே மாதிரியாக இருக்கின்றன. உதாரணமாக, கடைத்தெருக்களில் காணப்படும் கடைகள், நடைபாதையி லிருந்து இரண்டு அல்லது மூன்றடி உயரத்தில் அமைக்கப்பட்டி ருக்கின்றன. இதேபோல் நகரங்களில் நடுத்தர வகுப்பினரின் வீடுகளில் தெருப்பக்கம் தூண்கள் பொருத்திய திண்ணை (verandah) உள்ளது. கதவருகில் விளக்குவைக்க மாடங்கள் அமைக்கப்படுகின்றன. நவீன காலத்து நகரங்களில் கடைத் தெருவில் கடைகள் கான்கிரீட்டில் கட்டப்பட்டு, பெட்டிகள் போன்று காட்சியளிக்கின்றன. இக்கடைகளில் வீடுகள் சேர்ந்தே காணப்படுகின்றன.

4. வேறுபாடற்ற மையப் பகுதி

மேற்கத்திய நகரங்களைப்போல் இந்திய நகரங்களில் வியா பாரப் பகுதியும், வசிக்கும் பகுதியும் பிரிக்கப்பட்டு இல்லை. இங்கு வியாபாரப் பகுதியிலேயே குடியிருப்புப் பகுதிகளும், தொழிற் சாலைகளும் காணப்படுகின்றன. வாணிகர்கள், கடைகளின் பின் புறத்திலோ அல்லது மாடியிலோ வசிக்கிறார்கள். சில கட்டடங் களில் வியாபாரமும், குடியிருப்பும் ஒரே இடத்தில் காணப்படு

கிறது. உதாரணமாக அடகு பிடிக்கும் (Pownbrokers) கடைகள் வீடுகளிலேயே காணப்படுகின்றன. வியாபாரம், குடியிருப்பு, தொழிற்சாலை ஆகியவைத்தவிர மற்றப் பணிகள்கூட ஒரே இடத்தில் கலந்து காணப்படுவதால் இவற்றைப் பாகுபடுத்துவது கடினமாகும்.

5. வகுப்புப் பிரிவு

இந்திய நகரங்களில் மக்கள் பெரும்பாலும் கிராமத்திலிருந்து குடியேறியிருப்பதால், தங்கள் ஜாதியையும், சமயத்தையும் சார்ந்தவர்களுடன் கூடி வாழ்வதையே விரும்புகிறார்கள். எனவே நகரங்களில் சமயம் அல்லது ஜாதியின் அடிப்படையில் பகுதிகள் காணப்படுகின்றன. உதாரணமாக அகமதாபாத் (Ahmedabad) நகரில் போல் (Pols) இனத்தவரும், பம்பாயில் பார்ஸி (Parsee) இனத்தவரும் சென்னையில் குஜராத்தி இனத்தவரும் (சவுக்கார்பேட்டை) தனிப்பட்ட பகுதிகளிலேயே வசிக்கிறார்கள். கல்கத்தாவில் சீனர்கள் அதிகமாக வசிக்கும் பகுதி சீன நகரம் (China town) என்று அழைக்கப்படுகிறது.

6. மேற்கத்திய பண்பாடுகள்

பெரிய இந்திய நகரங்களில் பொதுவாக இரட்டைப் பகுதிகள் காணப்படுகின்றன. ஒன்றில் இந்திய பாணியிலுள்ள நகர்ப் பகுதியும், மற்றொன்றில் ஐரோப்பிய பாணியில் திட்டமிட்டு அமைக்கப்பட்ட பகுதியும் காணப்படுகிறது. ஐரோப்பியப் பகுதியில் பங்களாக்களும், பெரிய தோட்டங்களும், நீண்ட அகலமான சாலைகளும் காணப்படுகின்றன. இப்பகுதி ரெயில் தண்டவாளத்தினால் பழைய இந்திய நகர்ப்புறத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது. சில நகரங்களில் ரெயில் தண்டவாளங்கள் நகர வளர்ச்சிக்குத் தடையாகவும் இருப்பதுண்டு. இந்தியாவில் பொதுக் குடியிருப்புகளும் (Civil lines). ரெயில்வே குடியிருப்புகளும் (railway colonies) ஐரோப்பியர்களால் ஏற்படுத்தப்பட்டவையாகும். பொதுக் குடியிருப்புகளில் அரசு அதிகாரிகளின் வீடுகளும் உள்ளூர் செல்வர்களின் வீடுகளும் காணப்படுகின்றன. இங்குக் காணப்படும் கட்டடக்கலை ஐரோப்பிய பாணியைத் தழுவியதாகும். வடமேற்கு இந்தியாவைத் தவிர மற்றப் பகுதிகளில் வீடுகளில் புகைப்போக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. சில வீடுகளில் வண்டிகளிலிருந்து மழைக்காலத்தில் இறங்குவதற்கு ஏற்றவாறு நுழைவாயில் மண்டபம் அமைக்கப்

பட்டிருக்கிறது. ரெயில்வே குடியிருப்புகள் பொதுவாக திட்டமிட்டுக் கட்டப்பட்டவையாகும். இங்கு வீடுகள் நீள் வடிவத்தில் (rectilinear) அமைந்திருக்கின்றன. இராணுவக் குடியிருப்பில் இராணுவ வீரர்களுக்குப்பணிபுரிய கடைத்தெரு ஒன்று உள்ளது.

இந்திய நகரத்தில் பொருளாதாரப் பணிகளுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லையென்றாலும், அதன் அமைவிடத்திற்கும், கட்டமைப்பிற்கும் அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. இவற்றில் அடிப்படைத் தரைப்படமோ (layout) அல்லது முதன்மைப் பணியோ காணப்படுவதில்லை. இங்குக் காணப்படும் பழங்காலச் செழிப்பை உணர்த்தும் பாழடைந்த ஒரு கோட்டை அல்லது புறக்கணிக்கப்பட்ட கோயில், பழைமையான அல்லது, புதுப்பிக்கப்பட்ட சந்தை (market) ஆகியவையும், பிற்கால மாற்றங்களைக் காட்டும். மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், அதன் கட்டடங்கள் (Collectorhs office), பள்ளிக்கூடம், கடைகள் போன்றவையும் இந்திய நகரங்களுக்கே உரித்தான அமைப்புகளாகும்.

ஆங்கிலேயர்களின் வருகைக்குமுன்பே தோன்றியிருந்த நகரங்கள் கடந்த நூற்றாண்டில் பல மாற்றங்களுக்குள்ளாகி இருக்கின்றன. இந்திய முறைப்படி அமைந்த பகுதிகளுக்கும், ஆங்கில முறைப்படி அமைந்த பகுதிகளுக்குமிடையே அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. முழுக்க முழுக்க ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கல்கத்தா, பம்பாய் சென்னை போன்ற நகரங்களில் இந்திய நகரப் பண்பாடும், ஐரோப்பிய நகரப் பண்பாடும் ஒன்றாகக் கலந்துவிட்டதால் இன்று இந்நகரங்களில் புதிய இந்தோ-ஐரோப்பிய (Indo-European) பண்பாடு வெளிப்படுகிறது. ஜாம்ஷெட்பூர் (Jamshedpur), சண்டிகார் (Chandigar) போன்ற உள்நாட்டு நகரங்களில் ஐரோப்பிய பண்புகளே காணப்படுகின்றன; ஆனால், சில இந்திய நகரங்களில் பழைய நெருக்கமான பகுதியைத் தவிர சற்று தூரத்தில் ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட திட்டமிட்ட அகலமான நகரப்பகுதி காணப்படுகிறது. உதாரணம் பழைய டெல்லி, புது டெல்லி.

இந்தியா முறையில் (பாணியில்) அமைந்த நகரங்கள் : (indigenous pattern)

இந்தியாவில் வடக்குச் சமவெளி பகுதியிலும் பாலைவன எல்லைகளிலும் தக்காண பீடபூமியிலும் அமைந்துள்ள நகரங்

களில், தென்மேற்கு ஆசியாவிலிருந்து முகமதியர்களால் பின்பற்றப்பட்ட, பொது அமைப்புகள் சில காணப்படுகின்றன. இந்த நகரங்களில் தெருக்கள் மிகவும் குறுகலாக ஒழுங்கற்றுக் காணப்படுகின்றன. தெருக்களின் ஓரங்களில் பெட்டிக்கடைகளும், மற்றக்கடைகளும் உள்ளன. வண்டிகள் செல்லக்கூடிய சாலைகள் 30 அல்லது 40 அடி அகலத்திற்குமேல் இரா. இவற்றில் நடைபாதைகள் காணப்படுவதில்லை. சாலைகளிலிருந்து இருபுறமும் செல்லுகின்ற தெருக்கள் மிகவும் நெருக்கமானவை. சக்கரம் பூட்டிய வண்டியே (Wheeled vehicle) இதில் செல்ல முடியாது. நகரம் முழுவதும் பொதுவாகக் கட்டடங்களே நிரம்பியுள்ளன. தெருக்கள், வீடுகளின் திறந்த முற்றம், சந்தை இவைகளைத் தவிர, மற்ற இடங்களில் கட்டடங்களே நிரம்பியுள்ளன. ஒரு அடுக்கு அல்லது இரண்டு அடுக்குக் கட்டடங்கள்தான் மிகுதியாகக் காணப்படுகிறது என்றாலும், முக்கிய சாலைகளில் ஆறு அடுக்கு கட்டிடங்கள் கூடக் காணப்படுகின்றன. கட்டடங்களுக்குச் செங்கல் அல்லது கருங்கல்லுடன் சுண்ணாம்பும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கூரைக்கு வளைந்த ஓடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், நகரத்தின் விளிம்பில் (fringe) மண்ணால் கட்டப்பட்ட குடிசைகளே மிகுதியாகக் காணப்படுகின்றன.

இந்து அல்லது மொகலாய அரசர்களின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்கள் பெரும்பாலும் ஒரு மலை அல்லது ஆற்றின் அருகிலேயே அமைந்திருக்கின்றன. உதாரணம், ஆக்ரா. ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்பே இருந்துவந்த அரண் (சுவர்) அமைந்த நகரங்கள் தற்காலத்திலும் அழியாமல் இருக்கின்றன. கோயில் அல்லது மசூதியே (mosque) இந்நகரங்களின் உயரமான கட்டடங்களாகும். ஆனால், ஆங்கிலேயர்களின் ஆட்சியில் கோயில்களைவிட, உயரமான கட்டடங்கள் தோன்றிவிட்டன. நகரமன்றம் (Town Hall), நகராட்சி அலுவலகம் (Municipal office), கூரை அமைக்கப்பட்ட மையச்சந்தை (Central market) மணிக்கூண்டு (Clock tower) போன்றவை ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டவையாகும். இவை அனைத்தும் இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சிசெய்ததை நமக்கு நினைவூட்டுகின்றன. நகரங்களில் வசதிமிக்கவர்களின் வீடுகள் நவீன முறையில் கட்டப்பட்டிருந்தாலும், தூரத்து இடங்களில் இன்னும் பழமையே குடிகொண்டிருக்கிறது.

வடஇந்தியாவில் நகரங்களில் காணப்படும் சௌக் (Chouk) எனப்படும் கடைத்தெருவிற்கும் (bazaar) அமெரிக்க நகரின்

மத்திய வியாபாரப் பகுதிக்கும் இடையே அநேக வேறுபாடுகள் உள்ளன. இந்திய நகரங்களில் கடைத்தெருவில் உணவு தானியக் கடை, இருப்புச் சாமான்கடை, நகைக்கடை போன்றவை ஏராள மாகக் காணப்படுகின்றன. குறிப்பிட்ட பொருளை விற்கும் கடைகள் ஒரே பகுதியில் குழுமி இருக்கின்றன. எனவே, தானி யத்திற்கு ஒரு கடைத்தெருவும். காய்கறிகளுக்கு வேறு கடைத் தெருவும், காணப்படுகிறது. உலோகப் பாத்திரக்கடைகள் ஒரு தெருவிலும் மண்பாண்டங்கள் மற்றொரு தெருவிலும், பொற் கொல்லர்களின் கடை ஒரு குறிப்பிட்ட தெருவிலும் அமைந்தி ருப்பதை இன்றும் காணமுடிகிறது. வைத்தியர்கள், வழக்கறிஞர் கள், கடன் கொடுப்பவர், அடகு பிடிப்பவர் (Pawn brokers) ஆகியோர் நகரின் கடைத்தெருவின் மையத்தில்தான் காணப்படு கிறார்கள். இவர்களில் சிலர் கட்டடங்களின் இரண்டாவது அடுக்கிலும் தங்கள் அலுவலகங்களை வைத்துக்கொண்டிருக்கின்ற னர். ஆனால், கடைத்தெருவில் பொதுவாகக் கட்டடங்களின் முன்பகுதியில்தான் கடைகள் அமைந்துள்ளன. மேல் அடுக்கிலும், பின்புறத்திலும் வியாபாரிகள் தங்கள் வீடுகளின் முன்பகுதியில் கடையையும், பின்பகுதியிலும், மேல்பகுதியிலும் குடியிருப்புப் பகுதிகளையும் அமைத்துக்கொண்டிருக்கின்றனர். மொத்த வியாபாரக் கடைகள் கடைத்தெருவின் வழியே சுமார் ஒரு மைல் தூரம்வரை பரவியிருக்கும்.

இந்திய நகரங்களில் கடைத்தெருக்களின் அருகில் குடியிருப் புப் பகுதிகளே காணப்படுகின்றன. குடியிருப்புப் பகுதிகளும் ஜாதியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. உயர்ந்த ஜாதி யினராகக் கருதப்படுபவர்களின் இல்லங்கள் நகரின் மையப் பகுதியில்தான் அமைந்துள்ளன. இந்துக்களும், முகமதியர்களும் தனித்தனி பகுதிகளில் வசிக்கின்றனர். ஏழ்மையானவர்களும் கூலிவேலை செய்பவர்களும் நகரின் விளிம்புகளிலேயே வசிக்கின்ற னர். இந்திய நகரங்களில் கடைத்தெருக்களில் பொருள்களுக்கு ஏற்ப தனித்தனிப் பகுதிகளும் குடியிருப்புப் பகுதிகளில் ஜாதி, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் தனித்தனி பகுதிகள் இருந்தபோதிலும், அமெரிக்க ஐரோப்பிய நகரங்களில் காணப்படுவதுபோல் வசிக்கும் பகுதியையும், வியாபாரப் பகுதி யையும் பிரித்தறிவது மிகவும் கடினமாகும். இங்கு வியாபாரிகள் கடைத்தெருக்களிலேயே வசிக்கின்றனர். தொழிற்சாலைகள் யாவும் வசிக்கும் பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றன. சில பகுதிகளில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற இடத்தி லேயே விற்பனையும் நடைபெறுகிறது.

இந்திய நகரங்களில் ஐரோப்பிய அமைப்பு :

ஐரோப்பியர்கள் ஆட்சியின் விளைவாக இந்திய முறையி லிருந்து முற்றிலும் மாறுபட்ட நகரங்கள் தோன்றியுள்ளன. உதாரணமாக கன்டோன்மென்ட் (Contonment) என்று சொல்லப்படுகிற இராணுவக் குடியிருப்பு, ரெயில்வே காலனி (railway colony) போன்றவை திட்டமிடப்பட்டுக் குறிப்பிட்ட பணிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. அகலமான தெருக் களும், தார்போட்ட சாலைகளும் அவற்றின் ஓரங்களில் நிழல் தரும் மரங்களும் கட்டடங்களும் ஐரோப்பிய பாணியை வெளிப் படுத்துகின்றன. பெரிய பரப்பில் அமைந்திருக்கும் பங்களாவும் (Bungalow) அதனைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கின்ற மதிற் சுவரும், புல்தரையும், தோட்டமும் ஆங்கில பாணியேயாகும். பங்களாக்களில் சுவர் கனமாகவும், கூரை உயரமாகவும், ஜன்னல் பெரியதாகவும், வாசல் அகலமாகவும், சுற்றிலும் தூண் களுடனும் (Pillars) காணப்படுகின்றன. சிமெண்டும் சுண்ணாம் பும் பயன்படுத்திக் கட்டப்பட்டிருக்கிறது. சிமெண்டினால் கட் டப்பட்ட தட்டையான (flat) கூரையோ அல்லது ஓட்டினால் (tiles) வேயப்பட்ட சரிவான கூரையோ பங்களாக்களில் காணப் படுகின்றன.

தொடக்கத்தில் இந்த நகரங்களில் இராணுவ வீரர்களும், அரசு அதிகாரிகளும் வியாபாரிகளுமே வசித்து வந்தனர். அவர் களுக்குள் சிலர் மட்டுமே ஆங்கிலேயர் அல்லாத அயல் நாட்டவ ராக இருந்துவந்தனர். ஆனால், தற்காலத்தில் அந்நகரங்களில் இந்தியர்களே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். இருப்பினும், பழைய இந்திய நகரங்களில் இருப்பதுபோல் இங்குச் சமயப் பிரிவுகளோ, ஜாதிப்பிரிவுகளோ இல்லை. இங்கு வசிக்கும் மக்களில் பெரும்பகுதியினர் அலுவலகங்களில் பணிபுரி கின்றவர்களும், சிறப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களும் ஆவர்.

கன்டோன்மென்ட்குடியிருப்புகள் திட்டமிடப்பட்டுத் தெருக் களும் சாலைகளும் ஒழுங்கான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இராணுவ வீரர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் வசிக்கும் வீடுகளும் வரிசையாக அமைந்திருக்கின்றன. அதிகாரிகளின் பங்க ளாக்கள், மருத்துவமனை, திருச்சபை, மனமகிழ் மன்றம் ஆகியவை காணப்படுகின்றன. இராணுவத்திற்கு உரித்தான பயிற்சி (drill) மைதானங்களும், துப்பாக்கி சுடும் பயிற்சி பகுதிகளும் (rifle

ranges) ஆயுத கிடங்குகளும் எல்லா கன்ட்டோன்மென்ட் குடியிருப்புகளிலும் காணப்படுகின்றன. சிலவற்றில் ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன. கன்டோன்மென்ட் குடியிருப்புகள் பொதுவாக 19 ஆம் நூற்றாண்டில்தான் அமைக்கப்பட்டன. அப்போது, நிரந்தர இராணுவக் குடியிருப்பு அங்குக் காணப்பட்டது. ஆனாலும், தற்காலத்தில் பெரும்பாலான கன்டோன்மென்ட் குடியிருப்புகளில் இராணுவப்பணி நிறுத்தப்பட்டுள்ளது.

கன்டோன்மென்ட் எவ்வாறு இராணுவ குடியிருப்பாக இருந்ததோ, அதேபோல் இராணுவத்துடன் தொடர்பு கொள்ளாத மற்ற அதிகாரிகளின் வீடுகளும், அரசு அலுவலகங்களும் நிறைந்த மற்றப் பகுதிகள் பொதுக் குடியிருப்புகள் (Civil lines) எனப்பட்டன. பொதுக் குடியிருப்புகளில் காணப்படும் கட்டடங்களில் மாவட்ட ஆட்சியாளரின் அலுவலக கட்டடம் மிக முக்கியமானதாகும். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஏற்பட்ட இந்தப் பொதுக்குடியிருப்புகள் இன்றும் அதே பணியில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால், முன்பிருந்த ஆங்கிலேய அதிகாரிகளுக்குப் பதிலாக இந்திய அதிகாரிகள் இன்று காணப்படுகிறார்கள். இங்கு ஐரோப்பியர்களுக்கே உரித்தான அமைப்பில் பொது அலுவலகங்கள் ஒன்றாகக் குழுமியிருக்கின்றன. இந்தப் பொது அலுவலகப் பகுதியில் பொதுவாக மாவட்டத் தலைமை அலுவலகமும், வரி வசூலிப்பவர் அலுவலகமும், நீதிமன்றமும், காவற்துறையும், சிறைச்சாலையும் காணப்படுகின்றன. சில இடங்களில் அரசு அச்சகமும், நூல்நிலையமும், மருத்துவ மனையும் இங்குக் காணப்படுவதுண்டு. ஆங்கிலேயர்களுக்காக அமைக்கப்பட்ட தபால், தந்தி, வங்கி, சிற்றுண்டி விடுதி, திரையரங்கு, கல்லூரி, ஆங்கிலப் பள்ளிகள் ஆகியவையாவும் ஆங்கிலேயரைப் பின்பற்றிவரும் இந்தியர்களுக்குப் பெரிதும் தொண்டு செய்கின்றன.

கிழக்கிந்திய கம்பனியினர் குடியேறிய தொடக்க காலத்தில், கன்டோன்மென்ட் குடியிருப்புகளும், பொதுக்குடியிருப்புகளும் ஒழுங்கற்று அமைந்திருந்தன. குறிப்பாக, மலைவாசஸ்தலங்கள் (hill stations) ஒழுங்கற்ற அமைப்பைக் கொண்டிருக்கின்றன. கோடை வெப்பத்தைத் தாங்காத அவர்கள் மலைப் பகுதிகளில் கோடை வாசஸ்தலங்களை அமைத்துக் கொண்டனர். மலைப்பகுதியில் நிலம் கரடு முரடாக இருப்பதால் சாலைகள் வளைந்து வளைந்து செல்கின்றன. அத்துடனல்லாமல், வீடுகளும்

மிகவும் பரவலாகக் காணப்படுகின்றன. குளிருக்கு ஏற்றதான மரத்திலான வீடுகளே இங்கு அதிகம் காணப்படுகின்றன. சில வீடுகள் கற்களினாலும் கட்டப்பட்டுள்ளன. மலை வாசஸ்தலங்கள் ஓரளவு பிரிட்டிஷ் தீவுகளின் குடியிருப்பை ஒத்திருக்கின்றன. இருப்பினும். பொதுக்குடியிருப்பானாலும். இராணுவக் குடியிருப்பானாலும், மலையில் இருந்தாலும், சமவெளியில் இருந்தாலும் அவற்றில் காணப்படும் கடைத்தெருவில் மட்டும் இந்தியத் தன்மையே (பாணியே) அதிகமாகத் தென்படுகிறது.

ரெயில்வே காலனிகளில் திட்டமிட்ட சாலையமைப்பும் பொருளாதாரம் மற்றும் பணிகளுக்குத்தக்கவாறும் பல பகுதிகள் காணப்படுகின்றன. இவையாவும் 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தோன்றியவையே.

தற்காலத் தொழில் நகரங்களில் சதுர, செவ்வக முறைப்படிச் சாலைகளும் தெருக்களும் அமைந்திருக்கின்றன. உதாரணமாக, ஜாம்ஷெட்பூரிலும் (Jamshedpur) கரக் பூரிலும் (Kharagpur) இத்தகைய சதுர செவ்வக அமைப்புக்காணப்படுகிறது. சுமார் 25 சதுர மைல் பரப்பில் அமைந்துள்ள இந்த நகரங்களில் ஊதியத்திற்கும், தொழில் நுணுக்கத்திற்கும் ஏற்றவாறு பல குடியிருப்புப் பகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு பணிகளுக்கு வெவ்வேறு பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் தொழிற்சாலைகள் மிகவும் பரவலாக அமைந்திருப்பதால் பசுமையான தரை அதிகப் பரப்பில் காணப்படுகின்றன. ஆனால், புதிதாகத் தோன்றிய நகரங்கள் எல்லாவற்றிலும் ஒழுங்கான அமைப்பு இருக்குமென்று கூறிவிட முடியாது. உதாரணமாக, தெற்கு பீகாரிலுள்ள டெரி - டால்மியா (Dehri - Dalmia Nagar) இரட்டை நகரங்கள் புதிதாகத் தோன்றியதென்றாலும் ஒழுங்கற்ற திட்ட அமைப்பையே கொண்டிருக்கின்றன.

இந்திய நகரங்களில் மக்கள்தொகைப் பரவல்

(Population distribution)

இந்திய நகர மக்கள் தொகைப் பரவலில் இரண்டு முக்கிய தன்மைகள் காணப்படுகின்றன. முதலாவது தன்மை யாதெனில், எல்லா உள் நாட்டு (inland) மற்றும் துறைமுக நகரங்களிலும், மிக அதிகமான மக்கள்தொகைச் செறிவு காணப்படுகிறது. ஆங்கிலேயர்களின் குறுக்கீடு இல்லாத இந்திய நகரங்களிலும் மக்கள் செறிவு மிக அதிகமாகவே இருந்து வருகிறது. 1941 ஆம்

ஆண்டில் கல்கத்தா, டெல்லி, போன்ற நகரங்களில் சில பகுதிகளில் மட்டும் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 1, 60, 000 முதல் 1, 80, 000, மக்கள்வரை வசித்துவந்தனர். இதே நகரங்களில் 1951 ஆம் ஆண்டிலும் இதே மக்கட் செறிவு இருந்தது.

இரண்டாவது குறிப்பிடத்தக்கத் தன்மை யாதெனில் நகரின் மையப்பகுதியிலும் அதன் விளிம்புப் பகுதியிலும் மக்கள் தொகைச் செறிவிலும் (density) பெருந்த வேறுபாடு காணப்படுகிறது. நகரங்களின் மையப்பகுதிகள் பொதுவாகப் பழைய பகுதிகளேயாகும். அதே போல் புதிய பகுதிகள் யாவும் நகரின் விளிம்பிலும், புறநகர்ப் பகுதியிலும் அமைந்துள்ளன. பழைய இப்பகுதிகளுக்கும் புதிய புறநகர்ப் பகுதிகளுக்கும் இடையே ஜனநெருக்கத்தில் கல்கத்தா. சென்னை, புதுடெல்லி நகரங்களில் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக, ஜன நெருக்க உச்ச, குறும (maximum - minimum) விகிதம் காசி நகரத்தில் 300 : 1 என்ற விகிதத்திலும் கல்கத்தாவில் 100 : 1 என்ற விகிதத்திலும் காணப்படுகிறது. ஆனால், பம்பாய் கல்கத்தா போன்ற சில நகரங்களில் மட்டுமே அமெரிக்க நகரங்களில் காணப்படுவதுபோல் மத்திய வியாபாரப்பகுதியில் ஜன நெருக்கம் குறைந்தும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் நெருக்கம் அதிகமாகவும் காணப்படுகிறது. உதாரணமாக, பம்பாயில் மையப்பகுதியில் ஒரு ஏக்கருக்கு 30 பேர்மட்டுமே காணப்படுகின்றனர். மையப்பகுதியின் பெரும்பகுதி கோட்டை பூங்கா, திறந்தவெளி போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதால் வசிக்கும் பரப்புக்குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

நகரின் ஜனநெருக்க மாறுதல்களுக்கெல்லாம் அடிப்படையாக அமைவது மூன்று காரணங்களாகும். அவை பாதுகாப்பு, (Protection) கௌரவம் (Prestige) அண்மை (Proximity) ஆகியவையாகும். இடைக்காலத்திலும். பிரிட்டிஷார் காலத்திலும் பாதுகாப்பின் பொருட்டுத் தலைநகரங்களைச் சுற்றி சுவர்களும் (walls) அகழிகளும் (moats) அமைக்கப்பட்டன. சிற்றரசர்களும் தங்கள் தலைநகரங்களுக்கு அரண் அமைத்துக்கொண்டனர். இராணுவவீரர்களும் வியாபாரிகளும் கைத்தொழில் செய்பவர்களும், கொள்ளைக்காரர்களிடமிருந்தும் எதிரிகளிடமிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ள நகரின் சுவருக்குள்ளேயே குடிபுகுந்து வசித்துவந்தனர்.

நகரத்தில் அரண்மனைதான் அதிகாரத்திற்கும், செல்வத்திற்கும் கருவாக விளங்கியது. அதைச்சுற்றிதான் செல்வர்களும் மற்றவர்களும் வீடுகளைக் கட்டிக் கொண்டனர். அரண்மனையைச் சுற்றி வசிப்பது கௌரவமாகக் கருதப்பட்டது. முக்கியசாலைகளும் தெருக்களும் அரண்மனையை நோக்கியே சுற்றிலும் அமைக்கப்பட்டன. வியாபாரிகளும், மற்றவர்களும் நகரத்தின் மையத்தை நோக்கிச் செல்லுகின்ற சாலைகளின் ஓரங்களிலேயே வசித்து வந்தனர். செல்வர்கள் மட்டுமே நகரின் மையப்பகுதியிலும், சாலைகளின் ஓரங்களிலும் வசித்துவந்தனர். ஏழைகளும் தொழிலாளர்களும் சற்று உட்புறமாக அமைந்த இடங்களில் வசித்துவந்தனர். சில சமயங்களில் நகரின் சுவருக்கு (அரண்) வெளியில்கூட இவர்கள் வசிக்க நேரிடுவதுண்டு. இந்த அமைப்பு பிரிட்டிஷ் காலத்திற்கு முன்பே வடஇந்தியாவிலும் தக்காண பீடபூமியிலும் காணப்பட்டது. இந்து அல்லது முகமதிய அதிகாரிகளும், வியாபாரிகளும் நகரச் சுவருக்குள்ளாக வசித்து வந்தனர்.

19 ஆம் நூற்றாண்டில் சிற்றரசர்களின் ஆட்சி மறையத் தொடங்கிய பின் நகரங்களில் அத்தகைய பாதுகாப்புத் தேவையில்லாமல் போய்விட்டது. இருப்பினும் மையப்பகுதிக்கு அருகாமையில் வசிக்க வேறு நிர்பந்தமும் ஏற்பட்டது. சந்தைகளும், கடைத்தெருக்களுக்கும் நகரின் மையப்பகுதியில் முக்கிய சாலைகளில் அமைந்திருப்பதால் பொருள்களை வாங்குவதற்கு வசதியாக மையப்பகுதிக்கு அருகிலேயே குடியிருப்புகள் நெருக்கமாக அமையலாயின. இது தவிர, சிறப்புப் பணிகளை மேற்கொண்ட நகரங்கள் குறிப்பிட இடங்களிலேயே அமைந்திருந்தன. உதாரணமாக நீர் நிலைகளுக்கு அருகில் தொழில் நகரங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. மேலும், ஐரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்றி வந்த இந்தியர்களுக்கு அந்த வாழ்க்கை வசதிகள் நகரின் மையப்பகுதியில்தான் கிடைத்தது.

பன்முகப் படுத்துதலும் நகர விளிம்பும் (Decentralisation and urban fringes) :

இந்திய நகரங்களில் அமெரிக்க ஐரோப்பிய நகரங்களில் காணப்படுவதுபோல் மொத்த, சில்லறை வியாபாரம், வங்கி, இன்சூரன்ஸ், சிற்றுண்டி, கேளிக்கைகள் போன்றவை அடங்கிய மத்திய வியாபாரப்பகுதி (C B D) எதுவும் இல்லை. ஆனால், சில இந்தோ - ஐரோப்பியத் துறைமுக நகரங்களில் மட்டும் மத்திய வியாபார வட்டம் காணப்படுகிறது;

உண்மையில் பார்க்கப் போனால் ஐரோப்பியர் காலத்திலும் இப்போதும் பல பெரிய நகரங்களில் இரட்டை வியாபாரப் பகுதிகள் காணப்படுகின்றன. ஒரே நகரத்தில் இரண்டு பகுதிகளில் ஓரே பணி நிகழ்ந்து வருகிறது. உதாரணமாக, புதுடெல்லியில் இந்திய சௌக் (India Chauk) பகுதியும், பழைய டெல்லியில் சாந்தினி சௌக் (Chandni Chauk) பகுதியும் இரட்டை வாணிபப் பகுதிகளாகும்.

எதிர்காலத்தில் பொருள்களின் தேவைகள் பெருகிவிட்டால் இந்திய நகரங்களில் வாணிகப்பகுதிகள் எத்தகைய அமைப்பைப் பெறும் என்பதற்குச் சில அடையாளங்கள் தோன்றியுள்ளன. ஏற்கனவே நமக்கு இரண்டு தன்மைகள் வெளிப்பட்டு விட்டன; முதலாவதாகச் சிறு கடைகளும் சிறு தொழிற்சாலைகளும், நெடுஞ்சாலைகளின் ஓரங்களிலும் பழைய குடியிருப்பிலிருந்து ரெயில் நிலையத்தை நோக்கியும் அல்லது புதிய தொழிற்சாலைகளை நோக்கியும் கட்டுக்கடங்காமல் வளர்ச்சி பெற்றுள்ளன. இரண்டாவதாக, இராணுவ அல்லது பொதுக்குடியிருப்பிலுள்ள திறந்த வெளியிடங்களில் திட்டமில்லாமல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பழைய பங்களாக்கள் அனைத்தும் அலுவலகங்களாகவும், கடைகளாகவும் மாறிக்கொண்டிருக்கின்றன. பெரிய மைதானங்களில் நகரின் சுகாதாரத்தை இழக்கின்ற வகையில் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

தற்காலத்திய புது நகரங்கள் சிலவற்றில் காணப்படும் மற்றுமோர் தன்மை என்னவெனில், நகரங்களில் வெவ்வேறு பகுதிகளுக்குத் தனித்தனி பகுதிகள் காணப்படுகின்றன. குறிப்பாக உத்திரப்பிரதேசத்திலுள்ள மோடி நகர் (modi), ஜாம்ஷெட்பூர், சண்டிகர் நகரங்களில் தனித்தனி பகுதிகள் காணப்படுகின்றன. பஞ்சாலைகள் நிறைந்த மோடி நகர் டெல்லிக்கு வடகிழக்கில் அமைந்துள்ள ஒரு சிறிய நகரமாகும். இந்நகரம் ரெயில் பாதைக்கு இணையாகச் சதுர செவ்வக வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைக்கு ஒரு புறத்தில் வீடுகளும், மறுபுறத்தில் தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன. இந்த நெடுஞ்சாலைதான் நகரின் அடிப்படைக் கோடு (base line) ஆகும். ரெயில் நிலையத்திற்கு அருகில்தான் வியாபாரக் கருவிடம் அமைந்துள்ளது; இங்கும் நெடுஞ்சாலைக்கு இரு புறத்திலும் பெட்டிக் கடைகள் நீண்ட தூரம் வரை அமைந்துள்ளன. ஜாம்ஷெட்பூரில் நவீன மத்திய வியாபாரப் பகுதி காணப்படுகிறது. சுற்றிலும் தொழிற்புற நகரங்கள் (industrial suburbs) அமைந்திருக்கின்றன. இவற்றில் தொழிற்சாலைகளுக்கும், தொழிலாளர்களின் குடியிருப்பு

களுக்கும் இடையே பெரிய பூங்காக்களும் திறந்த வெளிகளும் காணப்படுகின்றன. இதே போல் 40 ச.கி.மீட்டர் பரப்பில் அமைந்துள்ள சண்டிகர் நகரமும் சதுர வடிவ சாலைகளால் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன; மையப்பகுதியில் சிறப்புப்பணிகளும், வியாபாரமும் காணப்படுகிறது. பஞ்சாப் மாநில அரசு அலுவலகங்களுக்காக மட்டும், ஒரு பகுதி தனியே ஒதுக்கப்பட்டுள்ளது.

நகரின் மையத்திலிருந்து விலகிச் செல்லும் தன்மை (பன்முகப்படுத்தும் தன்மை) இந்தியாவில் மிகவும் குறைவாகவே உள்ளது. தொழில் செய்யும் இடங்களுக்கு மிக அருகிலேயே வசிக்க நேரிடுவதால் மையப்பகுதியில்தான் நெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. பெரிய நகரங்கள் பலவற்றில் விரைவான போக்குவரத்து வசதிகள் இருந்தபோதிலும் சிறிய நகரங்களில் அவை காணப்படுவதில்லை. எனவே, சிறிய நகரங்களில் மையப்பகுதியில் மக்கள்தொகைச் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது. ஏனெனில், வேலை செய்யும் பகுதியிலிருந்து தூரத்தில் சென்று வசிப்பதற்கு ஏற்ற விரைவு - போக்குவரத்து இங்கு இல்லை. மேலும் குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்குத் தூரத்து இடங்களுக்குச் சென்று வசிக்கவும் இயலாது. போக்குவரத்துச் செலவிற்கு வசதியுள்ளவர்கள் மட்டுமே, நகரின் மையத்தை விட்டு விலகி வசிக்கமுடியும். இந்திய நகரங்களில் நடுத்தர வகுப்பினருக்குக் கீழாக உள்ளவர்கள் தாங்கள் வேலை செய்யும் இடத்திலிருந்து ஒன்றரை முதல் மூன்று கி.மீட்டர் தூரத்திற்கு அப்பால் சென்று வசிக்க இயலாது. (படம் 60)



படம்: 60 ஹைதராபாத், செகந்திராபாத்-இரட்டை நகரங்கள்

25. நகர்க் களம்

(Urban Field)

பழங்காலத்தில் நகரங்கள் யாவும் கிராமப்புறத்தைச் சார்ந்தே இருந்தன. இயந்திர யுகத்திற்கு முன்பாக, பெரும் பான்மையான நகரங்கள் உணவுக்காக அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களையே நம்பியிருந்தன. எனவே, அவை கிராமத்து விவசாய வாழ்க்கையில் வேரூன்றி இருந்தன. சந்தை நகரங்களெல்லாம் (market towns) கிராமப்பகுதியில் அமைந்ததோடல்லாமல் கிராமத்தின் ஒரு பகுதியாகவும் இருந்தன. நாளடைவில் போக்குவரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் இந்த நிலையை மாற்றி விட்டது. உணவுக்காகச் சுற்றியுள்ள பகுதிகளை இப்போது நம்பியிருக்கத்தேவையில்லை. இதனை அடுத்து ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவாகக் கிராமச் சூழ்நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட புதிய நகரங்கள் தோன்றலாயின. இவைகளில் தொழில், கல்வி, வாணிகம், பொழுதுபோக்குப் போன்றவை முக்கிய பணிகளாக இருந்தன.

நகரங்கள் ஓர் இடத்தில் அமைவதற்கு நான்கு காரணிகள் தேவைப்படுகின்றன. முதலாவதாக, அந்நகரம் அது சேவை செய்யும் பகுதியின் மக்கள் எளிதில் வந்து போகின்றவாறு வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும். இரண்டாவதாகப் பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் முக்கிய சாலைகளின் வழியே அமைந்திருக்கவேண்டும். மூன்றாவதாக, நகரங்கள் குழுமி அமைவதற்குத் தக்கவாறு சுற்றியுள்ள பிரதேசம் (region) செல்வமுடையதாக இருக்கவேண்டும். நான்காவதாக நகர்ப் புறக் குடியிருப்பை அங்கு அமைப்பதற்கு மக்களுக்குத் திடீர் விருப்பம் (human whim) இருக்கவேண்டும்.

நகரத்திற்கும் அதனைச் சுற்றியுள்ள பகுதிக்கும் இடையேயிருக்கின்ற தொடர்பு மாறிவிட்டாலும், பிணைப்பு விட்டுப்

போவதில்லை. சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவே இருக்கின்றன. நவீன போக்குவரத்து வசதிகள் மூலம் நகரம் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் வாழும் மக்களுக்குப் பல்வேறு சேவைகளைச் செய்கிறது. இதனால் சுற்றிவாழும் மக்கள் நகர வாழ்க்கையோடு நேரடித் தொடர்பைப் பெறுகின்றனர். அச் சமயத்தில் சில மையப்பணிகள் நகரங்களில் மட்டுந்தான் அமைய முடியும். எனவே, அத்தகைய மையப்பணிகளினால் தான் கிராமத்திற்கும் நகரத்திற்கும் தொடர்பு இருந்து கொண்டே வருகிறது. நகரம் ஒன்று எப்படித் தோன்றியிருந்தாலும், எந்தப் பணியைச் செய்துகொண்டிருந்தாலும் அதுவே மாவட்டத்தின் மையப்புள்ளியாகக் கருதப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் பல மையப்பணிகளைச் செய்து, சுற்றியுள்ள பகுதி மக்களைத் தன்பால் ஈர்க்கவும் செய்கிறது. எனவே, நகரங்கள் அவை அமைந்திருக்கும் பகுதியின் சமூகப் பொருளாதார அமைப்பின் மீது ஆட்சி செலுத்துகின்றன. சுமார், ஒரு நூற்றாண்டுக்கு முன்பு பிரிட்டனின் போக்குவரத்து முன்னேற்றத்தினால் பல புதிய மையப்பணி குடியிருப்புகள் (நகரங்கள்) தோன்றியிருந்தன. சுற்றியுள்ள இந்தப் பகுதிகளில் நகரங்களுக்கு இருந்த செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே இருந்தது. பிரிட்டனில் முழுப்பகுதியின் வாழ்க்கையிலும் இந்த நகரங்கள் ஆட்சி செலுத்தி வந்தன. இரு நகரங்களுக்கிடையில் வசித்துவந்த கிராம மக்கள் நகரங்களால் ஈர்க்கப்பட்டனர். இந்த இடைவெளிப் பகுதியிலும் நகரங்கள் தங்கள் செல்வாக்கைச் செலுத்த ஆரம்பித்தன. இங்கு வாழ்ந்த மக்கள் மையப்பணிகளுக்காக அருகிலுள்ள நகரத்திற்குச்செல்லவேண்டியதாயிற்று. சில மையப்பணிகள் நகரத்திலிருந்து இப்பகுதிகளுக்காகச் செய்யப்பட்டன. எனவே, நகரத்திற்கும் இப்பகுதிக்கும் இடையே போக்குவரத்து அவசியமாயிற்று. இப்பகுதியே நகர்க்களமாகும். ஒரு நகரத்தின் செல்வாக்கு. எவ்வளவு தூரம் சுற்று வட்டத்தில் பரவியிருக்கிறதோ அப்பரப்பே அதன் நகர்க்களமாகும். (Urban-field) எனவே, நகர்க்களம் என்பது ஒரு நகரைச் சுற்றியுள்ள பகுதியிலிருந்து அந்நகருக்கு வாணிகத்திற்காகவும், மற்றப்பணிகளுக்காகவும் வருகின்ற மக்கள் வசிக்கின்ற பகுதியை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு நகர்க்களம் உள்ளது. நகரத்தின் பணியை நாடுபவர்கள் அப்பகுதியில் வசிக்கிறார்கள். ஆகவே, ஒரு நகர்ப்புறக்குடியிருப்புடன் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த நகர்க்களத்திற்கு சேவைமண்டலம் (Zone of influence) என்ற பெயரும்

உண்டு. இப்பகுதிக்கு நகரின் பின்னிலம் (hinter land) அம்லாந்து (Umland), சேவைப் பகுதி (Spher of influcnce), துணைப் பகுதி (Tributary area), வடிகால் பகுதி (catchment-area) என்பன போன்ற பல பெயர்களும் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களும் நகரத்தைத் தங்களுக்குக் குறிப்பிட்ட பணிகள் செய்யும் மையமாக அமைத்துக் கொள்கின்றனர். இந்தப் பணிகள் செயற்படுவதற்குப் போக்குவரத்து அவசியமாகிறது. எனவே, நகர்க்களத்தில் வாழும் மக்களுக்கும், நகர மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. பொருள்கள் சேவை மண்டலத்திலிருந்து (நகர்க்களம்) நகரத்திற்கும், நகரத்திலிருந்து சேவை மண்டலத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன. சேவைகளும் இவ்வாறே இரண்டு வழிகளிலும் செயல்படுகின்றன.

ஒரு நகரம் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் உற்பத்தியாகும் பொருள்களைச் சேகரித்து விற்பனை செய்கிறது. அதே போல் வெளியிடத்துப் பொருள்களைத் தன் பகுதிக்கு விநியோகம் செய்கிறது. இவைகளே முதன்மைப் பொருளாதாரப் பணிகளாகும். எனவே, வேலை வாய்ப்பை ஏற்படுத்தித்தரும் மையமாகவும் இது விளங்குகிறது. இவற்றைத்தவிர கல்வி, மருத்துவம், பொழுதுபோக்குப் போன்ற சமூகப்பணிகளும் இங்கு நடைபெறுகின்றன. நகரப் போக்குவரத்துச் சாலைகள் கூடுகின்ற மையமாக இது இருப்பதால் அது மக்கள் கூடுகிற மையமாகவும் விளங்குகிறது. எனவே, சமூகவாழ்க்கையின் அச்சாகவும், எண்ணங்களையும் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளும் இடமாகவும் நகரம் விளங்குகிறது.

நகர்க்களத்தை வரையறுத்தல்:

ஒரு நகரத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட பணி எவ்வளவு பரப்பிற்குப் பயன்படுகிறது. என்பதை நிர்ணயிப்பதன் மூலம் அதன் நகர்க்களத்தை வரையறுக்கமுடியும். நகர்க்களத்தை நிர்ணயிக்கும் போது மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் நகரின் முக்கிய பணிகளோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். இந்த வழிமுறைகள் நகரின் பணிகளைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். சில பணிகள் பொதுவாக எல்லா நகரங்களிலும் காணப்படுகின்றன. உதாரணமாக, உயர்நிலைப் பள்ளி எல்லா நகரங்களிலும் காணப்படுகிறது. ஆனால், கல்லூரியும் பல்கலைக் கழகமும் பெரிய நகரங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

எனவே, பணிகளின் தன்மை நகரத்தின் அளவுக்குத் தகுந்தபடி மாறுகிறது.

குடியிருப்புகள் பொதுவாக பண்ணைவீடு (farm house), பண்ணைக் குடியிருப்பு (farmstead), குக்கிராமம் (hamlet), கிராமம், நகரம், மாநகரம் (city), போன்ற பல படிநிலைகளில் (hierarchy) வகைப்படுத்தப்படுகின்றன. அதே போல் நகர்ப்புறக் குடியிருப்புகளில் காணப்படும் பணிகளுக்கு ஏற்ப பல படிநிலை களில் வகைப்படுத்தலாம். டிக்கின்ஸன் (R. E. Dickinson) என்ற அறிஞர் நகரங்களில் காணப்படும் கால்நடைச் சந்தை, வங்கி, பள்ளிக்கூடம், திரையரங்கு ஆகியவற்றின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிழக்கு ஆங்கிலியன் (East Anglian) நகரங்களை நான்கு படிநிலைகளில் (Urban hierarchy) பிரித்திருக்கிறார். ஸ்மெயில்ஸ் (Smailes) என்பவரும் இங்கிலாந்து, வேல்ஸ் நாட்டு நகரங்களை இவ்வாறு வகைப்படுத்தியுள்ளார். இவருடைய கருத்துப்படி ஒரு குடியிருப்பை நகரம் என்று சொல்வதற்கு அதில் குறைந்தது மூன்று வங்கிகளும், ஒரு பள்ளிக்கூடமும், ஒரு திரையரங்கும், ஒரு மருத்துவமனையும் செய்தித்தாள் வெளியீடும் இருக்க வேண்டும். மாநகரம் (city) என்பதில் அரசாங்கப் பொது மருத்துவமனையும், நிர்வாகத் தலைமை அலுவலகமும், பல்கலைக்கழகமும் மற்றவையும் இருக்கவேண்டும். நகரக்குடியிருப்புகளைப் படிநிலைகளில் வகைப்படுத்துவதன் மூலம் பிரதேசத்திற்கும் (region), நகர்க்களத்திற்கும், நகரங்களுக்கு இடையேயும் உள்ள தொடர்பு அறியப்படுகிறது.

ஒரு நகரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், ஒரு மருத்துவமனையும் இருந்தால் அந்த மாவட்டத்திற்கு மேற்கூறிய பணிகளுக்கு மையமாக விளங்குவது அந்த நகரமாகும். அந்தப்பணிகளைப் பயன்படுத்தும் பரப்பு அல்லது நகர்க்களம் சிறியதாகவே இருக்கும். ஆனால் பெரிய நகரங்களில் இந்தப் பணிகள் பெரிய அளவில் உள்ளன. அதாவது கல்லூரி, பல்கலைக்கழகம், கதிர் இயக்க வசதி (X-ray), அறுவைசிகிச்சை அறை ஆகியவை கொண்ட மருத்துவமனை போன்றவை பெரிய நகரங்களில் மட்டுமே காணப்படுகின்றன. எனவே, இச்சேவைகளைப் பயன்படுத்தும் பரப்பு முன்னதைக் காட்டிலும் பெரியதாகும். எனவே சிறிய நகரத்திற்குச் சிறிய நகர்க்களமும், பெரிய நகரத்திற்குப் பெரிய நகரக்களமும் உள்ளது. பணிகளின் சிறப்புத்தன்மைக்குத் தக்கவாறு நகர்க்களத்தின் பரப்பும் விரிவடைகிறது.

நகரங்கள் பல சமூக இயக்கங்களுக்குத் தலைமைப் பீடமாக விளங்குகின்றன. இதற்குச் சிறந்த உதாரணம் சமய இயக்கமாகும். சமயப் பணிகளும் நகரத்தின் அளவிற்கு ஏற்றபடி பரவிச் செல்லுகின்றன.

நகர்க்களத்தை வரையறுக்க நகரத்தின் உள்ளேயும் வெளியேயும் செல்லும் பொருள்களைப் (goods) பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும். நகரிலிருந்து பொருள்கள் எவ்வளவு தூரம் கொண்டு செல்லப்படுகின்றன என்பதை அறிந்து கொண்டால் அப்பொருள்களின் பரவலை வரையறுத்து விடலாம். ஆனால் இப்புள்ளி விவரங்களைச் சேகரிப்பது அவ்வளவு எளிதன்று. இதற்குப் பலர் பல குறுக்கு வழிகளைக் கையாண்டுள்ளனர். உதாரணமாக கார்டர் (H.Carter) என்பவர் ரெக்ஸ்ஹாம் (Wrexham) நகரின் பல்வேறு சேவை-மண்டலங்களை, பள்ளிக்கு (grammar school) மாணவர்களின் இல்லங்களின் தூரம், திரைப்பட விளம்பரங்களின் எல்லைப்பரப்பு, தலைமைத் தபால் நிலையம் சேவை செய்யும் பகுதிகள், சில்லறை வியாபாரி பொருள்களை விநியோகம் செய்கின்ற எல்லை, இன்சூரன்ஸ் கம்பனியின் பாலிஸிதாரர்களின் எல்லை, ஆகியவற்றைக் கொண்டு வரையறுத்திருக்கின்றார்.

நகர்க்களத்தை நிர்ணயிக்க மற்றொரு முறை யாதெனில் செய்தித் தாள்களின் சுற்றோட்டத்தை (News Paper circulation) வரையறுப்பதாகும். J.P. ஹாட்டன் (Haughton) என்பவர் ஈரி (Erie) நாட்டில் உள்நாட்டு நாளிதழ்களின் சுற்றோட்டம் அல்லது விற்பனைப் பரப்பை வரையறுத்து அதன் சேவை மண்டலத்தைக் குறித்திருக்கிறார். ஒரு நகரத்தில் அச்சிடப்பட்டு வெளியாகும் செய்தித்தாள் நகரின் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு வெளியாகும் செய்தித்தாளில் பெரும்பகுதி விளம்பரத்திற்காக ஒதுக்கப்படுகிறது. அந்நகரக் கடைகளின் விளம்பரங்களும், திரைப்படம், சமயம், ஏலம், விற்பனை ஆகியவை பற்றிய விளம்பரங்களும் வெளிவருகின்றன. இவை தவிர, நகர நிகழ்ச்சிகளும், போலீஸ் வழக்கு, விளையாட்டு, சமய நிகழ்ச்சிக்கூட்டங்கள் ஆகியவற்றைப்பற்றியும் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இச்செய்தித்தாள் உள்ளூர் நிகழ்ச்சிகளை வெளியிடுவதோடல்லாமல், உள்ளூரின் சமூக வளர்ச்சிக்கும் உதவுகிறது. நகரின் தலைமையை உணருவதற்கு இச்செய்தித்தாள்கள் மறைமுகமாக உதவி செய்கின்றன. நகரத்தின் மையத்திலிருந்து இச்செய்தித்தாள்கள் வெளி வந்தாலும் இதன் விளம்பரப் பணியின் மூலம் இவை விநியோகிக்கப்படும் பகுதிகளிலெல்லாம் பொருளாதாரப்பணிகள் முன்னை விடச்

செம்மையாக நடைபெறுகின்றன: எனவே, செய்தித்தாள் நகரின் சுற்றுப்புறப்பகுதிகளை இணைக்கின்ற ஒரு சாதனமாகும்; பெரிய நகரங்களில் அன்றாடச் செய்தித்தாள்கள் காலை, மாலை பதிப்புகளில் வெளிவருகின்றன. ஒரு பகுதியின் கருத்துக்களைப் பரப்புவதில் செய்தித்தாள்களைப் போல் ஒரு சிறந்த சாதனம் இருக்கமுடியாது. அவை விநியோகம் செய்யப்படும் பகுதிகள் நகரின் மையத்தன்மையைப் பிரதிபலிக்கின்றன. செய்தித்தாள்கள் அந்தச் சமூகத்தின் பிரதிநிதியாக விளங்குகிறது. அவற்றின் சுற்றோட்டத்தை வரையறுப்பதன் மூலம் நகரின் நகர்க் களத்தை நிர்ணயிக்கமுடிகிறது.

பெரு நகரங்களில் (metropolis) பின்னிலம் (hinterland) அல்லது நகர்க்களம் மிகவும் சிக்கல் நிறைந்ததாக உள்ளது: முதன்மைத் தொழில்களும் (Primary Occupation), இரண்டாம் வகைத் தொழில்களும் (secondary) இங்கு அதிகமாக இருப்பதால், இதன் பின்னிலம் அல்லது நகர்க்களம் அதிகப்பரப்பில் அமைந்துள்ளது. அத்துடன் இதில் பல்வேறு பின்னில மண்டலங்களும் காணப்படுகின்றன. 1930 ஆம் ஆண்டு லீட்ஸ் (Leeds), பிராட்போர்டு (Bradford) ஆகிய நகரங்களை ஆராய்ந்த டிக்கின்சன் அவற்றில் மூன்று பின்னில மண்டலங்களைக் கண்டறிந்தார். இதேபோல் ஹீகெட் விவியன் (Huguette vivian) என்பவர் கிரினோபில் (Grenoble) நகரத்தை ஆராய்ந்து அதன் பிரதேசத் (region) தொடர்பைக் கண்டறிந்தார். கிரினோபில் சிறப்பு உற்பத்தித் தொழிலுடைய நகரமாகும். இதில் பல்கலைக் கழகங்களும் உள்ளன. பிரஞ்சு ஆல்பஸ் மலைகளின் மனமகிழ்வூட்டும் இடங்களும் அருகே அமைந்திருக்கின்றன. எனவே, இது சுற்றுப்புறத்திற்கு ஒரு மைய இடமாகப் பணி புரிகிறது. இந்நகரத்தின் பின்நிலத்தை ஐந்து மண்டலங்களாக இவர் பிரித்துள்ளார். இதன்படி மையப்பகுதி, கட்டடங்கள் (நெருக்கமாக) அமைந்த பகுதி (built up area), அதனைச் சுற்றி புறநகர் (suburb) பகுதி, அதனை அடுத்து சுற்றுப்புற மண்டலம் (Environs) அதனைச்சுற்றி அருகாமை மண்டலம் (vicinity) ஆகியவை காணப்படுகின்றன.

பொதுவாக நகர்க்களத்தை நிர்ணயிப்பது கடினமாகும். ஏனெனில், ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு நகர்க்களம் அல்லது சேவை மண்டலம் உள்ளது. அது காலத்திற்கு காலம் மாறிக் கொண்டும் இருக்கிறது. இதைத்தவிர அருகிலிருக்கும் வேறு நகரங்களின் நகர்க்களத்துடன் இணைந்து விடுவதும் உண்டு.

26. நகர்ப்புற மக்களின் தன்மைகள்

நகர்ப்புற மக்கள்தொகையின் பல்வேறு இயல்புகள் பல்வேறு நகரங்களில் காலத்திற்கு காலம் மாறுபடுகின்றன. இந்த இனப் புள்ளியல் (demographic) தன்மைகளிலேயே மிக முக்கியமானது கட்டடமைப்பாகும். இப்புள்ளியியல் அமைப்பு (a) வயது (b) பால் பாகுபாடு (sex) (c) மக்கள் தொகை மாற்றத்தின் விகிதம் ஆகியவற்றின் மூலமாகக் கணிக்கப்படுகிறது.

20 ஆம் நூற்றுண்டில் மேற்கத்திய நகரங்களில் மென் ரகத் (light industries) தொழிற்சாலைகளும், சேவகத் தொழில்களும் அந்நகரங்களின் பொருளாதாரத்திற்குப் பெரிய பங்கைச் செலுத்தி வருகின்றன. மென் ரகத் தொழில்கள் எளிதாகச் செய்யக் கூடியதாகையால் பெண்கள் இதில் ஈடுபடுகிறார்கள். எனவே நகர்புறங்களில் மக்கள் தொகையில் பெண்கள் சத விகிதமே அதிகமாக இருந்து வருகிறது. கிராமப் புறங்களில் பெண்கள் சதவிகிதம் குறைவாகவே இருக்கிறது. இங்கிலாந்து, வேல்ஸ் போன்ற பகுதிகளில் 100 ஆண்களுக்கு 120 பெண்கள் வீதம் காணப்படுகின்றனர். ஏனெனில் நகர்ப்புறங்கள் கிராமப் புற மக்களைக் கவர்ந்திழுக்கும் மையங்களாக உள்ளன. ஆனல் இந்தியாவில் இதற்கு மாருக நகர்ப்புறங்களில் 100 ஆண்களுக்கு 86 பெண்கள் காணப்படுகின்றனர்.

இங்கிலாந்து, வேல்ஸ் ஆகிய பகுதிகளில் நகரங்களின் மக்கள் தொகையில் குழந்தைகள், வயது வந்தவர்களின் சதவிகிதம் குறைவாகவே இருக்கிறது. 24 முதல் 54 வயதுககு உட்பட்ட மக்களே இங்கு அதிகமாகக் காணப்படுகின்றனர். இந்தியாவில் வயது வாரியாகக் காணப்படும் கிராம, நகரமக்களின் சதவிகிதம் பின்வருமாறு;

அட்டவணை : 4

வயது வாரியாகக் கிராம, நகர மக்கள் தொகை

சதவிகிதம், 1961

வயது	மொத்தம்(%)	கிராமப்புறம்(%)	நகர்ப் புறம்(%)
0-14	41.02	41.47	39.00
15-34	32.04	31.31	35.36
35-59	21.26	21.34	20.89
60+	5.63	5.83	4.74

மேற்கண்ட அட்டவணையிலிருந்து 15 முதல்34 வயதுக்குட்பட்ட மக்கள் அதிகம் பேர் கிராமங்களில் வசிக்கிறார்கள் என்பதை அறிகிறோம். மேலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் நகர்ப்புறத்திலிருப்பதைவிட, கிராமப் புறத்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

நகரத்திற்குள் சேவையை (service) முதற் பணியாகக் கொண்டுள்ள நகரங்களில் பெண்களே அதிகம் காணப்படுகின்றனர். கனரகத் தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களில் ஆண்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். கனரகத் தொழிற்சாலைகளில் வேலை கடினமாக இருப்பதாலும். உடலுறுதி தேவைப் படுவதாலும் ஆண்களே இங்கு மிகுதியாகக் காணப்படுகின்றனர்.

நடுத்தர, பிற்பட்ட வகுப்பிலிருந்துதான் அதிகமான பெண்கள் தனியாகவே குடியேறுகிறார்கள். இவ்வகையில் ஆண்கள் உழைப்பாளர் வகுப்பிலிருந்துதான் குடியேறுகிறார்கள். வளருகின்ற பெரிய நகரங்களில் குடியேறும் இளைஞர்களில் பெரும்பாலோர் திருமண மாகாதவர்கள். ஏனெனில் வேலை தேடி இவர்கள் பெரிய நகரங்களுக்கு வருவதால், வேலை நிரந்தரமாகும் வரை இவர்கள் திருமணம் செய்து கொள்ளுவதில்லை. வெகு தூரத்திலிருந்து குடியேறுகின்றவர்களில் ஆண்களின் எண்ணிக்கையே பெண்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. பெண்கள் அருகிலிருக்கும் பகுதிகளிலிருந்துதான் குடியேறுகிறார்கள். இந்தியாவில் குறுகிய தூரத்திலிருந்து நகரங்களுக்கு வருகின்ற ஆண்களின் சதவிகிதம் 54. 4% ஆக இருக்கும் போது பெண்களின் சதவிகிதம் 73. 8% ஆக உள்ளது.

அட்டவணை: 5

இந்தியாவில் நகரங்களில் குடியேற்ற வகையும் குடியேறு பவரின் சதவிகிதமும் (1961)

குடியேற்ற வகை	மொத்தசதவிகிதம்	ஆண்(%)	பெண்(%)
குறுகிய தூரம்	67.8	54.4	73.8
நடுத்தர தூரம்	24.4	26.8	19.0
நீண்ட தூரம்	10.8	18.8	7.2

தன் இனத்தைச் சார்ந்தவர்கள் ஏற்கனவே 'குடியேறி இருந் தால், அதே பகுதிகளுக்குத் தாங்களும் குடியேறுவது பழக்கத்தில் உள்ளது. எனவே இனம், மொழி, பொருளாதாரம் இவற்றின் அடிப்படையில் நகர்ப்புறங்களில் மக்கள் தனித்தனிக் குழுக்களாக வசிக்கின்றனர்.

நகர்ப்புறங்களில் வெளியேற்றம் ஏற்பட்டால் இளைய நடுத் தர வயதினர் மட்டுமே வெளியேறுகின்றனர். வயது வந்தவர்கள் அங்கேயே தங்கி விடுவதால் வயதானவர்களின் எண்ணிக்கை அங்கு அதிகமாகக் காணப்படுகிறது.

செறிவு:

தற்கால மேற்கத்திய நகரங்களில் மையப்பகுதியில் குடி யிருப்பு வீடுகள் காணப்படாததால், மக்கள் தொகைச் செறிவு அங்கு குறைவாக உள்ளது. இந்நகரங்களில் மையப் பகுதியி லிருந்து புற நகர் (suburb) பகுதிகளை நோக்கிச் செல்லச் செல்ல மக்கள் தொகைச் செறிவு அதிகமாகிக் கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் நகரத்தில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து வசதிகளேயாகும்.

பெரிய நகரங்களில் மையப்பகுதிகளில் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது. அதிகமாக விரும்பப்படுகின்ற மதிப்புள்ள இடங்கள் நகரின் மையத்தைச் சுற்றியிருப்பதாலும் பல திசைகளி லிருந்து சாலைகள் மையத்தை நோக்கிக் குவிந்திருப்பதாலும், போக்குவரத்து வசதி உச்சநிலையில் இருப்பதாலும் இங்கு மக்கள் தொகைச் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது.

ஏழை எளியவர்கள் பயணம் செய்வதற்கு ஆகும் செலவைக் குறைப்பதற்காக மையத்தை ஒட்டியே குடிசைகளிலும் கூடா

ரங்களிலும் நெருக்கமாக வசிக்கின்றனர். எனவே, இங்குச் செறிவு அதிகமாக உள்ளது. வசதி நிறைந்தவர்களால், பயணம் செய்ய முடியுமாதலால் அவர்கள் புற நகரின் விளிம்புகளில் அமைந்துள்ள பெரிய தலங்களில் நவீன வீடுகளைக் கட்டிக் கொள்ளுகிறார்கள். எனவே இங்குச் செறிவு குறைவாக உள்ளது.

இதற்கு மாறாக கிழக்கு நாடுகளிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் வசதி நிறைந்தவர்கள்தான் மையப்பகுதியில் வசிக்கின்றனர். ஏழைகள் விளிம்புகளில்தான் வாழ்கிறார்கள். இதற்குப்பல காரணங்கள் உள்ளன. அவையாவன;

(1) நகரில் போக்கு வரத்து வசதி குறைவாக உள்ளது.

(2) சமூக அமைப்பின் தன்மைப்படி பணக்காரர்கள் நகரின் மையத்தில் வசிப்பதையே பெருமையாகக் கருதுகிறார்கள்.

(3) மையத்தில் இடம் கிடைப்பது அரிதாகையால் ஒரே இடத்தில் பலர் வசிக்க நேரிடுகிறது. எனவே இங்குச் செறிவு அதிகமாக உள்ளது.

27. மைய இடத்துக் கொள்கை

(Central Place Theory)

நகரங்களின் அளவுக்குத் தக்கவாறு அவற்றின் நகர்க்களமும் மாறுபடுவதால் நகர்க்களத்தின் அடிப்படையில் நகரங்களை வகைப்படுத்த இயலும். ஒரே அளவுள்ள (rank) நகரங்கள் ஒன்றுக்கொன்று சமமான இடைவெளியில்தான் அமைந்திருக்கின்றன. ஏனெனில், அவை நெருக்கமாக இருந்தால் அவற்றின் நகர்க்களம் ஒன்றுசேர்ந்து விடும். அவ்வாறு இருந்தால் குறிப்பிட்ட ஒரு நகரம் பணிபுரிவதற்கு இடமே (சேவை மண்டலம்) இல்லாமல் போய்விடும். எனவே, ஒரே அளவுள்ள நகரங்கள் ஒரே இடைவெளி தூரத்தில் அமைந்திருக்கின்றன. உதாரணமாக, பிரிட்டனில் சிறிய நகரங்கள் ஒவ்வொன்றும் 10 மைல் (16 கி. மீ) இடைவெளிகளில் காணப்படுகின்றன. பெரிய நகரங்களுக்குப் பெரிய நகரங்கள் இருப்பதால், அவை அதிக இடைவெளிகளில் காணப்படுகின்றன. பிரிட்டனில் 4,00,000 பேர்களுக்கு மேல் வசிக்கின்ற நகரங்கள் பத்துதான் உள்ளன. இவையே பல இடங்களில் பிரதேச மையங்களாக விளங்குகின்றன; பிரிட்டனில் காணப்படுவதுபோல் நகர மக்கள் தொகை மற்றநாடுகளில் இல்லையாதலால் அங்கு நகரங்களின் இடைவெளி வேறுகக் காணப்படுகிறது. பிரான்சு, வட அமெரிக்கா போன்ற நாடுகளின் நகரங்களில் மிகப் பெரிய நகர்க்களம் அல்லது சேவை மண்டலம் காணப்படுகிறது. ஆனல் முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளில், நகரங்களின் அளவிலும் இடைவெளியிலும் சற்று மாறுபட்ட அமைப்புக் காணப்படுகிறது. இங்குச் சிறிய நகர்க்களத்தைக் கொண்டுள்ள சிறிய நகரங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. இங்குப் பெரிய நகரங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. ஆகவே மருத்துவம், கல்வி, வாணிகம், பொழுதுபோக்கு போன்ற வசதிகள் இப்பெரிய நகரங்களில்தான் சிறப்பாகக் காணப்படுகிறது. இத்-

நாடுகளில் பொதுவாகத் தலைநகரமும், வேறு ஓரிரு நகரங்கள் மட்டுமே இவ்வாறு மிகப்பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளன. இதனால்தான் கிராமப்புற மக்கள் இந்த வசதிகளைப் பெறவேண்டி இந்த நகரங்களுக்குக் குடியேறுகின்றனர். மலேசியாவில் கோலாலம்பூரும், தாய்லாந்தில் பாங்காக் (Bangkok) நகரும் இதற்கு உதாரணங்களாகும். இப்பகுதிகளில் சிறிய நகரங்களை அடுத்து உள்ளவை இப்பெரிய நகரங்களேயாகும்.

சாதகமான சூழ்நிலையில் இவ்வாறு ஒரே அளவுள்ள இந்நகரங்களுக்கு இடையிலுள்ள தூரம் சமமாக இருப்பது மட்டுமன்றி அவற்றின் நகர்க்களத்தின் வடிவமும் சீராக உள்ளது. அதாவது ஒரே அளவுள்ள எல்லா நகரங்களிலும் சேவை மண்டலமும் ஒரே வடிவத்தைப் பெற்றிருக்கின்றன.

ஒரு நகரம் அதன் நகர்க்களத்தில் (சேவை மண்டலம்) வசிக்கும் மக்களுக்குச் செய்யும் பணிகளை மையப் பணிகள் (Central service) என்றும் இம் மையப்பணிகளைச் செய்யும் நகரம் அச் சேவை மண்டலத்தின் மையப்பகுதி (Central place) என்றும் அழைக்கப்படுகிறது.

மைய இடத்தைப்பற்றிய கொள்கை (Central place Theory) முதன்முதலாக வான்தூனன் (Vonthunen) என்பவரால் 1826 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவருடைய கொள்கைப்படி சில சாதகமான சூழ்நிலைகளில் ஒரே சீராக உள்ள ஒரு நிலப்பகுதியின் மையத்தில், ஒரு மாநகரம் வளர்ச்சி பெறுகிறது. இதனைச் சுற்றி நிலப்பயன்பாட்டு (land use) வட்டங்களும் வளர்ச்சி பெறுகின்றன. இந்த நிலத்தில் மைய நகரத்திலிருந்து விலகிச் செல்லச் செல்ல போக்குவரத்துக் கட்டணமும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. (படம் 61)

வால்டர் கிருஸ்டாலர் (Waltar Christaller) என்ற அறிஞர் 1933 ஆம் ஆண்டு மைய இடத்துக் கொள்கை (Central place Theory) ஒன்றை வெளியிட்டார். இக்கொள்கையின்படி நிலத்தின் உற்பத்தித் திறன்தான் (Productivity) ஒரு மாநகருக்குப் பக்க பலமாக இருக்கிறது. சுற்றியுள்ள நிலப்பகுதிக்குத் தேவையான சேவைகளைச் செய்வதற்காகவே இந்த நகரம் இயங்கி வருகிறது. சுற்றுப்புறத்திற்காகவே செய்யப்படும் இச்சேவைகளை மையப்பணிகள் (Central functions) என்றும், அவற்றைச் செய்துவரும் குடியிருப்புகளை மைய இடம் (Central place) என்றும் கிருஸ்டாலர் குறிப்பிடுகிறார்.



படம் 61 வான்தூனன் (*Vothumen*)
கொள்கைக்கான விளக்கப்படம்

வான்தூனன் கொள்கையில் காணப்படுவதுபோல் ஒவ்வொரு மைய இடத்திற்கும் ஒரு வட்டமான துணைப்பகுதி (Tributary area) உண்டு. இந்த வட்டங்களின் நடுவில்தான் நகரம் உள்ளது. இந்த வட்டத் துணைப்பகுதிகள் அருகருகே காணப்பட்டால் அவைகளுக்கு இடையில் சேவை செய்யாத (unserved) இடங்கள் காணப்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்காக கிரிஸ்டாலர் வட்டங்களுக்குப்பதிலாக அறுகோண வடிவத்தைத் (hexagonal) தேர்ந்தெடுத்தார். இதில் சேவை செய்யப்படாத (unserved) இடங்களே இல்லை. சிறிய மைய இடத்திற்குச் சிறிய அறுகோண சேவை மண்டலமும், பெரிய மைய இடத்திற்கு பெரிய அறுகோண சேவை மண்டலமும் அமைந்திருக்கின்றன. கிருஸ்டாலர் மேலும் குடியிருப்புகளின் அளவையும், சராசரி மக்கள் தொகையையும், அவைகளிடையே உள்ள தூரத்தையும், அவற்றின் துணைப்பகுதியின் (tributary area) அளவு, மக்கள் தொகை ஆகியவற்றையும் கண்டறிந்தார். கிருஸ்டாலரின் கருத்துப்படி எல்லா மைய இடங்களும் ஒழுங்கு முறையைப் பின்பற்றி வருகின்றன. பெரியதிலிருந்து சிறியதுவரை குடியிருப்புகள் 1: 2: 6: 18: 54 என்ற விகிதங்களில் அமைந்திருக்கின்றன. அதாவது ஒவ்வொரு சிறிய குடியிருப்பும் 4 கிலோமீட்டர் ஆரத்

திற்கு (radius) சேவை செய்கின்றது. அறுகோண வடிவில் குடியிருப்புகள் இடைவெளிக்குத் தக்கவாறு வகைப்படுத்தப்படுகின்றன. எனவே, ஒரே அளவும், பணியும் கொண்ட குடியிருப்புகளின் இடைவெளி தூரம் (distance) அதற்கு முந்திய அளவு குடியிருப்புகளின் இடைவெளி √ என்ற அளவில் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. உதாரணமாகப் படத்தில் (படம் : 62)



படம் : 62

படம் : 62 கிருஸ்டாலரின் மையஇடத்துக் கோள்கைக்கான விளக்கப்படம்

A க்கும் B க்கும் இடையில் உள்ள தூரம் A க்கும் C க்கும் இடையில் உள்ள தூரத்தைப்போல் √ மடங்கு அதிகமாகும். குடியிருப்புகளில் கீழ்படி நிலைகளில் (rank) உள்ள நகரங்கள் சம இடைவெளியில் அமைந்திருக்கின்றன. அவற்றின் பின்நிலங்கள் (hinterland) அறுகோண வடிவைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு 6 நகரங்களுக்கும் பெரிய நகரம் ஒன்று வீதம் அமைந்துள்ளது. இந்தப்பெரிய நகரமும் அதே அளவுள்ள நகரங்களுடன் சமமான இடைவெளியில் அமைந்திருக்கிறது. இவற்றிற்கும் அறுகோண பின்நிலம் (hinterland) அல்லது சேவை மண்டலம் இருக்கிறது. கிருஸ்டாலரின் கொள்கைப்படி கீழ்படி நிலையிலுள்ள நகரங்கள் 7 கிலோமீட்டர் இடைவெளியில் அமைந்திருக்கின்றன. இதற்கு

அடுத்த பெரிய நகரம் அதற்கு முந்திய அளவு நகரத்தைப்போல் பரப்பிலும், மக்கள் தொகையிலும் மூன்று மடங்கு அதிகமாகச் சேவை செய்கிறது. எனவே, அவை 12 கிலோமீட்டர் இடைவெளியில் அமைந்திருக்கின்றன. ($\sqrt{} \times 7 = 12$). எனவே இவற்றின் பின்நிலமும் மூன்றுமடங்கு பெரியதாகிறது. இந்த அமைப்பை கிருஸ்டாலர் K_3 படிநிலை அமைப்பு என்று குறிப்பிடுகிறார். K_3 நகரம் என்பது ஒரு சந்தை (market) நகரமாகும். இது சேவை செய்யும் பகுதியின் ஆரம் (radius) 4 கிலோமீட்டர் ஆகும். இதேபோல் இதைவிடப் பெரிய நகரம் K_4 என்ற படிநிலை அமைப்பைக் கொண்டிருக்கிறது. இதில் தூரம் செல்லச் செல்ல போக்குவரத்துக்கட்டணம் அதிகமாகிக்கொண்டே இருக்கும். இதனை அடுத்துள்ள பெரிய நகரம் நிர்வாக நகரமாகும் (administrative town). இது K_7 படிநிலை அமைப்பைக் கொண்டது.

லாஷ் (Losch) என்ற ஜெர்மானிய அறிஞர் கிருஸ்டாலரின் அறுகோண சேவை மண்டலத்தின் கோணத்தை (angle) சற்று மாற்றியமைத்திருக்கிறார். இவருடைய கொள்கைப்படி நகரங்களுக்கிடையே, கிருஸ்டாலரின் அமைப்பில் இருப்பதைப்போல் சீரான விகிதம் இல்லை.

கிருஸ்டாலரின் அறுகோண மைய இடத்துக் கொள்கையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. புவியில் நகரங்களின் சேவை மண்டலங்கள் ஒன்றின்மீது ஒன்றாக (overlap) கலந்து காணப்படுகின்றன. ஆனால் கிருஸ்டாலரின் கொள்கையில் சேவை மண்டலங்கள் ஒன்றின்மீது ஒன்றாக இல்லாமல் காணப்படுகின்றன. பெரிய நகரங்கள் வளர்ச்சி பெற்றுவிட்டால் சிறிய குடியிருப்புகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. கிருஸ்டாலரின் கொள்கையில் பெரிய நகரங்களின் அருகில் சிறிய குடியிருப்புகளும் வளர்ச்சி பெறுவதாகக் காட்டப்பட்டிருக்கிறது. பெரிய நகரங்களுக்கும், சிறிய குடியிருப்புகளுக்கும் இடையே உள்ள விகிதம் நடைமுறையில் காணப்படவில்லை. கிருஸ்டாலரின் கொள்கையில் பெரிய நகரங்களின் சேவை மண்டலத்தில் சிறிய குடியிருப்புகளின் சேவை மண்டலமும் அடங்கி விடுவதால் போக்குவரத்து அமைப்பு மிகவும் சிக்கலாகி விடுகிறது.

கிருஸ்டாலரின் மைய இடத்துக் கொள்கை ஒரே சீரான நில அமைப்புக் கொண்டுள்ள பகுதியில் மட்டுமே பொருந்துகிறது. கரடுமுரடான பகுதிகளில் சேவை மண்டலத்தின் பரப்பு, அல்லது எல்லை பாதிக்கப்படுகிறது. இதேபோல் அரசியல் காரணங்களி

னும் இக்கொள்கை பொருந்தமற்றதாகி விடுகிறது. உதாரண மாக எல்லைப் பகுதிகளில் (border areas) அமைந்திருக்கும் நக ரங்களின் சேவை மண்டலம் அந்நாட்டு எல்லையைத் தாண்டி விரிவடைய முடியாது. எனவே எல்லைப்புறப் பகுதிகளில் கிருஸ் டாலரின் கொள்கை முரணாக இருக்கிறது.

சேவை மண்டலத்தைப்பற்றி ஆராய்வது நமக்குப் பயனுள்ள தாக இருக்கிறது. தொழிற்சாலை, வாணிகம், உற்பத்தி ஆகிய வற்றைத் தொடங்கும்போது அவற்றின் பொருள்களும் சேவை யும் நகரத்தைச்சுற்றி எவ்வளவு தூரத்திற்குத் தேவைப்படும் என்பதை வரையறுக்க இது உதவுகிறது. அதே சமயத்தில் எந்த நகரில் அமைத்தால் எல்லாப் பகுதிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அறியவும் இம்முறை பயன்படுகிறது. இதே போல் அரசியலுக்கும் இது பயன்படுகிறது. ஒரு பகுதியில் எது மைய நகரம் என்று கருதப்படுகிறதோ அதுதான் அப்பகுதியின் தலைநகராகி விடுகிறது. மாவட்டத் தலைநகரங்கள் இவ்வாறு ஏற்பட்டவையே.

அளவு வரிசை விதி (Rank size Rule) :

ஒரு பகுதியிலிருக்கும் எல்லா நகரங்களையும் மக்கள்தொகை யின் அளவுப்படி மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தினால் 'n' நக ரத்தின் மக்கள்தொகை அந்த பகுதியின் பெரிய நகரத்து மக்கள் தொகையில் $\frac{1}{n}$ பங்கு இருக்கும். அதாவது ஒரு பகுதியில் 10 நகரங்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். மக்கள் தொகையின்படி அவற்றை மேலிருந்து கீழாக வரிசைப் படுத்திக் கொள்வோம். இந்த வரிசையில் உதாரணமாக 7வதாக அமைந்திருக்கும் நகரத்தின் மக்கள்தொகை முதல் நகரத்தின் மக்கள் தொகையில் $\frac{1}{7}$ பங்கு இருக்கும். இதேபோல் 6வதாக அமைந்திருக்கும் நகரத்தின் மக்கள்தொகை முதல் நகரத்தின் மக்கள்தொகையில் $\frac{1}{6}$ பங்கு இருக்கும். இதுவே அளவு வரிசை விதியாகும். இவ்விதியின்படி ஒரு பகுதியில் இருக்கும் நகரங்கள் அளவில் $1, \frac{1}{2}, \frac{1}{3}, \frac{1}{4}, \ldots\ldots\ldots\ldots \frac{1}{n}$ என்ற வரிசையில் அமைந் திருக்கும்.

அளவு வரிசை விதி மக்கள் தொகைப்புள்ளி விவரங்களி லிருந்து அமைக்கப்பட்டதாகும். இவ்விதியில் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைவரை நகரங்களில் மக்கள்தொகை சீராக உயர்ந்து வரு வதைக் காண்கிறோம். இவ்விதி பெரிய பிரதேசங்களுக்கு மட்டுமே பொருந்துகிறது.

28. புறநகர்

(Suburb)

நகர்ப்புறத்தில் காணப்படும் குறிப்பிட்ட இயக்கங்கள் தாம் (forces) நகரின் பணி மற்றும் அமைப்புக்குக் காரணமாக இருக்கின்றன. நகரின் அமைப்புக்கும் அதன் போக்குவரத்துக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. போக்குவரத்து வசதிகள் வளர்ச்சியடைவதற்கு முன்னால், நகரின் மையத்தை நோக்கிச் செல்கின்ற (centripetal forces) தன்மையே காணப்பட்டது. விளிம்பிலிருந்து மையத்தை நோக்கி நகர்ப்புற பணிகள் சில இடம் பெயர்ந்தன. ஏனெனில், மையப்பகுதி ஏற்கனவே வளர்ச்சியடைந்திருப்பதால் இங்குத் தொழிலாளர்கள் எளிதில் கிடைக்கிறார்கள். தொழிற்சாலைகளும் மையப்பகுதியிலேயே காணப்பட்டன. நகரத்தில் வாழ்ந்த தொழிலாளர்களில் பெரும்பாலோர் தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வசித்துவந்தனர். ஆகையால், இவர்கள் தம் வீடுகளுக்கு நடந்தே சென்றுவந்தனர். இங்குச் சிறிய இடத்தில் கட்டடங்களும், வீடுகளும் நெருக்கமாகக் குழுமி அமைந்திருந்தன. இங்குச்சில தெருக்கள் குறிப்பிட்ட வியாபாரத்திற்குப் புகழ்பெற்றிருப்பதால் அதன் தொடர்பாக உள்ள மற்றப் பணிகளும் அத்தெருக்களிலேயே அமைகின்றன. மேற்கூறிய வசதிகளால் புதிய தொழில்களும் விளிம்பிலிருந்த வேறு பணிகளும் மையத்தை நோக்கி இடம் பெயர்கின்றன. இவைகளைத்தவிர நகர மக்களில் சிலர் நகரின் மையத்தில் வசிப்பதைப் பெருமையாகக் கருதுகின்றனர். இங்கு நிலத்தின் மதிப்பு அதிகமாக இருப்பதால் அங்கு வசிப்பதை பெருமையாகக் கருதி மையத்திற்குக் குடி பெயர்கின்றனர். சில வசதி படைத்த குடும்பங்களும் இவ்வாறே மையத்தை விரும்புகின்றன. இதனால்தான் மையப்பகுதியில் மேலும் மேலும் நெருக்கம் ஏற்பட்டு பல மாடிக்கட்டடங்கள் தோன்றுகின்றன.

போக்கு வரத்து வசதிகள் வளர்ச்சியடைந்த பிறகு மையத்தை விட்டு விலகிச் செல்லும் (centrifugal forces) தன்மை காணப்பட்டது. மையப்பகுதியில் நிலத்தின் மதிப்பு அதிகமாகிக் கொண்டு வருவதாலும், வரிகள் (taxes) அதிகமாக இருப்பதாலும், போக்குவரத்து நெரிசலினாலும், போக்குவரத்துக் கட்டணம் அதிகமாக உள்ளதாலும், விரிவுபடுத்த இடவசதி இல்லாமையாலும், காற்று, வெளிச்சம் ஆகியவை குறைவாக இருப்பதாலும், சந்தடி அதிகமாக உள்ளதாலும், தேவையான தலம் (site) கிடைக்காததாலும், அரசு கட்டுப்பாடுகளினாலும் நகர்ப்புறப்பணிகள் பல மையத்தைவிட்டு விலகி விளிம்புப்பகுதிகளுக்கு இடம் பெயர்கின்றன.

19 ஆம் நூற்றாண்டில் நீராவி ரெயில் வண்டிகளின் பயனால் நகரங்களின் உருவவியல் அமைப்புகளில் பல மாற்றங்கள் தோன்றலாயின. ரெயில்பாதைகள் முதன்முதலில், ஏற்கனவே அமைந்திருந்த குடியிருப்புகளை ஒரு மைய நகரத்துடன் (Central city) இணைப்பதற்காக அமைக்கப்பட்டன. அவற்றின் இடையில் சில இடங்களில் வெட்ட வெளியில் (open land) ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுவதுண்டு. நாளடைவில் இந்த ரயில் நிலையங்களைச் சுற்றி நகர்ப்புறக் குடியிருப்புகள் வளர்ச்சியடைகின்றன. அருகருகே அமைந்துள்ள இரு ரெயில் நிலையங்களைச் சுற்றி நகர்ப்புற வளர்ச்சி ஏற்பட்டால் இரு நகரங்களும் நாளடைவில் இணைந்துவிடுகின்றன. இவ்வாறு வளர்ச்சி பெற்ற குடியிருப்புகள் ரெயில்பாதையின் வழியே வட்ட வட்டமாகக் காணப்படுகின்றன. இக்குடியிருப்புகள் ரெயில் போக்குவரத்தையே முழுமையாக நம்பியுள்ளன. ரெயில் போக்குவரத்துக் கட்டணம் குறைவாக இருந்ததால் பெரும்பாலான மக்கள் நகருக்கு வெளியே வசிக்கத் தொடங்கினர். வேலைக்கு வந்துபோக இவர்கள் ரெயில் போக்குவரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். எனவே, குடியிருப்பு வீடுகள் நகரின் மையத்திலிருந்து விலகி அமைந்தன. மோட்டார் கார்களும் நகர உருவமாற்றத்திற்குத் துணைநின்றன. விளிம்புகளில் சிறிது சிறிதாகக் குடியிருப்பு வீடுகள் தோன்றுவதற்கு இவை உதவி செய்தன.

மேற்கூறிய தன்மைகளால் தற்கால பெரிய நகரங்கள் பெரும்பாலானவற்றில் காணப்படும் புதிய பண்பு யாதெனில், அது புறநகர் (suburb) குடியிருப்புகளின் வளர்ச்சியாகும். பெரிய நகரங்களைச் சுற்றிலும் இக்குடியிருப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. புறநகரின் வளர்ச்சிக்குக் காரணம் மக்கள்தொகைப்

பெருக்கமேயாகும். நகரத்தில் காணப்படும் பொருளாதார வசதிகளும் வாய்ப்புகளும் கிராமப்புறங்களிலிருக்கும் மக்களைக் கவருகின்றன. இதனால் நகரத்தில் மக்கள் தொகை பெருகி விடுகிறது. இதைத்தவிர நகரத்திலும் இயற்கையான பெருக்கம் (natural growth) ஏற்படுகிறது. இவ்விரு பெருக்கங்களினால் நகரில் இடநெருக்கடி ஏற்பட்டு மக்களில் ஒரு பகுதியினர் புறநகர்ப் பகுதிகளில் படிப்படியாகச் சென்று குடியேறுகின்றனர்.

கிராமப்புறத்தில் மக்கள்தொகை நிலையாக இருந்தாலும், குடும்பங்கள் பெருகும்போதும், பெரிய குடும்பங்கள் பிரிக்கப்பட்டுச் சிறு குடும்பங்களாக மாறும்போதும் அதிக வீடுகள் தேவைப்படுகின்றன. பெரிய வீடுகள் குறைந்த வாடகைக்குப் புறநகர்ப் பகுதியில்தான் கிடைக்கும். சில நகரவாசிகளுக்கு நெருக்கடியில்லாத பகுதியில் வசிக்கவேண்டும் என்ற விருப்பம் ஏற்படும்போதும் அவர்கள் புறநகரைத்தான் நாடிச்செல்கின்றனர்.

புறநகரில் இடவசதி இருப்பதால் வீடுகள் பெரிதாகவும், கலையழகுடனும் கட்டப்படுகின்றன. நிலத்தின் விலையும், கட்டடப் பொருள்களின் விலையும் இங்குக் குறைவாக உள்ளதால் பெரிய பரப்பில் குறைந்த செலவில் வீடுகள் கட்ட வாய்ப்பிருக்கிறது. தற்கால மக்கள், அனைத்து வசதிகளும் பொருந்திய தனித்த வீடுகளையே விரும்புகின்றனர். இவைகள் அனைத்திற்கும் புறநகர் பகுதியில்தான் வசதி கிடைக்கிறது.

புறநகர் வளர்ச்சியின் வரலாறு எல்லா மேற்கத்திய நகரங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. அமெரிக்காவில் 19 ஆம் நூற்றாண்டில் ரெயில் பாதைகள், சாலைகள், டிராம் பாதைகள், ஆகியவற்றின் ஓரங்களில்தான் புறநகரங்கள் வளர்ச்சி பெற்றன. 1920 ஆம் ஆண்டில் (முதல் உலகப் போருக்குப்பின்) திடீரென்று மக்கள் பெருக்கம் காணப்பட்டது. இராணுவத்திலிருந்து திரும்பியவர்கள் புறநகர் பகுதியில் வீடுகள் கட்டிக்கொண்டதால்தான் வளர்ச்சி ஏற்பட்டது. மோட்டார் கார்களின் வளர்ச்சியினாலும் இங்கு மக்கள்தொகைபெருகியது. அமெரிக்காவில் 1915 ஆம் ஆண்டு 2½ மில்லியன் கார்கள் இருந்தன. 1930ல் இது 26 மில்லியன்களாக உயர்ந்தது. இங்கு 1947 ஆம் ஆண்டிலிருந்து 1955 ஆம் ஆண்டு வரையில் சுமார் 9 மில்லியன் மக்கள் புறநகர்ப் பகுதிகளில் குடியேறியிருக்கின்றனர். 1950 ஆண்டு மட்டும் இங்கு 30 மில்லியன் மக்கள் வசித்து வந்தனர். இதன் விளைவாக மக்கள் எங்கு வேண்டுமானாலும் வசிக்க முடியும்

என்ற நிலை ஏற்பட்டது. கார்களைப் பயன்படுத்தத் தொடங்கியதால் வீடுகளுக்கு வேலைக்காரர்களும் தேவைப்பட வில்லை. நகரின் விளிம்புகளிலும் நெடுஞ்சாலைகள், ரெயில் பாதைகள் ஆகியவற்றின் ஓரங்களிலும் குடியிருப்பு வீடுகள் பெருக லாயின. புறநகரிலிருந்து மையப் பகுதிக்கு அன்றாடம் வந்து வேலை செய்துவிட்டுத் திரும்புதல் போக்குவரத்தின் முன்னேற்றத்தினால் இயலுகிறது.

பிரிட்டனில் 1920 ஆம் ஆண்டில் முதல் உலகப் போரினால் ஏற்பட்ட இழப்பிலிருந்து மீள்வதற்குக் காலதாமதமானதால் புற நகர் வளர்ச்சி இங்குத் துரிதமாக இல்லை. ஆனால், 1930 லிருந்து வளர்ச்சி தொடர்ந்தது. பணஉதவி நிறுவனங்களும், கட்டட உதவி நிறுவனங்களும் எண்ணிக்கையில் பெருகலாயின.

இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் வீடுகள் கட்டுவது நிறுத்தப்பட்டது. பிரிட்டனில் 1945 ஆம் ஆண்டுமுதல் கட்டடங்கள் கட்டுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. உதாரணமாக லண்டன் நகரில் 1954-58 ஆம் ஆண்டுகளில் பசுமை மண்டலங்கள் (green belt) வரையறுக்கப்பட்டன. நகரம் கட்டுப்பாடின்றி பெருகுவதைத் தடுக்கவும் நகரத்தின் அருகிலிருக்கும் வயல்களில் வீடுகள் கட்டுவதைத் தடுக்கவும் இத்தகு பசுமை மண்டலங்கள் அமைக்கப் பட்டன.

தொழில்சாலைகளை நிறுவுவதற்குப் புறநகர்ப்பகுதி ஏற்றதாக இருப்பதை முதல் உலகப் போருக்கு முன்புதான் உணரப் பட்டது. இதன் விளைவாக நகரைச் சுற்றிலும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. இதனால் புறநகர் குடியிருப்பு வீடுகளும் விரிவடையத்தொடங்கின. மையப்பகுதியில் நெருக்கடி அதிகமாக அதிகமாகப் புறநகர்ப் பகுதி விரிவடையத்தொடங்கியது. போக்குவரத்துக்கு கார்கள் அதிகமாகப் பயன்படத் தொடங்கியலிருந்து புறநகர் அங்காடிகள் (Roginal shopping centres) அமைக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப்பின் 1940 ஆம் ஆண்டு முதல் மக்கள் பழைய வீடுகளிலிருந்து புற நகர்ப் பகுதியிலுள்ள புதிய வீடுகளுக்குக்குடியேறினர். பெரிய தொழில் நகரப் பகுதிகளில், நகரங்களின் விளிம்புகளில் வியக்கத்தக்க வளர்ச்சி ஏற்படுவதால் அவை அருகிலிருக்கும் நகரின் விளிம்புகளோடு இணைந்துவிடுகின்றன. இதன் விளைவாகத் தொழில் நகரங்களுக்கிடையே தொடர்ச்சி ஒன்று ஏற்பட்டு அத்தொழில் நகரப்பகுதிகள் யாவும் இணைந்து தொடர்ச்சியான

நகர்ப்புற அமைப்பை (continuous built up area) ஏற்படுத்துகின்றன. இந்த அமைப்பு கானர் பேஷன் (conurbation) எனப்படுகிறது. பிரிட்டனில் இத்தகைய கானர் பேஷன்கள் ஏழு உள்ளன. அவையாவன, (1) மத்திய கிளைடிசைட் (central clydeside), (2) டெனிசைட் (Teneside), (3) மேற்கு யார்க்ஷையர் (west yorkshire), (4) மெர்சிசைட் (merseyside), (5) தென்கிழக்கு லங்காஷையர் (South east Lancashire), (6) மேற்கு மிட்லாண்ட் (west mindlands), (7) கிரேட்டர் லண்டன் (greater london) என்பனவாகும். இதேபோல் தொழில் நகரப்பகுதிகள் ஒன்றோடொன்று இணைகின்ற பகுதிகள் உலகின் மற்ற பகுதிகளிலும் காணப்படுகின்றன, உதாரணமாக அமெரிக்காவில் மிச்சிகன் (michigan) ஏரியின் கிழக்குக்கரையில் காரி.(gary) யிலிருந்து சிகாகோ (chicago) வரையில் ஒரு தொடர்ச்சியான தொழில் நகரங்களின் பகுதி காணப்படுகிறது. ஜெர்மனியிலும் இதே போன்ற பகுதி ரூர் (Ruhr) தொழிற்பகுதியில் டுயிஸ்பர்க் (Duisburg) நகரிலிருந்து டார்ட்மண்ட் (Dortmund) வரையிலும் அமைந்திருக்கிறது.

மேற்கத்திய நாடுகளில் வசதிபடைத்தவர்கள் நகரங்களின் விளிம்புகளிலும், ஏழைகள் மையத்திலும் வசிக்கிறார்கள் மற்ற நாடுகளில் குறிப்பாக அயன மண்டல நாடுகளில் ஏழைகள் நகரத்தின் விளிம்பிலும், வசதிபடைத்தவர்கள் மையத்திலும் வசிக்கிறார்கள். நகரத்தில் கூலிவேலைசெய்து வாழும் ஏழைகள் நகரத்தின் விளிம்பில் சிறு சிறு குழுக்களாக (Squatters) வீடுகளை அமைத்துக்கொண்டு வசிக்கிறார்கள். இவைகளை சேரிகள் (Slums) என்றும் கூறுவர். 1959 ஆம் ஆண்டில் டெல்லியில் சுமார் 200,000 சேரிகள் இருந்தன. 1961 ஆம் ஆண்டில் ஜாகர்தாவில் (Djkarta) 750 000 சேரிகளும் கோலாலம்பூரில் 100,000 சேரிகளும் இருந்தன. (படம் 63)

ஷான்டி நகரங்கள் (Shanty Town) :

லத்தீன் அமெரிக்காவில் சேரிகள் போன்ற பகுதிகளை ஷான்டி நகரங்கள் என்று அழைக்கின்றனர். இவை நகரின் கட்டடப்பகுதிகளுக்கு அப்பால் விளிம்பிலுள்ள புறம்போக்கு நிலங்களிலும், கேட்பாரற்றுக் கிடக்கும் நிலங்களிலும் அமைக்கப்படுகின்றன. இந்த விளிம்புப்பகுதியில் நில வாடகையும் மிகக் குறைவாதலால் ஏழைகள் இங்கு வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். சில சமயங்களில் நகரத்திற்குள்ளும் இவர்களுடைய குடியிருப்புகள் அமைந்துவிடுவதுண்டு. போர்க் காலத்தில் பழு

தடைந்து புறக்கணிக்கப்பட்ட கட்டடங்களும், ஆளில்லாத கட்டடங்களும் ஷான்டியில் (Shanty) வசிக்கும் ஏழை மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. இந்தபழைய கட்டடங்களே இந்நகரின் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளன. இத்தகைய நகரங்கள் சில இடங்களில் ஒரே இரவில் தோன்றிவிடுவதுண்டு. சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட இக்குடியிருப்புகள் அகற்றப்பட்டாலும் குறுகிய காலத்திற்குள் மீண்டும் அதே இடத்தில் தோன்றிவிடுகின்றன. பழைய எண்ணெய் டப்பாக் களும், தகரங்களும் பனை ஓலைகளும் கட்டடப்பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன; சுகாதாரம் என்பதே இக்குடியிருப்பு களில் காணமுடியாது; இங்குச்சாலைகளும் நீர் வசதியும் இல்லை. இத்தகைய ஷேன்டி நகரங்கள் வெனிசூவேலாவில் பேரியோஸ் (Barrios) என்றும், பிரேஸிலில் (Brazil) பெவலாஸ் (Fevelas) என்றும், பெருவில் (peru) பேரிய டாஸ் (Barriados) என்றும் அழைக்கப்படுகிறது. கிராமப் புறங்களிலிருந்து குடியேறியவர் கள் அதிகமாக வசிக்கின்ற நகரங்களில் இத்தகைய ஷேன்டி நகரங்கள் நிலையாகவே உள்ளன.

ஹாரிஸ் என்பவர்ப் புறநகர் பகுதியை 6 வகைகளாகப் பிரித் திருக்கிறார். அவை (1) தொழிற்சாலைகளுக்கு அருகிலுள்ள புற நகர் (industrial fringe suburb), (2) தொழிற்சாலைகள் உள்ள புறநகர் (industrial suburb), (3) தொழிற்சாலைகள் அதிக மாகவும் வசிக்குமிடங்கள் குறைவாகவும் உள்ள புறநகர், (4) வசிக்குமிடம் அதிகமாகவும், தொழிற்சாலை குறைவாகவும் உள்ள புறநகர், (5) செயலற்ற (செயலிழந்த) புறநகர், (6) சுரங்கத்தொழிலையுடைய புறநகர்.

புறநகர் பகுதியில் ரெயில்பாதைக்கும், வீட்டுமனைகளின் மதிப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை ஹேய்ஸ் (Hayes) என்பவர் எடுத்துக்காட்டியுள்ளார். வீட்டுமனைகளின் மதிப்பு ரெயில் பாதையை விட்டு விலகிச் செல்லச் செல்ல குறைகிறது. இதேபோல் ரெயில் நிலையங்களுக்கு அருகிலிருந்து விலகிச் செல்லச் செல்லவும், இரண்டு ரெயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட நிலத்திலும் மதிப்புக்குறைந்து காணப்படுகிறது.



படம் : 63

இங்கிலாந்தின் கானர்பேஷன்கள் (1) மத்திய கிளேடிசைட் (2) டெனிசைட் (3) மேற்கு யார்க்ஷையர்_ (4) மெர்சிசைட் (5) தென்கிழக்கு லங்காஷையர் (6) மேற்குமிட்லாண்ட் (7) கிரேட்டர் லண்டன்.

29. கிராம-நகர்ப்புற விளிம்பு

(Rural-urban fringe)

தற்கால நகரங்களில் மையப்பகுதியில் நெருக்கம் அதிகமாகிக்கொண்டு வருவதால் வசிக்கும் பகுதிகளும் மற்ற தொழிற்சாலைகளும் மையத்தைவிட்டு விலகி விளிம்பிலும் அதற்கு அப்பாலும் வளர்ச்சி பெறுகின்றன. இந்த வளர்ச்சி ஒழுங்கான அமைப்பைப் பெற்றிருப்பதில்லை. நகர விளிம்புகளில் இது குறிப்பிட்ட திசையில் ஒழுங்கற்ற (haphazard) வளர்ச்சியும், மற்றத் திசைகளில் வளர்ச்சியே இல்லாமலும் காணப்படுகிறது. போக்குவரத்து வசதிகளால் நகரின் மையப்பகுதியில் வேலை செய்பவர்கள்கூட புற நகர்ப் பகுதிகளில் வசித்துக்கொண்டு அன்றாடம் மையப்பகுதிக்கு வந்து போகின்றனர். விளிம்பு (fringe) களில் நகரமக்கள் வசித்து வருவதாலும், அதற்கப்பாலும் நகரப் பண்புகள் ஓரளவு காணப்படுவதாலும், கிராமப்புறத்திற்கும், நகர்ப்புறத்திற்கும் இடையே எல்லையை நிர்ணயிப்பது கடினமாகும். இந்த விளிம்புப் பகுதியில் கிராமப்புற நகர்ப்புறப் பண்புகள் ஒன்றாகக் கலந்து விடுகின்றன. நகரத்தின் விளிம்புக்கு அப்பாலுள்ள கிராமப்புற பகுதியிலும், வானொலி, திரையரங்கு, தொலைபேசி போன்ற நகரப் பண்புகள் ஊடுருவியிருக்கின்றன. எனவே, இந்த விளிம்பு எதிலும் சேராத தன்மையைப் பெற்றிருக்கிறது. இங்கு வசிக்கும் மக்கள் சமூகத்தாலும், பொருளாதாரத்தாலும் இப்பகுதியைச் சாராதவர்களாகவே இருக்கின்றனர். விஸிங்க் (Wissink) என்பவர் இப்பகுதியை பெருத்த மாறுதல்கள் உள்ள பகுதி என்றும், காலெஜ் (Gollege) என்பவர் இதை யாருக்கும் சொந்தமில்லாத பகுதி (no man's land) என்றும் குறிப்பிடுகின்றனர்.

நிலப்பயன்பாடும் இந்த விளிம்புப் பகுதியில் கலப்படமாக இருக்கிறது. பழைய குடியிருப்புப் பகுதிகள், புதிய குடியிருப்புக்

காலனிகள், வணிகத் தலங்கள், தொழிற்சாலைகள், விளையாட்டு மைதானம், பொழுதுபோக்குப் பொது இடங்கள் போன்றவை யாவும் ஒரே சீரான பகுதியில் அமையாமல், ஒன்றோடு ஒன்று கலந்து காணப்படுகின்றன. சிட்னி (Sydney) நகரத்தை ஆராய்ந்த காலெஜ், கிராம-நகர்ப்புற விளிம்பின் ஏழு தன்மைகளைக் கீழ்க்கண்டவாறு விவரித்துள்ளார்.

(1) நிலத்தைப் பயன்படுத்தும் முறையில் தொடர்ச்சியான மாறுதல்கள் காணப்படுகின்றன.

(2) பண்ணைகள் அளவில் சிறியனவாக உள்ளன.

(3) தானிய உற்பத்தி அதிகமாக உள்ளது.

(4) மக்கள் தொகை அளவு அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கிறது. மக்கள் தொகைச் செறிவு குறைவாகவோ, அல்லது நடுத்தரமாகவோ இருக்கிறது.

(5) குடியிருப்பு வீடுகள் வேகமாகப் பரவுகின்றன.

(6) இங்குள்ள மக்களின் பொதுத்தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்படுவதில்லை. இங்குச் சேவையும் முழுமையாக நடைபெறுவதில்லை.

(7) தனித்த கட்டடங்கள் பொதுவாகக் காணப்படுகின்றன.

பெரிய நகரத்தைச் சுற்றியுள்ள விளிம்புப் பகுதியில் சாலைகளும், ரெயில் பாதைகளும் நகரை நோக்கிக் குறுகிச் செல்வதால் விளிம்பின் பரப்பில் பெரும்பகுதி போக்குவரத்துக்காக ஒதுக்கப்படுகிறது. இங்குப் போக்குவரத்துக்குப் பயன்படுகிற நிலத்தின் பரப்பு சாதாரண கிராமப்புற பகுதியில் இதற்காக ஒதுக்கப்படும் நிலத்தின் பரப்பைவிட பன்மடங்கு அதிகமாக இருக்கிறது. (படம் 64)

19 ஆம் நூற்றாண்டில் சரக்கு ரெயில்கள் நிறுத்தப்படும் (marshalling yard) இடங்கள் நகர விளிம்புகளில்தான் அமைந்திருந்தன. தற்போது நகர வளர்ச்சியினால் அவை மறைந்துவிட்டன. ஆனால், விமானதளங்கள் மட்டும் இன்றும் விளிம்புகளிலேயே அமைக்கப்படுகின்றன.



படம் 64; புதுடெல்லி கிராமம்-நகர்ப்புற விளிம்பு

நகரத்தின் எல்லைக்குள் விரும்பப்படாத பல தொழில்கள் விளிம்புப் பகுதியில் இடம் பெறுகின்றன. உதாரணமாகக் கழிவு நீர் சுத்திசெய்தல் (Sewage works), கழிவுநீரை வெளியேற்றம் செய்தல் (Pumping station), கருங்கல் ஜல்லி உடைத்தல் (graval works), செங்கல் சூளையிடுதல், இறைச்சி வெட்டுமிடம் (slaughter houses), இறைச்சி உலர்த்துமிடம் (Junk yards), எண்ணெய்க்கிடங்கு, கல்லறை (cemetaries), மனநோய் மருத்துவ விடுதி, குடிநீர் நிலையம் ஆகியவை விளிம்புப் பகுதிகளில் கட்டுக் கடங்காமலும், விரும்பத்தகாத முறையிலும் காணப்படுகின்றன. எனவே, வெர்வின் (Wehrwein) என்பவர் அமெரிக்காவில் காணப்படும் இத்தகைய விளிம்புப் பகுதியை மனிதனுல் ஏற்படுத்தப்பட்ட பாலைவனம் என்று குறிப்பிடுகிருர்.

நகர எல்லைக்குள் இருக்கும் நகரசபையின் சட்ட விதிகள் காரணமாகச் சில தொழில்கள் நகர எல்லைக்குள் அமையாமல் எல்லைக்கு வெளியே விளிம்பில் அமைகின்றன.

19 ஆம் நூற்ருண்டில் நகரத்தைச் சுற்றியிருந்த அகன்ற விளை நிலங்களில் பால்பண்ணைகளும், காய்கறித் தோட்டங்களும் அமைந்திருந்தன. நகரத்திற்குத் தேவையான பாலும், காய் கறிகளும் இங்கிருந்துதான் அனுப்பப்பட்டன. இவைகள் விரைவில் கெட்டுப் போகக் கூடியவை. ஆதலால் போக்கு வரத்து வசதிகள் நிறைந்த இப்பகுதியிலிருந்துதான் நகரத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

கட்டடங்களின் பெருக்கத்தால் விளிம்பிற்கு அருகில் காணப்படும் கிராமப்புற விளைநிலங்களில் விவசாயம் செய்வது நாளடைவில் நிறுத்தப்படுகிறது. சில சமயங்களில் நகரமக்களுக்கு இவை அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. பொதுவாக விளிம்புகளில் கிராம-நகர்ப்புறப் பண்புகள் கலந்துவிடுவதைத் தடுக்கமுடியாது.

எனவே கிராம-நகர விளிம்பு என்பது தெளிவான நகர்ப் புறத்திற்கும், விவசாயத்தை மேற்கொண்டிருக்கின்ற கிராமப் புறத்திற்கும் இடைப்பட்ட பகுதியாகும். நகர எல்லையின் முடிவோடு நகர்ப்புற வாழ்க்கை முற்றுப் பெறுகிறது. அதற்கப்பால் பண்ணைகளும், விவசாய நிலங்களும், புதிய குடியிருப்பு காலனிகளும், தொழிற்சாலைகளும், சிறப்பு அங்காடிகளும் காணப்படுகின்றன. ஆனுல் நகரத்திற்கும், கிராமப் புறத்திற்கும் இடையில் அமைந்துள்ள விளிம்புப்பகுதியில் நிலத்தின் விலை அதிகமாக

இருக்கிறது. சிறிய பண்ணைகள் இருந்தாலும் இப்பகுதியில் மக்கள் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது. இங்கு வசிக்கும் விவசாயிகள் தினமும் நகரத்திற்குத் தானியங்களையும், காய்கறி களையும் எடுத்துச்சென்று விற்று வருகின்றனர். இவர்களுக்கு நகர மக்களுடன் அன்றாடம் தொடர்பு இருப்பதால், இவர்களு டைய வாழ்க்கை முறையில் நகரப் பண்பும், கிராமப்புற பண்பும் கலந்து காணப்படுகிறது. நகர விளிம்புகளிலெல்லாம் இத்தகைய வாழ்க்கை முறையே காணப்படுகிறது. ஆனாலும், விளிம்பில் காணப்படும் பண்புகளால் இவர்களுடைய வாழ்க்கை அடை யாளம் கண்டுகொள்ள முடியாமல் உருமாறியிருக்கிறது. பூங்கா, விளையாட்டு மைதானம் ஆகியவை இங்குக் காணப்படுகின்றன.

நகரமைப்புத் திட்டங்களை வகுப்பதன் மூலம் கிராம-நகர்ப் புறப் பகுதிகளுக்கிடையே எல்லை ஒன்றை வரையறுக்க முடியும். நகர வளர்ச்சியைச் சட்டத்தின் மூலம் தடுப்பதால் திட்டமிட்டு நகரத்தை அமைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. நகரங்களைச் சிறிய அளவில் அமைப்பதால் போக்குவரத்துக் கட்டணம் குறைகிறது. ஆனால், அதே நேரத்தில் நகரத்தின் இயற்கையான பெருக்கத் தைத் தடுப்பதன் மூலம் நகர எல்லைக்குள்ளிருக்கும் நிலங்களின் மதிப்பும், கட்டடங்களின் மதிப்பும் உயர்ந்து விடுகிறது. எனவே மாநகர வளர்ச்சியை முழுமையாகத் தடுப்பதைக் காட்டிலும் பல துணைக்கோள் (Satellite Towns) நகரங்களைச் சுற்றிலும் ஏற் படுத்தலாம்.

30. நகர்ப்புறப் பிரச்சினைகள்
(Urban Problems)

நகர்ப்புறத்தின் அபரிமிதமான வளர்ச்சியும், அதனுல் ஏற்படும் வீழ்ச்சியும் நகரை நோக்கியுள்ள இரு முக்கியப் பிரச்சினைகளாகும். இந்தப் பிரச்சினைகள் நகரத்திற்கு நகரம் அளவில் வேறுபட்டு விளங்குகின்றன; திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரங்களைக்காட்டிலும் தன்னிச்சையாகத் தோன்றி வளர்ச்சிபெற்ற நகரங்களில் இப் பிரச்சினைகள் அதிகமாக உள்ளன. இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உலகநாடுகள் பல சீரிய முயற்சிகளை மேற்கொள்கின்றன.

இப்பகுதியில் நகரங்கள் வீழ்ச்சியடைவதைப்பற்றி முதலில் ஆராய்வோம். பழைய நகரங்களில் புதிதாக மென்ரகத் தொழிற்சாலை, சுற்றுலா, கல்வி, சமயம் போன்ற பணிகள் முக்கியத்துவம் அடைகின்றன. அதனுல், அவை விரைவான வளர்ச்சியையும் பெறுகின்றன. ஆனுல், சில நகரங்கள் முழுமையான வளர்ச்சியை அடைவதற்கு முன்னரே கூட அழிந்துவிடுவதுண்டு. எனவே, அபரிமிதமான வளர்ச்சிதான் நகர வீழ்ச்சிக்குக் காரணமாகிறது என்பது எல்லா நகரங்களுக்கும் பொருந்தாது; குறிப்பிட்ட சூழமைவில் தோன்றி வளர்ச்சிபெற்ற நகரங்கள் பல காரணங்களினுல் அழிகின்றன. அதாவது போக்குவரத்து முறையில் மாற்றம் ஏற்படுதல், சுரங்கங்களில் கனியங்கள் தீர்ந்துவிடுதல், தொழிற்சாலை மூடப்படுதல் போன்ற காரணங்களினுல் நகரங்கள் அழியத்தொடங்குகின்றன. போக்குவரத்து முறையில் மாற்றம் ஏற்படும்போது அதாவது நெடுஞ்சாலை, ரெயில்பாதை ஆகியவை புதிதாக அமைக்கப்படும்போது புதிய வாணிக மார்க்கங்கள் தோன்றுகின்றன. எனவே, இவற்றின் வழியே அமைந்த நகரங்கள் விரைவான வளர்ச்சியைப் பெறுகின்றன. ஆனுல், இச்சாலைகளுக்கு அப்பால் அமைந்திருக்கும்

நகரங்கள் வாணிக மார்க்கத்தைவிட்டு விலகியிருப்பதால் அவற்றின் வளர்ச்சி குறையத் தொடங்குகிறது. கரடு முரடான நில அமைப்பினுல் சில நகரங்களை ரெயில் பாதையினுல் இணைக்க முடியாமல் போகிறது. இத்தகைய நகரங்களும் வளரும் வாய்ப்பை இழக்கின்றன. ரெயில் பாதை அமைப்பதற்கு மூன் பாகச் செழிப்புற்றிருந்த அமிர்தபுரம் (பழைய திருத்தணி) ரெயில்பாதை அமைக்கப்பட்ட பின்பு வளர்ச்சி குன்றிவிட்டது. ரெயில்பாதையை அமிர்தபுரத்தைவிட்டு அப்பால் அமைத்ததே இதற்குக் காரணமாகும். இவ்வாறே ஒட்டகப் போக்குவரத்தினுல் வளர்ச்சி பெற்றிருந்த அரேபிய நகரங்கள் பல, பிற்காலத்தில் அப்போக்குவரத்தின் முக்கியத்துவம் குறைந்தபோது அழிந்துவிட்டன. இதேபோல் பெரிய கப்பல்கள் தோன்றிய பின்னர் அவை தங்குவதற்கு வசதிபோதாத பல துறைமுக நகரங்கள் அவற்றின் முக்கியத்துவத்தை இழந்துவிட்டன. சில சமயங்களில் கால்வாய், பாலம், சாலை ஆகியவை நிரந்தரமாக மூடப்படும் போதும் நகரங்கள் அழிந்துவிடுகின்றன. கனியங்கள், மீன், மரம் போன்றவை கிடைத்ததால் வளர்ச்சிபெற்ற நகரங்கள் அப்பொருள்கள் கிடைப்பது குறைந்த பிறகு அழிந்துவிடுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேற்குப் பகுதியில் தங்கம் கிடைத்ததால் வளர்ச்சி பெற்றிருந்த பல நகரங்கள் தற்போது வெற்றிடங்களாக உள்ளன. நகரங்களுக்கு வளர்ச்சி குன்றுதல் சில சமயம் தாற்காலிகமாக உள்ளது. நிரந்தரமாக வளர்ச்சி குன்றிய நகரங்களின் எண்ணிக்கை, பொதுவாகக் குறைவாகவே இருக்கிறது. எனவே, நகரங்களின் அழிவைக் காட்டிலும் அவற்றின் அபரிமிதமான வளர்ச்சியே தற்கால சமூகத்தை நோக்கியுள்ள பெரும் பிரச்சினையாகும்.

நகரத்தின் வளர்ச்சி என்று சொல்லும்போது நகர மக்கள் தொகைப் பெருக்கத்தையும் அதன் விளைவாக ஏற்படும் நகரப் பரப்பளவின் அதிகரிப்பையும் குறிக்கிறது. நகரங்களில் மக்கள் தொகை இரு வழிகளில் பெருகுகிறது. முதலாவதாக நகரங்கள் மக்களைக் கவருகின்ற மையங்களாக இருப்பதால் இங்கு மக்கள் மிக அதிக அளவில் குழுமி வசிக்கின்றனர். இங்கு இயற்கையான இனப்பெருக்கத்தால் (natural growth) ஆண்டுதோறும் மக்கள்தொகை பெருகிக்கொண்டு வருகிறது. இரண்டாவதாக, கிராம மக்கள் தொடர்ந்து இங்குக் குடியேறுவதால் நாளுக்கு நாள் மக்களின் எண்ணிக்கை அதிமாகிக் கொண்டிருக்கிறது. கிராம மக்கள் நகரங்களுக்குக் குடியேறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவைகளாவன :

கிராமப்புறத்தில் இயல்பாகவே அதிகமான மக்கள் வசித்து வருகிறார்கள். அங்குள்ள வயல்கள் ஒரு குறிப்பிட்ட அளவு மக்களுக்குத்தான் உணவளிக்க முடியும். அதாவது வயல்களின் உற்பத்தித்திறனுக்கு ஏற்ற அளவில்தான் மக்களின் எண்ணிக்கை இருத்தல் வேண்டும். உணவு உற்பத்தியை விட மக்கள்தொகை அதிகமாக இருக்கும்போது உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே, அந்தக் கிராமத்தில் வசிக்க முடியாமல் பலர் புதிய நிலத்தைத் தேடிச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதில் சொந்தமாக நிலம் வைத்துக்கொள்ள முடியாதவர்கள் சிலர் விவசாயத் தொழிலையே கைவிட்டு விட்டு வேலை தேடி நகரங்களுக்குக் குடியேறுகின்றனர். நகரங்களில் குடியேறுகின்றவர்களில் பலர் பொதுவாகக் கிராமத்தில் வாழ வழியில்லாமல் வந்தவர்களேயாவர்.

நகரங்களில் பொதுவாக வேலைவாய்ப்பு அதிகமாக இருக்கிறது. சிறிய நகரங்களைக்காட்டிலும் பெரிய நகரங்களில் இது இன்னும் அதிகமாக இருக்கிறது. கிராம மக்களில் நடுத்தர வயதினர் பலருக்குக் கிராம வாழ்க்கை மிகவும் கடினமாக இருக்கிறது. சில இடங்களில் பண்ணைகள் தனித்து இருப்பதால் கூட்டு வாழ்க்கைக்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. நிலத்தில் கடினமாக உழைத்தாலும் கிடைக்கும் வருமானம் குறைவாகவே இருக்கிறது. எனவே, கிராம வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுப் பெருவாரியான மக்கள் வேறு வேலைகளைத் தேடி நகரங்களை நோக்கிக் குடியேறுகின்றனர்.

நகரங்களில் கிராம மக்களின் குடியேற்றம் எல்லாச் சமயங்களிலும் பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைவதில்லை. கிராமத்தில் போதுமான வசதியுடன் வாழ்ந்து வந்தவர்கள் கூட நகரத்தின் மீது இருக்கிற மோகத்தினால் அங்குக் குடியேறுகின்றனர். நகர வாழ்க்கையைப்பற்றி ஒரு தவறான கருத்தை மனத்தில் கொண்டு ஆடம்பரமான வாழ்க்கையிலும், உல்லாச கேளிக்கைகளிலும் ஆர்வம் கொண்டவர்கள் தொடர்ந்து குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். நகரத்தில் உயர்ந்த கட்டடங்களும், விரைவாகச் செல்லும் மின்சார ரெயில், கார் போன்றவையும், ஓய்வின்றி நடந்து செல்லுகிற மக்கள் கூட்டமும் கிராம மக்களுக்கு ஒரு பிரமிப்பைத் தருகின்றன. இது தவிர பொழுதுபோக்குக் கேளிக்கைகளான திரைப்படம், நாடகம், இசை, விளையாட்டுப் போட்டி ஆகியவையும் நகரத்திற்குக் கவர்ச்சி தரும் அம்சங்களாகும். இந்த வசதிகள் கிராமத்தில்

இல்லாததால் புதிய தலைமுறையினர் நகரத்தில் குடியேறு வதையே விரும்புகின்றனர்.

கவர்ச்சியைத் தவிரப் பாதுகாப்பைத் தேடியும் கிராம மக்கள் நகரங்களுக்குக் குடியேறுகின்றனர். அரசியல் கொந்தளிப்பு ஏற் படும் சமயங்களில் சிறிய கிராமங்களில் வசிப்பது ஆபத்தாகை யால் இவர்கள் பெரிய நகரங்களை நாடிச் செல்கின்றனர். நகரங் களில் மக்கள்தொகைச் செறிவு அதிகமாக இருப்பதால் பாது காப்பு அதிகமாக இருக்கிறது. நகரங்கள் பாதுகாப்பானவை என்பதனைப் பழைய நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப் புச் சுவர்கள் உணர்த்துகின்றன.

கிராமத்தில் வசிக்கும் மக்கள் தங்கள் குழந்தைகளை மேற் படிப்பிற்காக அருகிலுள்ள நகரங்களுக்கு அனுப்பி வைக் கின்றனர். சில சமயம் குழந்தைகளின் படிப்பிற்காகத் தாங்க ளும் தாற்காலிகமாக நகரங்களுக்குக் குடியேறுகிறார்கள். கல்வி பயின்று தங்கள் கிராமங்களுக்குத் திரும்பி வருகிற மாணவ மாண வியர்களுக்கு ஏற்ற வேலை கிராமத்தில் கிடைப்பதில்லை. அவர் களுக்கு நகரங்களில்தான் வேலைவாய்ப்பு இருக்கிறது. இதுதவிர, கல்வியறிவு அதிகரிக்க அதிகரிக்க, கிராமச் சூழ்நிலை பலருக்குப் பிடிப்பதில்லை. மேற்கூறிய காரணங்களினால் கல்வி கற்றவர்கள் நகரத்தையே நாடவேண்டியுள்ளது.

பிரச்சினைகள்

நகரங்களில் மக்கள்தொகை எவ்வாறு பெருகுகிறது என்பதை மேலே கண்டோம். மக்கள்தொகைப் பெருக்கத் தினால் நகரப் பரப்பளவும் பெருகிக்கொண்டே வருகிறது. இத் தகைய பெருக்கம் மெதுவாகவும் அளவோடும் நடைபெற்று வந் தால் பிரச்சினைகள் எதுவும் ஏற்படப்போவதில்லை. ஆனால், நகரங் களில் தற்போது காணப்படுகிற பெருக்கம் அபரிமிதமானதாகும். அளவுக்கு அதிகமான மக்கள்தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பிரச்சினைகள் யாவை என்பதை இப்போது ஆராய்வோம்.

வேலை வாய்ப்பு

நகரங்களில் குடியேற்றம் சிறிய அளவில் மெதுவாக நடை பெற்று வந்தால் பிரச்சினைகள் குறைவாக அல்லது தீர்க்கக்கூடிய அமைப்பில் இருக்கும். ஆனால் குடியேற்றம் அளவுக்கு அதிகமாக ஏற்படும்போது நகரத்தில் நெரிசல் ஏற்படுகிறது. பிரிட்டனி

லும், ஐரோப்பாவிலும் தொழிற்புரட்சியின்போது விவசாய முறையில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக உணவு உற்பத்தி பெருகிவிடவே பெருவாரியான கிராம மக்கள் வேலைதேடி நகரங்களை நோக்கிக் குடியேறினர். இந்த விரைவான குடியேற்றத்தால் நகரங்களில் நெரிசல் ஏற்பட்டது; நகரத்தில் அளவுக்கு அதிகமான மக்கள்தொகை காணப்பட்டபோது அங்கு வீட்டுவசதி, சுகாதாரம், போக்குவரத்து ஆகிய வசதிகள் மிகவும் குறைவாக இருந்தன. வேலைதேடி வந்த மக்கள்தொகை தேவைக்கு அதிகமாக இருந்ததால் பலர் வேலையில்லாமல் திண்டாடினர்; சிலருக்குத் தொழிற்சாலைகளில் வேலை கிடைத்தாலும், கூலி மிகவும் குறைவாகவே இருந்தது. மேற்கூறிய நிலை தற்போது உலகின் எல்லா நகரங்களிலுமே காணப்படுகிறது: வளர்ந்துவரும் நாடுகளில் இது மிகவும் குறிப்பாக உள்ளது. இங்கு மக்கள்தொகைப் பெருக்கம் பெரும்பாலும் குடியேற்றத்தின் காரணமாகவே ஏற்படுகிறது. கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வருகிறவர்கள் அனைவரும் வேலைதேடியே வருவதால் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரிக்கிறது. அப்படி வேலை கிடைத்தாலும் அது மன நிறைவைத் தருவதாக இல்லை; அதில் கிடைக்கும் வருமானத்தில் நிறைவான வாழ்க்கையை நடத்த முடிவதில்லை. குடியேறிய மக்கள் வசதிக் குறைவானவர்களாதலால் அவர்கள் நல்ல வீடுகளில் வசிக்க இயலாமல் தவிக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் பகுதிகள் சுகாதாரமற்று இருப்பதால் அவற்றைச் சீர்செய்வது அரசுக்கு ஒரு சவாலாக இருக்கிறது. மேலும் வளர்ந்துவரும் நாடுகளில் பயிற்சி பெறாத தொழிலாளர்களே (unskilled labourers) மிகவும் அதிகமாகக் காணப்படுவதால், தொழில் நிறுவனங்கள் அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ள முடியாமல் இருக்கின்றன.

சேரிகள்

நகரங்களில் வேலைதேடி வருபவர்கள் எல்லோருமே நல்ல வேலையில் அமர்வதில்லை. வேலையற்றுப் பல நாள்கள் அலைந்து திரிந்தவர்கள், கிடைக்கும் எந்த வேலையையும் செய்யத் தயாராக இருப்பார்கள்; இவர்கள் தங்கள் அன்றாட உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளக் குறைந்த கூலிவேலையில் ஈடுபட வேண்டியிருக்கிறது. எனவே, இவர்கள் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள். போக்குவரத்துச் செலவை மீதமாக்க இவர்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகிலேயே வசிக்க வேண்டியதாகிறது. இவர்கள் பொதுவாக நடைபாதை, கால்வாய் ஓரம், பூங்காவின்

ஒதுக்குப்புறம் ஆகிய இடங்களில் தங்கள் குடிசைகளைக் கட்டிக் கொள்கிறார்கள். சட்ட விரோதமாக அமைக்கப்படும் இந்தக் குடியிருப்புகளைச் சேரிகள் என்று அழைக்கிறோம். சேரிகள் எந்த இடத்தில் எப்போது தோன்றும் என்று ஊகிக்க முடியாதவாறு வெகு விரைவில் பெருகிவிடுகின்றன. தங்களுக்குச் சொந்தமில்லாத இடம் அல்லது பொது மனைகளில் இவை தோன்றுவதால், வடிகால், குடிநீர், கழிவிடம் ஆகிய வசதிகள் இங்குக் காணப்படுவதில்லை. எனவே, சேரிகளில் வாழும் மக்கள் பொது இடங்களை அசுத்தப்படுத்துவதோடு தாங்களும் அசுத்தத்திலேயே வசித்து வருகிறார்கள். சென்னை நகரில் சேரிகள் பெரும்பாலும் கூவம் நதி, பக்கிங்ஹாம் கால்வாய், ரெயில் பாதை ஆகியவற்றின் இருபுறத்திலும் காணப்படுகின்றன. இவை ஒதுக்குப் புறமாக இருப்பதோடு காலைக்கடன்களை முடிப்பதற்கு ஏற்றதாகவும் இருக்கின்றன. நகரின் மையப்பகுதியில் திறந்த வெளிகளில் பெருகியிருக்கும் சேரிகளில் இந்த வசதிகள்கூட இல்லாததால் சேரிகள் அருவருப்பை ஏற்படுத்துகின்றன. சென்னை நகரின் மக்கள் தொகையில் $\frac{1}{4}$ பங்கு சேரியில் காணப்படுகிறது. இந்தச் சேரிகளில் காணப்படும் மக்கள் தொகையைப் பார்க்கும்போது இவர்கள் அனைவருக்கும் வீடு கட்டித்தருவது என்பது இயலாத காரியமாகும். அதற்கு நகரில் இடமும் போதாது. சேரி வாழ் மக்கள் ஏழ்மையானவர்களானதால், தங்களுக்கு நீர்வசதி, வடிகால், துப்புரவு ஆகிய வசதிகளை அமைத்துக்கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள். எனவே, இங்கு நீர் தேங்குவதால் வியாதிகள் பரவுகின்றன. சென்னை நகரில் சேரிகளை அகற்றுவதற்கு அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதன் விளைவாகக் குடிசைமாற்றுவாரியம் ஏற்படுத்தப்பட்டு 1968ஆம் ஆண்டு வரை 8595 சேரி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

நகரப் பரப்பளவின் பெருக்கம் (Urban Sprawl)

தற்கால நகரங்களில் காணப்படும் மற்றொரு பிரச்சினையாதெனில் நகரப் பரப்பின் பெருக்கமாகும். நகரில் போக்குவரத்து வசதிகள் பெருகிய பின்னர் நகரம் துரிதமாக வளர்ச்சி பெறுகிறது. மேலை நாடுகளில் செல்வர்கள் தங்கள் வீடுகளை நகர மையத்தை விட்டு அப்பால் அமைத்துக் கொள்கின்றனர். இந்த விளிம்புப் பகுதியில் பெரிய பங்களாக்களும், தோட்டம் சூழ்ந்த வீடுகளும் கட்டப்படுகின்றன. ஆசிய நாடுகளில் நகரங்களின் மையப்பகுதியில் நெரிசல் மிகுதியாக இருப்பதால் தொழிலாளர்கள் கூட நகரின் விளிம்புகளில் தங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்

கிறார்கள். தற்காலத்தில் காணப்படும் மற்றொரு சிறப்பு யாதெனில், குடியிருப்புக் காலனிகளின் வளர்ச்சியாகும். இத்தகைய காலனிகள் நகருக்கு வெளியே வெகு விரைவாக வளர்ச்சி பெறுவதை சென்னை, டில்லி, கல்கத்தா போன்ற நகரங்களில் காண முடிகிறது. நகர விளிம்புகளில் கட்டடங்கள் தோன்றும்போது நகரப் பரப்பளவு விரிவடைகிறது. இத்தகைய பெருக்கத்தால் நகருக்கு அருகிலுள்ள விளை நிலங்கள் (வயல்கள்) யாவும் நகர மக்களால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு நாளடைவில் குடியிருப்பு மனைகளாக மாறிவிடுகின்றன. விளை நிலங்கள் நகர மக்களின் குடியிருப்புப் பகுதிகளாக மாறி வருகிற நிலை வருந்துதற்குரியதாகும். பசுமைப் புரட்சியின் விளைவாகப் புதிய விதைகளும் புதிய முறைகளும் விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்றன. உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவும், நிலத்தின் வளத்தைக் காக்கவும் பலமுயற்சிகள் மேற்கொள்ளப்படுகிற இந்தத்தருணத்தில், காடுகளை அழித்துப் புதிய விளைநிலங்கள் தோற்றுவிக்கப்படும் இச்சமயத்தில், நகரைச்சுற்றியுள்ள விளைநிலங்களை வீடுகள் கட்டுவதற்காகப் பயன்படுத்துவது அறிவுடைமையாகாது. ஆனால் விவசாயிகள் இந்த நிலையை உணர்ந்திருக்க நியாயமில்லை. நகரில் வசிப்பவர்களுக்குக் காலனி அமைப்பதற்காகவோ அல்லது தொழிற்சாலை அமைப்பதற்காகவோ நிலத்தை விலைக்குக் கேட்டால் உடனடியாக விற்கக்கூடிய நிலையிலேயே நம்முடைய விவசாயி இருக்கிறான். ஏனெனில் விவசாயம் செய்து அதனால் கிடைக்கும் வருமானத்தைவிட மேற்கூறியபடி விற்றுவிட்டால் பணம் அதிகமாகக் கிடைக்கிறது. சென்னை நகரைச் சுற்றியிருந்த கிராமத்து வயல்கள் எல்லாம் இப்போது கட்டடங்கள் நிறைந்து காணப்படுகின்றன. சென்னையை அடுத்த திருவான்மியூர், திருவொற்றியூர், வியாசர்பாடி ஆகிய கிராமங்கள் இவ்வாறு மாற்றத்திற்குள்ளானவையாகும். சில நகரங்களில் விளிம்புப்பகுதிகளிலும் சேரிகள் தோன்றுகின்றன. ஏழை மக்கள் இங்குள்ள புறம்போக்கு நிலங்களில் தங்கள் குடிசைகளைக் கட்டிக்கொண்டு வசிக்கிறார்கள்.

எந்த நகரத்திலும் புற நகர் வளர்ச்சியைத் தடுப்பது கடினமாகும். நகரத்திலிருந்து வெவ்வேறு திசைகளில் செல்லும் நெடுஞ்சாலைகளின் வழியேதான் புறநகர் முதன்முதலில் வளர்ச்சிபெறுகிறது. போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றந்தான் இத்தகைய வளர்ச்சிக்குக் காரணமாகும். எனவே, போக்குவரத்துக்கு ஏதுவாக இருக்கிற நெடுஞ்சாலைகளின் வழியே நீள வாக்கில் இவை வளர்ந்து செல்லுகின்றன. மக்களுக்கு

நகரின் விளிம்புகளில் வசிக்க வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்ட பின்னர் நகருக்கு வெளியே இடைப்பட்ட பகுதியில், புதிய சாலைகள் அமைக்கப்பட்டுக் குடியிருப்பு வீடுகள் கட்டப்படுகின்றன. நகரைச் சுற்றிலும் குடியிருப்பு வீடுகள் இவ்வாறுதான் பெருகத் தொடங்குகின்றன. அதே சமயத்தில் மாநகருக்கு அருகில் உள்ள சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் மாநகர மக்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டு வசிக்கிறார்கள். இவைகளும் நாளடைவில் பரப்பளவில் பெருகி விடுகின்றன. ஒரு நகரம் மாநகர நிலையிலிருந்து பெருநகர நிலையை அடையும்பொழுது அரசுக்கு அதிகப் பொறுப்பு ஏற்படுகிறது. பெருநகரப் பரப்பில் வாழ்கின்ற மக்களுக்குக் குடிநீர், துப்புரவு, போக்குவரத்து போன்ற வசதிகளை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. இவை மக்களுக்கு வசதியைப் பெருக்குவதால் இவற்றைத் திட்டமிட்டு அமைக்க வேண்டியிருக்கிறது. எனவே, இத்திட்டங்களுக்குப் பணம் அதிகம் செலவாகும். ஆனால் ஆசிய நாடுகளில் வசதிக் குறைவின் காரணமாக இத்திட்டங்களை உடனடியாகச் செயற்படுத்த முடிவதில்லை. எனவே, பெருநகரத்தில் நெரிசலும், சுகாதாரமின்மையும் ஏற்படுகின்றன. உதாரணமாக சென்னை மாநகரத்தின் சில பிரச்சினைகளைச் சிறிது ஆராய்வோம். சென்னை மாநகரம் 1200 ச.கி.மீ. பரப்புடையதாகும். இதில் சென்னை மாநகராட்சியைத் தவிர மூன்று முனிசிபாலிடிகளும், ஒரு ராணுவ நகரமும், 24 நகர பஞ்சாயத்துகளும் அடங்கியுள்ளன. இப்பகுதியில் வாழும் மக்களுக்கு வசதிகள் செய்ய சென்னை மாநகர வசதித்திட்டம் (1971-1991) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரத்தின் 1961, 1971ஆம் ஆண்டுகளில் முறையே 2·342 மில்லியன், 3·478 மில்லியன் மக்கள் வசித்துவந்தனர். 1991ஆம் ஆண்டு இது 5·340 மில்லியனாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, எதிர்காலத்தில் இந்த வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் ஏற்கெனவே இங்கு வசித்து வந்தவர்களுடைய நலன் பாதிக்கப்படும். சென்னை நகரில் மட்டும் 1943ஆம் ஆண்டு 10 லட்சம் மக்கள் வசித்து வந்தனர். தற்போது இது மூப்பது லட்சமாக உயர்ந்து இருக்கிறது. இந்த வளர்ச்சி நீடிக்குமானால் சுகாதாரத்திற்குக் கேடு நேரக்கூடும். எனவே நகர அமைப்புத் திட்டம் இங்கு அவசியமாகிறது. சென்னை நகரில் தற்போது ஒரு நாளைக்கு 302 மில்லியன் லிட்டர் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இதில் நிலநீர் மட்டும் 135 மில்லியன் லிட்டராகும். இந்நீர், இல்லங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் ஆகியவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், எப்பொழு

தும் பற்றாக்குறையாக இருந்து வருகிறது. மேலும் 1981ஆம் ஆண்டு இங்கு 918 மில்லியன் லிட்டராகும், 1991ஆம் ஆண்டு 1208 மில்லியன் லிட்டரும் தேவைப்படும் என்றும் கணக்கிடப் பட்டுள்ளது. அந்தத் தேவையை எப்படி நிறைவேற்றுவது என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. வீராணம் திட்டம் நிறைவு பெற்றால்கூட 180 மில்லியன் லிட்டர்தான் கூடுதலாகக் கிடைக்கும். எனவே, சென்னை நகரைப் பொறுத்தவரை தண்ணீர் பஞ்சம் நிவர்த்தி செய்ய முடியாததாகவே இருக்கும். ஏனென்றால் இங்கு மக்கள்தொகை அதிகரிப்பு அபரிமிதமாக இருக்கிறது. இது மட்டுமன்றி சென்னை நகரில் காணப்படும் நீர் விநியோக அமைப்பு சுமார் 6·5 லட்சம் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக மட்டுமே உள்ளது. மக்கள்தொகைப் பெருக்கத்தினால் பல புதிய குடியிருப்புப் பகுதிகள் உருவாகியுள்ளன. இப்பகுதிகளுக்குப் புதிய குழாய்களை அமைப்பதால் குழாய் களிலுள்ள நீரின் அழுத்தம் குறைகிறது. குழாய்களில் அழுத்தம் குறைந்தால் நீர் தேங்கி அசுத்தமாகி விடுகிறது. மேலும் நகரின் எல்லாப் பகுதிகளிலும் சுரங்கவடிகால் (Under Ground Drainage) அமைக்கப்படவில்லை. நகரில் சுமார் 40 சதவீதப் பரப்பு மட்டுமே வடிகால் அமைப்பைக் கொண்டு இருக்கிறது. மற்றப் பகுதிகளில் திறந்த கால்வாய்களின் மூலம் கழிநீர் வடிக்கப்படுகிறது. எனவே, கிருமிகள் பெருகி நோய் பரவுவதற்கு வாய்ப்பு இருக் கிறது.

போக்குவரத்து நெரிசல்

நகரப் பரப்பின் பெருக்கம் ஒரு பிரச்சினையாக இருப்பது போல் நகரப் போக்குவரத்து நெரிசலும் ஒரு பிரச்சினையாக விளங்குகிறது. நகரம் வளர்ச்சி அடையும்போது அதன் பணிகள், தொழிலாளர் எண்ணிக்கை, கடைகள் ஆகியவையும் பெருகி விடு கின்றன. பெரிய நகரங்களின் மையத்தில் வசித்தாலும், விளிம் பில் வசித்தாலும், கார், பஸ், ஸ்கூட்டர் போன்ற வாகன வசதி அவசியமாகிறது. இது தவிர வியாபாரப் பகுதிகளில் லாரி, கட்டைவண்டி போன்றவை மிகுதியாக இருப்பதால் போக்குவரத் தில் மேலும் நெருக்கம் ஏற்படுகிறது. எல்லாப் பணிகளும் மத் திய வியாபாரவட்டத்தில் நடைபெறுவதால் நகரின் மையப்பகுதி யில்தான் போக்குவரத்து நெரிசல் மிக அதிகமாகக் காணப்படு கிறது. இங்கு ஓரிடத்தைக் கடப்பதற்கு நீண்ட நேரமாகிறது. நகரின் மற்றப் பகுதிகளில் சில வேளைகளில் மட்டுமே நெரிசல் ஏற்படுகிறது. உதாரணமாக, அலுவலகம், தொழிற்சாலை,

பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றை நோக்கிச் செல்லும் சாலைகள் குறிப்பிட்ட வேளைகளில்மட்டுமே நெரிசல் கொண்டவையாக விளங்குகின்றன. விளையாட்டு மைதானம், பந்தயக்குதிரை மைதானம் ஆகியவற்றை நோக்கிச் செல்லும் சாலைகளில் நிகழ்ச்சிகள் நடைபெறும் தினங்களில் மட்டுமே நெரிசல் ஏற்படுகிறது. திரை அரங்குகள் நிறைந்த பகுதிகளில் மாலையில் நெரிசல் அதிகமாக இருக்கிறது. பெரும்பாலான அலுவலகங்கள் ஒரே வேலை நேரம் கொண்டவையாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பழைய நகரங்களில் சாலைகள் குறுகலாக இருப்பதால் வியாபாரப் பகுதிகளில் கார்கள் நிறுத்தப்பட்டு மேலும் அதிகமான இடைஞ்சல் ஏற்படுகிறது.

அசுத்தமடைதல் (Pollution)

நகரங்களில் காணப்படும் சில அசுத்தத் தன்மைகள் சமீப காலத்தில்தான் உணரப்பட்டது. உலகில் உள்ள எல்லா நகரங்களிலும் தற்போது வெறும் பிரச்சினையாக இருப்பது அசுத்த மடைந்த காற்றும் நீரும் ஆகும். பெரிய தொழில் நகரங்களில் தொழிற்சாலை, மோட்டார் வாகனம், வீடு ஆகியவைகளின் புகை போக்கிகளில் இருந்து வெளிவரும் அசுத்த வாயுக்கள் காற்றில் கலந்து, காற்றை அசுத்தப்படுத்தி விடுகின்றன. இதனால் நகர மக்கள் நல்ல காற்றை சுவாசிக்க முடியாமல் போவதால் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. இதைப்போல் நகரத்தில் உள்ள நீர் நிலைகளும் அசுத்தப்படுத்தப்படுகின்றன. தொழிற்சாலையின் கழிவுப் பொருள்கள் வீடுகளிலிருந்து வரும் கழிவுநீர் ஆகியவற்றை நகரத்திற்கு வெகு தொலைவில் கொண்டு சென்று அப்புறப்படுத்த வேண்டும். கடற்கரை ஓரங்களில் அமைந்த நகரங்களில் இக் கழிவுநீர் கடலில் கலக்கப்படுகிறது. ஆனால், ஆற்றோரங்களில் அமைந்த நகரங்களில் கழிவுப் பொருள்கள் ஆற்றில் தான் கலக்கப்படுகின்றன. இதனால் ஆற்றுநீர் அசுத்தமடைந்து வியாதி பரவுவதற்குக் காரணமாகிறது. இதைத் தவிர சாலைகளிலும் தெருக்களிலும் போடப்படுகின்ற குப்பைகள், வண்டிகள் கிளப்பிவிடுகிற தூசு ஆகியவை நல்ல காற்றை சுவாசிக்க இயலாமல் செய்துவிடுகின்றன. இதனால் நகர மக்கள் பலர் பல வித நோய்களினால் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடுகிறது. அசுத்தத்தைத் தவிர நகரில் ஏற்படும் ஓசையும், மனித மனநலனைப் பாதிக்கிற மற்றொரு பிரச்சினையாகும். தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள், மோட்டார், ரெயில், ஆகாயவிமானம் போன்றவை எழுப்பும் ஓசை, அமைதியான சூழ்நிலையை விரும்புகிறவர்களுக்குப் பிரச்சினையாக உள்ளவையாகும்.

நகரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகள்

நகரத்தில் காணப்படும் மேற்கூறிய பிரச்சினைகளை நகரத்திட்ட அமைப்பின் (Town planning) மூலமாக ஓரளவு தீர்க்க முடியும். நகரங்கள் பரப்பில் தொடர்ந்து வளர்ச்சி அடைவதோடல்லாமல் அவற்றைச் சுற்றிலும் அமைந்துள்ள நகரங்களைச் சுற்றிலும் சிறு நகரங்களை வளரச் செய்கிறது. சுற்றியுள்ள நகரங்கள் ஒவ்வொன்றும் வளரும்போது அவை ஒன்றையொன்று நெருங்குவது போல் வளர்ச்சி அடைகின்றன. இந்நிலை ஏற்பட்டவுடன் இங்கு ஒரு தொடர்ச்சியான நகர்ப்புறம் (Conurbation) அமைந்து விடுகிறது. இத்தகைய தொடர்ச்சியான நகர்ப்புறம் பல நாடுகளில் காணப்படுகின்றன. நகரங்களின் இத்தகைய வளர்ச்சியைக் குறைப்பதற்காக பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் பசுமைப் பகுதியை (Green belt) ஏற்படுத்தி இருக்கிறார்கள். நகரத்தைச் சுற்றி ஏற்படுத்தப்பட்ட இப்பகுதியில் புதிய கட்டடங்கள் கட்டுவது தடை செய்யப்பட்டிருக்கிறது. திறந்த வெளியும், விளையாட்டு மைதானங்களும், பூங்காக்களும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதி நகர மக்களுக்கு மன மகிழ்ச்சியைத் தருவதோடு மட்டுமன்றி நகரத்தின் வேகமான வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது. இப்பகுதியில் காற்று தூய்மையாகவே இருக்கிறது. இதே போன்று நகரங்களின் தொழிற்பகுதி, குடியிருப்புப்பகுதி எனப் பகுதிகள் பிரிக்கப்பட்டு அங்கு மட்டுமே அந்தப் பணிகளுக்கு அனுமதியும் உதவியும் தரப்படுகின்றன. குடியிருப்புப் பகுதியில் தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதி கிடைப்பதில்லை. குடியிருப்புப் பகுதியில்கூட வீடுகள் குறிப்பிட்ட அளவிற்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்ற விதிமுறை உள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் இடையே குறைந்தது பத்து அடியாவது இடைவெளி இருக்க வேண்டும். இந்த நகர அமைப்புத் திட்டம் இந்திய நகரங்களிலும் உள்ளது.

நகரங்களின் கட்டுப்பாடற்ற வளர்ச்சியைச் சட்டங்கள் மூலமாகக் கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யவில்லையென்றால் எதிர்காலத்தில் நகரம் அழியக்கூடும். எனவே, நகர வளர்ச்சியைப் பன்முகப்படுத்துதல் வேண்டும். உதாரணமாகச் சென்னைப் பெருநகரின் மக்கள்தொகையை 5 மில்லியன்களுக்கு மேல் வளரவிடக்கூடாது. பெருநகர விளிம்பில் நிலம் கிடைக்காமல் போனாலோ வாடகை அதிகமாக இருந்தாலோ, இப் பெருநகரைச் சுற்றியுள்ள சிறு நகரங்கள் வளர்ச்சி பெறத் தொடங்குகின்றன. சென்னைப் பெருநகரின் வளர்ச்சியைப் பன்முகப்படுத்

தும் நோக்கத்தில் சென்னையைச் சுற்றி 20, 30 மைல் தொலைவில் செங்கற்பட்டு, திருவள்ளூர், பொன்னேரி ஆகியவற்றைத் துணை நகரங்களாக மாற்றும் திட்டம் உள்ளது.

தொழிற்சாலைகளைச் சிறு நகரங்களில் பரவலாக அமையும்படி செய்வதன் மூலமும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம். சென்னை போன்ற பெருநகரங்களில் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதை விடுத்து சேலம், கோயமுத்தூர், மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் அவற்றை ஏற்படுத்த வேண்டும். புதிய தொழிற்சாலைகள் சிறு நகரங்களில் வளர்ச்சி பெறுவதற்கு அரசு சில சலுகைகளைத் தரவேண்டும். உதாரணமாகத் தொழிற்சாலைகளுக்கு வரிச் சலுகை அளித்தல், குறைந்த விலையில் நிலம் தருதல், பண உதவி செய்தல் போன்றவை, தொழிற்சாலைகள் சிறு நகரங்களில் ஏற்படுவதற்கு ஊக்கம் தருபவைகளாகும்,

பெரிய நகரங்களுக்குச் சற்று தூரத்தில் புதிய நகரங்களை உருவாக்குவதன் மூலமாகவும் பெருநகர வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும். இப் புதிய நகரங்களைக் குறிப்பிட்ட பணிகளுக்காக ஏற்படுத்தலாம். இதில் சாலைகள் தொழிற்சாலைகள் வீடுகள் ஆகியவற்றைத் திட்டமிட்டு அமைக்கலாம்.

மேற்கோள் நூற்பட்டியல்

1. Human Geography, Emry's Jones, Chatto and Windus Co.

2. Human Geography, D. C. Money, U. T. P.

3. A Geography of Mankind. Jan O. M. Broek and John W. Webb, McGraw Hill.

4. Rural settlement and land use, Michael Chisholm.

5. Environments and Peoples, P. L. Wagner.

6. The Origin and Causes of Settlement Types, Albert Demangeon, Readings in Cultural Geography, P. L. Wagner and Marvin W. Mike sell.

7. Types of Rural Settlement in Colonial America, Glenn T. Trewartha, Readings in Cultural Geography, P.L. Wagner and Marvin W. Mike Sell.

8. Settlements and Habitations in India, Bushmann, H. K., Indian Geographical Journal, Vol. 15 and 16, 1953 & 1954.

9. Human Geography, Jean Brunhes.

10. Human Geography, Vidal de La Blache.

11. House form and culture, Rapoport, Prentice Hall.

12. Explorations in Social Geography, Kariel and Kariel, Addison Wesley.

13. Urban Geography- An introductory analysis, James H. Johnson, Pergamon Press.

14. The Geography of Towns, Arthur E. Smailes, Hutchinson University Press.

15. Cities - Readings from Scientific American, Freeman Co.

16. The Morphology of Indian Cities, John E. Brush.

17. Readings in Urban Geography, Mayer and Kohn, Central Book Depot.

18. The Study of Urban Geography, Harold Carter, Edward Arnold (Publishers) Ltd., 41, Maddox Street, London Wiroan.

19. Human and Economic Geography, Goh Cheng Leong and Gillian C. Morgan, Oxford University Press.

20. Studies in India's Urbanization, 1901-1971, Ashish Bose, Tata McGraw Hill Publishing Co. Ltd.

21. Economic Atlas of Madras State, National Council of Applied Economic Research, New Delhi.

கலைச்சொற்கள்

A

Agglomerated settlement — தொகுப்பாக அல்லது கொத்தாக அமைந்த குடியிருப்பு
Agrarian society — விவசாய சமூகம்
Altar — பீடம்
Alluvial fan — வண்டல் விசிறி
Ancillary activities — துணைத் தொழில்கள்
Archaean shield — ஆர்கேயன் கேடயப்பகுதி
Architecture — கட்டடக்கலை
Artisan — கைத்தொழில் செய்பவர்
Avalanche — பனிவீழ்ச்சி

B

Backwaters — உப்பங்கழிகள்
Barn — தானியக் களஞ்சியம்
Barter — பண்டமாற்று
Base line — ஆதாரக்கோடு
Basement — கடைகால்
Beehive shaped — தேன்கூட்டின் வடிவமொத்த
Bifunctional city — இருபணி நகரம்
Break of bulk — போக்குவரத்து மாறுபடுகிற இடம்
Bridge head — பாலத்தின் முகப்பில்
Built up area — கட்டடங்கள் அமைந்த பகுதி

C

Camp — முகாம்
Central Business District — மத்திய வியாபார வட்டம்
Central service — மையப்பணி

Church — திருச்சபை
Citadel — புறநகர்க் கோட்டை
City — மாநகரம்
Civil settlement — பொதுக் குடியிருப்பு
Cliff — ஓங்கல்
Clustered — குழுமிய
Collective village — சேர்க்கை கிராமம்
Commercial core — வியாபாரக் கரு
Common dwelling — பொது வீடு
Communal living — சமூகக் குடியிருப்பு
Concentric circles — ஓரே மையமுள்ள வட்டங்கள்
Compact — நெருக்கமான
Confluence town — கூடுதுறை நகரம்
Creepers — கொடிகள்
Cosmological — அண்டத்து இயல்பு

D

Decentralization — பன்முகப்படுத்துதல்
Dissected — அரிக்கப்பட்ட
Dispersion — பரவுகை
Distribution — பரவல்
Division of labour — தொழிற் பங்கீடு
Dome — குவிந்த விதானம்

E

Estate village — தோட்டக் கிராமம்
Estuary — ஓதமுகம்

F

Farmstead — பண்ணைக் குடியிருப்பு
Flat roof — தட்டைக்கூரை
Flood control — வெள்ளத்தடுப்பு
Form elements — தோற்றக் கூறுகள்
Fortification — அரண் அமைந்த, சுவர் அமைந்த
Fringe — விளிம்பு
Function — பணி

G

Gap town — கணவாயில் அமைந்த நகரம்
Garden city — பூங்கா நகரம்
Geometrical shape — வடிவ கணித உருவம்
Grazing land — மேய்ச்சல் நிலம்
Grid system — சதுரவடிவ அமைப்பு
Gully erosion — வண்டல் அரிப்பு

H

Hamlet — குக்கிராமம்
Handicraft — கைத்தொழில்
Heath — கரம்பு நிலம்
Heavy industry — கனரகத்தொழில்
Hexagonal — அறுகோண வடிவம்
Hierarchy — படிநிலை
Hinterland — பின்னிலம்

I

Incised meander — அழுந்திய ஆற்றுவளைவு
Internal migration — உள்நாட்டுக் குடியேற்றம்

L

Land division — நிலப்பங்கீடு
Land use — நிலப்பயன்பாடு
Laterite — செம்பூராங்கல்
Layout — நிலவரை அமைப்பு
Level Place — ஒரே மட்டமான நிலம்
Light industry — மென்ரகத் தொழில்
Lift — விசைத் தூக்கி
Linear pattern — நீள்வடிவம்
Loam — களிச்சேற்று வண்டல்
Local winds — தலக்காற்று
Location — இருப்பிடம்
Loess — காற்றடி வண்டல்
Long house — நீண்ட வீடு

M

Market town — சந்தை நகரம்
Metropolis — பெருநகரம்

Micro climate	—	நுண்ணிய காலநிலை
Migration	—	குடியேற்றம்
Mixed farming	—	கலப்பு விவசாயம்
Moat	—	அகழி
Mode of life	—	வாழ்க்கை முறை
Mono functional city	—	ஒரு பணி நகரம்
Mulbery	—	முசுக்கட்டை மரம்
Multi functional	—	பல்பணி நகரம்

N

Natural growth	—	இயற்கைப் பெருக்கம்
Nodal	—	போக்குவரத்துப் பாதைகள் கூடுகிற
Nucleated settlement	—	மூலக்கரு குடியிருப்பு

O

Oases	—	பாலைவனச்சோலை
Oblong	—	நீள்சதுர வடிவம்
Occupational structure	—	தொழிற் கட்டமைப்பு
Orientation	—	திசையமைப்பு
Origin	—	தோற்றம்

P

Palisades	—	குச்சிவேலி
Pattern	—	வடிவம்
Physical environment	—	புறச்சூழ்நிலை
Pioneer areas	—	முதற்குடியேற்றப் பகுதிகள்
Pise	—	சரளைப் பாளம்
Pit dwellings	—	பூமியடி வீடுகள்
Plan	—	நில வரைபடிவம்
Population density	—	மக்கள்தொகைச் செறிவு
Pre industrial city	—	தொழில் முன்னிலை நகரம்
Process	—	செயல் முறை
Proximity	—	அண்மை

R

Radiation	—	கதிர் வீச்சு
Rank size rule	—	அளவு வரிசை விதி

Raw material — கச்சாப் பொருள்
Reeds — நாணல்
Reclaimation — பண்படுத்துதல்
Region — பிரதேசம்
Rejuvenation — புத்துயிர்ப்பு
Resin — பிசினி
Ridge — நீண்ட குன்று
River terrace — ஆற்றுத்திடல்
Rotation of crops — பயிர் சுழற்சி முறை
Rugged land — கரடுமுரடான நிலம்

S

Saplings — மரத்துண்டுகள்
Satellite settlement — துணைக் குடியிருப்பு
Satellite town — துணை நகரம்
Scattered — சிதறிய
Self sufficiency — தன்னிறைவு
Shifting agriculture — காடழித்துப் பயிர் செய்தல்
Sink holes — உறிஞ்சுதுளைகள்
Site — தலம்
Situation — சூழமைவு
Slum — சேரி
Spatial distribution — இருப்பிடப் பரவல்
Spices — வாசனைத்திரவியங்கள்
Spiral — சுருள் வடிவம்
Spring — ஊற்று, சுனை
Squatters — சிறுகுழுக்கள்
Stable — லாயம்
Stage — படிநிலை
Stalkades — கழியரண்கள்
Steep slope — வன்சரிவு
Strip system — நீண்ட வயல் தொகுப்பு முறை
Structural stagnation — கட்டமைப்புத் தேக்கம்
Stilt house — மேடை வீடு
Stone bridge — கற்பாலம்
Stone slab — கற்பலகை
Submerged coast — அழுந்திய கடற்கரை
Subterranean house — மண்ணை வெட்டி அமைத்த வீடு

Suburb	—	புறநகர்
Sunday Villages	—	ஞாயிறு-கிராமங்கள்
Surplus	—	உபரி

T

Temple town	—	கோயில் நகரம்
Thermal control	—	வெப்பத்தைக் கட்டுப் படுத்துதல்
Town planning	—	நகரத் திட்டமைப்பு
Township	—	நகரமைப்பு
Trade routes	—	வியாபார மார்க்கங்கள்
Trans humance	—	மந்தை இடமாற்றம்

U

Upland villages	—	உயர்நில கிராமங்கள்
Urban field	—	நகர்க்களம்
Urban fringe	—	நகர விளிம்பு

V

Varandah	—	நடை
Vault	—	கல்லறை மாடம்
Village site	—	கிராம நத்தம்

W

Watch tower	—	காவற் கோபுரம்
Water seeking	—	நீரை நாடுகிற
Wattle and rushes	—	கோரைகளும் பாய்களும்
Wind breaker	—	காற்றுத் தடுப்பு
Wind Poles	—	காற்றுத் தடுப்புக் கம்பங்கள்

Y

Yard	—	முற்றம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600031

卐

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்
(Tamil Medium Books for Colleges)

1975 ஏப்ரல் வரை 650 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

卐

மேலும், விரைவில் வெளிவருபவை

பொறியியல்	—	39	நூல்கள்
சட்டம்	—	17	,,
மருத்துவம்	—	18	,,
இயற்பியல்	—	23	,,
வேதியியல்	—	20	,,
தாவரவியல்	—	13	,,
விலங்கியல்	—	14	,,
கணிதம்	—	17	,,
வணிகவியல்	—	37	,,
பொருளாதாரம்	—	21	,,
புவியியல்	—	11	,,
வரலாறு	—	29	,,
மனையியல்	—	1	,,
தத்துவம்	—	4	,,
உளவியல்	—	8	,,
புள்ளியியல்	—	8	,,
கல்வி	—	14	,,
நிலப்பொதியியல்	—	6	,,
அரசியல்	—	19	,,

கிடைக்குமிடம்:

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு
(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)
கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை-600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்